உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி க.] 1912-௵ ஜனவரி௴ [பகுதி க.

## சித்தாந்தம்.

சித்தாந்தமெனு மிவ்வடமொழியானது சித்தம் அந்தம் எனப்பிரிக்கப்பட்டு, நிச்சயமான முடிபெனப் பொருள்படும். எவற்றின் முடிபெனின், வைதிகர்கள் யாவராலுங் கொண்டாடப்படும் வேதவேதாந்தங்களின் முடிபெனப்படும். அங்ஙனம் முடிபெனக் கூறுவானே னெனின், ஆன்மாக்க ளனைவரு மின்றியமையாது அறிந்தனுபவிக்க வேண்டிய வுண்மையினை முடிவு கட்டியிருத்தலினா லென்க. வேதவேதாந்தங்களில் அங்ஙன முடிவுகட்டவில்லையோவெனின், இல்லை; என்னை? வேதவேதாந்தங்களில் முடிவுகட்டியிருக்குமேல் அவற்றிற்கே சித்தாந்தமெனப் பெயர்வந் திருக்கவேண்டும். அன்றியும் வேதவேதாந்தங்களுக் கன்னியமாகச் சித்தாந்தமொன்றிருக்க வேண்டியதில்லை. அங்ஙனமாயின் வேதவேதாந்தங்களில் முடிவுகட்டியிருத்த லென்னையோவெனின், சித்தாந்தத்தி லறிந்துகொள்ள வேண்டிய வுண்மையினை யறிதற்குச் சாதனமாயுள்ள விடயங்கள் பற்பலவாம். ஆகவே வேதம், வேதாந்தம், வேதாந்ததரம் அல்லது சித்தாந்தம் என ஆசிரியர் சிவஞானயோகிகள் திராவிட மகாபாடியத்தில் வகுத்துக் கூறினர். இம் மூன்றனுள் வேதத்தில் விளங்கக் கிடக்கு முண்மை யென்னையோ வெனின் கூறுதும்.

வேதம் கன்மகாண்டம் உபாசனா காண்டம் என விரண்டாக வகுக்கப்பட்டு மந்ததரம், மந்தம் எனும் பக்குவமுடை

1912

161396
2



யார்கட்கு ...றையே பிரயோசனமாம். எங்ஙனமெனின் மந்த ...க்க மலத்தாற் கட்டுப்பட்டு அறிவு மழுங்கிக் கிடக்க ...கட்குச் சிறிது அறிவு விளக்கமாம் பொருட்டு, சோதிட்டோமம், அசுவமேதம், அஜமேத முதலிய யாக கன்மங்களை வகுத்தெடுத்துக் கூறிய கன்மகாண்ட முபயோகமாம். அங்ஙனம் அறிவு சிறிது தெளிந்த மந்தர்கட்குப் பலவகைப்பட்ட தேவோ பாசனைகளை விதந்து கூறி யவற்றா லவரறிவை விளக்கும் உபாசனா காண்ட முபயோகமாம். அதாவது ஆன்மாக்களனைவரும் பலவகைத்தாய கன்மங்களிற் கட்டுப்பட்டுக் கிடத்தலின், அவரவர்கள் கன்மத்திற்குத் தக்கபடியே புத்தி பிரவர்த்திக்கு மாகலின், அவரவர்கள் பலாபலன்கட்குத் தக்கவாறும், காலதேச வேறுபாடுக ளனுசரித்தும், பலதெய்வ வழிபாட்டினைச் சோபான முறையில் விரித்துக் கூறும். அங்ஙனங் கூறவே எந்தெந்த ஆன்மாவிற்கு எவ்வளவு தூரங் கன்மம் வழிவிடுகிறதோ அவ்வளவு தூரஞ்சென்று விசாரித்து, அதிகார பேதம் பற்றிக் கூறியிருக்கும் தெய்வ வழிபாடுகளிலொன்றைப் பற்றிக் கொண்டு திருப்தி யடையும். வேதத்தில் இங்ஙனஞ் சோபான முறையிற் கொள்ளவே அதிகார தாரதன்மியத்தால் மேலுள்ள சமயம் கீழுள்ள சமயத்தினை மறுக்கு முகத்தால் ஒன்றுக் கொன்று மாறுபட்டன போலத் தோன்றினும் எவை மொருவாற்றாற் பிரயோசனமேயாம்.

நிற்க: வேதாந்தத்தில் விளங்கிக் கிடக்கு முண்மை யென்னையோ வெனின், தீவிரபக்குவ முடையார்கட்கு உபநிடதங்களனைத்தினிலு மெடுத்து விரித்துக் கூறுங் காரண வாக்கியங்களிற் குறித்த இரணியகருப்பன், நாராயணன் முதலிய தெய்வப் பெயரனைத்தும் சாகபசு நியாயத்தால் முதல்வனையே யுணர்த்த ஞானகாண்ட முபயோகமாம். இதனால் மந்ததரம், மந்தம் எனும் பக்குவ முடையாரின் பொருட்டு வேதத்திற் கூறும் கன்ம காண்டமும், உபாசனா காண்டமும், தீவிரம் எனும் பக்குவ முடையாரின் பொருட்டு வேதாந்தத்திற் கூறும் ஞான காண்டத்திற்கு ஏதுக்களாம். அதாவது அனாதியாயுள்ள ஆன்மாக்கள் பஞ்சமலக் கொத்தினை நீக்கி யவற்றினைக்கடந்த



முதல்வனைப்பற்றி அனாதி யாணவத்தை யடக்கி, தனையறிந்து அம்முதல்வ னுருவாக்கண்டு தன்னைப் பந்தித்த மலங்கெடவே முதல்வனுந்தானுஞ் சிவோகம் பாவனையிலிருத்தலேயாம்.

இனி, வேதாந்ததரத்தில், அதாவது, சித்தாந்தத்தில் விளங்கிக் கிடக்கு முண்மை யென்னையோ வெனின், தீவிரதர பக்குவ முடையாரின் பொருட்டுச் சிவாகமத்திற் பிரதி பாதிக்கப்படு முதல்வனுடைய சிறப்பிலக்கணங்களை நியாயப் பிரமாணங் கொண்டு கரதலாமலகமாக விளக்கி வச்சிரலேபமாக முடிவு கட்டப்பட்டிருக்கிறது. இதனால் வேதாந்தஞானம் சித்தாந்த ஞானத்திற் கேதுவாம். அதாவது வேதாந்த ஞானத்தாற் சோகம்பாவனை யடைந்த ஆன்மா மனமுதலிய வந்தக்கரணங்களும், சத்த முதலிய தன்மாத்திரைகளும் ஏனைத் தத்துவங்களும் இருவிதமாயைகளும் தன்னை யடாதவகை திருவருண்மயமாயிருந்து முதல்வனுட னிரண்டறக் கலந்திருத்தலேயாம்.

இதனாற் சிவோகம் பாவனையளவும் வேதாந்தம் எனப்படும். சிவமாய் நின்ற விடம் சித்தாந்தமாம். அதாவது முதல்வனறிவும் ஆன்மவறிவுங் கலந்த சிவோகம்பாவனை "தானான" வேதாந்தமாம். ஆன்மவறிவின்றி முதல்வனறிவு மாத்திரையாநிற்பது "தானென்னுஞ்" சித்தாந்தமாம்.

இது காறுங் கூறியவாற்றால், வேதாந்தம் பிரமாணம், சித்தாந்தம் பிரமாணமன்றெனப் பிணங்குவாரும், சித்தாந்தம் பிரமாணம் வேதாந்தம் பிரமாண மன்றெனப் பிணங்குவாருமாகி வாழ்பவர் கூற்றனைத்தும் அழகன்றெனத் தீர்மானித்து, வேதாந்தமும், வேதாந்ததரமுமாகிய சித்தாந்தமும் பரிபாகிகள் பேதத்தாலிரண்டாகி வேதாந்தம் சிவோகம் பாவனையோடிருக்கும் சீவன் முத்தர் நிலையினையும், சித்தாந்தம் முதல்வனுட னிரண்டறக் கலந்து அநுபவிக்கும் சுத்தாத்து விதானுபவாதீத ஆனந்த நிலையினையும் விளக்குமெனக் கொள்க. நீலகண்ட சிவாசாரியர் அப்பய தீட்சிதர் முதலிய சிவாத்துவித சைவாசாரியர்கள் நீலகண்ட பாடியம், சிவாதித்தமணி தீபிகை சிவதத்துவதீபிகை முதலியவற்றில் வேதாந்தத்தை மறுத்துச் சித்தாந்தப் பிரமாணியம் வலியுறுத்துரைத்தார். அரதத்தசிவாசாரியர், உமாபதி

சிவாசாரியர் முதலிய வைதிகாசாரியர்கள் சதுர்வேததாற்பரியசங்கிரகம், பவுட்கர விருத்தி முதலியவற்றில் வேதசித்தாந்தப் பிரமாணியம் வலியுறுத்துரைத்தார்கள்.

முதல்வன் பெருங்கருணையாளனாகலின், உலகத்தாருய்யும் பொருட்டும், சத்திநிபாத முடையாருய்யும் பொருட்டும் பொருள் பலபடத்தோன்றுஞ் சூத்திரமும், அதனை யவ்வாறாக வொட்டாது தெளித்துரைக்கும் பாடியமும்போல முறையே வேதாந்தமும், சித்தாந்தமும் செய்யப்பட்டனவாகலான் அவை முறையே யிரண்டும் பொதுநூல் சிறப்புநூ லெனப்பட்டுச் சூத்திரமும் பாடியமும் போல வேறு வைத் தெண்ணப் பட்டன. ஏனைய நூலனைத்தும் இவை யிரண்டினின்றும் விரிந்த நூல்களேயாம், ஆகலின் இவை முதலாயபலகாரணம் பற்றி வேதாந்தம் சித்தாந்தத்திற்குச் சோபான மென்பது சர்வ சம்பிரதி பன்னமாயிற்று.

சித்தாந்தம் எனினுஞ் சைவம் எனினுமொக்கும் ஒன்றற்கொன்று பரியாயப் பெயராம். இது பற்றியே சைவசாத்திரங்கள் சித்தாந்த சாத்திரமென்றபோது வேறு சமயசாத்திரங்களைக் குறியாது. மற்றைய சமயங்களைக் குறிக்க வேண்டுமாயின் அவ்வச்சமயங்கட் குரிய சொல்லினை யடையாகக் கொடுத்துக் கூறவேண்டும். எங்ஙனமெனின், அத்துவித மென்ற சொல்லுடன் கேவலம், விசிஷ்டம், மறுதலை என்னும் அடைமொழிகளைக் கொடுத்துக் கூறவே அவ்வச் சமயங்களையும், அத்துவிதம் என்ற மாத்திரத்தானே சித்தாந்தத்தினையுந் தெரிவிக்குமாறு போலாம். சித்தாந்தத்தினைக் குறிக்கும் அத்துவிதத்தினுக்குச் சுத்தம் என்ற அடைமொழி யொன்று காணப்படுகிறதே யென்பாராயின், அது "சுத்தம் என்றது யாதானுமொன்றான் விசேடிக்கப் படாது நிற்றலை அது 'சுத்தசத்தை' எனத் தார்க்கிகர் கூறும் வாய்பாட்டானறிக" என ஆசிரியர் சிவஞான சுவாமிகள் திராவிடமா பாடியத்திற் கூறியிருப்பதனால் அடைமொழி யாகாது. இரத்தினத்திரயத்தில் சைவாசாரதுல்யராகிய அப்பயதீட்சிதர் "சித்தாந்தம் முதல்வனூர்த்துவ சுரோதோற்பவங்களாக மேன்முகத்திற் பிறந்தது.



இருக்காதி முதல்வனது மற்றைமுகங்களிற் பிறந்தன. முதல்வன் கைலையிலே சநகர் முதலிய முநீந்திரர்கட்குத் திரிபதார்த்தங்களினாலே சம்மிதமாகியும், இரகசியமாகியும் ஆகமாந்தமென்னும் பெயர்த்தாயுள்ள சித்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார்" என்னும் புராணரத்தினமாகிய மகாஸ்காந்தம். ஆன்மாக்களின் அதிகார பேதம்பற்றி முதல்வன் சகலநூல்களையும் பூர்வபட்சமாகச் சொன்னார் என்னும் ஆகமங்களிற் றலைமை பூண்டகாமிகம். ஆகலின் எல்லா நூல்கட்கும் சித்தாந்தமே மூலமாம். வேதவேதாந்தம் சித்தாந்தத்திலடங்கும். சித்தாந்தம் வேதவேதாந்தங்களி லடங்காது. ஆகையினா லன்றோ சித்தாந்தஞானம் பரஞான மென்றும், வேதாந்த ஞானம் அபரஞானமென்று மழைக்கப்படும்.

"சித்தாந்த வீதிவருந் தேவே பராபரமே"

என்ற அருமைத் திருவாக்கினால், அனந்த கல்யாணசுந்தர குணசம்பன்னனான வகண்ட சச்சிதானந்த கனீபூதனாஞ் சிவபெருமான் சித்தாந்த வீதியிலேயே உலாப் போதருவா னென்பது திண்ணமாகி வேத வேதாந்த வீதிகளில் வாரானென்பது சொல்லாமே யமையும். மனந்தூயராய் முக்குணவலத்தை முற்றக்கடந்து மிக்க தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்துப் பரம ஞானானுபூதி கைகண்ட உண்மை நாயன்மார்கள் அனுபவித்தது "நவமாய செஞ்சுடர் நல்கலுமே நாமறந்து சிவமாய வாபாடி." "சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட-வத்தன்" "சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே" "ஆனாதி சிவரூப மாகிய வாறே" "ஏகனாகி யிறைபணி நிற்க" "ஏகமாய் நின்றே யிணையடிகடா முணர" என்றற் றொடக்கத் துபசரித சுத்தாத்துவித வைக்கிய சிவசாயுச்சியப் பேற்றினை யளிக்குஞ் சித்தாந்த மென்பது சத்தியம். ஆகவே "சைவத்தின் மேற்சமயம் வேறில்லை யதிற்சார் சிவமாந் தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறை" எனு முண்மை தலைபிடிக்க சித்தாந்தமே சித்தாந்தம். ஐயம். ஞானவழகு.

---

மாட்சிமைதங்கிய 5-வது ஜார்ஜ் சக்கிரவர்த்தி அவர்களின்
டில்லிமாநகர் முடிசூட்டு வாழ்த்தகவற்பா.

---

ஓங்குக செங்கோல் ஓங்குக செங்கோல்
பாங்குறு முலகில் பல்லாண் டோங்குக
பரதகண் டத்துப் பாங்குறு டில்லியில்
நவமணி மகுடம் நன்கு தரித்துச்
சக்கிர வர்த்தியாய்த் தன்னே ரின்றித்
திக்கு முழுவதுநின் செங்கோ லோங்குக
கணக்கில் லாத கப்பற் படைநிறை
அலைகடல் மீதும் ஆடுக நின்கொடி
அருந்ததிக் கொத்த அன்னையா யார்க்கும்
பொருந்திய மேரிப் புண்ணிய வதியின்
மணாளுக் குவந்து மருவி வாழும்
தனதனை நிகர்த்த ஜார்ஜ் பூபால!
வாழிநின் செங்கோல் வாழிநின் செங்கோல்
ஆழியைக் கடந்தும் ஆளுக ஆளுக
இந்திய தேயத் திருக்கு மாந்தரை
மைந்தரைப் போலவே மனத்தி லுன்னுக
பூமகள் போன்று பொறுமை யுற்றுக்
கலைமக ளென்னக் கல்வி நிறைந்து
திருமகள் நிகராச் செல்வம் வாய்ந்தவெம்
தாய்விக் டோரியாள் தன்னுளம் களித்த
வாய்மை கொண்டு மன்னிய பௌத்திர!
இன்பமார் எட்வர்ட் எந்த லோனும்
அன்புரு வான அலெக்ஜாண் ட்ரியாவும்
வீரப் பலனாய் விளங்கி ஞானச்
சரதம் அமைத்த சற்குண புத்திர!
வாழ்க நீ டூழி வாழ்க நீ டூழி
சூழ்கநின் கீர்த்தி தொல்லுல கனைத்தும்



குற்றஞ் செய்யினும் குணமாக் கொண்டு
பெற்றோர் புதல்வரைப் பேணுதல் போல
நினது குடைக்கீழ் நிலவுங் குடிகளை
அனைத்துக் காத்தல் ஐய! நின் கடனே
துணைக்குணை யன்றிச் சொல்லுவ தேது
சாதி வேற்றுமை சமய வேற்றுமை
ஏதும் நோக்கா திருந்து நாளும்
நீதி யொன்றே நிலைத்து நிற்கத்
தீதில் அரசு செலுத்தி வாழும்
பரம்பரை தன்னில் பழகிய வேந்தே!
வரம்பிலாத் தேயம் வகித்தகோ மானே!
ஆங்கிலர்க்குள் அருமை மணியே!
தீங்கில் குணத்தோய்! தெய்வகற் பகமே!
நகைமுகம் காட்டும் நற்குண நிதியே!
பகைவர் அஞ்சும் புண்புறு சீயமே!
மைந்தரும் வாழ்க்கைத் துணைவியுமாக
சிந்தை மகிழ்வாய்ச் சிறந்துவா ழியவே

சித்தாந்தசரபம் அஷ்டாவதானம்
பூவை-கலியாணசுந்தர முதலியார்.

---

## II

மாட்சிமைதங்கிய 5-வது ஜார்ஜ் சக்கிரவர்த்தி அவர்களின்
டில்லிமாநகர் முடிசூட்டு வாழ்த்துப்பாக்கள்.

---

1. சித்திரம்போ லெழுவரினும் சிதையாத
பெரும்பொறைகூர் திறலார் தர்ம
புத்திரனார் முடிதரித்த வத்தினபுரிநகரிற்
போந்தின்றும்
மித்திரமா யிந்தியர்க்குச் சத்திரம் தாங்
கிய விழுமைமைந்தர் ஈன்ற
புத்திரர்தாமுடிசூடி யொற்றுமையைப்
பொலிவித்தார் புகழ்ச்சிகடா.

2. மாரிநிகர் பெருங்கருணை மனங்கொண்டு
மாட்சிமைசேர் மகுடமன்னர்
சீரியதன் திருவடியிற் சிரந்தாழக்
கோல்பிடித்த செல்வியார்தம்
பேரியல்நற் பவுத்திரராம் ஜார்ஜரசர்
நீடூழிபிரியா வன்பின்
மேரியெனும் நாரியர்தம் மின்னோடு
மினிதரசின் மேவிவாழ்க.

3. இக்கலியையாயிரமேல் இயைந்த பனிரண்டாண்டின்
தக்கவிருச்சிகமாதம் சார் இருபானேழாம் நாள்
தொக்கமீன் பூரமுறும் சுடர்ச்செவ்வாய் வாரமதில்
மிக்க ஜார்ஜரசர்பிரான் வியன்மௌலி மிலைந்தனரே.

4. செய்வார மங்கலமாய்ச் செப்பினாரது நீக்கி
ஆய்வார்கள் வெள்ளி புதனைய பிறவார மெலாம்
தாய்வாரம் கொண்டருள்நம் ஜார்ஜரசர் முடிபுனையச்
செய்வார மங்கலத்தின் சிரவாரமாகியதே.

5. செவ்வாய்க்கிங்கிப் பெருமைசேர் தருமென்றுணர்ந்தேகொல்
ஒவ்வாத புகர்விளர்த்தான் உம்பர்குரு நிறம்பழுத்தான்
அவ்வாதவன்கனன்றான் அம்புலியு மெலிந்திட்டான்
இவ்வேது வாற்புதனும் எழில் கறுத்தா னெனலாமே.

6 ஏழுலகுமுன் பாண்ட இந்துகுல நிருபரெலாம்
வாழிமுடிதரித்த நகர்வந்து முடிதரித்தருளும்
ஏழிலக்கப் பெயர் அரசர் எழில்மகற்கு மிருபான்மேல்
ஏழிலக்கம் தேதி திதி எழிலக்கம் இதுவியப்பே.

7. ஐந்தெழுத்தாலாகிய வெட்வர்டெனும் பேர்தாங்கிய
நின் ஐயர் தோன்றும்
அந்த வரிசையிலேழாம் அரசராம் அவரினும் நீ
அரியா யென்றல்
முந்தமுறை ஜார்ஜெனும் நின் மூவெழுத்தாலாய
பெயர் முன்னே யைந்தென்
வந்தமுறை குறித்திடுமாஸ் இந்த முறை
விந்தைபெற விசைந்ததாமே.

8. சூரிய சந்திரர் குலத்திற்றோன்றியே யுலகாண்ட
ஆரிய மன்னவர்களிலே அரசர்களுக் கரசனெனச்
சீரியராயினர் பலராய்ச் செப்புவார் செப்பிய அப்
பாரியரும் அரசிருக்கைப் பழம்பதியே யல்லாமல்,



9. அடிசூடும் குடியானோர் அகங்களிப்ப அயல் நாடு
படிசூடவந் துளத்தின் பண்புடைமை வெளிப்படவே
முடிசூடி மகிழ்வித்தாரிலையிலை நின்முன் பாண்ட
கொடிசூடும் ஆங்கில நற்குலவேந்தர் அனைவரினும்.

10. இத்தகைய புதிய புகழ் இந்தியர்தம்மெனத் தென்றும்
நித்தியமாய்ப் பதித்ததனால் நின்பெயரே நீடூழி
உத்தமி நின் மூதாட்டியாவி உவந்தினித்திடவே
எத்திசையும் நிலைத்ததுவால் எவர் நினக்கிணையானோர்.

11. ஆரியர்கள் ஜியெனும் சொல்ஜயம் குறிக்கும்
அறிகுறியாய் அறைவார் அந்தச்
சீரியஜியார்ஜியென் றிசைப்பதுவே நின்
பெயராய்த் திகழ்தலால் உட்
கூரிய நல்லறிவாளர் ஜயம்பெறு நற்ஜய
மெனவே குறிப்பார்நின்னைப்
பாரினில் நின்றனைப்புகழப் பதம்பிறிது
வேண்டுவதோ பாவலோர்க்கே.

12. பொன்னகர் புரக்கும் இந்திரன் பகையும்
போக்கியதசரத னெனும்பேர்
மன்னவர் மன்னன் ஆளுகை தனிலும்
மாண்புடை அச்சியந்திரங்கள்
தன்னிகர் தந்தியொடு தபால் தூமசகட
சாதன மிலாதன்றோ
வன்ன சீர்ப்பரதன் உணர்ந்தரு முன்னம்
வளர்ந்தது ராமகாதையுமே.

13. சாந்தமும் பொறையும் வாய்மையும் தயையும்
தருமமு மடக்கமுந் தலையயாய்
ஏந்தியேமறுமை யெய்துறும் விருப்பம்
இந்தியர்க்கியற்கையே யல்லால்
வாய்ந்த நம்மவர்போல் இம்மையிற் சுகிக்கும்
வழியறிந்தடைந் திலரதனால்
போந்த சாதனங்கள் அனைத்தும் எம்மவர்க்குப்
புதியவே பொலிந்த நும்மரசில்.

14. அரசரே திருமாலென்றகங்கொள்ளல்
வேண்டுமென வறைந்தாரெங்கள்
விரசு நீதிகள் உருத்தமனு வேந்தரது
போலவே நேர்நாட்டில்

உரைசெய்தோரிலை யுளத்தினுணர்ந்தோருமிலை
யொழுகினோரு மில்லை
தரைசெய்குணமாயின்று மிந்தியருள் அக்குணந்தான்
தழைத்ததாமே.

15. மன்னுயிர்க்கோர் குறைகாணமனம்பொறு
தூடலரிந்தான் சிபியாமன்னன்
தன்னொரு நற்புதல்வனையேதான்
சிதைத்தான் ஒருசோழன் தகைசால் கற்பின்
பன்னிதனக்காய்ச் செங்கோல் பற்றியதன் கரம்
துணித்தான் பாண்டி நாடாள்
மன்னவனித்தகையர் பலர் இந்நாட்டிலாண்டு
புகழ்மகிழ் வுற்றூரால்.

16. வனவிலங்குகளு மரசர் பெயர் சொல்லித்
தடுப்பாரேல் வாய்ப்பூட்டிட்ட
தெனவிலங்கு மென்பார்கள் எனிலியற்கை
யறிவுடைய குடியா மாந்தர்
மனமிலங்கி யிருந்தபக்தி யிதுவெனவே றெடுத்
தோதவார்த்தை யேனோ
வினவிலிந்த நாட்டினர்போலரசர் உயிர்க்குடலானோர்
வேறுண்டேயோ.

17. கண்ணாலே யிந்தியரைக் காணுமலே
மனத்திற் கருணைபூண்ட
பெண்ணுயகம் பிறக்கத் தவஞ்செய்த குலத்தினு
மப்பெரியாள் போலப்
பண்ணரும் பேரரசாயினரிலை தின்றினைப்
போலும் பரதகண்டம்
உண்ணையம் பெருகஇவன் போந்து முடி
பூண்டவரும் உளதின்றுமே.

18. இந்தியர் பாற்றன துளத்திலெழுங் கருணைக்
கறி குறியாய் முன்னாள் உன்றன்
தந்தையரினருந் தாயார் சாற்றிய நல்
விளம்பரத்தின் ஸாரம் யாவும்
சுந்தர நின்னுளங்கையில் மேன்மேலு
மிந்தியர்கள் துதிக்குமாறு
வந்திடுமென்று வக்கின்றேமற்றது நின்னொரு
திருவுளத்து மகிழ்ந்துகோடி.



19. ஸத்தியம் தண்ணளி நீதி தயை தருமம்
அனைத்தினுக்கும் தாய்வீடாகும்
உத்தம நற்பரதகண்ட முழுவதும் நின்
குடைக்கீழ் உவந்து மாறுப்
பத்தியொடும் பலகோடி யிந்தியர்கள்
வாழ்த்தி யடிபணிந்து போற்றும்
வித்தகனீயா யினையால் இத்தனைபேறெவர்
பெற்றூர் விளம்புங்காலே.

20. சந்திர குலத்தோர் தலை நகராகும் சால்புடை
அஸ்தினுபுரிதான்
பிந்தியோர் சிறியவேந்தருக்கிடமாய்ப் பெயர் பெற
விரும்பிடா தோங்கும்
சந்திரகலை நேர்நிறத்தினுய் நினையே சார்ந்தது
முயன்ற மாதவத்தால்
அந்த நற்பதவி யாண்டுகளோராயிர
மாயின பிறகும்.

21. முற்றிலக்கம் நூற்றெட்டே பலனளிக்கு மென
மொழிவார் முன்னோர் முன் நாம்
பெற்றவிளம்பரம் பிறந்தோரதிற் பாதியாண்டுகளே
பெயர்ந்த விந்நாள்
பற்றும தன்பலனுக வொற்றுமைதான் பலித்த
தெனப்பகரு மாறிங்
குற்றனை நீ முடிசூட இதற்கிணையோர்
மந்திரமும் உரைக்கலாமே.

22. ஆழிசூழ் மகனிலத்தின்னுயிர்,
சூழவின்பம் சுகந்தலை தூக்கநீ
டூழி மேரி யரசியினோடுமே
வாழி வாழி வழிவழி வாழியே.

அசலாம்பிகையம்மாள்.

---

# கன்மம்.*

அறிவிற் சிறந்த பெரியோர்களால் நிறையப் பெற்ற விம்மகாசபையில் "நல்லோர் பிறர் குற்றம் நாடார்" என்ற வாக்கியத்தை நினைந்து என் சிற்றறிவுக் கெட்டியவாறு உபன்யாசிக்கத் துணிந்தனன்.

கன்மம் என்பது மும்மலத்தொன்றென்றும் ஆன்மாக்கள் பிறந்திறந்து துன்புறுதற்கும் அவற்றினின்று நீங்கி, உயிர்க்குயிராய் விளங்கும் பரமான்மாவைத் தரித்தின்புறுதற்கும் ஏதுவாய் நிற்குமென்றும் விரித்து விளக்குவதே யிவ்வுபன்யாசத்தின் கருத்தாம்.

ஆன்மாவினது இச்சா ஞானக்கிரியாசத்திகளைத் தடைசெய்து நிற்கும் பாசம், ஆணவம், கன்மம், மாயையென முத்திறப்பட்டு பந்த வேறுபாட்டால் முறையே பிரதிபந்தம் அனுபந்தம் சம்பந்தம் எனப் பெயர்பெறும்.

அவை வருமாறு விடத்தால் மூர்ச்சித்துக் கிடந்த வொருவனுக்கு உணர்ச்சி செயல் முதலியன தடைப்பட்டிருத்தல்போல அநாதி கேவலத்தில் ஆன்மாவின் அறிவு இச்சை செயல்கள் ஒருசிறிதும் நிகழவொட்டாது ஆணவமலந் தடைசெய்து நிற்கும். எதிர்த்துத் தடுத்தலால் இதற்கு பிரதிபந்தமென்று பெயர்.

அவ்வாறு மூர்ச்சித்துக் கிடந்த வொருவனுக்குப் பிறர்தரும் ஔடதத்தால் அம்மூர்ச்சை நீங்கிச் சிறிதுணர்ச்சி யுண்டாவதுபோலச் செயலின்றி ஆணவ கேவலத்திற்கிடந்த வுயிர்க்குச் சிவபெருமான் இரங்கிக்கலாதி தத்துவங்களைப் புணர்த்த அதனால் மறைப்புச் சிறிது நீங்கி எழுச்சி சிறிதுண்டாம். இவ்வெழுச்சியே கன்ம மலம். ஆணவ மலத்தைத்தொடர்ந்து சிவபெருமானாற் றரப்படுதலின் இதற்கு அனுபந்தமென்று பெயராம். எழுச்சிக்குப் பந்தமென்று கூறுதல் பொருந்துமோ வெனின் விடயத்திற் கட்டுப்படுத்தலாற் பொருந்துமென்க.

விடத்தின் உபாதி முற்றும் நீங்குவதற்கு வைத்தியன் பத்தியங் கற்பிப்பதுபோல மலமறைப்பு முற்றும் நீங்குவதற்குச் சிவபெருமான் இதம் அகிதம் என்னும் விதியை யுணர்த்தினர். இதற்கு வினையென்று பெயர். முற்கூறிய கன்ம மலம் அநாதி நித்தமென்றும் இவ்வினைப் பிரவாகானாதி யென்றும் நூல்கள் கூறும்.

* இராமநாதபுரத்தில் 1910-ம் ஆண்டு நிறைவேறிய 5-வது சைவ சித்தாந்த மகாசமாஜக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.



பத்தியம் புசிப்பதற்குப் பாகஞ் செய்யும் பாத்திரங்களையும் வைத்தியன் உணர்த்துவதுபோல இதாகிதத்தைப் புரிவதற்குக் கருவியாய்ச் சுத்த மாயையினின்று வாக்கையும் அசுத்தமாயையினின்று மனதையும் பிரகிருதி மாயையினின்று காயத்தையும் சிவபெருமான்றருவர். வைத்தியன் கற்பித்த விதிகளை நோயாளிக்கு அடிக்கடி பிறருணர்த்துவதுபோல இதாகிதத்தின் நியமங்களை யுணர்த்தும வேதாகமங்களையும் சிவபெருமான் றந்தருளுவர். இது மாயாமலம் இதாகிதத்தைப் புரிவதின் சம்பந்தமாய்த் தரப்பட்டதால் சம்பந்தமென்று பெயர்பெறும். பந்தம் என்பதற்குப் பொருள் கன்மத்துக்குக் கூறியவாறே கொள்க.

இவ்வாறு கூறப்படும் மும்மலங்களுள் அனுபந்தமென்று கூறிய கன்ம மலத்தின் விசாரணையே யீண்டெடுத்துக் கொள்ளப்பட்டது. மேற்கூறியவற்றுள் கன்ம மலமும் மாயா மலமும் ஆன்மாவைப்பின் வந்து பொருந்துதலால் ஆகந்துகமென்றும் ஆணவ மலம் சகசமென்றும் நூல்களிற் கூறும். அங்ஙனங் கூறுவதால் ஆணவமலம் அநாதியென்றும் ஏனைய விரண்டும் ஆதியென்றும் பொருள் கொள்ளல் கூடாது. என்னை? சூக்குமதேக ரூபமான கன்ம மலம் மாயையில் அடங்கிக் கிடத்தலானும் அங்ஙனம் அடங்கிக் கிடவாதவழி தோற்றுதற்கு ஏதுவின்றாதலானும் கன்மமும், பரிக்கிரக சத்தியாதலின் மாயையும் நித்தமாதலி னென்க, இறைவனுடைய பரிக்கிரக சத்தியினின்று அவனால் இருவேறுவகைத்தாய்க் காரியப்படுத்தித்தர வேண்டியிருத்தலின் கன்ம மாயா மலங்களாகிய விரண்டும் இறைவனுக்கு உடைமைப் பொருளென்று உண்மைநூல்கள் கூறும்.

இக்கன்ம மலங் காரணமாகத் தூல வுடம்பும் அவ்வுடம்பால் இதாகிதமென்னும் வினையும் அவ்வினையா லுடம்பும் வித்துமரமும்போல் பின்னர்த் தொடரும். வினை புரிதற்குக் காரணமாக முதலில் உடல்வருமென்னில் அது "வினைப்போகமே யொருதேகங் கண்டாய்" என்னும் வாக்கியத்துக்கு முரணாதோ வெனின்? முரணாது. என்னை? வித்து மரமும்போல் வினையும் உடலும் வருமென்று கூறுவதால் இவ்விரண்டில் முற்பிற்பாடு தோன்றாமல் அனவத்தை யென்னும் முடிவின்மை யுண்டாமாதலின் இவ்விரண்டிற்கும் முன் இவ்விரண்டி லொன்றுதானுண்டாக வேண்டுமென்றும் அதற்கும் ஏது வின்னதென்றும் நிச்சயிக்க வரும். வரவே தூலவுடல் வினைக்கு முந்தினதென்றும் தூல வுடலுக்கு முந்தினது சூக்குமதேகமாகிய வெழுச்சி யென்னுங் கன்மமலமென்றும் நூல்களிற் கூறுவதாமென்க.

நல்வினை தீவினையின்றி எழுச்சி மாத்திரமாயுள்ள கன்ம மலத்துக்காக உடல் தந்தாரென்று கூறுதல் விதிக்கு முரணாதோ வெனின்? முரணாது

அருள்மேலீட்டாற் செய்யும் சிவபெருமான் செயலவ்வாறுதலினென்க. இவ்வாறே உவமானத்திலும் முதலில் வித்தில்லாமலே மரத்தையுண்டு பண்ணுவரென்பதனை "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்னும் மணிவாசகப் பெருமான்றிருவாக் காற்றெளிக.

இனி வியாதியாளன் விலக்கிய பதார்த்தத்தை விரும்பிப் புசித்தலால் துன்பத்தையும் விதித்த பதார்த்தத்தைப் புசித்தலா லின்பத்தையு மடைவதுபோலச்சிவபெருமான் உபகரித்த இதமகிதத்துள் அகிதத்தைச் செய்தலாற் றுன்பத்தையும் இதத்தைச் செய்தலாலின்பத்தையும் உயிரெய்தும்.

இங்ஙனம் விதியும் விலக்குமாக விரண்டு பத்தியங் கற்பிப்பானேனெனின்? இருவகைப் பதார்த்தங்களிருததலினாலும் அவைகளில் விருப்ப முண்டாதல் உயிர்களுக்குச் சுபாவமாதலினாலு மென்க. இவ்வாறே ஆன்மாவின் சம்பந்தமாகவிதமும் மாயா சம்பந்தமாக வகிதமுமாக இரண்டுண்டா மாதலானும் அவற்றில் விருப்பம் நிகழ்தல் உயிருக்கியற்கை யாதலானும் இரண்டு விதியைச் சிவபெருமானருளிச் செய்வாராயினர்.

அவ்விதி வருமாறு மனத்தின் இதமாவது பிறவுயிர்களுக் கிரங்கல் இயன்றவாறு உதவி புரியவெண்ணுதல் சிவபெருமானைச்சிந்தித்தல் முதலிலாயினவுமாம்.

வாக்கின் இதமாவது உண்மை பேசுதல், பிறருக்கு இன்பம் பயக்கப் பேசுதல், ஞான நூல்களை யோதுதல், பஞ்சாக்கர மந்திரங்களை யுச்சரித்தல் முதலியனவாம்.

காயத்தின் இதமாவது பிறருக்கு இயன்றவாறு கொடுத்தல் முதலிய வுபகாரம் புரிதல், ஆலயவழிபாடு செய்தல், சிவனடியாரை வணங்குதல் முதலானவாம்.

இவற்றிற்கு மாறான செயல்களெல்லாம் அகிதம்.

இவ்வாறு செய்யும் இதம் அகிதம் பக்குவமாய் அனுபவத்துக்கு வரும் முறைமையில் ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவமெனமுத் திறப்படும்.

அவற்றுள் ஆகாமியம் விதியையோ அல்லது விலக்கையோ மனவாக்குக் காயங்களால் விரும்பிச் செய்தல். இவ்விருப்பமே எழுச்சி யுண்டான முதற்கண் ணிகழ்வதாதலானும் உயிருக்குரிய தன் வினையாதலானும் இன்புற வேண்டில் இதத்தையே விரும்ப வேண்டு மென்பது தோன்ற "அறஞ்செய விரும்பு" என்றார் ஔவைப் பிராட்டியாரும். இவ்வாகாமியத்துக்கு வினையென்று பெயர். இது எதுபோலவெனின், பூமியில் வித்தை விதைப்பதுபோ லென்க.

அவ்வித்தானது விதைத்தவனுடைய புத்தியில் தன்னுடைய தென்னும் பற்றுக்கோடாக விருந்து நிலத்திற் கிடந்து மழையால் வளர்வது



போலமேற்கூறிய இதம் அகிதம் என்னும் செயல்கள் செய்தவனுடைய புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் கிடந்து திருவருளால் வளர்ந்து பருவ மெய்தும். இதற்குச் சஞ்சித மென்றும் புண்ணியபாவ மென்றும் பெயர்.

வித்துப் பலனுக்கு வருவதுபோல் இதமகித மென்னும் வினைகள் இன்ப துன்பமென அனுபவிக்க வருங்கால் பிராரத்துவ மென்று பெயர்.

இப்பிராரத்துவம் சாதி, ஆயுள், போகமென மூவகைப்படும்.

சாதி:—உயர்ந்த சாதி இழிந்த சாதிகளிற் பிறத்தல்.

ஆயுள்:—காலமிருத்து அவமிருத்துக்களில் மரித்தல்.

போகம்:—தேவபோகம் மானிடபோக முதலியவற்றைப் புசித்தல்.

இவ்வாறு போகம் புசிக்குங்கால் அப்புசிப்பு ஆதி தைவீகம், ஆதியான்மீகம், ஆதிபௌதீகமென மூவகைப்படும்.

ஆதி தைவீகம், ஒருவர் முன்னிலையின்றித் தெய்வ முன்னிலையாய் வரும் பால்யம், யௌவனம், நரை, திரை, வியாதி முதலிய சுகதுக்கம்.

ஆதியான்மீகம்:—உயிர்கள் முன்னிலையால் வருஞ் சுகதுக்கம்.

ஆதிபௌதீகம்:—மின்னல் இடி முதலியவற்றால் வருஞ் சுகதுக்கம்.

இவற்றுள் ஆதியான்மீகமும் ஆதி பௌதீகமும் முதல்வன் அருள் வழியின்றி வாராதாயினும் நேரே கூட்டிவைக்காமல் உயிரையும் பூதத்தையும் அதிட்டித்துக் கூட்டிவைத்தலால் ஆன்மீகம் பௌதீக மெனப் பெயராயிற்று.

இவ்வாறு கன்ம மலத்தால் வினையும் வினையால் புண்ணிய பாவங்களும் புண்ணிய பாவங்களாற் சுக துக்கங்களும் முறையே உண்டாகும். உண்டாகு மென்றதனால் கன்மமே இவ்வாறு பலந் தருமெனல் கூடாது. என்னை? செய்த கன்மஞ் செய்த விடத்துக்கெட்டொழிதலானும், உயிருக்கு அதன்பலனைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும் பேரறிவு இன்றாதலானும் கன்ம பலத்தை யிறைவனே கூட்டுவிப்ப னென்க.

உயிர்களின் புத்தி தத்துவம் பற்றுக்கோடா விருத்தலின் கூட்டுவிப்பதற்கு இறைவன் வேண்டு மெனல் மிகையாகாதோ வெனின்? ஆகாது என்னை? வித்துப் பற்றுக் கோடாவிருக்கு முளைத் தற்சத்தி நிலமுந் தண்ணீருங் கூடினவழி முளைக்கு மாறுபோல் புத்திதத்துவம் பற்றுக்கோடாயுள்ள புண்ணிய பாவங்களும் மாயையும் இறைவனருளுங் கூடினவிடத்து இன்ப துன்ப மென்னும் பலனைத் தருமாதலி னென்க.

இங்ஙனந் தருங்கால் விதைத்தவா றன்றி வன்மை மென்மைக் கேற்ப வித்து முன் பின்னாகப் பலன்றருவதுபோல் வினைகளும் செய்த முறைப்படியன்றிப் பக்குவத்திற் கேற்ப முன் பின்னாகப் பயன்றரும்.

இங்ஙனஞ் செய்யும் வினையும் மிகச்செய்யலுறுமாயின் அவ்வப்பொழுதும் அல்லுழி காலாந்தரத்தும் பலன்றரும்.

மேற்கூறிய இருவினைகளும் அபுத்தி பூர்வம், புத்தி பூர்வமென இருவகைப்படும். அவற்றுள்,

அபுத்தி பூர்வ நல்வினை:—அகிதம் நினைக்க இதமாக முடிவதும், அகிதஞ் சொல்ல இதமாக முடிவதும் அகிதஞ்செய்ப இதமாக முடிவதுமாம்.

அபுத்திபூர்வ தீவினை:—இதம் நினைக்கவும், இதஞ்சொல்லவும், இதஞ்செய்யவும் அகிதமாக முடிவதாம்.

புத்தி பூர்வ நல்வினை:—புத்தியிலே பட்டும், மனவாக்குக், காயங்களினால் செய்யப்படும் இதமாம்.

புத்தி பூர்வ தீவினை:— புத்தியிலே பட்டுத்திரிகரணங்களினாலே செய்யப்படும் அகிதமாம்.

இவ்வாறு செய்யும் வினையின் பலனாகச் சுகதுக்கம் வருங்கால் இதம் அகித மென்னுஞ் செயல் வழியாகவே வரும் இதனை "பிற் செயாதனுபவிப்பதின்றாம்" என்னுஞ் சிவஞானசித்தி திருவாக்காற் றெளிக.

அங்ஙனமாயின் மேல் வினையேறுமாற்றிற்குக் காரணமென்னை யெனின்? முற்செய்வினைக் கீடாக இறைவனருளாற்றன் மாட்டும் பிறர் மாட்டும் நிகழும் செயல்களைக் கன்மத்துக் கீடாக இறைவனால் நிகழ்ந்ததென்று நினையாது தன்னாலும் பிறராலும் நிகழ்ந்ததென்று நினைக்கும் நினைப்பாலுண்டாகும் விருப்பு வெறுப்பினாலேயா மென்க.

இவ்வாறு வினையின் பலனாகவின்ப துன்பங்களை யனுபவிக்குங்கால் இவ்விருவினைக்கு வேறாகிய சிவபுண்ணிய காரணத்தாற் சிவபுண்ணியமுண்டாகும்.

சிவபுண்ணிய காரணமாவது அநாதி கேவலத்திற் கிடக்கும் பசுக்களுக்காகப் பதி ஆதி சிருட்டி செய்யுங்காலத்துப்பதி தாமே தலம் தீர்த்த மூர்த்தியாகவும் திருமேனி கொண்டருளுவர். அவற்றுள் விசேட தீர்த்தத்தில் புழு முதலானவைகளாய்ச் செனித்தாலும் வசித்தாலும் மரித்தாலும் விசேட தீர்த்தத்தில் மீன் முதலியவைகளாய்ச் செனித்தாலும் வசித்தாலும் மரித்தாலும் நாற்கால் விலங்கு முதலானவை குடித்தாலும் மூழ்கினாலும் அத்தீர்த்தம்பாயு மிடத்திற் பயிராய்ச் செனித்தாலும் அந்த நெல் முதலானவைகளைப் பறவை முதலானவைகள் புசித்தாலும் விசேட ஆலயமுள்ள தலத்திற் செனித்தாலும் வசித்தாலும் மரித்தாலுமேயாம்.

இவ்வாறு நிகழப் பெற்ற வுயிர்களுக்குச் சிவபுண்ணியத்திற் பிரவிர்த்தி யுண்டாம் சிவபுண்ணியமாவது சரியை கிரியை யோகம் ஞானம் மென நான்கு. அவற்றுள் உபாயம் உண்மையென ஒவ்வொன்றும் இரண்டிரண்டாய் அதுவும் புத்தி பூர்வம் அபுத்தி பூர்வம் என இரண்டாய் பதினாறு வகைப்படும்.



1. அபுத்தி பூர்வ உபாயச் சரியையாவது பசு புண்ணியமாகச் செய்யப்பட்ட திரவிய முதலானவை கிரியா குருலிங்க சங்கமங்களுக்கு உபகாரமாதல்.

2. அபுத்திபூர்வ உபாயக்கிரியையாவது கோகர்ணத்தில் பழைய சிவலிங்கத்தில் சிவநிசியில் குருட்டுப்பறைச்சி வில்வார்ச்சனை பண்ணினது முதலாயின.

3. அபுத்தி பூர்வ உபாய யோகமாவது திருவாபரணந் திருட நினைந்தவனும் திருமேனி காவற்காரனுந் திருமேனியே தியானமாயிருப்பது முதலானவை.

4. அபுத்தி பூர்வ உபாய ஞானமாவது வேதாகமங்களை யோதிப்பொருளுண்மைகளைப் பிறருக்கு நன்கு விளக்குகின்ற புகழின் விருப்ப முதலானவை.

5. புத்திபூர்வ உபாயச் சரியையாவது கிரியாகுருலிங்க சங்கமங்களுக்குத் தனது திரவியங்களைக் கொடுத்தலும் ஆலயத்திற் றிருவலகு திருமெழுக்கிடுதலு முதலாயின.

6. புத்தி பூர்வ உபாயக் கிரியையாவது அம்மூன்று வடிவையும் தான் பரிசித்துப் பூசித்தல் முதலாயின.

7. புத்தி பூர்வ உபாயயோகமாவது அம்மூன்று வடிவே பொருளென நம்பித் தியானஞ் செய்தல்.

8. புத்தி பூர்வ உபாய ஞானமாவது வேதாகமங்களை விசாரித்துக் கிரியாசாரியரை ஆவாகன மூர்த்தமென்றறிந்து பரமசிவன் பிரம விட்டுணுவாதி ஒன்பது மூர்த்தமாகவும் சூரிய சந்திராதி அட்ட மூர்த்தமாகவும் விளங்குவரென்றும் அப்பொருளிலே நேயம் தனக்குப் பிறக்கின்றதாகவும் அறிந்து நிலைத்து நிற்பது.

9. அபுத்தி பூர்வ வுண்மைச் சரியையாவது ஞானாசிரியரைச் சிவபரம்பொருளே திருமேனி கொண்டதென்று கருதாது உயர்ந்தாரென்று கருதி வழிபடுதல்.

10. அபுத்தி பூர்வ வுண்மைக்கிரியையாவது ஞானாசிரியரை மேற்கூறியவாறு கருதிப்பூசித்தல்.

11. அபுத்தி பூர்வ வுண்மையோகமாவது மேற்கூறியவாறு கருதித் தியானித்தல்.

12. அபுத்தி பூர்வ வுண்மை ஞானமாவது மேற்கூறியவாறு கருதி ஞானசாத்திரங்களை விசாரித்தல்.

13. புத்திபூர்வ வுண்மைச் சரியையாவது ஞானாசிரியரைச் சிவ பரம் பொருளென்று தேறி வழிபடுதல், இது கேட்டலாம்.

14. புத்தி பூர்வ வுண்மைக் கிரியையாவது மேற்கூறியவாறு கருதி ஞானாசிரியரைப் பூசித்தல், இது சிந்தித்தலாம்.

15. புத்திபூர்வவுண்மை யோகமாவது ஞானாசிரியரருளால் அவரே பொருளென்று நம்பித் தியானம் பண்ணுதல், இது தெளிதலாம்.

16. புத்திபூர்வவுண்மை ஞானமாவது நிட்டைகூடித் திருவடிசேர்தல்.

இப்புத்திபூர்வ வுண்மை ஞானமாகிய நிட்டை, தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதெரிசனம், ஆன்மசுத்தி, சிவ ரூபம், சிவதெரிசனம், சிவயோகம், சிவபோக மெனப் பத்துக்காரியமா யிருக்கும் அவற்றைத் தசகாரிய விளக்க மென்னும் நூலில் விரித்துக் கூறியிருக்கின்றேம். ஈண்டு விரிப்பிற் பெருகும்.

மேற்கூறிய சிவபுண்ணியம் பதினாறினுள் முந்தின பன்னிரண்டைக் கூடியனுட்டிக்கும் பலத்தால் முன்னற் கூறிய இதமகித மென்னும் இருவினைகளும் இன்பம் துன்பம் என்னும் பலனில் வேறாயிருப்பினும் பிறப் பிறப்பென்னும் பலனில் இரண்டும் ஒற்றுமையுடையனவே யென்றுந்தோன்றும். இதுவே யிருவினை யொப்பு. அங்ஙனந் தோன்றவே உண்மைச்சரியை யாதிகளிற் புத்தி நிலை பெறும். பெறவே யான் எனதென்னும் மலத்தின் சேட்டை குறைந்து சிவபரம் பொருளினிடத்தும் அப்பொருளுக்கு அடிமை என்னும் உணர்வு முண்டாம். இவையே மலபரி பாகமும் சத்தினி பாதமும் சிவஞானமுமாம். இவ்வாறுண்டாகவே சிவபிரான் திருவடியை யடைவர்.

இவ்வாறு சிவபிரான் திருவடியடைந்த மெய்ஞ்ஞானிகளுக்கு யான் எனதென்னும் போதமற்றிருத்தலால் ஆகாமிய மேறாது. ஞானம் பிரகாசித்தலால் புத்தி தத்துவம் பற்றுக்கோடாகிய சஞ்சிதம் தீபத்தின் முன்னர் இருள்போலக் கெட்டுப்போம். பிராரத்தம் உடலிருக்குமளவு மிருந்து புசித்துத் தீரும். இதுபற்றியே 'ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்' என்றார் நாயனார்.

இங்ஙனம் புசிக்குங்கால் அப்புசிப்பின் ஏதுவாக வுண்டா மிருவினைகளுமேல் ஆகாமியமா யேறுமென்பதனை "எத்தனுவினின்று மிறைபணி யார்க்கில்லை வினை" என்னுஞ் சிவஞானபோதமும் "இருள்சேரிருவினையுஞ்சேரா இறைவன்பொருள்சேர் புகழ்புரிந்தார்மாட்டு" என்னுந்திருக்குறளும்வலி யுறுத்தும். ப்ராரத்தமாகவரும் அனுபவமும் சிவாநந்த மேலிட்டிருக்குந் தன்னைத் தாக்காது. தாக்காதென்றதனால் வந்தேறு மென்பது



கொள்ளக் கிடக்கின்றது. இதுபற்றியே "அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானாகவே அஞ்ஞான கன்மம் பிரவேசியாவாகலான்" எனச்சிவஞான போதத்திலும் "ஊழையு முப்பக்கங் காண்பருலை வின்றித்தாழாது உஞற்று பவர்" எனத் திருக்குறளினும் அருளிச் செய்தவாறு காண்க.

இதுகாறுங்கூறிய வாற்றாற்கலாதி தத்துவத்தின் சேர்க்கையாலுண்டாம் எழுச்சி கன்மமல மென்றும், அவ்வெழுச்சியால் இதமகிதத்தைப் புரிதல் ஆகாமியமாகியவிருவினை யென்றும், அவ்வினை முதிர்ச்சியடையுங்கால் சஞ்சிதமாகிய புண்ணியபாவமென்றும், அனுபவமாய் வருங்கால்பிராரத்துவமாகிய வின்ப துன்பமென்றும் இன்பதுன்பமான பிராரத்துவமனுபவிக்கும்போது இருவினையின் வழித்தாகவே அனுபவிக்கவருமென்றும், அவ்வினைகளையான் செய்தேன் பிறர் செய்தாரென்று கருதுவதால் மேல்வினையேறு மென்றும், இவ்வாறு நிகழும் இருவினைகள் பந்தவேது வென்றும் பந்த நீக்கத்துக்கான சிவபுண்ணியம் பதினாறுவகைப்படு மென்றும், அவற்றுள்ளும் புத்திபூர்வ வுண்மை ஞானம் பத்துக்காரியமாயிருக்கு மென்றும், இவற்றை யநுட்டித்தோர் சிவபிரான்திருவடி யடைந்தின் புறுவரென்றும், அவருக்கு ஆகாமியமேறாது என்றும் சஞ்சிதங் கெட்டொழியு மென்றும் ப்ராரத்தம் புசித்துத் தீருமென்றும், அப்புசிப்புந் தன்னை வருத்தாதென்றும் பெற்றனவாம்.

ஆதலால் ஞான சற்குருவை யடுத்து ஞானசாதனமானதச காரியமென்னும் பத்துச் செயல்களை யடைந்து இன்புறும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

பொ. முத்தைய பிள்ளை.

உ

திருச்சிற்றம்பலம்.

# சைவசித்தாந்த மகாசமாஜத்தின்

## ஆறுவதுவருட மகாஜனக்கூட்டத்தின் விருத்தாந்தம்.

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் ஆறுவது வருடத்து மகாஜனக் கூட்டம் 1911ஹு டிசம்பர்மீ 27, 28, 29-ஆந் தேதிகளில் விக்டோரியா பப்ளிக் ஹால் என்னும் சென்னைமாநகர மகா மண்டபத்தில் கூடியது. இக்கூட்டத்தின் முதற்றினமாகிய 27உ புதவாரம் காலை 8-மணிக்குச் சூளை, சாமிபிள்ளை வீதியில் ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானார் திருக்கோயிலில் சிவபரஞ்சுடராதிப் பஞ்ச மூர்த்திகளுக்கும் மகாபிடேகாதி யுபசாரங்கள் செய்யப்பட்டன. சங்கேதப்படி பகல் 11-மணிக்கெல்லாம் பெருந்திரளான ஜனங்கள் ஷை சபா மண்டபம் நிறையக் கூடினார்கள். அச்சமயத்தில் அக்கிராசனம் வகிப்பவராக எதிர்பார்க்கப்பட்டிருந்த (Retired Excise Commissioner of Travancore) ஸ்ரீமான் T. பொன்னம்பலம் பிள்ளையவர்கள் தமக்குநேரிட்ட சரீரசுகக்குறைவால் சென்னைக்கு விஜயஞ் செய்ய இயலாமையால், சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்கள், ஸ்ரீமான் J. M. நல்லசாமி பிள்ளை B.A., B.L., (District Munsiff, Guntur) அவர்களை அக்கிராசனம் வகிக்குமாறு பிரேரேபித்தார்கள். இதை ஸ்ரீமான் திருநெல்வேலி S. பால்வண்ண முதலியாரவர்கள் ஆமோதித்தலும் மகா சபையார் பெருங் கரகோஷஞ் செய்து அங்கீகரிக்க ஸ்ரீமான் J. M. நல்லசாமி பிள்ளையவர்கள் அக்கிராசனத்தில் அமர்ந்தார்கள். அமர்தலும், மகா சபையாரியாவரும் எழுந்து ஸ்ரீ நடராஜப்பெருமானார்க்குத் தீபாராதனைசெய்து தோத்திரஞ் செய்தார்கள். உடனே, மதுரைமாநகரினின்றும் எழுந்தருளிய ஆதிசைவக் குருமூர்த்திகளாகிய சிவஸ்ரீ ம. கலியாணசுந்தரப் பட்டரவர்களாலும், இவர்களுக்குப்பின் புரசை இந்து பாலிகாபாடசாலைப் பெண் குழந்தைகளாலும், கேட்டோர் மனங்கசிந்துருகத் தேவார பாராயணஞ் செய்யப்பட்டது. பின்னர் இம்மகா சமாஜத்தின் காரிய தரிசிகளுள் ஒருவராயிருந்த பிரமஸ்ரீ, V. V. இரமண சாஸ்திரியாரவர்கள் வந்தனோபசாரப் பத்திரம் வாசித்து அக்கிராசனரை வரவேற்றார்கள். இச்சமயத்தில் மகா சமாஜத்தின் உபசரணைச் சபைத் தலைவர் ஸ்ரீமான், S. இரத்தினவேலு செட்டியாரவர்கள் (Dubash, Messrs. Best & Co.) வரத்தாமதமாயினமையால், அவருக்குப் பதிலாக பிரமஸ்ரீ, V. V. இரமண சாஸ்திரியாரவர்களே அக்கூட்டத்திற்கு விஜயஞ் செய்த பிரதிநிதிகளுக்கும் அங்கிகள் முதலிய கனவான்களுக்கும் வந்தனோபசார பத்திரம் வாசித்து வரவேற்றார்கள். பிறகு ஸ்ரீமான், அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்கள் அக்கிராசனருக்குப் பூமாலை சூட்டினார்கள். பின்னர் பிரமஸ்ரீ V. V. இரமண சாஸ்திரியாரவர்கள் மகா சமாஜத்தின் ஆறுவது வருடச் அறிக்கையை வாசித்தார்கள். இஃதானதும், அக்கிராசனர் சைவ சித்தாந்தத்தின் உயர்வையும் அதைப்பரப்புதற்காகத் தாபித்து நடைபெற்று வரும் இம்மகா சமாஜத்தால் சென்ற வருடத்திற் செய்தவைகள் இம்மகா சமாஜமும் இதன் மூலமாக சைவ சமயமும் மிகவும் விரைவில் அபிவிருத்தியடையு மென்பதைக் காட்டுகின்றன வென்பதையும் விளக்கி, இவ்வாறு நாம் நமது சமயத்தை யநுட்டிக்கவும் உலகெங்கும் பரப்பவும் நமக்கு மிக அநுகூலமாக வாய்ந்திருக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தை வாழ்த்தி, நமது காருணியமுள்ள சக்கிரவர்த்தியவர்கள் இவ்விந்து தேசத்திற்கு விஜயஞ் செய்து முடிசூடி நமக்குச்செய்த நன்மைகளுக்காக நன்றி பாராட்டி அவர்களுக்கு தந்தி யனுப்பினார்கள். இதன் பின்னர் பண்டிதோத்தமர்கள் பலர் ஒருவர்பின் ஒருவராக அடியிற் குறித்தவாறு தமிழிலும் ஆங்கிலத்திலும் பல அரிய விஷயங்களை உபந்நியசித்தும் சமாஜத்தார் வேண்டுகோளின்படி வியாசங்களெழுதிப் படித்தும் சைவ சித்தாந்தத் துண்மைகளை விளக்கினார்கள்.

### சைவப்பிரசாரகர்களும், அவர்கள் விளக்கிய விஷயங்களும், பாஷைகளும்.

ஸ்ரீமான், திருநெல்வேலி S. பால்வண்ண முதலியார் அவர்கள், 'சிவானந்தம்' (தமிழ்). பிரமஸ்ரீ, மதுரை, ம. கல்யாண சுந்தரப்பட்டரவர்கள் 'சைவாகமப் பிராமாணியம்' (தமிழ்). ஸ்ரீமத், சுவாமி வேதாசலம் அவர்கள், ஞானசாகரம்பத்திராசிரியர், 'ஆன்மபோதம்' (தமிழ்). ஸ்ரீமான், R. சண்முக முதலியாரவர்கள் (Pleader, Salem) 'சைவ சித்தாந்த சாதனம்' (தமிழ்.) ஸ்ரீமத், யாழ்ப்பாணம் வண்ணைநகர்ச் சுவாமிநாதபண்டிதரவர்கள், 'தண்ணளிச் சமயம்' (தமிழ்). பிரமஸ்ரீ, குளித்தலை A. அரங்கசாமி ஐயரவர்கள், 'மலத்திரயம்' (ஆங்கிலம்). ஸ்ரீமான், பொ. முத்தையா பிள்ளையவர்கள், தூத்துக்குடி சித்தாந்த சபையின் சபைத் தலைவர், 'மணிமந்திர ஔஷதம்' (தமிழ்). ஸ்ரீமத், சுவாமி, விருதை சிவஞான யோகிகள், (தமிழ்ப் பிரம சூத்திராசிரியர்,) 'அத்வைத சித்தாந்தம்' (தமிழ்). ஸ்ரீமான், பெங்களூர் A. ஏகாம்பர முதலியார், 'பசுத்வமும் பாசவீடும்' (தமிழ்). ஸ்ரீமதி, செகந்தராபாத்து ஆண்டாளம்மாளவர்கள், 'சிவலிங்க மகத்துவம்' (தமிழ்).

ஸ்ரீமத், தியாகராஜ ஞானியாரவர்கள், கமலாசினி பத்திராதிபர், 'முத்திநெறி' (தமிழ்). ஸ்ரீமான் V.P. காந்திமதிநாதப் பிள்ளையவர்கள், 'சைவசித்தாந்த ஆராய்ச்சி' (ஆங்கிலம்). ஸ்ரீமான், A, சுந்தரநாதப் பிள்ளையவர்கள், செந்தமிழ்ச்செல்வம்பத்திராசிரியரும், திருச்சிராப்பள்ளி (S. P. G. High School) தமிழ்ப் பண்டிதரும், 'தமிழும் சைவசமயமும்' (தமிழ்). ஸ்ரீமான், C. R. சொக்கலிங்க முதலியாரவர்கள், சென்னை ஸ்ரீ நடராஜ பக்தஜன சபை காரியதரிசி, 'உபாசனை' (தமிழ்). பிரமஸ்ரீ, காஞ்சிபுரம் சேஷகிரி தீட்சிதர், 'பசுபதி மகத்துவம்' (தமிழ்). ஸ்ரீமத், ம-தி. யாநுகவி சுவாமிகள், 'யோகம்' (தமிழ்). ஸ்ரீமான், இராயப்பேட்டை, திரு-வி. கலியாண சுந்தர முதலியாரவர்கள், 'சைவன்' (தமிழ்). ஸ்ரீமான், P. C. வள்ளல் சிவஞான தேசிகரவர்கள், பாளையங்கோட்டை சைவ சமயாபிவிருத்தி சபையின் காரியதரிசி, 'நம் சமய உண்மையும் நம்மவர் கொள்கையும்' (தமிழ்). ஸ்ரீமான் S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், B. A. இராயப்பேட்டை, பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் காரியதரிசி, 'ஆலய வழிப்பாட்டின் நோக்கம்' (தமிழ்). ஸ்ரீமான், S. R. சீனிவாசப் பிள்ளையவர்களும், ஸ்ரீமான் இ. ஆதிமூல முதலியாரவர்களும், 'சைவசமயத்தின் நிலைமையும் சைவர்களின் கடமையும்' (தமிழ்). ஸ்ரீமதி அசலாம்பிகை யம்மாளவர்கள், 'இளையான் குடிமாற நாயனார் புராணம்' (தமிழ்). ஸ்ரீமான், முதலியார் S. சபாரத்தினம் அவர்கள், (Interpretor, Supreme Court, Colombo.) 'சமயப்பொறை' (ஆங்கிலம்). ஸ்ரீமான், கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் அவர்கள் B.A., 'தேவாரம்'(தமிழ்.) ஸ்ரீமான், சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியாரவர்கள், 'பற்று' (தமிழ்.) பிரமஸ்ரீ, T. வெங்கடசுப்பய்யர் அவர்கள் B.A,. B.L,. 'சமய ஒழுக்கமும் சமயாபிமானமும்' (தமிழ்).

பிரமஸ்ரீ, வெங்கட சுப்பையர் அவர்கள் B.A,. B.L,. (High Court Vakil) இவைகளை நேரிற்கண்டும் கேட்டும் ஆனந்த பரவசமடைந்து இனிச் சைவசித்தாந்தமே உலகெங்கும் பரவுமெனவும் இதன் பொருட்டு இச்சமாஜத்தார் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளைச் சிலாகித்தும், சமயாபிமானமும் சுதேச பாஷாபிமானமும் மழுங்கிக்கிடக்கும் காலத்தில் மகா மண்டபத்தில் சிறிதும் இடங்கொள்ளாதபடி மூன்று தினங்களிலும் ஜனங்கள் நெருங்கி ஆறு எழுமணி நேரம் இடம் விட்டுப் பெயராமலும் மிக ஆவலோடும் அமைதியோடுமிருந்து சமயாராய்ச்சி செய்தன்மையைப் பலமுறை வியந்து பேசினார்கள்.

இவர் பேசிமுடித்ததும் அக்கிராசனர் எழுந்து சைவ சித்தாந்தத்தின் சாராமிசமான் விஷயங்களை விளக்கி இம்மகா சமாஜத்தைத் தமது சொந்த



செலவில் சென்னையிற் கூட்டிய ஸ்ரீமான், S. இரத்தினவேல் செட்டியார் (Dubash, Messrs. Best & Co.) அவர்களின் வள்ளற் றன்மையை வியந்து வந்தனமளித்து, இம்மகா சமாஜக் கூட்டத்திற்கு விஜயஞ் செய்து தங்கள் மிக அரிய உபந்நியாசங்களால் யாவரையும் மகிழ்வித்து சமாஜத்தைக் கௌரவித்த வித்வ சிரோமணிகளுக்கும், பெண்மணிகளுக்கும், மூன்று தினங்களிலும் வந்திருந்து ஆரம்பத்திலும் இடையிடையேயும் தங்கள் மெல்லிய மிக வினிய குரலால் பண்ணுடன் தேவாரம் பாடிய புரசை இந்து பாலிகா பாடசாலைப் பெண் குழந்தைகளுக்கும், ஸ்ரீமான் மா. தங்கவேலு பிள்ளையவர்கட்கும், பிரசங்காமிர்தம்-டாலூர் வேலு தேசிகரவர்கட்கும் ஷை பாடசாலையைத் தமது சொந்தசெலவில் தாபித்துநடத்திச் சைவசமயபரிபாலனஞ்செய்துவரும் ஸ்ரீமான், கெ. முனிசாமி முதலியா ரவர்களுக்கும், சிவலிங்க முத்திரை பொறிந்த தங்கப் பதக்கங்கள் பூண்டு வாலண்டியர்களாக விருந்து மிகவும் உழைத்த பால சைவ சபையார்களுக்கும், கூட்டத்திற்கு விஜயஞ் செய்த ஏனைய கனவான்களுக்கும் இம்மகா சமாஜத்தின் போஷகராகிய இராமநாதபுர மகாராஜா அவர்களுக்கும் நம்மையாளும் சக்கிரவர்த்தி யவர்களுக்கும் முறையே வந்தனங்களளித்தார்கள். கடைசியாகக் காரியதரிசி, ஸ்ரீமான், இ. ஆதிமூல முதலியாரவர்கள் அக்கிராசனர் சைவ சமயாபிவிருத்திக்காக உழைத்து வரும் உழைப்பையும், தாமும் மற்றவர்களும் இச்சமாஜத்திற்கு அங்கங்களேயாக அக்கிராசனர் உயிரா யிருக்கின்றா ரென்பதையும், ஒருவாறாக விளக்கி இவருக்கு வந்தன மளித்தலும் ஸ்ரீமத், பால் சுவாமிகள் அக்கிராசனரை யாசீர் வதித்துப் புஷ்பமாலை சூட்டினார்கள். இதன் பின்னர் காரியதரிசியவர்களால் ஸ்ரீமான், S. இரத்தினவேல் செட்டியாரவர்களுக்கும் உபந்நியாசகர்களுக்கும் புஷ்பமாலைகள் சூட்டப்பட்டன. வாலண்டியர்கள் வந்திருந்தார் யாவருக்கும் பனிநீர்தெளித்தார்கள். இம்மூன்று தினங்களிலும் பலவிடங்களிலிருந்து வாழ்த்துக்கடிதங்களும் பாக்களும்வந்தன. நமது சக்கிரவர்த்தியார் அவர்களின் அந்தரங்க காரியதரிசியவர்களிடமிருந்து உபசார தந்தி வந்தது. ஸ்ரீமான், பெத்தாச்சி செட்டியாரவர்களும் ஸ்ரீமான், P. S. தெய்வசிகாமணி செட்டியாரவர்களும் மகா சமாஜத்திற்கு தனித்தனியாக 100-ரூபா நன்கொடை யளித்தார்கள். பிரம்பூர்-செம்பியம் கிராம முனுஷீப்-பண்டிதரத்தினம்-புழலை-திருநாவுக்கரசு முதலியாரும், சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதரும் சைவப் பிரசாரகருமாகிய ஸ்ரீமான், ஈக்காடு-இரத்தினவேலு முதலியாரின் குமாரராகிய ஸ்ரீமான், ஈக்காடு-சபாபதி முதலியாரவர்களும் வாழ்த்துப்பா பாடி அச்சிட்டு வினியோகஞ் செய்தார்கள். சமாஜத்தாரால் வெளியிடப்பட்ட ஏராளமான துண்டு பத்திரங்களும், "சைவ சமயிகளின் கடமை" யின்

இரண்டாம் பதிப்பும் "சன்மார்க்கம்" "முத்திநெறி" முதலிய சிறு நூல்களும் யாவருக்கும் இலவசமாக கொடுக்கப்பட்டன.

இச்சமாஜத்தின் பொருட்டு வெளியூர்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளுக்கும் அங்கத்தவர்களுக்கும் சூளையில் மிகவும் சௌகரியமாக விடுதி யமைக்கப்பட்டிருந்தது. இவ்விடுதியில் 28, 29-ஆந் தேதிகளில் மகா சபையார் கூட்டங்கூடிச் சட்டங்களைப்புதுக்கி இவ்வருடத்திற்கு வேண்டிய நிர்வாக சபையாரை ஏற்படுத்தி, இனி செய்ய வேண்டிய விஷயங்களைப் பற்றித் தீர்மானஞ் செய்தார்கள்.

இவர்கள் செய்த திருத்தங்களடங்கிய சட்டங்களும், நியமித்த நிர்வாக சபையின் அத்தியட்சர்களின் பெயர்களும் இப்புத்தகத்திற் பிறிதோரிடத்திற் காணப்படும்.

இவர்கள் செய்த தீர்மானங்களாவன:—

1. வரவு செலவு கணக்கு வாசித்து அங்கீகரிக்கப்பட்டன.

2. அடுத்த (ஏழாவது) வருடாந்தர மகாஜனக் கூட்டம் வேலூரில் கூட வேண்டும்.

3. அரசர்கள், மடாதிபதிகள், ஜமீன்தாரர்கள் முதலிய பிரபுக்களிடம் பிரதிநிதிகளை யனுப்பி அவர்கள் உதவியைப் பெறவேண்டும்.

4. 1912௵ ஜனவரி௴ முதலாக "சித்தாந்தம்" என்ற பெயரால் மாதாந்தர சஞ்சிகையொன்று வெளிப்படுத்த வேண்டும்.

5. இச்சஞ்சிகை சாமாசிகர்களுக்கு இலவசமாகவும் ஏனையோருக்கு வருடம் ஒன்றுக்கு (ஒன்றரை ரூபா) விலைக்கும் கொடுக்கப்படும்.

6. ஷை புத்தகத்தை வி-பி-தபால் வழியாக அனுப்பி வருடாந்தர சந்தா வசூல் செய்யப்படும்.

7. ஷை சஞ்சிகை நான்குபாரம் கொண்டதாயிருக்கும்.

8. இதற்கு சித்தாந்த சரபம் அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்கள் பத்திராதிபராகவிருக்க வேண்டப்பட்டனர்.

9. இச்சமாஜம் இந்தியன் கம்பனி ஆக்ட்டின்படி ரிஜிஸ்ட்டர் செய்யப்படவேண்டும்.

10. சமாஜத்தின் வருமானம் (Madras Central Bank) மதராஸ் சென்ட்ரல் பாங்கில் சேமிக்கப்பட வேண்டும்.

11. பொக்கிஷதாரரும் காரியதரிசியும் ஏகோபித்துக் கைச்சாத்திட்டுக்கொடுக்கும் பற்றுச் சீட்டுகளைக்கொண்டே பாங்கிலிருந்து திரவியம் வாங்கப்படல் வேண்டும்.

12. சந்தாக்களும் பிறவசூல்களும் நேராய் பாங்கிக்கு அனுப்பப்படல் வேண்டும்.



13. அச்சிடும்வேலைகளியாவும் சென்னைச் சூளை மெய்கண்டான் அச்சுக்கூடத்தின் பொறுப்பில் அச்சிடப்படவேண்டும்.

14. முன்னைய ஏற்பாட்டின்படியே சுவாமி வேதாசலம் அவர்கள் வேதனம்பெறும் உபந்நியாசகரா யிருப்பதோடு இவருக்கு உதவிசெய்ய மற்றொருவருக்கும் மாதம் ஐந்து ரூபா கொடுக்கப்படவேண்டும்.

கௌரவ உபந்நியாசகர்களை நியமித்து இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாவுக்கு அதிகப்படாமல் பிரயாணச் செலவுக்காக இவர்கள் அனுப்பும் பற்றுச் சீட்டுகளின்பேரில் கொடுக்கவேண்டும். இவர்கள் சமாஜத்திற்கு அங்கிகளைச் சேர்க்கவும், சந்தா வசூல் செய்யவும் பிரார்திக்கப்படவேண்டும்.

ஸ்ரீமான். டொ. முத்தைய பிள்ளையவர்களும், சித்தாந்த சரபம் அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்களும் கௌரவ சைவப் பிரசாரகர்களா யிருந்து பிரயாணச் செலவு பெற்று ஆங்காங்குச் சென்று உபந்நியாசஞ் செய்யும்படி வேண்டப் பட்டார்கள்.

பிரயாணச் செலவு பெறுமலே கௌரவ சைவப் பிரசாரர்களா யிருந்து உழைப்பதாக ஸ்ரீமான், T. S. தியாகராஜ ஞானியார் அவர்களும், சுவாமி விருதை சிவஞானயோகி அவர்களும் ஒப்புக் கொண்டமை வந்தனத்துடன் ஒப்புக் கொள்ளப்பட்டது.

சென்றவருடம் இம்மகாசமாஜத்தின் சபைத்தலைவராயிருந்த ஸ்ரீமான் K. P. புட்டண்ண செட்டியாரவர்களுக்கு மாட்சிமைதங்கிய நமது சக்கிரவர்த்தியவர்கள் "திவான் பஹதூர்" என்னும் பட்டமும், மைசூர் மகாராஜா அவர்கள் 'இராஜ சபாபூஷணம்" என்னும் பட்டமும் அளித்தமைக்கு நாம் சந்தோஷ மடைந்தமை கடிதவாயிலாக அறிவிக்கவேண்டும். 1911-ஆவது வருடத்தில் சமாஜத்திற்கு அத்தியட்சர்களாயிருந்தவர்க ளனைவருக்கும் மனப் பூர்வமான வந்தன மளிக்கப்பட்டது. 1911௵ டிசம்பர்௴ 30௳ காலையில் ஷை தீர்மானங்கள் செய்து முடிந்தவுடன் ஸ்ரீமத் பால்சுவாமிகள், சுவாமி விருதை சிவஞானயோகிகள், பிரமஸ்ரீ மதுரை-கலியாணசுந்தரப்பட்டரவர்கள் முதலிய சிலர் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்துடன் யாத்திரையாகத் திருவேகம்ப முதலியதலங்களைத்தரிசிக்கச்சென்றார்கள். சிலர் அவரவர்கள் அநுகூலத்தின்படி இரண்டு மூன்று தினங்கள் சென்னையில் தங்கியும் மற்றவர்கள் உடனே சென்னையை விட்டும் தங்கள் தங்கள் இருபிடத்திற் கேகினர்.

இவ்வருடத்திற் சென்னையிற்கூடிய கூட்டம் பலவிதத்திலும் அளவில்லாத சனங்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சியைத் தந்தது.

சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 1911-வது வருடத்து
வரவு செலவு கணக்கு.

வரவு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| சந்தா ... ... ... ... ... | 325 | 8 | 0 |
| நன்கொடை முதலிய வரவு ... ... ... | 215 | 4 | 2 |
| ஆக மொத்த வரவு ... | 540 | 12 | 2 |

செலவு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| துண்டு பத்திரிகைகள், விளம்பரங்கள், சிறு புத்தகங்கள், சபாக்கிரந்தம் முதலியவற்றிற்குக் காகிதமும் அச்சுக் கூலியும் ... ... ... ... | 205 | 3 | 0 |
| உபந்நியாஸகர் முதலாயினோர் பிரயாணச் செலவு ... | 51 | 12 | 1 |
| பிரமஸ்ரீ குளித்தலை A. அரங்கசாமி ஐயர் அவர்களைப் பிரயாகையில் கூடிய இந்திய சர்வமத சங்கத்தில் சித்தாந்த உபந்நியாசஞ்செய்யும்படி அனுப்பினதற்கு ... | 100 | 0 | 0 |
| உபந்நியாசகர் இலேகர் வேதனம் ... ... ... | 87 | 8 | 0 |
| தபால், தந்தி ... ... ... ... | 18 | 9 | 0 |
| காகிதம், குறிப்பு புத்தக முதலியன ... ... | 2 | 10 | 6 |
| வீதிப்பிரசங்கம் வண்டி செலவு முதலிய நானாவித சில்லரை செலவுகள். ... ... ... | 38 | 6 | 0 |
| ஆக மொத்த செலவு ... | 504 | 0 | 7 |
| ஆக வருட முடிவில் இருப்பு. ... ... ... | 36 | 11 | 7 |



## சைவசித்தாந்த மகா சமாஜத்தின் சட்டங்கள்.

1. இம்மகா சபைக்கு "சைவ சித்தாந்த மகாசமாஜம்" என்னும் பெயர் வழங்கப்படல் வேண்டும்.

2. (a) எல்லாச்சைவ சித்தாந்திகளும் இதின் அங்கிகளாகலாம்.

(b) அபிமானிகளும் இதின் அங்கிகளாகலாம். ஆனால், இவர்கள் வோட்ஸ் (votes) கொடுக்க அருகராகார். (அதாவது சமாஜத்தின் காரியங்களை நடத்தும் விஷயங்களில் இவர்கள் தங்கள் சம்மதங்களைத் தெரிவிக்க அருகரல்லர்).

3. இதின்கீழ் அச்சிட்டுள்ள வழிகளையனுசரித்துச் சைவ சித்தாந்த சமயாபி விருத்தியுஞ் சாஸ்திராபி விருத்தியுஞ் செய்யவேண்டு மென்பது இம்மகா சமாஜத்தின் முக்கிய நோக்கமாகும்.

(a) இந்தியாவிலும் பிற நாடுகளிலும் பற்பல விடங்களில் வருடத்திற் கொருமுறை மகாஜனக் கூட்டங் கூடுதல்.

(b) இந்தியாவிலும் பிற நாடுகளிலும் பற்பல பிரசங்கங்கள் நடைபெறச்செய்தல்.

(c) இந்த நாடுகளெங்குஞ் சைவ சித்தாந்த சபைகளைத் தாபித்தல்.

(d) பற்பல சுதேச பாஷைகளில், புத்தகங்களும், பத்திரிகைகளும், துண்டு பத்திரிகைகள் முதலியனவும் வெளியிடுதல், முக்கியமாய்த் திவ்யாகமங்களையும் ஏனைய ஸமஸ்கிருதநூல்களையும் சுதேச பாஷைகளிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தல், சுதேச பாஷைகளிலுள்ள சிறந்த நூல்களை ஆங்கிலத்திலும் சுதே பாஷைகளிலும் மொழி பெயர்த்தல் முதலியன.

(e) திவ்வியகாமங்கள் முதலிய பல நூல்களையுஞ் சேகரித்துப் புத்தகசாலை யமைத்தல்.

(f) முன்னமே தாபிக்கப்பட்டிருப்பனவும், இனி இம்மகா சமாஜத்தாலும், இம்மகா சமாஜத்தின் மூலமாகப் பற்பல சபைகளாலுந் தாபிக்கப்படுவனவுமான பாடசாலைகளில் நீதி நூற் போதனையும் மதபோதனையுஞ் செய்வித்தல்.

(g) நம்மவர்களுள் எளிய கீழ்வகுப்பாருக்கும் அவ்வித போதனைகளைச் செய்தல்.

(h) இம்மகா சமாஜத்தின் நோக்கங்கள் நிறைவேறும் பொருட்டு மடாதிபதிகள் தேவாலய அதிகாரிகள் ஆகிய இவர்களின் உதவியையும் கூட்டுறவையும் பெறுதல். மடங்களுங் கோயில்களும் அபிவிருத்தியடைய உதவி செய்தல்.

4. (a) இம்மகா சமாஜத்தின் காரியங்கள்
போஷகர்கள்,
ஒரு சபைத்தலைவர்,
இரண்டு உதவி சபைத்தலைவர்கள்,
இரண்டு காரியதரிசிகள்,
ஒரு பொக்கிஷதாரர்,
இருபத்துநான்கு (மெம்பர்கள்) சாமாசிகர்,
(இவர்களுள் எண்மர் சென்னைவாசிகள்)
ஆகிய இவர்கள்கூடிய நிர்வாக சபையாரால் நடத்தப்படும்.

வருடந்தோறுங் கூடும் மகாஜனக் கூட்டங்களில் அக்கிராசனம் வகித்தவர்களனைவரும் நிர்வாக சபையின் கௌரவ அங்கத்தினராவர்.

(b) ஒருவருடத்தில் மகாஜனக்கூட்டத்தில் அக்கிராசனம் வகிப்பவர் அடுத்த வருடத்தில் வருடாந்தர மகாஜனக்கூட்டங் கூடும் வரையில் சபைத்தலைவராயிருப்பர்.

(c) உதவிசபைத்தலைவரும், காரியதரிசிகளும் ஏனைய அத்தியட்சர்களும் வருடந்தோறுங் கூடும் மகாஜனக் கூட்டத்தில் நியமிக்கப்படுவார்கள்.

(d) உதவிசபைத்தலைவருள் ஒருவர் சென்னைவாசியா யிருத்தல் வேண்டும்.

(e) காரியதரிசிகளுள் ஒருவரும் பொக்கிஷதாரரும் சென்னை வாசிகளாகவும், மற்றொரு காரியதரிசி அடுத்த வருடாந்தர மகாஜனக் கூட்டங் கூடும் நகரத்தில் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

(f) நிர்வாகசபையின் அத்தியட்சர்கள் கூடியவரையில் இத்தேசத்திலுள்ள பற்பல சைவசபைகளின் பிரதிநிதிகளா யிருத்தல் வேண்டும்.



5. இம்மகா சமாஜத்தின் முக்கிய காரியஸ்தானம் (office) சென்னையி லிருக்கவேண்டும்.

6. காரியநிர்வாக சபையார் கூடும் ஒவ்வொரு கூட்டத்திலும் ஐவருக்குக் குறையாமலிருக்கவேண்டும்.

7. கூட்டங்கள் மூலமாகவேனும் (circulation) சுற்றுக் கடித மூலமாகவேனும் பெரும்பாலாருடைய சம்மதத்தின்படி காரியங்கள் நடத்தப்படவேண்டும்.

8. நிர்வாக சபையார் மகாசமாஜத்தின் அபிப்பிராயங்களுக்கு மாறுபடாமல் காரியங்களை நடத்துவதற்கு வேண்டிய சட்டங்களையும் உபவிதிகளையும் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

9. சமாஜத்தின் நோக்கங்கள் நிறைவேறுவதற்குச் சந்தா வாயிலாகவும் நன்கொடை வாயிலாகவும் பொருள் சேகரிக்கப் படவேண்டும்.

10. இம்மகா சமாஜத்திற்சேரும் ஒவ்வொருவரும் வருடம் ஒன்றுக்கு ஒரு ரூபாவுக்குக் குறையாமற் சந்தாசெலுத்திவரவேண்டும். மொத்தமாக இருபது ரூபாவுக்குக் குறையாமல் செலுத்துவோர் தங்கள் ஆயுள்வரையில் சாமாசிகரா யிருக்கப் பெறுவர்.

11. நிர்வாகசபையார் வரவு செலவு கணக்குடன் வருடாந்தரச் சபாக்கிரந்தங்களைச் சித்தப்படுத்திவைத்து வருடந்தோறும் மகாசமாஜக் கூட்டத்தில் வெளியிடவேண்டும்.

12. சைவ சித்தாந்த சமயாபிவிருத்தி விஷயமாக ஆங்கிலத்திலுஞ் சுதேச பாஷைகளிலும் வெளியிடப்படும் பிரசுரங்களை இம்மகா சமாஜத்தின் பிரசுரங்களாகச் செய்துகொள்ளவும், அவைகளுக்கு இயன்ற பொருளுதவி செய்யவும் நிர்வாக சபையார் அதிகாரிகளாவர்.

13. இச்சமாஜத்தின் பொருட்டுச் சேகரிக்கப்படும் பொருள் (Madras Central Bank) மதராஸ் சென்ட்ரல் பாங்கில் சென்னையிலுள்ள காரியதரிசி, பொக்கிஷதாரர் ஆகிய இருவர் பேரால் சேமிக்கப்பட்டு வேண்டுமானதொகைகள் இவ்விருவர் கைச்சாத்துமிட்டபற்றுச் சீட்டுகளைக் கொடுத்து வாங்கப்படல்வேண்டும்.

இம்மகா சமாஜத்தின் நிர்வாக சபையினர்:—

**போஷகர்.**

இராமநாதபுர மகாராஜா அவர்கள்.

**அக்கிராசனாதிபதி.**

ஸ்ரீமான், J. M. நல்லசுவாமி பிள்ளை அவர்கள் B.A., B.L.,
(District Munsiff, Guntur.)

**உதவி அக்கிராசனாதிபதிகள்.**

ஸ்ரீமான், S. இரத்தினவேலு செட்டியார் அவர்கள்
(Dubash Messrs. Best & Co.)

,, நாதமுனி முதலியார் அவர்கள், வேலூர்,

**காரியதரிசிகள்.**

,, S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B.A., சென்னை.

**பொக்கிஷதாரர்.**

,, I. ஆதிமூல முதலியார் அவர்கள், சென்னை.

**அத்தியட்சர்கள்.**

,, S. கணபதி பிள்ளை அவர்கள், திருவனந்தபுரம்.
,, S. பால்வண்ண முதலியார் அவர்கள், திருநெல்வேலி.
,, V. சிவஞான யோகிகள், விருதுபட்டி.
,, M. A. சந்திரசேகரம்பிள்ளை அவர்கள், திருச்சிராபள்ளி.
,, S. சிவகுருநாத செட்டியார் அவர்கள், கும்பகோணம்.
,, அஷ்டாவதானம் P. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், சென்னை.
,, C. ஏகாம்பர முதலியார் அவர்கள், சிகந்திராபாத்.
,, P. அப்பாவு செட்டியாரவர்கள், சென்னை.
,, T. V. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், சென்னை.
,, W. T. கோவிந்தராஜ முதலியார் அவர்கள், சென்னை.
,, R. சண்முக முதலியார் அவர்கள், சேலம்.
,, T. முத்துசாமிக் கோனார் அவர்கள், திருச்செங்கோடு.
,, H. K. வீரபசவையா அவர்கள், B.A., B.L., பெங்களூர்.
ப்ரமஸ்ரீ, கலியாணசுந்தரப் பட்டர் அவர்கள், மதுரை.
ஸ்ரீமான், வேலுசுவாமி தேவர் அவர்கள், இராமநாதபுரம்.
,, M. சுவாமிநாதம் பிள்ளை அவர்கள், நாகப்பட்டினம்.
,, T. A. இராமநாதம் செட்டியார் அவர்கள்,



ஸ்ரீமான், தியாகராஜ ஞானியார், அவர்கள், திருவாலூர்.
,, M. A. சோமசுந்தர முதலியார் அவர்கள், சென்னை.
,, திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், மணிமங்கலம்.
,, K. நாகலிங்க முதலியார் அவர்கள், சென்னை.
,, ஸ்வாமி வேதாசலம் அவர்கள், பல்லாவரம்.
,, K. U. பொன்னுசாமி முதலியார் அவர்கள், உத்திரன்மேரூர்.
,, குருபசப்ப குட்ளப்ப லம்பி சிமல்கி, ஷோலாபூர்.

---

# கடவுளின் சொரூபம்.*

---

கடவுளான ருத்ரசிவன் பாட்டுக்களுக்குப் பதி என்றும் யாகங்களுக்குப் பதி என்றும் ருக்வேதத்தில் பேசப்பட்டிருக்கின்றனர்.

'காத பதிம் மேத பதிம்'

இங்ஙனம் சிவபெருமான் பசுபதியாகிய தலைமை தெளிவுறுத்தப் பட்டிருக்கின்றது,

எஜுர் வேதத்தில் அவர், ருத்ரன் ஒருவனே இரண்டாவதொன்றில்லையெனப் பேசப்பட்டிருக்கின்றார்.

"ஏக ஏவருத்ரா நத்விதியாயதஸ்தே"

என்னும் இது, பின்னர்ச் சாந்தோக்கிய தைத்திரீய உபநிடதங்களில் சத் எனவும் பிரமம் எனவும் இரண்டாவதில்லாத ஒன்று எனவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

"சதேவ சௌம்யதமாக்ர ஆஸீத் ஏகமேவாத்விதீயம் பிரஹ்மா"

அவர் ஒன்றேயாம் தன்மையைத் திருமூல மஹருஷியும்,

"ஒன்றவன்றானே இரண்டவனின்னருள்
நின்றனன் மூன்றினுள் நான் குணர்ந்தானைந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றவன் றானிருந்தா னுணர்ந்தெட்டே"

என்று திருவாய் மலர்ந்தருளினர்.

---

*இது ஸ்ரீமான் ஜே. எம். நல்லசாமி பிள்ளை B.A., B.L., அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுத், தமிழில் ஸ்ரீமத் சுவாமி வேதாசலம் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

பகவான் மெய்கண்ட தேவரும்,

"ஒன்றென்றது ஒன்றேகாண் ஒன்றேபதி, பசுவாம்
ஒன்றென்ற நீ பாசத்தோடுளேகாண்—ஒன்றின்றால்
அக்கரங்களின்றும் அகரவுயிரின்றேல்
இக்கிரமத் தென்னு மிருக்கு."

என்று அருளிச் செய்தனர்.

"கடவுள் ஒன்று ஒன்றுமாத்திரமே, இவ்வொன்றேபதி."

ஆகவே, இந்து சமயத்தின் மிகப் பழைய சொரூபமான சைவ சமய மானது கடவுள் ஒன்றென்றும், இரண்டாவதில்லாத ஒன்று மாத்திரமே என்றும் வலியுறுத்துக் கூறுகின்றது. கடவுளின் சத்திகள் பல திறப்படும்; அவை வழக்கமாய் ஞான சத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி என மூன்று கூறாக வகுக்கப் பட்டிருக்கின்றன. இவையெல்லாம் அவருடைய அருள் அல்லது கிருபாசத்தி என்றும், கடவுள் அன்பே உருவாக உள்ளவர் என்றும் சொல்லப்படும்.

"அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதியாரு மறிகிலார்
அன்பே சிவமாவதியாரு மறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந் திருந்தாரே."

எனவே, சுருங்கச் சொல்லுங்கால் கடவுள் சத்துச் சித்து ஆனந்தமாவர்; அதுவே சச்சிதானந்த சிவம்.

அவர் உலகங்களைப் படைக்க எண்ணுகிறார். அங்ஙனமே அவற்றைப் படைக்கிறார், அவற்றைத் திரும்பத் திரும்ப அழிக்கிறார். இதனை அவர் ஏதொரு நோக்கமும் இன்றியாவது தனது உல்லாசத்தின் பொருட்டாகவாவது தான் நினைத்தபடியெல்லாமாவது செய்பவர் அல்லர்; ஏனெனில், அவர் அன்பே உருவாக உள்ளவர் என்பதை அறிவோம் அல்லமோ? அறியாமையில் அகப்பட்டுத் தவறுகின்ற உயிர்களை அதனினின்றும் மேலெடுத்து, அவர்களுக்கு உடம்புகளையும் இந்திரியங்களையுங் கொடுத்து, அவ்வாற்றால் அவர்கள் தாமே தம் எண்ணப்படி நடந்து நன்மை தீமைகளை அறிவிக்கும் மரத்தின் கனிகளைச் சுவைத்துத், துன்பத்தாலும் துயரத்தாலும் திருத்தஞ்செய்யப் பட்டுச் சுத்தமாகிப், பரம்பொருளின் திருக்குறிப்பின் வழியே



தமது குறிப்பையும் நிறுத்தத் தெரிந்து கொள்ளும்படி செய்விக்கின்றார்.

ஆசாரிய சுவாமிகளான மாணிக்கவாசகர் பின் வருமாறு அருளிச் செய்கின்றார்.

"நிலம்நீர் நெருப்பு உயிர் நீள் விசும்பு நிலாப்பகலோன்
புலனாயமைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகேழெனத் திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ."

இவ்வெட்டு வடிவங்களினும் அவன் நிறைந்திருக்கின்றான்; இவ்வெட்டும் அவனுக்கு உடம்புகளாயிருக்கின்றன; ஆதலினாலேதான் சிவபெருமான் அட்ட மூர்த்தி யென்று சொல்லப் படுகின்றார். இதனாலே அவர் அந்தரியாமியாந் தன்மையும் அல்லது எங்கும் உண்மையும் அல்லது அவர் அறிவுப் பொருளாகலின்னுள்ளும் இருத்தலும் இனிது காட்டப் படுகின்றது. என்றாலும், அவர் இவையெல்லா வடிவங்களுக்கும் அப்பாற் பட்டவராயும், மனிதனுக்கும் மாயை எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவராயும் எல்லாங் கடந்தவராயும் இருக்கின்றார்.

இவ்வெட்டு வடிவங்களினும் நிறைந்திருத்தல் பற்றி அவர் எண் பேயர்கள் உடையவரா யிருக்கின்றார்.

"ப்ருதிவ்யோ பவ:, ஆபச்சர்வ:, அக்நேருத்ர:, வாயுர்ப்பீம:, ஆகாஸஸ்ய மகாதேவ:, சூர்யஸ்ய உக்ர:, சந்த்ரஸ்யசோம:, ஆத்மாந: பசுபதி:."

'பூ' என்கின்ற பகுதிக்குச் சத் அல்லது இருப்பது என்பது பொருளாகலின், பிரமம் எக்காலத்தும் எவ்விடத்தும் இருத்தல் பற்றி அது பவன் என்று சொல்லப்படுவதாயிற்று. இதனால் பிரமம் எல்லாப் பொருள்களினும் ஊடுருவி விளங்குவது என்று அறிவுறுத்தப் படுகின்றோம்.

இனி 'சிரி' என்கின்றபகுதிக்கு அழித்தல் என்பதுபொருளாகலின், சங்கார கருத்தாவாகிய பிரமத்திற்குச் சர்வன் என்னும் பெயர் உண்டாயிற்று.

இனிச் சமுசார நோயை ஒழித்தல் பற்றிப் பிரமத்திற்கு உருத்திரன் எனும் பெயர் உண்டாயிற்று.

இனி எல்லா உயிர்களுக்கும் விதிப்பவன் ஆதல் பற்றியும் அவர்களால் அஞ்சப்படுபவன் ஆதல் பற்றியும் 'பயங்கரமான

வன்' என்னும் பொருளைத்தரும் பீமன் என்னும் பெயர் பிரமத்திற்கு வழங்கப்படுவதாயிற்று. சுருதியும் "அவனிடத்துள்ள அச்சத்தால் காற்று வீசுகின்றது." என்றுரைக்கின்றது. (தைத்திரீய உபநிடதம், 2, 8)

இனிப் பெரியனும் ஒளியுருவனுமாய் இருத்தல் பற்றிச் சிவபெருமான் மகாதேவன் என்று சொல்லப்படுகின்றான். இங்ஙனமே அதர்வசிரசுபநிடதமும் கூறுகின்றது.—"எது அவ்வாறு மகாதேவன் என்று சொல்லப்பட்டது? எல்லாப் பொருள்களையும் அறத்துறந்ததுபற்றி, அவன் தனது ஆன்ம ஞானத்தின் பொருட்டாக உபாசிக்கப் படுகின்றான்; அதனாலேதான் அவன் மகாதேவன் என்று சொல்லப்பட்டதும்."

இனி வேறொருவராற் செயிக்கப்படாதது பற்றிப் பிரமம் உக்கிரன் என்று பெயர் பெறலாயிற்று. "அங்கே சூரியனும் விளங்குதல் இல்லை, சந்திரனும் நட்சத்திரங்களும் விளங்குதலில்லை." (சுவேதா சுவதர உபநிடதம், 6, 14.)

அப்பரம் பொருள் படைத்தற்றொழில் புரிதல் பற்றி அரன் எனவும், காத்தற்றொழில் புரிதல் பற்றிச் சங்கரன் எனவும், அழித்து மீளத்தோற்றுவித்தல் பற்றி உருத்திரன் எனவும், பரமானந்தத்தைத் தருதல் பற்றிச் சிவன் எனவும் பெயர் பெற்று வழிபடப்படுகின்றது.

கடவுள் எண்குணங்கள் உடைமையினாலே, எண்குணத்தான் என்று பெயர் கூறப்படுகின்றது. எண்குணங்களாவன,—

தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவேபாசங்களின் நீங்குதல், பேர் அருளுடைமை, வரம்பில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்ப முடைமை.

இவற்றுள் 'முற்று முணர்தல்' என்பது புறக்கருவிகளின் உதவி சிறிதும் வேண்டாமல், மலினம் அற்ற இயற்கை உணர்வுக்கு எல்லாப் பொருள்களும் நேரே புலனாம்படி அறிந்தாங்கறிந்து நிற்றல், இதுவே சருவஞ்ஞத்துவம்.

என்றும் நிறைவு எனப்படும் நித்திய திருப்தித்துவம் என்பது தனக்குமேல் ஒன்றில்லாதாய்த் துன்பம் என்பது தன்



கட்டினைத் துணையும் இல்லாததாய் உள்ள பேரின்பத்தால்நிரம்பி நிற்றல் இதுபற்றியே "பிரமம் ஆனந்தம்" என்னும் சுருதி வாக்கியமும் எழுந்தது. (தைத்திரீய உபநிடதம், 3, 6.)

சுவாதாச்சிதம் என்பது தானாகவேயுள்ள தனக்கு மேலொன்றில்லாத பேரறிவுடைமையாகும்.—இதுவே ஆதியில்லாத அநாதி போதம் என்றுஞ் சொலலப்படும்.

சுவதந்திரம் என்பது பிறர்வயப்பட்டிராமையும், தன்பாற்கீழ்த்தரமான அடையாளங்கள் இன்றித் தன்னையொழிந்த எல்லாவற்றையுந் தன் ஆட்சிக் கீழ்வைத்து நடத்துவதும் ஆகும்.

என்றுந் தவறா ஆண்மை எனப்படுவதாகிய நித்தியலுப்தசத்தித்துவம் என்பது தன்னியற்கையில் எல்லா வல்லமையும் பொருந்தப் பெற்றிருத்தல். அளவு படாத ஆற்றலுடைமையே முடிவற்ற வல்லமை எனப்படுவதாகிய அநந்த சத்தித்துமாகும். முடிவு படாத இவ்வாற்றல்களை உடைமையினாலே தான் பிரமமானது உலகத்தைத் தோற்றுவித்து அதனை ஆளுதல் செய்கின்றது.

சைவ சித்தாந்தத்தின்படி கடவுள் உண்மைப்பொருளாகிய சத்தாய், அறிவுப்பொருளாகிய சித்தாய்க் குணிரூபமாயுள்ள உயிர்ப்பொருளே யாகுமல்லது, உயிரில்லாது இறந்து கிடக்கும் சடசத்தி அன்று. கடவுள் குணங்களற்ற பொருளன்று. அங்ஙனமாயின், கடவுளை நிர்க்குணன் என்றும் குணாதீதன் என்றுங் கூறுவதென்னையெனின்; சத்துவம், இராசதம், தாமதம் என்னும் மாயா குணங்கள் உடையன் அல்லன் என்பதே அச்சொற்களுக்குப் பொருளாம். சகுணம் என்பது இம்முக்குணங்களையுடையதாகும்.

கடவுள் அவன் அவள் அது வென்னும் மூவகை வடிவினனாக ஓதப்படினும், அவன் அவை ஒன்றும் அல்லன். கடவுள் உருவமும் அல்லன், அருவமும் அல்லன், அருவுருவமும் அல்லன்; என்றாலும், அவன் நம் பொருட்டுத் தன் அருளையே தனக்குத் திருமேனியாகக் கொண்டு தோன்றி அருள் புரிவன். கடவுளாகிய சிவபெருமான் பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்னுந் திரிமூர்த்திகளில் ஒருவன் அல்லன்; சிவம் சதுர்த்தம்

சாந்தம் அத்வைதம்" என்று உபநிடதங்களிற் கூறப்பட்டபடி, அவர்களுக்கு அப்பாற்பட்ட நான்காவது பொருள் ஆவன். கடவுள் தாய்க்கருப்பையுட் படாதவனாகலின், அவன் நம்மனோரைப்போலச் சடவுடம்பு கொண்டு மனிதாவதாரம் எடுப்பவனும் அல்லன்; பின்பு இறப்பவனும் அல்லன்; அதனாலேதான் அவன் அஜன் அல்லது பிறவாதவன் என்றும், அமிருதன் அல்லது இறவாதவன் என்றும் வேதங்களினும் உபநிடதங்களினும் ஓதப்படுகின்றான். திருமூல மஹருஷியும்

"பிறப்பிலி பிஞ்ஞகன் பேரருளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமுமாமே"

என்று திருவாய் மலர்ந்தருளினர்.

முற்போந்தவற்றை யெல்லாம் தொகுத்துச் சொல்லுங்கால், உண்மையான வேதாந்த சித்தாந்த தத்துவத்தின்படி கடவுள் சத்துச் சித்து ஆனந்தம் ஆவரென்பதூஉம்; அவர் சடப்பொருளும் ஆகார் சடப்பொருளாற் பற்றப்படுபவரும் ஆகார் என்பதூஉம்; அவர் நிர்க்குணராயும் குணிப்பொருளாயும் என்றும் ஆனந்த நிறைவினராயும் அன்பே வடிவினராயும் படைத்தல் முதலாகிய தன் எல்லாச் செயல்களையும் அருளாற் செய்பவராயும் உள்ளவரென்பதூஉம்; அவர், அவன், அவள், அதுவென்றும் ஒன்றும் அல்லாதவராயும், சட்ரூப அரூபங்கள் உடையரல்லராயும், தம்மை அன்பால் வழிபடுவார்க்குத் தம் அருளினையும் மாட்சியினையும் புலப்படுத்துபவராயும் இருப்பாரென்பதூஉம்; அவர் பிறக்கவும் இறக்கவும் மாட்டாதவராகையால், மலமாயா கன்மங்கள் என்னும் வலையில் அகப்பட்டுப் பதைப்புறும் உயிர்களை அவற்றினின்றும் பிரித்தெடுத்து நிறுத்த வல்லராகிய வரம்பற்ற தனித் தலைமைத்தூய கடவுளாமென்பதூஉம்; அவரை உண்மையான நம் அப்பன் என்றும், சகோதரன் என்றும் அறிந்து, அவரை உண்மை அன்பால் வழிபடுதல் ஒன்று மாத்திரமே பிழைபடும் உயிர்கள் செய்யும் தீமைகளை யெல்லாம் போக்கும் மருந்தாமென்பதூஉம் இனிது பெறப்படும் என்க. ஓம் சிவாயநம:

## சமாசாரங்கள்.

### சைவசித்தாந்த மகா சமாஜத்தின் உபந்நியாசங்கள்.

ஸ்ரீமத் சுவாமி வேதாசலம் அவர்களின் உபந்நியாசங்கள்:—சுவாமி வேதாசலம் அவர்கள்சென்ற ஜனவரிமீ 17உ வேலூருக்குப்போய் அவ்விடத்தில் 12-நாள் தங்கி ஷை மீ 21உ திருநாவுக்கரசு சுவாமிகள் திருமடத்தில் திருஞானசம்பந்த சுவாமிகளின் திருச்சரித வாராய்ச்சி என்னும் விஷயமாக உபந்நியாசஞ் செய்தார்கள். அடுத்ததினம் 22உ மாலை ஷை சுவாமிகளின் அக்கிராசனத்தின்கீழ்கூடிய கூட்டத்தில் சைவசித்தாந்தமகா சமாஜத்திற்குக் கிளைச்சபையாக சைவசித்தாந்த சபை யொன்று வேலூரில் தாபிக்கப்பட்டது. இதற்கு இம்மகா சமாஜத்தின் உப அக்கிராசனர்களுள் ஒருவராகிய ஸ்ரீமான், நாதமுனி முதலியாரவர்கள் (Retired Sub Assistant Inspector of Schools) அக்கிராசனராகவும், ஸ்ரீமான் இராஜவேலு முதலியார் B.A., (Pleader), அவர்களும், கன்ட்ராக்டர் ஸ்ரீமான், அப்பாதுரை முதலியார் அவர்களும் கௌரவ காரியதரிசிகளாகவும் நியமிக்கப்பட்டார்கள். ஜனவரிமீ 25உ வேலூர் சைவசித்தாந்த சபையின் சார்பாக ஷை சுவாமிகள் "சமரச சன்மார்க்கம்" என்னும் விஷயமாக உபந்நியாசித்தார்கள் அடுத்த டிசம்பர்மீ வேலூரில் கூடும் சைவசித்தாந்த மகா சமாஜக் கூட்டத்தை முன்னின்று நடத்துவதற்கு உள்ளூர் உபசபை (Local Committee) ஒன்று சேர்க்கப்பட்டது. இவ்வுபசபைக்கு ஸ்ரீமான், நாதமுனி முதலியாரவர்கள் அக்கிராசனராகவும், ஸ்ரீமான், இராஜவேலு முதலியாரவர்கள் B.A., (Pleader) அவர்களும், ஸ்ரீமான், சிவசங்கர முதலியார் (Pleader) அவர்களும், காரியதரிசிகளாகவும் நியமிக்கப்பெற்றார்கள். ஜனவரிமீ 28உ ஷை சுவாமிகளால் புலாலுண்ணாமை என்னும் விஷயமாக உபந்நியாசம் செய்யப்பட்டது. இவ்வுபந்நியாசத்தைக் கேட்ட பலர் தாங்கள் அன்று முதல் மரணபரியந்தம் புலாலுண்ணுதலில்லை யெனச் சபதஞ் செய்து கொண்டார்கள். ஷை சுவாமிகள் வேலூரிலிருந்து சுமார் நூறு கனவான்களை இம்மகா சமாஜத்திற்கு மெம்பர்களாகச் சேர்த்தார்கள். இவர்களுள் இருபத்தைவர் உடனே தங்கள் சந்தா தொகைகளைச் செலுத்தினார்கள்.

***

ஸ்ரீமான், பொ. முத்தையா பிள்ளையவர்களின் உபந்நியாசங்கள்:—சைவசித்தாந்த மகா சமாஜத்தின் கௌரவ உபந்நியாசகருள் ஒருவராகிய

ஸ்ரீமான், பொ. முத்தையா பிள்ளையவர்கள். சென்ற ஜனவரிமீ 5௳ "முத்திநெறி" என்னும் விஷயமாகவும் 6௳ "அறம்" என்னும் விஷயமாகவும், 7௳ "குருவழிபாடு" என்னும் விஷயமாகவும் நாகைத் தமிழ்ச் சங்கத்திலும் 15௳ "திருக்குறள்" என்னும் விஷயமாக தூத்துக்குடியிலும், 25,26-ஆம் தேதிகளில்முறையே "சைவம்" "ஆலய வழிபாடு" என்னும் விஷயங்களைப் பற்றி திருக்கோவலூரிலும், 30௳ "சைவ சித்தாந்தம்" என்னும் விஷயமாக மன்னார்குடியிலும் உபந்நியாசங்கள் செய்தார்கள்.

***

ஸ்ரீமான் K. U. பொன்னுசாமி முதலியாரவர்களின் உபந்நியாசம்:—சைவசித்தாந்த மகா சமாஜத்தின் அத்தியட்சர்களுள் ஒருவராகிய ஸ்ரீமான் K. U. பொன்னுசாமி முதலியாரவர்கள் சென்ற ஜனவரிமீ 19௳ தமதிருப்பிடமாகிய உத்திரமேரூருக்கு 9 மைல் தூரத்திலுள்ள மானாம்பதியென்னும் கிராமத்திற்குப்போய் அவ்விடத்தில் தங்கி மூன்று உபந்நியாசங்கள் செய்து அக்கிராமத்தில் ஒரு சைவ சபையைச் சேர்ப்பித்தார்கள்.

***

சென்னையில் மாசிமக உற்சவம்:—நிகழும் மாசிமீ 3௳ ஆதிவாரம் காலை சென்னைமாநகரிலுள்ள பல சிவாலயங்களில் ஷை மகோற்சவம் மிகச் சிறப்பாய் கொண்டாடப்பட்டது. சமுத்திரக்கரையில் எங்கு பார்த்தாலும் அலங்காரமாகப் பந்தர்கள் அமைக்கப்பட்டன. எண்ணிறந்த அடியார் கூட்டங்கள் தமிழ் வேத பாராயணத்தால் ஷை மகோற்சவத்தைச் சிறப்பித்தன. அன்று மாலை சைவசித்தாந்த மகா சமாஜத்தாராலும், பாலசைவ சபையாராலும் கடற்கரையில் உபந்நியாசங்கள் செய்யப்பட்டன.

***

சென்னை சிவனடியார் திருக்கூட்டம்:—இத்திருக் கூட்டத்தின் பதின்மூன்றாவது வருடப்பூர்த்தி மகோற்சவம், நிகழும் விரோதிகிருது௵ பங்குனிமீ 4, 5-ஆந் தேதிகளில் (16-17-3-12) அடியிற் குறித்தவாறு நடைபெறும். 16௳ மாலை 4-மணிக்கு திருமயிலையில் சனிப்பிரதோஷ மஹோற்சவ தரிசனம். 17௳ காலை 7-மணிக்கு சபாலய ஸ்ரீ கற்பக விநாயகக் கடவுளுக்கு அபிடேகம். பகல் 2-மணி முதல் 2½-மணி வரையில் தேவார பாராயணம். 2½-மணி முதல் 3-மணி வரையில் அக்கிராசனர் பிரதம உரையும் திருக்கூட்டத்தின் 1911௵ சபாக்கிரந்தமும் வரவுசெலவு கணக்கும் வாசித்தலும். மாலை 3-மணிமுதல் 4-மணி வரையில் இதின் உபசபையாகிய பாலசைவ சபையின் காரியதரிசி ஸ்ரீமான், மணிமங்கலம்-திருநாவுக்கரசு முதலியாரவர்களால் "சைவ சமயம்" என்னும் விஷயமாக உபந்நியாசம். 4-மணி முதல் 5-மணி வரை இதின் சகோதர சபைகளுள் ஒன்றாகிய இராயப்பேட்டை, ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் காரியதரிசி ஸ்ரீமான், திரு-வி. கலியாணசுந்தர முதலியாரவர்களால் "சுத்தாத்துவிதம்" என்னும் விஷயமாக உபந்நியாசம். 5-மணி முதல் 6-மணி வரையில் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் காரியதரிசி ஸ்ரீமான், S. சச்சிதானந்தம் பிள்ளை B.A., அவர்களால் "சைவசமயத்தின் தற்கால நிலைமையும் சைவ சமயிகளின் கடமையும்" என்னும் விஷயமாக உபந்நியாசம். 6-மணி முதல 7-மணி வரையில் M. A. சோமசுந்தர முதலியாரவர்கள் "சேக்கிழார் சுவாமிகள் திருச்சரிதவாராய்ச்சி" என்னும் விஷயமாக உபந்நியாசம். 7-மணி முதல் 8-மணி வரையில் அக்கிராசனர் முடிவுரையும், நூதன அத்தியட்சர்களை நியமித்தலும், வந்தனோபசாரங்களும்.



***

பாடசாலைகளில் நீதி போதனையும் மதபோதனையும் செய்தல்:—இவ்விஷயமாக யோசித்து அபிப்பிராயம் வெளியிடும்படி நமது அரசாங்கத்தார் ஒரு கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த கமிட்டியின் மெம்பர்கள் பெரும்பாலார் இந்துக்கள். மற்றவர்கள் ஐரோப்பியக் கிறிஸ்தவரும் மகமதியரும். நமது அரசாங்கத்தார் கிறிஸ்து சமயத்தினராயிருந்தும் இவர்களிடத்தில் சமயப் பொறையும் நடுவு நிலைமையும் இருப்பதனாலும் அரசர்களின் க்ஷேமத்திற்குக் குடிகளின் தெய்வ வழிபாடும் நல்லொழுக்கமுங் காரணமாதலாலும், நம்மவர்கள் ஆங்கிலங் கற்கப்புகுந்தநாள் தொடங்கிச் சிறுவர்களுக்குச் சமயபோதனை செய்வதை யொழித்து விட்டமையால் இந்தியாவில் நாளுக்கு நாள் தீயொழுக்கங்கள் மேலிடுவதனாலும், இப்போது நமது அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட முயற்சி மிகவும் கொண்டாடத்தக்கதாகும். அன்றியும் கிறிஸ்தவர்கள் இத்தேசமெங்கும் பாடசாலைகள் வைத்து அவற்றில் நம்முடைய சிறுவர்களுக்குத் தங்கள் சமய நூல்களைப்போதித்து நமது சமய ஒழுக்கங்களைப் பழித்துத் தினே தினே ஆயிரக்கணக்கானவர்களைக் கிறிஸ்தவர்களாக்கி வருகிறார்கள். இதை நம்மவர்கள் பார்த்துக்கொண்டிருந்தும் தங்கள் சிறுவர்களுக்குத் தங்கள் சமய நூல்களைப்போதிக்க முயற்சி செய்யாமல் வாளாவிருக்கும்போது அரசாங்கத்தார் செய்யும் இம்முயற்சி அவர்கள் நமக்குச் செய்யும் ஒப்பற்ற உபகாரமாகும். ஆதலால் கமிட்டி மெம்பர்கள் தங்களுக்குக் கிடைத்த இவ்வரிய சந்தர்ப்பத்தைக் கைசோரவிடாமல் எல்லா விதத்தாலும் பயன்படுத்தி ஆரிய ஜனங்களின் ஆசீர்வாதம் பெறுவார்களென எதிர்பார்க்கிறோம்.

ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை:—சென்னை இராயப்பேட்டையில் உள்ள ஸ்ரீபால சுப்பிரமணிய பக்தஜன சபை 7 வருடங்கட்குமுன்னர் அவ்விடத்துத் தாபிக்கப்பட்டது. இச்சபையின் முக்கிய நோக்கமாவது உண்மைச் சைவ சமயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதேயாம். இந்நோக்கம் நிறைவேறுமாறு அநுசரிக்கப்படும் வழிகளாவன:—

(1) சபையின் அங்கத்தவர்களை கல்வி கேள்விகளில் வல்லுநராக்க முயலல்;

(2) வைதிக சமயத்தினருள் கல்வியறிவில்லா எளிய கீழ்வகுப்பினர்பாற் சென்று நல்லொழுக்கத்திற்கு இன்றியமையாச் சமய உண்மைகளைக் கேட்போர்க்கு இனிது விளங்கும்படி ஆணவத்தடிப்பை அகற்றி மெய்யன்போடு உபந்நியாசித்தல்.—என்பவைகளாம்.

இம்முறைப்படி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் காலையில் திருக்குறட் பயிற்சியும் பிரதிதினமும் இரவில் தமிழ்நூல் பயில விரும்புவோர்க்குத் தக்க புலமையுள்ளோரால் பாடங் கற்பித்தலும் செய்யப்பட்டு வருகின்றன. இச்சபையினர் சனிக்கிழமை தோறும் சென்னையின் பல பாகங்களிலுஞ் சென்று சமய சம்பந்தமான உபந்நியாசங்களைச் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் சார்வாகச் செய்து வருகின்றனர். சின்னாட்கட்கு முன்னர் இச்சபையில் ஒரு சிறிய புத்தகசாலையும் தாபிக்கப்பட்டது.

***

சென்னை மெய்கண்ட சந்தான சபை:—சித்தாந்த சரபம் அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்கள் தமது ஆன்மார்த்த நண்பினராகிய சுவாமி வேதாசலமவர்களுடன் ஆலோசித்துச் சென்னையிற் றாபித்துப் பத்து வருடமாகிறது. இச்சபையில் ஸ்ரீ அருணசலேஸ்வரர் தமிழ்வேத பாடசாலை யொன்று வண்ணக்களஞ்சியம் காஞ்சி-நாகலிங்க முதலியார் தற்காலம் தாபித்து, பிரசங்காமிர்தம் பாலூர்-வேலு தேசிகரவர்களைக்கொண்டு 8-வயதுக்குக் குறையாத சிறு பிள்ளைகட்கு இலவசமாய்த் தேவாரங்கள் கற்பித்து வரும்படி ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றனர். திருவருளை முன்னிட்டு நடத்தும் இப்பாடசாலை மென்மேலு மோங்குக.

THE REGISTRAR OF BOOKS
REGISTERED
MADRAS.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி க.] 1912-ளு பிப்ரவரீமு [பகுதி உ.

## அத்துவிதம்.

நத்விதீயம் என்ற வடமொழியின் முதலில் உள்ள 'ந' என்னும் உபசர்க்கத்தில் 'ந்' என்னும் மெய்யெழுத்துப்போக, அம்மெய்யின்மேல் ஏறி நின்ற 'அ' என்னும் உயிரெழுத்து மாத்திரம் நின்று அத்விதீயம் என்றாகி, செந்தமிழ் வழக்கில் *அத்துவிதம் என்று திரிபெய்திவரும் 'ந' என்னும் அகரம் அன்மை, இன்மை, மறுதலை என்னும் பொருள்களைப் பயக்கும். அகரம் உயர்திணை அஃறிணை பொருட் பெயர்களோடு சேர்ந்தவழி அன்மைப் பொருளுணர்த்தும். அது ஒரு பொருளை மறுத்து வேறு பொருளை நாட்டுவதாம். அப்பிராமணன் எனின் பிராமண னல்லாதவன் எனப் பொருளுணர்த்தலை யறிக. அசைவன், அநேகர், அஞ்ஞானி முதலியசொற்களினு இவ்வுண்மை தேர்க. அகரம் அஃறிணைப் பண்புச் சொல்லுடன் சேர்ந்தவழி இன்மைப்பொருளை யுணர்த்தும். அது ஒரு பொருளினிருப்பை மறுத்து அதனபாவத்தை நாட்டுவதாம். அப்பிரகாசம் எனின் பிரகாசம் இன்மை எனும் பொருளை யுணர்த்துதலறிக. அமலம், அகளங்கம், அயோக்கியம், அசலம் முதலிய சொற்களினும் இவ்வுண்மைதேர்க. அகரம் குணகுணிப் பெயர்களின் ஒன்றுடனொன்று மறுதலைப்பட்டு நிற்பனவற்றுள் ஒன்றைச்

*இதுபாணினியம் 6-வது அத்தியாயம், 3-வது பாதம், 73 வது ஸ்லோகமாகிய ‘நலோபோநஞ:’ என்னுஞ் சூத்திரவிதியால் அறிக.

சுட்டுமிடத்து மறுதலைப் பொருளை யுணர்த்தும், அசத்தியம் எனின் சத்தியத்துடன் மறுதலைப்பட்ட அசத்தியத்தினை யுணர்த்துதலறிக. அஞ்ஞானம், அசாதாரணம், அசேதனம் முதலிய சொற்களினும் இவ்வுண்மைதேர்க. இனி அன்மை, இன்மை, மறுதலை என்னும் பொருள்களுள் அத்துவிதம் என்னுஞ் சொல்லி னின்ற அகரம் எப்பொருளை யுணர்த்து மெனின்? அன்மைப் பொருளையே யுணர்த்தும். என்னை? துவிதம் என்பது இரண்டு என்னும் எண்ணுப் பொருட் பெயராகலினென்க. "எண்ணுப் பெயர்மேல் வந்த நகரம் அன்மைப்பொருள் மாத்திரையே யுணர்த்திப் பொதுமையி னிற்பதன்றி ஏனைய சொற்களின்மேல் வந்த நகரம்போல இன்மை மறுதலைப் பொருள்களை யுணர்த்துதல் வழக்கின்கண் இன்மையின்" என்று ஆசிரியர் சிவஞான முனிவரும் சிவஞானபோத வுரையில் ஆராய்ந்து நிறுவினர். ஆகவே அத்துவிதம் என்னுஞ் சொல் இரண்டன்மை என்னும் பொருளே சிறப்புடைத்தாகி இயற்பொருத்தமும், பொருட் பொருத்தமுமுடைத்தாமென்க. அன்மைப் பொருளைப் பயப்பிக்கும் அத்துவிதத்தினையே சித்தாந்த வைதிக சைவர் சுத்தாத்துவித மென்பர். "இவ்வத்துவிதம் ஏனையோர் கூறும் அத்துவிதம்போலக் கேவல மென்றுதல், விசிட்ட மென்றுதல், மறுதலை யென்றுதல் யாதானு மொன்றான் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலின் †சுத்தாத்துவிதம் என வழங்கப்படும். ஈண்டு சுத்த மென்பது யாதானு மொன்றான் விசேடிக்கப்படாது நிற்றலை, அது "சுத்தசத்தை" எனத்தார்க்கிகர் கூறும் வாய்ப்பாட்டானுமறிக. இதுகாறும் கூறியவாற்றால் அத்துவிதம் என்னும் சொற்குப் பொருள்தா னென்னையோவெனின் காட்டுதும். 'அது நீ ஆகின்றாய்' எனவும், 'அது நான் ஆகின்றேன்' எனவும் 'அது இது ஆகின்றது' எனவும் மூவிடம்பற்றி நிகழும் 'தத்துவமசி' முதலிய மகாவாக்கியங்களைக் கேட்டவழி, அது

†சுத்தாத்துவித பிரயோகம் மண்டலப்ராமஹ்மணோபநிஷத் முதலியவற்றிற் காணப்படுகிறது. கேவலாத்துவிதம், விசிஷ்டாத்துவிதம் எனும் பிரயோகங்கள் உபநிடதங்களொன்றிலுங் காணப்படவில்லை.



என்பது ஒருபொருள் நீ என்பது ஒருபொருளாகலின், ஒருபொருள்மற்றொரு பொருளாமாறியாங்ஙனம் என்னும் ஐயம்நீக்குதற்கெழுந்த தாகலின், அது இது ஆதற்கேதுவாய் அவ்விரண்டிற்கு முளதாய சம்பந்த விசேட முணர்த்துதலே அத்துவிதம் என்னும் சொற்குப் பொருளென்றுணர்ந்து கொள்க" அத்துவிதத்திற்குச் சிறந்தெடுத்துக் காட்டப்படும் உவமையாவது ஆன்மபோதமும் கண்ணொளியும் தம்முள் அத்துவிதமா நிற்றலாமென்க. காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம்போற் காணவுள்ளத்தைக் கண்டு காட்டலின் எனவும், 'காட்டக் கண்டிடும் தன்மை யுடையக் கண்ணுக்கேயுமுயிர் காட்டிக் கண்டிடுமா போல வீசனுயிர்க்குக்காட்டிக் கண்டிடுவன்' எனவும், 'அறிவொளிபோற் பிறிவருமத்துவித மாகும்' எனவும் முறையே வரு மெய்கண்ட சாத்திரத்தின் முதனூல் வழிநூல் சார்புநூல்களாற் காண்க. "அன்றியும், அத்துவிதத்தை மற்றுஞ் சில உவமானங்களால் விளக்கு மிடத்து, அலியென்னு மொருமொழி ஆணுமன்று பெண்ணுமன் றெனவும், வாயி லென்னு மொருமொழி உள்ளு மன்று வெளியு மன்றெனவும், நடு வென்னு மொருமொழி அடியுமன்று முடியு மன்றெனவும், மாலையென்னு மொருமொழி இரவு மன்று பகலு மன்றெனவும் நிற்றல்போல; அத்துவித மென்னு மொரு மொழி ஏகமு மன்று, துவிதமு மன்றெனத் தீர்மானித்து நிற்பதாகும். அது பதியும் பசுவும் பிரிவற்றுள்ள அநாதி கலப்பினையே யுணர்த்தும், பாம்பினது கட்டொளியிற் கண்ணுஞ் செவியும், யானையினது துதிக்கையில் நாசியுங் கையும், மானுட உருவில் உடம்பு முயிரும், பேய் பிடித்தானுருவிற் பேயும் பிடிபட்ட வுயிரும், வெளவாலுருவிற் பறவை வடிவும் விலங்கு வடிவுமுள்ளமையை யொக்கும். தென்முகத் தெய்வம் திருக்கரம் காட்டுவது மிதுவே." ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்று மிரண்டு மின்றாகாமல் என்னும் அற்புதத்திருமொழியுமிதனை வலியுறுத்தும். சுபம்.

மணவழகு.

# உண்மை விளக்கம்.*

"உண்மையறிவானந்த வுருவாகி யெல்லுயிர்க்கும் உயிராய் நீரின்
றண்மையனல் வெம்மையெனத் தனையகலாதிருந்து சராசரங்களீன்ற
பெண்மை யுருவாகிய தன்னானந்தக்கொடி மகிழ்ச்சி பெருகயார்க்கு
மண்மையதாய் அம்பலத்து ளாடியருள் பேரொளியை அகத்துள்
வைப்பாம்."

இதன் பொருள்: "அணோ ரணீயாந் மகதோ மகீயாந்" என்றபடி அண்டங்களெல்லாம் அணுத்தன்மை யடையும்படி பெரிதானவனும், அணுக்களெல்லாம் அண்டங்களின் தன்மையை யடையும்படி சிறிதானவனும், அவ்வண்டங்களின் உள்ளும் புறம்பும் சாக்ஷியாக நின்றவனும் இவ்வண்டங்களை யெல்லாம் பெற்ற உமை கணவனென்றும் (உமா சகாயம், பரமேஸ்வரம், பிரபும், திரிலோசனம், நீலகண்டம், பிரசாந்தம், சமஸ்த சாட்சிம்) என்பதாதி வேத உபநிடத பிரமாணங்களினாலும், அவன் சச்சிதானந்த சொரூப னென்றும் வேதாதி கலைகளையுணர்ந்த ஆப்தர்கள் கூறுவார்கள். அப்படி உண்மை யறிவானந்த உருவே திருமேனியாகக் கொண்டு எல்லா வுயிர்களுக்கும் உயிராகி நீரினிடத்திற் குளிர்ச்சி, தீயினிடத்து வெப்பம், போலவும் தம்மை விட்டு நீங்காமலிருந்து சரா சரமாகிய உயிர்களை யெல்லாம் பெற்ற பெண்வடிவமாகிய தம்முடைய ஆனந்தக்கொடி யென்னும் சிவகாமி யம்மைக்கு மகிழ்ச்சி பெருகத்தக்கதாக யாவருக்கும் எளிதாய்ப் பொன்னம்பலத்தில் திருநடஞ் செய்தருளிய சோதி சொரூபமாயுள்ள ஸ்ரீ சித்சபேசனை எமது சித்தத்தில் வைத்து சிந்திப்பாம் என்பது.

ஒரு பிரபுவினிடத்தில் வைரம், பச்சை, சிவப்பு, நீலம், வைடூரியம், முதலிய இரத்தினங்களிருந்தாலும் வைரத்தின் உண்மையை பெரிதும் சொல்வது மரபு ஆதலால், உண்மை விளக்கம் என்பதனைப்பற்றி இங்ஙனம் விசாரிக்க புகுகின்றமையால் இந்த உபந்நியாசம் உண்மை விளக்கம் என்று பெயர் பெறும்.

உண்மை விளக்கம் என்றால் சமயஞானம், தத்துவஞானம், பூதபௌதிகஞானம், முதலிய சாஸ்திரஞானம் என்பதை யறிந்து கொள்ளுதலாம். இப்படி அறிந்து கொள்ளத் தலைப்படும் ஒருவர் முன்னரே தெரிந்துகொ

*இராமநாத புரத்தில் 1910-ம் ஆண்டில் நிறைவேறிய 5-வது சைவ சித்தாந்த மகா சமாஜக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.



ள்ள வேண்டியது சமைய ஞானம் என்றேற்பட்டது. சமைய ஞானத்திற்கு முன்னரே கல்வி ஞானம் கற்றுக்கொள்ள வேண்டிய தவசியம். கல்வி என்பதைப்பற்றிச் சிறிது பேசுவாம். கல்வி யென்பது இருதிறப்படும். ஒன்று பசுப்பிணியை நீக்க உபகாரமாகும், மற்றொன்று ஆன்மாவைப் பற்றிய பிணியை நீக்க உபகாரமாகும். பசுப்பிணியை நீக்கும் கல்வி பொது வென்றும், ஆன்மாவைப் பற்றிய பிணியை நீக்குங் கல்வி சிறப்பு என்றும் அதுவே சித்தாந்தக் கல்வியா மென்றும் ஆப்தர்கள் கூறுவார்கள். இன்னும் தான தருமங்களிலெல்லாம் சிறந்தது அன்னதானம். அது எதினாலென்றால், சிலர்களுடைய சரீரதாபத்தையும் சோபத்தையும் நிவர்த்தித்துச் சுகத்தையும் திடத்தையும் கொடுக்கும் சிறப்பினை யுடையது. அன்னதானமானது ஒரு நேரம் புசித்தது மறு நேரத்திற் குபயோகமாகாது. அல்லாமலும், ஸ்தூல சரீரத்திற்கு உபயோகமாகும். அந்தக் கரணத்தைப் பற்றிய அவிவேக தாபசோபத்தை நிவர்த்தித்து சுகத்தையும் திடத்தையும் கொடுப்பது சித்தாந்தக் கல்வியேயாம். 'ஒருமைக்கட்டான் கற்ற கல்வி ஒருவற்கெழுமையும் ஏமாப்புடைத்து' என்று நாயனாரும் வெளிப்படுத்தினர். கல்வி பெரும்பயனை யளிக்கும் என்றால்:—படித்தால் அளிக்குமோ அளிக்காது. ஏனென்றால்; அன்ன பானியங்களைப் புசித்தால் சரீரத்தில் திடம் வரவேண்டுமே, அப்படி வரவில்லை யென்றால் அன்னசாரத்தைப் பிரித்துச் சத்த தாதுக்களில் ஏற்றுங் கருவியினால் ஏற்றினாலல்லது சரீரதிடம் வராது அப்படிப்போலச் சித்தாந்த கல்வியின் சாரமாகிய உண்மையை நமக்கு அறிவிக்கும் சதாசாரியர் வழியே விசாரித்தறிந்தாலல்லது அதன் பயனை யடையக் கூடாது. மிக்க படித்தவர்களால் அந்தப்பயனை யடையக் கூடாதோ வென்றால், அதுவும் கூடாது. திருவிளையாடல் 'எண்ணிலாரிடத்தனந் தனந்தறி பொருளெல்லாம் உண்ணு நீர் விடாய்க்கு உவரி நீருண்டவரொப்ப') என்றபடி சதா சாரியரிடத்தே சித்தாந்தக் கல்வியை விசாரித்தறிய வேண்டியது. கல்வி கற்பிக்கும், இக்காலத்துக் கலாசாலைகளில் பெரும்பாலும் உண்மையாகிய சத்சமைய வுணர்ச்சியையும் சத்சமய ஒழுக்கத்தையும் அறிவுறுத்துங் கல்விப் பயிற்சி ஓர் சிறிதுமில்லை. அதைப்பற்றிச் சிரத்தை யெடுப்பாரும் மிகவும் அருமையிலும் அருமையாயிருக்கிறது. தாங்கள் அருமையாகப் பெற்றெடுத்த சற்புத்திரர்கள், தங்கள் தாய், தந்தை, குரு முதலியோரிடத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைமை, தயை, பொறுமை, ஆன்மலாபம் முதலிய சன்மார்க்கங்களை அறியாதவர்களாய்த் தங்கள் தங்கள் மனம்போனபடி தங்கள் தாய் தந்தையர்க்கும் தங்கட்கும் பெருந் துன்பத்தை யுண்டாக்கிக் கொள்ளுகிறார்கள். இது அவர்கள் குற்றமோ, பெற்றோர்கள் குற்றமோ அறிகிலேம். இஃது இப்போது ஆங்கிலம் கற்றுக்கொள்ளும் எல்லாச்சாதி

பிள்ளைகளிடத்தும் காணலாம். முக்கியமாய் மகா சைவப் பிராமணப் பிள்ளைகளிடத்தில் காணலாம்.

சைவ பரமாசாரிய சுவாமிகளும் 'கல்லார் நெஞ்சில் நில்லா னீசன்' 'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை' 'கற்றல் கேட்ட லுடையார் பெரியார்' 'கற்றவர் தொழுதேத்துஞ்சீர் கரையூரிற் றாண்டிக்கொடுமுடி நற்றவா' என்று அருளிச் செய்திருக்கிற உண்மையை உணர வேண்டியது. ஏனையோரும்,

"இம்மைப் பயன்றரலால் ஈயந் குறைவிலதால்
தம்மை யுணர்த்துதலாற் றாழுணராக் கேடின்றா
லெம்மை புவனத்து யாம் காணேன் கல்விடோன்
மம்மர் நோய் தீர்க்கு மருந்து"—என்றுங் கூறினார்கள்.

கல்வியின் சிறப்பை எவரால் சொல்ல முடியும். அன்பர்களே! மேற்போந்த அமுதவுரைகளைக் கடைப்பிடித்துச் சித்தாந்தக் கல்வி கற்பிக்கும் புண்ணியமே புண்ணியம். 'கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்' (Learning of no value to the indevout). நம்முடைய சைவ சமயிகள் சைவா சாரங்களைப் போதிக்கும் சைவ நூல்களைக் கல்லாமையினும், எங்கேயாயினும் சிலர் கற்றாலும் அவர்கள் பிறருக்குக் கற்பித்தலும், யாவரும் எளிதிலறிந்துய்யும்படி சமய உண்மைகளைப்போதித்தலில்லாமையினும் உண்மை விளங்கவில்லை. இது Seetarian views என்று கொள்வாரும் உளர். இது தவறு. நம்முடைய தமிழ் நாடெங்கும் தமிழ் பாடசாலைகளைத் தாபித்துப் பிள்ளைகளுக்குச் சமய நூல்களையும் அவைகளுக்கு வேண்டிய கருவி நூல்களையும் "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுங் முடியும்" எனவும் "வறியார் இருமையறியார்" எனவும் ஸ்ரீ மணிவாசகப் பிரானால் அருளிய திருக்கோவையின்படி இம்மை மறுமைப் பயன்களுக்குத் துணைக்காரணமாயுள்ள பொருளை ஈட்டுதற்கு வேண்டும் லௌகீக நூல்களைக் கற்பித்தலோடு உண்மையறிவானந்த வுருவாகிய ஸ்ரீ சித்சபேசனை யடையும்படியான சித்தாந்தக் கல்வியையும் கற்பிக்கும்படி திருவருள் கூட்டுமாறு சிந்திக்கின்றேன். நிற்க, "சிவயோகோத்தியேயகா" ஸ்ரீ சித்சபேசன் ஒருவனே தியானிக் கற்பாலன். தைத்திரியோப நிடதம் "புருஷோவைருத்ரகா புருஷராவார் சித்சபேசனே" என்றும், சுவேதாஸ்வரம் "பராத்பரம் புருஷம்" பசுபதியாகிய துரிய சிவமே யென்றும், "பதிம் பதினும் பரமம் பரஸ்தாத்" பதிகளுக்கெல்லாம் பதியாயும் பரம் எனப்படும் நாராயணருக்குப் பதியாயும் மேலானவராயுமுள்ளார் ஸ்ரீ சபேசனே யென்றும், "விஷ்ணோ பரமம் பதம்" விஷ்ணுவின் மேலாம் சிவபதம் எனவும் வேதாதிகலைகளின் ஹிருதய உண்மைகளை உண்மையால் விசாரித்தறிந்தோர்க்கு விளக்கமாகும். மேற்போந்த உண்



மைகளைக் கடைப் பிடித்தொழுகும் அன்பர்களே சிவானுக்ரகத்துக்குப் பாத்திரராவர். கலியிலே கண்கண்ட பரமதெய்வமாகிய சிவசுப்ரமணியக் கடவுள் ஸ்ரீ அகஸ்திய பகவானுக்கு உபதேசித் தருளிய சிவகுரு யோத்திரம் 10-வது சிவஞானயோக இயலில் "நிறுத்திட வலானமலநூனெறியை என்றும், மறுத்திடவலானமல மார்க்க மயலுற்றே, நிறுத்திலென் மறுத்திலனெனிற் கரிசனேச, மறுத்தவனே மாய்க்கை கரிசல்ல அறமாமே" இதன் பொருள், எக்காலத்தும் குற்றம் பொருந்திய ஏனையச் சமய வுண்மைகளை நிராகரித்தற்கு வல்லவனும் அனாதிமல முத்தராகிய ஸ்ரீ சபேசன் அனாதிமல பெத்தராகிய ஆன்மாக்களாகிய நாங்கள் உய்யும் பொருட்டு (நந்தங் கருமேனி கழிக்க விறைவ னுருமேனிதரித்து) அருளிச் செய்த வேத சிவாகமங்களில் உணர்த்தப்படும் உண்மையை ஸதாபிக்க வல்லவனுமாய் இருப்பவன் புறச்சமயத்தைக் கன்யான சாரமாகக் கைப்பற்றினவர்கள் உண்மையை யுணராது வேத ஆகம முதலியவைகளையும் அன்பர்களையும் குறைகூறித் தங்கள் உண்மையை நாட்ட வந்த விடத்து அவர்களுக்கு அஞ்சுதலினாலேனும் நன்றியினாலேனும் அவர்களால் பொருள் பெற விரும்புதலினாலேனும் உண்மையை நிரூபியாதவனா யிருப்பானாகில் அவனே அதிபாதகன். அவனுடைய நேசத்தை யொழித்துச் செல்வது குற்றமன்று. அதுவே பரமாகிய தருமம் என்று கூறப்பட்டிருக்கின்றது. மேற்போந்த செய்யுளாலே ஏனைச் சமயங்களிலே சொல்லப்பட்டிருக்கும் கடவுள் இலக்கண வுண்மைகளுக்கும், உண்மையறிவானந்த சொரூப இலக்கண உண்மைகளையும் தெளிவுற விளக்கி உலகுக்கு உபகரித்தல் 'இகழ்தவள நீறு மரன் கண்மணியும் அஞ்செழுத்தும் தேவர் போற்றுமிக சிவலிங்கோபாசனையு முடைய அன்பர்களுக்கு இன்றியமையாக்கடனாகும். ஏனைச் சமயிகள் உண்மைகளால் நம்மவர்கள் (சைவர்கள்) மயக்கமுற்று வருந்தாமல் (There is no religion higher than truth) என்று ஏனைய அன்பர்களும் கூறுகின்றார்கள். எச்சமயத்திலும் உண்மை கூறப்படும். உண்மை கூறாத சமயமேயில்லை. ஒன்றுக்கொன்று மாறுபடுதலையுடைய சமயங்களெல்லாம் ஒன்றினொன்றினால் கெடுதலுமில்லை. ஆயினும், அவற்றுள் யாது உண்மை நெறியென்று அறிந்து கொள்ளுவதே அன்பர்களின் கடமை. உண்மையறிவானந்த வுருவாகிய ஸ்ரீ சபேசனுடைய குஞ்சித பாதத்தை இடையீடின்றிப் பற்றி மனம், மொழி, மெய்களினாலே பாதாதி கேசம் வரையும் நெஞ்செல்லாம் அங்கியிலிட்ட வெண்ணெய்போல நெக்கு நெக்கு உருகவுருகத் தேகமுழுதும் கண்களாய் ஊற்றுக் கண்களில் புறப்படும் ஜலசமுகம்போல ஆனந்த பாஷ்பம் பொழிய வழிபடுவோமாயின் அனந்தகோடி நாக்களுளவாயினும் பேரானந்தம் சொல்லி யமையுமோ அமையாது. ஸ்ரீ திருமூல சுவாமிகளும் "சிவனொடொக்குந் தெய்வம்

தேடினுமில்லை, அவனோடொப்பாரிங்கு யாவருமில்லை, புவனங்கடந்தன்று பொன்னொளிமின்னும், தவனச்சடைமுடி தாமரையானே" Even on search, there is no deity equal to Śiva. There is none here equal to him, whose bright tufts oi hair stream with golden light beyond all worlds. அவனையொழிய அமரருமில்லை, அவனன்றிச் செய்யும் அருந்தவமில்லை, அவனன்றி மூவராலாவதொன்றில்லை, அவனன்றி யூர்புகுமாறறியேனே" "Without him, there can be no Devas; Without him, no tapas can be performed; Without him, nothing is possible to even the trinity; I do not know the pass to enter within or retreat imwards withont him." என்றும் அருளிச் செய்திருக்கிறார்கள். இன்னும் இங்ஙனங் கூறிப்போந்த ஸ்ரீசித்சபேசனுக்கு (1) சர்வஞ்ஞதை = முற்றறிவு (2) திருப்தி = வரம்பிலின்ப முடைமை (3) அநாதிபோதம் = இயல்பாகவே பாசங்களினீங்கி நிற்றல் (4) அலுப்தசத்தி = பேரருளுடைமை (5) அனந்தசத்தி = முடிவிலாற்றலுடைமை (6) ஸ்வதந்த்ரத்வம் = தன்வய முடைமை, எனும் ஆறு குணங்களும் உளது என பிரம மீமாஞ்சை, உத்தர மீமாஞ்சை எனப்படும் வேதாந்த சூத்திர பாஷ்யத்திலே உண்மை பாஷ்ய கர்த்தாவாகிய ஸ்ரீநீலகண்ட சிவம் அருளிச்செய்தது. அன்றியும், எமதானந்த நடனப் பிரகாசனுக்கு (1) விஸ்வாதிகத்வம் (2) விஸ்வாகாரணத்வம் (3) விஸ்வாந்திரியாமித்வம் (4) விஸ்வரூபித்வம் (5) விஸ்வசபியத்வம், என்னும் ஐங்குணங்களும் உளவாமென வேதோபநிடதங்களும் விளங்கா நிற்கும். விஸ்வசேவியர் உலகத்தாராலே வழிபடப்படுவரென்பதை யொழித்து எஞ்சிய நான்கும் பின்வரும் செய்யுள் விளக்கும். "பாதிவிருத்தத்தால் இப்பார் விருத்தமாக வுண்மை சாதித்தார் பொன்னடியைத் தான்டணிவதெந்நாளோ" என்று,

ஸ்ரீதாயுமான சுவாமிகளும் புகழ்ந்த சிவஞான சித்தியாரில்,

"உலகினை யிறந்து னின்றதரனுரு என்பதோரார்
உலகவனுருவிற்றோன்றி யொடுங்கிடுமென்று மோரார்
உலகினுக்குயிருமாகி உலகுமாய் நின்றதோரார்
உலகினில் ஒருவனென்பர் உருவினையுணரா ரெல்லாம்"
"தேவரிலொருவரென்பர் திருவுருச் சிவனைத்தேவர்
மூவராய் நின்றதோரார் முதலுருப்பாதி மாத
ராவதுமுணராரதி அரியயர்க் கரிய வொண்ணு
மேவரு நிலையுமோரார் அதனுருவினையுமோரார்"

இன்னும் "கோளில் பொறியில் குணமிலவே யெண்குணத்தான் றாளை வணங்காத்தலை" என்று நாயனாரும், "இரும்புயர்த்த மூவிலைய சூலத்தி



னானை யிறையவனை மறையவனை யெண்குணத்தினானை" யென்ற ஸ்ரீவாகீசர் திருவாக்கும் இறைவன் எண்குணத்தான் என்னும் உண்மையையும் விளக்கும். ஸ்ரீமத் அப்பயதீக்ஷித சிவம் தாமியற்றிய சிவதத்துவ விவேகம் யென்னும் சிறந்த சற்சாஸ்திரத்திலே, ஸ்ரீசபாபதியே! உம்முடைய வரம்பு கடந்த பெருமைகளை அறிய வல்லுனர் யாவர், உம்முடைய ஞானானந்த வடிவமாகிய திருவடித்தாமரைக்கு அன்பு செலுத்த வல்லுனரும், ஆயிரங் கமலமலர் கொண்டு நியமமாக நாடோறும் உமது திருவடிக்கண்ணே பூசித்துவந்த விடத்து மலரொன்று தினமொன்றிற் குறைய தமது கண்மலரைப் பறித்து குறைதீரச் சேர்த்துக் கைக்கொண்ட ஆயிரமலரால் வழிபட்டு உமது திருவருளைப் பெறவல்லுனர் துளபமாலை தரித்தருளிய ஸ்ரீவிஷ்ணு பகவானென்னத் துதித்தது. அன்பர்களே! இங்குச் சற்றுக்கவனமாய்க் கேட்பீர்களாக. சிலர், சிவம் என்னும் பெயரைக் கேட்டன்மாத்திரையே அதனைத் தனியே ஓரிடத்துக் கண்டதுபோலவும் அஃது ஒருசமயத்திற்கேவுரிய கடவுளே யல்லது மற்றச் சமயங்கட்கு உடன்பாடாகாதென்றும் உடனே நினைத்து விடுகின்றார்கள். இது முற்றிலும் பொருந்தாத விஷயம். முழுமுதற் பரம் பொருளுக்கு பலதரப்பட்ட பாஷை வேற்றுமையில் கடவுள் சிவம், பிரமம் என்றற்றொடக்கத்துப் பலசொற்கள் காணப் பட்டனவேயன்றி அச்சொற்களால் பெறப்படும் பொருள் ஓர்போதும் வேறுபடமாட்டாது. எனவே, சிவம் என்னும் சொல் வழக்கு எல்லாச் சமயத்திற்கும் பொதுப் பெயரான் பிரமமெனவும் சிறப்புப் பெயரான் சிவமென்பதும் தெற்றென விளங்கும். எல்லாச் சமயத்திற்கும் பொதுவென்பதை ஓர் உதாரண முகத்தால் உண்மை விளக்குவாம். ஸ்ரீசபேசன் அட்டமங்கள சொரூபி யென்று பஞ்ச பிரம்மோபநிடதம். பாசுபத பிரம்மோபநிடதம் முதலிய பிரபல சுருதிகளில் விதந்தோதப் பட்டிருக்கின்றன. (1) பிருதிவ்யோபவ: (2) ஆபச்சர்வ: (3) ஆக்னேருத்திர: (4) வாயுர் பீம: (5) ஆகாஸஸ்ய மகாதேவ: (6) சூர்ஸ்யோக்ர: (7) சந்த்ரஸ்யசோம: (8) ஆத்மாநப்பசுபதி.

தேவாரம்:—இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் யெறியுங் காற்றுமாகி, "அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமாய் அட்டமூர்த்தியாகி" என்பதனாலும் அஷ்டமங்கள் சொரூப வுண்மை விளங்கும். திருவுந்தியார், 'எட்டுக் கொண்டார்தமைத் தொட்டுக்கொண்டே நின்றார், விட்டார் உலக மென்றுந் தீபற, வீடே வீடாகு மென்றுந் தீபற. ஆகவே, எந்தத் தெய்வ உபாசனையும் இவ்வஷ்டமூர்த்த உருவினுள் ஒன்றியடங்குமாதலின் அவை யெம்மதத்துப் பொல்லப்படினும் உண்மைச் சமயத்திற்குச் சம்மதமேயாம். "வேதம் பல பக்குவமோர்ந்தோரு வீட்டினுக் கோ

தும் பல்லாற்ருனும் தீபற, உண்மை கண்டார்க்கு ஏகமென்றுந் தீபற" ஆன்மாக்களுடைய பல பக்குவமோர்ந்து வேதம் பொதுச் சொல்லால் பிரமமென்றும் சிறப்புச் சொல்லால் சிவமென்றும் உண்மை விளக்கியதே யன்றி வேறல்ல. அன்றியும், வேதத்தில் ஸ்ரீமந் நாராயணரைப் பிரஸ்தாபித்துப் பிரமமென்றுங் கூறி யிருக்கிறது. அப்படிக் கூறியதோடு 'நாராயண பரோத்யாதா' என்றுங் கூறி யிருக்கிறது. 'சிவயேகோத்யேயகா' என்று த்யேயவஸ்துவாக சிவத்தையும் த்யாதாவாக நாராயண பரப்பிரமத்தையுங் கூறி யிருக்கிறது. இவ்விரண்டினுடைய உண்மை உணரும் புண்ணிய முடையார்க்கே விளங்குமல்லது ஏனையோர்க்கு விளங்குவது அருமையினும் அருமை.

சிவதத்துவ விவேகம்:—

"அளவி லுன்பெருமை யறியவும் உன்ருட்
கழி விலாவன்பு வைத்திடவும்
தளமலரெடுத் துன் னருச்சனை யாற்றிச்
சால நின் றிருவருள் பெறவும்
வளமலிபுலியூரம் பலத்தமுதே
மலர்தலை யுலகினுள் சுரும்ப
ருளர் தொழாய் படலை மார்புடை யண்ண
லொருவனே வல்லனு மென்றே"

என்னும் உண்மை விளக்கியது. அகங்காரமுற்று நாமே பிரமம் என்னும் பசுத்துவமுடையார்க்கு ஒருபோதும் ஸ்ரீசபேசன் அணித்தாகார். ஆனால் இப்படி அகங்காரங் கொண்டார்க்குப் பரிகாரமாய் முடிவது சிவபூசையே. பிரமாதி தேவர்கள் செய்த சிவபூசையே சான்று கூறும். ஆனால், உண்மையை ஆராயுமிடத்து அகங்காரமற்ற சிலந்தி, கழுகு, யானை, கரிக்குருவி, நாரை, பாம்பு, முதலான அஃறிணைகளுக்கும் அன்பினோடு பூசித்தவிடத்து ஸ்ரீசபேசன் அணித்தானார். அகப்பற்று புறப் பற்றுகளாகிய அகங்காரம் மமகாரங்களற்றவர்க்கு 'இரண்டற்ற அத்துவிதமாய் விளங்குவர் எமது சபேசமணி. இவ்வுண்மையை 'அற்றவர்க்கற்ற சிவனுறைகின்ற ஆலவாயாவது மிதுவே' என்று ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானும் 'அற்றவர்க் கற்றவன் அல்லவர்க்கல்லவன்' என, அருணந்தி சிவமும் அருளியதுணர்க. அன்றியும், எஜுர் வேதத்திற் போந்த ஸ்ரீ ருத்ரமும், நரசிம்மதாபனியோப நிடதமும் பசுபதி யென்று சபேசனையே துதிக்கும். 'இதற்கும் சாக்ஷி எஜுர் வேதம் 31 ம் அத்தியாயம் 7-ம் மந்திரம். இவ்வுண்மையையும் பிரம்ம வித்துக்களாயும் உண்மையை அன்பர்களுக்கு உணர்த்தவேண்டு மென்னுங் கருணையோடு



ங்கூடியவரிடமே விசாரிக்க வேண்டியது. இன்னுமோருண்மை சற்று கவனிப்பீர்களாக. கஞ்சனூரிலே மதுசூதனனென்று புறச்சமயப் புதல்வராய் அவதரித்து ஸ்ரீ ஹரதத்தர் என்று பட்டம் பெற்றவர் வெகு சனசமுகத்திலே அக்கினியி லொழுகக் காய்ச்சப்பட்ட இரும்புப் படிகளில் சிவாஞ்ஞையால் ஏறி நின்று முழக்கிய சுலோகத்திற்கு திருவாவடு துறை யாதீனம் ஸ்ரீமத் சிவஞான சுவாமிகள் செய்தருளிய மொழி பெயர்ப்பு வருமாறு:—

"உயர்காயத் திரிக்குரிப் பொருளாகலின்
தசரதன் மதலைத் தாபித்தேத்தலின்
கண்ணன் கயிலையில் நண்ணி நின்றிரப்பப்
புகழ்ச்சியின மைந்தமகப்பேறுதவலின்
தனது விழியுடனொராயிரங் கமலப்
புது மலர் கொண்டரி பூசனையாற்றலின்
ஐங்கணைக் கிழவனை யழல் விருந்தாக்கலின்
அமைப்பரும் கடுவிடவமுது செய்திடுதலின்
தென்திசைக் கிழவனை செகுத்துயிற் பருகலின்
அவுணர் முப்புரம் அழியவில் வாங்கலின்
தக்கன்வேள்வி தகர்த்தருள் செய்தலின்
தனஞ்செயன் றனக்குத் தன் படைவழங்கலின்
மானுட மடங்கலை வலிதபக்கோறலின்
மாயோன் மகவுவாகிய காலைத்
தடமுலைதிளைத்து சாத்தனைத் தருதலின்
ஆழ்கடல் வரைப்பினுன்றோரனேகர்
அன்பு மீதுற அருச்சனை யாற்றலின்
நான்கிரு செல்வமும் ஆங்கவர்க்கருடலின்
ஐயிருபிறப்பினும் அரி அர்ச்சித்தேத்தலின்
இருவரும் அன்னமும் ஏனமுமாகி
அடிமுடிதேட அழற்பிழம்பாகலின்
பிறப்பிறப்பாதி உயிர்குண மின்மையின்
கங்கைசூழ் கடந்த காசி மால் வரைப்பில்
பொய் புகல்வியாதன்கை தம்பிப்பித்தலின்
முப்புர மிறுப்புழி முகுந்தப்புத்தேள்
மால்விடையாகி ஞாலமொடு தாங்கலின்
அயன் சிரமாலை யளவிலவணிதலின்.
ஞானமும் வீடும் பேணினற்குதவலின்

பசுபதி பெரிய தனிமுதற் கடவுள்
உம்பர்களெவர்க்கும் உயர்ந்தோ ரென்பது
தெளிக வியல்புணர்ந்தோரே" என்றதாற் காண்க. ஸ்ரீசித்சபேசனுக்குச் சமத்துவ முடையார் அல்லது உயர்ந்தவ ரொருவருமில்லை.

கந்தபுராணம், உபதேசப்படலம், பிரமனுல் தட்சனுக்கு உபதேசம்:-

"நம்மையும் பரமென்றுன்னி நாதனிற் சிறப்புச் செய்யும்
வெம்மைசேர் நெஞ்சர் தீராவிழும் வெந்நிறையம் வீழ்வர்
தம்மையஃதெடுத்தல் செய்யச் சமமென புகல்கிற்போர்கள்
எம்மையும் துயரமென்னும் இருங்கடற் படுப்பரன்றே."

ஆகவே, அன்பர்காள்! உலோகாயதம், சமணம், நால்வகை பவுத்தம், ஆருகதம், தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம், சைவம், பாசுபதம், காளாமுகம், பைரவம், வாமம், மகா விரதம் சிவாத்துவிதம், பாஷாணவாதம், அவிகாரவாதம், வேதவாதம் என்னும் 24ம் அடங்கிய புறப்புறச் சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச் சமயம் என்னும் பகுப்புக்களைக் கடந்து அதீதத்திலே விளங்கும் உண்மைச் சைவம் அல்லது வைதிக சைவ மெனப்பெறும் சுத்த சமயமாம்.

"சைவத்தின் மேற்சமயம் வேறிலை
அதிற்சார் சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனும்
நான் மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத்
தேவாரமும் திருவாசகமும்
உய்வைத்தரச் செய்த நால்வர்
பொற்றாளெம் முயிர்த்துணையே"

என்று உண்மையை விளக்கினார்கள். உண்மைச் சமய நெறியை ஆராயும் புண்ணியமில்லா வினையச் சமயிகளின் கூச்சலுக்குச் செவியடுக்காது உண்மையில் கல்வி, விவேகம், நன்னெறி, சீவகருணை, ஈஸ்வரபக்தி, வாய்ந்த வைதிகசைவ பெரியாரிடமே நன்கு ஆராயுங்கள். ஆய்ந்தோர் பாற் சென்றடையுங்கள் நம் தமிழ் நாட்டில் தமிழின் அருமை பெருமை தெரியாதவர்கள் உண்மையைத் தெரிந்து கொள்ளாதவர்களே. அப்படி ஆராயாதவர்கள் விபரீத அர்த்தங்கொண்டு தாங்கள் வழிபடும் கடவுளிடத்திலும் அன்பை யிழந்து வினைத்தேவரிடத்திலும் அன்பை யிழந்து சிவாபராதிகளாவார்கள். ஆகையால் கண்கண்ட பரம தெய்வமாகிய ஸ்ரீசித்சபேசனைச்சிந்தித்து உண்மையையுணர்ந்து சிவப்பிரசாதத்திற்குப் பாத்திரராகும்படி திருவருளைச் சிந்திக்கின்றேன். சூத சங்கிதை:



"எம்பெருமான் முதல்வனெனயா முறைக்க
வேண்டியதின் றென்றுமந்தத்
தம்பிரான் மணிகண்டந்தா னுரைக்கும்
சடைத்தலை மாலைகளுஞ் சொல்லும்
பம்பியருண் விழியா னென்பதன்
கோடோடரி கொள்பதுமப் பூந்தாள்
வெம்பவிற்கை விரலரை மார்போங்கும்
எழிற்றிருமேனி விளம்பு மன்றே."

அன்பர்களே! இதுகாறும் போந்தவிஷயத்தால் ஸ்ரீசித்சபேசன் ஒருவனே உண்மைப்பொருளென்றுணர்ந்து வழிபடுதற்கு வேத உபநிடதப் பிரமாணங்களினாலும் உண்மையாப்தர்களருளிய பிரமாணங்களினாலும் ஒருவாறு உண்மைவிளக்கமென்னும் பிரசங்கம் விளக்கினோம். இனி, மேற்போந்த உண்மைசோதரவே ஸ்ரீமத் நல்லசாமி பிள்ளையவர்கள், B.A., B.L., சுமார் 1897௵ முதல் தங்கள் வேலையோடு சிரமம் பாராது 'உண்மை விளக்கம்' (Light of Truth)* ஆகிய அரிய பெரிய விஷயங்களடங்கிய மாதாந்தப் பத்திரிகை வெளிப்படுத்தி வருவதற்கு நாம் மிகுந்த நன்றிபாராட்ட கடமைப் பட்டிருக்கின்றோம். அப்பத்திரிகை இந்நிலவுலகில் நீடூழி வாழ்ந்து அன்பர்கள் உண்மையறிந்து ஸ்ரீசித்சபேசனையடையும் வண்ணம் பிரார்த்திக்கிறேன்.

**வாழ்த்து.**

சைவ சபைவாழி, சபைத்தலைவர் மிகவாழி
மைவைத்த சித்தாந்தம் விளக்கினோர் மிகவாழி
தெய்வமத மென்மேலாம் செவிமடுத்தார் மிகவாழி
உய்வைத்த சைவநலம் ஊழிதோறும் வாழியவே.

**N. S. வைத்தியலிங்கம் முதலியார்.**

---

*இவ்வாங்கிலப் பத்திரிகையின் முழுப்பெயர் "உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை" (The Light of Truth or the Siddhānta Dipikā and Āgamic Review.) இப்பத்திரிகை மூலமாகத்தான் மேல் நாட்டாற்கும், இவ்விடத்திலுள்ள கற்ற பலர்க்கு நஞ் சைவ சித்தாந்தம் இன்னதென்று தெரிய வந்தது, இப்பத்திரிகை 'நிகரற்ற தென்றும்', 'தமிழர்களுக்கோர் கௌரவமாக விருக்கிற தென்றும்', 'தமிழின் இனிமையும், விசேஷத்தையும் தன்னலத்தைப் பாராமல், உலகெங்கும பரவச் செய்கிற தென்றும்' பல சான்றோர்களால் கொண்டாடப் படுகிறது. இதற்கு வருடச் சந்தா ரூபா நான்கு தான். மாணவர்களுக்கு அரைச்சந்தா ரூபா இரண்டு தான். மாதிரி வேண்டுபவர்கட்கு அனுப்பப்படும்.—பீ.ர்.

# காரைக்காலம்மையார் சரித்திரம்.

## முகவுரை.

அறிவொழுக்கங்களிற் சிறந்து முறுகி வளரும் சிவநேயம் வாய்ந்த செல்வர்களே!

திருத்தொண்டத் தொகையாகிய பெரிய புராணத்தில் குன்றத்தூர் சேக்கிழார்ச் சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்ட செய்யுள் ரூபமாகிய இக்காரைக்கால் அம்மையார் சரித்திரமானது எளிதில் எவர்கட்கும் பயன்படுமாறும், வசன நடையை வளர்விக்கவும் எண்ணிய ஸ்ரீமான், ஜே. எம். நல்லசாமி பிள்ளை B.A., B.L. அவர்களின் நன்மைத் தூண்டுதலினால் ஒருவாறு என்னினத் தலைவராகியபெண்பாலார் கணத்திற்சேர்ந்த அவ்வம்மையாரின் அருட்டுணை கொண்டு, என்னினத்து மாதர்கள் கைக்கொள்ள வேண்டிய நற்கடமைகளை முக்கிய குறிப்புகளாக விளக்கிச் சுருக்கி யெழுத முன்வந்தேன். இதிலுற்ற குறைகளை ஆன்றோர் மன்னித்து அறிவிப்பாரெனின் மனமொழிமெய்களால் அவர்க்கு மறவா நன்றி செலுத்துங் கடமைப்பட்டுள்ளேன்.

இங்ஙனம்,
பண்டிதை-அசலாம்பிகை அம்மாள்.

# காரைக்காலம்மையார் சரித்திரம்.

நீர்வளம் நிலவளம் சிறந்த சோழநாட்டிற் சேர்ந்ததாகியும், குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்திணை நிலங்களினும் முந்திய நெய்த னிலமென்று சொல்லப்படும் கடல் துறைமுக நகரமாகியும், பொலிந்து சிரைக்கோல் கொளச்சிவ மணம் விரித்த காரைக்கால் எனும் செழும்பதி யொன்றுளது.

அப்பதியில் வாய்மைக் கடமையை அதாவது உண்மை பேசுதலையே மரபிற்குரிய குல தருமமாகக் கொண்டவர்களாய், வழிவழி வந்த அழிபெருஞ் செல்வப் பெருக்கினர்களாய், பழமையாகிய குலவொழுக்கங்களிற் கிழமை பெற்றவர்களாய் விளங்கும் வணிக குலத்தினர் பல்குடி தழைத்து நல்வளம் செழித்துப் பண்புமிக்குவாழ்ந்து வந்தனர். இத்தகைய வைசிய குலத்தினர் அனைவருக்கும் அவர்தம் மரபியற்கைப்படி குலத்தலைவராகும் நலத்தினராய், உண்மை, அறிவு, ஒழுக்கம், செல்வம், ஈகை, சிவபக்தி, ஆகிய அனைத்திலும் மேம்பட்டவராய் விளங்கும் தனதத்தர் என்பவர் ஒருவர் இருந்தனர்.

தனதனைநிகர்த்த தனதனம் படைத்த இத்தனதத்தரிடத்து, இவர் பல்பிறவிகளிலும் இயற்றிவந்த நல்லறத்தின் பயன் போலவும், பிறந்தக்கால் பெண்மகவோ வென்று உசாவி நெட்டுயிர்ப் போர்பேதுறல் எய்தவும்,

"பக்தியும் ஞானமும் பாவையர்க்கேது" எனவும்,
"மாதர்க்கில்லை மருமமும் உறுதியும்" எனவும்,
"சேலைமேற் சேலைகட்டித் தேவரம்பையானாலும்
ஓலைமேலெழுத்தாணி பூண்டும் பெண்ணாகாது" எனவும்,
"எண்ணறக்கற்று எழுத்தற வோதினும்
பெண்ணறி வென்பது பெரும்பேதமைத்தே" எனவும் இடைக்காலத்தினர் சிலர் தொடுத்துவைத்த பழமொழியாவும் வழூமொழிமாகவும்,

வணிககுலமே வழங்கிசை பெறவும, பெண்பாலினமே பெருமை வாய்ப்பவும், புண்ணியத்தின் புனித முளைபோன்ற பொலிவும், செல்வத்தின் அதிதேவதையாகிய திருமகள் போன்ற பேரழகும் நிரம்பிய ஓர் பெண்மகவு பிறந்தது.

கண்டோர் எவரும் தத்தம் கண்மகவெனக் காதலிக்கும் இப்பெண்மகவின் தூய்மையான தோற்றத்திற்கேற்ப, பெற்றோர் இதனை புனிதவதியாரெனும் திருப்பெயர் புனைந்து பொன்போற்போற்றி, தமது செல்

வப் பெருக்கினுக்கும், மகவருமைக்கும் தக்கவாறு பருவங்கள் தோறும் பாராட்டி முறைமையிற் புரியும் சிறப்புகள் பலவும் பெரு மங்கலமாகக்கொண்டாடி மிகவரிதின் வளர்ப்பாராயினர். வனிதையர்திலதமாம் புனிதவதியாரும் சிவநேயத்தின் செழுந்துளிர் போன்றும், பேரழகின் பிரகாசம் போன்றும், பண்டை நற்றவத்தினால் தனது அகத்திற் கிளைத்த அன்பு வளரத்தானும் உடன் வளர்ந்து வந்தனர். இவர் தம் தளர்நடையெல்லாம் தாழாப்பக்தி கிளர் நடைபாகவும், குதலைப் பருவத்தே பயிலும் இன்பமொழியாகவும், குழகனார்பால் எழும் அன்பு மொழியாகவும், பேதை விளையாட்டனைத்தும், மேதை விளையாட்டாகவும் புரிந்து பெதும்பைப் பருவங் கடக்கலுற்றனர்.

இதனைப் பெரிய புராணம், காரைக்காலம்மையார் சரித்திரத்தில்,

"அணிகிளர் மெல்லடி தளர்வுற்றசைய நடைப் பருவத்தே
பணியணிவார்கழற் கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில் பெருமனக்காதல் ததும்ப வருமொழி பயின்றார்" என்றமையும்.

ஷை அம்மையார் முதற்கண் அருளிச்செய்த அற்புதத்திருவந்தாதியில்

"பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாங்காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்துவானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பதிடர்" என்றமையும் வலியுறுத்துவனவாம்

இவைகளினால் அம்மையாருக்கு அறிவு தோன்றிய இளம்பருவத்திலேயே சிவநேயமும் உடனே தோன்றி அகத்தில் வளர்ந்துவந்தமை புலப்படுகின்றது.

இத்தகைய பெருமை வாய்ந்த புனிதவதியாரை அவர் குல முறைமைப்படி மங்கைப்பருவம் எய்து முன் மணம்புரிந்து கொள்ளும் ஆவலால் கடல்வளம்சிறந்த நாகைப்பதியின் கண்வாழும் வணிக குலத்தவரில், குடிப்பெருமை, குலப்பெருமைகளில் குறைவற்றவராய், நிறைவுற்ற செல்வத்து நிதிபதியார் என்னும் பெயரினர் தனது அரும்பெறல் மைந்தனாகிய தரும வித்தனைய பரம தத்தனுக்கு மகட்பேசி மணம் புரிவித்தனர்.

எனினும் தனதத்தரின் அளவிறந்த செல்வத்தினுக்கு வேறொண் மகவின்மையினால் தனதொரு மகளையும் நாகையம்பதிக்கனுப்ப மனமிசையாராய் மகளையும், மருமகனையும் தனது காரைக்கால் நகரினுக்கே அன்பிற் கொடுபோந்து அருகிலேயே அவர் மனையறம் தனிமையிற் புரிந்து வாழ, மாளிகையமைத்து மகட் கொடையாக (அதாவது ஸ்திரீதனமாக) மிகப் பொருள் வழங்கி அமர்வித்தனர்.



இப்பால் பரமதத்தரும் புனிதவதியாரும் இல்லற மாண்பினுக்கு எவ்வித குறைபாடுமில்லாவண்ணம் நல்லறம் ஓம்பி இனிதின் வாழ்ந்தனர். அவருள் பரமதத்தர் மனைவியாற் கிடைத்த செல்வப் பெருக்கினால் எம்பலுற்றுச் சோம்பியிராமல் தன் குல முறை வழாது வாணிபத் துறையில் நீண்டு பெருக்கி வந்தனர். மனைவியாராகிய புனிதவதியாரும் தன் மனத்தை யிடைபறாது கவர்ந்து இளமை தொட்டு வளர்ந்து வரும் சிவநேயத்தினைச் சிறிதும் வெளிப்படுத்தாது இல்லறக் கடமைகளில் சொல்லறம் எவற்றினும் எட்டுணையளவும் முட்டுறாவண்ணம் ஈடுபட்டவராய், பெருக்கெடுத்தோடும் பேரன்புக் கறிகுறியாக சிவசின்னம் தரித்த சிவனடியாரைக் காணின் பரிவுடன் போற்றி அமுதினுமினிய அறுசுவையுண்டியளித்து ஆடை, அணி, பொருள் முதலிய வேண்டுப நல்கி ஆதரித் தொழுகினர்.

இவ்வாறொழுகு நாளில் ஓர் நாள் தொழில் நிமித்தமாய் வெளிச் சென்றிருந்த பரம தத்தர் தனக்கு அரிதிற் கிடைத்த தேமாங்கனிகளிரண்டையும் பூமான் அனைய புனிதவதியாரிடம் போக்கி, மேற்கொண்ட காரியத்தில் மேவி யிருந்தனர்.

இப்பால் மாங்கனிகளை வரப்பெற்ற மனைவியாரும், நாயகன் வரு முன்பு, நண்ணிய பசியாற் களைத்த, ஓர் சிவனடியாரை விருந்தேற்று முறைப்படி உபசரித்துத் தாமதியாமல் அவரை அமுதூட்ட ஆவல் கொண்டு, திருவமுது அன்றிக் கறியமுது தொன்று அதுபோழ்து சித்தமாகாததால் தன் பாலிருந்த கனிகளில் ஒன்றை மனமுவந்திட்டு உண்பித்து அவர் தளர்வகற்றி மகிழ்ந்தின்புற்றனர்.

அடியவரும் அகமகிழ்ந்து ஆசிபலபுகன்று விடைகொண் டகன்றனர்.

பின்னர் பரமதத்தரும் அருமனை புகுந்து நீராடிப் புசிக்குங்கால் மனைவியார் படைத்த மாங்கனியை அருந்தி அதன் சுவை அதிமதுரமாயிருந்தமையால் ஆராமை கொண்டு மற்றொரு கனியையும் இடுக வென்றனர்.

இதுகேட்ட புனிதவதியார் அஞ்சிப் புறத்தகன்று என் செய்வேன் எனக் கலங்கி ஏங்கித் தனை மறந்து தன்னுள் இடையறுந்துணையும் அடியார்க் கெளியனாகிய அருட் கடலைத் துதித்து நிற்ப, அது பொறாத எம்மான் ஓர் மாங்கனி அவர் கரத்தில் வந்தமையத் திருவுளம் கொண்டனர்.

இது குறித்தன்றோ,

"யானே தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன்" என்றும்
"ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றே யென்னுள்ளத்தி னுள்ளடைத்தேன்" என்றும்
"தானே தனிநெஞ்சம் தன்னையுயக் கொள்வான்
தானே பெரும் சேமம் செய்யுமால்" என்றும் அருளினர் போலும்.

இப்பால் பத்திப்பயிரனைய உத்தமியாரும் தன் கரத்திற் போந்திருந்த மாங்கனியைப் பரமதத்தரின் பரிகலத்திற் பரிமாற, அவரும் அதனை யுண்டு சுவையுணர்ந்து மிக்கவதிசயம் கொண்டவராய், தான் அனுப்பிய மாங்கனிக்கு இத்தகைய தீஞ் சுவை யமைந்திலது, அன்றி எவ்வுலகினும் இவ்வகையரும் சுவையினையுடைய எவ்வகைக் கனிகளும் இருத்தலரிது, அரிது எனப்பெரிதும் வியந்து, மனைவியாரை நோக்கி இப்பெறலரும் மதுர மாங்கனியை எவர்பாற்பெற்றனையென்று ஆவலுடன்விரைந்துவினவினர் அருள் வலைப்பட்ட அம்மையாரும் விடை பகர வெருண்டு, யாது கூறுவதெனத் தேருராய், அக்கனி கைக்கெட்டிய வரலாற்றினை யுரைப்பது, தன்னைத் தான் சிறப்பித்ததாகு மென்றே, அன்றி மாலயனுக்கு மரிய சிவன் வழங்கிய பேரருளைத் துணிந்து வெளியிடல் தகாதென வுணர்ந்தோ, உள்ளம் விதிர்த்து உரை தடுமாறி நாவெழாராய்ச் சிறிது போழ்து சிந்தித்துப் பின்னர்த் தெளிந்து, நாயகன் வினவிற்கு மெய்யுரை மறைத்துப் பொய்புனைந்துரைத்தலும் பெரும்பிழையாதலினால், உண்மை யுரைப்பதே கடனெனும் உறுதி கொண்டு சித்தத்துறையும் திருவருளை வணங்கி வாழ்த்தி நடந்தவை யனைத்தையும் நவின்று நம்பனருளே போலுமென் றுணர்த்தினர். ஆயினும் "காண்பார்க்குக் காணலாந் தன்மையனே" என்றபடி பரம தத்தருக்குப் புனிதவதியார் சொல்லில் மனம் தெளிவுறாது ஐயுற்று, நீ யுரைத்தமை உண்மையாகில் இன்னும் ஓர்கனி முன்போல் அரனருளால் வரவழைப்பாயென்று பணித்தனர்.

அதுகேட்ட புனிதவதியாரும் செய்வதொன்றின்றித் திகைத்து உட்புகுந்து திருவருளைத்துதித்துக் கணவனார் அய்யம்தீர மீட்டுமோர் கனியளித்தருளாவிடில் என் மெய்யுரை பொய்யுரையாகும், அஞ்சலென்றோர்க்குத் தஞ்சமென்றருளும் செஞ்சடை வள்ளலே யென்று இதைய முருகி நிற்புழி அன்பிற்கிரங்கிய எம்பெருமான் அவர் கரத்துமறித்தும் ஓர் மாங்கனி வரச்செய்தனர்.

இதனை:—"எனக்கினிய வெம்மானை யீசனையானென்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன்—எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே யின்புற்றேன்
உண்டே யெனக்கரிய தொன்று" என்றதனாலு மறியலாம்.

இவ்வாறு கைவந்த மாங்கனியைக் கண்டு உய்வந்தேன் எனப்பேருவகை கொண்டு விரைந்து சென்று கணவர் கரத்தளிப்ப, அவரும் மிகப் பரப்பரப்புடன் அதனை வாங்கி வியப்பிற் றிகைப்புற, திருக்கையில் கணத்தில் கையிடை நின்ற கனி மறைந்தது. என்னே கருணை; இவர் புனிதவதியார் பால் ஐயுற்று மேன்மேலும் இதுபோல் இடர்தரா வண்ணம் ஈசனார் பரிந்து அக்கனி மறையுமாறு திருவுளஞ் செய்தனர். தான் கண்



ணாரக்கண்டு கையார வாங்கிய கனியானது கணத்தில் மறைந்தது கண்ட வணிகர் திலகனும், திடுக்குற்று, தான் இதுகாறும் மனைவியாகக் கொண்டு மதித்தொழுகிய மடந்தை திருவருட் பொலிவுடைய ஓர் தெய்வமாமெனவும் மானிட மாதர் அல்ல வெனவும் தன்னுள்தேறி அவர் பால் எழுந்த அச்சமும், வியப்பும் அதிகரித்திட அது முதலாக அவரைத் தன்மனத்துள் மதித்துத் துதித்து மனைவி யென்னும் நினைவினை மறந்து இல்லறத் தொடர்பின்றி இருந்து வரலாயினார். இவ்வாறு சின்னாள்கடத்தலும் அரிதாகத் தன்மனத் தெழுந்த எண்ணத்தின் முதிர்ச்சியாலும், அவர்பால் நாளுக்கு நாள் வளர்ந்தெழும் பயத்தினாலும், அவர்க்குத் தன்னைக் கணவனென்று காண்போர் கருதும்படி உடனுறைதல் பெரிதும் அடாததெனும் துணிபினாலும், அவரால் பணிவிடைகளை யேற்பதும் தக்கதன்றெனும், கருத்தினாலும், இவரைப் பிரிந்து, தொழுங் குல தெய்வமாகத் துதித்து நீங்குவதே தகுதியெனத் தன்னுள் துணிந்து அக்குறிப்பினை புலப்படுத்தாது, "திரைகடலோடியும் திரவியம்தேடு" என்ற முது மொழிக் கிணங்க, கடல் யாத்திரை மேற்கொண்டு கப்பல் சித்தப்படுத்தி வாணியத்தொழில் வளர்ப்பார் போன்று சென்றனர்.

அவ்வாறு சென்ற பரமதத்தனார் சின்னாளில் செல்வம் பெருக்கிமீண்டு போந்தும், காரைக்கால் நகரடையாமல் பாண்டி நாட்டிலுள்ள ஓர் பட்டினத்தினை *யடைந்து தான்தேடிய பெருந்திரளான திரவியத்துடன் தங்கி நிலைபெற்று அந்நகரத்திலுள்ள ஓர் தனிகவணிகரின் புத்திரியை அருமணம் புரிந்து தனது வரலாற்றினை எவர்க்கும் புலப்படுத்தாது வாழ்ந்து வருங்கால் அம்மனைவிபால் ஓர் பெண்மகவுதிக்க அதற்குத் தனது முதல் மனைவியாக முன்னாள் கருதி வந்து தொழுங் குல தெய்வமாகப் பின்னாள் துணிந்து நீங்கிய அப்புனிதவதியாரின் திருப்பெயரினையே புனைந்து மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர். இவர் செயல் இவ்வாறாக மனிதவியல் துறக்கும் புனிதவதியாரும் தன்பால் கணவர்க் கெழுந்தவன்பார் அச்சத்தினையும், உடனுறத் துணியாது கடல்நெறி சென்றமையையும், நாட்செல வாராத சூழ்ச்சியினையும், உணராதாராய் மனையறம் வழாது கணவன் வரவினை யெதிர் நோக்கி யிருந்தனர். மரபொழுக்கப்படி வியாபாரம் குறித்துத் திவாந்தரம் சென்ற பரம தத்தர் மீண்டும் போந்து கன்னி நாடணைந்தோர் கன்னியையும் பயந்து தன்னிகர் செல்வத்து மன்னினான் எனும் செய்தியானது புனிதவதியாரின் தந்தையான தனதத்தர் கேள்வியுற்று சுற்றத்தாருடன் சூழ்ந்தாலோசித்து, அவர் வாழுமிடந்தேடிச் சென்றாவது, அவர் மனைவியை அவர் பக்கல் சேர்ப்பதே தமது தவிராக்கடமை யென்று துணிந்து அவ்வா

*பாண்டிநாட்டில் பொருனையாறு சங்கமத்திலுள்ள அனகலம் என்னும் பெயருடையது இப்பட்டினம். (ப-ர்.)

றே புனிதவதியாரைச் சிவிகையிலேற்றி வழிக்கொண்டு பரம தத்தர் இருக்கும் பட்டின மருங்கு சார்ந்து தமது வரவை அவருக் கறிவித்தனர்.

அதுகேட்ட பரம தத்தர் பெரிதும் அச்ச முற்றவராய் தாமதியாது தான் பின்பு மணம் செய்த மனைவியையும், அவள் பாலுதித்த சிறுமியையும் உடன்கொண்டு எதிர்கொண்டு புனிதவதியாரைக்கண்டு அவரது திருவடிகளில் மனைவியையும், மகளையும் பணிவித்துத் தானும் பணிந்து, தேவரீர் திருவருளால் யான் சுகமே வாழ்கின்றேன் இப்பெண் மகவின் நாமமும் தம்முடையதே யென்று தன்மையினுரை செய்தார்.

இதனைக்கண்ட புனிதவதியார் மெய் நடுங்கிச்செய்தியறியாது அஞ்சி ஓர் புறமாக ஒதுங்கி நிற்ப சுற்றத்தாரும் திகைத்து ஒவ்வாத செய்கைசெய்த இவரை நோக்கி நீவிர் மணந்த மனைவியை துணிந்து வணங்குவதும் வழக்கோ? இவ்வாறும் செய்வாருளரோ? வென்று விரைந்து வினவினர். அது கேட்ட பரமதத்தரும் உண்மையே நீவிர் நினைத்தமை ஒக்கும் ஒக்கும், இவர் மானிட மடந்தையல்ல ரென்றும் தெய்வமாமென்றும் என்மனதாரத்தெளிந்துணர்ந்த பின்னரே உடனுறவஞ்சி நீங்கினேன், பின்னர்யான் ஈன்ற இப்பெண் மகவிற்கும் என்னுள் தொழுந் தெய்வமாகத் துணிந்து போற்றியதனுங் கறிகுறியாக, இவர் திருப்பெயர் புனைந்தேன்.

அவர் அருளின் பெருமையை நீவிர் அறிகிலீர் ஆதலின் இவ்வாறு வினவினீர் நீவிரும் இவர்பதம் மேவியேபணிவீர், அதுவே கருமம் அதுவே கடமை யென்று விடை பகர்ந்தனர். இவ்வாறு கணவனார் கூறிய மர்ம உததரங்களைச் செவியேற்ற தேவியாரும் அவர்மன நிலையுணர்ந்து இவர் கொள்கை யிவ்வாறாயின் இனி இவர் பொருட்டாகத் தாங்கி நின்ற ஒங்கு மெழிலும் அவ்வழகினைச் சுமந்து பழகியதசையும் இக்கணமே யொழித்து அன்பே யுருவாமென்பார் உருவம் அளித்திடல் வேண்டும் என்னும் ஆவல் மேற்கொண்டு உளத்துறை யொருவனைத் துதித்தா நின்றனர்.

பத்திமை வாய்ந்த பாவை யனையார் பரவிய வண்ணமே சித்து இதுவோ; வென்று எத்திசையினரும் திகைத்து அஞ்சி ஓடி யொளிக்கும்படி அவர் திருமேனியாயமைந் திருந்த தசைச்சுமை கழிந்து ஏயெனு மளவையிற் பேய் உருவம் எய்தலும், காரைக்கால் கொளும் அக்காரைக்காலம்மையார் பரமானந்த வெள்ளம் படிந்து (நாதனருளை நயந்து வானவர் மலர் மழை சொரிய, அந்தர துந்துபி முழங்க சிவகணம் பலரும் உவகையிற் றிளைப்ப) அத்தன் அருளிருந்தமை வாழ்த்தி "பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் என்றற்றொடக்கத்த அற்புதத் திருவந்தாதிபாடியருளினர்.

இதனை நேரிற் கண்ட சுற்றத்தினரும் உண்மை யுணர்ந்து அளவற்ற அதிசயம் கொண்டவராய் தாமவரை ஓர் மருட்பெண்ணென இதுகாறும் மதித்து வந்தமைக் கிரங்கி அஞ்சித் தொழுகன்றனர். பின்னர் இவர்,



"கிளர்ந்துந்து வெந்துயர் வந்திடும் போதஞ்சி நெஞ்சமென்பாய்த்
தளர்ந்தங்கிருத்தல் தவிர்தி கண்டாய் தளராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத்திடை வளர்கோட்டு வெள்ளை
இளந்திங்களும் எருக்கும் இருக்கும் சென்னி யீசனுக்கே"

என்றற்றொடக்கத்த திருவிரட்டை மணிமாலையுமருளிச் செய்து திருக் கயிலை மலையைத் தெரிசிப்ப விரைந்தேகினர். அவ்வாறு செல்லும் தனது வடிவினைக்கண்டோர் கண்புதைத் தகல்வது நோக்கி, புன்னகை செய்து என்னை அண்டர் நாயகர் கண்டு கொள்வாராயின் அறியாதார் அறியாதாராய் அகல்வதினா லெனக்கென்னோ கவலையென் றிகழ்ந்தவராய் திருக்கயிலை வரையை எதிர்கண்டிறைஞ்சி அணுகியபோது காலால் நடவாது தலையினால் நடந்து செல்வாராக அதனைத் திருக்கண் சாத்திய உமாதேவியாரும் காந்தனை யிறைஞ்சி வியப்புடன் "இறைவ என்புருவோடு நம்மை நாடி ஏறிவரும் யாக்கையின் அன்பிருந்தவாறென்னே யென்று கேட்க."

மங்கையோர் பங்கனும் சங்கரன்றானும் மலைமகளை நோக்கிப் பாவாய் "வரும் இவள் நம்மையீன்ற அம்மையாகும்" பிறர் தன்னை நாடாப்பெருமை வேண்டி யிப்பேய் வடிவம் பெற்றனளாகு மென்று பகர்ந்தருளினர்.

இவ்வாறுரைசெயும் அளவில் இவர்பக்கல் நெருங்கிய என்புருவினை நோக்கி "அம்மையேவா" என்றழைப்ப, அப்பனே வந்தேன் என்றிறைஞ்சி யிறைஞ்சி யிணையடிகளில் வீழ்ந்த பேயுருவாய தாயுருவநோக்கி நீ இன்னும் யாதுவேண்டினை யுரையென அம்மையும்,

"இறவாத வின்பவன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டுமீண்டும் பிறப்புண்டே லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ யாடும்போதுன்னடியின் கீழிருக்க வென்றார்" என

இவ்வண்ணம் என்றும் நின் பொன்னடி மறவாத இன்ப அன்பும், மறுபடி பிறவாமையும், அன்றிப் பிறப்பினும் நின்னடிக்கன்பு மறவாமையும், இடையறாது நீ திருநடனமாடும்போதெல்லாம் திருவடிக்கீழிருந்து உன் திருவருளைப் பாடி மகிழ்ந்திருக்கவும் அருள்வா யென்று வேண்ட அப்பனும் உவந்து அவ்வாறே யாகுக வென்றருளிச் செய்தனர்.

அதுகேட்ட அப்பனுக் கம்மையாய ஒப்பில்சீர் உருவினரும் வணங்கி விடைகொண்டு தென்றிசை நோக்கித் தலையால் நடந்து மூலமுதலா யாலங்காட்டி னெழுந்தருளி அண்டமுற நிமிர்ந்தாடும் தொண்டர் பெருமானை "வணங்கி மகிழ்ந்து கொங்கைதிரங்கி" யென்றெடுத்த மூத்த திருப்பதிகமும் "எட்டியிலவ மென்ற" திருப்பதிகமும் பாடியருளி அன்று முதலாக இன்றும், இனி என்றும், அண்ணலாரடிக் கீழ்த்தங்கி ஆனந்த நடனம் கண்டு களித்து இன்புற்றமர்ந்திருக்கின்றனர்.

காரைக்காலம்மையார் சரித்திர முற்றிற்று.

## முக்கிய குறிப்புக்கள்.

சிவநேயச் செல்வர்களே ! இத்தகைய சிறப்பு வாய்ந்த காரைக்காலம்மையாரின் திவ்விய சரிதத்தினால் சிவபக்தியின் பெருமையையும், அண்ணலாகிய சிவபெருமான் அளிக்கும் அருளின் அருமையும், நாம் தெளிந்துணர்வதுடன், உலக நடைக்கேற்ற இல்லற நீதிகளும் ஆராய்ந்துணரத் தகும். அவையாவன,

முதற்கண் "புனிதவதியார் தோன்றும்போதே திருமகளே யென்று கண்டோர் கண்கவர் வனப்புடையவராய் விளங்கினர் என்பதனால்,

1. பத்தி குடிகொண்ட சித்தத் தெளிவுடைமைக் கேற்ப உத்தம விலக்கணமுடையரா யிருந்தார் என்பது பெறப்படும். இதனை "நாமநால்பகரு முன்னூலோர் இலங்கெழில் அளவு குணமென விசைப்பர்" என்ற முதுமொழியும் வலியுறுத்துவனவாகும்.

2. பிறந்தறிவு தோன்றிய காலமுதலாகவே முன்னைப் பலபிறவிகளிலும் முயன்றுவந்த எல்லையில் தவப்பயனால் உடன்றோன்றி வளர்ந்த ஒழியா வன்பானது உள்ளங் கவர்ந்து உலகப்பற்றை ஒழித்திருக்கவும், அதனைச் சிறிதும் புலப்படுத்தாது தான் வாழ்க்கைப்பட்ட கணவனுடன் கூடி நல்லறம் வழுவாது இல்லறம் புரிந்தும், கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை யென்ற நீதிப்படி கணவனார் அநுமதி பெறாத அதிதிக்கு மாங்கனியிட்டமை உரைக்கவும் துணியாது, மறைக்கவும் முடியாது அஞ்சி நடுங்கி உரைத்தமொழினா ரென்பதை ஒவ்வொரு மகளிரும் சிந்தித்து வந்திக்கற்பாலனவாம்.

3. பரமதத்தர் தன்பாற்றொடர்பின்றிச்சின்னாள் ஒழுகினமையையும், பின்னாள் பிரிந்து பன்னாள் போதரா தொழிந்தமையை கண்டும், வேறு நகரில் நிலை பெற்று மறுமணமும் புரிந்து வாழ்கின்றா ரென்றார் என்று கேள்வியுற்றும் வெறுப்புறாது அவர் பக்கல் போதர இசைந்தமையும், இவரின்உயர்குணத்தமையும் அடக்கத்தினையும் உணர்த்தும் உதாரணங்களாயின.

தன்மாட்டு நாயகன் கண்ட திருவருட் பெருமையாலேயோ, தன் நாயகன் விலகினா ரென்று எண்ணாத தன்மை தன் பெருமிதம் தானுணராத பெருந்தகையைக் காட்டுகின்றது.

கணவனார் தனை வணங்கி மனைவெனும் நினைவொழித்தமையை வெளியிடுமளவும் தன் மனதில் பொதிந்து கிடந்த சிவநேசத்தினையும், உலக வெறுப்பினையும் சிறிதும் தோற்றுவியாது, அதனை அவர் வெளியிட்டதும் கணமும் தாமதியாது தளையவிழ்க்கப்பட்டவர்போல், தேகப்



பற்று, உலகப்பற்று, சுற்றப்பற்று, சுகப்பற்று ஆகிய அனைத்தையும் உண்மையாகிய பேரின்ப மடைய விரும்பிப் பிறர் கண்கொண்டு நோக்கமும் விழைபாபப் பேய்வடிவம் வேண்டிப் பெற்றனர். இதுவன்றோ உண்மைத் துறவு. விரிக்கிற் பெருகும்.

திருச்சிற்றம்பலம்.

பண்டிதை-அசலாம்பிகை அம்மாள்.

---

## குறிப்பு.

நமது அருளுடைய அம்மையாரருளிச் செய்த அற்புதத் திருவந்தாதியில் அநேக ஆழ்ந்த கருத்துகளும் பத்திச்சுவையும் பதிந்திருத்தலின் அவையிற்றின் சிலவற்றைக் குறிப்பிடுவாம்.

என்ன செய்யினும் இறைவன் அவன்பால்
அன்பே நிகழ்த்துவதறன் என்றது.

இடர்களையா ரேனு மெமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனும்—சுடருருவி
லென்பறாக் கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென்னஞ்சவர்க்கு.

என்றும் நாம் இறைவனுக் கடிமை எனறது.

அவர்க்கே யெழுபிறப்பு மாளாவோ மென்று
மவர்க்கே நாமன்பாவதல்லாற்—பவர்ச்சடைமேற்
பாகாப் போழ்சூடு மவர்க்கல்லான் மற்றொருவர்க்
காகாப்போ மெஞ்ஞான் றுமாள்.

ஐந்தொழிற்கு முதல்வன் அரனெனும் அப்படனே என்றது,

இறைவனே யெவ்வுயிருந் தோற்று விப்பான்றோற்றி
யிறைவனே யீண்டிறக்கஞ் செய்வா—னிறைவனே
யெந்தா யெனவிரங்கு மெங்கள் மேல்வெந்துயரம்
வந்தாலது மாற்றுவான்.

நினைப்பவர் மனமே கோயிலாக் கொண்டவன் என்றது.

வானத்தா னென்பாரு மென்க மற்றும்பர்கோ
னானத்தா னென்பாருந் தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட மெய்யொளிசேர் கண்டத்தா
னென்னெஞ்சத் தா னென்பன்யான்.

அருளன்றி யாவதொன்றில்லை என்றது.

அருளே யுலகெலாமாள் விப்பதீச
னருளே பிறப்பறுப் பதாகு— மருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேனெஞ்ஞான்று
மெய்ப்பொருளு மாவதெனக்கு.

அரியபிறவொன்றில்லை அம்மானைப்
பிரியா நெஞ்சத்தே பெறின் என்றது.

எனக்கினிய வெம்மானை யீசனையா னென்று
மனக்கினிய வைப்பா வைத்தே—னெனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே யின்புற்றே
னுண்டே யெனக்கரிய தொன்று.

இறைவனடி சேரார் பிறவியறார் என்றது.

இனியோ நாமுய்ந்தோ மிறைவன்றாள் சேர்ந்தோ
மினியோரிட ரில்லோ நெஞ்சே—யினியோர்
வினைக்கடலை யாக்குவிக்கு மீளாப்பிறவிக்
கனைக்கடலை நீந்தினோங்காண்.

அரிய அரனை அன்பினாற் காணலாம் என்றது.

காண்பார்க்குங் காணலாந் தன்மையனே 'கைதொழுது
காண்பார்க்குங் காணலாங் காதலாற்—காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்
காதியாய் நின்றவரன்.

எல்லாமாயல்லவு மாயவன் என்றது.

அறிவானுந் தானே யறிவிப்பான்றானே
யறிவா யறிகின்றான்றானே—யறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர் பாராகாச
மப்பொருளுந் தானேயவன்.

அவனே யிரு சுடர்தீயா காசமாவா
னவனே புவிபுனல் காற்றாவா—னவனே
யியமானனாயட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து.

உள்ளிய வுருவம் அவன் உரு என்றது.

நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக
நீலமணி மிடற்றா னீர்மையே—மேலுலந்த



தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள் செய்வார்க்கு
மக்கோலத் தவ்வுருவேயாம்.

அரனை யறியார் அவனை இகழ்வார் என்றது.

ஞான்ற குழற்சடைகள் பொன்வரை போன்மின்னுவன
போன்றகறை மிடற்றான் பொன்மார்பின்—ஞான்றெங்கு
மிக்கயலே தோன்ற விளங்கி மிளிருமே
யக்கயலே வைத்தவரவு.

அரனதுறைவிடம் அன்பர்தம் உள்ளமே என்றது.

பிரானவனை நோக்கும் பெருநெறியே பேணிப்
பிரானவன்றன் பேரருளே வேண்டிப்—பிரானவனை
யெங்குற்றா னென்பீர்க ளென்போல்வார் சிந்தையினு
மிங்குற்றான் காண்பார்க் கெளிது.

உருவம் மருவம் ஒன்று மல்லன் என்றது.

அன்றுந் திருவுருவங் காணாதேயாட்பட்டே
னின்றுந் திருவுருவங் காண்கிலே—னென்றுந்தா
னெவ்வுருவோ னும்பிரானென்பார் கட்கென்னுரைக்கே
னெவ்வுருவோ நின்னுருவமேது.

ஒன்றே வடிவன்றொவ்வா வேடம் உண்மையிதுவென்றது.

ஏதொக்குமே தொவ்வாதே தாகுமே தாகா
தேதொக்கு மென்பதனை யாரறிவார்—பூதப்பால்
வில்வேடனாகி விசயனோ டேற்றநாள்
வல்வேடனான வடிவு.

வன்றொண்டு பூண்ட பின்வல்வினையற்றார் என்றது.

முடிமேற் கொடுமதியான் முக்கணா னல்ல
வடிமேற் கொடுமதியோங் கூற்றைப்—படிமேற்
குனியவலமாமடிமை கொண்டாடப் பெற்றோ
மினியவலமுண்டோ வெமக்கு.

அரன்பணி யன்றி அண்டர் தம் வாழ்வும் வேண்டிலேன் என்றது.

கண்டெந்தை யென்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்
யேனே
லண்டம் பெறினுமது வேண்டேன்—துண்டஞ்சேர்

விண்ணுளுந் திங்களாய் மிக்குலக பேழினுக்குங்
கண்ணாளா வீதென் கருத்து.

இனி எமக்கார் சரி என்றது.

பணிந்தும் படர் சடையான் பாதங்கள் போதா
லணிந்து மணிந்தவரை யேத்தத்—துணிந்தென்று
மெந்தையார்க்காட் செய்யப்பெற்ற விதுகொலோ
சிந்தையார்க் குள்ள செருக்கு.

சார்புணர்ந்து சார்ந்தார் சார்பினையற்றார் என்றது.

காலனையும் வென்றோங்கடு நரகங்கை கழன்றோ
மேலையிரு வினையும் வேரறுத்தோம்—கோல
வரணார விந்தமுழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து.

சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே யொத்திலங்கிச் சா
ராது
பேர்ந்தார்க்குத் தீக்கொடியின் பெற்றியவா—நேர்ந்து
ணரிற்
றாழ்சுடரோன் செங்கதிருஞ் சாயுந்தழல்வண்ணன்
வீழ்சடையே யென்றுரைக்குமின்.

பத்தி மலர் தூவ யெற்றிடு மிருள் என்றது.

நாமாலை சூடியுநம் மீசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்தன்பாய்—நாமோ
ரறிவினையே பற்றினலெற்றே தடுமே
யெறிவினையே யென்னுமிருள்.

நெஞ்சே அவனை நீ விரும்பு என்றது.

அவன் கண்டாய் வானோர் பிரானுவானென்று
மவன் கண்டா யம்பவளவண்ண—னவன் கண்டாய்
மைத்தமர்ந்த கண்டத்தான் மற்றவன் பானன்னெஞ்சே
மெய்த்தமர்ந்தன்பாய் நீ விரும்பு.

J. M. N.

---

# சித்தாந்தசாரம்.*

---

வாழ்கவந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
வாழ்குதீயதெல்லா மரனாமமே
சூழ்கவையக முந்துயர் தீர்கவே.

சுத்தசாட்குண்ணிய பதியாகிய சிவபெருமான் திருவருளால்தோன்றி நின்றழியப்படுவதா மியல்பிற்றாகிய எண்ணிறந்த அண்டகோடிகளைத் தம்முள்ளடக்கி நிற்கும் இருநூற்றிருபத்துநான்கு புவனங்களினிடத்தும் உதித்து அவ்வவற்றிலுள்ள போகங்களைப் புறக்கரணத்தானும், அகக்கரணத்தானும், அறிந்து அழுந்தி அனுபவித்து அவசமுற்று அதீதப்பட்டுநிற்கும் தனுவுடையராய ஆன்மாக்களின்றொகை அளவிட்டறிதற்கரியன.

இவ்வான்மாக்கள் ஆணவமலமொன்றேயுடைய விஞ்ஞானகலர் எனவும், ஆணவம், கன்மம், என்னும் இருமலமுமுடைய பிரளயாகலர் எனவும், ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலமுமுடைய சகலர் எனவும் முத்திறப்படுவர். இவருள் விஞ்ஞானகலர் அநாதியே மலபந்த மாத்திரமுடைய விஞ்ஞானகலரும், அனுபவத்தானாதல் விஞ்ஞானத்தானாதல் யோகத்தானாதல் சந்நியாசத்தானாதல் தீக்கையானாதல் இடையே மாயாபந்தம் கன்மபந்தம் முழுவதும் நீங்கி ஆணவமல பந்தமாத்திரமுடைய விஞ்ஞானகலரும் என இருவகைப்படுவர்.

பிரளயாகலர் :—அநாதியே மலகன்மங்கள் மாத்திரமுடைய பிரளயாகலரும்; இடையே பரிபக்குவ விசேடத்தால் மாயாபந்தம் நீங்கி ஏனை இரண்டு பந்தமுமுடைய பிரளயாகலரும் என இருவகைப்படுவர். சகலர் தேவர் மனிதர் நரகர் முதல் பல திறப்படுவர்.

விஞ்ஞானகலருக்குக் கன்மமலமும் மாயாமலமும் உண்டு; இவையின்றேல் அவர்கள் அவ்வப்புவனபோகங்களை நுகர்தலின்றாம்முடியும்; மின்னை யோவெனின்: அம்மலங்கள் அவர்கட்குப் போகசாதனக் கருவியாய் நின்றொழிந்தா அவர்களைப் பந்தியா வென்பதாம். விஞ்ஞானகலருக்குரிய தனுகரணபுவன போகங்கள் சுத்தமாயையினின்றுண்டாம். பிரளயாகலருக்கு அச்சுத்தமாயையின் கீழாயடங்கியுள்ள அசுத்தமாயையினின்றுண்டாம். சகலருக்கு அவ்வசுத்த மாயையின் றூலபரிணாமமாகிய பிரகிருதிமாயை யினின்றுண்டாம்.

காரணத்தினின்றுந் தோன்றும் காரியப்பாட்டிற்கு எள்ளினுளாகிய குவியல்போலப் புத்தர், சமணர் கூறுஞ் சங்காதவாதமும், நூலினுளாகிய ஆடைபோலத் தார்க்கிகர்கூறும் ஆரம்பவாதமும், பேய்த்தேரினுளாகிய நீரின்தோற்றம்போல மாயாவாதிகள் கூறும் விவர்த்தன வாதமும் சைவசித்

---

* 1910ல் இராமநாதபுரத்தில் நடந்த சைவசித்தாந்த மகா சமாஜக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

தாந்தத்திற் கேளாமையின் அவற்றை யொழித்து சித்தாந்தத்திற் கொள்ளப்படும்.

விருத்தி பரிணாமம் என்னும் இரண்டையும் பற்றிப்பேசுவாம்:— அவற்றுள் விருத்தியாவது படங்குடிலாதல்போல மலபந்த கன்மபந்தங்களோடு விரவாமல் சுத்தமாயை காரியப்படுவது.

விருத்தி என்பது:—சூக்கும பரிணாமமென்ப. ஏனைப் பரிணாமமாவது பாலினுண்டாகிய தயிர்போல முழுவதும் பரிணமித்தலும் நெய்யினுண்டாகிய புழுப்போல ஏகதேசத்திற் பரிணமித்தலும் எனப்பரிணாமம் இருவகைப்படும். அவற்றுள் பிற்கூறியதே மலபந்த கன்மபந்தங்களோடு கூடிய அசுத்தமாயை காரியப்படுவதாம்.

இத்தனுகரண புவனபோகமாய் விரிந்த சுத்தமாயை அசுத்தமாயை என்னுமிவை சடமாதலின் இவைதாமே ஆன்மாக்களுக்கு அறிவை விளக்கா; ஆன்மாக்களோ அநாதிமல பெத்தமுடையவர்களாதலால் இறைவன் அறிவித்தாலன்றித் தாமே அறியுந்தன்மை யுடையவனல்ல. ஆதலிற் பின் எங்ஙனம் ஆன்மாக்கள் விடயங்களை அறிந்து பற்றிநின்றழுந்தி யனுபவிக்கின்றார்களென்றுசங்கை நிகழக்கூடும்! அதுகூறுதும்-ஆன்மாக்களின் கரணங்களை அக்கரங்களும், அவ்வக்கரங்களை அதிதேவதைகளும், அவ்வதிதேவதைகளை அபரநாதாதிகளும், அவ்வபரநாதாதிகளைப் பரநாதாதிகளும் அவற்றைச் சிவபெருமானும் அதிட்டித்து நின்று செலுத்துதலாற் கரணவுணர்ச்சி நிகழப்பெறும். அதனைப் பின்னர் விளக்குதும்.

சிவபெருமானது பராசத்தியாகிய ஞானசத்தியொன்றுதானே இச்சா ஞானக் கிரியையென வியாபார பேதத்தான் மூன்றாய், அவையே மற்றும் அவ்வக்காரிய பேதத்தாற் பலதிறப்படும்; அம்மூன்றனுள் இச்சாசத்தியாவது-இறைவன் ஆன்மாக்களுக்கு மலத்தைநீக்கிச் சிவத்தை அளித்தற்கண் ணுள்ளதாகிய கருணையும் ஞானசத்தியாயது-அங்ஙனம் அளித்தற்கண் செய்யக்கடவதான உபாயங்களை யெல்லாம் அறிதலும், கிரியாசத்தியாவது-அவ்வுபாயங்களை யெல்லாம் அவ்வாறே சங்கற்பித்து நடத்துதலாகிய சங்கற்பமுமாம்.

இச்சிவசத்தி மூன்றனுள் எங்கும் ஒருபெற்றித்தாய் வியாபரிக்கும் இச்சையை யொழித்தொழிந்த இரண்டனுள் ஞானமேயாய் வியாபரிக்கில் பரநாதமென்றும், கிரியையேயாய் வியாபரிக்கில் பரவிந்துவென்றும், ஞானக்கிரியைகளிரண்டும் ஒத்து வியாபரிக்கில் பரசாதாக்கிய மென்றும், ஞானங் குறைந்து கிரியையேறி வியாபரிக்கில் பரமகேசுர மென்றும், கிரியை குறைந்து ஞானமேறி வியாபரிக்கில் பரசுத்தவித்தை யென்றும் ஐவகைப் பேதப்படும்.

நிற்க, சிவபெருமானருளினாலே சுத்தமாயை க்ஷோபிக்க (கலக்கப்பட) அதினின்றும் அபரநாதமும், அதினின்றும் அபரவிந்துவும், அதினின்றும் அபரசாதாக்கியமும், அதினின்றும் அபரமகேசுரமும், அதினின்றும அபரசுத்த வித்தையுமுதிக்கும். இவ்வைந்துந் தோன்றிய பின்னர்த்தோன்றுவதாகிய காலதத்துவம், இவற்றது தோற்றத்திற் கேதுவாகாமையின், காலம்பற்றி ஈண்டு முற்பிற்பாடுகூறியதின்று; பின்னையோ காலத்தானமாய் நிற்கும் கலையித்திரின்னும் சத்தியா லதிட்டிக்கப்பட்டு இவை காலவரை



யறையைக்கடந்து நிற்றல்பற்றிச் சிவபெருமானுக்கு நித்திய அதிட்டானத்தலமென்ப. இவ்வைந்தும் சிவதத்துவ மென்னப்படும்.

இனி அநந்ததேவ ரருளினாலே அசுத்தமாயையின் ஊர்த்துவபாகம் க்ஷோபிக்க அதினின்றும் மாயை, காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன் என்னுந் தத்துவங்களுதிக்கும். இவற்றுள் இராகம், வித்தை, கலை என்னு மூன்றும் முறையே ஆன்மாக்களின் இச்சாஞானக் கிரியைகளை எழுப்பும் உள்ளந்தக்கரணங்கள். இம்மூன்றனோடு போகத்தை நுகரும் காலத்தையும் வரையறுத்தலையும் காட்டும். காலமும் நியதியும் சேர இவற்றோடு ஆன்மா ஒருப்பட்டு போகங்களை நுகரு மவசரம் புருடத்துவமென்னப்படும். அந்நுகர்ச்சியின்கண் விபரீத உணர்வைப் பிறப்பித்து நிற்பதே மாயாதத்துவம்.

இனி சீகண்ட உருத்திர ரருளினாலே அசுத்த மாயையின் றூலபரிணாமமாகிய பிரகிருதிமாயை க்ஷோபிக்க அதினின்றும் குணதத்துவமும், அதினின்றும் புத்திதத்துவமும் உதிக்கும்; இவை முறையே சத்துவாதி பெயர் பெறும். சத்துவ அகங்காரத்தினின்றும் அந்தக்கரணங்களும் ஞானேந்திரியங்களுந் தோன்றும். இராசத அகங்காரத்தினின்றும கன்மேந்திரியங்கள் தோன்றும். தாமத அகங்காரத்தினின்றும் தன்மாத்திரைகளாகிய சூக்கும பூதங்களும் அவற்றினின்றும் தூலபூதங்களுமாகிய ஆத்தும தத்துவம் இருபத்துநான்குந் தோன்றும்.

நிற்க, சாருவாகமுதல் அயிக்கவாத சைவ மீறாகிய புறப்புறச்சமயமும் புறச்சமயமும் அகப்புறச்சமயமு மென்னும் முக்கூற்று அறுவகைச் சமயத் தெய்வங்களெல்லாம் பிருதிவிமுதல் மாயா தத்துவ மீறாகிய தத்துவங்கள் ஒவ்வொன்றின் நிலைபெறும். "ஏகனனேக னிருள்கரும மாயையிரண்டு" என்னும் ஆறுபொருட்கும் உண்மைத்தன்மை விளக்குகின்ற சைவமெனப்படும் தலையாகிய அறுவகைச் சமயத் தெய்வமாய் நின்ற அதிகார போக இலய சிவபேதங்கள் சுத்தவித்தை முதல் நாததத்துவ மீறாகிய தத்துவங்கள் ஒவ்வொன்றின் நிலையெறும். சித்தாந்த சைவத் தெய்வமாகிய சுத்த சிவம் இம்முப்பத்தாறையுங் கடந்து நிற்கும்.

இனி ஆன்மாக்களுக்கு அறிவு விளங்குமாற்றைக் கூறுவாம்; அஃதாவது-முற்கூறிய சுத்தமாயையினின்றும் சூக்குமை, பைசந்தி மத்திமை, வைகரி என்னும் நான்கு வாக்குக்களினிடமாகப் பிரணவமுதிக்கும். இது நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, அதீதையென்னும் பஞ்சகலைகளைப் பற்றுங்கோடாகச் சார்ந்து ஐவகைப்படும். எங்ஙனமெனின்-நிவிர்த்திகலையுட்பட்ட புவனவாசிகளுக்குத் தூலதமமாயும், பிரதிட்டாகலையுட்பட்ட புவன வாசிகளுக்குத் தூலதரமாயும், வித்தியாகலையுட்பட்ட புவன வாசிகளுக்குத் தூலமாயும், சாந்திகலையுட்பட்ட புவன வாசிகளுக்குச் சூக்குமமாயும், சாந்தியாதீத கலையுட்பட்ட புவன வாசிகளுக்குச் சூக்குமதரமாயும் நின்று முறையே நிவிர்த்திகலாப் பிரணவம், பிரதிட்டாகலாப்பிரணவம், வித்தியாகலாப்பிரணவம், சாந்திகலாப்பிரணவம், சாந்தியாதீத கலாப் பிரணவம் என்று ஐவகைப் பெயர்பெற்று அவ்வப்புவன வாசிகளின் கரண நிகழ்ச்சிக்கு ஆதாரமாயிருக்கும்.

ஒவ்வொருபிரணவமும், நாதம், விந்து, அகாரம், உகாரம், மகாரம் என்னும் ஐந்தக்கர சொரூபமாயிருக்கும். அவற்றுள் நாதம் ஆன்மாவினையும்,

விந்து சித்தத்தினையும், அகாரம் அகங்காரத்தினையும், உகாரம் புத்தியினையும், மகாரம் மனத்தினையும் செலுத்த இவ்வக்கரங்களை சதாசிவம், மகேசன், உருத்திரன், மால், பிரமன் என்னும் ஐவகை அதி தெய்வங்கள் செலுத்த இவ்வதி தெய்வங்களை அபர நாத விந்து சாதாக்கிய மகேசுர சுத்த வித்தைகள் செலுத்த இவற்றை பரநாதவிந்து சதாக்கிய மகேசுர சுத்த வித்தைகள் செலுத்த இவற்றைச் சிவபெருமான் செலுத்த ஆன்மபோதத்தினிடத்தில் சமுத்திரத்தின்கண் அலை புதிது புதிதாப்த் தோன்றியும் ஒடுங்கியும் வருமாறுபோலக் கணந்தோறும் உணர்வுதோன்றியும் ஒடுங்கியும் வருமென்க.

இங்ஙனம் தோன்றும் உணர்வினால் ஆதிசிருட்டி தொடங்கி ஆர்ச்சித்துவந்த இருவினையின் பயனாகிய இன்ப துன்பங்கள் நுகருங் காலத்திலே தோன்றும். இத அங்கிதங்களால் மீண்டும் மீண்டும் ஆகாமிய சஞ்சித பிராரத்த கன்மங்கள் பிரவாகா நாதியாய் உண்டாய் அவற்றின் அனுபவ காலத்திற்றோன்றும் அபுத்திபூர்வ புத்திபூர்வ பொதுச் சிவபுண்ணியத்தால் இருவினை யொப்பும் மலபரிபாகமுமுண்டாய் அதினின்றும் முன்னர் மந்தர சத்திநிபாதம் பிறக்கும்.

இச்சத்தி நிபாதத்தால் குருலிங்க சங்கம பத்தியுண்டாய் அதனால் பரமசிவன் சாதகாசாரியனை அதிட்டித்துச் சமயதீக்ஷை பண்ணி அவன் மனமொழி மெய்களைச் சரியைத் தொழிலிலே செலுத்துவிப்பன். இச்சரியையின் முற்றுதலாலே மந்தசத்திநிபாத முண்டாய்ச் சிவார்ச்சனையில் ஆதரவுண்டாக அப்போது போதகாசிரியனை அதிட்டித்து விசேடதீக்ஷை முடித்து கிரியாயோகங்களுக்கு அதிகாரங்கொடுத்து சிவார்ச்சனை கற்பித்து அந்தரியாக பகிரியாகங்களிலே அவன் மனமொழி மெய்களைச் செலுத்துவிப்பன்.

இக்கிரியையின் முற்றுதலாலே தீவிரசத்தி நிபாதமுண்டாக யோகவாஞ்சையுண்டாய் அவ்வாசிரியனால் அட்டாங்க யோகவுண்மையை அறிவித்துக் காமாதி யறுபகையையும் விடுவித்து அவன் சித்தத்தைச் சாலம்ப நிராலம்பயோக சமாதியிலேநிறுத்துவிப்பன். இம்மூன்றின்முற்றுதலாலே தீவிரதரசத்திநிபாதமுண்டாய்ச் சிவஞானிகளிடத்திலே பத்தியுந்திரிபதார்த்த சொரூபத்தை அறியவேண்டுமென்னும் அறிவுந்தோன்றி தேகாதிப்பிரபஞ்சங்களை நீக்கவேண்டுமென்னும் வைராக்கியமும் பிறவியிலேயயமும் முத்தியிலாசையும் நமக்குச் சிவசொரூபத்தைத் தரிசிப்பிக்கும் நாதராவாரியாரென்று பிறவிக்குருடனை அநாதன் கோடைகாலத்தின் மத்தியானத்திலே நீர்தேடித் திரியுமாறுபோல ஞானாசாரியனைத் தேடி மிகவும் வருந்துகின்ற வஞ்சை யுண்டாம். இங்ஙனமாய பக்குவன் ஞானாசாரியனை அடைந்தவளவில் அவ்வாசாரியனை அதிட்டித்து நிருவாணதீக்ஷை யென்னும் ஞானதீக்ஷை பண்ணுவித்து அவர்கள் மலத்திரயங்களை அத்துவசோதனையினாற் கழலப்பண்ணி கரணசூனியம் பிறப்பித்து சிவானந்தாநுபூதியைக் கொடுப்பன்.

இங்ஙனமாய சத்திநிபாத முண்டாவதற்கு முதலில் குருலிங்க சங்கம பத்தியும் அவையுண்டாவதற்கு விபூதி உருத்திராக்ஷம் என்னும் சிவசின்னங்களைத் தரித்தல், குருவை வழிபடல், சிவபெருமானைத் தோத்திரஞ் செய்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபெருமானைப்பூசை செய்தல், சிவதருமங்களைச்செய்தல், சிவபுராணங்களைக் கேட்டல், சிவாலயதரிசனஞ்செய்தல், சிவனடியாரிடத்தன்றிப் பிறரிடத்தும் போசனம் பண்ணாமை, சிவனடியார்களுக்கு வேண்டுவனகொடுத்தல் முதலியனவும் அவை யுண்டாவதற்கு கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை, வரைவின் மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய்தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலியனவும் பிரதான காரணமாமென உட்கொண்டு இவற்றின் வழுவாது நடப்பதே மானவதருமமெனப.



நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
றென்கடம்பைத் திருக்கரக்கோயிலான்
றன்கடனடியேனையுந் தாங்குத
லென்கடன்பணி செய்துகிடப்பதே.

திருச்சிற்றம்பலம்.

ஆனந்த ஷண்முக சரணாலய சுவாமி.

---

## சமாசாரங்கள்.

---

### சைவசித்தாந்த மகா சமாஜத்தின் உபந்நியாசங்கள்.

ஸ்ரீமத் சுவாமி வேதாசலம் அவர்களின் உபந்நியாசங்கள்:—சுவாமி வேதாசலம் அவர்கள் பிப்ரவரிமீ 2உ வடலூர் சென்று அவ்விடத்திலுள்ள சமரச சன்மார்க்க சபையின் கூட்டத்தில் அக்கிராசனம் வகித்து 'சமரச சன்மார்க்கம்' என்னும் விஷயமாய் சுமார் இரண்டுமணி நேரம் வரையில் கேட்போர் களிக்க பிரசங்கித்தனர். பிப்ரவரிமீ 3உ ஷை சுவாமிகளின் அக்கிராசனத்தின்கீழ் வளவனூர் பண்டிதராகிய ஸ்ரீமான் சின்னப்ப உபாத்தியாயர் "பெரியோர்களின் பெருந்தன்மை" என்னும் விஷயமாய் உபந்நியாசம் செய்தார், பிறகு ஷை சுவாமிகளின் மாணாக்கர்களில் ஒருவராகிய திருசிரபுரம் பரமசிவம் பிள்ளையவர்கள் "பக்தியோகம்" என்னும் விஷயமாய் உபந்நியாசித்தார்; ஸ்ரீவைகுண்டம் தாசில்தார் ஸ்ரீமான் வெங்கடசுவாமி முதலியார் B.A., அவர்கள் "மரித்தோர்களின் உயிர்த்தெழுகையைப்பற்றிய பகுத்தறிவு" என்பதைப்பற்றி உபந்நியாசம் செய்தார்; கடைசியில் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின் மாணாக்கர்களில் ஒருவராகிய கந்தசுவாமி பிள்ளையவர்கள் "உயிர்களிடத்தன்பு" என்னும் விஷயமாய் மனதையுருக்கத் தக்கவிதமாய் பேசி முடித்தார்; முடிபுரையில் ஸ்ரீமத் சுவாமி வேதாசலம் அவர்கள் மேற்கண்ட நான்கு உபந்நியாசங்களில் ஒன்றிற்கொன்று பொருந்தியிருக்கும் சங்கதிகளை விளக்கிக் காட்டினார். பிப்ரவரிமீ 5உ ஸ்ரீமத் சுவாமி வேதாசலம் அவர்கள் மஞ்சக்குப்பத்தில் மாணவர் வித்தியா சம்பந்த யூனியன் அங்கத்தினர்களின் வேண்டுகோளால் "உயிர்களிடத்தன்பு" என்னும் விஷயமாய் உபந்நியாசம் செய்தார். இக்கூட்டத்தில் அநேகர் சைவசித்தாந்தமகா சமாஜத்திற்கு அங்கத்தினர்களாக கையொப்பம் செய்தார்கள். ஷை சுவாமிகளின் சுற்றுப் பிர

யாணத்தில் வேலூர் B. S. இரத்தினவேலு B.A., அவர்களும், மஞ்சக்குப்பம் லோகல் பண்டு ஒவர்சியர் R. தங்கவேலு முதலியார் அவர்களும் செய்த உதவிக்காக இச்சமாஜ அங்கத்தினர் தங்களுடைய வந்தனத்தை செலுத்தினார்கள்.

***

சென்னை:—பிப்ரவரிமீ 3உ இராயப்பேட்டை T. V. கலியாண சுந்தர முதலியார் அவர்களும், சைவசித்தாந்த மகா சமாஜத்தின் காரியதரிசி S. சச்சிதானந்தம் பிள்ளை B.A., அவர்களும், செங்கற்பட்டு சைவசமயா பிவிருத்தி சபையாரின் வேண்டுகோளால் அவ்விடம் சென்று "அத்வைதம்" என்னும் விஷயத்தை உபந்நியாசித்தார்கள். பிப்ரவரிமீ 3உ நுங்கம்பாக்கத்தில் T. V. கலியாணசுந்தர முதலியார் S. சச்சிதானந்தம் பிள்ளை B.A., அவர்களாலும், பிப்ரவரிமீ 2உ தேனும்பேட்டையில் S. சச்சிதானந்தம் பிள்ளை B.A., அவர்களாலும், பிப்ரவரிமீ 24உ திருப்போரூரில் M. தங்கவேலு பிள்ளை அவர்களாலும் உபந்நியாசங்கள் செய்யப்பட்டன.

***

ஸ்ரீமான் பொ. முத்தையா பிள்ளை அவர்களின் உபந்நியாசங்கள்:—சைவசித்தாந்த மகா சமாஜத்தின் கௌரவ உபந்நியாசகரில் ஒருவராகிய தூத்துக்குடி ஸ்ரீமான் பொ. முத்தய்யாபிள்ளை அவர்கள் பிப்ரவரிமீ 4உ திருத்துறைப் பூண்டியில் சைவ சித்தாந்தத்தைப் பற்றியும், 5உ சிவபுண்ணியத்தைப் பற்றியும், 16, 18, 19 தேதிகளில் மதுரையில் முறையே 'பக்தி', 'திருக்குறள்', 'சிவதீக்ஷை' என்னும் விஷயங்களைப் பற்றியும், 24, 25 தேதிகளில் 'ஆலயதத்வார்தம்', 'தர்மம்' என்னும் விஷயங்களைப் பற்றியும் உபந்நியாசித்தார்.

***

ஸ்ரீமான், T. S. தியாகராஜ ஞானியார் அவர்களின் உபந்நியாசங்கள்:—சைவசித்தாந்த மகா சமாஜத்தின் கவுரவப் பிரசாரர்களில் ஒருவராகிய ஸ்ரீமான் T. S. தியாகராஜ ஞானியார் பிப்ரவரிமீ 18உ நாகை மாணவர் தமிழ் சங்கத்தில் "இராஜ பக்தியும், தெய்வ பக்தியும்" என்னும் விஷயமாம் உபந்நியாசித்தார். இக்கூட்டத்தில் ஸ்ரீமான், கோபாலசாமி ரகுநாத ராஜாளியார் அக்கிராசனம் வகித்திருந்தார்.

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி க.] 1912-ஆ மார்ச்சுமீ [பகுதி ௩.

## மகாவாக்கியம்.

மகாவாக்கியங்களாவன "பிரக்ஞானம் பிரஹ்மம்" "அஹம் பிரஹ்மாஸ்மி" "தத்துவமசி" "அயமாத்மாப் பிரஹ்மம்" என்பனவாம். இவை முறையே இருக்கு வேதத்து ஐதரேயாரண்யகோபநிஷத்திலும், யசுர்வேதத்து பிரகதாரண்ணியகோபநிஷத்திலும், சாமவேதத்துச் சாந்தோக்கியோபநிஷத்திலும், அதர்வண வேதத்து மாண்டூக்கியோபநிஷத்திலும், கொண்டாடப்படுவனவாம். வேதாந்தத்தில் ஆன்மாக்களின் பந்த முத்திகளை விளக்கவந்த இந்நான்கு வாக்கியங்களும், வேதாந்ததாத்திற் கூறப்படும் சித்தாந்த மகாவாக்கியத்தின் பொருளினையே விளக்கவெழுந்தனவாம். என்னை? வேதாந்தம் வேதாந்ததாத்திநுக்குச் சோபானமாகலின் என்க. ஈண்டு வேதாந்தமென்பது யோகப்பெயராற்கூறும் வேதத்தின் முடிவாகிய உபநிடதங்களை; உருடப்பெயராற்கூறும் வியாசசூத்திரத்தினையன்று.

### பிரக்ஞானம் பிரஹ்மம்.

இ-ள். பிரக்ஞானம்-பேரியஞானமே சொரூபமாயுள்ளது, பிரஹ்மம்-பராபரனல்லதுவாகிய பரமான்மா. எ-று. பெரிய ஞானமுடையது பரமான்மாவெனவே சிறிய ஞானமுடைத்து ஜீவான்மா வென்பது சொல்லாமலே யமையும். பிரக்ஞானமா மருசத்தி: "சத்தியின் வடிவேதென்னிற்றடையிலா ஞானமா

கும்" எனுந் திராவிடோபநிடதம். இச்சத்தியையுடையவன் சத்தன். ஆகவே சத்திகுணமும் சத்தன் குணியுமாம்; கதிரும் கதிரோனும் போலும். இங்ஙனமாயின் வேதம் பரமான்மாவை "நிர்க்குணன்" குணாதீதன் என்றதென்னை யெனின் அதுபிரகிருதியாற்பட்ட இராஜச தாமத சாத்துவிகங்களுடன் கூடிய சகுணபிரமம் போன்றதன்றென்பதே தாற்பரியம். பரமான்மா எண்குண முடையனாதலை "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்-றாளை வணங்காத்தலை" என உத்தர வேதமும், "எட்டுவான் குணத்தீசனெம்மான்றனை" எனத் தேவாரமும், "இறையவனை மறையவனை யெண்குணத்தினனை" எனத் திருப்பாட்டும், "தாணு வெண்குணன் சங்கரன்" எனப்பிங்கல நிகண்டும் கூறியவாற்றாலறிக. எண்குணங்களாவன சருவஞ்ஞத்துவம், திருப்தி, அநாதிபோதம், சுவதந்திரம், அலுப்தசத்தி, அனந்தசத்தி, நிராமயான்மா, விசுத்ததேகம் என்பனவாம். இவையே பரமான்மாவின் சிற்குணங்களாம். இவையும் பரமான்மாவிற்கு வேண்டியதில்லை யென்பாராயின் அப் பரமான்மா ஓரியல்பு மில்லா வெறும் பாழாய் முடியுமென்க. மேற்குறித்த சிறிய ஞானமாகிய அஞ்ஞானத்தையுடைய ஜீவான்மாவின் சத்தியாகிய அறிவைச் சுருக்குகின்ற ஆணவமலமும், அந்த அறிவைக் கன்மமல வழியே சிற்றறிவாச் செய்து நிற்கின்ற மாயா மலமுமுண்டென்பதும் பெறப்படும். இம்மூன்றும் பாசமாம். ஆகவே இம்மகா வாக்கியத்தில் பதிபசுபாச மூன்றும் வந்தமை காண்க.

### அஹம் பிரஹ்மாஸ்மி.

இ-ள். அஹம்-நான், பிரஹ்மாஸ்மி—பிரமமாகின்றேன். எ-று. இது பெத்தநிலையில் பரமான்மா ஜீவான்மாவாய் நின்ற முறைமைபோல, ஜீவான்மா யானெனதெனுஞ் செருக்கறுக்கப் பரமான்வாய்நிற்கும் ஜீவன் முத்தநிலையைக் குறிக்கின்றது. எங்ஙனமெனின், பரமான்மா பெத்தநிலையில் உடனாய் நிற்பினும் வேறு காணப்படுமாறின்றி ஆன்மாவேயாய் ஒற்றுமைப்பட்டு ஆன்மாவின்வழி நின்ற முறைமைபோல, ஈண்டான்மா அப்பரமான்மாவினுடனாய் நின்றுறினும் தானென வேறு காணப்படாது



வாறு பரமான்மாவோடொற்றுமைப்பட்டு அவ்விறைபணியின் வழுவாது நிற்கப் பெறின், அங்ஙனமேகனாகி நிற்றலால் யானெனதென்னும் செருக்கொழியுமென்க. ஒற்றுமைப்பட்ட பின்னர் இறைபணியினிற்பது பந்தமாகாதோ எனின், ஆகாது;

"நாமல்ல விந்திரிய நம்வழியி னல்லவழி
நாமல்ல நாமு மரனுடைமை—யாமென்னி
லெத்தனுவினின்று மிறைபணியார்க் கில்லை வினை
முற்செய் வினையுந் தருவான் முன்" எனப் பகவான் மெய்கண்டாரருளிய பரப்பிரம சூத்திரத்தில் இதைக் காண்க. "சிவமாக்கியெனையாண்ட" எனவும், "சிவமேகாணெனத்தேறினன்காண்க" எனவும், "சிவமானவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ" எனவும் வரும் தெய்வத் திருவாசகத் திருவாக்குகளும் இம்மகாவாக்கியத்தின் கருத்தேயாம். இவனவனாகவே பாசமுமில்லையாயிற்று. ஆகவே இம்மகாவாக்கியத்தில் பதி பசு பாச மூன்றும் வந்தமை காண்க.

### தத்துவமசி.

இ-ள். தத்-(பரமான்மா வெனப்படும்) அது, துவம்-(ஜீவான்மா வெனப்படும்) நீ, அசி-ஆயினை, எ-று. இது பரமான்மாவும் ஜீவான்மாவும் அனாதி யத்துவித சம்பந்தியாயிருத்தலை யுணர்த்துகின்றது. எங்ஙனமெனின், தூலவொளியாகிய கண்ணொளியுஞ் சூக்குமவொளியாகிய விளக்கொளியும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும்நிலை உற்றுநோக்க வல்லார்க்குப்பிரித்தறிய வாராமையிற் கண்ணொளியாக் காணுங்காற் காணுந் தன்மையே முனைத்துத் தோன்றுமாகலின், அவ்வழி விளக்கொளி இருந்தும் இல்லை. அன்றி விளக்கொளியாக் காணுங்காற் காட்டுந் தன்மையே முனைத்துத் தோன்றுமாகலின், அவ்வழிக் கண்ணொளி யிருந்தும் இல்லை. இனிக் கண்ணொளியும் விளக்கொளியு மெனப்பகுத்துக் காணப்புகினும் காணுந் தன்மையே முற்பட்டுத் தோன்றுதலின் அவ்வழி விளக்கொளியைத் திரிவுபுலனைக் காட்சிப் படுவதல்லது தெளிவுபுலனைக் காட்சிப் படுமாறில்லை. அதுபோலத் தூலவறிவாகிய ஆன்மாவும் சூக்கும அறிவாகிய பரமான்மாவும் அத்துவிதமாய்க்கலந்து

பிரித்தறிய வாராவென்க. இங்ஙனம் சீவான்மா தாணுவினோடத்துவிதமாவதற்கு முந்தி ஆணவத்தோடு அத்துவிதமாகவிருந்த உண்மை வெளியாம். ஆகவே இம்மகா வாக்கியத்தில் பதி பசு பாச மூன்றும் வந்தமை காண்க.

### அயமாத்மா பிரஹ்மம்.

இ-ள். அயம்-அந்த, ஆத்மா-பரமாத்துமாவே, பிரஹ்மம், முன்சொன்ன பிரமமாம். சிவனுக்கும் சீவனுக்கும் ஆன்மா என்ற சொல் பொதுமையி னிற்றலானும், இரண்டும் சித்தாகவிருத்தலினாலும், சீவான்மாவைப் பிரமமென மயங்காதபடி, முன் மகாவாக்கியத்திற் குறித்த "தத்" என்னுஞ் சப்தத்தை "அய" வென்னுஞ் சொல்லாற் சுட்டிப் பரமான்மாவே பிரமமெனச் சாதிக்க வெழுந்தது இம்மகாவாக்கியம். இருவகையான்மாவிற்கும் வேற்றுமைதா னென்னையோ வெனின் கூறுதும்: பரமான்மா அருட்சித்து, சீவான்மா அருளைச் சேருஞ்சித்து; பரமான்மா பவத்தினைக் கெடுத்துப் புத்தி முத்தி யளிக்குஞ்சித்து, சீவான்மா அவைகளி லழுந்துஞ்சித்து; பரமான்மா தானேயறியுஞ்சித்து, சீவான்மா அறிவிக்க அறியுஞ்சித்தாம். இவ்வாக்கியத்தில் சீவான்மா அறியப்பட்ட வழியே அதன் பாசமு மறியக்கிடக்கின்றது. ஆகவே இம்மகாவாக்கியத்தில் பதி பசு பாசம் மூன்றும் வந்தமை காண்க.

வேதாந்தத்திலுள்ள இந்நான்கு மகாவாக்கியங்களும் அனுபவிக்கும் பொருள் ஆன்மாவும், அனுபவப் பொருள் பரமான்மாவு மென்பதை நன்கு விளக்கின. சுபம்.

மணவழகு.

# சத்திநிபாதம்.

"நல் குஞ்ரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ்சரக்கன்று காண்"

மனநினைவில் வாக்கிலனைவருக்கு மறிவரிய
வள்ளல் கள்ளத்தினான் மறுகு மறிவிலியேன்
றனை நினைவிலுட் கொண்டே யவனவனோடதுவாந்
தன்மையினின்மல வடிவுதன்னை மன்னித்
தினைப்பனையவளவி லிருவினைதுலை யொப்பறிந்து
சீர்காழிமன்னு சிற்றம்பல நாடிஞனென்
முனைவினையு முடல்வினையும் வருவினையு மறுத்து
முத்தியளிப்பவன் மலர்த்தாள் சித்த முறவைப்பாம்.

பரமபதியாகிய சிவபெருமானே முதற்கடவுள். அப்பெருமானை விட்டு நீங்காத அருட்சத்தியே பராசத்தியாம். அஃது பேரொளியோடு கூடிய ஞானமயமாயுள்ளது. அஃது பரசிவத்தி லாயிரத்திலொரு கூறுடையதாம். இதில் ஆயிரத்திலொரு கூறுடையது ஆதிசத்தி என்னும் திரோதான சத்தியாம். இதில் ஆயிரத்திலொரு கூறுடையது இச்சா சத்தி. இதில் ஆயிரத்திலொரு கூறுடையது ஞானசத்தி. அதில் ஆயிரத்திலொரு கூறுடையது கிரியா சத்தியாம். இச்சத்திகளுள் இச்சை உயிர்க்கிரங்கும். ஞானம் இசைந் துணர்த்தும். கிரியை பஞ்சகிருத்தியங்களை நடத்தும். திரோதான சத்தி ஆன்மாக்கள் மனம் வாக்குக் காயங்களாலியற்றிய புண்ணிய பாவங்கள் துலையொக்கு மளவும் மறைந்து நின்று அறக்கருணையோடு பொருந்தி முத்தியளிக்குமதாம். அஃது ஆறாறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும் நீறுக முத்திநிலை நிற்போர்க்கு அன்னை போல் நின்று ஆதரிக்கும் தோன்றாத் துணையாய்நிற்கும். அச்சத்தி ஆன்மபோதம் இழந்த விடத்தில் பேரொளியாய்ப் பிரகாசித்து நிற்கும். அப்பொழுது அஃது அருள்ஞானசத்தி என்று அழைக்கப்பெறும். அதனை நமது கரணங்களைக்கொண்டு அறியில் பாச ஞானமாம். சீவபோதத்தா லறியில் பசு ஞானமாம். அந்த ஞானத்தையே கொண்டு நாமறியில் அஃது நமக்கோர் கருவியாம். ஆதலால் அந்த அருள் ஞானமே ஆன்மாவை நடத்து மென்றுணர்க. இங்ஙனம் நடத்து முறைமையுங் காண்டல் ஞானதரிசனமாம். அஃது விளக்கைக் கையில் பிடித்துக்கொண்டு முன்னே போவாரைப்போல் ஆன்மாவை நடத்தும். அத்தன்மைகண்டு

அதன் வழி நிற்றல் ஞானதீதமாம். ஆதித்தன் நேர்வைத்த விழி யவன் மயமாய் நிற்பதன்றி பொருள் கவராததுபோல இந்த ஞானத்தின் வழி நின்றால் பசுபாச ஞானங்கள் பிரகாசியா வென்பதாம். அந்த ஞானம் எரி விளக்குப் போலவும், ஒளிபோலவும், சூரியப் பிரகாசம்போலவும், விடியற் காலம்போலவும் பிரகாசித்து நிற்கும். "இருள்கிழித்தெழுந்த ஞாயிறே போன்று" "மின்னேரனைய பூங்கழல்கள்" என்றருளியவாற்றா லுணர்க.

ஆன்ம அறிவில் சிச்சத்தி எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருந்தும், பிறவியந்தகனுக்குச் சூரியப் பிரகாசம் யாதொரு பயனும் பயப்பியாததுபோல, ஆணவ இருள் செறிந்துநின்ற பெத்தான்மாக்களுக்குயாதொரு பயனுமின்றி நின்றமை யுணர்க. ஆனால், இறப்பில் தவங்களால் ஆணவ இருளின் வலிகுன்றி நின்றபோது அச்சத்தியின் றன்மையாகிய ஞானப் பிரகாசந் தோன்றும். இவ்வாறு சிற்றறிவிற் பேரறிவு படிப்படியாய்த் தோய்ந்து நிற்றலே சத்திநிபாதமாம். இஃதாபதிதற்கு இருவினை துலையொத்து நிற்கவேண்டும். ஏனெனில் அஃது ஒருவன் ஒரு லக்ஷியத்தைக் கட்டித் தூக்கினவிடத்து அஃது அசைவற்றுச் சமமாக நின்ற காலம் பார்த்து எய்தாற்போல வென்க. அன்றியும் ஆன்மாக்கள் தங்கி நிற்கும் நிலைகள் மூன்றும். அவை கேவலம், சகலம், சுத்தம் என்பவைகளே. இவற்றுள் கேவலம், ஆன்மா தேகங்களோடு பொருந்தி நில்லாது ஆணவத்தோடு மாத்திர மியைந்து நிற்கும் நிலை. சகலம் தேகத்தோடு பொருந்தி எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களுட் பிறந்து இறந்து திரியுங்கால். இயற்றிய இருவினையாலுறும் இன்ப துன்பங்களை யநுபவித்தற்குரிய பெத்தநிலையாம். திருவருளாற் பாசம் பகையெனக் கண்டு நீங்கித்தன்னையுந் தலைவனையு மறிந்து இறைநிறைவுள் அத்துவிதமாய் நிற்கும் நிலை சுத்தமாம்.

இம்மூன்று நிலைகளுள் சகல நிலையுள் இயற்றப்பெறும் புண்ணிய பாவங்கள், ஒரு ஜன்மத்திலே புசித்துத் தொலையத்தக்கதாக மந்திர முதலிய ஆறத்துவாக்களிலேயும் முன்னரே கட்டுப்பட்ட சஞ்சிதம், எடுத்த தேகத்தில் புசித்து முடிவதாயுள்ள பிராரத்துவம், அங்ஙனம் புசிக்குங்கால் ஏறும் இதாவகிதங்களால் வரும் ஆகாமியம் ஆகிய மூன்றும் முடிந்துபோம்படி சிவபுண்ணிய மிகுதியினாலே துலையொத்து நிற்பனவாம். அதாவது ஆன்ம அறிவின்கண் இருவினையொப்புக் குறிவிளங்கி நிற்குமென்பதாம். அக்குறியாதெனில் ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமாதலின்றி, இருவினைகளினும் அவற்றின் பயன்களினும் ஒப்ப உவர்ப்பு நிகழ்ந்து விடுவோனதறிவின்கண் அவ்விருவினைகளும் அவ்வாறு ஒப்ப நிகழ்தலேயாம். இவ்வாறு அறிவின்கண் இக்குறி நிகழ்ச்சி கூடுமாறில்லையாயின் முத்தியடைதற்கேதுவாதல் கூடாதென்க.



அவ்விருவினைகளுள் புண்ணியமும் பதிபுண்ணியமென்றும் பசுபுண்ணியமென்றும் இருவகைப்படும். பசு புண்ணியத்தைப்பயன் விரும்பிச் செய்யில் காமியத்துட்பட்டு அழிவெய்தும். ஆதலால் அஃது நிலைபேறுடைய மெய்ஞ்ஞானத்தைப் பயப்பியாதென்பது பெற்றாம். பயன் விரும்பாது செய்யில் அஃது பதி புண்ணிய பண்பினதாய் நிற்கும். ஆதலால் இப்புண்ணியம், செய்வோன் கருத்தினைப்பற்றி நிற்றலை யுணர்க.

சிவபுண்ணியமும் புத்திபூர்வம், அபுத்திபூர்வமென்றிரு திறனுறும். பின்னையது முன்னையதிற் கேதுவாய் நிற்கும். வேள்வி, பசு புண்ணியத்துட்பட்டதாயினும் பயன் கருதாது செய்யில் அபுத்தி பூர்வ பதிபுண்ணியமாம். மாபலி முன்னைப் பிறப்பிற் செய்த செயல் அபுத்திபூர்வ சிவபுண்ணியாயினமையறிக.

இஃது இங்ஙனமாக சிவபெருமான் சாதகாசிரியனை யதிட்டித்து நின்று சமயதீக்கை செய்து சரியை தன்னை நவையற இயற்றச் செய்வன். அங்ஙனம் இயற்றினவர்கள் சிவலோகத்தைப் பொருந்தி அங்குள்ள போகமருந்தி அவனியிலுதிப்பர்கள், பின்னர் போதகாசிரியனாலே விசேட தீக்கை பெற்று சிவபூஜை இயற்றி சிவசாமீபம் பெற்றுப் பெரும் போகந் துய்த்து ஒழிந்தகாலை புவியில் நண்ணுவர்.

பின் யோகாசிரியனை நண்ணி சிவ போதத்தால் நாடுதற்கரிய சிவ யோக மியற்றி சிவனுடைய சாரூபஞ் சேர்ந்து நிற்பர். இச்சாரூப தேகத்திற் பொருந்திவரும் போகத்திற் பற்றிலரேல், உலகமெலா மழியுங்காலத்தில் முத்தி எய்துவர். போகத்தி லாசையுடையரேல் சிருஷ்டி காலத்திலுலகிலுதித்து ஆணவமல பக்குவமடைந்து சத்திபதிந்தபின் குருவினருளால் முத்தி எய்துவர்.

இப்படியே விசேடமாஞ் சிவதருமச் சரிதை
 எழிற்கிரியை யோகமிவை யியற்றியிடுந் தவத்தாற்
றப்பறவே யொன்றை யொன்றங் கொழிப்பதாகத்
 தரும்பாவ புண்ணியங்கள் சமனாகப் பொருந்த
வப்பொழுதே வினையனைத்தும் பருவமாகி
 யாணவமும் பக்குவத்தை யடைதல் செய்ய
வொப்புயர் வொன்றில்லாத சிவன்சத்தி பதியு
 முணரிலது மந்தாதி நால்விதமா யுரைப்பார்.

இத்திருவிருத்தத்தால் இருவினையொப்புப் பிறந்தபின் மலபரிபாகம் எய்துதலும் அதன்பின் சத்திநிபாதம் நிகழ்தலும் முறைவயின் கண்டாம். இனி மலபரிபாகமாவது: ஆணவமலத்தின் சத்தி தேய்ந்து தேய்ந்துநின்று மீண்டும் அவ்வான்மாவைப் பிறவிக்குக்கொண்டுய்க்காத ஓர் நிலை இதுகா

றுங் கூறியவாற்றால் இருவினையொப்பிற்குக் காரணமாயுள்ளது சிவ புண்ணிய மென்றும் சத்திநிபாதத்துக்கு காரணமாயுள்ளது மலபரிபாகமு மெனக் கண்டாம். அன்றியுஞ் சரியை கிரியை யோகங்கள் ஞான விளைத்தற்கு அங்கமாய் நின்றனவே யன்றி தாமே முத்திகொடுக்குந்தகை மையனவல்ல வென்பதும் பெற்றாம். மேலும் முன்னர்க் கூறிப்போந்த சத்தியானது நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதை என ப்பல பேதப்பட்டு ஆன்ம அறிவின்கண் தோற்றி நிற்கும். இவைகளுக்குக் கலைகளென்று பெயர். கலை யெனினும் ஞானமெனினும் ஒக்கும். பக்குவ ஆன்மாவினிடத்து நிவிர்த்திகலை பதிந்தபோது பொய்வாழ்வில் விரத்தி வரும், முத்தியிலிச்சையுண்டாம். பிரதிட்டாகலை பதிந்தபோது அவ் வெண்ணத்தை நிலைநிறுத்தும். வித்தை அறிவைச் சுத்தமாய் விளக்கி நிற்கும். இவ்விளக்கத்தில் ராகத்துவேஷம் அற்றிருக்கை சாந்தி. அதீத மான பரசொரூபமாய் நிற்கை சாந்தியாதீதையாம். ஆறத்துவாக்களுள் மற் றையன இக்கலைகளுள் அடங்கி நிற்குமாற்றை உய்த்துணர்ந்து கொள்க. ஆகவே நிவிர்த்திகலையுள் மந்ததர சத்தியும், பிரதிட்டாகலையுள் மந்தசத் தியும், வித்தியாகலையுள் தீவிரசத்தியும், சாந்திகலையுள் தீவிரதர சத்தியும் செறிந்து நிற்கு மென்று சிவாகமங்கள் கூறுவனவாம். இந்நால்வகைச் சத் தியும் ஆன்மாவினிடத்துப் பதிதல் அல்லது வீழ்தலாகிய சத்திநிபாதம், சோபான முறையால் மந்ததர முதலிய நால்வகைப்பட்டு பின் பலவேறு வகைப்பட்டு நிற்கு மென்க. அதிக மந்தமாய் மெய்ஞ்ஞானத்தை யுதிப் பிப்பது மந்ததரம். மந்தமாய் உதிப்பிக்குமது மந்தம். விஞ்ஞானம் சடுதியி லுதிப்பிப்பது தீவிரம். அந்தமாதிகளில்லாச் சிவஞானம் மிகவும் ஆக்கல் தீவிரதர மெனவறிக.

மந்ததர சத்திநிபாத முடையார் தன்மைகளாவன.—

“ஆலயம் பணிதலு மதுவலம் வருதலுஞ்
சீலமெய்த் தொண்டரைச் சென்றடி வணங்கலும்
யான் செயும்பணியே தென்றுகை குவித்தலும்”

மந்தசத்திநிபாத முடையார் தன்மைகளாவன.—

“அவ்வயி னவனுக் காகிய குணங்கள்.
இவ்வெண வுரைப்ப னிறைவனை விதியா
லர்ச்சனை செய்த லதனை யாதரித்து
அவ்வழி பஞ்ச சுத்தியி னர்ச்சனை
செய்வது மளித்துச் செயலுரை சிந்தனை
யகம்புற மிரண்டினுமானவர்ச்சனையிற்
றரும்படி நிறுத்துந் தன்மையதாகும்.”



தீவிர சத்திநிபாத முடையார் தன்மையாதெனில்.—

ஆவதோ ராசா னருளினட்டாங்க
யானதோர் சமாதி யடைவதிங் கடைவே
யியற்றுமிப் பிறவியி லென்கொல் ஞான்று
முயற்றிட வருமென முன்னுதலளவே
யச்சிவ தருமமானவேதுவினால்
மெய்ச் சிவஞான மேவுவரன்றே.

தீவிரதர சத்திநிபாத முடையார் குணங்களுரைக்கில்

சரியை முதலிய சரித்தோர் தாங்கள்
வருமொரு பிறவியில் ஞானம் வாய்ப்பதற்கு
சத்திய தீவிரதர சத்திநிபாத
முய்த்திடு மவர்கட் குளகுண முரைத்திடி
னிரண்டொன்றல்லா வின்பமாகும்
புரண்டெழு மநுபவ பூரண நிலையா
முத்திமெய்த் தொண்டர்தம் முன்னடி வணங்கலும்
பத்தி செய்திடலும் பன்முறை தொழலும்
பரந்த சைவாகமப் பதிபசுபாச
நிரந்தர மறியுஞான் றென்றென நினைத்தலும்
என்பெரிடு நரம்பு மிறைச்சியும் பொதிந்து
துன்ப விவ்வுடலாஞ் சுமை துளக்கறவே
நீங்குவதென்றென நினைதொறு நினைதொறு
மேங்கிய வயிர்ப்பா விளகிய விதையமும்
பிறவியிற் பயமும் பெருகருள் முத்தியி
லுறவு கொண்டிடுதற் குற்றெழு காதலு
மந்தரத்தவர்வாழ் வவனியி லிவர்வாழ்
விந்திரசால மென வறிந்திடுதலும்
வினைத் துரிசறுத்து மெய்ச் சிவஞானந்
தனைப்பெறு நாளென்றென்று தவித்தலு
மோர்வருஞ் சிவனதுண்மையி னுருவை
யார்தெளி விப்பாரென வலம் வருதலு
மின்னெறியினர்க ளிரும்பசிதன்று
லன்னதா தாவை யவாவினர் போலும்
வேனிலி னுச்சி விரிகதிர்ப் பாலையிற்
முன்வரும் வேளையிற் றண்ணீர் வேட்டுத்
திரிதரு பிறவிக் குருடனை யொத்து
வருபவர்க் கருங்கானகத்துவா வியினைப்

பொருவ நின்றிடுவனப் பூரணக் கடவு
ளணைந்தவப் பரம்பொருளாரெனின் ஞானக்
குணந்தரு சைவக் குருபர நாதன்

என்று கூறியருளிய அகவலினு லறிக.

இப்பக்குவத்தையே வழிநூலாசிரியராகிய அருணந்தி சிவாச்சாரியார், "மிக்கதொரு பக்குவம்" என்றருளினர். இவர்கள் மிகு சத்திநிபாத முடைய சீவன் முத்தர்கள். இவர்கள் வெறுப்பும் விருப்புமன்றி சேடுஞ் செம்பொன்னும் ஒக்கவே காண்பர். ஆண்டு, "அவனிவரை இவரவனை விடாதே அத்துவிதமாய் நின்று தாமுளராத லறியப்பெறாது சிவத்தோற்ற மொன்றுமே கண்டு நிற்பர்" என்க. மிகு சத்திநிபாத முடைய தீவிரதர சத்திநிபாதர்க்கு பரமகுருவால் சத்தியோ நிர்வாணதீக்கை செய்யப் பெறும்.

இதுகாறுங் கூறியவாற்றால் மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்னும் நால்வகைச் சத்திநிபாத முண்டென்றும் அஃதுடையார் கூற்றினைத் தென்றுங் கூறினும்.

இனி ஆன்மாக்களும் மூன்றுவகைப்பட்டுப் பக்குவ பேதத்தால் பத்து வகைப்படுவர். மூன்றுவகையாவன:—விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் பிரிவுகளாம்.

ஞானத்தால் கலையகன்றோரை விஞ்ஞானகலரென்றும் எல்லாக்கலையுங் கூடினோரை சகலரென்றும் உண்மை நூல்கள் கூறுகின்றன. அன்றியும்விஞ்ஞானகலர்: தீர்ந்ததுகளோர், தீராத்துகளோர், அபக்குவர், பகருவர் என நால்வகைப்படுவர். பிரளயாகலர்: அபக்குவர், அபரமுத்தர், பரமுத்தர் என மூவகைப்படுவர். சகலர்: பக்குவர், மந்தபக்குவர், அபக்குவர் என மூவகைப்படுவர். விஞ்ஞானகலருக்கும் பிரளயாகலருக்கும் மலபரிபாகத்தில் சத்திநிபாதமுண்டாம். விஞ்ஞானகலருக்கு இருவினையொப்பு இல்லை. பிரளயாகலருக்கு மப்படியேயாம். ஏனெனில் மாயாபோக மின்மையால் கன்மசாமிய மில்லையாம்.

இனி முன்கூறிப்போந்த நால்வகைச் சத்திநி பாதங்களின் பிரிவுகளையும் அவைகள் ஆன்மாக்களினிடத்துப் பதியுந் தன்மையுங் கூறுவாம். ஒரு மலத்தையுடைய விஞ்ஞானகலருக்கு தீவிரதர மந்ததரம், தீவிரதர மந்தம், தீவிரதர தீவிரம், தீவிரதர தீவிரதரம் என்னும் நால்வகைச் சத்திநிபாதங்களுள்ளன. இனி இருமலத்தாராகிய பிரளயாகலருக்கு முன்னைய நாலுடன் தீவிர மந்ததரம், தீவிரமந்தம், தீவிர தீவிரம், தீவிர தீவிரதரம் என்னும் வேறு நான்குஞ்சேர்ந்து எட்டாம். மும்மலத்தாராகிய சகலருக்கு முன்னைய எட்டுடன் மந்தசர மந்ததரம், மந்ததர மந்தம், மந்ததர மந்த தீவிரம், மந்ததர தீவிரம், மந்த மந்ததர தீவிரம், மந்த மந்ததீவிரம், மந்த



தீவிரம், மந்த தீவிரதரம் என்னும் எட்டுஞ் சேர்ந்து பதினாறு பேதயாம். அதுபற்றி இறப்பில் தவமும் சோபான முறையாய் பதினாறு பேதங்களாய் வைத்தெண்ணப் பெறும்.

(1) சரியையிற் சரியை—இஷ்டதேவதைகள் முதலியோரை நினைத்து மந்திரத்தால் செபித்தல்.

(2) சரியையிற் கிரியை—திருவலகிடல், இண்டைமாலை சாத்தல், தொண்டர்க்கடிமை செய்தல் முதலியனவாம்.

(3) சரியையில்யோகம்—சதாசிவ நாயனாரை பதுமராக வொளிபோல் இருதயத்தில் தியானித்தல்.

(4) சரியையில் ஞானம்—அத்தியானபாவனையின் உறைப்பானோ ரனுபவ வுணர்வு நிகழ்தல்.

(5) கிரியையிற் சரியை—சிவபூசைக்கு வேண்டும் உபகரணங்க ளெல்லாஞ் செய்து கோடல்.

(6) கிரியையிற்கிரியை—சூரியபூசை முதல் சண்டேசர பூஜை வரை செய்து முடித்து ஒடுக்கிச் செபித்தல்.

(7) கிரியையில்யோகம்—அகத்தே பூசைஜெபம் தியானம் மூன்றற்கு மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியாகம்.

(8) கிரியையில் ஞானம்—இவ்வந்தரியாக வுறைப்பின் கண்ணிகழு மோரனுபவ வுணர்வு.

(9) யோகத்திற் சரியை—இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்னும் நான்கும்.

(10) யோகத்திற் கிரியை—பிரத்தியாகார முந்தாரணையும்.

(11) யோகத்தில்யோகம்—தியானம்.

(12) யோகத்தில் ஞானம்—சமாதி.

(13) ஞானத்திற் சரியை—கேட்டித்து நிட்டைகலையா திருத்தல்.

(14) ஞானத்திற் கிரியை—ஞான பூஜா விதிப்படி செய்தல்.

(15) ஞானத்தில் யோகம்—முத்தி பஞ்சாக்ஷரத்தை உச்சரிப்பது.

(16) ஞானத்தில் ஞானம்—முப்பொருளுண்மை யுணர்ந்து பேரானந்தத் துள்ளமிழ்ந்தி நிற்றல்.

இனி விஞ்ஞானகலர்க்குரிய தீவிரதர மந்ததர முதல் சத்திநிபாதம் நாலில் மலபாகமும், அதமபக்குவம், மத்திமபக்குவம், உத்தமபக்குவம், உத்தமோத்தமபக்குவம் என நான்கு வகையாம்.

சிவபிரான் நமக்கு மேலென்றுணர்வது அதமபக்குவம். சிவன்போல வடிவு பெறுதல் மத்திமபக்குவம். நீங்காச் சேவை பண்ணுதல் உத்தம பக்குவம். அவனாயிருப்பது உத்தமோத்தமபக்குவம். பிரளயாகலருக்கு கன்மபாகமும் மலபாகமும் நாலாம். அது கீழ்ப் பிருதுவியப்புக்களில் உருத்

திராய சிவனுளுண்டாய தென்னும் நினைவுவருதல். மேலே அக்கினிவாயு ஆகாசங்களில் உருத்திரராய சிவச்செயலாய்த் தங்களைப் பாவித்திருத்தல். தங்களுடலுங் கரணமும் சிவனதாகக் கொள்ளுதல் போதமறந்து சீகண் டராகியபராம் அவதரமாம் புகழை யுடைத்தாதல்.

இனிச்சகலருக்குரிய எட்டில். (1) அரம்பைத்தண்டிலக்கினிபற்றினாற் போல் தவஞ்செய்வாரைக் கண்டு தவஞ்செய்து இடையிலே விடுவது மந்ததர மந்ததரம் (2) நீரில் நெருப்புப்போலச் செய்யும் சரியை மெய்யெனக் கொள்வது மந்ததர மந்தம். இவை யிரண்டுஞ் சரியை. (3) பச்சைமரத்தி லக்கினி பற்றுவதுபோல கிரியை நினைவுபற்றி அருமை கண்டுவிடல் மந்ததர மந்ததீவிரம் (4) நனைந்தவிறகி லக்கினிபோல பற்றவரிதாயப் பற்றுதல் விடாதாகை மந்ததர தீவிரம். இவை யிரண்டுங் கிரியை. (5) உலர்ந்த விறகில் அக்கினிபோல் பற்றினது விடாமற் பிடித்தல் மந்த மந்ததரதீவிரம் (6) கரியிலக்கினிபோல் காட்டின யோகம் ஞானம் பற்றல் மந்த மந்ததீவிரம். இவையிரண்டும் யோகம். (7) செப்புப் பொடியில் அக்கினிபற்றின பொருளை பற்று விடாமற் பிடிப்பதுபோல ஞானத்தைப் பற்றல் மந்ததீவிரம் (8) பொற்சோதியாகிய சுவர்ணத்தில் அக்கினி கடுகப்பற்றி உருகிக் கலப்பதுபோல ஞானத்திலழுந்தல் மந்ததீவிரதரம். இவையிரண்டும் ஞானமாம். இவையுடையோரை தீக்ஷிக்கு முறைமையும சட்சுதீக்ஷை, பரிசதீக்ஷை, வாசகதீக்ஷை, மானததீக்ஷை, சாத்திரதீக்ஷை, யோகதீக்ஷை என்னும் ஆறும், இவையங்கமாயுள்ள அவுத்திரிதீக்ஷையும், சமையம், விசேஷம், நிருவாணம், ஞானம் எனப்பலவகைப்படும். அவைகளை ஈண்டு விளக்கி விரித்திலம்.

அனைத்துயிர்க்கு முயிராகி நின்றே யென்று
மாறுமு தத்துவத்துக்க தீதனாகி
நினைப்பரிதாயுள்ள சிவன் கருணையாலே
நிலைகிளர் சற்குருவாம் நிமலன் றேகந்
தனைப் பொருந்தியவன்றனேயாகி நின்று
சத்திநிபாதத் துள்ளோர் தங்கள் பாச
வினைத்தொகுதி யொழிந்திடவே நோக்கித் தீண்டி
விளம்பிய வுத்திரியாதியா லளிப்பன் வீடே.

என்று கூறிய செய்யுளாலு மறிக.

சிவனுக்குஞ் சத்திக்குஞ் செய்த புண்ணிய பாவங்கள் முற்கூறிய கலைகளினிடத்து மருவி நிற்பனவாம். மந்ததர சத்திநிபாதர்க்கு ஆசான் நிவிர்த்தி பிரதிட்டை என்னும் கலைகளிலுள்ள வினைத்தொகுதிகளை மாய்த்து பிரகிருதிக்கு மேலுள்ள புவனங்களில் வைப்பன். மந்த சத்திநிபாதர்க்கு வித்தியாகலையிலுள்ள வினைகளையழித்து சுத்தவித்தையில்வைப்பன். தீவிர



சத்திநிபாதர்க்கு சாந்திகலையிலுள்ள பாசங்களை நீக்கி சிவசமுத்தி யென்னும் பதமுத்தி யளிப்பன். இவர்களுக்குப் பரமுத்தி பிரளய காலத்திலளிப்பன். தீவிரதரமாம் சத்திநிபாதம் பதியில் யாதொரு பற்று மிலராகி சத்தியோ நிருவாணத்திற்குரியராவார். அதாவது உடனே பரமுத்தி எய்துவர். சந்தான குரவரிலொருவராகிய உமாபதிச் சிவாச்சாரியரால், பெற்றான் சாம்பானுக்கும் முள்ளிச் செட்டிக்கும் இத்தீக்கை செய்யப்பெற்ற உண்மைச் சரிதங் கேட்டுணர்க.

சத்தியோ நிருவாணஞ் சஞ்சிதமாம் வினைக
டன்னுடனே பிராரத்த வினைகடனு வாதி
யத்தனையு மொழித்தருளி யகண்டாகாரதையா
யளவிறந்த வானந்தமாகச் சுத்த
சித்துருவாய் நித்தமாய்ச் சிறிதாய்ப் பெரிதாய்த்
திகழொளியாய் மனத்தாற் சிந்திக்கொண்ணா
நித்தனுடன் வேறறவே நிறுத்த லென்றே
நிகழ்த்தியிடுஞ் சித்தாந்த முத்தியிந்த நிலையே.

ஆகலால் அன்பர்களே! சரியையாதி சிவபுண்ணியங்களை இயற்றி இருவினை யொப்பெய்தி மலபரிபாக மடைந்து இறைவனுடைய சத்தி பதிதற்குரியராமாறு சற்குரு பாதாரவிந்தங்களை வணங்குவாம்.

### திருவாசகம்.

பித்தனென்றெனை யுலகவர் பகர்வதோர் காரணமிதுகேளீ
ரொத்துச் சென்றுதன் திருவருட் கூடிடுமுபாயம தறியாமே
செத்துப் போயருநரகிடை வீழ்வதற் கொருப்படுகின்றேனை
யத்தனாண்டு தன்னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

பிணக்கிலாத பெருந்துறைப்பெரு
மானுன் னாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாததோ ரின்பமேவருந்
துன்பமே துடைத் தெம்பிரா
னுணக்கிலாததோர் வித்துமேல்விளை
யாமலென்வினை யொத்தபின்
கணக்கிலாத் திருக்கோலநீ வந்து
காட்டினாய்க் கழுக்குன்றிலே.

### வேறு.

தரைமுதலா மண்டமிந்திர சாலமாய்த் தோன்றிடவும்
பிரமன் முதலோர் வாழ்வு பேய்த்தேரென் றெண்ணிடவும்
நிரதிசயானந்த சிவ நித்தியங்கா ணென்றிடவும்
பரகுருவே சத்திபதிப்பாயடி யேற்கே.

கரமிரண்டினுற் குருவின் கால் தலைமேல் வைத்திடவும
அரவென்றலறிடவு மாடிடவும் பாடிடவும்
நிரதிசயாநந்த நீச்சி லழுந்திடவும்
பரசிவ சத்தி பதிப்பாயடி யேற்கே.
ஆகஞ்சீ சீயென்றரு வருத்து நின்றிடவும்
மோகமலமாயை கன்ம மோசித்திருந்திடவும்
ஏகவருளுள் வந்திருந்திடவு மன்னை தையல்
பாகனே சத்தி பதிப்பாயடி யேற்கே.

[1910ஹு இராமநாதபுரத்தில் கூடிய சைவசித்தாந்த மகாசமாஜக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது. ப-ர்.]

S. பாலவண்ண முதலியார்.

---

## பஞ்சகோசங்கள்.*

சிவநேசச் செல்வர்களே!

"மருவானந்தம் விஞ்ஞான மனேபிராணன் அன்னமய
முருவாந் தன்மையுண்டாய் முன் ஒன்றுக்கொன்று சூக்குமமாய்
வருமாம் அன்னமயம்பற்றி மாயை முதற்காரணமாகும்
அருவாயான்மா ஐங்கோசத்தார்ப்புண்டு அவற்றினகம்புறமாம்"

என்னும் சிவஞான சித்தித் திருவாக்கை ஆதாரமாகக்கொண்டு "பஞ்சகோசங்கள்" என்னும் விஷயத்தை எம் சிற்றறிவிற்கெட்டியவாறு சிறிது கூறத்துணிந்தாம், "பஞ்சகோசங்கள்" என்பதற்கு "ஐந்து சரீரங்கள்" என்று பொருளாம். நம்முடைய ஆன்மா வசிப்பதற்குச் சாதகமாக ஐந்து சரீரங்கள் கடவுளால் அமைக்கப் பட்டிருக்கின்றன. அவைகள் அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம், என்பவைகளாம். அவைகள் முறையே தூலசரீரம், சூக்குமசரீரம், குணசரீரம், கஞ்சுகசரீரம், காரண சரீரம் எனவும்படும். இந்த ஐந்து சரீரங்களைப் பற்றியும், இவைகளுக்கும் ஆன்மாவுக்கு முள்ள சம்பந்தா சம்பந்தங்களைப் பற்றியும் சிறிது கூறவேண்டு மென்பதே இற்றை உபந்நியாசத்தின் முக்கிய நோக்கமாகும்.

---

* 1910ஹு இராமநாதபுரத்தில் கூடிய சைவசித்தாந்த மகாசமாஜக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது. ப-ர்



### அன்னமயகோசம்.

அன்னமயகோசம், என்பதைப்பற்றி முதலில் விசாரிப்பாம். எலும்பு, தோல், நரம்பு, இரத்தம், சுக்கிலம், மூளை, மச்சை, என்னும் சத்த தாதுக்களால் கட்டப்பட்டு நம்முடைய கட்புலனுக்குத் தோன்றுவதாகிய நமது உடம்பே அன்னமய கோசம் அல்லது தூலசரீரம் என்று சொல்லப்பெறும். அன்னம் முதலிய உணவுப் பொருள்களினாலேயே நமது உடம்பு போஷிக்கப்பட்டு வளர்ந்து வருவதால் அது அன்னமய கோசமென்றும், மற்ற நான்கு சரீரங்களைப்போலன்றி நம்முடைய கண்ணுக்கு எளிதில் புலப்படக் கூடியதும் நம்முடைய ஸ்பரிச உணர்ச்சியால் அறியப்படக் கூடியதுமான ஸ்தூல உருவத்தோடு கூடியிருத்தலால் தூலசரீர மென்றும், நமது தேகம் பெயர் பெறுவதாயிற்று. ஜீவான்மா அநாதியிலேயே "ஆணவமலம்" என்று சொல்லப்படும் அறியாமை வயப்பட்டுத் தனது இயற்கை யறிவை இழந்திருத்தலால் அவ்வறிவை எழுப்பி விடுவதற்கு இந்தத் தூலசரீரம் ஒரு சாதகமாயிருக்கின்றது. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து ஞானேந்திரியங்களும்; சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐந்து தன் மாத்திரைகளும்; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தமென்னும் ஐந்து கன்மேந்திரியங்களும்; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு அந்தக்கரணங்களும்; பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்னும் பத்துவாயுக்களும்; வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் என்னும் ஐந்து கன்மங்களும்; புருடனும் ஆகிய முப்பத்தைந்து கருவிகளும் செவ்வையாய் அமையப்பெற்ற தூலதேகத்தில் ஆன்மாவின் அறிவு விளக்கப் பெறு[illegible]மெனப்படும். ஆனால் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் ஆக்கப்பட்டிருக்கும் இந்த [illegible]சரீரம் இப்பொழுது நமது கண்ணுக்குப் [illegible] மொத்த [illegible]ரமான உருவத்தையுடைய[illegible] கண்ணுக்குப் புலப்படாத பரமாணுக்கள் ஒன்று சேர்ந்தே இப்

படிப்பட்ட உருவம் உண்டாயிருத்தல் வேண்டு மென்பது அணுகி ஆராயும் எல்லோருக்கும் ஒப்ப முடிந்த உண்மைப் பொருளாம். இந்த ஒவ்வொரு அணுக்களும் பிராண சக்தியோடு கூடியவைகளாயிருக்கின்றன என்று இப்போது மேனாட்டு சாஸ்திரிகள் நுட்ப ஆராய்ச்சி செய்து முடிவு செய்திருக்கிறார்கள். இதற்கு ஒரு சிறு உதாரணம் சொல்லலாம். நாம் ஆகாரத்தை உட்கொள்ளுகிறோமே தவிர, அதற்குப் பிறகு என்ன நடக்கிறது என்பதை அறிவதில்லை. அதன் பிறகு நடக்கிற வேலை நமது மனோவுணர்ச்சிக்குப் புலப்படுவதில்லை. ஆனாலும் சரீரத்துக்குள் அமைந்திருக்கும் கருவிகள் தாமே வேலை செய்ய ஆரம்பித்து ஆகாரத்தில் சரீரபோஷணைக்கு அவசியமானவற்றைப் பிரித்துத்தனியாக இரத்தத்தோடு சேர்த்தும், அவசியமில்லாதவற்றைக் கழித்தும் வருகின்றன. நம்முடைய சரீரத்தில் ஒரு காயம்பட்டால் நாம் (இங்கேநாம் என்றது ஆன்மாவினையும் அதனுடைய மனோ உணர்ச்சியையும்) வலியை மாத்திரம் உணருகிறோம். அப்படி உணருவதும் ஆன்ம உணர்ச்சி ஸ்தூல சரீரத்தில் பிரவர்த்தித் திருக்கும் போதுதான். ஆனால் காயம்பட்ட இடத்திலுள்ள பரமாணுக்கள் தாமே ஒன்று சேர முயற்சித்து நாளாவட்டத்தில் ஒன்று சேர்ந்து சரீரத்தில் காயம்படாதபாகம் எந்த நிலையில் இருக்கிறதோ அதே நிலைக்குக் காயம்பட்ட இடத்தையும் கொண்டு வந்து விடுகின்றன. அப்படி அடைந்ததைத்தான் "காயம் சொஸ்தமாகி விட்டது" "புண் ஆறிவிட்டது" என்று நாம் சொல்லுகிறோம். நம்முடைய ஆன்ம உணர்ச்சிக்குப் புலப்படாமலே சரீரத்துக்குள் இருக்கும் சில கருவிகள் வேலை செய்து உட்கொண்ட ஆகாரத்தைப் பிரித்து இரத்தத்தோடு கலக்கும்படிச் செய்கிறதென்னும் உண்மையும், நம்முடைய ஆன்ம உணர்ச்சிக்குப் புலப்படாமலே சரீரத்திலுள்ள காயம் அணுக்களின் கூட்டுறவினால் சொஸ்தமடைகிறதென்னும் உண்மையும் ஒவ்வொரு அணுக்களும் பிராண சக்தியுடையனவாயிருக்கின்றன என்பதை ருசுப்படுத்தப்போதிய உதாரணங்களாகும். இந்த அணுக்கள் தாமே இவ்விதம் இயங்குவதற்கு அவைகள் பிராண



சக்தியுடையனவா யிருக்கவேண்டு மென்றும், அவைகளுக்கு ஒருவித உணர்வும் இருக்கவேண்டியது அவசிய மென்றும் மேனாட்டு தேகதத்துவ சாஸ்திரிகள் அபிப்பிராயப்பட்டு அதை (Unconscious memory) என்று சொல்லுகிறார்கள்.

சரீரத்திலுள்ள அணுக்களே பிராண சக்தி உடையனவாயிருந்தால் ஆன்மா பிரிந்தபின், அதாவது ஒருவன் மரணமடைந்தபின் அச்சரீரம் இயங்காததற்குக் காரணமென்ன என்று சிலருக்குச் சந்தேகம் நிகழலாம். இங்கே நுட்பமாகக் கவனிக்க வேண்டிய ஒரு விஷயமிருக்கிறது. அதாவது ஆன்மா பிரிந்து விட்டபடியால் சரீரம் இயங்கவில்லையா? அல்லது சரீரம் இயங்காமற்போனதால் அச்சரீரத்தை விட்டு ஆன்மா பிரிந்து விட்டதா? என்பதுதான். இதை விளக்குவதற்கு ஒரு உதாரணம் சொல்லலாம். நம்முடைய சரீரத்தை ஒரு மாளிகை யென்றும், ஆன்மாவை அம்மாளிகையில் வசிக்கும் ஒரு தனவான் என்றும் வைத்துக்கொள்ளுவோம். மாளிகையானது சுத்தமாயும் பலமாயும் இருக்கிற வரையில் அந்த தனவான் அதில் வசித்து வருகிறான். நாளா வட்டத்தில் வெயிலினால் காய்ந்தும் மழையினால் நனைந்தும் மாளிகையினுடைய உறுதிகெட்டுப்போய் அது விழுந்துவிடக் கூடிய தருணத்திலிருந்தால் அந்தத்தனவான் அம்மாளிகையை விடுத்து வேறொரு நல்ல மாளிகைக்குக் குடிபோகிறான். அதேமாதிரி நம்முடைய சரீரத்திலுள்ள கருவிகளெல்லாம் நிலைகுலையாமல் சரியான அமைதியுடன் இருக்கும் வரையில் ஆன்மா இந்த சரீரத்தில் வசிக்கிறது. சரீரத்தின் அணுக்கள் ஒழுங்கு தவறி தத்தம் வேலைகளைச்செய்யாமல் மாறுபட்ட நிலைமையை அடைந்தால் இனி இந்தச்சரீரம் பயன்படாதெனக் கருதி ஆன்மா வேறொரு நல்ல சரீரத்தை நாடி இதை விடுத்துச் செல்லுகின்றது. ஆகவே சரீரத்தின் ஒழுங்கான இயக்கம் முதலில் கெட்டுப் போகவே ஆன்மா சரீரத்தை விட்டுப் போய்விடுகிறதென்பதும், ஆன்மா போய்விட்டபடியால் சரீரத்தின் ஒழுங்கான இயக்கம் நடைபெறவில்லை என்பது பொருந்தாதென்பதும் வெளிப்படையன்றோ? இப்படி ஆன்மா சரீரத்தை விட்டுப்

பிரிந்து போவதைத்தான் "மரணம்" என்று சொல்லுகிறோம். "மரணம்" என்பது சரீரத்தினுடைய ஒருவகையான மாறுதலே யன்றி வேறல்ல. ஒருபொருளினுடைய அழிவு வேறொரு பொருளினுடைய சிருஷ்டிக்குக் காரணமாயிருப்பதால் அந்தப் பொருள் அழிந்து விட்டதென்று சொல்லுவதற்கு இடமில்லை; நிலைமாறுதல் என்று தான் சொல்ல முடியும். மண்ணினுடைய நிலைமாறியே குடமாகிறதென்பதும், குடத்தினுடைய இலக்கணம் மாறினால் அது வேறொரு பாண்டமாக ஆக்கப்படலாமென்பதும் யாவரும் அறிந்தவிஷயமன்றோ? அதுபோலவேதான் நமது சரீரமும். மனிதனுடைய இறந்த சரீரத்தைக் காற்றுள்ள ஒருவெளியில் போட்டுவைத்திருந்தால் காற்றும், நீரும், சூரிய உஷ்ணமும், அந்தச் சரீரத்தில் தாக்கத்தாக்க அந்த சரீரம் பலவிதமான மாறுதலையடைகின்றது. சரீரத்தின் ஒருபாகம் கரிவாயு, அமோனியாக், நீராவி முதலியவைகளாக மாறி ஆகாயத்தில் பாவி பின்பு மழை, பெய்யும்போது மழையுடன் கலந்து பூமிக்கு வருகிறது. இப்படி வந்தவைகள் மரம் செடி முதலிய தாவர வஸ்துக்களுக்கு உணவாகி அவைகளை வளரும்படிச் செய்கின்றன. இப்படியே ஒருபாகம் கனபதார்த்தமாகவே பூமியில்சேர்ந்து பயன்படுகிறது; மற்றொருபாகம் திரவபதார்த்தமாகவே சேர்ந்து பயன்படுகிறது. ஆகவே சரீரம் இறந்துபோனால் அது அடியோடு அழிந்து ஒன்றுமில்லாத வெறும் சூனியமாய் விடுகிறதென்று நினைப்பது தவறு. அது ஒரு நிலையைவிட்டு வேறொரு நிலைக்குமாறிப் பயன்படுகிறதென்பதே உண்மை. நம்முடைய சரீரத்திலுள்ள அணுக்கள் பிராணசக்தியோடு கூடியவைகளாய் இருக்கின்றன என்பதற்கு இறந்துபோன சரீரமே போதுமான அத்தாட்சியாகும். ஏனெனில் ஆன்மா பிரிந்து போனபிறகும் அது பலவிதமான மாறுதலுக்கு உட்படுகிறதினாலென்க. காற்று, வெயில், மழை இவைகள் அச்சரீரத்தின்மீது தாக்குவதால் அது மாறுதலடைகிறதென்று முன்னமே கூறியிருக்கிறபடியால் சரீரம் மாறுதலடைவதற்கு அவைகளே காரணம், பிராணசக்தி அவசியமல்லவென்று கூறக்கூடாதோவெனின்; கூடாதாம். ஏனெனில் அம்



மூன்றும் ஒரு கருங்கற் பாறையில் இடைவிடாது தாக்கினபோதிலும் அப்பாறை மாறுதலடையாமல் ஒரேநிலையில் இருக்கக் காண்கின்றோமாதலால் அம்மூன்றனையுந் தவிர வேறொன்றும் அவசியம் வேண்டியிருக்கிறதென்பதும், அதுவே பிராணசக்தியாமென்பதும், இனிதுபுலப்படும். ஆகவே நம்முடைய சரீரத்திலுள்ள ஒவ்வொரு அணுக்களும் பிராணனோடு கூடியவைகளாயிருக்கின்றனவென்பது வெள்ளிடைமலைபோல் விளங்கிக்கிடந்ததொன்றாம்.

இங்கே கவனிக்கப்படவேண்டிய இன்னொரு முக்கியமான விஷயம் இருக்கின்றது. அதாவது 'பிராணன்" என்பதும் "ஆன்மா அல்லது ஜீவன்" என்பதும் ஒன்றல்ல, இரண்டும் வெவ்வேறு இலக்கணங்களுடையன வென்பதுதான். பிராணன் என்பது ஒருவிதமான சக்தி. உஷ்ணம், ஒளி, ஆகருஷணம், மின்சாரம் போன்ற மற்ற சக்திகளைப் போலவே அதற்கு ஒரு ஆரம்பமும் முடிவும் உண்டு. அந்த சக்திகள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குப் பிரயோகமாவது போலவே பிராணசக்தியும் பிரயோகமாகிறது. ஆனால் ஆன்மாவோ என்றும் அழியாததும் ஆதியந்த மற்றதுமான சித்துப் பொருள். ஆகவே பலவிதமான மாறுதலுக்கு உள்ளாகிற வெறும் சரீரம் அச்சரீரத்தை இயக்கிப் பலவிதமான மாறுதலுக்கு உட்படுத்துகிற பிராண சக்தியைவிடத் தாழ்ந்ததென்பதும், மின்சாரம் ஆகருஷணம் போன்று ஆரம்பத்தையும் முடிவையுமுடையதாயிருக்கும் பிராணசக்தி என்றும் அழிவில்லாத ஆன்மாவைவிடத் தாழ்ந்ததென்பதும், ஆகலால் ஆன்மாவே மற்ற இரண்டையும்விடச் சிறந்ததென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறதன்றோ? பிராண சக்தியை மேனாட்டார் (Life) என்றும், ஆன்மாவை (Soul) என்றும் வழங்குவர்.

இனி, எல்லாவற்றிலும் முக்கியமான ஆன்மாவினுடைய அறிவு விளங்கப் பெறுதற்குச் சாதகமாக இந்தத் தூலசரீரம் ஏற்பட்டது. இந்தத் தூலசரீரத்தில் ஆன்ம அறிவு எவ்வளவு தூரம் விளங்குகிறதென்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். தூலசரீரம் எலும்பு, நரம்புபோன்ற கடிப்பான கனபதார்த்தங்

களால் ஆக்கப்பட்டிருக்கிறதென்று முன்னமேயே கூறியுள்ளோம். கனத்தபொருள்களின் சேர்க்கை யாலான எந்த வஸ்துவும் மென்மையான ஆகாயத்திலும் வாயுமண்டலங்களிலும் இயங்கும் இயல்புடையதல்ல. மென்மையான பஞ்சு ஆகாயவெளியில் பறப்பதும், கடினமான செங்கல் ஆகாய வெளியில் பறக்காமல் கீழேவிழுந்து விடுவதுமே இவ்வுண்மையை விளக்குதற்கு உறுஞ்சான்றாம். மேனாட்டு பூதபௌதிக சாஸ்திரிகள் இவ்விஷயம் என்றும் மாறாத உண்மையானதொன்றாம் என்பதை அநேக காரணங்கள் காட்டி நிலைநிறுத்தி யிருக்கின்றார்கள். ஆகவே கடினமான தூலசரீரம் இயங்குதற்கும் உலாவுதற்கும் ஏற்றவிதமாய் மண்முதலிய கடின பதார்த்தங்களால் ஆக்கப்பட்டிருக்கும் இந்த மண்ணுலகம் நமக்கு வாய்ந்திருக்கிறது. நிற்க, கடினமான இந்தத் தூலதேகத்தில் ஆன்ம அறிவு இத்தூலதேகத்தின் அமைப்புக்கு ஏற்கவே விளங்கப்பெறும். சூரியனுடைய வெளிச்சம் ஓரே தன்மையா யிருந்தபோதிலும் நான்குபுறமும் கற்சுவரினால் அமைக்கப்பட்டு சிறு சாளரத்தையுடைய ஒரு அறைக்குள் அவ்வெளிச்சம் சிறிது தோன்றுவதைப்போலவும், நான்குபுறமும் சுத்தமான பளிங்குச் சுவரினால் கட்டப்பட்டிருக்கும் ஒரு அறையில் மிகுந்து தோன்றுவதைப் போலவும் நம்முடைய ஆன்ம அறிவு தூலதேகத்தில் சிறிதே விளங்கப்பெற்று மற்ற சரீரங்களில் மிகுந்து விளங்கு மியல்புடையதாம். அதாவது தூலதேகத்தில் ஆன்ம அறிவு ஸ்தூலமாகவே விளங்கும். மேலும், இந்தத் தூலசரீரம் நாம் விரும்புகிறபடி யெல்லாம் இயங்கவல்லதன்று. ஏனெனில் இத்தூலசரீரத்தினுடைய செய்கைகள் இடத்தினாலும் காலத்தினாலும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இராமநாதபுரத்தில் இச்சமயத்தில் இருக்கிற ஒருவனுடைய சரீரம் இதே சமயத்தில் சென்னையிலாவது மற்றவேறு இடங்களிலாவது இருத்தல் சாத்தியமல்ல. ஆகவே நம்முடைய சரீரம் இடத்தினால் வரையறைப்பட்டிருக்கின்றது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஒருகாலத்தில் ஒருவிஷயத்தைக் கவனித்துக் கொண்டிருக்கும் ஒருவன் அதே காலத்தில் வேறொரு விஷயத்தைக் கவனிக்கச்



சக்தியற்றவனா யிருக்கிறான். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் கூறுவாம். ஒருவன் கடற்கரையோரமாக நின்று இயற்கை அற்புதங்களை ஊன்றி நோக்கிக் கொண்டிருக்கும்போது காதிருந்தும் அவன் ஒன்றையுங் கேளாதவனாயும், இனிய சங்கீத ஓசையைக் கேட்டுக் கொண்டிருக்கும்போது கண்ணிருந்தும் காணாதவனாயுமிருப்பதை நாம் அனுபவத்தில் காண்கின்றோமல்லவா? ஏககாலத்தில் இரண்டு விஷயங்களைக் கவனிக்கும் ஆற்றல், ஸ்தூலசரீரத்தில் அமைந்துள்ள கருவிகளைக் கொண்டு ஆன்ம அறிவு விளங்கும் அச்சமயத்தில், ஆன்மாவுக்கு இல்லை யென்பதற்குமேலே சொன்னதே போதுமான உதாரணமாகும். ஆகவே ஸ்தூலசரீரம் காலத்தினாலும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் இந்தத் தூலசரீரத்துக்கும் ஆன்மாவுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. ஆன்ம அறிவு விரிந்து பிரகாசித்து இத்தூல சரீரத்திலும் நுட்பமான சரீரங்களில் அவ்வறிவு பிரவர்த்தித்து வேலைசெய்ய ஆரம்பிக்கிற வரையில் இந்த சம்பந்தம் இருந்துகொண்டிருக்கும். ஏனெனில் ஆன்மா எப்பொழுதும் ஒருபொருளைச் சார்ந்து நிற்குமே தவிரத் தனித்து நிற்காது. தூலசரீரத்தினுஞ் சிறந்த சரீரங்களில் வசிக்கும்படியான நிலைமையை ஆன்மா அடைகிறவரையில் தூலசரீரத்தில் வசிக்கும். ஆனால் முதிர்ந்த அறிவும், மனோசக்தியும் வாய்ந்திருப்பவர்கள் ஸ்தூல சரீரத்திலிருந்து கொண்டே அநேக அற்புதங்களைச் செய்யவில்லையா என்று சிலர் கேட்கலாம், அவர்கள் செய்கிறார்களென்பது வாஸ்தவமேயாயினும் ஸ்தூலசரீரம் அவர்களுக்குப் பெருங்கட்டு யிருக்கிறதே தவிர அவர்களுக்கு உதவியாயிருப்பவை சூக்கும சரீரங்களே; இனி, சூக்கும சரீரத்தைப்பற்றிச் சிறிது சொல்லுவோம்.

## பிராணமயகோசம்.

தூல சரீரத்துக்கு அடுத்த படியாக உள்ளது சூக்குமசரீரம். மற்ற மூன்று சரீரங்களும் இதைவிட சூக்குமமாக இருந்தபோதிலும் தூல சரீரத்தை நோக்க இது சூக்குமமாக இருக்கிறபடியே சூக்கும சரீரமென இது வழங்கப்படுகிறது. இந்த சூக்கும சரீரமும் அணுக்களின் கூட்டுறவினால்

ஆக்கப்பட்டதுதான். ஆனால் ஸ்தூல சரீரத்தின் அணுக்களிலும் நுண்ணியவான அணுக்களால் இச்சரீரம் அமைக்கப்பட்டிருத்தலால் இந்தச்சரீரம் இந்திரிய உணர்ச்சிக்குப் புலப்படாததாகும். இதனுடைய இயல்பு கனபதார்த்தம், திரவபதார்த்தம், வாயுபதார்த்தம் (Solid, Liquid, Gas) என்று நாம் சாதாரணமாய்ச் சொல்லுகிற மூன்றனுள்ளும் அடங்காமல் நுட்பமான ஒரு தனித்த இலக்ஷணத்தையுடையதாகும். இந்த சரீரத்தை மேற்றோட்டார் (Astral Body) என்று கூறுவர். ஹிப்னாடிசம் என்று சொல்லப்படும் மோகநித்திரையும், கிளெர்வாயன்ஸ் என்று சொல்லப்படும் ஆத்மக்காட்சியும், இன்னும் இவைபோன்றவைகளும் இந்த சூக்ஷும சரீரத்தில் ஆன்ம அறிவு விளங்கும்போது சித்தியாகக்கூடியனவாம். இந்த சூக்ஷும சரீரத்தில் ஆன்மாவினுடைய அறிவுவிளங்கப்பெறும் அவஸ்தை சொப்பனம் என்று சொல்லப்படும். சூக்ஷும சரீரம் பெரும்பாலும் ஸ்தூலசரீரத்தையே ஒத்திருக்கும். இவ்விரண்டு சரீரங்களுக்கும் மிக நெருங்கிய சம்பந்தமுண்டு. சூக்ஷுமசரீரம் ஸ்தூலசரீரத்தோடு நெருங்கிய சம்பந்த முற்றும் ஸ்தூலசரீரத்தின் தோற்றத்தையே பெரும்பாலும் ஒத்துமிருக்கிறபடியால் மேனாட்டார் இதை (Double) என்று கூறுகிறார்கள். இதனால் இவ்விரண்டு சரீரங்களும் எல்லாவகையிலும் ஒத்திருக்கின்றன என்று கருதக்கூடாது. வடிவத்தில் மாத்திரந்தான் ஒத்திருக்கும். ஸ்தூலசரீரம் முன்னமே கூறியபடி தடிப்பான அணுக்களால் ஆக்கப்பட்டிருத்தலால் கனமிகவுடைத்தாய் இந்த பூமிப்பகுதியில் மாத்திரம் சஞ்சரிக்கும் இயல்புடையதாயிருக்க, சூக்ஷும சரீரம் இலேசான நுண்ணிய அணுக்களால் ஆக்கப்பட்டிருத்தலால் கனக்குறைவால் அந்தரத்தில் மாத்திரம் இயங்கவல்லதாயிருக்கிறது. அநேகர் மோகினியைக் கண்டதாகவும், அநேகருக்கு மோகினி பிடித்திருப்பதாகவும் நாம் சொல்லக்கேட்டிருக்கிறோமல்லவா? மோகினிக்குக் கால் தரையில் படுகிறதில்லையென்றும் பலர் சொல்லுகிறார்கள். ஆன்மா சூக்ஷும சரீரத்தில் இருந்துகொண்டு உலாவுவதைத்தான் நாம் மோகினி என்கின்றோம். பேய், பிசாசு, என்பவைகள் தீயதிரியான சூக்ஷும சரீரத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் ஆத்மாக்களே தவிர வேறல்ல. சூக்ஷும சரீரம் இலேசான பொருளாதலாலும், இலேசான பொருள் அந்தரத்தில் இயங்கும் ஆற்றலுடையதென்பது சாஸ்திரமுடிபான உண்மையாதலாலும் மோகினி முதலியவைகளுக்குக் கால் தரையில் பாவுகிறதில்லை என்று நம்மவர்கள் சொல்லுவது முற்றும் உண்மையேயாம். இந்த சூக்ஷும சரீரத்தின் நிறம் வெண்மையாகவாவது கறுப்பாகவாவது இருக்கும் ஆன்மாக்களின் பரிசுத்தத்தைப் பொறுத்ததாக இந்த நிறவேறுபாடுகளிருக்கின்றன. நல்ல செய்கையும், பரிசுத்தமான சிந்தனையுமுடைய ஆன்மா சூக்ஷும சரீரத்தில் வசிக்கும்போது அச்சரீரம் மிகவும் வெண்மையாகத்



தோன்றும். "கிறிஸ்தவர்களால் ஏன்ஜல் (Angel) என்று சொல்லப்படும் தேவதூதனுடைய உருவம் படத்தில் வரையப்பட்டிருப்பதை அநேகர் பார்த்திருக்கலாம். இந்த உருவம் வெண்மை நிறமுடையதாயும் இருபுறங்களிலும் சிறகுகள் உடையதாயும் எழுதப்பட்டிருக்கிறது, எதைக்குறிப்பிடுகின்றதென்றால், தேவதூதர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் பரிசுத்தமான ஆன்மாக்கள் என்பதையும், அவர்கள் வசிக்கும் சூக்ஷும சரீரம் தூய்மையான வெண்ணிறமுடையதென்பதையும், அப்படத்தின் வெண்மை நிறம் குறிப்பிடுகிறது. இருபுறங்களிலும் சிறகுகள் இருப்பது சூக்ஷும சரீரம் ஆகாயத்தில் இயங்கவல்லது என்பதைக் குறிப்பிடுகிறது." என்று (Louis Figuier) என்னும் பிரான்ஸுதேசத்து விற்பன்னர் ஒருவர் தாமெழுதியிருக்கும் (The day after death) என்னும் அருமையான நூலில் கூறுகின்றார். ரம்பை, ஊர்வசி, என்று சொல்லப்படும் தெய்வலோக ஸ்திரீகளுக்கு இறகுகள் வைத்து எழுதப்பட்டிருக்கும் படங்களை நாம் பார்த்திருக்கிறோம். இதுவும் மேற்சொன்ன உண்மையைத்தான் வலியுறுத்துகின்றது. தீய சிந்தனையும், தீயசெயலுமுடைய ஆன்மாவின் சூக்ஷும சரீரம் கரிய நிறமுடையதென்பதற்கு ஆவேசங்கள் கருநிறமுடன் உலாவுவதை இராவில்கண்டு அநேகர் பயந்தும், பயந்து உயிர் துறந்துமிருப்பதை நாம் அனுபவத்தில் பார்த்திருப்பதே சான்றாகும். சூக்ஷும சரீரம் நம்முடைய கட்புலனுக்கு மட்டும் புலப்படக்கூடியதே யன்றி ஸ்பரிச உணர்ச்சிக்கும் புலப்படாது. கையினால் அந்த சரீரத்தைப் பிடிக்கவாவது அல்லது தொட்டு ஸ்பரிசிக்கவாவது ஸ்தூலசரீரத்திலிருக்கும் நம்மால் முடியாது. மனிதர்களுக்கு ஸ்தூல சரீரத்தில் அபிமானம் மிகுந்திருப்பதால் அவ்வபிமானத்தை நிறைவேற்றி வைக்கும்சூக்ஷுமசரீரம், ஸ்தூலசரீரம் இறந்த பின்பும்கூட அதை விட்டுப்பிரிய மனமின்றி அதன் பக்கத்திலேயே வந்து உலாவிக்கொண்டிருக்கும். தற்கொலை செய்து கொண்டோ, அல்லது எதிர்பாராதவிதமாய் திடீரென அபாயம்நேரிட்டோ ஒருவன் இறந்துபோவானேயானால் அவனுடைய இறந்த சரீரம் கிடந்த இடத்தில் ஒருவரும் சிலகாலம் வரையில் போகக்கூடாதென்றும், அங்கே இரவு முழுவதும் விளக்கு ஏற்றிவைத்திருக்கவேண்டுமென்றும் சாதாரணமாய் நம்வீட்டு ஸ்திரீகள் சொல்லுவதைப் பலமுறையும் கேட்டிருக்கிறோம். ஏன் போகக்கூடாது என்று அவர்களைக் கேட்டால் அந்தப்பிணம் கிடந்த இடத்தில் கால் நிற்கிறது என்று சொல்லுகிறார்கள். கால் என்பதற்கு காற்று என்று பொருள். அதாவது ஆன்மாவுக்கு ஸ்தூல சரீரத்திலுள்ள அபிமானம் போகாமலிருந்தும் தற்செயலாய் அச்சரீரம் இறந்து பட்டதால் இறந்த பின்பும் அச்சரீரத்தை விட்டுப்பிரிய மனமில்லாமல் ஆன்மா சூக்ஷும சரீரத்தில் இருந்தபடியே, முன்பு இறந்துபோன ஸ்தூல சரீரம் கிடந்த இடத்

தில் வந்து உலாவிக்கொண்டிருக்கும். இப்படி ஆன்மா சூக்கும சரீரத்தோடுவந்து இயங்குவதைத்தான் ஆவி நிற்கிறது என்கிறார்கள்.

இறந்து போனவர்களுடைய கல்லறைகளின் மீதும், சமாதிகளின் மீதும் ஊதா நிறமானவெளிச்சமொன்று தோன்றுவதைக் கிளயர்வாயண்ட் அல்லது ஆத்துமக் காட்சிக்காரர்கள் காணக்கூடுமென்றும், இறந்துபோன சரீரத்தில் வசித்த ஆன்மா சூக்கும சரீரத்துடன் அவைகளின் மீது வந்து உலாவுவதே அப்படிக்காணப்படுகிறதென்றும், தியாஸபியார் கூறுகிறார்கள். ஒருவனுடைய ஆன்மா பிரிந்த இடத்திலும் இப்படிக் காணப்படுவதுண்டாம். நம்முடைய இந்துக்கள் இறந்த சரீரத்தைப் புதைப்பதைவிட தகனம் செய்துவிடுவது சிலாக்கியமென்று கருதுவதற்கு இங்கே ஒரு முக்கிய காரணமிருக்கிறது. (இறந்த சரீரத்தைப் புதைத்துவிட்டால் அச்சரீரத்தின் அணுக்கள் பிரிந்து தத்தம் நிலைமையை அடைவதற்கு நீண்டகாலம் செல்லும். அப்படிப் பிரிந்து செல்லுகிறவரையில் சூக்கும சரீரம் அவ்விடத்திலேயே சுற்றிக்கொண்டிருக்கும். அப்படியன்றி சரீரத்தைத் தீயிலிட்டுக் கொளுத்திவிட்டால் சரீரத்தின் பாகங்கள் பிரிந்து தத்தம் நிலையை விரைவில் அடைந்துவிடும். அதாவது பிருதிவி பூமியுடனும், அப்புநீருடனும், வாயு காற்றுடனும், தேயு நெருப்புடனும் சேர்ந்துவிடும். அதன் பிறகு சூக்கும சரீரத்துடன் ஆன்மா அந்த இடத்தில்வந்து உலாவ இடமிராது. இக்காரணம் பற்றியேதான் நம்மவர்கள் தகனத்தைச்சிறந்ததாகக் கொள்ளுகிறார்கள்.) இவ்வுண்மையை உணர்ந்து ஐரோப்பியர்களில் பலரும், அமெரிக்கர்களில் பலரும் இறந்த சரீரத்தைப் புதைப்பதைவிடத் தகனம் செய்வதே சிலாக்கியமென்று கொண்டு இப்போது அப்படியே செய்துவருகிறார்கள்.

ஸ்தூலசரீரத்தில் ஆன்ம அறிவு ஸ்தூலமாக விளங்கினதுபோலில்லாமல்இந்த சூக்குமசரீரத்தில் ஆன்ம அறிவு நன்றாயும்தெளிவாயும்விளங்கும். ஒருவன் கற்சுவரின் மூலமாய் மறுபுறத்திலிருக்கும் பொருளைப் பார்க்க முடியாவிட்டாலும் பளிங்குச்சுவர் மூலமாய் பார்க்கக்கூடுமன்றோ? கற்சுவருக்கு சமமாக ஆன்மாவுக்கு ஸ்தூலசரீரம் இருக்கிறதென்றும், பளிங்குச் சுவருக்கு சமமாக சூக்கும சரீரம் இருக்கிறதென்றும் நாம் கொள்ளவேண்டும். ஆன்மாவினுடைய சக்தியும் இந்த சரீரத்தில் மிகுந்து தோன்றும், ஸ்தூலசரீரம் கடிப்பாயும் கனமாயு மிருத்தலால் அச்சரீரம் இயங்குவதற்கு இன்றியமையாத கருவி கரணங்கள் பலவாயின. கருவி கரணங்கள் பலவாகவே ஆன்மசக்தி ஸ்தூலசரீரத்தில் பிரவர்த்தித்திருக்கும்போது அந்தப் பலகருவி கரணங்களின் வழியாயும் சென்று வியர்த்தமாகின்றன. ஒரு பெரிய ஆற்றிலிருந்து பல சிறு வாய்க்கால்களை வெட்டினால் ஆற்றுஜலம் அவைகளின் வழியாய்ப் பலபாகத்திலும் பிரிந்து செல்லுகிறது. ஆகவே



ஆற்றின் ஜலவோட்டத்தின் வேகம் குறைந்துவிடும். ஆனால் பல கால்வாய்களின் வழியாய்ச் செல்லும் அவ்வளவு ஜலமும் ஆற்றிலேயே சென்றால் ஜல ஓட்டம் எவ்வளவு வேகமாயிருக்கும்? அதுபோலவே ஆன்மசக்தி பஞ்சேந்திரியங்களின் வழியாய்ச் செல்லும்போது ஆற்றல் குறைந்தும், புலன் வழிச்செல்லும் அறிவு ஒடுங்க ஒடுங்க ஆற்றல் மிகுந்தும் தோன்றுமென்பது இங்கு கவனிக்கத்தக்கது. சூக்குமசரீரம் இயற்கையாகவே இலேசாயும் நுண்ணிதாயு மிருந்தால் ஸ்தூலசரீர இயக்கத்துக்குவேண்டிய பல கருவி கரணங்கள் இந்த சூக்குமசரீரத்தின் இயக்கத்துக்கு வேண்டிய அவசியமில்லை. கருவிகரணங்கள் குறையவே ஆன்மாவின் சக்தி மிகுதிப்படுகிறது.

மேலும், ஸ்தூலசரீரத்தைவிட சூக்குமசரீரம் நுட்பமாகவும் இலேசாகவும் இருந்தபோதிலும், ஆற்றல் ஸ்தூலசரீரத்தைவிட சூக்குமசரீரத்துக்கே அதிகம். பொருள்கள் நுட்பமாகச் செல்லச் செல்ல அவைகளின் ஆற்றல் மிகும். கடினமான பனிக்கட்டி பெரிய காரியங்களுக்குப் பயன்படுவதில்லை. அந்தப்பனிக்கட்டியே உருகி ஜலரூபமாகி அந்த ஜலம் ஆற்றில் ஓடிவரும்போது படகு முதலியவைகளை இழுத்துச்செல்ல அந்தஜலவோட்டம் பயன்படுகிறது. அதே ஜலத்தைக் கொதிக்கவைத்து நீராவியாகமாற்றினால் பெரிய பாரங்களை மிகுந்த வேகத்துடன் நெடுந்தூரம் இழுத்துச் செல்ல அந்தநீராவி பயன்படுகிறது. இதனால் பொருள்கள் நுட்பமாக நுட்பமாக அவைகளின் ஆற்றல் அதிகப்படுகிறதென்பது விளங்கவில்லையா? இதைப்போலத்தான் நமது சரீரங்களுள்ளும் ஸ்தூலசரீரத்தைவிட சூக்குமசரீரம் நுட்பமாயிருத்தலால் சூக்குமசரீரத்தின் சக்தி அதிகப்படுகிறதென்பது இதனால் பெறப்பட்டது. சூக்குமசரீரத்தின் சக்தி அதிகப்படவே, ஸ்தூலசரீரத்தின் உதவியைக்கொண்டு சாதித்துக்கொள்ள முடியாதிருந்த அநேக காரியங்களை இந்த சூக்கும சரீரத்தின் உதவியைக் கொண்டு சாதித்துக்கொள்ளலாமன்றோ? இந்த சூக்கும சரீரத்தின் ஆற்றல் மிகுந்திருப்பதனாலும், இதில் வசிக்கும் பரிசுத்தமான ஆன்மாவின் அறிவு நன்றாய்ப் பிரகாசிப்பதாலும், பலதேசத்திலும் நிகழும் சம்பவங்களை இருந்த விடத்திலிருந்து அறிதல், பிறருக்குத் துன்பம் நேரிட்டால் நினைத்த அளவில் அத்துன்பத்தை நீக்கல், தூரத்திலுள்ள ஒருவரோடு இருந்த விடத்திலிருந்து சம்பாஷித்தல், இன்னும் இவைபோன்ற பல அற்புதமான காரியங்களை சூக்குமசரீரத்தில் வசிக்கும் ஒருவன் இயற்றும் வல்லமையுடையவனாவான். இப்படிப்பட்ட அற்புதகாரியங்களைச் செய்யும் மகான்கள் பலர் இந்தியாவிலும் மேல்நாட்டிலும் இன்றும் இருந்துவருகின்றனர். இனி, மனோமயகோசத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்வாம்.

## மனோமயகோசம்.

முன்சொன்ன இரண்டுகோசங்களையும்விட இந்த மனோமயகோசமே மிகவும் முக்கியமானது. இந்த மனோமயகோசம் 'குணசரீரம்' என்று நம்முடைய ஆன்றோரால் வழங்கப்பட்டு வருகிறது. ஆன்மாவினுடைய அறிவு நிகழ்ச்சிகளெல்லாம் இந்த மனத்தினுடைய உதவியையே பற்றுக்கோடாகக்கொண்டு நிகழும். ஆன்மா மனோமயகோசத்தில் இயங்கும் போதுதான் அதற்கு "நினைத்தல்" என்னும் தொழில் ஏற்படுகிறது. பிராணமயகோசத்தைவிட இந்தமனோமயகோசம் அதாவது குணசரீரம் மிகவும் நுட்பமுடையது, ஸ்தூலசரீரத்தைக் கற்சுவர்போலவும், சூக்கும சரீரத்தை பளிங்குச்சுவர்போலவும் கொண்டால், இந்தக் குணசரீரத்தை மெல்லிய வெண்மையான சல்லாத்துணியால் தைக்கப்பட்ட ஒருதிரைக்குச் சமானமாகச் சொல்லலாம். ஆன்ம அறிவு இந்த மனோமயகோசத்தில் இயங்கும் அவசரந்தான் 'சுழுத்தி' என்று சொல்லப்படும். இந்த மனோமயகோசத்தில் மூன்று தத்துவங்கள் ஒன்றோடொன்று இணைபிரியாமல் தொடர்ச்சியாய் இருக்கின்றன. இம்மூன்றும் சேர்ந்து செய்யும் வேலையையே நாம் 'மனோசக்தி' என்று சொல்லுகிறோம். இம்மூன்று தத்துவங்களாவன:—(1) எண்ணம் அல்லது நினைவு (Thought), (2) ஆகாய ஆற்றல் (Etheric Energy), (3) இடச்சித்தம் (Will). நாம் நினைக்கிற ஒவ்வொரு எண்ணமும் சூக்கும ஆகாயத்தில் ஒருவிதமான அதிர்ச்சியை உண்டாக்குகின்றது. இந்த அதிர்ச்சி மற்ற மனிதர்களின் மூளையில் தாக்குகின்றது. இப்படியாக இருவருடைய எண்ணங்களால் உண்டாக்கப்படும் அதிர்ச்சி ஒன்றுபட்டிருக்குமாகில் இருவருடைய எண்ணங்களும் ஒன்று சேர்ந்து ஒருவருக்குத் தோன்றியபடியே மற்றவருக்குந் தோன்றி ஒரேவித உணர்ச்சியை உண்டாக்குகிறது. நான் வெகு தூரத்திலிருக்கும் என்னுடைய நண்பன் ஒருவனை நினைக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுவோம். என்னுடைய நினைப்பானது மின்சாரம், உஷ்ணம், முதலிய சக்திகளைப்போலவே சூக்கும ஆகாயத்தில் அதிர்ச்சியை உண்டாக்குகிறது. அப்படி உண்டாகும் அதிர்ச்சியால் சூக்கும ஆகாயத்தின் அணுக்கள் ஒன்றோடொன்று தாக்கப்பட்டு அந்த நினைவை தூரதேசத்திலிருக்கும் என்னுடைய நண்பனின் மூளையில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. உடனே அவன் என்னைப்பற்றி நினைக்கிறான். இப்படி நினைப்பதால் அவனுடைய மூளையில்ஜனிக்கிற சக்தியைத்தான் ஆகாய ஆற்றல் (Etheric Energy) என்று சொல்லுவது. இடச்சித்தம் என்பது நினைவுகளை உண்டாக்கிச் செலுத்திக் காத்துத் தத்தம் இடத்திற்கு வழிகாட்டி நிற்பது. ஆகவே நினைவு இடச்சித்தத்தினால் ஆளப்பட்டும், காக்கப்பட்டும் வருகிறதென்பது பெறப்படுகிறதன்றோ?



மனோசக்திக்கு இரண்டுவிதமான நிலைகள் உண்டு. ஸ்தூலசூக்கும சரீரங்களின் உதவியைக்கொண்டு நடைபெறும் மனோசக்தி ஒருவிதநிலை. அச்சரீரங்களின் உதவியில்லாமலே நடைபெறுவது மற்றொருநிலை. ஆன்மா அன்னமய, பிராணமயகோசங்களில் அனுபவிக்கும் இன்பதுன்பங்களுக்கு மனோமயகோசத்தின் உதவி வேண்டுமென்பதும், ஆனால் மனோமயகோசத்தில் அனுபவிக்கும் இன்பதுன்பங்களுக்கு அவ்விரண்டு கோசங்களின் உதவி இருந்தாலுமிருக்கலாம் இல்லாவிட்டாலுமில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. ஒருவன் ஒரு இனிமையான சங்கீதத்தைக் கேட்டு ஆனந்தமடைகிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். சங்கீதத்தைக் கேட்டல், ஆனந்தமடைதல் என்னும் இரண்டு செய்கைகளுக்கு மத்தியில் எவ்வளவோ அற்புதமான சம்பவங்கள் நேரிடுகின்றன. சங்கீதத்தைக் கேட்ட உடனேயே அவன் ஆனந்தமடையவில்லை. ஓசை என்பது ஒருவித சக்தி என்பது இங்கே ஞாபகத்தில் வைக்கப்படவேண்டும். பாடகனுடைய வாயிலிருந்து சங்கீத ரூபமாக வெளிப்படும் ஓசையானது பாடகனுக்கும் கேட்போனுக்கும் இடையிலுள்ளசூக்கும ஆகாயத்தில் அதிர்ச்சியை உண்டாக்க, அந்த அதிர்ச்சியினால் சூக்கும ஆகாயத்திலுள்ள அணுக்கள் ஒன்றோடொன்றுதாக்கி கேட்போனுடைய ஸ்தூலசரீரத்தில் அமைந்திருக்கும் காது என்னும கருவியின் வழியாய் அவ்வோசையைச் செலுத்த, அந்த ஓசை சூக்குமசரீரத்தின் கருவி வழியாக மூளையைச்சென்று தாக்க, மூளைக்கும் மனதுக்கும் இடையிலுள்ள கருவியின் வழியாக மூளையை முதலில்சென்று தாக்கிய ஓசை மனதுக்குக் கொண்டுவரப்பட்டு அம்மனத்தின் நினைவை எழுப்பிவிட அந்த மனோசக்தியின் எழுச்சியை ஆன்மா உணர்ந்து அனுபவிக்கிறது. அப்படி அனுபவிக்கும் உணர்வின் அவசரத்திற்றான் "பேஷ்! திவ்வியமானபாடல்" என்று கேட்போன் சொல்லி ஆனந்தப்படுகிறான். இங்கே மனோமயகோசத்திலிருந்து அனுபவிக்கப்படும் ஆன்ம அனுபவத்துக்கு மற்ற இரண்டு கோசங்களும் உபகரணமாயிருந்தன என்பது புலப்படுகிறதல்லவா? மனோசக்திக்கு இரண்டுவிதமான நிலைகள் உண்டு என்று சற்றுமுன்பு சொன்னதில் முதல்நிலைமையை விளக்குதற்குச் சொல்லப்பட்டதாகும் மேலே சொன்ன உதாரணம். இதையும், இன்னும் இப்படியே பஞ்சேந்திரியங்களின் உதவிகொண்டு அறியப்படும் மனத்தின் அனுபவங்களையும தியாஸபியார் "தாழ்ந்த மனோநிலை" (Lower Manas) என்று கூறுகிறார்கள். ஸ்தூலசூட்சும சரீரங்களின் உதவியின்றியே ஆன்மா மனோமயகோசத்தில் இயங்கவும், அதன் அறிவு அங்கே பிரகாசிக்கவும் கூடும் என்று சொன்ன இரண்டாவது நிலைமைக்கு ஒரு சிறு உதாரணங் கூறுவோம். ஒரு போர்வீரன் யுத்தகளத்தில் நின்று தான் எவ்விதத்திலும் ஜெயம்பெறவேண்டுமென்னும் பேரவாவுடன் யுத்

தம் புரிகிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். எதிரிகளுடைய குண்டுகள்பட்டு அவனுடைய காலில்பெருங் காயத்தை உண்டாக்கி இரத்தம் ஆறாய்ப்பெருகுகின்றது. அப்படியிருந்தும் அவன் ஒரே ஆவேசத்தோடு பலமாய் யுத்தம் புரிந்துவெற்றிகொள்ளுகிறான். குண்டுபட்டதால் உண்டான காயத்தையும், வலியையும் அவன்யுத்தம் செய்தபோது உணர்ந்திலன். வெற்றிபெற்று வீட்டுக்குத்திரும்பிய பின்னரே தன்காலில்பட்ட காயத்தையும் வலியையும் உணருகிறான். இதற்குக் காரணமென்ன? யுத்தம்செய்து வெற்றி பெறவேண்டும் என்னும் ஒரே எண்ணத்தில் அவனுடைய ஆன்ம அறிவுபிரவர்த்தித்திருந்தபடியால் ஸ்தூல சூட்சுமசரீரங்களில் ஆன்ம அறிவு நடைபெறவில்லை. ஆகவே அவன் வலியை உணர்ந்திலன். யுத்தசமயத்தில் அவனுடைய அவாவசப்பட்டு நின்ற ஆன்ம உணர்ச்சி வீட்டுக்குத்திரும்பியவுடன் அந்த நிலையைவிட்டு ஸ்தூலசரீரத்தில் இயங்கிற்று. ஆகவே வலியை உணர்ந்தான். ஆன்மா இப்படியாக ஸ்தூலசரீரத்தின் உதவியை வேண்டாமல் மனோமயகோசத்தில் இயங்கும் அவசரம் பல உண்டு. இந்த அவசரந்தான் மனத்தின் இரண்டாவது நிலையாகும். இதுபோன்ற மனோநிலைமையைத் தியாஸபியார் "மனதின் உயர்நிலை" (Higher Manas) என்று கூறுகிறார்கள். ஆன்மா மற்ற இரண்டுகோசங்களையும் அறவே ஒழித்து இந்த மனோமய கோசத்திலேயே இயங்கினால்தான் அதனுடைய சக்தியும் அறிவும் விரிந்துதோன்றும். ஸ்தூலசரீரத்தின் உதவியின்றியே ஆன்மா மனோமயகோசத்தில் இயங்கக்கூடுமென ஏற்கெனவே விளக்கியிருக்கின்றோம். மற்ற இரண்டு சரீரங்களின் உதவியில்லாமல் ஆன்மா மனோமய கோசத்திலிருந்தபடியே மற்றொருவருடைய எண்ணத்தையும் செய்கையையும் அறியக்கூடுமென்றும், ஸ்தூலசரீரத்திலிருந்து செய்யும் வேலையைவிட அதிகவேலையை மனோமயகோசத்திலிருந்து செய்யக்கூடுமென்றும் நம்முடைய சித்தாந்த சாஸ்திரங்கள் கூறுவது மேல்நாட்டின் நாகரிக வயப்பட்ட பலருக்கு நம்பத்தக்கதன்றெனப்படினும் அம்மேனாட்டினர் சொல்லுவதையே எடுத்துச் சொன்னால் அவர்களுக்கு நம்பிக்கையுண்டாகுமன்றோ? பிரபல ஆன்ம தத்துவ சாஸ்திரியாகிய ஸர் ஆலிவர் லாட்ஜ் (Sir Oliver Lodge) பின்வருமாறு கூறுகின்றார் :—

"We can operate on each other's minds through our physical envelope, by speech and by writing, and in other ways, but *we can do more*. It appears that we can operate at a distance, by no apparent physical organ or medium; if by mechanism at all, then by mechanism at any rate unknown to us i.e. by *Telepathy*" என்றுகூறி அப்படி நடைபெறுவதை டெலிபதி என்று கூறுகிறார். மேலே நாம் சொன்ன கருத்தையே இவருடைய இந்த வாக்கியங்கள் வெளியிடுகின்றன. இந்த மனோமயகோசம் சூக்கும சரீரத்தைவிட மிகவும் நுண்ணிதாய் வெண்மையான சல்லாத்



16139

துணியைப்போலிருந்தாலும், சூக்கும சரீரத்திலுள்ள அத்துணைக் கருவிகள் இல்லாமல் இரண்டு மூன்று கருவிகளே வாய்க்கப்பெற்றிருப்பதாலும் ஆன்மா இந்தக் குணசரீரத்தில் இயங்கும்போது இறைவனுடைய திருவருட் சக்தியானது மிகுந்து தோன்றும். ஆகவே பூதாகாயத்திற்கு மேற்பட்ட பரமாகாயத்தில் தோன்றுபவைகளை ஒருங்கறியவும் ஒருங்கேகாணவும் ஆன்மா வல்லதாகும். இறந்தோரைப் பிழைப்பித்தல், நினைத்த மாத்திரத்தில் ஒரு இடத்தைவிட்டு மற்றொரு இடத்துக்குச் செல்லல், பரகாயப் பிரவேசம் செய்தல் போன்ற அநேக அற்புதங்களைக் குணசரீரத்திலிருக்கும் ஆன்மா செய்யும் ஆற்றலுடையதாகும். இனி விஞ்ஞானமயகோசத்தைப்பற்றிச் சிறிது உரைப்பாம்.

விஞ்ஞானமயகோசம்.

இந்த விஞ்ஞானமயகோசம் மற்ற மூன்று கோசங்களையும்விட அதிநுட்பமானது. மனோமயகோசம் மெல்லிய சல்லாத்துணிக்குச் சமமாயிருக்கிறதென்று கொண்டால் விஞ்ஞானமயகோசத்தை பாம்புரிபோல் அதாவது பாம்பு உரித்துப்போட்டிருக்கும் சட்டையைப்போல் கொள்ளலாம். விஞ்ஞானமயகோசமென்று சொல்லப்படும் இந்தக் கஞ்சுகசரீரத்தில் ஆன்ம அறிவு விளங்கப்பெறும் அவசரமே துரியமென்று சொல்லப்படும். இச்சரீரத்தில் ஆன்மா சுத்தஞான சொரூபமாய் நிற்கும். ஆன்மாவுக்கு உள்ள இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்னும் மூன்றனுள் கீழ்நிலைக்கண்ணவான இச்சாசக்தியும் கிரியாசக்தியும் ஆன்ம இந்த விஞ்ஞானமயகோசத்தில் இயங்கும்போது ஒழிந்து போவதால் ஞானசக்தி ஒன்றே பிரகாசியா நிற்கும். ஞானசக்தியின் விளக்கம் அதிகமிருந்தால் ஆன்மாவுக்கு மற்றகருவி கரணங்களின் உதவி அனாவசியமாகிறது. ஆகவே ஞானத்தில் படிந்து பரமாகாயத்திற்கும் மேற்பட்ட இடங்களில் உள்ள பேரற்புத நிலைகளையெல்லாம் உணர்ந்து அனுபவிக்க ஆன்மா வல்லதாகும்.

ஆனந்தமயகோசம்.

"விஞ்ஞானமயகோசத்தினும் நுட்பமானது ஆநந்தமயகோசம். விஞ்ஞானமயகோசத்தைப் பாம்புரிக்குச் சமானமாகக் கொண்டால் இதைப் பால்நுரைபோன்றதோர் வஸ்துவுக்குச் சமமாகக் கொள்ளலாம். மற்ற எல்லாக்கோசங்களையும்விட இந்தக் காரணசரீரம் நுட்பமுடையதாயினும் இதுவும் மற்றக்கோசங்களைப்போல மாயையில் திரண்ட சரீரமேயாதலால் இதனுடைய உதவியை வேண்டும் ஆன்ம அறிவு சிறிது அசேதனமாய்த் தடக்குறுமாதலின் இதனுடைய தொடர்ச்சியையும் ஆன்மா நீக்கிக்கொள்ள வேண்டும். இந்தக் காரணசரீரத்தில் ஆன்ம அறிவு நிகழும் அவசரமே துரியாதீதமெனப்படும். இந்த ஆனந்தமயகோசத்தையும் ஆன்மா கடந்துவிட்டால் நான், எனது என்னும் உணர்ச்சி முழுவதும் அற்று காண்பான், காணப்படும் பொருள், காட்சி, ஆகிய எல்லாம் சுத்த சிவசொரூபமாய் விளங்குவதைக்கண்டு அச்சிவானந்தப் பேற்றில் அழுந்தி ஒன்று

பட்டு இன்பமனுபவிக்கும். அந்தநிலைமையில் ஆன்மா அவ்வானந்தத்தை அனுபவித்தபோதிலும் அது சிவசத்தியால் விழுங்கப்பட்டு ஏகதேசமாகிய சீவ இலக்கணங்கெட்டு சுத்த சிவ சொரூபமாமவே விளங்கும். இதுவே அத்துவித முத்திநிலையாம். இந்த ஐந்துகோசங்கள் ஆன்மாவுக்கு கொடுக்கப்பட்டிருப்பது கடைசியாக இப்படிப்பட்ட உயர் நிலையை ஆன்மா அடைவதற்காகவே.

## முடிவுரை.

என்றிதுகாறுங்கூறிய வாற்றால் பஞ்சகோசங்கள் என்பன அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் ஆகிய ஐந்துமாம் என்பதும், இவை முறையே ஸ்தூலசரீரம், சூக்குமசரீரம், குணசரீரம், கஞ்சுகசரீரம், காரணசரீரம் என்று அழைக்கப்படுமென்பதும், கற்சுவர், பளிங்குச்சுவர், மெல்லிய சல்லாத்துணி, பாம்புரி, பால் நுரைகளைப்போல் ஒன்றுக்கொன்று சூக்குமமாக இவ்வைந்தும் இருக்கின்றன என்பதும், இவைகளில் ஆன்ம அறிவு நிகழும் அவசரத்தினை முறையே சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்று சொல்லப்படுமென்பதும், பனிக்கட்டியைவிடத் தண்ணீருக்கும், தண்ணீரைவிட நீராவிக்கும், நீராவியைவிட மின்சாரத்துக்கும், ஆற்றல் மிகுந்து தோன்றும் என்பது, பொருள்கள் நுட்பமாகச் செல்லச் செல்ல அவைகளின் ஆற்றல் அதிகப்படுமென்பதை வலியுறுத்துவதுபோல், ஸ்தூலசரீரத்தைவிட சூக்குமசரீரம் நுட்பமாயிருப்பதும், அதைவிட குணசரீரம் நுட்பமாயிருப்பதும், சரீரங்கள் நுட்பமாக நுட்பமாக அவைகளின் ஆற்றல் அதிகப்படுகிறதென்பதை வலியுறுத்துகிறதென்பதும், நுட்பமானச்சரீரங்களில் ஆன்மா வசிக்க வசிக்க மற்ற சரீரங்கள் அதற்குப் பயனற்றனவாய் ஒழியுமென்பதும், இப்படியே ஒவ்வொரு சரீரத்தையும் ஒழித்துக் கடைசியில் ஆனந்தமயகோசத்தை விடுத்து ஆன்மா சுத்த சிவானந்தத்தில் தோய்ந்து நிற்குமென்பதும், அப்படிப்பட்ட நிலைமையே அத்துவித முத்திநிலை எனப்படுமென்பதும், அப்படிப்பட்ட நிலைமையை ஆன்மா அடைவதற்கு உபகரணமாகவே இப்பஞ்சகோசங்கள் ஏற்பட்டனவென்பதும் பிறவும் ஒருவாறு விளக்கப்பட்டன. சுபம்.

நாகை-கோபாலகிருஷ்ணன்.

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி க.] 1912-௵ ஏப்ரல்௴ [பகுதி ச.

## “ தத்துவமாவது நீறு ”

சித்தாந்தி.—ஐயா, மாயாவாதியாரே, இவ்வுலகத்தில் நாம் பார்க்கும் வஸ்துக்களில் மாறாத நித்தியமான நிற்குண வஸ்து எது?

மாயாவாதி.—நாம் பார்க்கும் வஸ்துக்களெல்லாம் மித்தை, அழியக்கூடியதாயிற்றே, மாறாதநித்திய நிற்குணவஸ்து பார்க்க முடியுமா, ஐயா?

சி.—மாயாவாதியாரே, நீர் நெற்றியிலணிந்திருக்கும் திருநீறு அழியுமா? மாறுமா? கவனித்துப் பதில்சொல்லும் பார்ப்போம்.

மா.—ஐயா, சாம்பலானது அழியுமா? மாறுமா? எத்தனை தரம் குகையில் புடம்வைத்தாலும் நிறைகுறையாது, நிறம்மாறாது, அழியாது, அப்படியே யிருக்குமே? அதை நித்தியமென்று சொல்லாம். இந்த வஸ்துவைப்பற்றி விவரமாய்ச் சொல்லவேண்டும், ஐயா.

சி.—இவ்வுலகத்தில் சாம்பலாகாத வஸ்து ஒன்றுமில்லை. நவரத்தினங்களும் பஸ்மமாக்கப் படுகின்றன. பார்க்கப்படும் பொருள்களில் வயிரக்கல் அதிக கெட்டியானது. அதைப் பஸ்மாக்கி விடுகிறார்கள். எல்லாம் ‘அந்தமதாவது நீறு’ என்று ஒருகாலத்தில் சாம்பலாகத்தான் முடியவேண்டும்.

மா.—ஐயா, ‘சுண்ணத்திலிருக்கிறது சூட்சுமம்’ என்ற வாக்கியத்தின் கருத்து இப்போதுதான் விளங்கிற்று. ‘சுண்ணம்’ என்பது நீறுதானே?

சி.— ஆம்! நமது திருநாவுக்கரசு கூறுகிறார்:—

"சோதியாய்ச் சுடருமானார் சுண்ணை வெண்சாந்துபூசி
ஓதிவா யுலகமேத்த வுகந்துதாம் அருள்கள் செய்வார்
ஆதியாயந்தமானார் யாவரு மிறைஞ்சி யேத்த
நீதியாய் நியமமாகி நின்ற நெய்த்தானனாரே"

மா.— அழிவுகாலம் என்னும் முடிவுகாலத்தில் பார்க்கும் பொருள்களெல்லாம் அருவநிலை யடைந்துவிட்டால் அப்போது இந்தச் 'சுண்ண வெண்சாந்து' என்றுகூறிய சாம்பல் என்ன ஆகும்?

சி.—மேற்கூறிய தேவாரத்திலேயே அந்த இரகசியம் காட்டப்பட்டிருக்கிறதே, கவனித்துப்பாரும்.

மா.—ஐயா, விவரமாய்ச் சொல்லவேண்டும்.

சி.—'எரியுருவனாகிய' எம்பிரான் மஹா சங்காரகாலத்தில் தன்னுணைக்குட்பட்ட எரிவருக்கங்களாகிய மூவகை யக்கினியையும் தன்னிலடக்கி தன் நெற்றிக்கண்ணக்கினியால் எல்லா நாமரூப வஸ்துக்களைச் சாம்பலாக்கி மிஞ்சி நிற்கும் 'சுடுபொடி'யில் ஆடிநிற்பார். அப்போதுதான் அவரைச்

(1) "சோதியாய்ச் சுடருமானார் சுண்ணவெண்சாந்துபூசி" என்றருளியது.

எரிவருக்கங்களை யடக்கியாளும் நம்முக்கட் கடவுள்தான் கெற்பத்தில் உஷ்ணத்தைப் புகட்டி சீவகோடிகளை யுண்டாக்கி வளர்க்கும் வல்லமையை யுடையவராவார். ஆகவே அவர்தான்

(2) "ஓதிவா யுலகமேத்த வுகந்துதாமருள்கள் செயவார்" அதாவது அருள்களாகிய பஞ்சக்கிருத்தியங்களைச் செய்வார். சான்றோருலகம் அக்காருண்ய மூர்த்தியை 'வியந்தேத்து'வார்கள்.

(3) "ஆதியாயந்தமானார் யாவருமிறைஞ்சி யேத்த"

இவ்வளவு 'வலிய' முக்கட்கடவுள் தன்னிட்டப்படி யெதுவுஞ் செய்யக்கூடும். ஆனால் அநீதியான காரியங்களைச் செய்வாரோவென்றால், அல்ல.

(4) "நீதியாய் நியமமாகி நின்ற நெய்த்தானனாரே"

மா.—ஐயா, மாயாவாதத்தில் பரிபாஷை யவஸ்தையிலும் மயக்கத்திலும் நான் உழன்றது போதும். இனியனுபவ உண்மைகளடங்கிய தேவார திருவாசக இரகசியங்களையவ்வான்றோருதவியாலுணர்ந்து அந்நால்வர் சென்ற முத்திநெறியாகிய 'மூர்த்திதலந் தீர்த்த முறையாற்றொடங்கி' வழிபட்டுய்வேன்.

ஹா. ஷண்முக முதலியார்.

உ

சிவமயம்.

## சமயதருமக்கடமை.*

கனம்பொருந்திய வைதிக சைவசமயப் பிரபுக்களே!

தாதையர் செய்வது போற் செய்தல் தனயர்க்கு இயல்பாகலின், அறிவிற் சிறந்த எந்தையர் உபந்நியாசித்தலைக் கண்டு குழந்தை யறிவினையுடைய யானும் உபந்நியாசிப்பது போல் "சமயதருமக்கடமை" என்னும் விஷயத்தைக்குறித்து உபந்நியாசிக்கத் தொடங்கினேன்.

'யாமொழிடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா ஆயினுந் தந்தையர்க்கு
அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை
என்வாய்ச் சொல்லும் அன்ன" வாகும்.

சைவப்பிரபுக்களே!

வேதாகமங்களின் மெய்ப்பொருளை இனிது அறிவிக்கும் வைதிக சைவமே சமயாதீத அருட்பெருஞ்சமயமாம். இது பரமசிவன், சகளநிஷ்களத் திருமேனி கொண்டருளிச் சதாசிவ மூர்த்தியாய் நின்று, அநந்ததேவர்க்கருளிச்செய்த சன்மார்க்கம். இதனை அநந்ததேவர் சீகண்டருத்திரக்கடவுளுக்கு அருளிச்செய்தார். சீகண்டருத்திரக்கடவுள் நந்திபெருமானுக்கருளிச்செய்தார். நந்திபெருமான் கணங்கட்கும், தேவர்க்கும், முனிவர்க்கும் அருளிச்செய்தார்.

ஆளுடைய பிள்ளையார், வாகீசர், நம்பியாரூரர், வாதவூரடிகள் என்னும் பரமாசாரிய சுவாமிகள் நால்வரும் தென்னாட்டில் திருவவதாரஞ்செய்து, சிவபிரான் திருவருட்பெருஞ் செல்வர்களாய் விளங்கி, இவ்வைதிகசைவப்பிரதிஷ்டை திருவருண்மு

* இராமநாதபுரத்தில் 1910ம் ஆண்டில் நிறைவேறிய ௫-வது சைவ சித்தாந்த மகா சமாஜக்கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

றையால் செய்தருளினார்கள். பரமாசாரிய சுவாமிகள் நால்வரேயன்றிப் பத்தவிலாசத்தில் அடங்கிய தில்லைவாழந்தணர் முதலிய உண்மை நாயன்மார்களும், இந்தவைதிகசைவச் செந்நெறி போற்றி யனுஷ்டித்துத் திருவருள் விலாசம் உலகில் நிலையிட்டருளினார்கள். திருக்கைலாச பரம்பரைச் சந்தான சிவாசாரியர்களும், மற்றையோரும் இவ்வைதிகசைவ அருண்முறைவிளக்கி நிறுத்தியருளினார்கள். இச்சுத்தாத்துவித சித்தாந்தம் மாசிருட்டி தொடங்கி இன்றுகாறும் இங்ஙனம் பரமசிவன் உபதேசமுறையில் வந்து இந்நில வரைப்பிற்கு ஓர் மலை விளக்காய் நிற்கின்றது.

இவ்வைதிகசைவமானது, நாம் அறிவு விளக்கம் பெற்று உறுதி எய்தி இன்பவாழ்வு அடைதற்குச் சாதகமாயிருத்தலின் ஞானாலயம் என்றும், உலகத்தின் சொரூபத்தினையும், ஆன்மாக்களின் சொரூபத்தினையும், முழுமுதற் கடவுளாகிய பரமான்மாவின் சொரூபத்தினையும், ஐயவிபரீதமில்லாமல் தெளிவாகக் காட்டுதலின் ஞானதீபம் என்றும், நம்முடைய சரீரசுகத்திற்கும் ஆன்ம சுகத்திற்கும் அநுகூலமாகும் நன்மைகளை விதித்து அவ்விரண்டு சுகத்திற்கும் பிரதிகூலமாகும் தீமைகளை விலக்கி நம்மைக்காத்தலின் ஞான அரண் என்றும், நாம் பெறும் கல்வி செல்வம் அதிகாரம் முதலிய பேறுகளுக்கு ஏற்கும்படி தாரதம்மியம் பெற்று அன்பு செய்து அளவளாவி வாழ்தற்குறிய லௌகிக வைதிக ஒழுக்கங்களை நமக்குப் போதித்தலின் நீதிநிலயம் என்றும், நமக்குக் கரும சாதனங்களை அறிவித்தலின் தந்திரகலாரூபம் என்றும், நமக்குத் தெய்வ உபாசனைகளைத் தெரிவித்தலின் மந்திரகலாரூபம் என்றும், நித்தியாநித்தியவஸ்து விவேகத்தினை உணர்த்துதலின் உபதேசகாலரூபம் என்றும், நம்முடைய இகபரசுகங்களுக்கு இன்றியமையாத சாதகங்கள் எல்லாவற்றினையும் நமக்குக் குறைவறக் கொடுத்தலின் சர்வசத்தப் பிரமரூபமான ஒரு கற்பகதரு என்றும் சொல்லப்படும்.

இவ்வைதிகசைவசமயத்தினராகிய நம்மவர் அதனைப்போதிக்கும் வேதாகமங்களையும் வடமொழி தென்மொழி வடிவாய் நிற்கும் உண்மை நூல்கள் பிறவற்றையும் கலைநூல்களையும் பிறர்



க்குக் கற்பித்தல் செய்யாமையாலும் எல்லாரும் எளிதில் அறிந்துய்யப் பிரசங்கித்தல் செய்யாமையாலும், இக்காலத்தில் தன்விளக்கம் வரவரக்குன்றுவதாகின்றது. சைவவிளக்கம் குன்றற்குக் காரணம் நூல்களைக் கற்பித்தல் செய்யாமையும் எல்லாரும் உய்யப்பிரசங்கித்தல் செய்யாமையுமே. இவ்விரண்டும் நடைபெறாமைக்குக் காரணம் தமிழ் மன்னர்களும், பிரபுக்களும், செல்வர்களும் ஆதரவு செய்யாமையே. ஆகவே, செல்வசிரேட்டர்களுடைய அநாதரவே வைதிக சைவவிளக்கம் குன்றுதற்குக் காரணம் என்பது பெறும். மன்னர்கள், பிரபுக்கள், செல்வர்கள் என்னும் இவர்கள் ஆதரவு செய்யவேண்டுமென்பதனால் இத்திறத்தினோர் ஆயிரங்கணக்காக ரூபாய்களை வாரி இறைக்கவேண்டும் என்பது நங்கருத்தன்று. பின் என்னெனில் இவர்கள் முன்னின்று சிலதருமசட்டங்களை ஏற்படுத்தித் தெய்வதூஷணையும் இராஜதூஷணையும் செய்யாத ஒவ்வொரு சைவனுடைய வருவாயிலும் ஒரு சிறுபங்கு நம்சைவசமயத்திற்கென்று தருமக்கடமை வாங்குவதே. நம்மரசர் நமக்கு அன்புடன் உதவி புரிதலை நினைத்து நாமெல்லோரும் விளக்குவரி, நீர்வரி, நிலவரி, முதலிய பலவிதவரிகளை மனமுவந்து கொடுக்கின்றோம்: ஆனால் நம்மையளித்துக் காக்கும் இறைவனுடைய சமயத்திற்கென்று ஒருவித தருமவரியும் கொடுப்பதில்லை. நம்மை ஆளும் இவ்வுலக அரசர்க்கு அன்பினால்.பலவரிகள் கொடுப்பதுபோல் நம்மையும் நம்மையாளும் அரசரையும் ஆளும் தெய்வநாயகனுக்கென்று ஓர் தருமவரியேனும் அன்பினால் கொடுக்கலாகாதோ? நம்முன்னோர்களெல்லாம் தம்வரவில், ஐந்திலொருபங்கு தெய்வத்திற்கென்று கொடுத்துவந்தனர். இதனைத் தமிழ்மறை ஐந்தாம் அதிகாரத்து மூன்றும்பாட்டு வலியுறுத்தாநிற்கும். நம்முன்னோர் கொடுத்தது போல 'நாம் ஐந்தில்' ஒன்றும் கொடுக்கவேண்டுவதில்லை; ஐம்பதில் ஒன்றும் கொடுக்கவேண்டுவதில்லை; நூற்றில் ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை; நூற்றம்பதில் ஒன்றும் கொடுக்கவேண்டுவதில்லை; நூற்றுத்தொண்ணூற்றிரண்டிலொன்று கொடுத்தால் அதுவே மிக அதிகமாகும் அதாவது வரவில் ரூபா ஒன்றுக்கு ஒரு தம்படிவீதம்

கொடுத்தால் கொடுக்கப்பட்டதம்படிகள் அநேக ஆயிரங்கணக்கான தங்கசவரனுக மாறும். நமது தமிழ் நாட்டிலுள்ள சைவரின் தொகையோ அநேக ஆயிரம். ஒவ்வொருவரும் தமது சமய விர்த்தியின் பொருட்டுத் தமது வருவாயில் தம்படிவீதம் கொடுப்பார்களாகில் அத்தாமிரமெல்லாம் எண்ணிலாத் தங்கமாக மாறும் என்பதற்கு என்ன ஐயம்? ஒவ்வொருவரும் இறைவனுடைய நன்மார்க்கத்தின் பொருட்டு உதவிபுரிவரேல் அம்மார்க்க விளக்கங்குன்றுமோ? சைவரெல்லாம் ஒருமித்த மனத்தராய், அலக்ஷியம் செய்யாது ஒருங்கு கூடி இவ்வற்ப தருமத்தைச் செய்யுந் தொழின் மேற்கொள்ளின் ஊர்கடோறும்.

(1) அநேக சைவசங்கங்களை ஏற்படுத்தவும்,

(2) அநேக சைவப்பிரசாரர்களை ஏற்படுத்தவும்,

(3) அநேக சமய பாடசாலைகளைத் தாபிக்கவும்,

(4) அநேக சமய சற்பத்திரிகைகளை வெளியிடவும்,

(5) அநேக அரியநூல்களை அச்சுவிமானத்திலேற்றவும் கூடும்.

1. சைவசங்கங்கள் :—தனித்தாயினும் சிலர் மாத்திரம் கூடியாயினும் நம் இறைவனாகிய சிவபெருமானுடைய பணியை முடித்தல் இயலாமையால், சைவசமயிகளாகிய நம்மவர்களெல்லோரும் ஒற்றுமையுடையவர்களாய் ஒருங்கு கூடல்வேண்டும். அப்படிக் கூடாதவழி இக்கருமம் சித்திபெறாது. தமிழர்களாகிய நம்மவர்கள் யாதாயினும் ஒருகருமத்தை நடத்துதற்கு ஒருங்குகூடுதல் அரிது, ஒரேவழிக்கூடினும், ஐக்கத்தோடு நிலைபெற்று எடுத்த கருமத்தை நிறைவேற்றல் மிக அரிது. அவர்கள் ஐக்கமே இன்றிப் பெரும்பான்மையும் தங்கள் உள்ளத்தில் விளையும் பகையையே பாராட்டிக் கலகம் விளைத்து எடுத்த கருமத்தைக் கைநெகிழவிடுதலே வழக்கம். இதுபற்றியே நம்மவர்கள் லௌகிகநெறி வைதிகநெறி என்னும் இரண்டினும் மேன்மையடையாது, அவமதிக்கப்பட்டுத் தலை கவிழ்கின்றார்கள். சகோதரர்கள் பலர் தங்கள் பிதாவினுடைய வீடு முதலியவற்றிற்கு இடையூறு நிகழும்பொழுது தங்களுள்ளே எத்துணைப் பகையிருப்பினும் அதனைச் சிறிதும் பாராட்டாது ஒற்றுமையுடையர்களாய்த் திரண்டு அவ்விடையூற்றை நீக்கி அப்பிதாவுக்கு இனியர்களாய் ஒழுகுவது இயற்கை : அதுபோலவே சைவசமயிகளாகிய நாமெல்லாம் நமது பரமபிதாவாகிய சிவபெருமானுடைய நன்மார்க்கத்திற்கு இடையூறு நிகழும்பொழுது நம்முள்ளே எத்துணைப்பகை இருப்பினும் அதனைச் சிறிதும்



பாராட்டாது ஒற்றுமையுடையர்களாய்த் திரண்டு அவ்விடையூற்றை நீக்கி அச்சிவபிரானுக்கு இனியர்களாய் ஒழுகுவதன்றோ அழகு. இப்படிச்செய்பவர்களன்றோ சைவசமயிகளென்னும் பெயருக்கும் பாத்திரராவார்கள். இவ்வியல் பில்லாதவர்கள் அங்ஙனம் ஆவார்களா ! ஆகார்கள் ஆகார்கள்.

நம்மவர்களெல்லாரும் பொறாமை பகை முதலியவைகளின்றி ஐக்கியமுடையவர்களாய்க்கூடி, தங்கள் தங்களால் இயன்றமட்டும் வாக்காலும் காயத்தாலும் பொருளாலும் சகாயஞ்செய்து சைவசமயத்தை விருத்தி செய்து பெரும்புகழையும் பெரும் புண்ணியத்தையும் அடைதற்குச் சமய சங்கங்கள் இன்றியமையாதவை. அச்சங்கஸ்தாபனைக்குப் பெரும் பொருள் வேண்டும். அப்பொருள் மேற்சுட்டியபடி சிறிது சிறிதாக வாங்கினாலன்றி வேறு வகையிற் சேகரித்தல் இயலாதென்க.

2. சைவப்பிரசாரகர்கள்.—சைவப்பிரசாரஞ்செய்வித்தல் எல்லாச் சிவபுண்ணியங்களையும் சிவஞானத்தையும் வளர்க்குங் கருவியாய்ச் சிறந்துள்ள உத்தமோத்தம சிவபுண்ணியம். நாம் இச்சிவபுண்ணியத்தைச் செய்யாமையால் நமக்குச் சைவப்பிரசாரகர்கள் கிடைப்பது மிக அருமையாயிருக்கின்றது. சைவப் பிரசாரகர்கள் குறைந்திருத்தலினால் ஆயிரங் கணக்கான சைவரும் நமது சமயக்கருத்தை நன்கு உணராதிருக்கின்றனர்.

பழவினையினாலும் காரணங்களினாலும் நம்மவர்க்கு வியாதி உண்டாகும்போது, அவ்வியாதி நீக்கத்தின்பொருட்டு அவர்கள் வயித்திய சாலைகளில் மாதக்கணக்காகவும் வருடக்கணக்காகவும் தங்கநேரிடுகின்றது. அவ்வாறு தங்குங் காலங்களில் அவர்கள் நெற்றி, எம்பெருமானுடைய பவளமேனியிற் பூசப்பெற்ற தவளநீற்றினை அறியாதிருக்கின்றது. அவர்கள் நா இறைவன் திருநாமத்தினை நவின்றறியாதிருக்கின்றது. அவர்கள் செவி மரணகாலத்திலும் எஞ்செல்வப்பெருமான் திருப்புகழினைக் கேட்டறியாதிருக்கின்றது. அவர்கள் எல்லாம் மிருகம்போல் பூச்சின்றியும் 'வழுக்கி வீழினும் நின்திருப்பெயரல்லால் மற்று நானறியேன் மறுமாற்றம்' என நமது நம்பியாரூரர் கூறியதைக் கடைப்பிடித் தொழுகவிலராய் ஆடு மாடுகள்போல மறுமாற்றத்தை மொழிந்து அலறியுங் கூவியும் உயிர் துறக்கநிற்பர். இவ்விளைவு நமக்குத் தகுந்த சைவப்பிரசாரகர் இல்லாமையால் உண்டாகின்றது. பிரசாரகர்கள் நாடோறும் மாலைவேளைகளில் வயித்திய சாலைகட்குச் சென்று ஆங்குள்ள பிணியாளர்களைக்கண்டு அன்னார் தேக நலிவை விசாரித்து அவர்கள் மனம் உலகக்கவலைகளிலே செல்லவொட்டாமலும், சிறிதாயினும் அதைரியம் அடையாமலும், உயிர்க்குயிராயுள்ள கடவுளை இடையறாது எந்நேரமும் மெய்யன்போடு தியானிக்கச்செய்து, வியாதி அதிகப்படுந்தோறும் பிணியாளர் தமக்கு அன்னியராய் இருக்கும் மனைவி மக்கள் முதலிய சுற்றத்தாரிடத்துள்ள பற்றை நீக்கித் தமக்கு

அன்னியராய் இருக்கும் எம்பெருமானிடத்துள்ள பற்றையே வளர்க்கத் தூண்டி "நாம் சிற்றறிவுடையேம்; ஆதலினால், நமக்கு நன்மையாவது இது தீமையாவது இது என்று நாமறியமாட்டோம்: கடவுள் எல்லா அறிவோடும் எல்லா அனுக்கிரகமும் உடையவர்; ஆதலினால், அவர் நமக்கு யாது செய்வாரோ அதுவே நமக்கு நன்மையாகும் என்று துணிதல் வேண்டுமேயன்றி எல்லாவறிவும் எல்லா முதன்மையும் எல்லாவனுக்கிரகமுமுடைய கடவுளை அநியாயமாக நொந்து அதிபாதகனாகப்படாது" எனப் போதித்துத் தேவாரப்பதிகம் ஒன்றினை ஓதி வினையினை நீறு செய்யும் நீற்றினைக்கொடுத்து வருவாரேல் நமது சமயம் அபிவிருத்தி அடையும் என்பதற்கு ஐயமுண்டோ? இல்லை இல்லை. பிரசாரகர்களோ முதியவர்களாயிருத்தல் வேண்டும். அன்புடன் உழைக்கும் முதிய பிரசாரகர்கள் கிடைப்பரேல் அது நமக்கு ஊதியம் கிடைப்பதுபோலாம். அறிவிலும் வயதிலும் முதிர்ந்த பிரசாரகர்கள் கிடைப்பின் அவர்களை வயித்திய சாலைகட்கனுப்பலோடு விடாது சிறைச்சாலைகட்கும் அனுப்பி அவ்விடத்துள்ளார்க்கு, பிறருடைமையாயிருப்பதி யாதொரு பொருளையும் அவனை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமையாம் கள்ளாமை, காமமும் பொருளும் பற்றி நிகழ்வதாய பொய்மையை விலக்கும் மெய்யினது தன்மையாகிய வாய்மை, ஐயறிவுடையனவீறாய உயிர்களைச் சோர்ந்துங்கொல்லுதலைச் செல்லாமையாம் கொல்லாமை முதலிய சிறந்த விஷயங்களை எடுத்துரைக்கச் செய்தல்வேண்டும். நஞ்சிறார்க்கும் சிறுமியர்க்கும் நஞ்சமயத்தைப் போதிக்குமாறு இவர்களைச் சைவர் வீடுகளுக்குமனுப்பல் வேண்டும்.

இப்பிரசாரகர்கள் செய்யவேண்டுவது வேறொன்றுமுண்டு. இவர்கள் திருக்கோயில் திருமடம் முதலிய சுத்தஸ்தானங்களில் புராணங்களை நியமமாக விதிப்படி படித்தலும் அவைகளுக்கும் பொருள் சொல்லலுமே. இனிய சொற்களால் அடியார் சரிதங்களைக்கேட்போர் நெஞ்சமும் உருகுமாறு எடுத்துரைத்தல்வேண்டும். உள்ளன்புடன் சரிதம் எடுத்து உரைக்கப்படின் கேட்போர் நெஞ்சமும் உள்ளன்பால் உருகும் என்பதற்கையமில்லை. அன்புடன் உரைக்கப்படாவிடின் அவ்விஷயம் கேட்போர் மனத்தினை உருக்கமாட்டாது. நமது சமயாசாரிய சுவாமிகளுள் ஒருவராய ஆளுடைய அடிகள் கரைந்தமனத்துடன் இயற்றிய திருவாசகம் இதற்குச் சான்றுபகரும். அன்புடன் உரைத்தல் 'அழுமூஞ்சிப் பிரசங்கம் என மதிக்கப்படும் என்றஞ்சி சிலர் சைவப்பிரசங்கஞ் செய்கையில் இலக்கண நூல் விதிகளை எடுத்துரைத்து மகிழ்வர்; சிலர் "மயிருக்கு மிஞ்சின கறுப்புமில்லை மச்சானுக்குமிஞ்சின உறவுமில்லை" என்பதுபோன்ற அருவருக்கத்தக்க பழமொழிகளை எடுத்துரைத்து வேடிக்கை செய்வர்; வேறு சிலர் மங்கையர்கள் அவயவ வர்ணனை வருமிடங்களைத் தவறவிடாது அவ்வர்



ணனைகளை மிக நன்றாய் விளக்கி மனம் பூரிப்பர்; இன்னுஞ் சிலர், புண்ணியவசத்தால் இறைவன் பெயரைத் தம்பெயராகக் கொண்டுள்ளதை மறந்து அப்பெயர்க்கு முன்னர் கடல், காற்று, மிருகம் முதலிய பட்டப்பெயர்கள் பொருந்துதலைப்பெற அவாவி, விண்டுவின்வராக அவதாரத்தினைக் குறிக்கும் சந்தர்ப்பங்களில் சிவனடியாராகிய அவ்விண்டுவைச் சாதாரண வராகமாகவே மதிக்க அவர்கள் உடனே நாட்டு வராகத்தினை மேய்ப்பவர் நிலையை அடைந்து அதனோடு அடியார் தூஷணைக்கும் ஆளாகின்றனர். தமக்கும் அவர்க்குமுள்ள தாரதம்மியத்தைக் கவனியாதிருக்கின்றனர். இத்தகைய சண்டைப் பிரசங்கமும், வேடிக்கைப்பிரசங்கமும் நமக்கு வேண்டுவதில்லை. நமக்குப் பத்தியுடன் பிரசாரஞ்செய்வோரே வேண்டியது. இதற்குப் பெரும்பொருள் இருப்பின் அவர்களைப் பெறுதல் எளிதாகும்: அப்பெரும்பொருள் பெறுதல் மேற் சுட்டிக்காட்டிய வழி ஒன்றினால்தான் கூடும் என்பதறிக.

3. சைவசமயபாடசாலைகள்:—நமது சிறுவர்கள் அறிவுவலி சிறிதும் இல்லாதவர்கள். அதுமட்டோ, தங்கள் சமயநூல்களாகிய வைதிக சாஸ்திரங்களை அணுவளவேனும் கற்று அறியாத துர்ப்பாக்கியர்கள். அறிவு வலியும் இந்து சமய சாஸ்திரப்பயிற்சியும் இல்லாத அந்த மாணவர்கள் இயற்கையான மனக்கண்ணாடியில் பிறமதக்கொள்கைகள் படியும்பொழுது அந்தோ! அவர் பரிசுத்தமான மனக்கண்ணாடிகள் மிலேச்சப் பொய்ம்மயமாய் விடுகின்றன. அப்படி பிறமதப்பொய்த் தூசுகள் அவர் மனக்கண்ணாடிகளில் படியப்படிய அவைகள் விளக்கங்குன்றிக் குன்றி மரத் தன்மையுற்றுச் சுபாவங் கெட்டொழிகின்றன. அப்படி விவேக விளக்கங்குன்றிக் கெட்ட அவர்கள் மனதில் பின்னர் வைதிகாசிரியர்போதிக்கும் ஆரிய சாஸ்திர போதனைகள் நுழைதற்கு இடமில்லாமல் பஞ்சிற்பட்டு மீளும் பாணங்கள்போல் பிறகிட்டு ஒழுகின்றன. இந்து மதசாஸ்திரக்கல்வி அவர் மனசிலே புகுதாமல் ஒழிதலோடன்றே, இயல்பாக அநுஷ்டிக்கப்பட்டுவரும் இந்து வருணாச்சிரம தருமங்களும் அந்தத் துர் அப்பியாசத்தினால் அவர்கள் புத்தியை விட்டு நீங்குகின்றன. பின் இவர் இந்து மக்கள் என்று தானும் சுட்டியறியக்கூடாதவண்ணம் இந்து வாசனையுமற்று அவர் முழு மிலேச்சராய் விடுகின்றனர். நமது மெய்ச்சமய பத்தியாசாரங்கள் முழுதுங்கெட்டு இழிந்த பிறப்பினராகும் இந்து மாணாக்கர்கள், சிலர் ஒரு சமய நிலையும் இல்லாதவர்களாய் நாஸ்திகம்பேசி நாத்தழும்பேறுகின்றனர். இந்தப்பிரகாரம் ஆபத்துகள் இந்து புத்திரர்க்கும் புத்திரிகளுக்கும் பிறசமய பாடசாலைக் கல்வி பயிற்சியினால் விளைதலைக் கண்டும் கண்டும் நம்மவர்கள் தங்கள் அருமை மக்களுக்கு அஞ்ஞான விருட்படலம் நீங்குமாறு சைவசமய பாடசாலைகளைத் தாபித்தாரில்லை,

இந்த மக்களுக்கு வித்தியாப்பியாசம் என்னும் ஞானாமிர்தபானம் இன்றியமையாத சீவன ஏதுவேயாம். ஆயின், நாவுக்கினிய அறுசுவை உணவு உடம்பினை வளரச்செய்வதுபோலச் செவிக்கினிய வித்தியாமிர்தம் உயிரறிவினை வளரச்செய்தற்குச் சிறப்புடைய சாதனமாகும். இனி விஷங்கலந்த சுவையுணவு உயிர் வாழ்விற்குக் கேடுபயப்பதுபோல அஞ்ஞானங்கலந்த வித்தியாமிர்தம் அறிவினைப் பங்கப்படுத்தற்கே ஏதுவாகும். இந்துமக்கள் வித்தியாமிர்தமுண்டு நித்தியானந்த வாழ்வு பெற வேண்டின் தமது வைதீக சைவசமய சாஸ்திராமிர்தம் நாளு நாளும் பருகுதலே நெறியாம். அதற்கு வைதிக சைவசமய கலாசாலைகள் இன்றியமையாதவை. ஆதலின் அவைகளைத் தாபித்தல்வேண்டும். அங்ஙனம் தாபித்தற்குப் பெரும்பொருள் அவசியமன்றோ? அதற்குச் சைவர்கள் மாசிகாம்சதானம், வார்ஷிகாம்ச தானம், விதரணம் என்னும் மூன்று திறத்தினவாகத் தங்கள் தங்களால் இயன்றமட்டும் சங்கற்பித்துக்கொண்டு கொடுத்தாலன்றோ அப்பெரும்பொருள் சேரும்.

(இன்னும் வரும்.)

சே. சோமசுந்தரப்பிள்ளை.

# சைவசித்தாந்தம்.

ம-ா-ா-ஸ்ரீ, ஸ்ரீமத். J. M. நல்லசாமி பிள்ளை B.A., B.L., அவர்கள் திராவிட தேசத்துக்கும் "சைவ" உலகத்துக்கும், தமிழ் மாதுக்கும், செய்த நன்றி நம்மனோரால் ஒருநாளும் மறக்கற் பாலதன்று. யாமே இப்படிப் பேசுவதைக் குறித்துப் பலபேர் ஆச்சரியங் கொள்ளக்கூடும். தியசாபிகல் சொசைட்டியிற் சேர்ந்து சில வருஷகாலம் மேற்புல சமரஸ ஞான நூல்களை யோதிய பின்பும், மேனாடுகளில் Occult Sciences (குப்த வித்யா சம்பந்தமான பல சத் சாஸ்திரங்களை) ஆராய்ந்த பிறகும், அமெரிக்காவில் யோகி ராமசரகா முதலிய பல மேதாவிகளுடன் நேரில் கண்டு பிரபஞ்சோற்பத்தி•ஜீவோற்பத்தி முதலிய விஷயங்களைக் குறித்து ஆராமையோடும் சம்பாஷித்த பிறகும் தாமே சைவ சித்தாந்தத்தை யெட்டியறியு மாற்றலடைந்தேம்.

அது வரைக்கும் "எல்லாமாயு மல்லவுமான" பொருளின் கர்ப்பத்தில் சர்வ சங்கார காலத்தில் மூலப் பிரகிருதி யொடுங்க, அவள் கர்ப்பத்தில் கண்திறவாமல் "வித்" ரூபமாய்ப் பலகாலம் கிடந்த சீவான்மாக்களின் ஸ்வரூப லக்ஷணத்தையும், சிவ சீவபந்துத்வ சம்பந்தங்களையும், பின்னர் சீவர்கட்குத் தனுகரண புவன போகாதிகள் கிடைத்து அவர்கள் இத்தொல்லுலகினிடைப் போக்குவரவைச் செய்வான் வெளியில்விழுத்து விடப்பட்ட நேர்மையையும், பரிணமிப்பின் (Evolution)• அழகையும் துன்பங்களையும், சம்ஸாரம் வந்த காரணத்தையும், சீவன் சிவனை நோக்கி மேனோக்கி நடக்கும் கம்பீரத்தையும், பிற• பெரு நலங்களையும் அணுவளவேனும் சைவ சித்தாந்தத்தைப் பின்பற்றி யறிந்தடங்கு மாற்றல் பெறாது, அதை இன்றே பெற்றேம். இனிமேல் வருங்காலத்தில் திரிபதார்த்த ஞான சம்பந்தமான வியாசங்கள் யாம் எழுதி வருங்காலத்தில் அறிவுடையுலகம் எமது ஹ்ருதயத்தைப் பூரணமாக அறியும்போலும். ஸ்ரீமத் J. M. நல்லசாமி பிள்ளை யவர்களின் நன்முயற்சியினாலும் அற்புத உழைப்பினாலுமே சைவசித்தாந்த ஆராய்ச்சி காலஞ்சென்ற புரொபெசர் மாக்ஸ்முல்லரை (மோக்ஷமூல பட்டாசாரியர்) யுள்ளிட்டார் ஆவலோடும் செய்யலாச்சுது.

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் ஹிந்து மதத்தைப் பிரகாசிக்கச் செய்தார்கள் அமெரிக்காவில் என்று பலர் கூறுப. ஸ்ரீலஸ்ரீ, சைவசித்தாந்த சண்டமாருதம் சூளை சோமசுந்தர நாயகரவர்கள் அக்காலத்தில் அமெ

ரிக்கா சென்றிருந்தார்களானால் பங்காளத்துச் சுவாமிகள் ஒருவர்பேரும் பிரகாச மடைந்திராது. சமயாதீதப் பெருவாழ்வைச் சொல்லாது சொல்லும் "சைவ சித்தாந்தம்" ஞானசூரியனை நின்று இன்று அமெரிக்காவில் அமெரிக்கர்கட்கு உள்ளபடியே நற்கதியைத்தருவதில் ஆக்ஷேபணையில்லை.

அல்லது 'மிஸ்டர் நல்லசாமி பிள்ளை யவர்களே அமெரிக்கன் பார்லிமெண்டுக்கு (of Religions) நேரில் போயிருந்தார்களாயாகில் இன்று மற்றைய அந்தங்களெல்லாம் மேனாட்டில் அந்த மடையா.

யாம் கூறும் உண்மைக்குப் புரொபசெர் மாக்ஸ் முல்லர், டாக்டர் போப், ரெவரண்டு F. குட்வுல் முதலிய படிப்பாளிகள் சான்று பகர்வர்.

பரிணும கிரமத்துக்கு (The Science of Evolution) முற்றும் ஒத்து வருவது சைவசித்தாந்தமே. பரிணாமம் இல்லாத விஷயத்தில். "சம்சாரம்" என்ற சப்தத்துக்கே அர்த்தமில்லாமற் போய்விடும். பந்த மோக்ஷம் என்ற வியவகாரமே யிராது, பாசவீக்கம் பாசநீக்கம் என்ற சொற்றொடர்கட்கே இடனிராது. குணம் குற்றம் முதலிய எவ்வுலகத்தினும் குறிகொள்ளாமற்போம்.

ஒருகாலத்தில் யாமும் அவசர புத்தியாலும் அறியாமையாலும் அவசர ஞானம் பேசினோம் எழுதினோம் என்று சத்தியத்தை முன்னிட்டு உலகத்துக்கு இன்று சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றோம். குழந்தை யறிவைக்கொண்டு குழந்தை விளையாட்டிலிறங்கிச் சிலகாலம் விளையாடிக் கிடந்த சிறு குழந்தையைப் பெரியோர் பரிதபிப்பாரே யன்றி வொருபோதும் வெறுக்கார். வி. முத்துகுமாரசாமி முதலியார், B. A.

பத்திராதிபர்—காளமேகம்.

***

## சமாசாரங்கள்.

தூத்துக்குடி சைவசித்தாந்த சபை உப அக்கிராசனாதிபதியவர்களின் உபந்நியாசங்கள்:—மார்ச்சுமீ 4உ தூத்துக்குடி சைவசித்தாந்த ரீடிங் ரூமில் 'திருக்குறள் முதற்பாட்டின் உண்மை', 9உ பூவாளூர் சைவசித்தாந்த சங்கத்தில் 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை,' 10உ 'ஆன்ம இலக்கணம்,' 14உ ஸ்ரீரங்கம் ஹைஸ்கூலில் 'அன்பு,' 16உ ஆலங்காடு சிவஞானப் பிரகாசமடத்தில் 'கல்வி', 17, 18உ தேதிகளில் திருத்துறைப்பூண்டி சைவசித்தாந்தசபையில் முறையே 'கடவுள இலக்கணமும்' 'ஆலய வழிபாடும்', 20உ திருவாரூர் ரீடிங் ரூமில் 'சிவஞானபோதம்', 21உ திருவாரூர் சிவஞானபோத முத்தமிழ் வித்தியாசாலையில் 'சமயக் கல்வியின் அவசியம்', 22உ. திருவாரூர் தேவாசிரிய மண்டபத்தில் 'சிவ தரிசனம்', ஏப்பிரல்மீ 3உ மேலைச்சிவப்பட்டி சன்மார்க்க சபையில் 'தெய்வ உபாசனை', 29உ திருத்துறைப்பூண்டி தாலூக்கா மண்ணுக்குண்டான் ஸ்ரீஞானசித்தி விநாயகர் ஆலயத்தில் 'அறஞ்செய விரும்பு'.



***

ஸ்ரீமான் K. U. பொன்னுசாமி முதலியாரவர்களின் உபந்நியாசம்:—உத்திரமேரூர் சைவ சித்தாந்த சபையின் காரியதரிசி ஸ்ரீமான் K. U. பொன்னுசாமி முதலியாரவர்கள் சென்ற மார்ச்சுமீ 8உ 'ஆலய வழிபாடு' என்னும் உபந்நியாசம். (2) தேவார பக்தஜன சபையின் அங்கத்தினர்கள் உத்திரமேரூரிலும் அதன் சமீபத்திலுள்ள ஆலயங்களில் திருமுறை ஓதவும் திருத்தொண்டு செய்யவும் தீர்மானிக்கப்பட்டார்கள். 23உ திருத்தணி என்னும் தணிகாசல க்ஷேத்திரத்தில் 'சித்தாந்தம்' என்னும் விஷயமாய் உபந்நியாசம் நடைபெற்றது. இச்சபையாரும், இதைச் சேர்ந்த தேவார பக்தஜன சபையாரும் 24உ அடியில்கண்ட தலயாத்திரை செய்து முடித்தனர். உத்தரமேரூருக்கு 27-மைல் தூரத்திலுள்ள திருக்கழுக்குன்ற மென்னும் தலத்திற்குச் சென்று மாலை 6-மணி முதல் 9-மணி வரையில் செங்கல்பட்டு சைவ சமயாபி விருத்தி சபையாரை உடன்கொண்டு கிரிவலம் செய்யப்பட்டது. 25உ காலை 6-மணி முதல் 8-மணி வரையிலும் ஷை தலத்தில் திருமுறை பாராயணத்துடன் கிரிவலம் செய்யப்பட்டது. 26உ காலை 11-மணிக்கு வாலாஜாபாத் (தண்டுசீவரம்) துக்குச் சென்று அத்தலத்தவர்களில் ஸ்ரீமான் அருணாசல முதலியார் முதலானவர்களால் செய்வித்த மகேசுரபூசையைக் கொண்டு சமாஜ விஷயமாக சில கனவான்களை சமாஜ மெம்பர்களாக சேர்க்கப்பட்டது. 26உ மாலை 6-மணிக்கு இளையனூர் வேலூருக்குச் சென்று தமிழ் வேத பாராயணமும், மாலை 2-மணி முதல் 3-மணி வரையில் ஷை தலத்திலுள்ள குகாலய மென்னும் மடத்தில், கல்வி, அறிவு ஒழுக்கம் என்னும் விஷயத்தைப்பற்றி உபந்நியாசம் செய்யப்பட்டது.

***

ஸ்ரீமான், T. S. தியாகராஜ ஞானியார் அவர்களின் உபந்நியாசங்கள்:—சைவசித்தாந்த மகா சமாஜத்தின் கவுரவப் பிரசாரர்களில் ஒருவராகிய ஸ்ரீமான் T. S. தியாகராஜ ஞானியார் அவர்கள் மார்ச்சுமீ 4உ நாகை மாணவர் தமிழ் சங்கத்தில் "இராஜபக்தி" "தெய்வபக்தி" என்னும் விஷயமாய் உபந்நியாசம் செய்தார்.

***

ஸ்ரீமான், S. சச்சிதானந்தம் பிள்ளையவர்களின் உபந்நியாசங்கள்:—சைவசித்தாந்த மகா சமாஜத்தின் காரியதரிசி ஸ்ரீமான் S. சச்சிதானந்தம் பிள்ளை B. A. அவர்களால் மார்ச்சுமீ 2உ திருவொற்றியூரில் மகிழடிசேர்வைக்கு வந்திருந்த ஜனசமூகத்தில் சமாஜத்தின் பிரசாரங்களை விளி

யோகித்து உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. 3௳ சென்னை கடற்கரையோரம் நடந்த மாசிமகம் திருவிழாவில் சில உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. 9௳ சென்னை பட்டாளம் பக்கிங்ஹாம், கர்னாடிக் பஞ்சுயந்திர சாலைகளில் வேலை செய்யும் கூலிகளுக்கு, சமயத்தைப்பற்றிய உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. 23௳ திருவல்லிக்கேணியில் ஒரு உபந்நியாசம் நடைபெற்றது.

***

இவ்வாண்டு மார்ச்சு௴ 17ந்தேதி ஞாயற்றுக்கிழமை யன்று சென்னை சிவனடியார் திருக்கூட்டத்தின் பதின்மூன்றாவது வருடோற்சவமானது கொண்டாடப்பட்டது. சித்தாந்சரபம்-அஷ்டாவதானம்-பூவை கலியாணசுந்தரமுதலியாரவர்கள் அக்கிராசனம் வகித்தனர். அது காலை இராயப்பேட்டை ஸ்ரீமான் திரு-வி-கலியாணசுந்தர முதலியாரவர்கள் 'அத்வைதம்' என்னும் விடயத்தைப்பற்றி மிகத்தெளிவாகவும் அழகுபெறவும் ஒரு உபந்நியாசம் செய்தார்கள். பிறகு ஸ்ரீமான். ச. சச்சிதானந்தபிள்ளை B.A. அவர்கள் கேட்போர் மனதில் நன்குபதியுமாறு சைவசமயத்தின் தற்கால நிலைமையைப்பற்றிய உண்மைகளைச்செவ்வனே விளக்கிக்காட்டினர். மிக்க ஆர்வத்தோடும் உண்மையோடும் செய்யப்பட்ட அவ்வுபந்நியாசத்தினிறுதியில் இரண்டு முக்கியமான திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்று பிள்ளையவர்கள் வற்புறுத்திக்கூறினார்கள்: ஒவ்வொருபெரிய ஆலயத்திலும் கிரமமாகக் குறித்தகாலங்களில் கல்வியும் சமயப்பற்றும் நல்லொழுக்கமுமுடையவர்களை வேதனங்கொடுத்தாயினும், வரவழைத்து அவ்வாலயத்தில் வழிபட வருகின்றவர்கட்கு இறைவனிடத்தும் மன்னுயிர்களிடத்தும் குற்றமில்லா உண்மையன்பு நிகழுமாறு நற்பயன் விளைக்கத்தக்க சமயபோதனைகள் யாவரும் எளிதிலுணருமாறு செய்யப்படவேண்டுமென்பது ஒன்று; மற்றொன்று சைவாலயங்களில் சனங்கள் விசேடமாகவருங் காலங்கள் தோறும் இன்னிசைக்கருவிகளுடன் திருமுறைப்பாராயணம் நடக்குமாறுதக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்பதாம். இவ்விரண்டு காரியங்களையும் ஒழுங்குபெற நடத்துவதற்குயாவரும் கிடையாவிடில் இவை இன்றியமையாச் செலவுகளென எண்ணி ஆலய அதிகாரிகளே கோயில் வருகையிலிருந்து வேண்டிய திரவியத்தை எடுத்துபயோகித்தல் உசிதமேஎன்று கூறினர். நமது தேவாலயங்களுட்பல தமது பரிசுத்தத்தை இழந்து போயிருக்கின்றன வென்றும், சனங்கட்குச் சமயபோதனை செய்யாது வாளாவிருந்தால் அவ்வாலயங்களால் எவ்வித பொதுநன்மையும் உண்டாகாதென்றும் புனிதத்திற்குறைவிடமாயிருக்க வேண்டிய ஆலயமாதிய இடங்களில் நாளுக்குநாள் வீண்டாம்பீகமும் அக்கிரமங்களும் வளர்ந்து வருவதை உடனே நிறுத்துவது நமது சமயம் சேவிக்கவே



ண்டியதற்குச் செயற்பாலதாகிய தலைக்கடமை என்றும் பேசி முடித்தனர்.

***

கடந்த ஏப்ரல்௴ 29௳ திங்கட்கிழமை சென்னை மெய்கண்டசந்தான சபையின் சார்வாக அருணாசலேஸ்வரர் மண்டபத்தில் உபந்நியாஸங்கள் செய்யப்பட்டன. அன்று கனம் பொருந்திய உயர்தர நீதித்தலநியாயாதிபதியாகிய திவான்பஹதூர் T. சதாசிவஐயரவர்கள் சபாநாயகராய் வீற்றிருந்தனர். அவர் தமது முடிவுரையில் வேதங்களைப்பற்றிப் பின்வருங்கருத்துக்களை வெளியிட்டனர்:—மகரிஷிகளும் முத்தாத்மாக்களும் உலகத்தார்க்கு வெளிப்படுத்திய உண்மைகள் தாம் வேதங்கள். சமாதிநிட்டையில் இறைவனது கூட்டுறவைப் பெற்றானந்தித்த பக்தர்கள், அந்நிலையினின்றும் எழுந்த மன்னர், பாசவயத்தராகிய சாமானியர்களுக்கு நல்லறிவு பிறந்து ஈசனையடையப்பாடுபட நிமித்தம், தாம் அந்நிட்டையில் கண்ட அநுபவங்களைச் சாந்தமனத்தோடு வெளிப்படக்கூறினர். இத்தகைய அனுபவவர்ணனைகள் தாம் வேதங்கள். இவைகள் வடமொழி தென்மொழி ஆங்கில மொழி மற்றெம் மொழியிலிருப்பினும் அவைகள் வேதங்களெனவே மதிக்கப்படும். வடமொழியானது மற்றெல்லா மொழிகளைவிட எவ்வாற்றானும் சிறந்தது என்று சொல்லவியலாது. பண்டைக்காலத்திற் பிராமணர்கட்கு அதிக செல்வாக்கு இருந்தமையால் அவர்கள் வடமொழி வேதங்களை வேறெவரும் ஓதலாகாதென அறுதியிட்டனர்.

அன்றியும் வடமொழி பலருக்குத் தெரியாமலிருந்தது. எல்லாரும் உணர்வதும் அசாத்தியமாயிருந்தது. வேதங்கள் தந்திரங்கள் மந்திரங்களெனப்படும் சிலகூறுகளுண்டு, அவையிற்றை உச்சரிப்பதால் மழை பெய்வித்தல் முதலிய சிலகாரியங்கள் செய்யப்பட்டன. ஆனால் இவைகள் உண்மை ஞானத்தை போதிப்பன வன்றாகையால் அதிகமேம்பாடுடையனவன்று. அம்மொழி வெகுசிலருக்கே தெரிந்திருந்ததாகையால் பெரும்பாலோர்க்கு விழுப்பயன் தாரா தொழிந்தது. தமிழ் மொழியோ பல்லோருமறிந்துள்ள மிகப்பழைய தோர் பாஷை. இது குலம் கோத்திரம் சமயம் முதலிய வேற்றுமைபாடுகளை நோக்காமல் யாவர்க்கும் உண்மைகளை மறைக்காது வெளியிடுகின்றது. தமிழ் வேதங்களிலுள்ள முக்கிய போதனைகள் யாவரும் கொள்ளத்தக்கவை. இவைகளில் சமயப்பொறை நன்கு காணலாம். சத்தியம் என்றும் ஒருபடித்தாதலால் பண்டைக்காலத்தான்றோரெவரும் அவ்வுண்மையையே கூறினர் ஆதலால் சமயப் பொறையும் விசாலமான அறிவும் காணப்படுதல் அதிசயமன்று. இன்னும் தமிழ் வேதங்கள் சமரஸம் போதிக்கின்றன. எல்லாக் கொள்கைகளையும் தம்மகத்தே அடக்கி நிலவுகின்றன. மிகச்சாமானியராகிய

"விரிவிலா அறிவினர்கள்" தாம் வேற்றுமைப்பாடுகள் உளவென வெருண்டு ஒருவரோடொருவர் மாறுபடுகின்றனர். கடின ஓசையோடு இயங்கும் வடமொழியானது 'தமிழ் மொழியைப்போன்று அவ்வளவு மனமுருக்கும் இயல்பினதன்று. தென் மொழியின் இன்னோசை வன்னெஞ் சத்தையுமிளகச்செய்து ஆனந்தக்கண்ணீர் பெருக்குகின்றது. இவ்வண்ணம் நமது உள்ளத்தை நெகிழ்த்தும்' ஆற்றல் வடமொழிக்கில்லாதது அதற்கொரு பெருங்குறையே. அப்பமூர்த்திகளும் ஞானசம்பந்தரும் மறைத்து வைக்கப்பட்டிருந்த உண்மைகளைத் தமிழ் நிலமாக்களனைவரும் அறியுமாறு பகிரங்கப்படுத்தினர். இதனைத்திருமறைக்காட்டில் வேதத்தால் பூசித்து மூடப்பட்ட திருக்கதவைத் திறந்த அற்புதமானது குறிக்கின்றது.

***

பாலசைவசபை—இச்சபையானது சென்னைச் சிவனடியார்த்திருக்கூட்ட சபாமண்டபத்தில் தாபிக்கப்பட்டிருக்கிறது. இச்சபையின் அங்கத்தினர் பிரதி ஆதிவாரம் காலையில் பெரியபுராண உபந்நியாசஞ் செய்து பழகுகின்றனர். மாலையில் இச்சபையின் காரியதரிசி மணி-திருநாவுக்கரசு முதலியார் திருவிளையாடற்புராணம் பிரசங்கித்து வருகின்றனர். புதவாரம் அங்கத்தினருக்கு ஷை காரியதரிசி இலக்கிய இலக்கணபாடம் கற்பித்துவருகின்றனர். சுக்கிரவாரங்களில் தேவார பாராயணஞ் செய்து வருகின்றனர். இச்சபை நாளுக்கு நாள் விருத்தியாகும்படி திருவருளைச் சிந்திக்கின்றனம்.

---

## புத்தகவரவு.

காரோனேஷன் தமிழ் மொழியகராதி—நமது காருண்ணியசக்கிரவர்த்தியாராகிய ஜார்ஜ்மன்னர் தமது அருமைப்பத்தினியாருடன் டில்லியாநகரத்தில் முடிதரித்த வைபவத்திருவிழா ஞாபகார்த்தமாக, சென்னைச் சூளை நிரஞ்சனிவிலாச அச்சுக்கூடத்தலைவர் பி-வே-நமசிவாய முதலியார் முன்னிருந்த தமிழ் அகராதிகளினும் ஆயிரங்கணக்கான சொற்கள் வண்ணக்களஞ்சியம் காஞ்சி-நாகலிங்க முதலியாரவர்களைக் கொண்டு சேர்ப்பித்தும் பார்வையிடுவித்தும் ஷைசக்கிரவர்த்தி சக்கிரவர்த்தினிபடங்களுடன் அச்சிட்டிருக்கின்றனர். அன்றியும், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், முதலிய மெய்க்கண்டசாஸ்திரங்களை ஆங்கிலேயத்தில் மொழிபெயர்த்து மேற்றிசையிலும் சிவமணங்கமழச் செய்து வருபவரும், சித்தாந்ததீபிகை யென்னும் ஆங்கிலேயபத்திரிகைத்தலைவரும், குண்டூர்டிஸ்டிரிக்கட் முனிஸீப்புமாகிய ஜே. யெம். நல்லசாமிபிள்ளை B.A., B.L., அவர்கள் ஆங்கிலேயத்தில் அருமையாக வெழுதித்தந்த முகவுரையினையும் சேர்த்துள்ளார். இதன் விலை ரூபா. 4—0—0.



***

திருத்தணிகையாற்றுப்படை மூலமும் விருத்தியுரையும்—திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்திலெழுந்தருளிய ஆசிரியர் சிவஞான முனிவர் மாணாக்கருட் சிறந்த கச்சியப்ப முனிவர் தமது மாணாக்கர் கந்தப்பையருக்குண்டாயிருந்த குன்மநோயினை மாற்றியருளப் பாடிய திருத்தணிகையாற்றுப்படைக்கு, சென்னையிற் பிரசித்தியுற்றிருந்த வித்துவசிரோமணி அஷ்டாவதானம் புரசை சபாபதி முதலியாரவர்கள் பதவுரை யொன்றும், விருத்தியுரை யொன்றும் எழுதிவைத்திருந்தனர் இவ்விருத்தியுரையினை ஷை முதலியார் தமையன் குமாரர் த. பு. குப்புசாமி முதலியாரவர்கள், சித்தாந்த சரபம் அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்களைக் கொண்டு பார்வையிடுவித்து அச்சிட்டுள்ளார். இதன் விலை அணா. 0-12-0

***

ஞானகாந்தி—இப்பெயர்கொண்ட புத்தகம் தற்கால விபரீத நாகரீகத்தால் விளையும் கெடுதிகளை நன்கு எடுத்து விளக்குகின்றது. இக்காலத்துப் பிள்ளைகள் கல்வியிலரேனும் வேடத்தால் நடித்துப் பிறமாதரை வஞ்சிக்கின்றமையும், பெண்களுக்கு அத்தியாவசியமாகப் போதிக்கவேண்டிய இல்லறதர்மம் தெய்வ விசுவாசம் கணவனிடத்துப் பக்தி முதலிவற்றைப் போதியாது இலௌகீகவித்தையினையும் சங்கீதத்தினையும், போதித்தலினால் அப்பெண்கள் இல்லறதர்மத்தினின்றும்வழுவி விலைமகளிர்களுக்கு ஒப்பாவாரென்பதையும், குலமகளிர்களுக்கு இல்லறத்தில் எவ்வளவு இடுக்கண் நேரிடினும் கொழுநனிடத்துள்ள விசுவாசத்தை விடாரென்பதையும் செல்வந்தர்கள் துஷ்ட சகவாசத்தால் பொதுமகளிர் வலையிற் சிக்குண்டு பின்னர் பெரியோர் சிநேகத்தால் திரும்பி நல்லொழுக்கமுடையவராவாரென்பதையும் மந்திரவாதிகளுடைய ஆடம்பரநோட்டத்தால் மயங்கி அவர்கட்குப் பொருளீந்து யாதொரு பிரயோஜனத்தையுமடையாமல் அநேகர் கெட்டாரென்பதையும், விலைமகளிரும் ஒவ்வோர் காலத்தில் தாங்கள் செய்த தீமைகளை யெண்ணி யெண்ணி தங்கள் நடையினின்றும் மாறி நல்வழிக்குத் திரும்பிவிடுவார்களென்பதையும் இந்நூல் நன்கு விளக்குவதுடன் ஆங்காங்கு திஷ்டாந்தமாக சமயோசிதமான அநேக செய்யுள்களும் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இந்நூல் இயற்றியவர் சென்னை வால்டாக்ஸ் ரோட்டு செ. இராஜு செட்டியாரவர்கள்.

## சமாஜத்தின் அங்கத்தினர்கட்கு

# ஒரு முக்கிய விண்ணப்பம்.

---

"சித்தாந்தம்" என்னும் இப்பத்திரிகையைப் பிரசுரிப்பதற்கு வேண்டிய அரசாங்கத்தாருத்தரவு சென்ற மே மாத முதலிற் கிடைத்தது. ஆதலால் ஜனவரி முதல் பிரதிமாதமும் பத்திரிகையை வெளியிட முடியாது போயிற்று. எல்லா அங்கத்தினர்களது சந்தாத்தொகைகளையும் வி. பி. மூலமாய்ப் பெறுதல் கஷ்ட சாத்தியம். இதற்குத் தபாலாபீஸதிகாரிகள் ஒவ்வொரு மாதத்தில் பிரசுரிக்கப்படும் சஞ்சிகையின் பிரதிகளெல்லாவற்றையும் ஒரே தினத்தில் தபாலிலனுப்ப வேண்டுமென்று செய்யும் நிர்ப்பந்தம் ஒரு காரணமாயுளது. எல்லாரிடமிருந்தும் சந்தாவை வி. பி. மூலமாய்ப் பெறுதற்கு நெடுநாட்செல்லும். பொருள் தக்ககாலத்தில் கைக்கொடாமையால் சமாஜம் செய்ய மேற்கொண்டுள்ள பல பொதுக்காரியங்கள் தடைபட்டு நிற்கின்றன. ஆதலால் இதுவரையில் வி. பி. பார்ஸல் பெறாதும், இவ்வருடத்திய சந்தா செலுத்தாமலும் உள்ள அன்பர்கள் தயை கூர்ந்து தமது சந்தாத்தொகைகளைக் குறைந்தது ஒரு ரூபாயும் தபால்கூலிக்காக மூன்றணாவும் மணியார்டர் மூலமாகப் பின்குறிக்கப்படும் உத்தியோகஸ்தருக்கு கூடியசீக்கிரம் அனுப்பிவிடுமா மிகவும் விநயத்தோடு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சில கனவான்கள் வி. பி. யாலனுப்பட்ட சஞ்சிகைகளைப் பெற்றுக் கொள்ளாது திருப்பிச் சமாஜத்திற்கு நட்டம் உண்டாக்கினர். தங்களுக்குச்சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ள இஷ்டமில்லையென்று முன்னமே தெரிவிக்கவுமில்லை. இத்தகைய புண்ணியர்களது தொகை பெருகாதிருக்குமாறு திருவருள் துணை செய்வதாக. சந்தாத்தொகைகளை மணியார்டர் மூலயாக அனுப்புபவர்களுக்கு "சித்தாந்த" ப்பகுதிகள் பிரசுரிக்கப்பட்டவுடன் தவறாமல் அனுப்பப்படும்.

மானேஜர், சித்தாந்தம்.

சந்தாத் தொகைகள் பின்குறிக்கப்படும் விலாசத்திற்கு அனுப்பவும்.

இ. ஆதிமூல முதலியார்,
சைவசித்தாந்த சமாஜம் பொக்கிஷதாரர்,
43, டானேயப்பன்தெரு, சென்னை, E.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்.

தொகுதி ௧.] 1912-ஞு மே, ஜூன் மாட [பகுதி ௫, ௬.

## சித்தாந்தஞான விளக்கம்.

---

### ஞான வேது.

ஒரு நல்வினை செய்வான் தொடங்கி அறநூலை யாராய்வது உணர்வின்கண் விடயமாய் வரும் பொழுதே தம்மாற் பெறப்படும் காமியப் பயன்களை உடன் கூறிக்கொண்டே வருகின்றன வாயவேள்வி முதலிய அறங்களின்பயனாகிய வின்பம்! முன்னர்ப் பசித்துண்டு பின்னும் பசிப்பானுக்குஅவ்வுண்டியான் வரும்இன்பத்தை யொக்கும். ஆகலான், ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்த முறுத்துதற்கண் பொன்விலங்கும் இரும்பு விலங்கும் போலத் தம்முட்சமப்படுத்து உரைப்படுவனவாகிய அறம் பாவம் இரண்டும் தம்மைப்போல் அனுபவ மாத்திரையாற் கெடுதலின்றி மேன் மேன் முறுகி வளர்வன வாயசரியை முதலியதவங்களானே நேராக வொத்தால், அந்நவமுதிர்ச்சியுடைமையான் ஞானகுருவைத் தேடி அவரைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடுதல், சித்தாந்த ஞானிகளுடன் கலந்து கூடல், அவர்தம் திருவேடத்தையும் ஆலயத்தையும் முதல்வனெனக் கண்டுவழிபடுதல், இறைவனைத் தியானத்திலே தரிசித்தல், உடற்கண் வேர்வை யரும்புதல், கண்களில் ஆனந்தநீர் விடுதல், உடனடுங்கல், வசனங் குழறுதல், உளம் வெதும்பி மயிர்க்குச் செறிதல் முதலிய ஞானமுதிப்பதற் கேதுவாம்.

### ஞானதாரம்.

கண்ணுக்குக் காட்டான இரவி யொளி போலவும், நிறங்களைக் கவரும் படிகத்திற்கு இரண்டையு மொன்றென் றும்படி பற்றுவிக்கும் ஆதித்தனைப் போலவும், நான்கு பூதத்திற்கும்ஆதாரமாகாய மானாற் போலவும், உடலுக் குயிர்போலவும், நாவாய்க்

குச் சமுத்திரம் போலவும், புட்பத்திற்கு நீர்போலவும் ஞானம் ஆன்மாவிற் காதாரமாம்.

ஞான நிலை.

உயிர் நீங்கக் கூடி யறியுங் கருவி நீங்குமென்றும், அறிவிப்பான் வசமாகத்தன் செயலு மொழியு மென்றும் விலகி, அறிவின் போத பேதத்தை விட்டு அதீதத்திற் சேராமலும், கவலையினிறங்காமலும் பலகால் தியானிக்கக் கண்ணாடியை விளக்க ஒளி மிகுதியா மாறுபோல ஞானந் தோன்றும்,

ஞான வளர்ச்சி.

குளத்தின் நீர் பாசியால் மறைப்புண்டா லதனை யொருகல்லெறிந்த விடத்தே அப்பாசி நீங்கு மாறு போலவும், அக்கினி விளங்காத நேரத்து வாயுவை யுண்டாக்கு மாறு போலவும், புடவையை எற்றுமது போலவும், நூற்பொருளைப் பலகாலுநவிலுவது போலவும் திருவருளிலே 'யுறைந்து சித்தாந்த மகாவாக்கியத்தைநாடோறும் பயின்று', அங்ஙனம்பயின்று வருகையில், பயிற்சி வயத்தால் முன்னர்த் தான் நோக்கிய பாசத்தைநோக்கி நிற்கும் வாசனையை நீக்குதற்குப் பஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரித்துவரில் ஞானம் வளரும்.

ஞான பேதம்.

பாசஞானம், பசுஞானம், பதிஞானமென மூன்றும். பாசஞானமாவது ஆன்மா போகவேதுவான போது இச்சையாகப் பற்றி அறிதற் கருவியாய் அறியு மதனைப் பாசஞானமென்றறிவதாம். இதுசுடர்விளக் கிருக்கு மிடத்தினையும் விளக்கென்றற் போலாம். பசுஞானமாவது திருவருள் காட்டக் கண்டறிந் தறிவிப்பதாம். இது குருடனுக்குக் கோல்போலாம். பதிஞானநடத்துமளவில் இறைவ னொழியப் பிரகாசிக்க மாட்டாது ஆதித்தனுக்குக் கிரணம்போல வென்று கண்டு இறைவனெல்லா வற்றிற்கும் முதலென்று காணல்.

ஞான மகிமை.

பாசவிருத்தியில் அஞ்ஞானமும் பாசஞானமாம், அஃதனேகமாம். அவை முக்கூற்றுப் புறச்சமயஞானங்களும், சாத்திரஞானமும், சுருதிஞானமும், புராணஞானமும், சதுர்ட்டிகலாஞானமும், யோகஞானம், மாயாஞானமும், பேதஞானமும், மாயாவாதஞானமு முதலியனவாம். பசுஞானமும்பலவுள. அவை வடிவுகளைப் பற்றியும், வடிவறுதிகளைப் பற்றியும், நீரும் நீருமென்றும் நட்சத்திரமு மாதித்தனுமென்றும், இரதகுளிகைபோலவென்றும் செம்பு பொன்னுமாம்போலவென்றும், இறைவனே யெல்லாந் தானே யென்றும், உப்பு நீரும் போலவென்றும், இரும்புமெரியும்போலவென்றும், எரியும் நீரும் போலவென்றும், சொல்லுமவதரமெல்லாம் ஆன்மபோதஞ் சேட்டித்தலால் இவையெல்லாம்பாசஞானமாம். பதிஞானமாவது விசாரித்துச் சொல்லவும், ஆன்மபோதத்தாற் கொள்ளவும் அரியது.



ஞான சுகம்.

"எங்ங னிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அங்ங னிருந்ததென் றுந்தீபற
அறியு மறிவதன் றுந்தீபற" என்றதனாற் காண்க சுபம்.

மணவழகு.

---

## விச்சின்றிவிளைவு செய்குவாய்.

"வித்தின்றி விளைவா யெனப் பொருள் பட்டுத் திருமேனி கொள்ளுமுறைமை யுணர்த்திய தூஉம்ஆம்" வித்தின்றி விளைந்த தென்றூர் பிறரும் "விச்சின்றி நாறு செய்வானும்" என்பதற்கும் இவ்வா றுரைத்துக் கொள்க. அவ்வாறன்றிச் சித்தாந்தத்தோடு முரணிப் பொருள் செய்தல் பொருந்தாமையறிக. இனி விச்சென்பது காரணப் பொதுமையை யுணர்த்தாது முதற் காரணமாத்திரையே யுணர்த்துமெனக் கொள்ளினும் அதனால் ஈண்டும் படுவதோ ரிழுக்கின்றது. என்னை? உலகத்தில் காணப்படும் வித்துக்க ளெல்லாம் அவ்வத் தொழில் செய்வோர்க்கு வேண்டுழிக் கைகூடாது முயன்று தேடிக் கோடற் பாலனவாய்க் காலத்தானும் இடத்தானுமேக தேசமாய் வேறு நிற்பனவா மன்றே? அத்தகைத் தாகிய முதற்காரணமின்றியே தன்போல நித்த வியாபகமாய்த் தன்னுள் வியாப்பியமாய்த் தன்னையே தாரகமாய்க் கொண்டு வேறின்றி யுடனிற்ப தொன்றனே விளைவு செய்வாயென, ஏனை முதற் காரணங்க ளோடு முதல்வன் செய்திக்கு முதற்காரணமாய்ச் சகத்தைப் படைப்போனென் றோதிய சிவபுராணத்திற்கு மிதுவே கருத்தென்பது சீகண்ட பாடியத்திற் காண்க."

(இது திராவிடமாபாடியம் இரண்டாஞ் சூத்திரத்திற் கண்டது.)

மணவழகு.

# சமயதருமக்கடமை.

(முன்தொடர்பு தொகுதி 1, பகுதி 3, 4, பக்கம் 112:)

4. நற்சமயபத்திரிகைகள்:—சமயபத்திரிகையாவது மனிதர்களுடைய க்ஷேமத்திற்கு வேண்டிய நற்போதனைகளை எடுத்துப்போதிக்கும் கலாரத்நாகரமாம். அதுவொன்றோ, மனிதர் தம் முள்ளங்களிற்றோன்றும் புருஷார்த்த சாதனமாகும் அபிப்பிராயங்களை ஒருவர்க்கொருவர் அறிவித்துத்தர்க்கித்துத் தெளிதற்கும், தெளிந்தபடி அனுட்டித்துப் பயன் அடைதற்கும், கருவியுமாம். சூரியன் தன் கிரணசமூகத்தால் இருளையோட்டிப் பொருள்களைக் கண்ணுக்குக்காட்டுதல் போலச் சமயபத்திரிகை தன் போதனைகளால் அஞ்ஞானத்தையோட்டி மனிதர் அறிவிற்குப் பொய்ப்பொருளின் வேறாகமெய்ப் பொருளை இனி தெடுத்துக் காட்டும் ஞானசூரியனும். அது மூர்க்கசனங்கள் செய்து போதரும் அக்கிரம உஷ்ணத்தால் தகிக்கப்பட்டு வாடி நிலை தளரும் சன்மார்க்கப் பயிர் தழைத்தோங்கும்படி ஞானமிர்த தாரைகளைக் காலந்தோறும் வருஷித்து அதனைப் பாதுகாக்கும் கருணைமேகமுமாம். பத்திரிகை தத்துவ உபதேசங்களை இனி தெடுத்துத்து போதித்தலின் மாந்தர்க்கு ஆசிரியரை யொக்கும். செவிக்கினிய உணவுகளைக் காலத்துக்கேற்பப் பிரியத்தோடு உதவுதலால் தாயரை யொக்கும். நல்ல கல்விகளைப் பருவத்துக்கேற்கப்பயிற்றலின் தந்தையரை யொக்கும். இனிமையளாவி இடித்துறுதி கூறுதலின் நட்டாரை யொக்கும். துஷ்ட நிக்கிரகஞ் செய்து இஷ்ட பரிபாலனஞ் செய்தலின் நீதி மன்னரை யொக்கும். எத்திற நன்மைகளும் பத்திரிகையால் விளையும். அத்தனை மாட்சிமையுடைய சமய பத்திரிகைகளை ஸ்தாபித்து நடத்தி வருதலின் மிக்க தருமம் மற்றொன்றில்லை. பத்திரிகைகளின் மாட்சிமையும், அவற்றால் மனிதர்களுக்கு உண்டாகும் நன்மைகளும் நம்மவர்களுள்ளே பெரும் பாலார்க்கு இன்னும் நன்கு புலப்படாதனவே. நம்மவருள் கல்விகேள்விகளால் நாகரீகம் எய்திய உயர்தரத்து வித்வான்கள் தாமும் பத்திரிகை நலத்தை மெய்த்திறமாக அறியாதிருப்பாராயின், மற்றையோர் அதன் பெற்றியை அறியாதிருக்கிறார்களென்றல் வீண் வார்த்தையேயாம். உண்மையாக விசாரித்துச் சொல்லுமிடத்து நாம் நாகரீகராய் வாழ்தற்குக் காரணம் பத்திரிகைகளென்றே சத்தியமாய்ச் சொல்லலாம். எவ்விடத்தும், எக்காலத்தும், யாவர்க்கும், அவர் விரும்பும் புருஷார்த்த சித்திகளை விரும்பியபடி வெளிநின்று பிரசாதிக்கும் கண்கண்ட தெய்வம் பத்திரிகைகளேயாம். மண்கொண்ட வெண்குடைக்



கீழாக மேற்பட்ட மன்னரும் பத்திரிகைகளின் பண்கண்டு சிரமேற் கொள்வரேல், அப்பத்திரிகைகளை விண்கண்ட சமயத் தெய்வ ரூபமாகவிவேகிகள் மதித்துப் பாராட்டல் வேண்டும் என்பது துணிபு.

இத்திராவிட தேசத்தில் பற்பல பத்திரிகைகள் அங்கங்கே பலரால் காலந்தோறும் தொடக்கஞ்செய்யப் பட்டன. அப்படித் தொடக்கஞ்செய்யப்பட்ட பத்திரிகைகளுள் இடையூற்றினால் நடைபெறா தொழிந்தன பல. இடையூறின்றி நடைபெற்று வருவனசில. நடைபெற்று வரும் சில வற்றுள்ளும் சமய விஷயம் போதிப்பன இரண்டொன்றே. சமயவிஷயமே போதிக்கும் பத்திரிகைகள் மிகவும் அஃகியிருத்தலினாலே அதனை விருத்திசெய்யும் தொழிற்றுறையுள் நாம் இறங்கவேண்டும். அவ்வாறு இறங்கற்கு நமக்குப் பொருள் வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். அப்பொருள் சேர்தற்கு தருமரூபமாக ஒவ்வொருவரும் உபகரித்தே தீரவேண்டும்.

5. அரியநூல்களை அச்சுவிமானத்தேற்றல்:—அச்சுவிமானம் ஏறப்பெறாதுள்ள நூல்கள் இன்ன இன்ன என்பதும், அச்சு விமான மேறாது இறந்த நூல்கள் இன்ன இன்ன என்பதும், அச்சு விமானம் ஏறுவதால் விளையும் பயன் இன்ன இன்ன என்பதும் எல்லாரும் அறிந்த விஷயமாகலின் அவற்றை இவ்விடத்து யாம்விரித்துரைக்க வேண்டுவதில்லை. யாம் அவற்றை எடுத்துரைப்பதினும் பிரம்மஸ்ரீ இரமண சாஸ்திரியார் அவர்கள் தம் அநுபவத்தை எடுத்துரைக்கின் மிக நன்றாயிருக்கும். சாஸ்திரியார் அவர்கள் பால் அநேக அரியஏடுகளுள்ளன. நம் அனாதரவால் அவைகள் வெளிவரா திருக்கின்றன.

மேற் சுட்டிப் போந்த சிவ புண்ணியங்களைச் செய்யத்திரண்ட திரவியம்வேண்டு மென்பது சொல்லாமலே விளங்கும். சிவபத்தர்கள் தங்களிடத்துள்ள திரவியத்தை மூன்று பாகம் பண்ணி ஒருபாகத்தைத் தங்கள் ஜீவனத்தின் பொருட்டு வைத்துக் கொண்டு மற்றையிரண்டு பாகங்களையும் சிவபுண்ணியங்களுக்குக் கொடுத்தல் வேண்டும் என்று சிவாகமங்கள்சொல்கின்றன. இப்படிச் செய்தல் அரிதாயினும், சைவசமயிகளாகிய நம்மவர்களெல்லாரும் உலோபஞ் செய்யாது, மேற்கூறிய சிவபுண்ணியங்களின்பொருட்டுத் தங்கள் தங்கள் வருவாயில் ரூபாய் ஒன்றுக்கு ஒரு தம்படி வீதமேனும் உபசரிக்கக் கடவர்கள். இப்படிச் செய்யின் "ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை" என்றபடியே நம்மவர்களால் உபகரிக்கப்படும் பொருள் மிகப் பெருகி வளர்ந்து, சிவ புண்ணியங்களெல்லாம் இனிது நிறைவேறுதற்குக் காரணமாகும்.

. கனம் பொருந்திய பிரபுக்களே, இத்தேசத்தவர் இவ்வூரவர்இவ்வியல்புடையர் என்று உங்களாலே நன்றாக அறியப் படாதவர்களும் தருமத்தை

நடத்துதற்கு அறிவும் ஆற்றலும் இல்லாதவர்களும் தருமத்திரவியத்தின் வரவு செலவு கணக்கை உலகத்தார் அறியும் வண்ணம் வெளிப்படுத்துதற்கு உடன்படாதவர்களுமாய் உள்ளவர்கள் உங்களிடத்தே தனித்தனிவந்து தருமத்தின்பொருட்டு யாசிக்கும் பொழுது, நீங்கள் பெரும் பான்மையும் தடைபேசாது உங்கள் உங்களால் இயன்ற மட்டும் திரவியம் உபகரிக்கின்றீர்களே. அத்திரவியத்தைப் பெறுவோர்களுள்ளே தாங்கள் சுட்டிய தருமத்தைத் தொடங்குவோர் சிலர். அவர்களுள்ளும் பெற்ற திரவிய முழுதையும் அத்தருமத்தில் உபயோகப்படுத்துவோர் மிகச்சிலர். திரவியம்பெறும் பொழுது முழுதையுந் தருமத்தில் உபயோகப் படுத்துங் கருத்துடையவருக்கும் அக்கருத்து அத்தருமம் முடிவு பெறும் வரையும்நிலைபெறுதல் அரிது. ஒருபோது நிலைபெறினும், அவர்காலத்திலே அத்தருமம் நிறைவேறுவிடத்து, அவருக்குப்பின் அத்திரவியம் அத்தருமத்தில் சேர்வது மிக அரிது அரிது. பெற்ற திரவியத்தைக் கொண்டு தருமத்தைமுடிப்பவருள்ளுஞ்சிலர் தாம் கல்வியறிவில்லாதவராதலாலும், கல்வியறிவுடையவரோடு சிறிதும்பரிசயமில்லாதவராதலாலும், எடுத்த தருமத்தை விதிப்படி நடத்தா தொழிகின்றனர். இங்ஙனமாதலின், நீங்கள்வருந்திச் சம்பாதித்த திரவியம் தருமத்தின் பொருட்டுக் கொடுக்கப்பட்ட விடத்தும், தருமத்தில் உபயோகப் படுவது சிறுபான்மை. இதற்குக் காரணம் நம்மவர்களுள் ஒரு தருமத்தை ஒருவரே தனித்து நடத்துதலாம்.

தருமங்களையும் அவைகளின் பலங்களையும் அவைகளைச் செய்யும் முறைமைகளையும் அறியவும் அறிவிக்கவும் வல்லவர் கல்வியுடையவராதலாலும், உபகரித்து முடிக்கவல்லவர் செல்வமுடையவராதலாலும், இவ்விருதிறத்தாருள்ளும் பலர் சபையாகத்திரண்டு விதானங்கள் செய்து கொண்டு அவ்விதானங்களின் படியே தருமங்களை நடத்தப் புகுவார்களாயின், அத்தருமங்களெல்லாம் விதிப்படி நிறைவேறும். அவற்றின் பொருட்டுக் கொடுக்கும் பொருண் முழுதும் தருமத்திற்றானே உபயோகப்படும். ஆதலினால், நம்மவர்களுள்ளே தருமஞ் செய்யக் கருத்துடையவர்கள்யாவரும் இச்சபையிற் சேர்தலே உத்தமோத்தமம்.

யாவராயினும் ஒருதருமத்தின் பொருட்டுத்திரவியம் உபகரிக்கச் சங்கற்பித்த அக்கணமே அத்திரவியம் தருமத்திரவியமேயாய்விடும். ஆகவே, அத்திரவியத்தைக் கொடா தொழிந்தவர் தருமத்திரவியத்தை அபகரித்த அதிபாதகராகி வருந்துவர். இது உண்மை நூற் றுணிவு. ஆதலினால், நீங்கள் தருமத்தின் பொருட்டுச் சங்கற்பித்த பொருளைச் சிறிதாயினும் தடையின்றி அச்சத்தோடும் அன்போடும் கொடுத்து விடல் வேண்டும்.

புண்ணியத்தையேனும் பாவத்தை யேனும் செய்தல், செய்வித்தல்,



உடன் படல், என்னும் மூன்றும் தம்முளொக்குமாதலால், நீங்கள் இத்தருமத்துக்கு உபகரித்தன் மாத்திரமன்றி, உங்கள் உங்கள் பந்துக்கள்இஷ்டர்கள் முதலாயினோருக்கும் சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் நல்லறிவுச் சுடர் கொளுத்தி, அவர்களையும் இயன்றமட்டும் இத்தருமத்துக்கு உபகாரகர் களாக முயலல் வேண்டும்.

இச்சபையார் எக்காலமும் ஐக்கமும், தருமத்திலே சிரத்தையும். இடையறா முயற்சியுமுடையவர்களாகி முன்னிற்குமாறு முதலில யாம் வேண்டிய கனம் பொருந்திய பிரபுக்களைக் கொண்டு விதானம் ஏற்படுத்திச் சமய தருமக் கடமை வாங்கி மேற்கூறிய தருமங்களை விதிப்படி நிறைவேற்றிக் கொண்டு வருவாராயின், மற்றை நாட்டார்களும் தங்கள் தங்கள் நாடுகளில் இப்படியே சபை தாபித்துச் சிவ புண்ணியங்களைப் பரிபாலனஞ்செய்துவருவார்கள். அப்பொழுது, அவைகளுக்கெல்லாம் இச் சபையார்களே மூலகாரணர்களாதலால், அப்புண்ணிய பலங்களிலும் இச் சபையார் பாகம் பெறுவார்களென்பதற்குச் சந்தேகம் உண்டோ இல்லை இல்லை.

இப்பொழுது நாம் கூறியவாறே நடத்தப்படின், சிவபுண்ணியங்களும் சிவ ஞானமும் அபிவிருத்தியாகும். ஆகவே, சபையார்களாகிய நீங்கள் உங்களுக்கும் பிறருக்கும் பயன்பட்டு உங்களுக்கு இனியர்களாகி உங்களிலும் இனியராகிய சிவ பெருமானுடைய திருவருளைப் பெறுவீர்கள். நமக்கு நம்மிலும் இனியர் சிவபெருமான், என்பது.

“என்னில் யாரு மெனக்கினி யாரிலை
யென்னி லும்மினி யானொரு வன்னுள
னென்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே.”

என்னும் தேவாரப்பதிகத்தால் பெறப்படும்.

திருச்சிற்றம்பலம்.

சே. சோமசுந்தரப்பிள்ளை.

# பதிபசுபாச விளக்கம்.

பதியென்றும் பசுவென்றும் பாசமென்றும் பதார்த்தம் மூன்று, பதியாவது சிவன்: பசுவாவது ஆன்மா; பாசமாவதுமல மாயை கன்மங்கள். இது தொகை. வகைசொல்லுவாம். இந்தப் பதார்த்தம் மூன்றும் சித்தென்றும், சடமென்று மிருவிதமாம். அதிற் சித்தைந்து வகையா யிருக்கும் அதாவது அனாதிமுத்தன் ஆதிமுத்தன், அபரமுத்தன், சீவமுத்தன், சீவான் மாவென்றைந்துவகை. அதிலே முற் சொல்லிய அனாதிமுத்தன் பரமசிவன். அவனுடைய கிரியா சத்தி சங்கார வியாபார பேதத்தாலே சம்புபக்ஷ நவந்திருபேத மென்று சொல்லப்பட்ட ஒன்பதுபேதமுண்டு. அதற்குவகை பிரும்மா, விஷ்ணு, ருத்திரன், மயேசுரன் சதாசிவன், விந்து, நாதம், பராசத்தி, பரமசிவமென்று ஒன்பது பேதம்.

இந்த ஒன்பது சிவபேத சிவனுக்கும் கிருத்தியமாவது பிருதிவியாதி சிவதத்துவ பரியந்தம் பதினாறண்டங் கூடிய பிரக்கிரியையண்டமென்னும நந்தபிரக்கிரியை யண்டங்களிலே, சத்திய லோகமுதல் அனாசிருத புவனமந்தமான தானங்களிலே, சுத்தமாயை, யசுத்தமாயைகளிலே யுண்டாகிய திவ்வியாதி திவ்விய வாத்தவமூர்த்திகளாயிருக்கும். அனுநவந்தருபேதமென்று சொல்லப்பட்ட பிரும்மா முதற்பரசிவமூர்த்தி பரியந்தம் அதிட்டானம் பண்ணுகிற கிருத்தியம். சம்பு பட்ச நவந்தருபேதத்தில் பிரும்மா முதனான்குஞ் சகளம். சதாசிவம்சகள நிட்களம், விந்து முதனான்கும் நிட்களம். சம்பு பட்சத்திற்கு மனுபக்ஷ பிரும்மாதிகளை யொட்டித்தியான சமாதிகணிமித்தம் சம்பு பக்ஷபதிற்குக் கற்பனை சரீரமாகவவனது சமவேதசக்தியினாலே கற்பிக்கப்படும் இந்த, ஒன்பதிற்குங்காரணம் சகளமாகிய அதிகாரரெனவும், சகளநிட்களமாகிய போகரெனவும் அமரநிட்களராகிய இலயரென்றும் மூன்றுவிதமாயிருப்பார். அதிலே இலயரைச் சொல்லுவாம்.



சிருட்டியாதி தூலபஞ்சகிருத்தியங்களை விட்டிருக்குங் கிரியா சத்திக்குச் சுவாபகாலத்திலே சூக்குமபஞ்ச கிருத்தியத்தையுமுடித்து முத்திவெற்றியாகிறவனுக்கிரக கிருத்தியமுமுடிக்குமியற்கையை பார்க்கிலும் நிர்விகற்பவறிவு மாத்திரத்தைப் பண்ணுஞ் ஞானசத்தி மாத்திரையா யிருத்தல் இலையமாம்.

சிவனென்றும், இலயரென்றும், சுத்தரென்றும், நிட்களரென்றும், இலயருக்கு நான்குபெயரெனவறிக.

சுத்தமாயையை யதிட்டித்து முத்திபண்ணுகிற கிருத்தியத்தைக் குறித்து அனாதிக்கிருந்தலயரென்றும், விந்துவை யதிட்டியாமல் சிவதத்துவத்தை யொட்டிப் பண்ணுகிற கிருத்தியத்துக்கு அதிக்கிருந்தலயரென்றும் பேரென்றறிக.

போகரைச் சொல்லுவாம். சூட்சுமகிருத்தியத்தைப் பண்ணிக்கொண்டிருந்த கிரியாசக்தி தூலபஞ்ச கிருத்தியத்திலேயுன்முகமாய் விந்துவையதிட்டித்து ஞானசக்தியாயுங்கிரியாசக்தியாயுமிருந்த போது போகர், உத்தியுக்தரென்றும், போகரென்றும் சதாசிவரென்றும், சகளநிட்களரென்றும்நான்குபெயர்பெறுவர்.

அதிகாரரைச் சொல்லுவாம். தூலபஞ்ச கிருத்தியத்திலேயுன் முகமாயிருந்தகிரியாசத்திக்குப் பின்னிது இப்படியாகக்கடவதென்று சங்காரத்தைப் பண்ணுஞ் சங்கற்ப விச்சா சத்திரூபமாயிருந்துள்ளளவில் ஈசனென்றும், அதிகாரரென்றும், சகளரென்றும், பிரவிருத்தரென்றும் அதிகாரருக்கும் நான்கு பெயருண்டு.

இந்த வதிகார சிவசங்கற்பத்தாலே சுத்தமாயையினுடைய சூக்ஷ்மபதார்த்தத்திலிருந்து சிவதத்துவ முதற் சுத்த வித்தையினாகுந்தத்துவ தாத்துவிக அண்ட புவனசூக்கும தேக, தூலதேகசாதாரண, வசாதாரண, சாதாரண சாதாரண சத்தாரக சகலமும் வைந்தவ காரியங்களுமுண்டாம். பின்னந்தப்பிரகாரம் காலசிருட்டியிலே, அவரேவலாலே அநந்ததேவர் சங்கற்பத்தினாலே சுத்தமாயையி னின்றும் ஏழிருபத்துனன்காயிருக்கும். சுத்தமாயா காரியதத்துவதாத்துவிக வண்ட புவனசூக்கும தேக தூலதேக சாதாரண சாதாரண, சாதாரண சகலமு முண்டாம்.

பின் மத்திமகால சிருட்டியிலே யனந்தேசுரரேவலாலே

ஸ்ரீகண்ட மூர்த்தி சங்கற்பத்தாலே பிரகிருதியினின்றும் குண முதற் பிருதிவியீறாகு மண்டபுவன தூலதேக போக்கிய வத்துக்களுண்டாம். பின்னந்த ஸ்ரீ கண்டரேவலாலே குணநிலைய பிரும்ம விஷ்ணுக்கள் சங்கற்பத்தினாலே ஏடிண்டத்தினும், பிரதமசிருட்டியிலே யோரண்டத்தினும், தூலதேக போக்கியவஸ்துக்கள் சிருட்டிதிதிகளுண்டாம் பிரும்மாண்ட நிலையகுணநிலையவிருபிரும்மாவுக்கும் தூலதேக போக்கியப் பொருள் சிருட்டிகிருத்தியம். பிரும்மாண்டநிலையகுண நிலயவிருவிட்டுணுக் கட்கும் தூலதேகப்போக்கியப் பொருள் திதி கிருத்தியம். பிருமாண்ட நிலையகாலாக்கினிருத்திரருக்கு தினப்பிரளயத்தாலே தம திருப்புத் தொடங்கிச் சொர்க்க பரியந்தம் சங்கார கிருத்தியம்.

குணநிலைய ஸ்ரீகண்டருக்கு பிருகிருதிக்குக் கீழஞ்சு கிருத்தியம் நடந்தாலும், மிச்சிரத்திர சங்காரம் நடவாதிருந்தாலும், மத்திமப் பிரளயத்தி லெட்டண்டமட்டுக்குஞ் சங்கார கிருத்தியம் பிரதானம்.

அநந்தேசுரனென்னு மயேசுரருக்கு அசுத்தமாயைக்குக் கீழஞ்சு கிருத்தியமும் நடந்தாலும், சுத்தமாயா காரியத்திலே திரோதானம் நடவாதிருந்தாலும் திரோதான கிருத்தியம் பிரதானம்.

சாதாக்கிய தத்துவவாச அணு சதாசிவருக்கு அனுக்கிரக கிருத்தியமொன்றுமே. இப்படியணுபட்சபஞ்ச கிருத்தியமும் பிரதானம். இப்படிச் சுத்தத்திற்றுமாயும், அசுத்தத்தி லனந்தாதிகளைக்கொண்டும் பஞ்சகிருத்தியமும் பண்ணுவித்தலாலே சம்புபக்ஷதிகார சிவன் ஏவுதற் கர்த்தா. அணுபக்ஷவணுசதாசிவனந்தேசுர ஸ்ரீகண்டதிரயம், பிரும்மவிட்டுணுசதுட்டயம், எல்லாமியற்றுதற் கர்த்தாக்களென்றறிக.

இப்படி இலயபோகவதிகார ராயிருந்து தூலபஞ்ச கிருத்தியம், சூக்கும பஞ்சகிருத்தியமும் பண்ணுவதெதன்பொருட்டு எனின், ஆன்மாக்கள்போக மோக்ஷமடையும் பொருட்டுக் கிருபையினாலே தனக்கொரு பிரயோஜனமுமின்றி ஆன்மாக்களே பிரயோஜனமடையும் பொருட்டென்றறிக.



பஞ்சகிருத்தியமாவது. மாயை, மகா மயைகளிலே சத்திரூபமா யொடுங்கியதத்துவங்களை சாத்துவிக குணாதிக்கத்தினாலே வெவ்வேறு ரூபங்களாக்குதற் சிருட்டி.

(தொடரும்)

இலக்கணவிளக்கபரம்பரை,
திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

---

## சிவன் போகமோக்ஷப் பிரதாயகர்.

---

இவ்வரிய திருப்பெயரால் ஸ்ரீ பரமசிவம் வேதாகமங்களில் துதிக்கப்படுகின்றார் (பிரதாயகர்—கொடுப்பவர்.)

போகமோக்ஷப் பிரதாயகர் என்னுந் திருப்பெயர் ஒன்றைவிசாரித்தலினாலேயே சகலக்ஷணம்-சீவலக்ஷணம்-பரலக்ஷணம்-ஆகியதத்து, வத்திரையங்களின் லக்ஷணங்கள் இனிது யிளங்கவந்து, பரம்பொருளாவார் இவர் எனத் துணிதற்கு ஏதுவாகும்.

சிவன் அநந்த சக்திமான் என்று வேதாகமங்களில் சொல்லப்படுகின்றனர். அது அவரதுஷாட்குணியங்களிலொன்று. அதனால் அவர் அநந்த தொழில்களையும் உடையவராவர். அந்தத் தொழில்களுள் பிரதாயகத்தொழிலானது, பெத்தமுத்திகளிரண்டிடத்தும் உடனிருந்து நமக்கு உபகரிப்பதோர் முக்கியத்தொழிலாயிருத்தலால், போகமோக்ஷப்பிரதாயகர் என்னுந் திருப்பெயரானது, சனனமரணசம் சாரத்தொழில் வலையில் மொத்துண்டு வருந்தும் நம்மனோர்க்கு அமிர்தம் போன்று அதிமாதுரியமா யினிப்பதோர் திருப்பெயராயிருக்கும். ஆதலினால், இத்திருப்பெயரையெடுத்து விளக்குங் காதல் இயல்பாகவே யெமக்கதிகமுண்டாயதென்க. எடுத்துக்கொண்ட விஷயம், உண்மைவிளக்கத்தின் பொருட்டு, சம்வாதரூபமாகச் சுருங்கவிளக்கப்படும், சம்வாதம் பூர்வபக்ஷத்திற்கும் சித்தாந்தத்திற்கும் ஆம். பூர்வபக்ஷங்கள் பல. சித்தாந்தம் ஒன்று.

## சம்வாதம்.

**பூர்வபக்ஷம்:**—சிவன் என் போகமோக்ஷப்பிரதாயகர் ஆனார். ?

**சித்தாந்தம்:**—பெறுவான் உண்டாயிருத்தலால்.

பூ:—பெறுவான் யாவன். ?

சி:—ஆன்மா: இங்ஙனம் பெறுவானும் பிரதாயகரும் உண்டாயிருந்தபடியால் பேறு என்பதொன்றும் உண்டாகவேண்டுவது அவசியமாயிற்று. இந்தப்பேறே போக மோக்ஷங்கள் எனப்படும்.

பூ:—போக மோக்ஷங்கள் என்பனயாவை?

சி:—தேகேந்திரியாதி உபாதிகளுடன் கூடியிருந்து அநுபவிப்பதும், அவ்வுபாதிகள் நீங்கிச்சிவத்தோடு ஐக்கியம் பெற்று அநுபவிப்பது மாகிய அநுபவங்களே போக மோக்ஷங்களாம்.

பூ:—ஆன்மா என்னும் பதார்த்தம் ஒன்று தனியே யுண்டென்று கொள்ளும் பக்ஷத்தில், வஸ்து நிச்சயத்தில் ஏகத்துவம் சாதிக்குங் கொள்கைக்கு அது விரோதப்படாதா?

சி:—ஆம் படும்.

பூ:—ஆகவே, அவ்விரோதம் வராதிருத்தற் பொருட்டுச் சிவன் தாமே தமக்குப் போகமோக்ஷப் பிரதாயகராயிருக்கின்றார் என்று கொள்ளுவோம்.

சி:—அழகுநன்றாயிருக்கின்றது! சிவன் என் தாமே தமக்குப் போக மோக்ஷப்பிரதாயகராதல் வேண்டும்? இக்கொள்கையிலுள்ள அவலக்ஷணங்கள் உமக்குத் தோன்றவில்லையா?

பூ:—தோன்றினாலும், ஏகத்துவத்திற்கு ஹானியில்லாதிருப்பதே அதுமுக்கியமல்லவா?

சி:—அநேகத்துவமாயிருத்தலில் வருந்தாழ்வென்னையோ? ஏகத்துவ ஹானிக்குப் பயந்து கடவுளுக்குப்போக மோக்ஷங்கற்பித்தல் சர்வாபாசமானதுடன், கடவுட்டன்மைக்கு முழுவிரோதஞ்செய்யுமென்றுணர்க.

பூ:—எப்படிமுழுவிரோதஞ் செய்யும்?

சி:—போக மோக்ஷானுபவங்கள் கடவுளுக்குச் சொல்லப்படுங்கால், அவர் சமலர் (மலத்துடன் கூடினவர்) எனப்பட்டுச் சீவவர்க்கத்துள் வைத்தெண்ணப் படுவர். போகமோக்ஷங்கள் சமலருக்கே யின்றியமையாதுவேண்டப்படுகையால். ஆகவே, நிர்மலராகிய கடவுளுக்குப் போகமோக்ஷங்கூறுதல் பெருந்தாழ்வாதலறிக.

பூ:—கடவுள் தாமேதமதுலீலையால் பெறுவானும்-பேறும்-பிரதாபகருராய்ப் பிரணமித்து நிற்பர் என்னுங்கொள்கைக்குத் தோஷமென்ன?

சி:—கடவுளுக்குத்தமக்கென ஓர்லீலையுங்கிடையாது. அவர்மகாபரிசுத்த-பரிபூரணப்பொருளாயிருந்தால். அவர் செயலெல்லாம் பிறர்பொருட்டுண்மையளவுமுபகாரமல்லால் வேறென்று இயக்குதலில்லாப் பரமோபகாரச்செயலாம். அன்றியும், கடவுள் பெறுவான்-பேறுகளாகிய சிற்சடங்களாகத்திரிந்து இழிவெய்தவும் நியாயமில்லை-திரிவெய்துதல் 'கடவுள் லக்ஷணமல்லவாதலால். நிர்மலருஞ் சிற்சொரூபருமாகிய கடவுள் ஒருவாற்றானும் சமலராகிய சீவரும், சடமாகிய சகத்தும் ஆகமாட்டார். இந்நியாயங்களால் லீலைக் கொள்கையும் கடவுள் லக்ஷணத்தை அடியோடு தொலைக்குமென்றுணர்க.



பூ:—எது எப்படியாயினுமாகுக. வஸ்து நிச்சயத்தில் ஏகத்துவ ஹானி வரலாகாது. ஆதலால் அதனை நிலைப்பித்தற்குக் கடாசியாக ஓர்யுக்தி கூறுகின்றோம்; சித்தசமாதானத்துடன் கேட்பீரா?

சி:—"சித்தசமாதானத்துடன்" என்று அடிபோட்டுக் கொண்டதனால் உமதுயுக்தி ஏதோவிசித்திரயுக்தியாயிருக்குமென்று நினைக்க இடந்தருகின்றது. ஆயினும், அதையும் உலகமறியவேண்டுவது கடனாதலால், தாராளமாகச் சொல்லலாம்.

பூ:—உள்ளவஸ்து ஒன்றே. பெறுவான் பேறு பிரதாயகர் என்பனவெல்லாம் கானல்நீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப் பநகர் கனவூர், வானமை கயிற்றிற்பாம்பு மலடி சேய் முயலின்கோடு ஈனமாந்த நிபுமான் என்றதுபோல எல்லாம் மித்தையே. பிராந்தியால், உள்ளனபோற் காணப்படும். இதற்கென்ன சொல்லுகிறீர்?

சி:—இதற்குத்தான் சித்தசமாதான அடிபோட்டுக்கொண்டீர் போலும்! நல்லது, இங்கு எடுத்துக்கொண்ட "பிரதாயகர்" என்னும் விஷயத்திற்கு இச்சங்கை பொருத்தமுடையதாகக்காணப் படவில்லை. ஏனெனில் பிரதாயகரையே இல் பொருளாக்குங் காரணத்தால். அன்றியும், இம்மித்தியாவாத-பிராந்திவாதங்கள், பிராந்தியை, நீர் கொள்ளும் ஏகவஸ்துவின் தலையிற் சுமத்தி அதன் பரத்துவத்தை யழித்து, முடிவில் வஸ்துநிச்சயம் ஏற்படாதொழியுச்செய்து விடுமாதலால், இக்கொள்கையும் அறிஞர் கழகத்துச் செல்லுமாறில்லை யென்க.

பூ:—ஏகத்துவசாதனையின் பொருட்டுப் பெறுவானாகிய ஆன்மாஎன்பதொன்று இல்லை என்னுங்கொள்கை யாகக்காணப்படவில்லை. ஆனால், ஆன்மாக்களைக் கடவுள் நூதனமாகச் சிருட்டித்து அவர்களுக்குப் போகமோக்ஷங்களைக் கொடுக்கின்றார் என்னுங்கொள்கையில் ஆக்ஷேபமென்னை?

சி:—முன்னில்லாச் சீவசகங்களைக் கடவுள் என் நூதனமாகச்சிருட்டிக்கவேண்டும்?

பூ:—தமக்குண்டாயிருக்கும் மகிமைகள் வெளியாவதற்கு வேறுவழியில்லையாதலால் நூதன சிருட்டி நியாயம் பொருத்தமுடையதேயாம்.

சி:—மகிமை வெளியாவதனாலும் கடவுளுக்கு வரும் லாபநஷ்டங்கள் என்னை? "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்னும் லக்ஷணமுடையகடவுள் தமக்கு மகிமை வர வேண்டி நூதனசிருஷ்டிசெய்வார் என்னும் நியாயம் செல்லாதென்க. இது நிற்க, தமதுமகிமையை வெளிப்படுத்த விரும்பின கடவுள், என்றுஞ்சுக சௌக்கிய நிலையிலிருந்துவாழும் வண்ணம் சீவர்களைச்சிருட்டியாது, சொல்லவும் சகிக்கவும் ஒண்ணாத்துன்பங்களாற் குழப்படும், அநேக சபலமயக்கங்கட்கு (Temptations) ஆளாகிவருந்தும் வண்ணமும்சிருட்டித்து அவர் பால் நீதியும் இரக்கமும் ஆகாவாம்.

பூ:—துன்பங்களுக்கு ஆளானது, சீவர்கள் தாமாதேடிக்கொண்டதன்றி, அதற்குக் கடவுள் காரணரல்லர். கடவுள் சீவர்களுக்குச் சுதந்தர அறிவைக்கொடுத்து விட்டாராதலால்.

சி:—உலகிலுள்ள துன்பங்கள் சீவர்களால் தேடிக்கொள்ளப்பட்டனவா? நன்று! நன்று!! கடலிற் சுழற்காற்று முதலியவற்றாலுண்டாகும் விபத்துக்களும், பூமியின்கண் பூகம்பம்-எரிமலை-அக்கினியாறு முதலியவற்றாலுண்டாகும் உத்பாதங்களும், சலப்பிரவாகமுதலிய பஞ்சபூதபௌதிகங்களாலுண்டாகும் அனர்த்தங்களும் சீவர்கள் தாமாதேடிக் கொண்டனவை? சிங்கம் புலி கரடி முதலியதுஷ்டமிருகங்களாலுண்டாகுந்துன்பங்களும், பாம்பு தேள் செய்யான் முதலிய கொடிய சீவசந்துக்களாலுண்டாகுந்துன்பங்களும் மனிதர் தாமாதேடிக்கொண்டனவை? ஆதிதைவிகம்-ஆதியாத்மிகம்ஆதி பௌதிகங்களாலுண்டாகும் தாபத்திரையங்கள் கொஞ்சமல்லவே! இவையெல்லாம் சீவர்கள் தாமாதேடிக்கொண்டனவாகுமா? இங்கே உண்மையாதெனில், நூதனமாகச்சிருட்டிசெய்யுங்கால், சீவர்கள் தாமாகெடவிரும்பினும் கெடமுடியாத் தன்மையில் அவர்களைச் சிருட்டிசெய்து, அவர்கள் சுகசௌக்கியத்திற்கு வேண்டியசகலபாதுகாப்புகளையும் அமைத்துவைக்கக் கடவுள் எல்லாப்படியாலும், கட்டுப்பட்டவர் ஆகின்றார் என்பதே. நிர்மானுஷ்ய தீவில் ஒருவனைக்கொண்டுபோய் விட்டவன், அங்கே அவனுக்கு ஓரிடரும் வாராவண்ணம் வேண்டியபாதுகாப்புக்களைத் தேடியமைத்தல், கொண்டுபோய் விட்டவன் மேலேறிய பெருங்கடனன்றோ? அன்றியும், தாமளித்த சுதந்தரபுத்தி, முதன் முதல் தாம்விரும்பியது போற்பயன்படாமையினையும், அது துர்விநியோகமாகுந் தன்மையினையும், கடவுள் தமது சர்வஜ்ஞலக்ஷணத்தால், முன்னுணர்ந்து அத்தகைய சுதந்தரவறிவைக்கொடாதிருக்க வேண்டுவதும் அவர்கடனாம். ஓர்பயிற்சியுமறியாத நூதனமனிதனொருவன்கையில், அவன் கெடுதற்கேதுவான கருவியைக் கொடுத்தல் உண்மையில் இரக்கமுடையார் செயலன்றாம். நூதனசிருட்டிகொள்கைக்கு இத்தியாதி முன்சாக்கிரதைகள் இன்றியமையாது வேண்டப்படுதலால், நூதன சிருட்டிநியாயமுஞ் செல்லாமை காண்க.

பூ:—ஆன்மாக்கள் பின்னை யெப்படித்தான் வந்தார்கள்?

சி:—ஆன்மாக்கள் வந்ததுமில்லை போனதுமில்லை. என்றுமிருந்தார்கள், இருப்பார்கள். இருந்தவர்க்கே கடவுள் பிரதாயகராகக் கூடுமன்றி இல்லாதவர்க்கல்லவே.

பூ:—கடவுள் ஒருவரே என்றும் உள்ளவராவர். ஆன்மாக்களும் அங்ஙனமாதற்குநியாயங்காணேம். கடவுளைப்போலவே ஆன்மாக்களும் ஏன் அநாதியாயிருத்தல் வேண்டும்?



சி:—கடவுள் ஒருவர்தான் ஏன் அநாதியாயிருத்தல் வேண்டும்? என்றெழுஞ்சங்கைக்கு வருஞ்சமாதானமே நுமதுகேள்விக்குமாம்.

பூ:—அநாதியே ஆன்மாக்களிருந்தார்கள் என்பதற்குச்சான்றென்னை

சி:—கடவுள் போகமோக்ஷப்பிரதாபகராயிருத்தலே சான்றாம். பெறுவோர்கள் இருந்தபடியினாலே தான் கடவுள் பிரதாயகராகவேண்டிவந்ததென்க.

பூ:—முன்னரேயிருந்தவர்க்குத்தான் கடவுள் பிரதாபகராயிருத்தல் வேண்டும் என்பதென்னை? நூதனமாகச்சிருட்டிக்கப்பட்டவர்க்கு அவர் ஏன் பிரதாயகராயிருத்தல் கூடாது?

சி:—அங்ஙனமாகுங்கால், நூதனமாகச்சிருட்டிக்கப்பட்ட ஆன்மாக்கள் அறியாமை சபலம் மயக்கமுதலிய அநேககுறைவுகள் நிறைந்தவர்களாகச்சிருட்டிக்கப்படல் வேண்டும். இங்கே கேள்வியாதெனில், முன்னில்லாத ஆன்மாக்களை ஏன் அங்ஙனங்குறைவுகளுடன் சிருட்டித்த, அவர்களுக்குப்பலவித இடர்களையும் அமைத்துப்பிறகு அவர்களுக்குப்போகமோக்ஷங்களைக்கொடுக்கும் பெரியவேலையைக்கடவுள் வைத்துக் கொள்ளல்வேண்டும்? என்பதேயாம். அநேககுறைவுகளுடன் சிருட்டிக்கப்பட்ட ஆன்மாக்கள் தப்பு, தவறுகள்செய்தல் இயல்பாமன்றோ? அத்தவறுகள்கண்டுவருந்துதலும், கோபித்தலும், சபித்தலுமாகிய விகாரங்களை யடைதல் எவ்வாற்றானும் கடவுள் லக்ஷணமாகாதென்பதேயுண்மை யென்க.

பூ:—நூதனமாகக் சிருட்டிக்கப்பட்ட ஆன்மாக்கள் பலகுறைவுகளுடன் ஏன் சிருட்டிக்கப்படல்வேண்டும் என்றுசங்கித்தீர், அநாதியாயிருந்த ஆன்மாக்கள் ஏன் பலகுறைவுகளுடன் இருத்தல் வேண்டும் என்று எழுஞ் சங்கைக்கு என்னசமாதானஞ் சொல்லுவீர்?

சி:—அநாதியாயிருந்தகடவுள் ஏன் குறைவுநிறைவுகளில்லாப் பரிபூரணப்பொருளாய் இருந்தார்? என்று எழுஞ்சங்கைக்கு நீர் என்ன சமாதானஞ் சொல்லுவீரோ, அதேசமாதானம் யாமுஞ்சொல்லுவோம்!

பூ:—சர்வஜ்ஞராயுள்ள கடவுள் செயல்களைக் கிஞ்சிஜ்ஞராயுள்ள நாம் சங்கிக்க அருகராவோமா? அவருடைய நியாயங்களும் வழிகளும் சிற்றறிவுடைய நமக்குப் புலப்படுங்கொல்லோ? ஆதலால், கடவுள்செயல்களைச்சங்கித்தல் தேவதூஷணமாகாதா?

சி:—இந்த நியாயத்திற்கு நீங்கள் கட்டுப்படுவதுவுண்மையானால், நீங்கள் இதரமதங்களிற் குற்றங்காணவும் மறுக்கவும் உங்களுக்கு நியாயமில்லை ஏனெனில், சர்வஜ்ஞரெனக்கருதப்படும் அம்மதக் கடவுளர் செயல்களும் வழிகளும் சிற்றறிவுடைய வுங்களுக்கு எவ்வண்ணம் புலப்படக்கூடும்! இந்த தங்கள் நியாயத்தால் எந்தமதஸ்தர் எந்த ஆபாசக்கொள்கைகளைச் சொல்லி

னும் அவற்றைச்சங்கிக்குஞ் சுதந்தரம் உலகில் ஒருவனுக்கும் இல்லையென்று ஏற்பட்டுவிடும். இதுசர்வாசங்கதமென்க. அங்ஙனமன்று, இதரமதக்கடவுளர் அல்லராதலால் அவர்கள் செயல்களிற் குற்றங்காண்டல் விரோதமாகாது என்று நீங்கள் சொல்லுவீர்களாயின், நீங்கள் சொல்லுங் கடவுள்தான் மெய்க் கடவுள் என்பதற்குப் பிரமாணம் என்னை? என்னுஞ் சங்கை நிகழும். இவ்வாறு, விஷயம் நிறுமாசார் விவகாரமாய்முடிதலால், உங்கள்நியாயம் சித்தாந்தக்கழத்துச் செல்லுமாறில்லை என்க. இதுநிற்க. கடவுள் ஆன்மாக்களைக்கிஞ்சிஞ்ஞராயேன் சிருட்டித்தல் வேண்டும்? அங்ஙனஞ் சிருட்டித்தலாலன்றோ ஆன்மாக்கள் தவறுகள் செய்யுந்தன்மையரானார்கள். இந்த நியாயத்தால், ஆன்மாக்களது தவறுகளுக்கு ஆன்மாக்கள் உத்தரவாதிகளாக நியாயமில்லை என்றும், குறைவுகளுடன் சிருட்டித்தவரே உத்தரவாதியாவது எல்லாப்படியாலும் நியாயமாம் என்றும் இனிது விளங்கும். மேலும்.

நூதனமாக ஆன்மாக்களைச் சிருட்டிக்குங்கால், கடவுள் தமதுருபத்தைப்போலவே சிருட்டித்தார் என்பது நுங்கொள்கையன்றோ? அதுயதார்த்தமானால், கடவுளுக்குள்ள அறிவு நீதி நியாயவுணர்ச்சியாதிகள் தான் மனிதனுக்கும் இருக்கும் என்பது நியாயமன்றி, கடவுளுக்கு வேறு மனிதனுக்கு வேறுயிரா. உதாரணமாக: கடவுள் திருஷ்டியில் விபசாரம் தோஷம் என்றுகுமானால், மனிதனுக்கும் அது தோஷமேயாம். கடவுளுக்கு அக்கினி அக்கினியேயாகுமானால் மனிதனுக்கும் அது சலமாய்விடமாட்டாது. அதுபோல, கடவுள்செயலில் விரோதமிருக்கில் அது மனிதனுக்கும் விரோதமாகவேகாணும். அந்த விரோதங்கண்டுசொல்லுங்கால், மனிதன்சொல்ல அருகனல்ல என்று சொல்லும் நியாயம் விவேகிகளாற் கொள்ளத்தக்கதன்றென்க.

பூ:—இவ்வாறு பலகொள்கைகளை வருவித்து மறுத்தல், அக்கொள்கைகளையும் அவற்றையுடையாரையும் எதிர்த்தல் போலாகி ஒற்றுமைக்கு விரோதஞ் செய்யாதோ?

சி:—அக்கொள்கைகள் யாவும் பூர்வபக்ஷக கொள்கைகளாதலால், அவை சித்தாந்தத்துளடங்கியிருக்கும். ஆகலால் சித்தாந்திகளே அவற்றையுடைய வருமாவர். ஆதலினால், விரோதம் வர நிமித்தமில்லையென்க. அன்றியும், எவ்வித நஷ்டங்கள் வருவனவாயிருப்பினும், எக்காலத்துஞ் சத்தியத்தைச் சொல்லுவதே தருமமாம். தாக்ஷிண்யத்திற் கஞ்சி அசத்தியத்தைச் சத்தியமென்று சொல்லலாமா? அங்ஙனஞ்சொல்லுவதனால் உலகுக்கு ஒருபயனுமில்லையே. பயனுக்குப் பதிலாகக் கெடுதியன்றோ விளையும்? நியாயந்தமாக, ஒருவன் தேகத்தை ஆத்துமா என்கிறான். அதனை மறுத்து, அப்பா! அப்படியல்ல; தேகஞ் சடபதார்த்தம். அது ஆத்துமா ஆகாது,



அதனிடத்தில் அறிவாய் விளங்குஞ் சித்தே ஆத்துமாவாம், என்று உள்ளவுண்மையை விளக்கினால் அதில் விரோதம் ஏன்வரவேண்டுமோ எமக்குத் தெரியவில்லை. இப்படியே ஒருவன் ஆன்மாவைப் பரம் என்கின்றான். அவனைநோக்கி அப்பா! அப்படியல்ல, தேகேந்திரியாதிகளிற் கட்டுண்டு அவத்தைப் பட்டுழல்கின்றானாதலால் ஆன்மா பரமல்ல, சிவமே பரம், என்று உள்ள வுண்மையை விளக்கினால் அதில் ஏன் விரோதம் வரவேண்டுமோ தெரியவில்லை! இவ்வாறே ஏனைக்கொள்கைகளிலுற்ற வழுக்களை நியாயவாயிலாகக் காட்டி உண்மை நிலை இன்னது என விளக்குதலைப் பேருபகாரமாக்கொண்டு மகிழ்வர் அறிவுடையோரென்க.

பூ:—ஏனைக்கொள்கைகள் நம் மதத்திற் பூர்வபக்ஷங்களாகக் கழிக்கப்படுதலால், அக்கொள்கைகளை யுடையார் சித்தாந்திகள் என்றது எப்படிபொருந்தும்?

சி:—உலகிலுள்ள எல்லாப் பூர்வபக்ஷக்கொள்கைகளும் இயல்பாகவே சித்தாந்தத்துளடங்கி யிருக்கும். பூர்வபக்ஷம் இல்லாவிடில் சித்தாந்தம் என்பதொன்றிருக்கவே மாட்டாது. பூர்வபக்ஷக்கொள்கைகளுள் ஏதாவதொன்றைப் பூர்வபக்ஷஞ் செய்யமுடியாதொழியின், சித்தாந்தத்திற்குச் சித்தாந்தம் என்னும்பெயர் நிலைக்காது. ஆதலினால், சித்தாந்தமானது எழுந்து வெளிவருங்கால், தன்னைச்சூழ்ந்துள்ள பூர்வபக்ஷங்களை விலக்கி யொதுக்கிக்கொண்டுதான் அது வெளிவரும். அது சித்தாந்தத்திற்கு இயற்கையாயுள்ள தர்மமாம். உமியுடன் சேர்ந்திருக்கும் அரிசியே இதற்குத்திட்டாந்தம். அரிசிவெளி வரவேண்டில், உமிதவிடுகளை விலக்கிக்கொண்டுதான் அது வெளிவரக் கூடும். அதுபோல, பூர்வபக்ஷம் பண்ணாவிடில், சித்தாந்தத்திற்குச் சித்தாந்தம் என்னும் பெயர்வரமாட்டாது. இந்தநியாயங்களால், உலகத்தில் தற்காலமுண்டாயிருப்பதும், இனியுண்டாவது மாகிய சமஸ்த பூர்வபக்ஷக்கொள்கைகளும் சித்தாந்தத்துளடங்கி அதற்குச் சொந்த பரிவாரங்களாயிருக்கும். இத்தியாதிநியாயங்களால் சித்தாந்தத்திற் குரியவர்கள் யாரோ, அவர்களே பூர்வபக்ஷங்கட்கும் உரியராகுமியல் பினை உய்த்துணர்க.

பூ:—ஆயின், பூர்வபக்ஷக்கொள்கைகளால் சித்தாந்தத்திற்கு வரும்பயன்யாது?

சி:—சித்தாந்தத்தினது முடிந்த முடிபைத்துணிவாய் நாட்டுதற்குப் பூர்வபக்ஷங்கள் ஓர்விதசாதனங்களாயிருந்து பயன்படுதலால் அதுவே பயனாமென்க.

பூ:—சித்தாந்தத்துளடங்கிய பூர்வபக்ஷக் கொள்கைகளுள் ஒவ்வொன்றை ஒரோர் சாரார் தமக்குரிய கொள்கையாக் கொண்டு பயிலங்காரணமென்னை?

சி:—அது வினைவழி அவரவர் பரிபாகமிருந்தவாறும். உலகில் ஜன்ம பேதத்தால் பரிபாகமும் அளவிறந்தபேதங்களாய் விளங்கும். அவ்வப்பரிபாகத்தினர்க்கு அவ்வக் கொள்கைகளே யினித்து உண்மையெனப்படும். அதனால் அக்கொள்கைகள் அவர்களுக்கு இன்றியமையாதனவாம். அவ்வக்கொள்கைகளுக்கு ஏற்பட்டுள்ள பலன்களையே அவரவரும் அடைகிறார்களன்றி அதிகமாகவாவது குறைவாகவாவது அடைகிறதில்லை. மக்களின் பருவத்திற்கேற்ப உணவளித்து வளர்க்குங்கருணை மிகுந்த அன்னையே போல, சித்தாந்தமாதாவும், ஒன்றுக்கொன்று உயர்ந்து உபகரிக்கும் நிலையிலுள்ள பூர்வபக்ஷக்கொள்கைகளாகிய உணவுகளால் ஆன்மாக்களைவளர்த்து முடிவில் தனகுள் சேர்த்துக் கொள்ளும். ஈண்டு இதனைச்சற்று விரிவாய் விளக்குவாம்: முதன்முதல் சித்தாந்தமானது (வேதாகமமுடிபுகள்.) தேகத்தைப்பரம் எனக்காட்டும். பிறகு அதைப் பூர்வபக்ஷஞ் செய்து இந்திரியங்களைப் பரமெனக்காட்டும். பிறகு அந்தக்கரணத்தைப் பரமெனக் காட்டும். பிறகு சீவனைப் பரமெனக் காட்டும். இப்படிமுறை பூர்வபக்ஷ, சித்தாந்தங்கள் செய்து கொண்டு போய்க் கடைசியாகச் சிவத்தைப் பரம் எனக்காட்டி முடிக்கும். உலகில் தற்காலமுள்ள எவ்வகைப்பட்டமதக்கொள்கைகளும், இனிநூதனமாகவுண்டாகுங் கொள்கைகளும் இப்பூர்வபக்ஷக் கொள்கை வரிசைக்குளடங்கி எல்லாம் சித்தாந்தத்திற்குப் பரிவாரங்களாகச்சூழ்ந்து நிற்கும். இக்கொள்கைகளுள் ஒவ்வொன்றைத்தத் தமக்குச் சொந்தம் எனகொண்டு அவலம்பிப்போர் சார்வாகனே முதல் ஏகான்மவாதியீறாயுள்ளவர்களும், ஏனைநவீன மதஸ்தருமாம். துரபிமானமொழிந்து உண்மையை உள்ளபடி விசாரிக்கப் புகுவார்க்கு எவ்வழியிலும் விரோதம் வரநியாயமில்லை யென்க. இதுகாறுங் கூறிவந்த நியாயங்களால் உலகிலுள்ள-இனியுண்டாகும் எல்லாக் கொள்கைகளும் சித்தாந்தத்திற்கு உடன்பாடேயன்றி விரோதமில்லைஎன்பது தேற்றம்.

" விரிவிலா வறிவினார்கள் வேறொருசமயஞ் செய்தே,
எரிவினாற்சொன்னாரேனும் எம்பிரார்க் கேற்றதாகும்.

—திருநாவுக்கரசுகள்.

" இயல் பென்றுந் திரியாமலியமமாதி..."
" அந்தோ வீததிசயமிச்சமயம் போலின்று..."—ஸ்ரீ தாயுமானார்.

பூ:—இது காறுங்கூறிவந்த நியாயங்களால், பூர்வபக்ஷக்கொள்கைகளும் வீணனகொள்கைகள் என்றாகாமல், ஓர் பள்ளிக்கூடத்தில் கீழ்மேல் வகுப்புகளிருத்தல்போல, ஒன்றுக் கொன்று உபகாரரூபமாயிருந்து, ஆன்மாக்களைப் பரிபாகப்படுத்தி உய்விக்குமியல் பினவாயிருக்குமென்றும், அந்தந்த பரிபாகிகளுக்கு அந்தந்த சமயக் கொள்கைகளே உசிதமாமென்றும்,



ஆகலினால் அக்கொள்கைகளெல்லாஞ் சித்தாந்தமதத்திற் உடன்பாடேயன்றிவிரோதமாகா வென்றும் புலப்படுகின்றது.

சி:—நீர் பூர்வபுண்ணிய விசேஷத்தால் நல்லறிவு விளங்கப்பெற்றவராதலால் உண்மை கண்டு சொன்னீர். துரபிமானம் விட்டு விஷயங்களை யிங்ஙனம் விசாரித்து உண்மை கடைப்பிடித்தலே பகுப்பறிவுடைமைக்குப்பயனுமென்றறிக.

பூர்வபக்ஷ சித்தாந்தங்களின் சம்வாதம் முற்றிற்று.

---

இனி, போகமோக்ஷப்பேறுகளைப்பற்றிய ஏனையவிஷயங்களையும் விவகரிப்பாம். போகமோக்ஷங்களாகிய இரண்டு பேறுகளுள் ஆன்மாவினாலனுபவிக்கப்படும் சமஸ்த அனுபவங்களும் அடங்கும். ஆயினும், போகம் என்பது இங்குச்சுகபோகத்தையே குறித்து நிற்கும். ஆன்மாவுக்கு அது பேறாகக்கொடுக்கப்படலால், இந்த இரண்டு அரும்பெரும் பேறுகளைச் சிவன் ஆன்மாக்களுக்கு இலவசமாயளிக்கின்றார். மனவாக்குக் காயங்களால் தம்மைவழிபடும்நிலையில் தேகபோகாதி சுகசௌக்கியங்களைவெறுத்து (sacrifice செய்து) ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை கருணைக்கடலாகிய நம் பரமர் திருவுளத்தடைக்காமற் போவாரா? ஆதலினால் அவர் மகாமகிமைதங்கிய போகமோக்ஷப் பிரதாயகர் என்று ஆயினர் என்க. பரமசிவம், தம்மை வழிபடுமான்மாக்களுக்கு முன்னர்ப் போகத்தைக் கொடுத்துப்பிறகு மோக்ஷத்தைக் கொடுத்தல் சாதாரணமுறை என்று சாஸ்திரங்களால் விளங்குகின்றது. இந்த முறைக்குக் காரணம், கீழ்வருமாறு சாஸ்திரங்களிற் காணப்படுகின்றது. சாயுச்சியமாகிய பரமுத்தி, ஞானம் ஒன்றினாலேயேயடையம்படும். அந்தஞானமும் தீவரதரபரிபக்குவதசையில்சித்திக்கும். அந்தப் பரிபக்குவதசைவந்ததும், எந்தபுவனத்தில் வசிப்பினும் தமது திருவருளைக்கொடுத்து சிவம், ஆன்மாக்களைத்தமது பேரின்பநிலையில்நிறுத்துகின்றது. அதுகாறும் ஏனைப்பக்குவதசைகளிலிருக்கும் ஆன்மாக்களை அதிகாரமலத்திற் சேர்த்து நாநாபுவன போகங்களில் நிறுத்திப் பாகம்வருவிக்கும் என்றுசாத்திரங்களால் விளங்குகின்றது..

போகமானது அத்துவாக்களில் உண்டாகும். அத்துவாக்கள் அசுத்தம் மிச்ரம், சுத்தம் எனமுத்திறப்பட்டு ஒன்றுக்கொன்று பிரேரக-பிரேரியநிலையில் நிற்கும். அத்துவாக்கள், வழிகள், வினையைப் புசித்தொழிக்கும் வழிகள். எனவே, பொதுவில் பிரபஞ்சங்கள் என்னலாம். அசுத்தாத்துவபோகம், பிரகிருதிமாயை யாலுண்டாகிற ஸ்தூலப்பிரபஞ்சத்திலுண்டாகும். மிச்ராத்துவபோகம், அசுத்தமாயையாலுண்டாகிற சூக்ஷ்மப்பிரபஞ்சத்திலுண்டாகும். சுத்தாத்துவபோகமானது, சுத்தமாயையாலுண்டாகிற பர

பிரபஞ்சத்திலுண்டாகும். இப்போகங்கள் முறையே ஒன்றுக்கொன்று உயர்ந்தனவாய் அதிவிசித்திரியங்களாயிருக்கும். இங்கே கொஞ்சம்விரித்துவிளக்குவதனால் அப்போகங்களின் மகிமை இனைத்தென ஒருவாறு விளங்கவரும்.

நாம் வசிக்கும் இந்த ஸ்தூலப்பிரபஞ்சத்திலேயே போகாயுசுவரியமானது மாநுஷம்-பைசாசம்-ராக்ஷசம்-யக்ஷம்-கந்தர்வம்-ஐந்திரம்-சோமம் பிராஜபத்தியம்-பிராமம்-பிராகிருதம் எனப்பிரிந்து ஒன்றுக்கொன்று எண்மடங்கு அதிகப்பட்டிருக்கும். இவற்றுள் மாநுஷஐசுவரியம் ஒருபுடையிருக்க, பைசாசஐசுவரியத்தில் சாதாரண அணிமாதி அஷ்டஐசுவரியங்களும்அடங்கும். அணிமாதி ஐசுவரியங்களின் மகிமை சாஸ்திர ஆராய்ச்சியுடையோர்க்குத் தெரிந்த விஷயம். ஆயினும் சற்று விரிப்பாம்: அணிமா-மகிமா-லகிமா-கிரிமா-பிராப்தி பிராகாமியம்-ஈசத்துவம் வசித்துவம் ஆகஐசுவரியங்கள் எட்டு. அணிமா, அணுவினுஞ் சிறிதாதல்-மகிமா, அண்டத்தினும் பெரிதாதல், லகிமா, பஞ்சினும் மெல்லியவாதல்-கிரிமா, மலை, இரும்புகளினுங்கனமாதல். பிராப்தி, நினைத்த விடஞ்செல்லுதல். பிராகாமியம், விரும்பிய பொருளை அடைதல். ஈசத்துவம், தலைமை வகித்தல். வசித்துவம், எல்லாந்தனக்குச்சுவாதீனமாதல், ஆம். இச்சித்திகள் எவ்வளவு அருமையும் மகிமையுடையன வுமாயிருக்கின்றன! இவை ஈசுரத்தன்மையனவாயிருத்தலால் இவற்றிற்கு ஐசுவரியம் என்னும்பெயர் கொடுக்கப்பட்டது இத்தனைக்கும் இதுபைசாச ஐசுவரியமே யன்றிவேறல்ல. பைசாசங்கள் நினைத்தவுருக்கொள்ளும்; உருமாறும்; நினைத்தவிடஞ் செல்லும். தாழ்ந்த பைசாச ஐசுவரியத்திற்கே யிவ்வளவு மகிமை யிருக்குமானால், இதற்குமேற்புவன சித்திகளாகிய ராக்ஷசம்-யக்ஷம்-காந்தர்வமுதலிய புவனசித்திகளின் மகிமைகளை என்னென்று பகரலாம். பைசாச அணிமாதிகளினும் ராக்ஷச அணிமாதிகள் ஒவ்வொன்றும் இருமடங்கு அதிகப்பட்டனவாம். யக்ஷ அணிமாதிகள் மூன்றுமடங்கு அதிகப்பட்டன, காந்தர்வ அணிமாதிகள் நாலுமடங் கதிகப்பட்டன. ஐந்திர அணிமாதிகள் ஐந்து மடங்கதிகப்பட்டன. இப்படியே பிராகிருதம் வரையில் ஒவ்வோர் மடங்கு அதிகரித்துச் செல்லும். பைசாச அணிமாவிலும் ராக்ஷச அணிமா இருமடங்கு அதிக மகிமையுடையது. யக்ஷ அணிமாமூன்றுமடங்கதிகம்-இம்முறையே காந்தர்வ-ஐந்திர-சௌமிய-பிராஜாபத்திய அணிமாக்களும் மகிமையில் உயர்ந்து சென்று, பிராம்ம அணிமா எண் மடங்கும், பிராகிருத அணிமா ஒன்பது மடங்கும் அதிக மகிமையுள்ளனவாயிருக்கும். இம்முறையே மகிமா-கிரிமா முதலியவைகளும் கொள்ளத்தக்கனவாம். பிராம்ம ஐசுவரியம் பிரம்மாவின் ஐசுவரியம். பிராகிருத ஐசுவரியம் விஷ்-



ணுவின் ஐசுவரியம். இந்திர-பிரம்ம- விஷ்ணுக்களின் அணிமாதி அஷ்ட ஐசுவரியங்கள் அளவில்லாத அதிவிசித்திர மகிமையுடையனவா மாதலால் அவ்வைசுவரியங்களை அடையப் பெற்ற ஆன்மாக்கள் ஒரோர்கால் தாந்தாமே ஈசுரன் என்று செருக்குவாராயின வுண்மை புராணங்களில் விளக்கப்பட்டிருக்கும். ஸ்தூலப்பிரபஞ்ச அணிமாதிகளே இவ்வளவு மகிமையுடையனவா மானால், மிச்ராத்துவ-சுத்தாத்துவாக்களாகிய சூக்ஷ்ம-பரபஞ்சங்களின் அணிமாதி அஷ்ட ஐசுவரியங்களின் மகிமைகளை வர்ணிக்க யாராலாகும்! மூன்று அத்துவாக்களிலு முள்ள புவனங்களும், புவனபதிகளின்மகிமைகளும், அவர்களுடைய போகங்களும் ஒன்றுக்கொன்று உயர்ந்து மகாவிசித்திரகரமும் அற்புதங்களுமாயிருக்கும் என்பது சாஸ்திர நிச்சயம். இங்ஙனம் அளப்பறும் மகிமைகள் வாய்ந்த போகாயுசுவரியங்களை நம்பரமசிவம் நம்மை வழிபடும் ஆன்மாக்கட்கு இலவசமாயளிப்பது பரமசிவத்தின்போகா நுக்கிரகமகிமையாம். இப்புவனபோக வாசிகளாயுள்ள ஆன்மாக்களை அவரவர் பரிபாக முதிர்ச்சியறிந்து, கீழ்க்கீழ்ப்புவன போகங்களிலுள்ளாரை மேன்மேற் புவனபோகங்ளில் முறையே உயர்த்தி முடிவில்தீவரதர பரிபாகம் வந்தது கண்டு பரமசிவம், ஒப்புயர் வில்லாத தமது பேரானந்தப் பெருவாழ்விற் சேர்த்துக் கொள்ளுகின்றார். இது பரமசிவத்தின் மோக்ஷானுக்கிரக மகிமையாம். இவ்வாறு சீனியாரிடிபடிப் பிரகாரம் ஆன்மாக்களை உயர்த்துப (பிரமோஷன் செய்யும்) வரிசைக்கிரம வழக்கு அநாதியே சிவாகமங்களாகிய சித்தாந்தத்தில் ஏற்பட்டிருக்கும் அதிசயம்கவனிக்கத்தக்கதாம். ஐரோப்பியர்களாலே தான் சீனியாரிடிபடிப் பிரமோஷன் வரிசைக்கிரமம் ஏற்பட்டதென்றிருந்தோம். நம் திவ்வியாகமங்களில் அது அநாதியே சொல்லப்பட்டிருத்தல் பெரிதும் வியக்கத்தக்கதல்லவா? இதனால், அநாதியே சாஸ்திரங்களில் வந்துள்ள உண்மைகள் தான் ஐரோப்பியருக்கும் ஒரோவழி ஸ்புரிக்கின்றன! என்று உளகிக்க இடந்தருகின்றது. இப்படியின்னும் எத்தனை யோரகசியங்கள் சித்தாந்த நூலாகிய திவ்வியாகமங்களில் மிலைந்து கிடக்கும். ஆதலால், சித்தாந்த சாத்திரங்களை வரன்முறையாய்க்கற்றுணர்ந்து அவை சொல்லு முறைப்படி அநுஷ்டித்து நம்மனோர் பிறவிப்பயனெய்துவார்களெனத் திருவருளைச் சிந்திக்கின்றாம்.

சிவார்ப்பணம்.

திருச்சிற்றம்பலம்.

C. M. ரங்கசாமி நாயகர்.

# சைவசித்தாந்த சாதனம்.

முதல்நெம்பர் சாதனத்தில், பஞ்சக்கிருத்தியம் எல்லாருக்கும் பொது அதற்குரிய, அக்கினிகாரியம் எல்லாத்துக்கும் பொது. அக்கினி காரிய சுதந்தரமுடைய 'எரியுருவன்' (முக்கண்ணன்முழுமுதற் கடவுள்) எல்லாருக்கும் பொதுக்காரணமான கடவுள் என்று வெளியிட்டோம். (இது தனியாக வச்சிட்டுப் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.)

இரண்டாநெம்பர் சாதனத்தில், மூர்த்தி அதாவது அம்முழுமுதற் கடவுள் (எரியுருவன்) மிருத்துவில் தோன்றும் ஐயையந்து நிலைகள் (மூர்த்தங்கள்) பஞ்சக்கிருத்தியோபகார விளக்கமென்றும் அவ்வுபகாரம் சிவகோடிகளையுத் தேசித்தேற்பட்டதென்றும் இவ்வை யைந்து சோபான நிலைகள் எல்லாச்சமயத்தாருக்கும் பொதுவானவைகளென்றும், இராமநாதபுரம் மஹாசபையில் சென்றவருடம் எழுதி வெளியிட்டோம். (சித்தாந்தத்தேனும் பார்க்கவும்.)

இவ்வையைந்து மூர்த்தர்களையே நஞ்சமயாசாரியர் நால்வரும் வியந்து வியந்து புகழ்ந்து பாடியருளினார்கள். (திருமுறை திருவாசகம் பார்க்க) இப்பொழுது இந்த மஹா திவ்யசபையில் இந்த மூன்றாவது சாதனம்சாதிப்பேன்.

மஹா தேவருடைய (ஹரசிவனுடைய) பஞ்சக்கிருத்தியங்களைக் காட்டும் திருநாமம் இலிங்கம், என்பது தான். சிருட்டித்தல், காத்தல், சங்கரித்தல், என்றும் பொருள்பட உள்ள நந்தல், என்னும் பதத்தாலமைந்த நந்தி, என்னும் திருநாமம்இலிங்கம், எனபதற்கு அடுத்த திருநாமம்.

சங்கரித்தல், 'நித்திய சங்காரம் நீடிளைப்பாற்றுதல்', என்ற திருமந்திரப்படி யிளைப்பாற்றபுரியும் உபகாரம் விளங்கும் ஹர என்ற திவ்விய திருநாமத்தின் கருத்தேயாகும்.

சிவ, என்னுந்திருநாமம் சகலஜீவர்களுக்கும் பிராணதாரமான வாயுவாகிய வாசி, என்பது. வாசி, வாசி, எனச்சிவா, என்று மாற சிவயோகசித்தி யுண்டாகும். (சித்தாந்தத்தேன் பார்க்க.)

நமவாதை யென்ற நமன் சேட்டை தன்னை நான்என்ற வாசியுயிர் நீக்கிமாறு, உமையாது பரைவந்து யாவே யென்று கடாட்சிக்க வுயிர்வாசி நீறாய்ச் சிவவாய், உமையூத வாறாறும் நீங்கிப் பதிடவோங்கு சிவாவுன்னடி பணிவோ மென்றே, இமையாத முக்கண்ணனேக பாதா வினியகங் காதரனே நிற்போம் (சிவானுபவம்.)

மேற்கூறிய இலிங்கம், நந்தி, தவிர மற்ற எந்தச்சிவநாமங்களும், பஞ்சக்கிருத்தியன், என்னுங் கருத்தைக் காட்டுகிறதில்லை. என் விசாரத்திலகப்படவில்லை.

புறச்சமயத்திலே மேற்கூறியபடிக்குப் பஞ்சக்கிருத்தியன் என்னும் பொருளுள்ள திருநாமங்களில்லை. வளங்குகிற முக்கிய புறச்சமயநாமங்கள், அல்லா (Allah) ஜேகோவா (Jehova) கடவுள் (God) என்பவைகளாம்.

இந்தப் பதங்களைச் சோதித்துப் பார்த்தால் ஒன்றிலாவது பஞ்சக்கிருத்தியன், என்ற அர்த்தமுங்கிடையாது. பஞ்சக்கிருத்தியன், எரியுருவனாயிருந்தாலன்றிப் பஞ்சகிருத்தியங்கள் ஏலாதென்ற கருத்தும், எரியுருவன், என்ற அர்த்தமும் விளங்குகிறதேயில்லை. எந்தவிதத்திலும் விளக்கமில்லை.

('Jehova) 'ஜேஹோவா என்றும் பதத்தைப்பற்றிவிசாரிப்போம்: Jehova from 'haya' to be i. e. Eternal or self-Existent Being ஜேஹோவா என்னுங் கிறிஸ்து மதப்பேர், ஹாயி, என்னுந் தாது மூலமாய்வந்த பதம். ஹாயி என்றால் இருக்கிறது அதாவது என்றுமுள்ளது நித்தியமானது. என்னும் பொருளுடையதாய் கண்டீர்.

(Allah) அல்லா என்னும் பதத்தைப்பற்றி விசாரிப்போம். சில ஆசிரியர் ali-lah அலிலா—விளங்கத்தக்கவன், the worthy to be adored (by all) என்று பதம் பிரிக்கிறார்கள். சிலசாதுக்கள் 'சத்-சித்-ஆனந்தம் என்னும் பொருள் கொண்டபதம் 'அல்லா, (Allah) என்கிறார்கள். இதுவே, ஒவ்வொன்றும்பரசிவத்தின்ஒவ்வொரு இலட்சணத்தைக் குறித்தே யன்றி பஞ்சக்கிருத்திய விலட்சணங்களை யொருங்கக் காட்டுவதன்று.

(God) கடவுள் என்ற பொதுப் பெயரின் கருத்தை விசாரிப்போம். ('Gutha) குதா என்ற டேட்டானிபர் பதம் (teutonic words) ஆரியபதம் (Gûda) கூட (secrct) இரசியம். அதாவது அறியக் கூடாதது (unknowable) என்ற பொருள் வாய்ந்த தாதுவிலிருந்துண்டான பெயர் என்று கண்டோம். இதுவும் பஞ்சக்கிருத்தியத்தைக் காட்டவில்லை. திரோபவக் கிருத்தியத்தை மாத்திரம் காட்டிநின்றது என்று கூறலாம்.

எல்லாமதங்களும் , எல்லா மதமுனிவர்களும், ஞானிகளும் கடவுள் நம்மை (பாசம் படிந்த பசுக்களாகிய நம்மைப்) பாசபந்தத்தினின்று நீக்கி நாம்பக்குவப் படும்படியான பிரபஞ்ச சாதனதைக்கொடுத்து நம்மைமோட்சானந்தத்தில் வைக்கிறார்என்று ஒத்துப் பேசுவதால், பஞ்சக்கிருத்தியன், என்ற திருநாமமாகிய மேற்கூறிய இலிங்கம், என்பது சுருதி, யுக்தி, அனுபவச்சம்மதமாய்எல்லாப் பதங்களுக்குஞ் சம்மதமான பொதுநாமமாகஇருப்பது கண்டீர். ஆனதால் இந்த இலிங்கம், என்னுந்திருநாமத்தை முதன்மையாகக்கொண்ட, இலிங்கோத்தாரம்கூறும், நமது வைதீக சைவசித்தாந்தம் எல்லாமதங்களுக்கும் பொதுவானதாயகமே. (சித்தாந்தத்தேன்—தேனமுது முழுதும் பார்த்தால் நன்கு புலப்படும்.)

'இதுவாகும் அது அல்லது எனும் பிணக்கதின்றி—நீதியினாலிவை யெலாம் ஓரிடத்தே காண நின்றது யாதொருசமயம் அது சமயம் பொருணூல்.

" விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்து
எரிவினாற் சொன்னாரேனு மெம்பிராற் கேற்றதாகும்."
" எந்தமதமுஞ் சம்மதமாயிலு மதமா மெம்மதமே!"

என்ற வாக்கியங்களால் சைவத்தின் பொதுத்தன்மையை வலியுறுத்தியது கண்டீர்.

இலிங்கம்பொது. மேற்கூறிய சைவசித்தாந்த சாதனங்களில் இலிங்கம் என்னும் எரியுருவனாகிய நம்ஹரசிவனார் முழுமுதற்கடவுள் என்று கண்டோம். மற்ற எல்லாத் தெய்வங்களும், ஹரசிவனார் தேவியாகிய மஹாவிஷ்ணுவும் இலிங்கத்தில் அடங்கும்.



ஆனதால்தான் இதிகாசங்களில் அகத்தியர் மூலமாய் இராமர், ஹரசிவனாரிடத்தில் பாசுபதம் பெற்றதும், இராமலிங்கப்பிரதிட்டை செய்ததும், பாரதத்தில் அர்ச்சுனன் தபசும் 'இலிங்கம்' ஆகிய நம் 'எரியுருவன்' தேவர்களுக் கெல்லாம், தெய்வங்களுக்கெல்லாம், சிவயோகிகளுக்கெல்லாம், முனிவர்களுக்கெல்லாம் தேவன், அதாவது 'மஹாதேவன்' என்ற சிறப்புப்பெயர் நம் ஹரசிவனாருக்கே யுரித்தானதென்ற கருத்தை வெளிப்படுத்தியது கண்டீர். 'தமிழ்மறை' கூறுகின்றது:—

" நூறுகோடி பிரமர்க ணொங்கினார்
ஆறுகோடி நாராயண ரங்ஙனே
ஏறுகங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறிலாத நல்லீச னொருவனே."

(நாராயணர்என்பது பஞ்சமூர்த்திவிஷ்ணு, மஹாவிஷ்ணு அன்று)

" வாதுசெய்து மயங்குமனத்தரா
யேது சொல்லு வீராகிலு மேழைகாள்
யாதோர் தேவரெனப் படுவார்க் கெலா
மாதேவனலாற் றேவர் மற்றில்லையே."
" எரிபெருக்குவ ரவ்வெரி யீசன
துருவருக்க மதாவது முணர்கிலார்
அரியயற்கரி யானையயர்த்துப் போய்
நரிவிருத்த மதாகுவர் நாட்டரே."
" அருக்கன் பாதம் வணங்குவரந்தியில்
அருக்கனாவ னரனுருவல்லனோ."

ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனார் சுவாமிகளின் இந்திவ்விய விளக்கங்களினால் 'எரியுருவன்' றன் 'உருவருக்கம்' அக்கினி, சூரியன், சந்திரன் முதலிய எரியுருவங்களெல்லாமென்று கண்டோம். ஆகவே 'எரியுருவன்' என்றால் எல்லாத் தேவதைகளும் அவன் வடிவமென்றுங் கண்டோம். வேறு எந்த தெய்வத்திற்கும் இவ்வகை வடிவம் ஏற்பட்டிருப்பதாக சுருதிவாக்கியமில்லை.

நம் ஹரசிவனாரின் சக்தி கூறாகிய நம்மஹாவிஷ்ணுவுக்குக் கூட இவ்வகை வடிவம் கற்பிக்கப்படவில்லை. ஸ்ரீ சுப்பிரமண்ணியக்கடவுளாகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் " செய

லாடிய தீயாருரு வாகியெழு செல்வன்" என்றும், அப்பர்சுவாமிகள் "எரியலாலுருவமில்லை" என்னும், 'தீயாருருவு' நமஹரசிவனாருக்கேயுரித்தான தென்று விளக்கியருளக் கண்டீர்.

இவ்வகையான் ஹரசிவனார் பெருமையும் பதித்தன்மையும் விளங்க விளங்கத்திருத் தொண்டர்கள் எல்லாம்.

"சென்று நாஞ் சிறு தெய்வஞ் சேர்வோ மல்லோம், சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்" என்று இருமாந்து பேரின்ப போதத்தழுந்தியானந்தித்து வருகின்றார்கள். சத்தியம்! சத்தியம்! சிவ! சிவ! சிவ!

ஹா. ஷண்முக முதலியார்.

---

## "தத்துவமாவது நீறு."

(முன்தொடர்பு தொகுதி 1, பதிகு 3, 4, பக்கம் 104.)

சி:—இத்திருநீற்றுச் சமயத்தின் முக்கிய குறியாகிய மேற்கூறிய 'திருநீற்றைப் பற்றிப் புறச்சமயம் ஏதாவது கூறுகின்றதாவென்று பார்ப்போம். நமது புண்ணிய சக்கரவர்த்தியின்சமயமாகிய கிறிஸ்து சமய வேதமாகிய விவிலியநூலில்,

Psalm 102-ல்.

'Hear my prayer, O Lord, and let my cry come into Thee'............

'For I have eaten *ashes* like bread and mingled my drink with weeping'. என்று கூறப்பட்டுள்ளது. அதின் கருத்தாவது "ஓ கடவுளே, எந்தன் ஸ்தோத்திரத்தைக்கேள். என் கூக்குரல் உன்னிடத்தில் அடையும் படிக்கு அனுக்கிரகம் புரிந்தருள்வாய்"

"ஏனென்றால் நான் சாம்பலையே ஆகாரமாக உட்கொண்டு வருகிறேன், நான் பானஞ்செய்து வருவது கண்ணீர்கம்பலை தான்;" என்னும் விவிலியக் கருத்தைநோக்க, நமது ஸ்ரீஞானசம்பந்தப்பெருமான் வெளியிட்ட திருநீற்றுப் பதிகத்தில் "ஆசை கெடுப்பதுநீறு, (சிவஞான) போதம்தருவதுநீறு" என்ற சைவ சித்தாந்தக் கருத்தையே மஹா தபோஞானிகள் மேனாடுசென்று



விளக்கினார் என்பதற்கு ஐயமில்லை. நமது மணிவாசகப் பெருமான் மலர்ந்தருளிய 'திருவாசகம்,' மொழிபெயர்த்த ஜி. யூ. போப்பையர் அவர்கள் அந்நூலின் முகவுரையில் கூறும் சம்பந்தமுஞ் சான்றாக ஒற்றுமைப்படுத்திக் கொள்ளலாங் கண்டீர்.

ஹா. ஷண்முக முதலியார்.

---

## வேதாந்த சித்தாந்த சமரசம்.

வேதாந்த சித்தாந்த மென்னும் இத்தொடர் மொழி உம்மைத் தொகைத் தொடர் மொழியாம். தொகையை விரித்துக் கூறுமிடத்து வேதாந்தமுஞ் சித்தாந்தமு மெனவிரியும். சமரசம் என்பது ஒற்றுமையான சுவை எனப்பெறும். ஆகவே வேதாந்தமுஞ் சித்தாந்தமும் ஒற்றுமையான சுவையுடையன் என்பது சொற் பொருளாம். ஈண்டுச் சுவையென்பது,

"பலகலையாகம வேதம் யாவையினுங் கருத்து பதிபசுபாசந் தெரித்தல்"

என்றருளிச் செய்த உமாபதி சிவாச்சாரியார் திருவாக்கின்படி கடவுள், உயிர், பாசம் என்னு முப் பொருள்களின் இருப்பு, இலக்கணம், சாதனம், பயன் என்னு மிவற்றை ஐயவிபரீதக்குற்ற மறக் கூறுதல்.

இனி வேதாந்த மாவது யாது? சித்தாந்தமாவதுயாது? அவற்றுள்முப்பொருள்களைப் பற்றி எவ்வாறு கூறப்படுகின்றன? என்பனவற்றை முறையே ஆராய் வாம்.

வேதாந்தம்:—உயிர்கள் உய்தற் பொருட்டு இறைவனாலருளிச் செய்யப்பட்டன வேதமும் ஆகமுமாம், அவற்றுள் வேதம் கர்மகாண்டம், ஞானகாண்டம், மென இருவகைப்படும். கர்மகாண்டம், ஆன்மாபசுக்களை வெல்லுதற்கும் போக மனுபவித்தற்கும் உபாயங் கூறும். ஞானகாண்டம்பொருளாராய்ச்சியால் ஆன்மா பாசத்தினின்றும் விடுதலை எய்திதன்னையுந்தலைவனையு மறிந்து தலை வனாய் நின்று இன்புறு தற்கு உபாயங் கூறும். இது வேதத்தின் உத்தரபாக (மேற் பாக) மானதால் வேதாந்தம் எனப்பட்டது இதனை.

"அனாதி சீவனைம் மலமற்றப் பாலா
யனாதி யடக்கித்தனைக் கண்டரனாய்த்
தனாதி மலங் கெடத்தத்துவா தீதம்
வினாவு நீர் பாலாதல் வேதாந்த நன்மையே".

என்னும் திருமூலர் திருமந்திரத்தாற் றெளிக.

சித்தாந்தம்:—ஆகமம் தந்திரகலை, மந்திரகலை உபதேசகலை எனமுத்திறப்படும். அவற்றுள் தந்திரகலை சிவாலயம் அமைத்தல், வழிபடுதல் முதலாகிய சரியை யினையும், மந்திரகலை சிவப்பிரதிட்டை செய்தல், சிவபூசை செய்தல் முதலாகிய கிரியை சிவனைக் கூடுதலாகிய யோகம் ஆகிய இரண்டனையும், உபதேச கலை ஆன்மா சிவனை யடைந்து இரண்டறக் கலத்தலாகிய ஞானத்தினையுங் கூறும். இவ்வுபதேசகலையே சித்தாந்தமாம். இதனை.

" நித்தம் பரனோடியிருற்று நீண்மனஞ்
சத்த முதலைந்து தத்துவத் தானீங்கிச்
சுத்த மசுத்தந்தூ டராவகை நீங்கிநந்
தத்தன் பரன் பாலடைதல் சித்தாந்தமே".

என்னும் திருமந்திரத்தாற்றெளிக.

வேதம் பசைவரை வெல்லவும் போகமனுபவிக்கவும் எண்ணுபவராகிய உலகருக்கும் முத்தியடைய எண்ணுபவராகிய ஞானாதிகாரிகட்கும் உரித்தாதலிற்பொதுவும், ஆகமம் ஞானாதிகாரிகட்கே யுரித்தாகலிற் சிறப்புமாம். தந்திரகலை, மந்திரகலைகளும் உபதேசகலைக்குச் சாதனமாதலால் மூன்றுகலைகளும் ஞானாதிகாரிகட்கே யுரித்தென்றல் இழுக்காது. வேதம் பொதுவும் ஆகமஞ்சிறப்புமா மென்பதனை.

" வேதமோடாகம மெய்யா மிறைவனூ
லோதும் பொதுவுஞ் சிறப்புமென்றுன்னுக"

என்னும் திருமந்திரத்தாற் றெளிக. இதனை " ஆரணநூல் பொது சைவமருஞ் சிறப்புநூலாம்" என்றருளிய சித்தியார் திருவாக்கானுந் தெளிக.

வேதாந்தம் பொருளாராய்ச்சி செய்யுமுறைமையைக் கூறுவதொன்றாயினும், ஒரு பொருளை பூர்வபக்கம் பண்ணுவதற்குப் பிறிதொரு பொருளைச் சித்தாந்தமென நாட்டிச் செல்லுமுறைமையில், பலசித்தாந்தங் காணப்படுமாதலின், அவற்றுள் யாது சித்தாந்த மென மலையாமைப் பொருட்டு மேல் பூர்வபக்கம் பண்ணப்படாத வேதாந்தப் பொருளைத் தனித்தெடுத்து, ஆகமத்தின் உபதேசகலை கூறுவதால் இக்கலை சித்தாந்த மெனப்படுவதாயிற்று. இதுபற்றியே "சிவாகமம் சித்தாந்தம்" எனச் சிவஞான சித்தியாரிலும் "வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தத் திறன்" எனச் சிவப்பிரகாசத்திலும் "ஒரும் வேதாந்த மென்றுச்சியிற் பழுத்த, ஆராவின்ப வருங்கனி பிழிந்த, சாரங் கொண்ட சைவசித்தாந்தம்" எனக்குமர குருபரசுவாமிகள் பிரபந்தத் திரட்டினும் அனுபவமுடைய தேசிகர்களருளிச் செய்வார்களாயினர். இத்திருவாக்குகளுக் கிவ்வாறு உண்மைப் பொருள் கொள்ள அறியாதார் வேதாந்தம் சாமான்ய மென்றும் சித்தாந்தம் உயர் வென்றும் தத்தமக்கு வேண்டியவாறே பொருள் கொண்டிடற்படுவர். நிற்க.



பொருளாராய்ச்சியில் முப்பொருள்களினிருப்பு:—வேதாந்தத்தில் தத்துவமசி மகாவாக்கியமே பதி, பசு, பாசமென்னு முப்பொருள்களினிருப்பை யுணர்த்துகின்றது. எவ்வாறெனில் தொம்பதம் பசுவையும் தத்பதம் பதியையும் அசிபதம் சிவனையுமுணர்த்தும். இறைவன் தடத்த இலக்கணமாய் பதியெனவும் சொரூப இலக்கணமாய் சிவமெனவும் விளங்கும் உண்மையை யுணர்த்துதற்கு தற்பத அசிபதங்களும் பாசத்தோடு கூடிய பசுவையுணர்த்து தற்குத் தொம்பதமும் எழுந்தனவாதலின் முப்பொருளுண்மை யுணர்த்துதல் காண்க. இதனை,

" உயிரைப் பரனை யுயர்சிவன் றன்னை
யயர் வற்றறி தொந்தத்த சியதனாற் "

எனவும்,

" வேதாந்த தொம்பதமேவும் பசுவென்ப
நாதாந்த பாசம் விடநின்ற நன்பதி
போதாந்த தற்பதம் போயிரண்டயிக்கஞ்
சாதாரணஞ் சிவசாயுச்சியமாமே"

எனவும் அருளிய திருமூலர் திருவாக்காற் றெளிக.

அன்றியு மேலெடுத்துக் காட்டிய " அனாதி சீவனைம்மலமற்றப் பாலாயனாதியடக்கித்தனைக் கண்டரனாய்" என்ற திருமந்திரத்தானும் சீவன், மலம், கடவுள் என்னுமுப்பொருளுண்மைகாண்க.

சித்தாந்தத்தில் மேற் கூறிய "நித்தம் பரனோடியிருந்து" என்ற திருமந்திரத்தால் முப்பொருளுண்மையறிக. அனாதி என்றதனாலும் நித்தமென்றதனாலும் முப்பொருள்களும் அனாதி நித்த மென்பது வேதாந்த சித்தாந்தங்களின் கருத்தாம்.

இலக்கணம்:—அவ்விரு திருவாக்குகளும் அனாதியே மலத்தைப் பற்றுது நிற்றல் இறைவனுக் கிலக்கணமாம் எனவும் அனாதியே மலத்தைப்பற்றுதல் ஆன்மாவிற் கிலக்கணமா மெனவும் அனாதியே ஆன்மாவைக் கட்டுதல் மலத்தினிலக்கணமாமெனவும் முப்பொருள்களுக் கிலக்கணமுங் கூறியவாறும்.

சாதனம்:—வேதாந்தத்தில் அனாதியே மலத்தில் கட்டுப் பட்டிருக்குமான்மா அவற்றினின்றும் நீங்குவதற்கு சிவம் நான் என உபாசிக்கச்சொல்லும். சித்தாந்தத்தில் அச்சிவோகம் பாவனையே கூறி அங்ஙனம் பாவித்தற்குரிய இயல்பும் பாவிக்கு மாறும் கூறும். இதனை,

" மன்னிய சோகமா மறையாளர்தஞ்
சென்னிய தானேசிவோகமா மீதென்ன
வன்னது சித்தாந்த மாமறையாய்ப் பொரு
ளன்னிய வாகமநூலெனத் தோன்றுமே"

என்னும் திருமந்திரத்தாலறிக. "பண்டைமறைகளுமது நானானே னென்று பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே" என்னும் சிவஞான சித்தித்திருவாக்கும் இக்கருத்தினை வலியுறுத்தும்.

பயன்:—வேதாந்தத்தில் நீர் பாலுடன்கூடி டாலாதல் போல ஆன்மா இறைவனுடன் கூடி இறைவனாய் விடுமென்றும் சித்தாந்தத்தில் ஆன்மா இறைவனைக் கூடுமென்றும் கூறும். இவற்றை "வினாவு நீர் டாலாதல்வேதாந்த வுண்மையே" எனவும் "அத்தன் பரன் பாலடைதல் சித்தாந்தம்" எனவும் "தானான வேதாந்தம் தானென்னுஞ் சித்தாந்தம்" எனவுமருளிய திருமந்திரங்களாலறிக.

இக்ஙனங் கூறும் பயனாகிய முத்திநிலை சொல்லால் வேற்றுமைபோலத்தோன்றினும் பொருளால் வேற்றுமையின்றாம். எவ்வாறெனில் பாலுடன்சேர்ந்த நீர் வேறுகாணப்படு மாறின்மையின் நீர் பாலாதல் போல முத்தியில் ஆன்மாவாகிய தான் இறைவனாதல் என வேதாந்தமும் பாலைச்சேரும் வரைநீர் காணப்பட்டு சேர்ந்தபின் நீர் கெட்டுப் போதலின்மையின் பாலில் நீர் அடங்கி யிருத்தல் போல முத்தியில் ஆன்மாவாகிய தான் உண்டென சித்தாந்தமும் கூறுவன வாதலி னென்க.

தானான வேதாந்த மென்றதற்கு தான் (ஆன்மா) அதுவான வேதாந்தமென்றும் தானென்னுஞ் சித்தாந்த மென்பதற்கு தான் (ஆன்மா) உண்டென்னும் சித்தாந்த மென்றும் பொருள்கோடலே ஆசிரியர் கருத்தா மென்பதனை முறையே "தனைக்கண்டரனாய் வினாவு நீர் பாலாதல் வேதாந்த வுண்மையே" எனவும் "அத்தன் பரன் பாலடைதல் சித்தாந்தம்" எனவும் அருளிய அவர் திருவாக்காலினிது தெளிக.

முத்தியில் ஒன்று என்று வேதாந்தமும் மூன்றென்று சித்தாந்தமும் முரணுறக்கூறுகின்றவே யெனின் கடவுள், ஆன்மா வென்னு மிருபொருள்களிருப்பினும் பிரிக்கமுடியாமை பற்றி ஒன்றென வேதாந்தமும் அவ்விருபொருள்களின் கலப்பிற்கு மல நீக்கமே ஏதுவாதலின் மூன்றெனச் சித்தாந்தமும் கூறுவன வாதலின் முரணின்மையறிக.

முத்ததனில் மூன்று முதலு மொழியக்கேள்
சுத்தவநு போகத்தைத்துய்த்தலணு — மெத்தவே
இன்பங் கொடுத்த லிறையித்தை விளைத்தன் மல
மன்பனே கண்டு கொளப்பா"

என்னும் உண்மை விளக்க திருப்பாசுரத்தால் சிவானந்தத்தை விளைத்தல் மல மென்று காணப்படவும் மலநீக்க மேது வாமென்ற தெவ்வாறு பொருந்து மெனின், சிவானந்த விளைவெனினும் துன்பமின்மை யெனினும் ஒக்கும். துன்பமின்மை மலமின்மையாற் காணப்படும், சீதமின்மை பனியின்மையாற் காணப்படுவது போல. ஆகவே சிவானந்த விளைவிற்கு மல நீக்கமேது வென்றது பொருந்து மென்க. அங்ஙனமாயினும் இல்பொருளை உள்பொருள்போலக் கூறியது பொருந்துமோவெனின் நூல்வழக்கினும் உலக வழக்கினும் அவ்வாறு வழங்குதலுண்மையாற் பொருந்துமென்க. இதனை,

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
யெடுப்பதூஉ மெல்லாமழை"

என்னும் திருக்குறளானும் இத்தனைகேட்டிற்கும் மழையே காரணம் என்னும் உலகமொழியானு மறிக.



சித்தாந்திகளிற் சிலர் முத்தியில் மூன்றுண்டென்பதற்கு இவ்வாறு பொருள் கொள்ள அறியாது நித்திரைச் சுகத்துக்குப் படுக்கை யடங்கியிருந்து யேதுவாயினாற்போல முத்திச்சுகத்துக்கு ஆண்டு மல மடங்கியிருந்து ஏது வாகு மென்று கூறிமயங்குவர்.

முத்திநிலை இவ்வாறாயினும் ஒன்றென்று வேதாந்திகளும் இரண்டென்று சித்தாந்திகளும் அனுபவநிலையிற் சிந்திப்பரேல் முத்த ரல்லர். இதுபற்றியே,

"என்னானை யென்னானை யென்னானை யேகமிரண்
டென்னாமற் சும்மாவிரு வென்று—சொன்னான்
திருஞான சம்பந்தன் சீகாழி நாடன்
அருளாளன் ஞானவிநோ தன்"

என ஒழிவிலொடுக்கத்தில் கண்ணுடைய வள்ளல் அருளிச் செய்வாராயினர். அங்ஙனமாயின் இவ்வாராய்ச்சி பயனற்றதோவெனின் அனுபவம்பெறவிரும்பு வோர்க்கு ஐயவிபரீதக் குற்ற மறுத்தற்பொருட்டு வேண்டப் படுதலிற் பயனுடையதே யாமென்க.

வேதாந்திகளிற் சிலர் என்றும் பிரமம் ஒன்றே யுள்ளது. சீவன் மலம் என்பன இல்லை யென்றும் மூன்று நித்தப் பொருள்கள் இருக்கு மேல் அனேகாந்தவாத மென்னுங் குற்றமாமென்றும் கூறுவர். "தண்டுலத்தோலும் செம்பினிற்களிம்பும் சகசமாய் தொழில்விசேடத்தால், வீண்டுபோமதுபோல் புருடனுமலத்தை மேவியே போக்குதலியல்பாம்" என்னும் ஞானவாசிட்டத்தோடும் "அனாதியாம் சீவரெல்லாம் பொதுவான சுழுத்திபோல பொருந்து மவ்வியத்தந்தனில்" என்னும் கைவல்யத்தோடும் முரணுதலையும் பூரண வியாபகம், ஏகதேசவியாபகம், சமவியாபகம் என்னும் வேற்றுமையும் சித்துச் சத்து, சித்த சித்துச் சத்து, அசித்துச் சத்து என்னும் வேற்றுமையு முடைமையால் அனேகாந்த வாதமின்றென்பதனையும் அவர் அறிந்திலர்.

வேதாந்தத்தில் ஆன்மாவே எல்லா மென்றும் அதுவே பிரமம் என்றும் சிலவிடங்களிற் கூறுவதால் ஆன்மாவைத்தவிர பிரமம் வேறு இல்லை யென வேதாந்திகளும் அந்நூல் பசுநூல் எனச்சித்தாந்திகளுங் கூறுவர்.

“அகமெனுமான்மா பூரணம் ஏகம் அநேகவிதஞ் சீவர்” எனக் கைவல்யத்தில் கூறியிருப்பதை வேதாந்திகளும் “ஒன்றென மறைகளெலா முரைத்திட உயிர்கள் ஒன்றி, நின்றன வென்று பன்மைநிகழ்த்துவ தென்னையெனின் அன்றவையத்துவிதமென்றறையும்” எனச் சித்தியாரிற் கூறியிருத்தலைச் சித்தாந்திகளும் கவனித்திருப்பரேல் அவ்வாறு கூறமுற்படமாட்டார். ஆன்மசப்தத்திற்கு வேதாந்தத்தில் பரமான்மா வென்றும் சித்தாந்தத்தில் சீவான்மா வென்றும் பொருள் கொள்ளல் வேண்டும்.

வேதாந்தத்தில் பிரமம், ஈசுவரன், கூடஸ்தன், சீவன் என்று நான்கு சித்துப் பொருள்கள் உண்டெனக் கூறுதல் போல சித்தாந்தத்திலும் சொரூபசிவம், தடத்தசிவம், ஆன்மா, சீவன் என நான்கு பொருள்கள் உண்டென்று கூறும். ஆன்மா பாசத்தோடு கூடிய பொழுது சீவன் என்றும், பாசத்தை விட்டு நீங்கி பதியை யடைந்தின்புறுங்கால் ஆன்மா அல்லது கூடஸ்த சிவம், என்றும், பஞ்சகிருத்தியத்தை நடத்து மூர்த்திமானாய் நிற்குங்கால் தடத்த சிவம் அல்லது ஈசுவர னென்றும், அதீதமாய்நிற்குங்கால் சொரூபசிவம் அல்லது பிரமம் என்று பேர் பெறும்.

இதுகாறுங் கூறியவாற்றால் முப்பொருள்களினிருப்பு, இலக்கணம் சாதனம், பயன் என்னும் நான்கு திறத்தானும் வேதாந்தமும் சித்தாந்தமும் ஒற்றுமையுடையன வென்பது காட்டப்பட்டது.

அங்ஙனமாகவும் சித்தாந்தத்தைத் துவிதவாதமென்று வேதாந்திகளும் வேதாந்தத்தை மாயாவாத மென்றும் சோபான யானசாதன மென்றும் சித்தாந்திகளுங் கூறுவதற்குக் காரணம் என்னையோ வெனின் படிக்குமுறைமையில் படியாமையா லென்க.

படிக்கு முறையாவது சரியை, கிரியை, யோக நூல்கற்று அவ்வாறொழுகி பருவமெய்திய பின்னர்படித்தல். இதுபற்றியே “முன்னர்தீக்கையுற்றுச் சிவாகமங்களை யோதி அதன் பின்னர் சரியாபாத முதலியவற்றை யாராயு நூல்களை முறையேகேட்டு அவ்வாறொழுகி மனந்தூயராய் நித்தியா நித்திய வுணர்வு தோன்றி பிறவிக்கஞ்சி வீடுபேற்றினவா மிக்குடையராய் வந்த அதிகாரிகட்கு இந்நூலுணர்த்துக” எனசிவஞான போதத்திலும்,

“சரியை கிரியா போகப்பதத்தின் முற்றி
சாதனங்கள் நிறைந்தவர்க்கே சாற்றல் வேண்டு, மென.
ஞானவாசிட்டத்திலும் ஆசிரியர்களருளிச் செய்தார்களாயினர்.

இக்காலத்திலோ சரியை, கிரியை, யோக நூல்களைக் கற்றலும் அநுட்டித்தலுமின்றி வேதாந்தம் அல்லது சித்தாந்தம் படிக்க ஆரம்பித்து விடுகின்றார்கள். சிறிது படித்த மாத்திரத்தே படிப்புநிரம்பி விட்டதாக வெண்ணித்தானே தனக்கு வித்வானென்றும் ஆசிரிய னென்றும் பட்டஞ்சூட்டிக் கொள்ளுகின்றார்கள். இவர்கட் கெவ்வாறுண்மைப் பொருள் தெரியும்?



இது பற்றியே “நாதனுரையவை நாடிலிரண்டந்தம். பேதம தென்பர் பெரியோர்க்க பேதமே” என்றருளிச்செய்தார் திருமூலநாயனாரும். பெரியராவார் யோகவழி ஒழுகுவோர். “செயற்கரிய செய்வர் பெரியர்” என்னுந் திருக்குறளுக்கு உரையாசிரியர் பரிமேலழகர் செய்தற் கரியவாவது யோகவழி யொழுகுத லெனக் கூறியது யீண்டுக்கவனிக்கத்தக்கது.

“வேதசிரப் பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றால் சைவத்திறத்தடைவர்” என்றதனால் வேதாந்தஞ் சித்தாந்தத்திற்குச் சாதன மாகாதோ வெனின்? ஆகாது. என்னை? வேதாந்தமேற்கூறியவாறு பலபடவிரிந்து கிடத்தலின் அவையெல்லாம் ஆய்ந்து என்பதற்கு மிகத்தெளிந்து என்றும் அங்ஙனமாயுங் காலொவ்வொன்றுஞ் சித்தாந்தமெனவே காணப்படுமாதலின் மேலாராய்தலருமை நோக்கிச் சென்றாலென்றும் சொல்லில் சிவபரத்துவஞ் சொல்வதாகிய வேதாந்தத்தை யறிந்து அதன் பொருளை விரித்துக் கூறுஞ் சித்தாந்தத்திற் றலைப்படுவர் என்பதுதோன்ற சைவத்திறத்தடைவ ரென்றும் அங்ஙனமடையினும் சரியை, கிரியை, யோகவழி ஒழுகியே ஞானத்தைப்பெற்று முத்தியடைவ ரென்பது தோன்ற “இதிற் சரியை கிரியாயோகஞ் செலுத்திய பின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்” என்றும் அருளிச் செய்தமையா லென்க.

இவ்வாறுபொருள் கொள்ளாமல் சரியைக்குந் தாழ்ந்தது வேதாந்தமென்று கூறுபவர் “பண்டை மறைகளுமது நானுனேனென்று பாவிக்கச்சொல்வதிப் பாவகத்தைக் காணே” என்ற அச்சிவஞானசித்தித் திருவாக்குக் கெண்கடவர். முன்னொடுபின் முரணின்றி நூற்பொருள் கொள்ளுதலே பெரியோர் செயலாம்.

“சைவசமயமே சமயம்” என்று ஸ்ரீ தாயுமான சுவாமிகளருளிச் செய்திருக்கின்றமையால் ஏனைச் சமயங்களெல்லாந்தாழ்ந்த தென்றும் அவற்றுளொன்று வேதாந்த மென்றுங் கூற அமையாதோ வெனின்? அமையாது. என்னை? வேதாந்தமென்பதும் சித்தாந்தமென்பதும் சைவசமயத்தின் பரியாயப் பேர்களே. வேதாந்தத்தில் கூறுந்தெய்வம் பிரமம். சித்தாந்தத்தில் கூறுந்தெய்வம் சிவம். பிரமம் சிவம் என்பன ஒரு பொருட்கிளவி ஆதலின் வேதாந்தம் சித்தாந்த மிரண்டும் ஒரு பொருளையே தெய்வமெனக் கூறுகின்றதால் இரண்டு மொற்றுமையுடையன வென்பது எளிது புலனுமாதலினென்க. இதனை “வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார்கண் களிக்கும், நாதாந்த மோனநலமே பராபரமே” எனவும் “வேதாந்த சித்தாந்த சமரச சுபாவமிதுவே” எனவுமருளிய அவ்வாசிரியர் திருவாக்கானே தெளிக.

வேதாந்தத்தை மாயாவாதமென்றும் சித்தாந்திகளிற் சிலர் கூறுகின்

றனர். அவருக்கு வேதாந்தமுந் தெரியாது. அம்மட்டோ! சித்தாந்தமுந் தெரியாதென்றே உறுதியாய்ச் சொல்லலாம். என்னை? வேதாந்தத்தை மாயாவாதமென்றுகூறுவதற்கேது வென்னையென அவரை வினவின் யுத்தஞ் செய்தற்பொருட்டு சொன்ன பகவத் கீதையை நூலெனக் கொள்ளலாகா வென்று சிவஞானசித்தியார் பரபக்கத்தில் "தேர்த்தனிலிருந்துமாயைசெய்துமால்கொல்லச் செப்பும், வார்த்தை நூலாக்கிக் கொண்டாய் புரங்கொல்நூல் மதித்திடாயே" எனக்கூறியிருத்தலா லென்கவென்று விடைதருகின்றனர். அப்பர பக்கத்துள் மாயாவாதிமதமும் அதன்மறுதலையுமிருக்கின்றன. அவற்றுளெங்கேனும் பகவத்கீதையைப்பற்றியாவது, ஞானவாசிட்டம் கைவல்யம் முதலிய நூலைப் பற்றியாவது நூற்பெயர்கூறிக் கண்டிக்கப்பட்டிருக்கின்றதா? இல்லையே. பகவத்கீதையைக் கண்டித்தது பாஞ்சராத்திரியின்மறுதலையினன்றோ. பகவத்கீதையை பாஞ்சராத்திரிகள் கண்ணனுக்கு பரத்துவங் கூறுகின்றதாகக் கொள்ளுகின்றார்கள். வேதாந்திகள் பரத்துவமுடைய பொருளின் சாமான்யவடிவம் கண்ணனெனக் கூறுகின்றதாகக் கொள்ளுகின்றார்கள். இதனை,

"சங்காளி பயில் கரத்தைமுதலான வங்கஞ்சாமானியந்தான்
மங்காமலடிமுடிவற் றொன்றாயவடிவு பரவடிவமாகும்
இங்கான பிரமமென பரமமென விசைப்பதெலாமிந்நுருவம்
சிங்காமலிதுதனை நீதெளிவனாவும் நாலுபுயத்தேவையேத்து"

எனக்கூறும் ஞானவாசிட்டச் செய்யுளால் தெளிக. சித்தாந்திகளும் வேதாந்திகள் கொள்வது போலவேகொள்கின்றார்கள். இதனை "இவ்வொற்றுமைபற்றியன்றே அருச்சுனனுக்குக் கீதைநூல் செவியறிவுறுத்திய கண்ணன் யானே யுலகெல்லாமாயினே னென்றதுவும் முதல்வனது விச்வரூபத்தைத்தான் காட்டியதுவும் ஏனையவற்றைக்கைவிட்டு என்னையே வழிபடுக என்றதுவும் அதனை யுறுதியாகக்கொண்ட அருச்சுனன் அவன் கூறியகருத்து நோக்கி சாங்காறும் சிவபூசை செய்ததுவும் கண்ணன் மேலிட்டபோதுகள் முதல்வன்றிருமுடிமேல் கண்டதுவும் என்க" எனச் சிவஞானபோதச்சிற்றுரையில் மாதவச்சிவஞான யோகிகளருளிய வாக்கியத்தாற்றெளிக. அன்றியும்,

"ஆகின்ற தொண்ணூற்றோடாறும் பொதுவென்ப
ராகின்ற வாறாறுஞ் சைவர்தத்துவ
மாகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க்
காகின்ற நாலாறையைந்து மாயாவாதிக்கே"

என்னுந்திருமந்திரத்தால் மாயாவாதம் வேறு, வேதாந்தம் வேறு என்பது நன்கு விளங்குகின்றதல்லவா- ஆயினும் வேதாந்தத்துக்குஞ்சித்தாந்தத்திற்



குந் தத்துவங்களில்வேறுமை காணப்படுகின்றனவே யெனின் அவ்வேற்றுமை ஒன்றிலொன்றடங்குமுறைமையில் சமரசமேயாம். அதனை ஈண்டுவிரிப்பிற்பெருகு மென்றஞ்சி விடுகின்றாம். வேதாந்தமுஞ் சித்தாந்தமு மவ்வாறுசமரசமாகாதிருப்பின் "இரண்டந்தம் பெரியோர்க்கபேதமே" என்ற அவர் திருவாக்கோடு முரணுமாறு காண்க.

ஆதலின் வேதாந்தம்சித்தாந்த மென்னுமிவ்விரண்டனையும்நன்காராய்ந்து சமரசப்பொருள்கண்டு இன்புறுதலே முறைமை யென என் சிற்றறிவுக் கெட்டியவாறாம்.

---

## முடிவுரை.

வேதாந்த சித்தாந்த சமரசமென்னுந் தொடர் மொழிக்கு வேதாந்தமுஞ்சித்தாந்தமுமொற்றுமையான சுவையுடையன வென்பது பொருளாமென்பதாவும், பதிபசுபாச மென்னுமுப்பொருள்களினிருப்பு, இலக்கணம் சாதனம், பயன் நான்குமே ஈண்டுச்சுவை எனப்படுமென்பதூஉம், உயிர்களுய்தற்பொருட்டு இறைவனாலருளிச் செய்யப்பட்டன வேதமும் ஆகமமுமாமென்பதூஉம், வேதம் கர்மகாண்டம் ஞானகாண்டமென இருதிறப்படுமென்பதூஉம், ஆகமம் தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை என முத்திறப்படுமென்பதூஉம், வேதத்தின் ஞானகாண்டம் வேதாந்தமெனவும் ஆமகத்தின் உபதேசகலை சித்தாந்தமெனவும் பெயர்பெறுமென்பதூஉம், வேதம் உலகருக்குமஞ்ஞானாதிகாரிக்கு முரித்தாகலின் பொது வென்பதூஉம், ஆகமம் ஞானாதிகாரிக்கே யுரித்தாகலின் சிறப் பென்பதூஉம், ஆகமத்திலுள்ள தந்திரகலை மந்திரகலைகளும் உபதேசகலைக்கே சாதனமாதலின் ஞானாதிகாரிக்கே உரித்தென்ற இழுக்கா தென்பதூஉம், வேதாந்தம் பொருளாராய்ச்சி செய்யுமுறைமையில் ஒன்றைப் பூர்வபக்கம் பண்ணுமிடத்துப் பிறிதொன்றனைச்சித்தாந்தமென நாட்டிச் செல்லுதலின் பல சித்தாந்தங்காணப்படுமாதலின் அவற்றுள் முடிவான சித்தாந்தத்தைத் தனித்தெடுத்து ஆகமத்தின் உபதேசகலையிற்கூறுதலின் சித்தாந்த மெனப்பட்டதென்பதூஉம், வேதாந்தத்தில் தத்துவமசி மகாவாக்கியமும் பிறவும் முப்பொருள்களினிருப்பு, இலக்கணம், சாதனம, பயனிந்நான்கினையுமுணர்த்து மென்பதூஉம், சித்தாந்தத்திலுமவ்வாறே யுணர்த்துமென்பதூஉம், பயனாகியமுத்தியில் வேதாந்தம் ஒன்றெனவும் சித்தாந்தம் மூன்றெனவுங் கூறுதலினால் சொல்வேற்றுமையேயன்றிபொருள்வேற்றுமையின் றென்பதூஉம், வேதாந்தத்தில் ஆன்மா சப்தத்திற்குப் பரமான்மா வென்றும் சித்தாந்தத்திலான்மசப்தத்திற்குச் சீவான்மாவென்றும் பொருளாமென்பதூஉம், வேதாந்தத்தை மாயாவாத

மென்றலும் சித்தாந்தத்தைத் துவிதவாதமென்றலும் பொருந்தாவென்பதூஉம், சரியை, கிரியை, யோகமநுட்டித்தே வேதாந்த சித்தாந்தங்களிற் பிரவேசிக்கவேண்டுமென்பதூஉம், வேதசிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றால் சைவத்திறத்தடைவொன்றதனால் வேதாந்தம் சித்தாந்தத்திற்குச் சாதனமாகாதென்பதூஉம், சைவமயமே சமயமென்று கூறியதால் வேதாந்தம் சித்தாந்தத்தினுந் தாழ்ந்ததாகாதென்பதூஉம், பகவத்கீதையை வேதாந்திகளும் சித்தாந்திகளும் ஒரேகருத்துடையதாய்க்கொள்ளுகின்றார்களென்பதூஉம், பாஞ்சராத்திரிகள் அவ்வாறு கொள்ளவில்லையென்பதூஉம், ஆதலின்வேதாந்தமும் சித்தாந்தமும் சமரசமெனக்கண்டு உண்மையறிந்து இன்புறவேண்டுமென்பதூஉம் பிறவுமாம்.

திருச்சிற்றம்பலம்.

பொ. முத்தையபிள்ளை
திருவாவடுதுறையாதீனச் சைவப்பிரசாரகர்
தூத்துக்குடி.

[நம்பிள்ளையவர்கள் எழுதிய அரிய பெரிய விஷயத்தில், சித்தாந்திகள் பலரும் ஆட்சேபிக்கக்கூடிய சில அம்ஸங்கள் காணப்படுகிறது. நம்திருமந்திரக்காரரும், மற்றுமுள்ள சித்தாந்தசீலர்களும் கைக்கொண்டவேதாந்தத்தையும் சாதாரணமாய் வேதாந்த மென்று வழங்கி வரும் சங்கர மதத்தையும் ஒன்றென மயங்கிக் கூறியுள்ள தாகவும் காணப்படுகிறது. திருமந்திரக்காரர் கூறியுள்ள ஆனந்தங்களும் ஒருவிதத்தில் ஒற்றுமையுடைத்தேனும், அவ்வவற்றின் தத்துவங்களும் நிற்கும் நிலைகளும் கொஞ்சம் கவனித்தால் வெவ்வேறென விளங்கும். சைவர்களுக்கு 36 தத்துவமாகவும், வேதாந்திகளுக்கு 28 தத்துவமாகவும் மாயாவாதிகளுக்கு 25 ஆகவும் பாஞ்சராத்திரிகளுக்கு 24 ஆகவும் திருமந்திரத்தில் கண்டுள்ளது நம் பிள்ளையவர்களே காட்டியுள்ளார்கள். "தானென வேதாந்தம் தான் என்னும் சித்தாந்தம்," என்னும் வரியில் ஆன்மா வுண்டு என்று சொல்வதே சித்தாந்தம் என்று சித்தாந்தத்துக்கு மகுடம் சூட்டியது மிகவும் கொண்டாடப் பாலதன்றோ! சமரசம் என்ற சொற்றொடரையும் பலரும் பலவாறாக விளக்குகின்றார்கள் இவ் விஷயங்களையெல்லாம் அடுத்த சஞ்சிகையில், 'சமரசம்' என்னும் தலைப்பின்கீழ் விசாரிப்பாம். ப—ர்]

---

## சிவானந்தம்.

"கற்குஞ்சரக் கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்."

பதிபசுபாசங்களென்னும் முப்பொருள்களும் அநாதிநித்தியமாயுள்ள உள்பொருள்களேயாம். ஏனெனில் இல்பொருள் என்றுந்தோற்றாமையால். இவற்றுள் சிவமேபதியாம். ஆன்மாவே பசுவாம். ஆன்மா வின்ப துன்பம்நுகர்தற்கும் நல்வினை தீவினை இயற்றுதற்கும் நிலைக்களமாயுள்ளது பாசமாம். அப்பாசமும் ஐவகைப்படும். அவையாவன, சுத்தமாயை, அசுத்தமாயை, ஆணவம், கன்மம், திரோதாயி என்பனவாம். இவற்றுள் ஆணவம், ஆன்மாவுடன் அநாதியே செம்பிற்களிம்புபோல இயைந்து நிற்குஞ் சடப்பொருளாம். சடத்துக்கும் இயக்குவித்தாலியங்குஞ்செயலுண்மையால் இவ்வாணவத்திற்குஞ் செயல்களுள்ளனவாம். அஃது ஒருபொருளாதலினால் பக்குவம்முறும். அப்பொழுது தன்சத்தி குன்றி நிற்கும். அவ்வாணவத்திற்கு ஆன்மாவின் இச்சை ஞானம் கிரியை என்னும் முச்சத்திகளையும் மறைப்பதேதொழிலாம். இவ்வாணவத்தின் குணமோ எண்வகைப்படும். அவையாவன, விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர், மதம், நகை என்பனவாம். இக்குணங்களைக்கெடுத்து சத்திகுன்றச்செய்தால் பாசநீக்க முண்டாம். இச்சத்திகளால் மறைக்கப்பட்ட ஆன்மாவின்றன்மையாதோவெனில், சத்தாகிய சிவத்தையும் அசத்தாகிய பாசத்தையும் அறியுந்தன்மையதாய் அறிவிக்க அறிவதாய் நிலைபெற்ற சத்து அசத்து இவ்விரண்டின்பாலும் அநுபவ அறிவுள்ளவதுவே சத்துமசத்துமல்லாத சதசத்தாய்நிற்குந்தன்மையதாம். அங்ஙனம்நிற்பது ஆகாயம் ஒளியோடுசேர்ந்தால் ஒளியாகவும், இருளோடுசேர்ந்தால் இருளாகவும் நிற்குந்தன்மைபோலெனக்கொள்க. இங்ஙனம் அவ்வான்மாநிற்குந் தன்மையால் அஃதுபடிகம்போல் சார்ந்ததின் வண்ணமாய் அழுந்துவதோர் தன்மையுடைய தெனக்கொள்க.

இஃது இங்ஙனமாக உயிர்க்கிரங்களாகிய இச்சையையும், வையம் நடத்தலாகிய கிரியை யையும், இசைந்து உணர்த்தலாகிய ஞானத்தையும், தனக்குச் சத்திகளாய்க்கொண்ட இறைவனது ஞானம் தற்கேடுவந்தவிடத்து ஆன்மஅறிவிற்கோர் அறிவாய்ப் பிரகாசிக்கும். அதனை இறைவன் திருவருட்சத்தியெனக் கூறுவர். அவ்வறிவைச் சுட்டுணர்வின்றியறிதல் ஞானதரிசனமாம். அவ்வாறு அறிதலும் அவ்விறை ஞானத்தாலாமேயன்றி மற்றொன்றாலாகாதெனக் கொள்க.

அந்த ஞானவிளக்கின் வழியேநிற்க அஃது ஆதித்தப் பிரகாசம்போல ஆன்மாவினுள் பிரகாசியாநிற்கும். இப்படிப் பிரகாசித்து நிற்றலால் மலங்காரியப்படாமல் கீழ்ப்பட்டு நிற்குமெனக்கொள்க. அவ்வாறுநிற்பதால் அதுதானுங்கெடாது. ஆன்மாவையும் அணுகாது. அஃது ஒளியின் மேலீடு கொண்டு இருளடங்கித்தோற்றமுமற்றுக் காரியப்படாமல் நின்றாற் போலென்க. மேற்கொள்.

“ சேணிருள்வடிவுஞ் செங்கதிரோன் பாணிற்பக்
காணொழியுங் கணக்கேபோ—லாணவத்தி
ஞதி குறையாம லென்பா லணுகாம
னீதி நிறுத்து நிலை போற்றி ” என்றருளியதாலறிக.

இவ்வாறு ஆணவத்தின் செயல்மாய்ந்து ஞானம் பிரகாசிக்கப்பெற்ற ஆன்மாவே நின்மல நிலையடைந்ததாகும். இந்நிலையுள் பஞ்சசத்திகளிடமாகநின்று தன்னைத்தலைவனையறிந்து தனக்குப் பாசம்பகையென நீங்கி நிறைவொடு நிறைவாய் நிற்கிறநின்மல சாக்கிரமும், பரையாதி இச்சைஞானத்தைப் பொருந்தி நிறைவொடு நிறைவாய் நிற்குந்தன்மையிலே தன்நிறைவுங் காணமல் நீர்நிழல்போலடங்கப்பெற்ற நின்மல சொர்ப்பனமும், பரையாதியிச்சையைப்பொருந்தி நீர்நிழல்போலடங்கப்பட்டதான இந்த நிறைவுக்குள்ளே சந்திரனிடத்திலே களங்கம் நின்றாற்போல நிற்கிற நின்மலசுழுத்தியும், பரையாதியிச்சையைப் பொருந்தி நிறைவுதானாய் நிற்கிறநின்மலதுரியமும், பரையைப்பொருந்தி தனக்குயிராய் நிற்கிற தன்மையை யறிந்து அந்த நிறைவுக்குள்ளே தன்னிறைவென்பது சற்றுங்காணது அந்த நிறைவேநிறை



வாய்த்தாக்கற்று நிற்கின்ற நின்மல துரியாதீதமும் ஆகிய ஐந்து அவத்தைகளையுங்கடந்து திருவருளிலே தாக்கறக்கலந்து நிற்பது பரமானந்தம். அந்தப் பரமானந்த நிசையிலதுவாயிருப்பதுவே இன்பம். இவ்வின்பந்தான் ஆதியந்தமில்லாத அனந்தானந்தங்களாகவிருக்கும். இவ்வின்பத்திலே நின்று அநுபவித்து அதிற்றாக்கறக்கலந்து ஆறி யவிழவே இன்பங்கழலும். இது கழலவே எல்லாங்கழன்ற விடம் சிவம். சிவத்தைப் பொருந்தி சிவமன்றியொன்றுங் காணமல் நின்றதுசிவரூபம். அந்தச் சிவத்திலே வேறுமுடனுமாய் தான்சிவனும் சிவன்தானுமு மில்லாமல் நிற்பது சிவதரிசனம் அந்தச்சிவத்திலே தாக்கறக்கலந்து எழுவாயுமீறுமின்றிநின்றநிலை சிவானந்தம். இதற்குமேல் சும்மாவிருக்கு நிலையாகியமோனநிலையாம். இதிலே உறைப்புண்டுநிற்க சிவமுங்கழலும். சிவங்கழலவே எல்லாமிருக்கையிலே இல்லாமையாய்நின்ற சிவாநுபூதிதானாய் நிற்கும். இதில் நிற்றலே முத்தியாமென்க.

இந்தனத்திலங்கி யெரியு ற நீர் தேனிரதங்
கந்தமலர்ப்போதுவான் காலொளிகண்—சந்ததமு
மத்துவித மாவதுபோ லான்மாவு மீசனுமாய்
முத்தியிலே நிற்கு முறை.

இதுவே முத்திநிலையாம். இம்முத்தியும் சீவன்முத்தியும் விதேகமுத்தியுமென விருவகைப்படும்.

சீவன்முத்தர்நிலையாவது.

“ தொண்டர்கூடாழும் வானோர் தொழுந்திரு மேனிதானு
மண்டருங்கண்டிலாத வண்ணலேயெனவணங்கி
வெண்டரளங்கள்சிந்த விழிமொழிகுழறச்சிவமே
கண்டுகொண்டிருப்பர் ஞானக் கடலமுதருந்தினோரே ”

இது காறுங்கூறியவாற்றால் இறைவன் உயிரோடு கலந்தவழி ஆன்மாவினனுபவமாதற்குரிய பேரின்பாதீதமே சிவானந்தமெனக்கண்டாம்.

சிவானந்தம் இன்பப்பொருள் கொள்ளுவது [illegible]மெனில் ஒருசொல்லுக்குப் பலபொருளுண்மையின் ஆனந்தம் என்னுஞ் சொல்லுக்கு இன்பமென்னும்பொருள்கொண்டு யாண்டும் வழங்கல்கண்டாம். நந்தம் என்பது நிறைதல். ஆனந்தமும் உம

சர்க்கத்தோடு கூடியவழி இன்பம் என்னும் பொருளுணர்த்தி நிற்றல் சாலும். ஆதலால் இவ்விருமொழிகளும் ஒருபொருட்கிளவிகளாம். இவ்வின்பமானது ஆனந்தமென்னுஞ் சொல்மாத்திரையானன்றி முத்தியிற் பரமசுகமுண்டென சுகம் என்னுஞ் சொல்லானும் பெரும்பாலு மோதுதலின் ஆனந்தத்திற்கு இன்பமென்னும் பொருள் மாத்திரமன்றெனவுணர்க.

இவ்வின்பமும் மேற்கூறியாங்கு எப்பொழுதும் இறைவனுடன் அபின்னையாய் நின்று இன்பசுகப்பிரபை தருவதாகிய இன்பசத்தியாலுண்டாம்.

துன்பற்றவின்ப சுகப்பிரபை தன்னையே
யின்பசத்தியென்றறி நீஎப்போது—மன்புறவே
நின்றதிலேயாறி நிலாவு நிலாவுப்போன்
மன்ற றரமணந்து வாழ்.

இவ்வின்பசத்தியோடு இரண்டறக் கலந்துநின்று நிலாவும் நிலாவும்போல் மன்றல் தரமணந்துநின்ற வாழ்வே சிவானந்த வாழ்வாம்.

ஒன்றுஞ் சுகவடிவுக்குள்ளான தம்பிரா
னன்றியொரு பொருளுமாகாதே—நின்றழுந்திச்
சொல்லரிய வந்தச் சுகத்துக் கதிதமாய்
நில்லவன்று ளுமே நிலே.

என்று பெரியோர் கூறினர். இதுமாறுத சிவாநுபவமாம். ஆண்டு இறைவன் உயிரோடு கலந்தவழி கரும்பு, தேன், பால், கனி, அமுது, கண்டை ஒத்திருப்பன். மேற்கோள் வருமாறு.

"இரும்பைக் காந்தம் வலித்தாற்போ லிரைந்தங் குயிரை
யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத் தானுக்கி
யரும்பித்த இந்தனத்தை யனலழிப்பது போன் மலத்தை
யறுத்தமல னப்பனைந்த வுப்பே போலணைந்து
விரும்பிப் பொன்னினைக் குளிகையொளிப்பதுபோலடக்கி
மெளித்தாறுந் தானெல்லாம் வேறிப்பானுகிக்
கரும்பைத்தேனைப் பாலைக்கனியமுதைக் கண்டைக்
கட்டியை யொத்திருப்பனந்த முத்தியினிற் கலந்தே"

என்பதாலறிக.



உலகத்திலுள்ள ஆனந்தத்தை ஆன்மாவிலநுபவிக்கப்படுமாறுபோல் சிவாநந்தத்தையுமான் மாவிலநுபவிக்கப்படும். அப்படிஅநுபவிக்கப்படுவன வெல்லாம் சடமாதல் காண்டுமாதலின் அதுபோல் சிவானந்தமுஞ் சடமோவெனில் அஃது அங்ஙனம் ஆகாது. பின்னையென்னெனில் ஆன்மாவால் சிவஞானம் விளங்கியவழி அறியநின்ற ஞேயப்பொருளாகிய சிவமும் சடமாதல் வேண்டும். அவ்வாறுமறியவில்லையானுல் உணராத பொருள்சூனியமெனப்பட்டுமுடியும். அஃது இன்மையால் சிவானந்தாநுபவம் உலகானந்தம் போல்சடமாகாமைகாண்க. உலகானந்தம் சுட்டியறிந்து அநுபவிக்கப்படுவதொன்று. சிவானந்தம் சுட்டிறந்து அநுபவிக்கப்படுவதொன்று. ஏனெனில் சிவம்சுட்டிறந்து நின்றறியப்படும் ஞேயப்பொருளாதலினுல் அவனது ஆனந்தமும் அவ்வாறே யநுபவிக்கப்படுவதொன்ரும்.

இச்சிவாநந்தம் ஆன்மாவிற்குப் போகமோ வல்லதுபோக்கியமோ வெனிற்கூறுதும். போகம் அநுபவம். போக்கியம் அநுபவிக்கப்படுபொருள். ஆன்மா எதனைச்சார்ந்து அறிந்தானே அதன்வண்ணமாய் அப்பொருளில் அழுந்துதலே அநுபவம்என்னுஞ் சொற்குப்பொருளாதலின் போக்கியமாதல் செல்லாமையுணர்க.

ஆன்மாவிற்குப் போக்கியமாத லெதுவெனில் அவனுக்குப் பிரமேயரூபமாய் ஞேயமெனப்பட்டன வெல்லாமென்க. அப்படியானுல் சிவனுக்கு ஞேயமெனப்பட்ட பசுபாசங்கள் அவ்விறைவனுக்குப் போக்கியமாமோவெனில், அங்ஙனமாகாது ஏனெனில் சார்ந்ததின் வண்ணமாம் அழுந்துமியல்பு ஆன்மாவிற்கே யன்றிசிவத்திற்கு அத்தன்மையின்றென்றுணர்க. ஆதலால்எல்லாப்பொருளும் அறியப்படும் ஞேயமாதலே யன்றி அநுபவிக்கப்படும் பிரமேயரூபமாதலின்மை கண்டுணர்க. ஆதலால் அவைகள் அவனுக்குப்போக்கியமாகாவாம் (ஞேயம் அறியப்படும்பொருள். பிரமேயம், அறிந்து அநுபவிக்கப்படும்பொருள்) பிரமாண முதலியவற்றை ஒருசிறிது கூறுவாம். சம்சயாதிகளை விட்டிருக்கிற ஆத்மசித்சத்தியானது பிரமாணமாம். ஆத்மாவே புத்தி பிரமாதாவாம். அதன் ஞானக்கிரியாவியாபாரமே பிரமி

தியாம். இந்திரியாதிகள் பிரமேயமாம். ஆனால் ஆன்மாவை யறிதல் எந்தப்பிரமாணத்தைக் கொண்டெனிற்கூறுதும்.

ஆன்மசிற்சத்தியைக் கொண்டு ஆன்மாவையறிதல் கிரியாவிரோதம். ஆதலால் ஈண்டு பரோன்முகசித்சத்தியே பிரமாணம். ஈண்டு ஸவயோன்முகசித்சத்தியும் புத்தியாதிகளும் பிரமாணமன்று. ஆதலால் பரோன்முகசித்சத்தி துணையாக ஆன்மா இறைவனையறியுமென்பதாம். இறைவன் ஆனந்தரூபனாதலினால் ஆன்மா அதிலழுந்துதல் சாரதமாம். மற்றவைவந்துழிக் காண்க.

அன்றியும் பிரமாணரூபமாகிய ஆன்மசிற்சத்தி சிவனுக்காகத் தனக்காக தன்னோடொத்த பிறவான்மாக்களுக்காக மெய்யாகிய நினைவுணர்விற்கு விடயமாதல் போல்வதோர் ஞேயமாதல் மாத்திரையேயன்றி பிரமேயமாதலில்லை என்பதற்கு, ஆகமங்களில் ஆன்மாவே பிரமாதா. ஆன்மஞானமே பிரமாணம். அதனறிதல் வியாபாரமே பிரமிதி, ஏனையவெல்லாம் பிரமேயமென்னுஞ்சுருதியும், ஒருவாற்றானும் பிரமாணம் பிரமேயமாகாது. பிரமேயம் பிரமாணமாகாது, எனவரைசெய்து வைத்தோதி இதனானே பிரமேயமாய் அறியப்படுவனவாகிய ஐம்பொறிமுதலியவற்றைப்பிரமாணமென்றல் பொருந்தாதென மறுத்துச் சித்தாந்தம் வலியுறுத்திய சுருதியுமே சான்றாகலின், ஒருவாற்றால் ஞேயமாயினும் பிரமேயமாதல் பெறப்படாத ஆன்மசிற்சத்தியானாதல் பிறிதோர் ஆன்மாவினாதல் சிவசத்தியானாதல் அனுபவிக்கப்படும் போதுமெனும் ஆசங்கை சிறிதும் இலாமை யறிக.

அன்றியும் இன்பம் நல்வினையின் பயனாய்வருதலாதலினாலே இச்சிவானந்தமும் இன்பமாயின் அதுவும் வினைப்பயனாய்முடியுமேயெனின் அற்றன்று. ஏனெனில் வினை ஆன்மாவாலியற்றப்படுஞ்செயல். அச்செயலியற்றப்பட்டதால் அழியுமாலையது. அதுபோல அச்செயலால் வரும் சடவின்பமும் அழியுந்தன்மையதாம். அதற்குவேறாய் நிகழ்வதாய் நித்தியானந்தம் என்னும் பெரியதாயுள்ள சித்தின் இன்பம் வினையின்பயனாய் வருவதெங்ஙனம், இவ்வியைபின்மைகண்டுணர்க.



குணங்களின் சமூகமே குணியாம்: அக்குணங்களின் அநாதியே ஒருபொருளோடு சம்பந்தமுற்றிருக்கில் அவைகள் என்றும் மாறாத தன்மையனவாயிருக்கும் அவைகள் காரணகாரியத்துட் சார்ந்தவைகளில்லையாம்:

உலகத்தில் இன்பம் என்னும் பொருள் புறப்பொருள் பற்றிவந்த புத்திதத்துவத்தின் பரிணாமத்தாலாகிய சத்துவகுணத்தின் விளக்கமேயன்றி வேறொன்றன்றாகலின் முத்தியினும் முற்றுணர்வு முதலிய எண்குணங்களின் விளக்கமே இன்பமாவதன்றி வேறாய் இன்பமாவதொன்றில்லையெனின், ஆன்மாவின் வேறாகிய மூலப்பகுதியின் கண்ணதாய் நின்ற சாத்துவிக்குணம் ஆன்மாவின் மாட்டு மேம்பட்டு விளங்குதலே உலகஇன்பம். அதுவதுவாய் முந்திநின்றறிதலே அநுபவம் எனப்படும் அதுபோல ஆன்மாவின் வேறாய் சிவன் கண்ணேயுளவாகிய முற்றுணர்தல் முதலிய வெண்குணங்களும் ஆன்மாவின் மாட்டு விளங்கும் விளக்கமே சிவானந்த இன்பமாம். ஆன்மா அதுவாய் அழுந்தி நின்று அவ்விளக்கத்தையறிதலே அநுபவமெனப்படும். மேற்கூறிய சாத்துவிக்குணம் ஆன்மாவின் குணம் மூலப்பகுதியின் குணமன்று என்றால் அவ்வாறு ஒருசாத்திரமும் கூறாததால் அது முரணென்றொழிக.

(இன்னும் வரும்.)

S. பால்வண்ணமுதலியார்.

# சமாச்சாரங்கள்.

திருக் கோவலூர் சைவ சித்தாந்த சபை:—சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் கிளைச் சபைகளில் ஒன்றாக வீரட்டான க்ஷேத்திரமாகிய இத் திருக்கோவலூரில் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில் நிகழும் பரிதாவி ௵ சித்திரை ௴ 1௳ "கோவல் சைவ சித்தாந்த சபை" என்னும் பேருடன் ஒரு சபை அம்மடத்துக்குத் தலைவராகிய ஸ்ரீமத் சிவசண்முக மெய்ஞ்ஞான ஸ்வாமிகளால் சிவாசாரிய ஸ்தாபிக்கப்பட்டது. அன்று அடியார் பலர்க்கு மகேசுவர பூஜையும், பின்னர் ஸ்வாமிகளால் ஸ்ரீ வாகீசர் சரித சாரசங்கிரக மஹோபந்நியாசமும் நடத்தப்பட்டன. உபந்நியாச முடிவில் சைவ சித்தாந்த மகா சமாஜம் பல வழிகளிலும்முயன்று வரும் அருமையையும் அம்மகா சமாஜத்தை யாதரித்து அதன் நோக்கத்தினைப் பூர்த்தியாக்க ஆங்காங்கும் பல கிளைச் சபைகள் ஸ்தாபிக்கப்படவேண்டிய அவசியத்தையும் ஸ்வாமிகள் விளக்கியருளினார்கள். பின் ஸ்ரீமத் சுவாமிகள் சபையோருடன் அவ்வைவாக்கனுசாரி என்னும்அருநதியில் அனுட்டானம் முடித்து திருமுறைப்பாராயணத்துடன் ஸ்ரீ ஆலயம் அடைந்து அம்மையப்பனை ஆராதித்து மடாலயம் சென்று அங்கெழுந்தருளியஅறுமுகச்சிவனை அன்புடன் போற்றி சபையின் அடியார் பலரையும் ஆசீர்வதித் தருளினர்.

ஷை ௴ 6௳ குருவாரம் ஸ்ரீமத் ஞானியர் மடாலயத்திலேயே இதன் காரிய நிருவாக சபை கூடிற்று. திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ வாணீவிலாச சபையின் அக்கிராசனாதிபதியாய் ஸ்ரீமத் சுவாமிகளே இருந்தருள்வது போல இந்நகரிலுள்ள மடாலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இச்சபையின் சாசுவத சபாநாயகஸ்தானத்தையும் வகித்தருளவேண்டும் என்று சபையோர் அனைவரும் பிரார்த்திக்க ஸ்ரீமத் சுவாமிகளும் திருவுளம் இசைந்தனர். பின் சில கனவான்கள் காரிய நிருவாக சபை அங்கத்தினராய் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். பின் கூடிய சபைகளில் சில மாறுதலாயிற்று. தற்போது ஸ்ரீமான். ப. முத்துசாமிப் பிள்ளையவர்களும் அறையணி நல்லூர் சௌந்தர கனகவிலாச தருமபரிபாலகரும் பிரபல மிராசுதாரும் திருக்கோவலூர் தாலுக்காபோர்ட் மெம்பரும் ஆகிய சற்குண ஸ்ரீமான் நெற்குணம் S. பொன்னுசாமிப் பிள்ளையவர்களும் உப அக்கிராசனாதிகளாகவும், தமிழ்ப்பண்டிதர் பிரம ஸ்ரீ V. S. நடேச அய்யரவர்களும் பிரம ஸ்ரீ V. கண்ணையரவர்களும் ஆசிரியர்களாகவும், உயர்தர வித்யாசாலைப் போதகாசிரியா ஸ்ரீமான், சதாசிவம் பிள்ளையவர்கள் பிரதம காரியதரிசியா ராகவும், பக்த பால சமாஜம் ம. ரா. குமாரசாமி பிள்ளை அவர்கள் உதவிகாரிய தரிசியாராகவும், இருக்கின்றனர்.



சித்திரை ௴ 28௳ திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேசுவரர் ஆலய கல்யாண மாலில் திருநாவுக்கரசு சுவாமிகள் திருநக்ஷத்திர விசேடத்தை முன்னிட்டு கோவல் சைவ சித்தாந்த சபைகூடிற்று. இச்சபா நாயகராகிய ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துச் சுவாமிகள் "அப்பர்" என்பது பற்றி ஒப்புயர் வற்றதோருபந்நியாசம் புரிந்தருளினர்.

வைகாசி ௴ 2௳ பின் கோவல் ஸ்ரீமத்ஞானியர் மடாலயத்தில் சபை கூடிற்று. அங்கத்தினருள் புலரும் அபிமானிகள் சிலரும் வந்திருந்தனர். சைவ சித்தாந்த மகா சமாஜ பிரசுரத்துண்டு பத்திரிகைகளில் சில பாகமும் "சித்தாந்த"மும் படிக்கப்பட்டன. உப அக்கிராசனாதிபதிகளில் ஒருவராகிய ஸ்ரீமான். ப. முத்துச்சாமி பிள்ளையவர்கள் உத்தியோக முறையில் மாற்றப்பட்டு வேற்றூருக்கும் போவதால் அவர்கட்கு வந்தனோபசாரம் கூறி சபையோருக்கு சிற்றுண்டி வழங்கலாயிற்று.

பின் ஆனி ௴ 13௳ ஷை மடாலயத்தில் சபை கூடிற்று. அன்பர்கள் பலர் வந்திருந்தனர்: ஸ்ரீமான் ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் "சமய உண்மை" என்பது பற்றி உபந்நியாசித்தார்கள். அதனைப் பின் தொடர்ந்து சபையின் காரியதரிசிகளில் ஒருவராகிய பக்த பால சமாஜம். ம. ரா. குமாரசாமி பிள்ளை அவர்கள் சிறிது பேசினர்.

* * *

**சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம், சைவவித்தியாசாலை அத்திவாரப்பிரதிட்டை:**—இச்சபையார் தாங்கள் வைத்து நடத்திவரும் சைவ ஆங்கிலோ வர்னகுலர் பாடசாலைக்குச் சொந்தமாகவும் விசாலமாகவும் கட்டடங்கட்டுவதற்கு, நிகழும் பரிதாபி ௵ கார்த்திகை ௴ 8௳ (22-11-12) சுக்கிரவாரம் காலை 10-மணிக்கு மேல் 10½-மணிக்குள், பெத்துநாய்க்கன் பேட்டை முத்துமாரியம்மன் கோவில் வீதிக்கு மேலண்டை வீதியாக நூதனமாக அமைக்கப்படுகின்ற வீதியில், இச்சபையின் போஷகரான ஸ்ரீமான், மயிலை, கதிர்வேல் முதலியாரவர்கள் அத்திவாரப் பிரதிட்டை செய்வார்கள். அன்று காலையில் 7-மணிமுதல் 10-மணி வரையில் * சைவமகோபந்நியாசங்கள் முதலியன நடைபெறும். அப்போது தாங்கள் பந்து மித்திரர்களோடு விஜயஞ்செய்து கௌரவிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

7½-மணிமுதல் 8½ மணிவரையில் பாடசாலைச் சிறுவர்களால் திருநீலகண்ட நாயனார் புராண நாடகம்.

8½-மணிமுதல் 10-மணிவரை சைவ மகோபந்நியாசங்கள்.

---

* காலை 7-மணிமுதல் 7½-மணிவரையில் கிருஷ்ணய்ய நாயகன் குளத்தை யடுத்த ஸ்ரீ விஸ்வநாத ராலயத்தில் தமிழ்வேத பாராயணமும் ஆலய வழிபாடும்.

10-மணிமுதல் 10½-மணிவரை ஸ்ரீமான், மயிலை கதிர்வேல் முதலியாரவர்களால் அத்திவாரப் பிரதிட்டை.

***

**உத்திரமேரூர் சைவசித்தாந்த சபையின் இரண்டாவது வருஷமகோத்சவம்:**—உத்திரமேரூர் சைவ சித்தாந்த சபையின் இரண்டாவது வருஷோத்சவமானது இவ்வூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ பால சுப்பிரமணியக் கடவுளாலய மண்டபத்தில் நாளது மீ 27, 28, தேதிகளில் அடியிற் குறித்த விவரப்படி நடந்தேறப் பெற்றது:

27-9-12-பகல் 2 மணிக்குமேல். பிரம்ம ஸ்ரீ-மதுராந்தகம்-சுப்பிரமணிய சிவாசாரியர் அக்கிராசனத்தின் கீழ்.

(1) ஷை சபையின் காரியதரிசியால், சபாவிரத்தம் வாசிக்கப்பட்டது.

(2) மேற்படி, காரியதரிசியால், சமயம், என்பதைப்பற்றியும்.

(3) திருப்பாதிரிப்புலியூர் - ஸ்ரீமான்-கிருஷ்ணசாமி செட்டியாரவர்களால், அன்பு, என்பதைப்பற்றியும்.

28-9-12உ பகல். 3-மணிக்குமேல்-வெங்கம்பூர் பிரம்ம ஸ்ரீ. கணபதி சாஸ்திரரியார் அவர்களின் அக்கிராசனததின் கீழ்.

(1) மதுராந்தகம். பிரம்மஸ்ரீ. சுப்பிரமணிய சிவசாரியர்களால் "சிவதீக்ஷாமகிமை, என்பதைப்பற்றியும்.

(2) அக்கிராசனரவர்களால், பிக்ஷாடனமகிமை என்பதைப்பற்றியும்.

(3) திருப்பராதிரிப்புலியூர். ஸ்ரீமான்-கிருஷ்ணசாமி செட்டியாரவர்களால். சித்தாந்தம், என்பதைப்பற்றியும். உபயந்நியாசங்கள் நடந்தேறின. ஆரம்பத்திலும் இடையிடையிலும் தேவாரமோதுதலும், சிவநாமகோஷமும்,முடிவில், சபாநாயகருக்கும், சபையோர்களுக்கும், தாம்பூலாதி உபசாரங்களும் செய்யப்பட்டன.

***

தூத்துக்குடி சைவசித்தாந்த சபை உபஅக்கிராசனாதிபதியவர்களின் உபந்நியாசங்கள்:—மேமீ 5உ தூத்துக்குடிமாணவர் ரீடிங் ரூமில் ஸ்ரீமான் ஆட்கொண்டபிள்ளையவர்களின் அக்கிராசனத்தின் கீழ் "சமயக்கல்வியின் அவசியம்" 25உ மதுரை தமிழ் சங்கத்தில் டிப்படிகலெக்டர் ஸ்ரீமான் ஆறுமுகம் பிள்ளையவர்களின் அக்கிராசனத்தின் கீழ் "ஆன்மபோதம்" 30, 31உ அரித்துவாரமங்கலம் மாணவர் தமிழ் சங்கத்தில் ஸ்ரீ இராமாநுஜாசாரியார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் "திருக்குறள் பெருமை" "சிவானுபூதி" "ஈச்வர உபாசனை" என்னும் உபந்நியாசங்களும் ஜுன்மீ 2, 3, தேதிகளில் வேளாங்கண்ணி சைவசித்தாந்த சபையில் "மணி மந்திர ஔடதம்." "பஞ்சகிர்த்தியம்," 6உ நாகைசட்டையப்ப



பிள்ளையவர்கள் பங்களாவில் "சிவானுபூதி" என்னும் உபந்நியாசங்களும் செய்யப்பட்டன.

***

**திருவாரூர். டி. யஸ். தியாகராஜ ஞானியார். பிரஸங்கங்கள்.**

| பிரசங்க தேதி. | பிரசங்க இடம். | பிரசங்க விஷயம். | அக்கிராசனாதிபதி பெயர். |
|---|---|---|---|
| 18- 2-12. | நாகை மாணவர் சங்கம் | இராஜபக்தியும், தெய்வபக்தியும், | M. R. கோபாலசாமி இரகுநாதராஜாளியார் |
| 8- 3-12. | பூவாளூர் சைவசித்தாந்த சங்கம் | கடவுள் | ஆலாலசுந்தரம்பிள்ளை |
| 9- 3-12. | ஷை | திருமுறைப் பிரபாவம் | ஷையார் |
| 29- 5-12. | தில்லைவிளாகம் சிவானுபூதி நிலையம் | சமயக்கல்வி | இல்லை |
| 31- 5-12. | அரித்துவார மங்கலம் விவசாய சங்கம் | நம்மவர்களின் கடமை | ராவ்பகதூர் V. K. இராமானுஜாசாரியார் |
| 9 6-12. | திருநள்ளார் | பக்தி | இல்லை |
| 15- 6-12. | திருச்செங்கோடு சைவசமாஜம் | ஆலயவழிபாடு | டிப்டி கலெக்டர் ராவ் பகதூர் T. N. சிவஞானப்பிள்ளை |
| 19- 6-12. | பூவாளூர் சைவ சித்தாந்த சங்கம் | அன்பு | சு. சாமி ஐயா தேசிகர் |
| 4- 8-12. | நாகை கல்விச்சங்கம் | ஒழுக்கம் | நாஷனல் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் சீனுவாஸய்யங்கார் |
| 11- 8-12. | ஷை | தந்தைதாய்ப் பேண் | பண்டிட் நடேசய்யர் |
| 18- 8-12. | நாகை பக்திமார்க்க சபை | காரைகாலம்மை சரித்திரம் | இல்லை |
| 16- 9-12. | திருத்துறைப்பூண்டி சைவசித்தாந்த சபை. | மெய்ப்பொருள் நாயனார் பிரபாவம் | ஸ்வாமி வேதாசலம் |

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

தங்கள் கையொப்பங்களில் சந்தாதாரர்கள் பலர் தங்கள் பெயர்முதலியவற்றை முற்றிலும் விவரமாகவும் எளிதாய் வாசிக்கும்படியாகவும் எழுதாமையால் அவர்களுக்கனுப்பும் சஞ்சிகைகள் மீது அவர்கள் விலாசங்களைச்சரியா யெழுத இயலவில்லை, உதாரணமாக "பிரமஸ்ரீசாம்பசிவஐயர்" என்னும் பெயரை சிலவேளைகளில் "Mr. Sambasivam அய்யர்" எனவும் சிலவேளை "சாம்பசிவமுதலியார்" எனவும் இன்னும் பலப்பல விதங்களாகவும்யூகித்தெழுத நேரிடுகிறது. ஆதலால் இனிப்புதிதாய்ச் சேரும்சந்தாதாரர்களும் இதுவரையிற் சேர்ந்திருக்கின்ற சந்தாதாரர்களும் சஞ்சிகைகள் மீது தங்கள் விலாசம் முற்றிலுஞ் சரியாய் எழுதப்பெறுமையைக் காண்பவர்களும் அன்பு கூர்ந்து தங்கள் முழுப்பெயர் விலாசமுதலியவற்றை எளிதாய் வாசிக்கக் கூடியவண்ணம் எழுதியனுப்பப் பிரார்த்திக்கின்றோம்-அன்றியும் இருப்பிடம் மாறும்போது சந்தாதாரர்கள் அறிவிக்க வேண்டுகின்றோம்.

மானேஜர், சித்தாந்தம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௧.] 1912-ஹு ஜூலை, ஆகஸ்ட்மீ [பகுதி ௭, ௮.

## சமரசம்.

சமரசம் என்னும் சொற்றொடர் சமம், ரசம் என்று பிரிகின்றது. சமம் என்றபதம் ஒற்றுமை, 'ஒப்பு' என்று பொருள்படினும், இன்னொரு பொருளும் அதற்குண்டு. அதாவது பட்சபாதமின்மை (impartiality.) மாக்டானல்ஸ் சமஸ்கிருத அகராதியைப் பார்க்க. சமதிருஷ்டி, சமதர்சனம் என்பதும் அதுவே. பலவற்றின் உண்மையை விசாரிக்குழி, ஒன்றின்மேலும், விருப்பு வெறுப்பு மேம்படாமல், உள்ளதை உள்ளபடியறிதல் என்பதுதான் அதன் கருத்தாகின்றது. 'இருவினையொப்பு' (கர்மசாம்யம்) என்னும் சொற்றொடரில், ஒப்பு என்ற பதமும், சமம் என்னும் பதத்தின் மொழிபெயர்ப்பேயாகி, சாதாரணமாக ஒற்றுமையாதல் ஒத்தல், எனப் பொருள்விளக்கினும், அது உண்மையாகாது, விருப்பு வெறுப்பின்றிப் பார்த்தல் என்னும் பொருளே சிறந்தமை காண்க. எப்படியெனின், இருவினையொப்பு உண்டாதல், ஒருவன்செய்த புண்ணியமும் பாவமும், இரண்டுதட்டில் வைத்து நிறுத்தால், எப்பொழுது நிறை சரியாகுமோ, அப்பொழுதே இருவினையொப்பு உண்டாகுமென்கிறார்கள். இது சரியான கருத்தன்று. இரண்டு தட்டிலும்பொருள் நிறையவைக்க எவ்விதம் நடுமுள்ளானது இந்தப்பக்கமும் அந்தப்பக்கமும் சாயாது நடுவில் நிற்குமோ அவ்விதமே, ஒருவன் மனம், நல்வினையில் (தனக்கு இன்பம் தருவதில்) விருப்பும், தீவினையில் (தனக்குத் துன்பம் தருவதில்) வெறுப்புமுண்டாகாதபடி, நடுமையாக நிற்றலே கர்மசாம்ய மடைதலாம். இவ்வொப்பின்மையும், உண்மையுமேயன்றோ பசுவுக்கும் பதிக்குமுள்ள தாரதம்யம்.

வேண்டுதல்வேண் டாமையிலான் அடிசேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

இவ்வுண்மையுமன்றே திருப்பாற்கடல் கடைந்த இதிகாசத்திலும் காணப்படுகின்றது. தேவர்கள் முதலாகிய சகலர்கள் தாங்கள் அடைந்திருந்த வறுமையின்மேல் வெறுப்புற்று, அமிர்த முதலிய பொருள்மேல் விருப்புற்று மேல்வினையைச் செய்ததில் சகல பிராணிகளுக்கும் அதனால் உண்டாகிய இம்சையின் பயனாகிய விஷம்பிறந்து அதன்மேலும் வெறுப்புற்று வருந்தினார்கள். இதுவரையும், இறைவன் அச்சகலர்களின் கூட்டத்திற் கலவாது, வறுமையினாலும் வருந்தாது, (அவன் என்றும் பிட்சாடனன்) பொருளையும் விரும்பாது நின்று, விஷத்தினால் பீடிக்கப்பட்ட தேவர்திகள் அலறி முதல்வனை நோக்கி ஓலமிட அவர்களுக்கு இரங்கி, அவ்விஷத்தையுமே தான் அமுதாக்கிக் கொண்டனன்.

ஆகவே சமம் என்ற பதத்துக்கு, ஒற்றுமையென்னும் பொருளைவிட, அபிமானத் தழுந்தாது, உள்ளதை உள்ளபடி உணர்ந்து அதன் உண்மையையறிதல் என்னும் பொருள் சிறக்கின்றது. அது சமரசம் என்னும் சொற்றொடரையே உய்த்துணரில் இன்னும் நன்றாய் விளங்குகிறது. எப்படியெனின், ரசம் என்பது நாவினால் அறியக்கூடிய சுவையாகி, பல பொருள்களின் சுவை, சார், சாரமென்பதாம். அச்சுவையுமே ஆறுவகையாயுள்ளது. ஆறுசுவையுமே ஒன்றெனின் அது ஒருபோதும் ஒவ்வாது. அப்பொழுது ஆறென்று பிறிவும் ஏற்படவேண்டியதில்லை. கருப்பஞ்சாற்றை விரும்பி ஏற்றவன் வேப்பஞ்சாற்றையும் மகிழ்ந்து குடிக்கவேண்டும். ஒரேவிதப் பழச்சாற்றின் ஒப்புமை சொல்வதிலும் விசேஷமில்லை. பேதமில்லாத பட்சம், அபேதம் சாதித்தல் அசம்பாவிதமாகும். பேதங்கண்டவிடமே, ஓர்வித சொரூப ஒற்றுமைபற்றி அபேதம் சொன்னால் அதில் சிறப்புண்டு. அணியிலக்கணத்திலும், இவ்வுண்மையை உய்த்துணர்க. ஆகவே சமரசம் என்றதனால், எல்லாப்பழத்தின் சாரமும் ஒன்றாகா. ஒரேவித சாதிப்பழங்களின் சாரமும் ஒன்றெனல் பொருள்சிறக்கா, அபேதமில்லாதிடத்து. ஆயின், சாரங்கள் வேறுபடினும், ஒரே சுவையில்லாவிடத்தும், ஒவ்வொரு பழத்தின் ரசமும் ஒவ்வொரு முக்ய உபகார குணமுள்ளது யாவர்க்கும் கைவந்தது. கருப்பஞ்சாறானது மிகவும் இனிக்கினும், சுரநோயுள்ளானுக்கு அது குணத்தைச் செய்யாது கெடுதலையேவிளைவிக்கும். அப்பொழுது, வேப்பஞ்சாறானது கசக்கினும் குணத்தைக் கொடுக்கும். (வேப்பஞ்சாறும் குயினாவும் ஒரேகுணமுள்ளது) கர்ப்பிணிக்கு மதுரமான பதார்த்தத்தில் வெறுப்பும், புளிப்பில் விருப்பும் உண்டாகின்றது. ஆகவே சாரங்கள் வேறுபடினும், அதனை நோக்காது, ஒன்றை விரும்பியும், ஒன்றை வெறுக்கவும் செய்யாது, அதன் உண்மைகுண விசேஷத்தைக் கைக்கொண்டு சமயத்துக்குத் தக்கபடி அதனைப் பிரயோகப்படுத்துவதே அதன் சமரசத்துவமாகும். இச்சமரசத்தை மதங்களில் ஏற்றிக் கூறுமிடத்தும், இவ்விதமான பொருள் ஒற்றுமை மிகவும் சிறக்கின்றது. எல்லாமதங்களும் ஒன்றாகா. தெய்வமில்லை என்கிற மதமும் சிவனில்லையென்கிற மதமும், இவையிரண்டுமுள்ளது என்றுகொள்ளும் மதங்களும் ஒன்றாகா. இவ்விதமாகவே, புறப்புறச்சமயங்கள் புறச்சமயங்கள், அகப்புறச்சமயங்கள், அகச்சமயங்கள் என்று எண்ணப்பட்டவைகள் ஒன்றோடொன்று ஒன்றாகா. ஆயின் இச்சமயங்களிலும் ஒவ்வொரு உண்மை கிடக்கின்றது. ஒவ்வொன்றும் ஆன்மாக்களுக்கு ஒவ்வொரு பிரயோசனத்தை உண்டாக்கியே நிற்கின்றது. அவ்வவர்களுக்கும் ஒன்று பயன்படுவதுபோல், மற்றையது பயன்படாது. அந்நிலையிலிருந்து அப்பொருளையுணர்ந்து அப்பயனையடைந்து பரிபக்குவப்பட்டகாலத்தில், அதன் மேல்நிலையிலிருக்கும் பொருளைக்காணின், அதன்மேல் அவாவுறும். இதனாலே எல்லாச் சமயங்களும் இறைவனால் ஆக்கப்பட்டதென்றும், அவன் ஆணைவழி நிற்கின்றதென்றும் சொல்வது. எல்லாச் சமயங்களையும் சோபான மார்க்கங்களாகக் கொண்டதும் இக்கருத்தைப்பற்றியே யென்பதாம். 'இதுவாகு மதுவல்லவெனும் பிணக்கதின்றி' என்றதின் உண்மையும் இதுவாகும். "நீதியினால் இவையெல்லா மோரிடத்தே காண்பது" ஒப்பற்ற ஓர்சமயத்தில் காணக்கிடக்குமேயல்லாமல், சமயகோடிகளில், ஒவ்வொருவரும் தங்களுடன் மற்றவர்களைச் சமப்படுத்தார்கள். ஒன்றுபடார்கள். 'நீதியினால்' என்றதின் விசேடத்தை மிக

வும் கவனிக்கப்பாலது. இச்சமரசம், விளக்கெண்ணெய், வெண்டைக்காய், சேப்பங்கிழங்கு முதலானவை சேர்த்துச்செய்யுங் குழம்புபோல்வதொன்றன்று அல்லது; ஒருவர் சொல்கிறார். புத்தர்கள் விஞ்ஞானம் என்றபொருளை அங்கீகரிக்கிறார்கள். உபநிடதங்களில், விஞ்ஞானம் என்ற ஒருபொருள் பிரஸ்தாபிக்கப் படுகின்றது. அதற்கு ஆத்மா என்றபொருளும் காணப்படுகின்றது. ஆகையால், புத்தர்களும் பிரம்மவாதிகளன்றோ என்பது. இதுவும் சமரசமாகாது. ஏனெனில், இந்த விஞ்ஞானமும், இல்லாத மாயையினின்றும் உண்டாகியது. உபநிடதங்களில், விஞ்ஞானம் என்றதற்கு இரண்டுபொருள் உண்டு. மாயையினின்றும் உண்டாகிய புத்தி என்றும் அதற்கு அதிகமாகிய ஆன்மா (சீவான்மா - பரமான்மாவன்று) என்றும் சமயப் பிரயோகங்களை நோக்கியே, இவ்விரண்டில் ஒருபொருளைக் கொள்ளவேண்டியிருக்கின்றது. ஆகவே, எல்லாச் சமயங்களையும் சமரசபாவனை செய்யவேண்டுவதென்பது நீதியினால் ஆகவேண்டுமேதவிர அவரவர் நினைத்தபடியுமாகாது.

மேல், நம்மான்றோர், வேதாந்த சித்தாந்த சமரசத்தையே மிகவும் போற்றியதென்னை எனின்; அதன் கருத்தை விசாரிப்பாம். இதில் வேதமென்பது இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என நால்வகைப்பட்டு, ஒவ்வொன்றும் சம்மிதை பிராம்மணம் என இருவகைப்படும். சம்மிதை மந்திரரூபமாக, பெரும்பாலும் பல தேவதைகளின் ஸ்தோத்திரமாகி, அக்னிஷ்டோமாதி யாகங்களில் பிரயோகப்படும். பிராம்மணத்தில் இப்பிரயோகங்களையும், யாகஞ்செய்யவேண்டிய விதிகளையும் கூறுவதுடன், ஆரணியபாகம் என்று சொல்லப்பட்டதில், சில புராண சரித்திரங்களும், ஞானோபதேசங்களும் உபநிடதங்களும் காணப்படுகின்றன. மந்திரபாகங்களில், அறம்பொருள் இன்பத்தை வேண்டியபாகம் அதிகமாகவும், வீட்டு விஷயத்தைக் குறித்தது மிகவும் சிறுத்தும் காணப்படுகிறது. உதாரணமாக, இருக்கில், 'இருபட்சிகள் ஒரேமரத்தில் வசிக்கின்றது' என்பதும், "ஒன்றே சத் உள்ளது அதனை விப்பிரர்கள் வெகுவிதமாய்ச் சொல்லுகிறார்கள்" என்பதும் 'நாசதசத்' சூக்தமும் இன்னும் பிறவொன்றிரண்டுமே முக்கியமாய்க் காணப்படுகின்றது.



இந்திரன் அக்னி வாயுமுதலான தேவர்களை வழிக்கும் மந்திரங்கள் அநேகமாகவும், ருத்திரன் விஷ்ணுவைக் குறிக்கும் மந்திரங்கள் கொஞ்சமாகவும் காணப்படுகின்றன. யஜுர்வேதத்தில், சதருத்ரியம் என்னப்பட்ட பாகமே முக்யபாகம். இதன் மத்தியில் நமசிவாய என்னும் பஞ்சாட்சரமந்திரம் படிக்கப்படுகிறது. இந்தச் சதருத்ரியத்தைத் தான் புராண இதிகாசங்களில் எல்லாம் விதந்து எடுத்து ஓதப்படுகிறது. ஆயினும், இருக்கிலேயே ருத்திரனைச் சிவமாகவும், யக்ஞங்களுக்கு அதிபதியாயும், அதன்பலனைத் தருபவனாகவும், சுதந்தரமுள்ளவனாகவும் பரமயோகியாகவும் காட்டப்படுகின்றது. நித்திய யசுர்வேதத்தில் இதனையே மிகவும் விளக்கியிருக்கின்றது.

மேற்சொன்ன உபநிடதங்களை வேதாந்தம் என்றும், வேதசிரசு என்றும் கூறப்படும். இதில் முக்யமாய் ஞானபாகத்தையெடுத்து ஓதும். இதில் பதிபசுபாசங்களின் உண்மைகளையும், பாசவிக்கத்திற காகவேண்டிய வித்தைகளை (உபாசனைகளை)யும் கூறும். யஞ்ஞாதிகளைச் செய்வதினால் அடையும்பலன் நித்தியமல்லவென்று அவற்றை யொதுக்கியும் தள்ளும். சிவாகமங்கள் 28-ஆக எண்ணப்பட்டு மேற்படி விஷயங்களை விரித்து, மோக்ஷலாபமடையவேண்டிமட்டும் உபாசனைகளுக்காக அநுகரணமான மந்திர தந்திரங்களைச் சொல்லும். இக்கிரியைகளில் உபயோகப்படு மந்திரங்கள், அதனைச் செய்யும் முறைகளும் வேதமந்திரமும், பிராமணங்களில் கண்டதுமேயாம். ஆயின், உபயோகப்படுத்து முறை வேறு. வேதத்தின்படி அம்மந்திரங்கள் முதலானவை அறம்பொருள் இன்பமடைதற்கு வேண்டிய யாகாதிகள் சம்பந்தமாகும். சிவாகமவிதிப்படி அவைகளையெல்லாம் ஞானபரமாக்கி உபயோகப்படுத்துகிறார்கள். உதாரணமாக, யாகாதிகளில், ஆடு முதலிய பிராணிகளைக் கொன்று பலியிட்டு அக்கினியில் தகிக்கின்றார்கள். மேற்கூறிய பலனை விரும்பி. ஆகமவிதிப்படி, பலியென்றால், பிராணிகளைக் கொல்வதன்று. ஒவ்வொரு சீவனின் அகங்காரமாகிய தற்போதத்தை, பசுத்துவத்தை, ஞானக்கினியில் தகிப்பதே உறுதியான பலியென்பதாம். இப்பசுத்வம் கழலவும், பதித்வம் கிடைக்கும். நந்தனார் சரித்திரத்தின் உண்மையுமிதுவே. மல

சம்பந்திகளா யிருக்கும்வரையும் நாம் மாலர்கள் (பஞ்சமர்கள்) மலம் தகிதமானவுடன் பண்டிதன் (பிராமணன்) ஆகின்றான். *

“பாசம்தகதிபண்டத்:” இந்தப் பிராமணபதமே

நந்திபதம், சிவபதம். இவ்விதமான தாரதம்யம் வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் உள்ளதை கவனிக்கவேண்டும். ஆனால், அவை வேதத்தில் சூட்சமமாகக் கிடக்கின்றது. அதனாலேதான் வேதம் பொதுவென்றும் சூத்திரரூபமென்றும் ஆகமங்கள் சிறப்பென்றும் பாடியம் போன்றதென்றும் சொல்லுகிறது. மேலும் இன்னொன்று. இவ்விரண்டு முதல் நூல்களிலும், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்குபாதங்களும் பிரஸ்தாபிக்கப்படினும், உபநிடதங்களில் யோகபாதத்தையே அதிகமாக எடுத்துப் பேசுகின்றது. உபநிடதங்கள் முடிகின்ற பாகமெல்லாம் தத்வமசி முதலிய சிவோகம்பாவனையே எடுத்துச்சொல்லிநிறுத்தும். உபநிடதம்என்றபதமும் யோகம் என்றபதமும் ஒரேபொருள். உபநிஷத்-உப+நி+சத். உப=நெருங்கவும், நி=உபசர்க்கம் மிகுதியை யுணர்த்தும்; சத்=அழிதல். அதாவது ஒன்று மற்றொன்றை நெருங்கவும் நெருங்கவும், ஒன்று அழிகின்றது என்றுபொருள். யோகம் என்றது நெருக்கம், ஒன்றுதல் என்பது பொருள். இந்நெருக்கத்தில், ஒன்றுகெட்டாலும், வீட்டின் பயன் இல்லை. ஒன்று அழியாதிருந்தாலு மோட்சமடைதலும் கூடாது. ஆக, உளன்முதல் நான் என்றதுவரை முற்றிலும் அழிந்து ஆன்மாசிவத்தோடு கலந்து அதுவதுவாய்ச் சிவமாகி நிற்றல் என்பது உண்மையாகும்.

“சென்றுசென்று அணுவாய்,தேய்ந்து தேய்ந்து ஒன்றும்”
“வான்கெட்டு மாருதமாய்ந்து.”
“நான்கெட்டவாபாடித் தெள்ளேணம்கொட்டாமோ.”
“நான்கெட்டுசிவமானவாபாடித் தெள்ளேணம்கொட்டாமோ.”

* அரசுடனலத்தி யாகுமக்காரம்
விரவு கனலில் வியனுருமாகி
திரவயன் நின்மலனருள் பெற்றசீதர்
உருவம் பிரமனுயர்குலமாமே.—திருமந்திரம்.



என்று திராவிடமெழுது மறைமொழிகளைக் கவனித்தால் பொருள் இனிது விளங்கும். மேலும், உபநிடதம் என்ற பதம், சாந்தோக்யம் (11-10)ல் உபயோகிக்கப்பட்டு யோகம் என்று ஸ்ரீ சங்கரராலும் அர்த்தம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆக இவ்வேதாந்தநிலை யோகபாதத்தில் நிற்கும். இந்நிலையினின்றுமே ஞானபாதத்தில் இறங்கும். மேல் நாம் ஆறாறு தத்வங்களையும்படி முத்திபேணியாகச் செல்லவேண்டியிருப்பதால், இதில் இளைப்பாறுவதற்காக அங்காங்கு சிலதட்டுகள், தானங்கள், நிலைகள், பதங்கள், ஏற்பட்டுள்ளன. அதில் நிலைத்து இளைப்பாறியபின் தான் மேல்தட்டை நோக்கிப் படிகள்மீது கால்வைக்கவேண்டும். இம்முறையில் பொதுவாக ஆத்மதத்வம் முடிகிறவரையில் ஒருதட்டு வித்யாதத்வ முடிகிறவரையில் ஒருதட்டு. அதற்கு மேலுள்ள சிவதத்துவங்களிலும் ஒவ்வொரு தட்டு. ஆகவும், உபநிடதங்களில் அநேகமாக, ஆத்மதத்வம் வரையும் ஏறியும், சிலவற்றில், வித்யாதத்வம் வரையுமே ஏறியும், ஒன்றின்மட்டுமே, சிவதத்வத்தைப் பற்றிக் குறித்துமிருக்கின்றது. ஆகமங்களின் மட்டுமே 36-தத்துவங்களைப் பூராக விவகரித்து எல்லாத் தத்துவங்களும் எல்லாக் கலைகளும், நாதம் நாதாந்தமும் தாண்டிய பதமே, முத்திப்பதமென்று கூறுகின்றது. இவ்விதமாக நாம் விசாரிக்கின்ற காலத்து, வேதம் வேதாந்தமும், ஆகமம் ஆகமாந்தமும் நமக்கு ஒரே இறைவனால் அளிக்கப்பட்டு, பலவேறு பரிபாகமுள்ள ஆன்மாக்கள் அறிந்தவண்ணம் பயன் அடையுமாறும், முடிவில் எல்லாம் ஒரே உண்மைக்கருத்தையுடையதாகவும் காண்கின்றோம். ஆகையால் இவையிரண்டும் ஒன்றே. இரண்டும் பிரமாணமே. மூலநூல்களில் வித்தியாசமில்லை. ஆனால் ஒன்றோடொன்றொவ்வாமல் சமயங்கள் ஏற்பட்டவிதமெங்ஙனமெனில், ஆன்மாக்கள் பரிபக்குவத்துக்கு அநுகுணமாகப் படிகளும், நெறிநிலைகளும், கடைசியில் ஒரேதுறையும் ஏற்பட்டிருப்பதால், அவ்வான்மாக்கள் சிற்சில படிகளிலும், நெறிநிலைகளிலும் இருந்தவாறே தடித்துநின்று அந்நிலையை உண்மை நிலையென்று நம்பி அதற்காக அம்முதல் நூல்களினின்றும் விரித்துத் தங்கள் மார்க்கத்தையே விளக்குவதாக [illegible] விரித்துரைத்து வேறு நூல்களும் செய்திருக்கிறார்கள். இவ்விதம் பார்க்குமள

வில், மேற்கூறிய புறப்புறச் சமயமுதல் அகச்சமயம்வரை விரித்த விவரம் புலப்படுகிறது. இவைகளில், புறப்புறம், புறச்சமயங்கள் வேதத்தை யொட்டாமலும் ஒட்டியும் நின்றமார்க்கங்கள். மற்ற சமயங்கள் வேதத்தையும் ஆகமத்தையும் ஒட்டிநின்றவைகள். இவைகளில், சிவாத்துவித சைவமானது சித்தாந்த சைவத்துக்கு மிகவும் நெருங்கிநிற்பது ஒன்று. அந்நெருக்கத்தினாலேயே அவ்விரண்டிற்கும் அபேதம் சொல்வதுண்டு. ஆயினு மவையிரண்டிற்கும் பேதமுண்டு. பேதமில்லாதவழி அபேதம் சாதித்தலும் அசங்கதமென்று முன்னமே குறிப்பிட்டிருக்கின்றோம். சிவாத்துவித சைவம் நிமித்தகாரணபரிணாம வாதமாகும். சிற்சத்திக்கும் சுத்த மாயைக்கும் வித்தியாசம் பாராட்டாது. 36-தத்துவங்களுக் குட்பட்ட நிலையில் நிற்பது. ஸ்ரீநீலகண்ட சிவாசாரியரும், ஸ்ரீமத் அப்பயதீக்ஷித சுவாமிகளும், வீரசைவாசாரியர்களும் இந்நிலையில் நின்றவர்கள். சக்திவிஷயமாக இவ்விதமாயிவர்களுக்கும் சித்தாந்தசைவர்களுக்கும் பேதமுளதேனும், மற்றெல்லாவிஷயங்களிலும் ஒற்றுமையுண்டு. அதுவுமுக்கியமாக, ஆன்மாவும், இறைவனும்வேறு வேறு பொருள்கள் என்பதில் மிகவும் திடசித்தமுடையவர்கள். இது ஒன்று முக்கியமாகக் கைக்கொள்ளவும், மற்றுள்ள வித்யாசங்கள் அவ்வளவு பெரிதாகத் தோற்றாது. சித்தாந்த சைவர்களும், மாயைதனு விளக்காகக்கொண்டு, இறைவனால் உபகரிக்கப்படும் பரிக்கிரகசக்தியாகச் சொல்லுகிறார்கள். ஆயின் இப்பரிக்கிரக சக்தியே, இறைவனுடைய அபின்னசக்தியாயிருந்தாலும் அதனால் விளையுந் தீமை ஒன்றுமில்லையென்க. ஆயின், பதிபசுக்களின் அபேதம் சொல்லுவதினால் விளையும் தீங்கு இவ்வளவென்று எல்லைவொணாது. ஆதலாற்றான் சிவாத்துவித சைவத்துக்கும் சித்தாந்தசைவத்துக்கும் அபேதம் பாராட்டுவது. மேலும், யோகமென்பது சரியைமுதல் சிவாத்துவித சைவம்வரை ஒடுநிற்குமாயினும், சிவாத்துவிதசைவத்தைச் சிறப்பாக நின்றுணர்த்தும். ஞானமென்பதும் சரியைமுதல் கடந்துநின்ற நிலையாகிய உண்மை முத்திநிலையினையும் அதின் அனுபவப் பேறாகிய நிஷ்கள சிவத்தையுங் குறிப்பிக்கவும் நிற்பதுவகையில், சிவத்தோடுகலந்து இரண்டற நின்றநிலையினையே யுணர்த்தும். இதுபோலவே வேதாந்தமும் சித்தாந்தமும்



என்க. ஆகவே, யோகாந்தம், போதாந்தம், கலாந்தம், நாதாந்தம் என்பன கொஞ்சம் கொஞ்சம் பேதப்படினும் இதுவெல்லாம் சிவாத்துவிதமாகிய வேதாந்தத்தில் அடங்கும். தனி ஞானமானது சித்தாந்தத்தையே குறிக்கும். இதனால் நம் அருள்மொழித்தேவர்தம் "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க" என்ற திருவாக்கும் விளங்கினமை காண்க. இக்கருத்தைத் தான், "தானான வேதாந்தம் தான் என்னும் சித்தாந்தம்" என்னும் திருமந்திரத்துக்கும் பொருளாக மதிக்கின்றோம். பின்வரும் அடிகளை யோசிக்குங்காலையும் அதன் கருத்து அவ்வாறே யிருக்கவேண்டுமென்பது தெரிகிறது.

"தானான வேதாந்தம் தானென்னும் சித்தாந்த
மானு துரியத்து அணுவன் தனைக்கண்டு
தேனார் பராபரஞ் சேர்சிவ யோகமாய்
ஆனமலமற் றருஞ்சித்தி யாதலே."

தான் என்னும் பதம் முப்பாலினும் மூவிடங்களிலும் வரும். ஆகவே சீவன் பரன் என இரண்டுபொருளிலும் வரும். "தானலா துலகமில்லை சகமிலா தடிமையில்லை." "சகமலா தடிமையில்லை தானலாற் றுணையுமில்லை" என்ற மறைமொழிகள் விளக்கும்.

"யானாகிய என்னை விழுங்கிவெறுந்
தானாகி நின்றது தற்பரமே"

என்ற அனுபூதிச்சொல் இன்னும் விளக்கும். ஆகவே திருமந்திரத்தின் பொருள்: நான்தான் (சிவம்) ஆன் என்றும் சிவோகம் பாவனையாகிய யோகநிலையில் நிற்பது வேதாந்தம். தான் (சிவம்) ஒன்றே என்றும் வேறொன்றும் திரிஸ்யமில்லை என்றும் ஆன்மா சிவாநந்தத்தில் அழுந்திநிற்கும் ஞானநிலையதாகியது சித்தாந்தம். அதனைவிரித்துரைக்குங்கால், ஆத்மதரிசனமடைந்து அவ்வாத்மாவில் சிவத்தைக் காண்கை சிவயோகமாகிய வேதாந்தம். ஆணவம் முற்றும் கழன்று யாராலும் பெறுதற்கரிய சித்தியையடைதல் சித்தாந்தம். இவ்விதம் பொருள்கூறுதல், ஆன்மா ஒன்று உண்டு என்று சொல்லுகிற மார்க்கம் சித்தாந்தம், என்பதைவிட, எம் சிற்றறிவிற்கு சிறப்பாகக் காண்கின்றது. நிரீச்வர சாங்கியமுதல், ஆத்மாவுண்டு என்று சொல்லுகிறமார்க்கங்கள் அநேகமுளவாமாத

லால். இதற்கு அடுத்த திருமந்திரத்திலும் நாம் விளக்கிய பொருளை வற்புறுத்துவதற்காகவே, "அத்தன்பரன்பால் அடைதல் சித்தாந்தமே" என ஆறுதி நிலையினையே சித்தாந்தமாகவும் கட்டளையிட்டிருக்கின்றார். * சமாதியென்பதும் யோகத்தின் முதிர்ச்சியேயான

* பின்வரும் திருமந்திரங்களையும் பார்க்க.

"நாலதுவேதாந்தம் நுண்சிகைஞானயாம்"
"வேட்கைவிடுநெறி வேதாந்தம்"
"வேதாந்தமாவது வேட்கையொழிந்திடம்"
(யோகம் சித்தநிரோதம் என்ற பொருள்பற்றி)
"பரசித்திக்குவித்தாஞ் சிவோகமேசேர்தல்"
"சிவமானஞானந் தெளியவொண்சித்தி"
..............................................................
சிவமானஞானஞ் சிவாநந்தநல்குமே"
"........................... புலன்கரணம்புந்தி
"சாதாரணங்கெடலாஞ் சகமார்க்கம்"
(யோகம் சாரூபம்.)
"இங்கிவராக இழிவற்றயோகமே"
"யோகம்சிவரூப முற்றிடும்"
(சைவம் சாயுச்சியம்.)
"சைவம்சிவனுடன் சம்பந்தமாவது"
"சைவஞ்சிவானந்த சாயுச்சியமே"
"தானவனாகித்தானைந் தாமலஞ்செற்று
மோனமதாமொழிப் பான்முத்தராவது
மீனமில்ஞானானு பூதியிலின்பமுந்
தானவனாயற்றல் ஆனசன்மார்க்கமே."
"ஞானத்தில்ஞானமே நானெனதென்னுமல்
ஞானத்தில்யோகம் நாதாந்தநல்லொளி"
"ஞானிக்குக்காயம் சிவமேதனுவாகும்"
..............................................
"மேனிற்கும்யோகிக்கு விந்துவும்நாதமும்"
"விஞ்ஞானத்தார்க் காணவமேமிகுதனு."
"ஒன்றுமிரண்டு மிலதுமாயொன்றாக
நின்றுசமய நிராகாரநீங்கியே
நின்றுபராபரை நேயத்தைப்பாதத்தாற்
சென்றுசிவமாதல் சித்தாந்தசித்தியே"



தால் அதனையே நான்தான் ஆகும், அல்லது தான் அவன் ஆகும் சமாதியென்றும்கூறி, வேதாந்தம் யோகமார்க்கமென்றே தெளிவுறுத்தார். இவ்விதமான சமாதி கைகூடினால், மற்றெல்லாநிலைகளும் அடைந்தபடியென்றும் அத்திருமந்திரத்தில் கூறியுள்ளார். ஆறந்தமாகக்கூறியதும் பொதுவாக, சித்தாந்தத்தையொழிந்த மற்று நாலந்தங்களும் வேதாந்தத்தில் அடங்குமெனத் தோற்றுகின்றது. போதாந்தத்தை வேதபோதாந்தமென்று உமாபதி சிவமும் கூறியது சான்றுமென்க.

இதுநிற்க, நாம் மேல் முதல்நூல்களை யநுசரித்து பலரும் அநேக நூல்களியற்றியுள்ளதாகச் சொன்னோம். அவற்றில், சாரீரகமீமாம்சா சூத்திரமென்று ஒன்று பாதராயண ரென்பவரால் செய்யப்பட்டுள்ளது. இவரும் வேதவியாசரும் ஒருவரோ வேறோ என சிலர் சந்தேகிக்கின்றார்கள். இந்நூலும், எக்காலத்துப் பிறந்தது என்பதும் தெரியவில்லை. நம் சங்கநூல்கள் காலத்தும் மாணிக்கவாசகர் திருமூலர் ஔவையார் முதலானவர்கள் காலத்தும் மிருந்திருப்பதாகத் தெரியவில்லை. இந்நூலில் ஒவ்வொரு சூத்திரங்களிலும், உபநிஷத் வாக்கியத்தை யநுசரித்து அதற்குப்பிறர் கூறும் அர்த்தத்தைத் தவிர்த்து உண்மையபிப்பிராயம் கூறிப்போகும். அ. னாலுமே அதற்கு வேதாந்த சூத்திரங்கள் என்றும் ஏற்பட்டது. இந்நூல் அநேக ஆசிரியர்கள் தங்கள் தங்கள் மதத்தினையே வலியுறுத்தியதென்று பாடியம்செய்திருக்கின்றார்கள். அதற்கு, ஸ்ரீசங்கரபகவத் பாதாசாரியர் ஒருபாடியஞ்செய்திருக்கின்றார்கள். அது சைவர்கள் சொல்லும் ஏகான்மவாதம் மாயாவாதம் என்னும் நிலையிலேயே நிற்பதாக ஏற்படுகின்றது. சுவமதஸ்தர்கள் அதனையே வேதாந்தமென்றும் அத்வைத மதமென்றும் பரமஹம்ச மதமென்றும் கூறுகின்றார்கள். உலகவழக்கிலும் பெரும்பாலும் அதனையே வேதாந்தமென்றும் கூறுவதுண்டு. ஆனால், ஸ்ரீசங்கரர்சிஷ்ய பரம்பரைகளுக்குள்ளுமே, ஸ்ரீசங்கரரின்

"சுத்தச்சிவனுரை தானிற்றோயாமல்
முத்தர்பதப்பொருள் முத்திவித்தாமூலம்
அத்தகைஆன்மா அரனையடைந்தற்றால்
சுத்தச்சிவமாவரே சுத்தசைவரே."

உண்மையபிப்பிராயம் இன்னதென்று விளங்காது பலர் பலவிதமாகக் கூறுகிறார்கள். தற்காலத்து இவ்வேதாந்த விசாரணைசெய்து வரும் ஐரோப்பிய பண்டிதர்களிலும் இவ்வித வேற்றுமை காண்கிறோம். மோக்ஷமூலர் அவர்களும், தம் 'வேதாந்தம்' என்னும் அரியநூலில் சங்கரின் அபிப்பிராயம் இன்னதெனக்காட்டி, அவருக்குப் பின்வந்தோர் அம்மதத்தை சுத்தம் மித்யாவாதமாக்கிவிட்டார்களெனவும், அதனாலேயே மற்றவர்கள் அம்மதத்தை பிரச்சன்ன புத்தமதமென்று இழிந்தார்களென்றும் காட்டியிருக்கிறார். இந்நூல்களை யாதாரமாகக் கொண்டொழுகிவரும் நூல்கள் பஞ்சதசி, கைவல்யம், ஞானவாசிட்டம் (குருஞானவாசிட்டமல்ல) முதலிய நூல்களாம். ஆக இவ்விதமான வேதாந்தம் வேதாந்தநூல்களை நாம் அநுசரியாவிடில், உண்மை வேதாந்தத்தை இகழ்ந்ததாக மாட்டாது. ஆயின், வேதாந்த சூத்திரத்துக்கு ஸ்ரீகண்டசிவமும் ஒருபாடியம் இயற்றி உள்ளார்கள். இப்பொழுதுள்ள பாடியங்களில் இது புராதனமானது. மற்றையதெல்லாம் இதற்குப் பிற்பட்டவைகளேயாம். இதன் உண்மை சங்கரவிஜயத்தினாலேயே காணலாம். இந்த சைவபாடியம் செய்தவரின் கருத்து சூத்திரங்கள் சிவாத்துவித சைவத்தையே உணர்த்தி நின்றதென்பது. யாமும் அச்சூத்திரங்களையும், ஆங்கிலேயத்துள்ள எல்லா பாடியங்களையும் படித்தும் பார்த்ததில், ஸ்ரீகண்டசிவத்தின் அபிப்பிராயமே சூத்திரங்களாற் போந்ததென்பதும் விளங்குகிறது. சங்கர பாஷ்யத்தையும் இராமாநுஜ பாஷ்யத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த டாக்டர் தீபா என்ற பெரியோரின் அபிப்பிராயமும் இதற்கு ஒத்தே வருகின்றது. ஆயின் இந்த வேதாந்தசூத்திரம் நம்மவர்களிற் சிலர் அது ஏகான்மவாதத்தை நிலையுறுத்துவதாக எண்ணி ஒதுக்குகின்றார்கள். சங்கரர் முதலிய மகான்கள் சிலர் அப்படியே அதனைக்கொண்டதையும் கண்டோம்; ஆயின் அதன் உண்மைக்கருத்து, ஸ்ரீகண்டசிவமும், டாக்டர் தீபாவும் கூறியபடியும், எம் விசாரணைக்கு எட்டியபடியும், சிவனும் சீவனும் வேறு என்பதே. ஆகவே, உண்மையில் பலகலையாகம வேதவேதாந்தங்களின் கருத்து சிவத்தையும், சீவனையும் அவர்களுக்குள்ள பேதத்தையும், அபேதமாகும் முறையினையும், பின்னிற்கு நிலையினையும் தெரித்து நிற்கின்றதென



விளங்கும். நமது ஸ்ரீகண்டசிவமும் அவருக்கு பின்வந்தோராகிய ஹரதத்த சிவாசாரியர், அப்பயதீக்ஷிதர் அவர்களும் தற்காலத்து ஸ்ரீகாசிவாசி, செந்திநாதய்யர் அவர்களும் காட்டியவண்ணம், வேதவேதாந்தங்களில் ஆன்மா, பரமான்மா, அமிர்தம், சத்து, சிவம், ஹரன் ருத்ரன் முதலிய பதங்கள் பரியாய பதங்களாய் உபயோகிக்கப்பட்டு பரம்பொருளாகிய பரமசிவத்தைக் குறிக்கும். உபநிடதங்களில்; ஆன்மா என்னும் பதம் சீவான்மா, சிவம் என்னும் இரண்டுபொருளையும் உணர்த்திவரும் பிரயோகங்கள் காணப்படும். ஏகான்மவாத நூல்களிலேயே, சிவன் ஹரன்முதலிய பிரமத்தின் நாமங்களை விட்டுவிட்டு, ஆன்மா, பிரமம் என்னும் நாமங்களையே உபயோகிக்கப்பட்டு வருகிறது.

இன்னொரு விஷயத்தைமட்டும் குறித்தபின் இவ்வியாசத்தை முடிவுசெய்கின்றோம். பகவத்கீதையானது மகாபாரதமென்னும் இதிகாசத்தின் ஓர்பாகமாகி எல்லோராலும் அங்கீகரிக்கக் கூடிய நூலேயாம். ஆயின் சைவர்களிற் சிலர், அதை நிராகரித்தது மற்ற புறச்சமயத்தவர்கள் அதனை அதிகமாகப் பாராட்டி, அதனை வேறுவிதமாய் செய்வதினால்தான். யாம் அதனை ஓதியுணர்ந்தமட்டில் அது சுத்த சைவநூலாகக் கொண்டோம். ஸ்ரீகண்ணபிரான் சம்பந்தப்பட்டமட்டில் பாஞ்சராத்திரிகள் அவரை பரம்பொருள் என்று கொள்ளுகின்றார்கள் என்பதிற் சந்தேகமில்லை. ஏகான்மவாதிகளாகிய வேதாந்திகள், எல்லாம் பரமென்று நிலைப்பதால், ஸ்ரீகண்ணனையும் சாமான்யபரமாகக் கொள்வதில் விசேஷமில்லை. ஆயின் சித்தாந்திகள் கொள்ளுவது அவ்விதமன்று. சிவஞானயோகிகள் கூறியது வேதாந்திகள் கூறுவது போல்வதொன்றன்று. ஸ்ரீகண்ணபிரான் சிவேகம்பாவனையின் முதிர்ந்து, சிவனே தானெனக்கொண்டு குருமுகமாய்நின்று அருச்சுனனுக்கு உணர்த்திய சீவமுக்தன் என்பதே சிவஞானயோகிகள் கருத்து. இதனை முதல்முதல் சுட்டிக்காட்டியவர் ஸ்ரீகண்டசிவம். இதனையவர் பாஷியம், I. 1. 31. கீழ்காண்க.

இதனை விரித்து ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதர் சிவாதித்தமணிதீபிகையிலும் கூறியுள்ளார்கள். அவற்றிற்கண்டு தெளிக.

அத்வைத சொரூபம் இன்னொரு சஞ்சிகையில் விரிப்பாம்.

J. M. N.

# சிவானந்தம்.

(முன்தொடர்பு தொகுதி 1, பகுதி 5, 6, பக்கம் 163:)

அன்றியும் பசுத்துவமாய் நின்ற ஆன்மஞானமே சிற்றின்பம். அதுபோல சிவத்துவமாய் நின்ற ஆன்மஞானமே முத்தியின்பமெனக் கொள்ளில், ஆன்மாவின் ஞானமே இன்பமாயின் அதனையறிந்து அநுபவிக்கும் ஞானம் வேறுயாதோ வெனக்கடாயினார்க்கு குணியாய் நின்ற ஞானமே அதனை யறிந்து அநுபவிக்கும் எனவிடுப்பில், குணியாய் நின்ற ஞானமே அறிவுமாத்திரையாய் நிற்பதன்றி ஏனைமுகமாய் நிற்றலின்மையானும் எதிர்முகமாகாமையுமாதலுமாகிய இயல்பு பற்றியே ஞாதாவெனவும் ஞானமெனவும் பகுத்தோதி யதனை யறியார் கூற்றுமென விடுக்க.

ஞாதா ஞானமாவானென்பது இலக்கண வழுவாம். குணகுணிகள் இரண்டற்குமிடையே பொதுவாக ஒரு ஞானமுண்டு அதுவே ஞாதாவெனப்படுமெனின், ஒரு பொருள் குணம் குணியென இருபகுதிப்படுவதின்றி மூன்றாவது ஒரு பகுதியுண்டென்று கூறுதல் யாண்டுமின்மையறிக.

அறிவித்தாலறியுந் தன்மைத்தாகிய ஆத்மாவிற்கு ஆனந்தமென்பதொன்றில்லை. அப்படியிருக்கத் தன்னானந்தத்தையே முத்தியிலநுபவிக்குமென்பது கிரியாவிரோதமாகி நியாயத்துக்கொவ்வாததாகி நிற்கும். சமாதி காலத்தில் ஆன்மாவிற்றோன்றும் இன்பம் சிவரூபமான பேரின்பமே யன்றி ஆத்மானந்தமன்று. ஆனால் ஆன்மாபடிகம் போலவதொன்றாகலின் இப்பேரின்பம் ஆன்மவின்பம்போல தோன்றிற்று. அது பற்றி யவ்வாறுகொள்ளற்க. *



முத்தி யிலக்கணங்கூறுமிடத்து பெறுவான் ஆன்மாவென்றும் அவன் அடையும் ஆனந்த நிலைபேறு என்றும் கூறியிருத்தலால் ஆன்மாவிற் கோர் ஆனந்த முண்டென்பதை மறந்துவிடுவாயாக.

ஆன்மாதன்னையே கண்டிருப்பது முத்தியன்று. ஏனெனில், இன்பம் ஆன்மாவின் குணமாகில் குணகுணிகள் வேறின்மையின் ஆன்மாவிற் கோரநுபவமின்றாம். அன்றியும் "முத்தர் சிவமே கண்டிருப்பர்" என்றும் ஆன்றோர் வாக்கியத்துக்கும் விரோதிக்கும். ஈசனைக் காணவேண்டுமென்று செய்யுந்தவங்களெல்லாம் பொய்யாகித் தன்னையே தான் காண்டல் மெய்முத்தியாகில் அத்தவங்களெல்லாம் வீணாய் முடியும்.

---

[* இக்குறியீடு யிட்டவைகள் சந்தேகந்தரக்கூடியதா யிருக்கிறது. ஆன்மா முத்தியில் இன்பம் (ஆநந்தம்) சிவாநந்தம் அநுபவிக்கின்றதோ இல்லையோ என்பது. அநுபவிக்கின்றது என்பது எமதுகருத்து. அப்படி அநுபவிக்குங்கால்; ஆன்மா அது அதுவாய் நிற்றலினாற் சுக ஆன்மாவின் சுவானுபவத்தை சிவானுபவமாகவும் கொள்வது அறிவு அநுபவமென்பதின் பேதம் கொஞ்சம் தெரியவேண்டும். நான் அறிகின்றேன் நான் காண்கின்றேன் நான் கேட்கின்றேன் என்று அறிவு முனைத்து நிற்பது அறிவு. இதனைத்தான் சுட்டறி வென்றும் சொல்வது (consciousness) அப்படி ஏதானுமொன்றை யறியுங்கால், அநுபவம (இன்பம)நிகழும். அவ்வநுபவத்திலே அது அதுவாய் அழுந்திநிற்க, அறிவுமுனைத்திடாது அமிழ்ந்தி, அநுபவமாத்திரையாய் ஆன்மா நிற்கும். இப்படி நின்றால் தான் அநுபவம் முற்றி நிற்கும். இதையே அத்துவித அநுபவமென்றது. எப்படியெனில், ஒருவன் சங்கீதம் கேட்டுழி,. அறிவும் அநுபவமும் நிகழுகின்றது. நான் சங்கீதம் கேட்கின்றேன் மிகவும் இனிமையாயிருக்கின்றது என்ற ஞானம் வரில், இதிற் சுட்டறிவு, பேதஅறிவு உண்டாகி, இன்பமுதிர்ச்சியுமுண்டாகாது. அப்படி சங்கீதத்திலேயே அதுவதுவாகி லயப்பட்டு பரவசமாய் நிற்றல் அநுபவமுதிர்வு. ஆனால் ஆன்மாவின் அறிவு ஒழிந்துபோகவில்லை. முனைக்காமல் அழுந்தியே நிற்றது. நினையாமல் நினைத்தல், நோக்காது நோக்கல், கேளாது கேட்டல் என்னும் பிரயோகங்களின் கருத்து மிதுவாகும். ஒருவன் சங்கீதத்தில் சுட்டறிவின்றி அழுந்தி நிற்றலை சுத்தமானவிஷய அறிவு அல்லது அநுபவமென்றும் (Pure objective feeling or consciousness) அப்பொழுது விஷயி (subject) இல்லாமலுமில்லை, யென்றார், பேய்ன்பண்டிதரும். ஏனெனின் அவ்வித அறிவு ஒன்று இல்லாவிடில், அநுபவமே சித்திக்காது. சங்கீத இன்பத்தோடு சிவானந்தத்தை வைத்து நோக்கில், இவ்விதம் சுவானுபவம் சிவாநுபவமாதலுங் காணலாம். ப-ர்]

ஆன்மாவிற்கு ஆனந்தமுண்டாகில் எண்ணில்லாத பிறவியையும் இறப்பையும் அவ்வான்மா எய்தவேண்டாம். இரும்பைச்சேர்ந்த தீயின்குணம் இரும்பின்குணமாகத் தோன்றுதல்போல ஆன்மாவிற்றோற்றும் பேரின்பம் ஆன்மாவோடு இரண்டற நிற்றலின் அவ்வான்மாவின் குணம்போற்றோன்றும். ஆன்மாவிற்கு ஆனந்தமில்லை என்று அறுதியிட்டதால் ஆன்மாசத்தாகியும் சித்தாகியும் நின்றதைதவிர ஆனந்தமயனாய் நிற்கவில்லை. சச்சிதானந்த ஈசன் ஒருவனே. ஆதலால் ஆன்மாமுத்தியில் மும்மலங்கள், நீங்கப்பெற்று சிவானந்த வெள்ளத்திற்றிளைத்து அவ்வானந்த மயமாய்நிற்கும். மேற்கோள்.

“உள்ளமல நீங்கி யோங்கு சிவானந்த
வெள்ளந்திளைத்ததுவாய் மேவுதலே—கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறுஞ் சிவாகமத்திற்
சித்தாந்த முத்தியெனத் தேர்.
ஒக்குணர்வினுள் ளொடுங்கி யுள்ளத்து ளின்பொடுங்கத
தூங்குவர் மற்றேதுண்டு சொல்.
நற்பர சிவத்துள் நண்ணுபே ரின்பஞ்
சிற்பரானந்த தரிசன மாகும்
பெறும்பேரனந்தப் பெருக்கிற் கலந்தாங்
குறுவதானந்த யோகம தாகும். ”
அன்புருகி யுறையாது நெகிழாது பற்று
தனைந்தநிலை தெரியாதங் கழுந்தில மகத்தான
வின்பசுகமே பரமானந்த தரிசனமா
மிவைதெளிய வுருகின பொன்போற் சலனமின்றாம்
பின்புபரமானந்த யோக நிறைசீரிற்
பெருகவிழித்தவற்கு நிலந்தோன்றுமாபோ
லொன்றவுருகிய செம்பிற்கண்டபொறி தோன்றுவபோ
லுளத்தறிவிற் செருக்குவர வானந்த முதிக்கும்.
என்னையறி வென்று ளென்னறிவிலானந்தந்
தன்னைச் சிவமென்றன் சந்ததமு—மென்னையுன்னே
பராமறைத்துப் பாசமென்று விட்டொன்று
மாராய்ந்தவர் முத்தராம்.



“ முத்தன் சிவானந்தந் தன்னை யருந்தி முதல்வனையு
நித்தம் பிரிவிலனென்றாக மங்கணிகழ்த்தலின்று
லத்தனதானந்த மெய்தாது பிரென்றனறைந்தசொற்று
னுத்தம்முத்தி யுணராதவர்களுரைக்குஞ் சொல்லே. ”

பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப்பன்னாட் பாமாலை பாடப் பயில்வித்தானை, யெத்தேவுமேத்து மிறைவன்றன்னை யெம்மானை யென்னுள்ளத்துள்ளேயூறு, மத்தேனையமுதத்தை யாவின்பாலைப் யண்ணிக்குந் தீங்கரும்பை யரனையாதிப் புத்தேளைப்புள்ளிருக்கும் வேளூரானைப் போற்றாதே யாற்ற நாள் போக்கினேனே.

தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொ றுங் காண்டொறும் பேசுந்தோறுமெப்போது
மனைத்தெலும் புண்ணெக வானந்தத்தேன் சொரியுங்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

முகத்திற்கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற்கண்கொண்டு காண்பதேயானந்தம்
மகட்குத் தாய்தன்மணாளனோடாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமாறெங்ஙனே.

ஆனந்த வெள்ளத்தழுந்துமோ ராருயிரீருருக்கொண்
டானந்தவெள்ளத்திடை திளைத்தலொக்குமம்பலஞ்சே
ரானந்தவெள்ளத்தறைகழலோனருள் பெற்றவரி
னானந்தவெள்ளம் வற்றாது முற்றாதிவ்வவனிகளிலுமே.

S. பாலவண்ணமுதலியார்.

## நக்கீரர்.

நக்கீரதேவர் என்பார் கடைச்சங்கத்துப் புலவருள் தலைமை பூண்டவர். அவர் தனக்கிருந்த கல்வியின் வல்லமையால் இறைவன் முன்னரும் வீரம் பேசினார். இவர் திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, கைலைபாதி காளத்திபாதியந்தாதி, திருவீங்கோய்மாலையெழுபது, திருவலஞ்சுழிமும்மணிக்கோவை, திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப்பிரசாதம், காரெட்டு, போற்றித் திருக்கலிவெண்பா, திருக்கண்ணப்பதேவர் திருமறம்முதலிய பிரபந்தங்கள் பாடியுள்ளார். இவற்றுள் நெடுநல்வாடை நீங்கலாக மற்றவை பதினோராந்திருமுறையிலுள்ளன. கோபப்பிரசாதம், கலிவெண்பா, பெருந்தேவபாணி மூன்றும் இறைவன் தன் மீது சீற்றங்கொண்டபோது அது தணியப்பாடப்பட்டன. இவையனைத்தினும் திடபத்தியினையும், தத்துவஞானத்திற் குரியவற்றையும் பூர்வசரித்திரங்களையும் நன்கு விளக்குகிறது. அவையாவும் எவராலும் விரும்பத்தக்கன. இவர் பிரபந்தங்கள் சமயகுரவர்கள் சந்தானகுரவர்கள் பிரபந்தங்களுக்கு முன்தோன்றியன இவ்வுண்மையினை யறியாத வைணவர்கள் பத்திமார்க்கத்திற்குத் தங்கள் ஆசிரியர்களே பூர்வீகராவரென நினைக்கின்றார்கள். இவர்கள் பதினோராந் திருமுறை ஆசியர்களைப்பற்றிச் சிறிது மாராயாதவராவர் இவ்வாசிரியர்கள் வைணவ ஆசிரியர்கட்கு வெகுகால முந்தியவர்கள் இவ்வைணவர்கள் சைவசமய உண்மையினையும் தெரியாதவர். இத்தகையினர்க்கு இத்திருமுறைகள் ஆச்சரியத்தினை விளைவிக்கு மென்பதிற் றடையில்லை. சரியை கிரியை யோகம் ஞானம் எனப்படும், தாத சற்புத்திர தாச சன்மார்க்கங்களை வெகு பண்டைய காலத்தவராகிய நக்கீரதேவர் எடுத்தாண்டிருக்கின்றனர். இவ்வுண்மையினைக் கயிலைபாதிகாளத்திபாதியில் சில காட்டுகின்றோம்.



உண்மைவணக்கம்.

சொல்லும் பொருளுமே தூந்திரியு நெய்யுமாம்
நல்விடிஞ்சி லென்னுடைய நாவாகச்—சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று.

மனக்கோயிலான்.

பெரியவர் காணீரென் னுள்ளத்தின் பெற்றி
தெரிவரிய தேவாதி தேவன்—பெரிதுந்
திருந்தக்கோ ரேத்துந் திருக்கயிலைக் கோனை
யிருந்தத்தான் போந்த இடம்.

தாசோகம்.

பண்டு தொடங்கியும் பாவித்து நின்கழற்கே
தொண்டு படுவான் றொடர்வேனைக்—கண்டுகொண்
டாளத் தயாவுண்டோ வில்லையோ சொல்லாயே
காளத்தி யாயுன் கருத்து.

பிறவிக்கு அணை.

நிலையிற் பிறவி நெடுஞ்சுழியிற் பட்டுத்
தலைவ திடுமாறு கின்றேன்—றொலைவின்றிப்
போந்தேறக் கைதாராய் காளத்திப் புத்தேளிர்
வேந்தே யிப்பாசத்தை விட்டு.

மணவாளன்.

மகிழ்ந் தலரும் வண்கொன்றை மேலே மனமாய்
நெகிழ்ந்து நெகிழ்ந்துள்ளே நெக்குத்—திகழ்ந்திலங்கும்
விண்ணிறங்கா வோங்கும் வியன்கயிலை மேயாயென்
பெண்ணுறங்கா ளென்செய்கேன் பேசு.

பஞ்சாட்சரம்.

வாயிலே வைக்கு மளவின் மருந்தாகித்
தீய பிறவிநோய் தீர்க்குமே—தூயவே
நம்பெருமா தேவியொடு மன்னு கயிலாயத்
தெம்பெருமா னோரஞ்செ ழுத்து.

இருவுமதி.

அஞ்செழுத்துங் கண்ட ருமறைக ளாவனவு
மஞ்செழுந்துங் கற்க வணிந்தாகு—நஞ்சணிந்த

காளத்தியார் யார்க்குங் காண்டற் கரிதாய்ப்போய்
நீளத்தே நின்ற நெறி.

பசுஞானமும்-பதிஞானமும்.

உணருங்கா லொன்றை யுருத்தெரியக் காட்டாய்
புணருங்கா லாறே போன்று—மிணரிற்
கனியவாஞ் சோலைக் கயிலாய மேயா
னினியவா காணின் னியல்பு.

அபேதம்.

உரையும் பொருளு முடலு முயிரும்
விரையு மலரும்போல் விம்மிப்—புரையின்றிச்
சென்றவா றோங்குந் திருக்கயிலை யெம்பெருமா
னின்றவா றெங்கு நிறைந்து.

அத்துவிதம்.

யானென்றுந் தானென் றிரண்டில்லை யென்பதனை
யானென்றுங் கொண்டிருப்ப னாயினுந்—தேனுண்
டளிகடாம் பாடு மகன்கயிலை மேயான்
றெளிகொடான் மாயங்கள் செய்து.

அருள்.

சார்ந்தாரை யெவ்விடத்துங் காப்பனவுஞ் சார்ந்தன்பு
கூர்ந்தார்க்கு முத்தி கொடுப்பனவுங்—கூர்ந்துள்ளோ
முளத்தி யாணிப்பார் முன்வந்து நிற்பனவுங்
காளத்தி யார்தங் கழல்.

சதுர்த்தம்.

அவனோ ரனெடுமா லமரர்கோன் மற்றும்
பலராய்ப் படைத்துக் காத்தாண்டு—புலர்காலத்
தொன்றாகி மீண்டு பலவாகி நிற்கின்றான்
குன்றாத சீர்க்கயிலைக் கோ.

நிற்க, நக்கீரதேவர் இவ்வந்தாதியினும், திருக்கண்ணப்ப தேவர் திருமறத்தினும் கண்ணப்பநாயனர் அரிய பத்தியினை மிக வியந்து பாராட்டுகின்றனர். இதையநுசரித்தே அருண்மொழியாராகிய சேக்கிழார் விஸ்தாரமாகப் பெரிய புராணத்தில் கூறியுள்ளார். அரிய பத்திக்கு உதாரணமாக மாணிக்க



வாசக சுவாமிகளும் சங்கராசாரியரும் கண்ணப்பநாயனாரையே வியந்து பாராட்டுகின்றன ரென்பது யாவரு மறிந்த வுண்மையே.

ஒரு காலத்தில் நக்கீரதேவர் யாத்திரைசெய்த போது இடையிலே பூதமொன்று இவரைப் பிடித்து முன்னமே ஒரு குகையில் தான் சேர்த்துவைத்துக் கொண்டிருந்த 999 பெயர்களுடன் சேர்த்து யாவரையும் விழுங்கிவிட உத்தேசித்திருக்கையில், நக்கீரதேவர் திருமுருகாற்றுப்படையினைப் பாடியவுடன் முருகக்கடவுள் பிரத்தியட்சமாகி அவ்விடையூறின்றி இவரையும் மற்றையரையும் நீக்கினர். அதுமுதல் இத்திருமுருகாற்றுப்படையைப் பாராயணஞ் செய்யில் சகல இடுக்கண்களு நீங்க முருகக்கடவுள் கிருபை கிடைக்குமெனும் நம்பிக்கையுடன் சைவர்கள் படித்துவருவதுடன் முருகக்கடவுள் திருவருளுக்குப் பாத்திரராகின்றனர். முருகக்கடவுள் அருள்பெற்றொருவன் மற்றொருவனைக் கண்டு அவ்விறைவனது படைவீடுகளாகிய திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி (பழநி), திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை (கள்ளழகர்கோயில்) சென்று வழிபடின் திருவருளடையலாமெனவற்புறுத்தி வழிப்படுத்தலைத் திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. இப்படையுள் பெருமான் விபவத்தையும் அருள்விளையாடலையும் தெரிவிக்கின்றது. இடையிடையே, கடல், ஆகாயம், மலை, காடு, சூரியன், சந்திரன், விருட்சம், புஷ்பம், பட்சி முதய சிருஷ்டிவர்க்கங்களி லமைந்துள்ள இறைவன் மாட்சிமைகளை விளக்குகின்றது. நாம் நேரே கடவுளை நமது சீவகரணங்களால் பார்க்கக்கூடாது. உண்மைத் தீர்க்கதரிசிகள் உலகசிருஷ்டியின் சுபாவமாக வமைந்துள்ள சிங்காரங்களில் கடவுளின் மகிமையினைக்கண்டு ஆனந்தமடைகின்றனர். இவைமுதலிய காரணங்களால் நக்கீரதேவர் நூல்களனைத்தும் பத்திக்கு ஏதுவானவைகளேயாம்.

[இவ்விஷயம்-ஜே-யம்-நல்லசாமிபிள்ளையவர்கள்
ஆங்கிலேயத்தி லியற்றியதின் மொழிபெயர்ப்பு.]

மணவழகு.

# அத்வசோதனை.

ஏவமேதன்னவிஜ்ஞேய ஸர்வாத்வாவதி தீக்ஷயா |
தீக்ஷிதஸ்யோத்தராபக்தாந் நபிபேதி பவாத்மகாந் ||

என்றது பராக்கியை யென்னுமாகமம். இவ்விதமாக சகல அத்வாக்களின் சோதனையை தீக்ஷையாலறிந்தவன் சம்சாரபந்தத்திற் பயப்படான் என்ற பொருள்படும்.

இப்பொழுது அத்வாவென்பதென்ன? அதன் காரியமென்ன? அதனாலடையக்கூடிய பிரயோஜனமென்ன? வென ஆராயவே இங்கு கூடியிருக்கின்றோம். எடுத்துக்கொண்ட விஷயம் பெரியதாகையாலும், இதனைப்பற்றி சவிஸ்தாரமாக இச்சபையின்முன்னர் சென்றவாண்டில் வேதாரணியம் ஸ்ரீமான். வை. இரமணசாஸ்திரிகள் பேசியிருப்பதால் அதனையே யானும் எடுத்துப் பேசுவது தகுதியற்றதாயினும், அப்பிரசங்கம் ஆங்கிலம் கற்றோருக்கே பயன்பட்டதே யொழிய மற்றையோருக்கு அறிய இயலாததாயிற்று. அவர்களும் கேட்டு ஆனந்தமடையும் பொருட்டு தெரிந்தமட்டில் சொல்ல முன்வந்ததில் குற்றங்குறைகளிருப்பினும், சபையோர் என்னை மன்னிக்க வேண்டுகிறேன்.

அத்துவாவென்ற பதத்திற்கு வழியெனப் பொருள்தரும்; அதாவது சிவபெருமானையடைவதற் குற்ற வழிகளாகும். சாஸ்திரிகள் இதனை விவரிக்கும் போது. "Though the word adhvan eludes definition however skilfully we may endeavour to put forth one yet "I think it will be an apt description of the general nature and character of the adhvans, if I borrow a term from physiological psychology of the westerns and say that the Shadadhvans are the six *Conduction-paths* of matter in universe and in Man, along which the Light of the Father or the Holy Spirit works to bring about the redemption of souls." என்றார்.

,, அத்துவா வென்பதை எவ்விதமாக வேனும்வியவகரிப் போமென்றாலும் முடியாதகாரியமாயினும், வியவகரிக்கும் வகையில், மேல்நாட்டாரது தேகக்கூற்று முறைப்படி. ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு சிவபெருமானின்கிருபா நோக்கம் பிரதி மனிதனிடத்தும் உலகத்தினிடத்தும் செல்ல அதனால் ஓரிடத்திற் சென்றுபோய்ச் சேர்க்கும் அறுவழிகள். என்கிறார் ''



சிவபெருமானுக்கு மரம்போல் சகளரூபமும், மரத்தினது நிழலைப்போல நிட்களரூபமும்பூவும் மணமும் போலசகளநிட்களரூபமும் உண்டென்றாலும், அத்துவா வென ஒன்று என்பதென்னை என்னும் ஆசங்கை யெழுந்தபோது ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் தமது சிவஞானசித்தியில்.

அத்துவாமூர்த்தியாக வறைகுவதென்னை யென்னி
னித்தனாய் நிறைந்தவற்றி னீங்கிடாநிலைமை யானுஞ்
சித்துடன சித்திற்கெல்லாஞ் சேட்டிதனாகலானுஞ்
வைத்த தாமத்துவாவும் வடிவெனமறைகளெல்லாம், என்பர்.

இச்செய்யுளுக்கு எழுதிய உரைகாரரெல்லாம் விசேஷமாக எழுதாமற் போயினும், இலக்கணவிளக்க பரம்பரை சிதம்பரநாத தேசிகர்தா மெழுதிய உரைவிசேஷக்குறிப்பில் " அத்துவாவடிவான முறையெங்ஙன மெனின் சாந்தியதீதகலை திருமுடி; சாந்தி திருமுகம்; வித்தையார்பு; பிரதிட்டை குய்யம்; நிவர்த்தி முழந்தாளும் பாதமும்; பஞ்சகலைகளும் அங்கமாகவும், புவனங்கள் உரோமம்; வர்ணங்கள்தோல்; மந்திரங்கள் சோரி, பதங்கள் நரம்பு, தத்துவங்கள் என்பும் சதையும். இப்படியாறத்துவாவும் சதாசிவற்கு திருமேனி அவருக்குப் பிராணன் பரமசிவனெனவறிக, என்றெழுதுகிறார்.

அஃதாவது அத்துவாக்கள் ஆறென்றும், அவை அடைவே கலை, புவனம், வன்னம், மந்திரம், பதம்; தத்துவம் எனப்பெயருடையன வெனவும் பெற்றாம்.

இதனையே மகா ஞாதாவான திருமூலர் தமது திருமந்திரத்தில்.

" தத்துவம் ஆறாறு தன்மநு வேழ்கோடி
மெய்த்தகுவன்னம் ஐம்பானொன்று மேதினி
யொத்த இருநூற்றிருபத்து நான்கு எண்பானொன்கு.
வைத்தபதம் கலையோரைந்தும் வந்ததே '' என்றார்.

தத்துவம் முப்பத்தாறு-சப்தகோடிமகாமந்திரங்கள், வர்ணங்கள் ஐம்பத்தொன்று, இருநூற்றிருபத்து நான்கு புவனங்கள், பதம் எண்பத்தொன்று, கலை ஐந்து.

சிவதீக்ஷை பெற்றவர்கள் நித்தியானுஷ்டானங்களில் வருவனவாயினும் அவற்றை எற்காதோரும் அறியும்படி ஐம்பூதங்கள், ஞானேந்திரியங்கள் 5, தன் மாத்திரைகள் 5, கர்மேந்திரியங்கள் 5, அந்தக்கரணம் 3, ஆகக்கூடிய 24ம் ஒன்றான ஆன்மதத்துவமும், சுத்தாசுத்த தத்துவமென்றுபெயர்பெற்ற காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயையென்னும் வித்தியாதத்துவங்கள் எழும், சுத்த வித்தை, ஈசுவரம், சாதா

க்கியம், சத்தி சிவம் என்னும் சிவதத்துவங் ஐந்தும் கூடி தத்துவங்கள் முப்பத்தாறாயின.

மந்திரங்கள் எழுகோடி அவைவிரிக்கின் பெருகும். வர்ணங்களாவது அக்ஷரங்களென்னப்படும். அவை அகாரமுதல் க்ஷகார இருவாய் ஐம்பத்தொன்று. மேதனி அல்லது புவனங்கள் பத்ரகாளியைமுதல் அகநாஸநதை இறுதியாக இருநூற்றிருபத்து நான்கு. பதங்கள் மகாதேவபதம் முதல் ஓங்கார பதமிறுவாய் எண்பத்தொன்று.

கலை, நிவர்த்தி, பிரதிஷ்டை வித்தை, சாந்தி, சாந்திய தீதமென ஐவகைப்படும்.

மேலைச் செய்யுளில், வந்ததே, என்பதால் ஒன்றினின்றும் மற்றொன்று வியாபக வியாப்பியமுறையாய் ஏற்பட்டதென்பது பெறப்படும். அதாவது தத்துவங்கள புவனத்தின் பாற்பட, புவனங்கள் இப்படி ஒவ்வொன்று கலைகளிலொடுங்கும். அவையாவன நிவர்த்திகலையின், பாற்படுவது தத்துவமொன்று, புவனங்கள் நூற்றெட்டு, வண்ணமொன்று, பதம் இருபத்தெட்டு. பிரதிட்டையின் பால் தத்துவம் இருபத்துநான்கு, புவனங்கள் 56, வர்ணங்கள் இருபத்துநான்கு, பதம் இருபத்தொன்று, மந்திரம் 2. வித்தையின் பால்தத்துவம், 7 புவனம் 27, வர்ணம், 7 பதம் 20, மந்திரம் 2.

சாந்திகலையில் தத்துவம் 3, புவனங்கள் 18, வர்ணம் 3, பதம் 12, மந்திரம் 2ம். சாந்திய தீதகலையில் தத்துவம் 2, புவனம் 15, வர்ணம் 16, பதம் ஒன்று, மந்திரங்கள் 3ம் ஒடுங்கும்.

இப்படி மந்திரங்களை முடிவில் நிறுத்திய போதினும் மந்திரங்கள் தான் முக்கியமானவைகளாய் ஏற்படுகின்றன. மந்திரங்களாவன மனதினிடையுண்டாகும் எண்ணம்மாகும் அவைகளை காரியப்படுத்துவதும் அதுவே அன்றியும் சிவபெருமானை யெய்திலடைய அதுவே வழியன்றி அவரும் மஹாமந்திரம், பஞ்சாக்ஷரிபோன்ற மந்திரங்கள் மூலமாகநிறைந்திருக்கின்றார். நாம்தினந்தோறும் பலர்மந்திரமஹிமையால் பலஅதிதேவதைகள் வசமாயிருப்பதை சகஜத்தில் காண்கிறோம். ஆனால் அவர்கள் கட்டுண்டிருப்பதாகக் கருதக் கூடாது. அவர்கள் மந்திரங்களிடத்துள்ள பிரீதியால் அப்படி யிருப்பதாகக் கொள்ளல்வேண்டும். அப்படி யாயின் பஞ்சாக்ஷரி முதலாய மஹாமந்திர கர்த்தாவான சிவபெருமானைக் கூற வானேன்? இதனையே அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்.

மந்திரம் அத்து வாவின் மிகுந்தொரு வடிவமாகத்
தந்தது அரனுக் கென்னிற் சத்திநூக் குபாதானங்கள்
விந்து மோகினிமான் மூன்று மிவற்றின்மேலாகி விந்துச்
சிந்தையாதீத மான சிவசத்தி சேர்ந்து நிற்கும், என்றார்.



அதாவது இப்பிரபஞ்சோற்பத்திக்குக்காரணமான குண்டலிஎன்னும் சுத்தமாயை, அசுத்தமாயை, பிருதிவிமாயை, யென்றும் மூன்று உபாதானகருவிகளுள் சுத்தமாயையான விந்துவில் ஆன்மாக்கள் மனதினுற் கூட உன்னுதற்கரிய சிவசத்தியதனையதிட்டித்து நிற்க அதனில்வாக்குண்டாய் அதன் காரியப்பாடாக மந்திரங்களுண்டாக அவை சுத்தனான சிவபெருமானுக்குதிருமேனியாகின்றன. இதனையே பின்னரும் சித்தியாருடையாரும்,

சுத்தமாம் விந்துத் தன்னிற் றோன்றிய வாத னானுஞ்
சத்திதான் பிரேரித்துப் பின்றனதிட்டித்துக் கொண்டே
யத்தினுற் புத்திமுத்தி யளித்தலா லரனுக் கென்றே
வைத்தவா மந்திரங்கள் வடிவென மறைகளெல்லாம்.

என்றார். அத்தினால் என்றதனால் சத்தியாலுண்டாக்கப்பட்டு பின்காரியப்படுத்தி நிற்கும் மந்திரங்களைக்கொண்டு சிவபூசை, அக்கினிகாரியம் முதலியவை செய்ய சிவபெருமான்போக மோக்ஷங்களை தந்தருளுகிறான் என்றேற்பட்டது. இன்னும் மந்திரங்கள் சத்தகோடியென்றோம்! *அவையெல்லாம் விசேஷமானவையே யெனினும் விசிட்டம் இருக்க வேண்டிய தவசியமாகலின் அதனைப்பின்வரும் விருத்தத்தாற் கூறுகின்றார்.

மந்திர மதனிற் பஞ்சமந்திரம் வடிவமாகத்
தந்திரஞ் சொன்ன வாறிங் கென்னெனிற் சாற்றக்கேணீ
முந்திய தோற்றத்தாலு மந்திர மூலத்தாலு
மந்தமில் சத்தி யாதிக்கிசைத்தலு மாகுமன்றே. என்றார்

அதாவது மந்திரங்கள் சப்தகோடியாக அவற்றுள் பஞ்சபிரம்மங்கள் விசேஷத்திற்கு பாத்திரமெப்படியென்னில் எல்லாம் சுத்தமாயை மூலமாக உண்டாயினும், அப்படியுண்டாவதற்கு அடிப்படையாக விருப்பது இந்தப் பஞ்சப்பிரம்மங்களே யாதையால் ஆதியாகிய சதாசிவமூர்த்திக்கு ஈசானி, பூரணி, ஆரத்தி, வாமை, மூர்த்தியாகிய சக்திகளைந்தும் ஈசானமுதலிய பஞ்சமந்திரங்களையும் அதிட்டித்துக்கொண்டு பஞ்சகிருத்தியங்களைச் செய்கைபால், இவ்வைந்துமே திருமேனியாயிற்று.

இவ்வைந்து திருமந்திரங்களையுமுடைய கர்த்தாவின் செய்கைகளின்னின்னவென கவனிப்போம். முதலாவதான நிவர்த்தி கலைக்கு ஏற்பட்ட

---

*. சப்தகோடி என்றது ஏழுகோடி என்றதனைக்கெண் அல்லவென்றும், எழு மந்திரங்களின் கோடியில் அல்லது கடையில் நின்றமந்திரங்கள் என்றும் எம்மையாண்ட காஞ்சிகேர் ஞானப்பிரகாசமடாலயத்தெழுந்தருளியிரானின்ற ஸ்ரீமகா சந்நிதான செவியறிவுறுத்திற்று. இதற்கு நிதரிசனமாக, மேலே கலைகளுக்குப் பிரிந்த மந்திரங்களின் எண் ஏழேயாகின்றது. [ப-ர்.]

தத்துவம் பிருதுவி, இந்தப் பிருதுவிதத்துவந்தான் வெகுநுட்பமானது. இந்தப் பிருதுவிதத்துவத்திற் செய்யும் காரியங்களைக்கொண்டுதான் மற்றவை ஏற்படவேண்டும், நன்மை செய்யில் நிவர்த்தியிலும் தீமையிழைக்கில் பிரவர்த்தியிலகப்பட்டு உழலவும் கூடிய இரண்டு வழிகளையுடையது இதுவாகும். இதற்கு அதிதேவதையான பிரும்மா சிருஷ்டித்தொழிலைச் செய்கின்றார். அஃதெப்படியெனில்; பதிபசுபாசம் என்பது சித்தாந்திகட்கு சங்கற்பமாகையால், பதியான பரமசிவனுடைய பராசத்தியருளால் குடிலையில் நாதம் தோன்றும், நாதத்தில்விந்து தோன்றும், விந்துவிலே சாதாக்கியம் தோன்றும், சாதாக்கியத்தில் மாகேசுரம் தோன்றும், மாகேசுரத்தில் சுத்தவித்தை தோன்றும். இவை சுத்தமாயையென்று சொல்லப்படும். குடிலையென்பது என்ன, விந்துவென்பதென்னவெனின் சுவயம்பு ஆகமத்தில்.

> ஸ்ரிஷ்டிகாலேதுகுடில: குண்டல்யாகாரைஸ்தித: |
> தன்மத்யேஞானமுத்பந்நம் தத்ரூபம்நாதமுச்யதே ||

என்று சொல்லப்படுகிறது.

அதாவது சிருஷ்டிகாலத்தில் குடிலை (அதாவது பிரணவம்) குண்டலி அல்லது நித்திரையிலிருக்கும் அரவுபோல் வளைவாக உண்டாயிற்று; அதன் மத்தியில் நாதம் உண்டாயிற்று. அதுதான் ஞானமென்பது. இந்தக் குண்டலியே குடிலை. அதுவே பிரணவ சொரூபம். இந்தக் குடிலை அல்லது சுத்தமாயையினிடத்துத்தான் ஆன்மாக்கள் ஒடுக்கம். சுத்தமாயையென்றழைப்பானேனெனில் ஆன்மாக்களுக்கு அவரவர்கள் பக்குவத்துக்கு தக்கபடி ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றுமலங்களுண்டு; இவைகளினின்றும் அதீதமாகையால் சுத்தமாயை என்றழைக்கப்படுவது. இந்த மும்மலங்களில் ஆணவமலமொன்றுமே யுடையாரை விஞ்ஞானகலரென்றும், ஆணவம் கன்மம் இரண்டுமுடையாரை பிரளயாகலரென்றும், ஆணவம், கன்மம், மாயை மூன்றுமுடையாரை சகளரென்றும் சொல்லுவார்கள். இந்த குடிலையிடத்து இப்பசுக்கள் ஒடுக்கமென்றோம். இவ்வான்மாக்கள் பரிணாமவிதியால் ஈசுரனது கிருபாநோக்கம் உண்டாக நிவர்த்திகலைக்குட் படுகின்றன. நிவர்த்தி என்பதற்கு இங்கு பாசநீக்கம் என்று பொருள்தரும். ஆன்மாக்கள் கேவலாவஸ்தையிற்பட்டு பிரக்ஞைபெறவேண்டிய விடம் இதுவே. ஆகையால் இதனை சிருஷ்டி என்பதும். மேலே இந்த தத்துவத்தில் உண்டாகியதைக் கொண்டுதான் மற்றவை என்றதுவும் இதற்கு அடுத்த கலையான பிரதிஷ்டா கலையில்தான் இந்தக்கலையில் தநுகரணபுவன போகங்களைச் சரியான வழியிற் பிடிக்கவேண்டும். இங்குதான் ஆணவமலம் கண்ணுக்குபடலம் போற் காணப்படுவது. மாயையின் வசத்தனாகி அதன் வஞ்சனைக்குட் படுவானாகில் கரையேற வழியில்லை. அதனைத்தவிர்த்து முற்படுவானாகில் ஈசுரகிருபையும் கூடி கண்ணினைமறைக்கும் மாசு விலகத்தலைப்படும், இது தான் ஸ்தூலபிரகிருதியில் ஸ்திதியென்பது. இதற்கு அதிதேவதையாக விருப்பவர் மஹாவிஷ்ணு.



இதற்கு அடுத்தகலை வித்தை. இதுவும் அசுத்தமாயா காரியமாயினும் ஸ்தூலபிரகிருதியினின்றும் சூக்ஷமபிரகிருதியிற் செல்லும். இந்த சூக்ஷமப்பிரகிருதியில் சம்ஹாரம் எனப்பெயர் பெறும். இதற்கு அதிபதியாகவிருப்பவர் ருத்திரமூர்த்தி. ஸ்தூலதேகம் சம்ஹாரம் செய்யப்படுவதொன்றென்பதாயினும் அந்தரார்த்தத்தில் ஆன்மாவுக்கு பந்தசேதனம் ஆகின்றதென்பது தான் சம்ஹாரமெனக் கொள்ளல் வேண்டும். அவனருள் பாலிக்க நாம் எவற்றையும் செய்கிறோம் அடைகிறோமென்று கொள்ளும் வரையில் நமக்கு ஈடேற்றம் கிடையாது. இந்த வித்தியாகலையில் தான் சிவபெருமானது சோதனைகளும் நடப்பது. நமது அறுபத்து மூன்று நாயன்மார்களுள் எத்தனையோபேர் சோதிக்கப்பட்டிருப்பது அறியாத காரியமல்ல இதற்கு பயப்படாதவன் தான் திருவடிநிழலைச் சேரக்கூடியவன். இது தான் தசகாரியத்திற் கூறிய ரூபதெரிசனமும்.

இதற்கு அடுத்தகலை சாந்தி. அதாவது பசு அவஸ்தைப்பட்டு கன்மம் மாயை என்னும் இரண்டுமலங்களையும் விட்டு மூலமலமொன்றுடன் வந்து சாந்தியடையக்கூடியது. இதற்குதிரோபவமெனச்சொல்லுவார்கள் பெரியோர். இது சுத்தவித்தைசாதாக்கியதத்துவங்களில் நிற்கும், இதற்குமகேசுரன் அதிதேவதையாக நிற்பர்.

இதற்கடுத்தபடிதான் சாந்தியதீதகலை. இந்தப்பாதம் தான் அநுக்கிரகம், சர்வேசுரனது திருவடி நீழலையடைவது இதிற்றான். இந்தப்பதம் கிடைப்பது கடந்தஞானிகட்கேயன்றி எடுத்துப்பேசுதற்கும் வகையறியா எம்மைப்போன்றவர்களுக்கன்று. இதற்குமேலும் பதங்கள்மேலே கூறினுமாயினும் அவை இத்தன்மையவென்யாமும் அறியோம். சொல்லக்கேட்டிருப்பினும வியவகரிக்கசக்தியுடையோமல்லோம் இப்படி ஈசன் அநுக்கிரஹிப்பனென்பதை அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் திருக்கோயிலுள்ளிருக்கும் என்னும் திரு விருத்தத்தில் நன்கு விளக்கியுள்ளார்கள். ஆக, இவ்வத்துவாக்கள் இவையென்பதும் இவற்றின் காரியங்கள் இன்னின்னவையென்பதும் எடுத்துக் காட்டினோம். இன்னும் அந்த அத்துவாக்களின் விசேஷத்தை ஆன்மாயறியுங்காலத்தை மத்திய ஜாக்கிர அவஸ்தையென்று சொல்லுவார்கள். இதனையே திருமூலர் தமது திருமந்திரத்தில்.

நாடிய மண்டல மூன்று நலந்தெரிந்து
ஓடு மவரோடு உள்ளிருபத்தைஞ்சும்
கூடுவர் கூடி குறிவழியே சென்று
தேடிய பின்னர் திகைத்திருந்தார்களே.
சாக்கிர சாக்கிர மாதித் தலையாக்கி
ஆக்கிய தூல மளவாக்கி அதீதத்து
தாக்கிய வன்பான் தாண்டவஞ் சார்ந்தது
தேக்கும் சிவமாதல் ஐந்தும் சிவாயமே. என்றார்.

இதனை நன்றாயறிக. அவஸ்தை யென ஒன்று குறிப்பிட்டோம். அஃதென்னவென அறியவேண்டு வதசியமாகும். அவஸ்தைகள், கீழாலவஸ்தையல்லது கேவலாவஸ்தை மேலாலவஸ்தை அல்லது சகலாவஸ்தை, சுத்தாவஸ்தை யென மூன்றாய், மூன்றிற்கும் சாக்கிரம, சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்தவத்தைகளுடன் கூடபதினைந்தாகி காரணவஸ்தை மூன்றும் கூட பதினெட்டவஸ்தைகளாம். இந்த கேவலவஸ்தையிற்றான் ஆன்மா பரிமிப்பது, பிறகு நற்கதியடையும் பொருட்டு சகலாவஸ்தை யென்னும் படியேற இருளினின்றும் கரையேறியவொருவன் வெளிச்சத்தைக் காணினும்முடத் தேனையிறைற் போன்றது. இதற்காகத்தான் சம்சார சாகரத்திற் தள்ளுண்ணப்படுகிறான். இதினின்றும் கரையேறியவன்றான் சுத்தாவஸ்தை யென்றுசொல்லப்படும் நின்மலாவத்தையைப் பிடிக்கிறான். இந்தப்பாதத்திலுள்ள முதற் படியைத்தான் திருமூலர் கூறுவதும். இதன் விரிவை சிவபிரகாசக் கட்டளையிற் காணலாம் இப்பொழுது மேலே கூறிய பின்பா தெற்றெனவிளங்கும்.

முதற்பாவில் கூறிய மண்டல மூன்றும் என்றது அக்நி, ஆதித்திய சந்திரமண்டலங்களை-நிவர்த்தியினின்றும் பிரதிஷ்டா கலைக்குச் சென்றதும் அக்கினிமண்டலமுண்டாகிறது. இது ஆன்மாவின் சூக்ஷும தேகத்தில் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணி பூரகம் என்னும் மூன்றுஸ்தானங்களிலும் வியாபகம். ஆதித்தியமண்டலம் வித்தியாகலைக்கு உரித்தாய் அனாகம் விசுத்தி ஸதானங்களில் வியாபகம், சந்திரமண்டலம் சாந்தியதீத கலைக்குரியதாய் ஆக்ஞைக்குடையது. இம்மூன்றுந்தான் கூறப்பட்டது இதனில் கூறிய கலைகளைப்பற்றிமுன்னர் கூறினோம்.

ஓடும் இருபத்தைந்தும் என்றது ஆத்மதத்துவத்தில் கூடிய இருபத்து நான்கும் மற்றை வித்தியாதத்துவம் சிவதத்துவம் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்தே. இப்படி மண்டலமறிந்து அதன் காரணமான கலையறிந்து பின் அவஸதையின் டாற்பட்டுத்தேறி சத்திநிபாதம் பெறுவர்.

இவ்விதமாக அத்துவாக்களினால் அடையக் கூடிய பிரயோஜனமும் இவை என்பதையும் ஒருவாறு விளக்கினேன். குற்றங்குறைகளிருப்பினும் பெரியோர்கள் க்ஷமிக்கவேண்டுமொறு மற்றுமொருமுறை பிரார்த்திக்கின்றேன். திருவாரூர். சோமசுந்தரதேசிகன்.

## பதிபுண்ணியம்.

ஸ்ரீ சித்சபை பொலியத் திருநடம் புரியும் அற்புதக் கூத்தனடியினை மறவாத அன்பர்காள்! சற்று செவிமடுப்பீர்களாக!

### "சைவம் வேதம் யஜேத்"

"பல்கலையாகம வேதமியாவையினுங் கருத்துப்
பதி பசுபாசந்தெரித்தல் பதிபரமேயது தா
னிலவு மருவுவின்றிக் குணங்குறிகளின்றி
நின்மலமாயேகமாய் நித்தமாகி
யலகிலுயிர்க்குணர்வாகி யசலமாகிய
கண்டிதமாயினந்த உருவாயன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வது தற்சிவம் என்பர் தெளிந்துளோரே."

நிருமலம், பூரணம், நித்தம், ஆதிசூக்குமம், உண்மையறிவானந்தம் என்று கூறும் குணங்கள் சொரூப இலக்கணங்களாகவுடைய பதிப்பொருள் பொதுப் பெயரான் பிரமம் என்றும், ஒரு பொருளுண்டு என்றும், அனேகசித்திகளையும், சிவசாயுச்சியத்தையும், பதிப்பொருளினருளினால் அடைபவர் உளராகலின் அநாதியாய் அநேக உயிர்கள் உளர் என்றும் அப்படிப்பட்ட பல்லுயிர்களுக்கும் முத்தியடைகுதல் உளதாகலின் அவ்வுயிர்களை அநாதியால் மறைத்து நிற்பதொரு பந்தமுண்டென்றும் வீட்டு நெறியாராயும் பலசமயிகளுக்கும் துணிவுண்டாக வேதசிவாகமாதி கலைகளில் கூறப்பட்டுள்ள பதிப்பொருளை சிவம் என்று ஆப்தர்கள் கூறுவார்கள்.

பதிப்பொருள் சிவம்-சிவமென்பது வேதசிவாகமாதிகளாற் பிரதிபாதிக்கப்படும் பரதத்துவப்பொருள். அட்சரத்துவயமாகிய சிவ என்பது ஸ்ரீ பஞ்சாட்சரியின் மத்தியிலிருக்கின்றது. ஸ்ரீ பஞ்சாட்சரமோ ஸ்ரீ ருத்திரத்தின் மத்தியிலிருக்கிறது. ஸ்ரீ ருத்திரமோ ஏழு கண்டங்களோடு கூடிய எஜுர் வேதத்தின் நான்காவது காண்டத்தில் இருக்கிறது. நான்காவது

காண்டம் எஜுர் வேதம் " திரயீ " என்னும் பேருடைய இருக்கு, எஜுர், சாமங்களினிடையிலிருக்கின்றது. சிவ என்னும் பதத்தால் ஸ்ரீ பஞ்சாட்சரம் சிறந்து, அதனால் ஸ்ரீ ருத்திரம் சிறந்து, அதனால் நாலாவது காண்டஞ் சிறந்து, அதனால் ஏழு காண்டங்களோடு கூடிய எஜுர் வேதம் சிறந்து, அதனால் ஏனையதுஞ் சிறந்து, எல்லா வேதங்களும் சத்பிரமாணமென்று வைதிக சைவமகாத்மாக்கள் வந்தித்து வாழ்கின்றார்கள் என்பது திண்ணம். இன்னும், சிவம் என்னும் சொல் ஒரு சமயத்திற்கே பொருத்தமாமென்று சொல்வாரும் உளர். அது பொருந்தாது சிவம் என்னும் பதம் வேதாதி கலைகளில் முழங்கி யிருப்பதை மேலேகாட்டினும். இச்சொல்லையே பிரம்மென பொதுச்சொல்லால் ஏனையோரும் வழங்குவர்.

சமய ஒற்றுமைக்கு யாதொரு இழுக்குமின்று. சமய அரசாக விளங்கும் சைவசித்தாந்தத்தின் கண்ணே சொல்லப்பட்ட முழுமுதற் கடவுளரின் குணங்களைச் சிறிது எடுத்து விசாரிப்போமாயின் அவை எல்லாச் சமயத்தாருக்கும் உடன்பாடாயுள்ளமை தெற்றெனப் புலப்படும். நம்முடைய அநுபவ விஷயங்களிலே காணப்பட்ட பொருள்கள் எல்லாம் பகுத்துப் பார்ப்போமானால் அவைகள் அறிவுடையச் சேதனப் பிரபஞ்சம், அறிவில்லாத அசேதனப் பிரபஞ்சம் என்னும் இரு கூற்றிலடங்கும். அறிவுடைய சேதனப் பிரபஞ்சத்துள், புல் முதல் தேவர் ஈறாகச் சொல்லப்படும் அளவுபடாத சரீரங்களுள் அளவுபடாத எல்லாவுயிர்களுமடங்கும். இவ்வுயிர்களெல்லாம் சிற்றறிவுடையவைகளாயும் ஜெனன, மரண துஸ்தரபீதி முதலிய குற்றங்கள் உடையனவாயும் காணப்படுதலின் பதிப்பொருள் என்று சொல்லப்படும் குற்றமற்ற பொருள் இவ்வுயிர்களுள் ஒன்றாகமாட்டாது என்பதுபசு மரத்தாணிபோல் காட்டப்படும். பஞ்சபூதங்கள் முதலாககமது பஞ்சேந்திரியங்கட்கும் புலனாகாமல் அதிசூட்சமமாய் விளங்காநிற்கும் விந்து நாத தத்துவங்கள் ஈறான எல்லாப் பொருள்களும் அடங்கும். ஆகவே இத்தத்துவங்கள் அறிவில்லாத சடப்பொருளாகையால் இவைகள் தம்மை ஒருவர் அசைவித்தால் அன்றி தாமாகவே அசையமாட்டா. இதனை ஸ்ரீ வாகீசப்பெருமான்.



" ஆட்டுவித்தாலா ரொருவர் ஆடாதாரே
யடக்கு வித்தாலாரொருவரடங் காதாரே
யோட்டு வித்தாலா ரொருவரோ டாதாரே
யுருகுவித்தாலா ரொருவரு ருகாதாரே
பாட்டு வித்தாலா ரொருவர் பாடாதாரே
பணிவித்தாலா ரொருவர் பணியாதாரே
காட்டு வித்தாலா ரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே. "

என்ற அருமைத் திருவாசகத்தால் வெளிப்படுத்தி யருளினார்கள். ஆகவே மேற்போந்த விஷயம் எல்லாச் சமயிகட்கும் பொருத்தமான உடன் பாடேயாம். இனிச் சிற்றறிவுடைய உயிர்களான சேதனப் பிரபஞ்சத்திற்கும் அறிவேயில்லாதசடப் பொருள்களான அசேதனப் பிரபஞ்சத்திற்கும் வேறான சொரூபமும் வியாபகமும் உடைய முழுமுதற் பொருளுக்கே சிவம் என்னும் மங்களப் பெயர் சித்தாந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பதிப்பொருளாகிய சிவத்திற்கு அல்லது பிரமத்திற்கு வேறாயுள்ளவை ஆபரவஸ்துக்கள். அவைகளைப் பசு, பாசமென்று ஆப்தர்கள் கூறுவர். பதி நிர்மலசித்து, பசு மலினசித்து, பாசம் அசித்து. இவற்றுள் அசித்தாகிய பாசங்களைக் பசுவைக்குறித்துச் செய்யும் புண்ணியம் பசு புண்ணியம், பதியைக்குறித்துச்செய்யும் புண்ணியம்பதி புண்ணியம். பதி புண்ணியம், பசு புண்ணியம் என்னும் இரண்டனுள், பதிபுண்ணியம் பெரும் பான்மையும் பசு புண்ணியம் சிறு பான்மையும் செய்யத்தக்கது. திருவாசல் கட்டுதல், குளந்த வெட்டுதல், அன்னசத்திரமமைத்தல், சித்தாந்தகல்விச்சாலைகளைத் தாபித்தல் முதலியது பசுபுண்ணியம். வேதாத்தியயன பாடசாலை திராவிட வேதபாடசாலை, குருபூசை மடம், சிவதீர்த்தங்களைப் புதுப்பித்தல், சிவாலயங்களைப்புதுப்பித்தல், கும்பாபிஷேகம் செய்தல், சிவாலயத்திற்கு அபிஷேகம், நிவேதனம், அர்ச்சனை, திருவிளக்கு, மலர்மாலை, கற்பூரக்கட்டளை, ஆதிசைவர்கட்கு சித்தாந்தக் கல்விகற்பித்து சிவாகமத்தில் சொல்லிய மந்திரம் தெரிவித்து மூர்த்தி சாந்நித்தியம் விளங்கச் செய்தல் முதலியன பதி புண்ணியமாம். பசு

புண்ணியம் செய்யத்தவறின் உய்தல் கூடும், பதி புண்ணியம் செய்யத்தவறின் உய்தியில்லதோர் குற்றம்சாரும். இக்கருத்து பற்றியே ஸ்ரீ திருமூலசுவாமிகள் ‘ ஆற்றரும் நோய்மிகுமவனிமழை குன்றும் போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர் கூற்றுதைத்தான் றிருக்கோயில்களானவை சாற்றிய பூசை கடப்பிடிற்றுனே’, என்று அருளிச்செய்தார்கள். மிகமேன்மையும் சிவசாயுச்சியத்தைத்தானே கொடுக்கக்கூடிய பதி புண்ணியத்தை உண்மையாகச் செய்வோர் செய்யத்தக்க காரியம் ஒன்றுண்டு. ஸ்ரீ சிற்சபேசனை அருச்சிக்கும் புண்ணியமுடைய ஆதிசைவர்களை போஷித்தல் (அன்னபானியங்களையன் ) சித்தாந்த விருத்தி, சிவாகமத்தேர்ச்சி சிவாதீட்சாசமஸ்காரம் முதலிய உத்தமோத்தமமான சிவதருமங்களை பெருகச் செய்வதே. இப்போது இக்காரியங்கள் நடைபெறவில்லையோவெனில் இதற்கு விடையிறுக்க மனமில்லை யானாலும் சிலவற்றை ஈண்டு குறிப்பிக்கின்றும். சிவார்ச்சகர்களுக்கு பூசைமுறையேற் பட்டிருக்கின்றது. அதற்கு அவர்களுக்கு சம்பளம் சொற்பமும், பட்டை சாதமும் ஏற்பட்டிருக்கிறது. அதுவும் சரிவரக்கிடைப்பதில்லை. இவ்வளவு பெரியவருவாயைக் கொண்டு தாங்களும் சீவனஞ்செய்து சிவபூசையும் சரிவரநடத்தவேண்டியது. இது மட்டோ, தங்கள் குழந்தைகளுக்கு, உபநயனம், கலியாணம், சிவபூசைக்குரியாரயபடி கல்விப்பயிற்சி, ஆசாரியா பிஷேகம் முதலிய சமாராட்சணையும் செய்துகொள்ள வேண்டியது. இவர்களுக்கு வேறுபலமான வரும்படியுமுண்டு என்று சொல்வாருமுளர். அதாவது, சிரார்த்த வீடுகளில் கிடைக்கும் வரும்படி. இது எவ்வளவு அழகாய் இருக்கிறது. அன்பர்களே ! இவைகளைநாம் கவனியாமல் சிவார்ச்சகர்களுக்கு வேதம் வராது, சொல்லிவைத்தாலும் வராது, பூசைவிதி தெரியாது, காலத்தில்பூசை செய்வதில்லை, படிப்பும் தெரியாது, படிக்க வைத்தாலும் கோயில்பூசைதவறும்என்று வீணாய் அவர்கள் மேல் குற்றமேற்றவேண்டியிருக்கின்றது. இக்குறைவை நீக்கவேண்டியது அன்பர்களுக்கு முக்கிய கடமையாயிருக்கிறது. இது மிகவும் சுலபமாய் முடியக்கூடியகாரியம். கோடிக்கணக்காய் சிலவுசெய்து கும்பாபிஷேகம் செய்பவர்களும் ஏனைய அன்பினரும் ஸ்ரீ சிற்சபேசன் திருவருளால் ஒன்று சேர்ந்து சித்தாந்த பாடசாலைக்கென்று ஒரு மூலதனம் ஏற்படுத்தி அதில் ஆதி சைவர்கட்கும் சற்சைவர்களுக்கும் அன்ன பானீயங்களைத் தவிர சைவவித்தியாபிவிருத்திக்கான சற்சாஸ்திரங்களைக் கற்பிக்கச்செய்து அபிவிருத்திக்குக் கொண்டு வருவதே பதி புண்ணியமாம். பதி புண்ணியத்திற் சிறப்புற்றது சிவாலயத்திருப்பணி. அதில் சிறந்தது கும்பாபிஷேகம். அதிலுஞ் சிறந்தது நித்தியம், நைமித்தியம். அதனிலும் சிறந்தது ஆதிசைவ பரமாசாரியர்களால் பாடல் பெற்று சீரணமடைந்த சிவாலயங்களைப் புதுப்பித்தல் போல, ஆதிசைவர்களை சிவபூசைக்குரியராகும்படி செய்தல் மிக மேலான பதிபுண்ணியம்.



இதுகாறும் போந்த விஷயங்களால் புண்ணியத்திற் சிறந்தது பதிபுண்ணியமென்றும், அதுவும் பதிப்பொருளை உத்தேசித்தே செய்யத்தக்கன வென்றும் பிறவும் ஒருவாறு விளக்கினும்.

சகலசமயாதீதாத்வைத சுத்தசிவ சன்மார்க்கம் பற்றி வாழும் உத்தம பரிபாகிகட்கேயன்றி, சாமானியருக்கும் இப்பதி புண்ணியம் கைகூடி நற்கதி யடையும்படி ஸ்ரீ சித்சபேசன் திருவருள் புரியும்படி பிரார்த்திக்கின்றேன்.

N. S. வைத்தியலிங்க முதலியார்.

---

600 003

# உயிரின் தன்மை.

(பசு லட்சணம்.)

"க்ஷரம், (அழிபொருள்) அக்ஷரம் (அழிவில்லாப் பொருள்), வியக்தம், அவ்யக்தமாயுள்ள எல்லாவற்றிற்கும் ஈசன் ஆதாரமாயுள்ளான். அநீசனாகிய ஜீவாத்மா பந்தப்பட்டிருக்கிறான், கர்மபலன்களை புசிக்கவேண்டியிருப்பதால். ஆயினும், தேவனையுணர்ந்தவுடன் சகலபாசங்களினின்றும் விடுபடுகிறான்.

"ஞன், (அறிவுள்ளவன் — ஈசன்) அஞ்ஞன் (அறிவில்லாதவன் — அநீசன்) என்ற இருபதார்த்தங்கள் உள. இரண்டும் பிறப்பற்றது. ஒன்று பலமுடையது, இன்னொன்று பலமற்றது. பிறப்பற்றதாகிய (அநாதியாகிய) ஒருவளும் (மாயாசக்தி) இருக்கிறாள். அவள் மூலமாக சீவனும் தன் கர்மபலத்தையடைகிறான். மேலும், முடிவில்லாத ஆத்மாவும் (ஈசன்), பலவற்றினும் தோய்ந்தும தோய்வில்லாமல் உளன்.

"அழிபொருள் பிரதானம். அமிர்தமும் அழிவில்லாததும் அரன். ஒன்றேயாகிய தேவன் பிரதானத்தையும் ஆத்மாவையும் (சீவனையும்) ஆளுகிறான். அவனை தியானிப்பதனாலும், கூடுதலினாலும், அவனுடன் ஒன்றுதலினாலும், முடிவில் எல்லாமயக்கமும் அறுகின்றது.

(சுவேதாஸ்வதர உபநிடதம்-I. 8 10)

"ஒரே மரத்தில், அநீசன், தன் துர்ப்பலத்தால் மயங்கி துன்பத்தில் அமிழ்ந்திக் கிடக்கின்றான். மற்றும் சாந்தனாகிய ஈசனைத் தரிசித்து அவன் மகிமையை யுணரின், அவன் துக்கம் விடுபடுகிறது"

(மாண்டூக்கிய உபநிடதம்-3-1-2.)

உயிரெனப்படுவதிந்த உடலின் வேறதாயுற்றுச்,
செயிருறுமிச்சாஞானச் செய்திகளுடைய தாகிப்,
பயில்வுறு மின்பதுன்பப் பலன்களு நுகருமிட்டார்க்கும்
துயிலொடு மியைந்தவத்தைப் படுமுண்மைதுரியாதீதம்.

(சிவஞானசித்தியார். III. 1)

இறுதியிற் காட்டிய பாட்டின் காணப்படும் ஒவ்வொருபொருளும் சீவலட்சணத்தைப்பற்றி மற்ற மதஸ்தர்கள் கூறும் பூர்வபட்சங்களை மறுத்து சித்தாந்தம் செய்ததுவாகும். எவ்விதமெனில், அவர்களிற் சிலர், ஆத்மா என்ற தனிப்பொருள் இல்லையென்றும், சிலர் உடலையன்றி வேறு உயிர் இல்லையென்றும், சிலர் ஐம்புலன்களையும் சூக்குமதேகத்தையும் பிராணனையும், அந்தக்கரணங்களையும், கடவுளையும், முறையே உயிரென்றும்,



உடல் கூறுகள் எல்லாவற்றையுமே உயிரென்றும் சொல்லுகிறார்கள். உயிர் இவையெல்லாமல்லவாக தனித்த ஒரு முதற் பொருள் என விளக்கியிருக்கிறார்.

"ஐந்துபுலனைம் பூதம் கரணமாதி
அந்தகுண மத்தனையுமல்லை யல்லை
யிந்தவுடல் அறிவு அறியாமையு நீயல்லை
யாய்த்தான்று பற்றினதன் இயல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீயுன்
பக்குவங் கண்டறி விக்கும் பான்மையேயாம்."

என எம்மையுடையாராகிய தாயுமான சுவாமிகளும் அறுதியிட்டிருக்கிறார்கள். உயிர், சீவன், ஆன்மா, ஆத்மா, பசு, க்ஷேத்ரஜ்ஞன், சதசத்து என்பன பிரதிபதங்கள். முன்கூறியதெல்லாம், சத்தாகிய கடவுளிலும், அசத்தாகியமாயையிலு மடங்கும். இவையிரண்டு மல்லாததும், இரண்டையுமறியக்கூடிய நிலையிலிருப்பதுமாக ஆன்மாவுக்கு சதசத்து என்று பேருண்டாயிற்று. பாசத்தளையினாற் கட்டுப்பட்டிருப்பதால் பசு வெனப்பெயர் பெற்றது. இவ்வான்மா தூலம் அல்லது சூக்கும உடலோடு பந்தத்தில் ஒன்றாகவும், மோக்ஷத்தில் இறைவனோடு ஒன்றாகவும் காணப்படுகின்றது. இந்த சம்பந்தத்தையே அத்துவித நிலையெனக் கூறுகின்றார்கள்.

ஊனவத்தோடத்து விதமானபடி மெய்ஞ்ஞானத்
தானுவினோடத்து விதமாகு நாளெந்நாளோ.

(தாயுமானவர் பாடல்.)

இவ்வுயிருக்கு, இச்சை, அறிவு, தொழில்கள் உண்டெனினும், சிவபெருமானின் இச்சா ஞானக்கிரியைகளுக்கு ஒப்பிலாது ஆன்மாக்கள் சிற்றறிவும், சிறுதொழிலும் உடையவையாகி, இறைவனால் அறிவித்தாலன்றி யறியா வியல்புகளாய் நிற்கின்றன. உயிர் வேண்டுதல் வேண்டாமை யுளதாகலின், இன்பதுன்பங்கள் அதற்கு உளதெனக் கூறப்பட்டது. சிலர் கூறுவதுபோல், இவ்வின்பதுன்பங்கள் அத்யாசமன்று. இதனாலும், உயிர், 'வேண்டுதல் வேண்டாமையிலான், 'பற்றற்றான்,' 'மலமிலான்' சஞ்சலமிலான்' எனக்கூறப்படும் இறைவனுடன் வேற்றுமைப் படுவதும் காணலாம்.

உயிரானது அதற்குள்ள கோசங்களினாலும் கட்டுப்படுகின்றது. இக்கட்டுகளும் அத்யாஸமன்று.

இவ்வளவு சொல்லியும், மற்றெங்கும் காணப்படாமல் சித்தாந்தத்தினிடத்தே மட்டும் காணப்படும் உயிரின் முக்கிய இலக்கணம் இன்னொன்று கூறவேண்டும். அதனைக் கூறினாலொழிய, இவ்வாராய்ச்சியின் வழியிற் கிடக்கும் சந்தேகங்களை ஒழிக்கமுடியாது. அது என்னெனின், முதற்கண் காட்டிய தாயுமான சுவாமிகளின் திருவாக்கில் கண்டபடி, உயிரின்

அதுவது வாதற்றன்மையேயாம். இதனையே 'சார்ந்ததன் வண்ணமாதல்,' 'யாதொன்று பற்றின் அதன் இயல்பாய் நிற்றல்' எனவிரித்தோதப்பட்டிருக்கின்றது. அதாவது, உயிரானது எந்தப்பொருளோடு சேர்ந்து இருந்ததோ அந்தச்சமயம், தன்சொரூபம் கெட்டு மற்றையது போலவே நிலைத்தலாம். இதற்கு உதாரணம், கண், ஆகாசம், பளிங்கு அல்லது கண்ணாடி. நமது மாட்சிமை பொருந்திய மகாராஜாவின் படத்தை நாம் எதிரேகாண்கின்றோம். அப்பொழுது வர்ணப்படம் நமது பார்வைக்கு அகப்படுமே தவிர கண்ணாடி அகப்படாது. கண்ணாடி யென்ற ஞானமில்லாத ஒருவன் அங்கே கண்ணாடி யில்லை யென்றேசாதிப்பான். கண்ணாடி இல்லாமற் போகவில்லை. ஆனால் அதுபடத்துடன் மறைந்து அதன் வண்ணமாய் தன்சொரூபம் கெட்டு நிற்கின்றது. சூரியன்முன் வைத்தபொழுதும் கண்ணாடிகாணப்படாமல், சூரியன் ஒளியே பிரதிபலிக்கும். உயிர் உடலோடுபற்றி நின்றகாலத்து, உடலையேதானாகப் பாவித்துநிற்கும். இதுபந்தம். இதுபோலவே இறைவனுடன் ஒன்றாகபாவித்து தன் சொரூபம் கெட்டு நிற்குமாகில், இதுதான் மோக்ஷம். இவ்வுயிரின் துர்ப்பலம் ஒன்றுண்டு. அது அதன் பற்றுக்கோடின்றி நிற்றலாகாமையே. அதாவது உயிரானது உடலையாவது, இறைவனையாவது பற்றிக்கொண்டே நிற்குமேதவிர தனித்து நில்லாது. இதற்கு உதாரணம், நெருப்பு கட்டையையாவது விளக்குத்திரியையாவது பற்றிநிற்குமே தவிர, தனியாகக் காணக்கூடாததுபோல. இவ்வுண்மைகளைக் காணமையினால்தான், புத்தர்முதலிய நாத்திகராவார் உயிரில்லையென்றார்கள். இதனாற்றான் சங்கரர்முதலிய மகான்களும், உயிர்தனித்ததொரு பொருளில்லை யென்றார்கள்.

மேலைநாட்டு தத்துவ பரிசோதகர்களில், புரொபெஸ்ஸர்ஹென்றி டிரம்மண்டு என்னும் பெரியோர் ஒருவர் மட்டுமே, மேற்சுட்டிய உயிரின் அதுஅதுவாதற்றன்மையை விளக்கியுள்ளார். அவர் கூறுவது. 'மானிடர்களெல்லாம் கண்ணாடிகள். உயிர்கள் உய்யவேண்டியோ, அல்லது இழியவேண்டியோ நடைபடும் வழிக்கு இதுமுதல் அஸ்திபாரம். மனிதன் உண்மைக் குணத்தைக் காட்டக்கூடிய உபமானங்களில், கண்ணாடி திருஷ்டாந்தமானது மிகவும் பொருந்தமுடையது.'

இந்தபளிங்கின் திருட்டாந்தத்தை அநுசரித்து பின்வருமாறு வாய்ப்பாடு கூறலாம். "நான் கடவுளைப்பார்க்கின்றேன். என்னில் கடவுள் பிரதிபலிக்கின்றார். நான் கடவுள்போல் (சாரூபம்) ஆகின்றேன். நான் கடவுள் ஆகின்றேன். நானே கடவுள்"

இந்த உயிரின் தன்மைதான் (பிரதிபலித்தலும் ஒன்றாதலும்) நம்முடைய மந்திர தந்திரங்களுக்கும், உபாசனை, சாதனை, யோகம், பாவனைகளுக்கு ஆதாரம். இதனையே மாந்திரிகன் கருடமந்திரபாவனை திருட்டாந்தத்தால் விளக்கியதும். மேலைநாட்டு தத்துவசாஸ்திரிகளும், இவ்வுண்மை சீவதத்வ நிகழ்ச்சியில் விளங்குவதை எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். குதிரைகளோடும், பன்றிகளோடும் என்றும் பழகுகின்றவர்கள் முறையே குதிரை, பன்றிரூபம் அடைகின்றார்கள் என்றும், தலைவனும் தலைவியும் மனமொத்து வாழும்பொழுது இருவர்முகங்களும் முதலில் பேதமாயிருக்கினும் முடிவில் அபேத சொரூபமடைகின்றதென்றும், ஒரு குழந்தை செவிலித்தாயின் சொரூபத்தை அடைகின்றதென்றும் காட்டியிருக்கிறார்கள். ஆகையால் இந்த அது அதுவாதல் தன்மையால், ஒருவன் தாழ்ந்த மிருகப்பிராயத்தில் இழிவதும், உயர்ந்த தெய்வீகப்பதவியிற் சார்வதும் ஆகும்.



இந்தவுண்மைதான் தத்துவமசிமுதலிய மகாவாக்கியங்களிலும் அமைந்தது. நான், கடவுள் என்ற இரண்டு பொருள்கள் ஒன்றாவதைக்குறிக்கவும், இத்தன்மையாலன்றி, இரண்டும் என்றும் ஒன்றாக. ஆகையால்தான் சோகம் சிவோகம் பாவனையிற் சிறக்கவேண்டு மென்றது.

இந்தவுயிர், கடவுளும், அதன் ஆபாசமும் பரிணாமமும் ஆகாது. அது சுயம் பிரகாசமின்றி. துருப்பிடிப்பதால், அதற்கு இச்சைஞானம் தொழில் உண்டாயினும் அவை நிகழ்தற்பொருட்டு, இறைவனுடைய இச்சைமுதலியன நிகழவேண்டும். இறைவனும் உயிரும் வெவ்வேறு நிலையில் (சக்கரத்தில்) உள்ளவர்கள். உயிர் உருவம், அருவம், உருவருவம், ஒன்றுமில்லாதது. சித்தும் அசித்தும் அல்லவாகி, சிதசித் அல்லது சதசத்து எனப்படும். அது அணுவும் விபுவும் அல்ல. அது அருவும், விபுவும் ஆகும், ஆயின், அசித்தைப்போலன்று. அதன் வியாபகத்தன்மையும் சார்ந்ததனோடு ஒன்றாகும் வியாபகமே. அதன்நித்தியஅறிவு, மாயையினாலல்ல; மற்று ஆணவமலத்தினால் தடைபட்டிருக்கின்றது மறைக்கப்பட்டிருக்கின்றது. உயிர் சாக்கிரம் சொப்பனம் முதலிய ஐந்தவத்தைகளிற்படும். அன்னமயம் முதலிய ஐந்து கோசங்களிற்றங்கி அவையாகாமலும் நிற்கும்.

இதுவன்றி, உயிருக்கு கேவலம், சகலம், சுத்தம் என்று மூன்று அவஸ்தைகளும் உண்டு. பஞ்சகிருத்தியம் ஆரம்பமாகுமுன், அறிவிச்சைதொழில் ஒன்றின்றி ஆணவத்தில் அழுந்தி நிற்றல் கேவலம். அக்கிருத்தியம் தொடங்கியபின் தனுகரணங்களைப்பெற்று, புண்ணியபாவங்களைச்செய்து இன்பதுன்பங்களை அநுபவிக்கும் நிலை சகலம். சுத்த அவத்தையில், உயிர் இருவினைப்பொப்பெய்தி, மலபரிபாகம் பெற்று சற்குரு தரிசனமெய்தி சத்திநிபாதமடைந்து, பிறகு நம்சிவத்தின் அளவிலா ஆநந்தத்தில் அழுந்தி என்றும் மீளா இன்பமுறுகின்றது.

மெய்கண்டான் பொன்னடிவாழ்க.

J. M. N.

# சமாச்சாரங்கள்.

சென்ற மேமீ 19உ ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை சூளை செங்கல்வராய நாயகர் தோட்டத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீமாங்கராபாத்ர சிவப்ரகாச சுவாமிகள் திருமுன்பாக, சமாஜத்தின் அத்தியட்சர்களுளொருவராகிய ஸ்ரீமங்-திரு-வி-கலியாணசுந்தர முதலியாரவர்கள் "சமரசம்" என்னும் விஷத்தைப் பற்றி அறிஞர் மதிக்கத்தக்க ஓர் அரிய உபந்நியாஸம் செய்தனர். அன்று கூடிய பெருங்கூட்டத்திற்கு விஜயஞ்செய்திருந்த ஸ்ரீமாந். ஜே-எம்-நல்லசுவாமிபிள்ளை யவர்களும் சைவசமயமானது எவ்வாற்றாற் "சமரசசமயமாகும்" என்பதை வெள்ளிடைமலை யென விளக்கிக் காட்டினர்.

***

1912ளூ ஜூன்மீ 22உ ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு சென்னை வேளாளத் தேனாம்பேட்டையில் ஸ்ரீமங்-J-N இராமநாதப்பிள்ளை யவர்களும், பின்னர் ஸ்ரீமங்-ஸ்ரீநிவாசப்பிள்ளையவர்களும் முறையே "சைவம் சிவாநந்தம் சாயுச்சியம்", "சமயமும் நன்னடக்கையும்" என்னும் விடயங்களைப்பற்றி உபந்நியஸித்தார்கள். முடிவில் சமாஜத்தின் காரியதரிசியார் சமாஜத்தின் நோக்கங்களையும் சைவசமயிகள் இதனை ஒழுங்குபெற நடக்க கடமைப்பட்டிருக்கும் உண்மைகளையும் பற்றிப் பேசினார். இப்பேட்டையிலுள்ள கனவான்கள் சமாஜத்திற்காக மேற்கொள்ளும் முயற்சிகள் மிகவும் பாராட்டத்தக்கவை.

***

ஜூன்மீ 9உ ஞாயிற்றுக்கிழமை காலை7-30மணிக்கு இராயப்பேட்டை ஸ்ரீமங்-திரு-வி-கலியாணசுந்தர முதலியாரவர்கள் சென்னை மீர்சாய்ப்பேட்டை வரசித்தி விநாயகர் கோவிலில் யாவர்க்கும் நற்பயன் விளைக்கத்தக்க ஒரு உபந்நியாசம் செய்தார்கள். அங்கு கூடியிருந்த திரளான சனங்கள் இத்தகைய உறுதிமொழிகளை இடித்துக்கூறி நம் அறிவினை நல்வழியிற் செலுத்த முயல்வோரை இன்றுதாம் 'நம்மூரிற் காணப்பெற்றேம் என்று வியந்தனர். அங்குள்ளார் வேண்டுகோட்படி மறுநாளிரவு காரியதரிசியாரால் 'மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன்" என்னும் விஷயத்தைப்பற்றிய . உபந்நியாஸம், குப்பு முத்துப்பிள்ளையார் கோவிலில் நடைபெற்றது.



1912ளூ ஜூன்மீ 29உ சனிக்கிழமை மாலை 6மணிக்கு சென்னை கிருஷ்ணாம்பேட்டை அம்மன் கோவிலில் காரியதரிசியவர்களால் ஒரு உபந்நியாயம் செய்யப்பட்டது. அதில் இக்சாலத்துள்ள இந்துக்களின் ஆலயங்களுட்பல தமது பழைய உன்னத நிலைமை இழந்து விட்டனவென்றும், அதற்கு முதன்மையான காரணங்கள் தருமகர்த்தர்களுட்பலர்க்குக் கல்வி கேள்வியும் சமயப்பற்றும் இல்லாமையும், பழையகாலத்திலிருந்த தேவடியாள்களுக்குப் பதிலாக வேசைகளை ஆலய அமைப்புகளில் ஒன்றாக வைத்திருத்தலும், பொது ஜனங்களுக்குச் சமய உணர்ச்சிபோதுமான அளவு இல்லாமையுமாகிய இவைகளே என் ம் தெளிவாக உண்மைகள் கேட்போர் மனதிற்பதியும்படி விளக்கப்பட்டன.

***

1912ளூ ஜூன்மீ 30உஞாயிற்றுக்கிழமை பிருங்கிமலையை அடுத்த ஆலந்தூரிலுள்ள சிவனடியார் திருக்கூட்டத்தின் இரண்டாவது வருடோற்சவம் வெகு சிறப்பாய் நடந்தேறியது. காலையில் சமயாசாரிய மூர்த்திகட்கு உற்சவம் நடந்தது. சென்னை, சைதாப்பேட்டை, குன்றத்தூர் முதலிய விடங்களிலிருந்து வந்திருந்த பல சைவசபையினர்கள் தேவாராதி திருமுறைகளை இன்னிசைக்கருவிகளோடு ஓதிக்கொண்டு சமயகுரவர்கள் பின்னர் ஊர்வலம் வந்தனர். அன்று ஆலந்தூர் முழுவதும் மிகப்பொலிவொடு விளங்கிற்று. மாகேசுர பூஜைக்காலத்து அச்சபைத்தாபகராகிய ஸ்ரீபால சுவாமிகள், சிவனடியாரென்று விஜயஞ்செய்திருந்த யாவரையும் சிவமெனவேபாவித்து வழிபாடுசெய்தனர். அப்பெரியாரது செய்கை, "ஞானயோகக்கிரியை சரியைநாலு நாதன்றன்பணி ஞானிநாலினுக்கு முரியன்" என்னுந்திருவாக்கை நினைப்பூட்டியது. அன்றைப்பிற்பகல் இராயப்பேட்டை ஸ்ரீமங்-திரு-வி-கலியாணசுந்தரமுதலியாரவர்கள் "அத்துவிதம்" என்னும் விஷயமாகப்பிரசங்கித்தார்கள். தமது உபந்நியாச முடிவில் வைதிகசமயிகள் ஒருவரோடொருவர் பகைபாராட்டுவது மிகவும் வெறுக்கத்தக்க தென்றும், ஒவ்வொரு சமயிகளும் தத்தம் மதத்தில் சொல்லியபடி நடக்கமு

யலுதல், தம்மதத்தைப் பிறரொடு வாதஞ்செய்து நிறுத்த விரும்புதலைப்பார்க்கிலும் அத்தியாவசியமான தென்றும் சொன்னார்கள். பிறகு ஸ்ரீமந்-S. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் சகளோபாசனை என்னும் விஷயமாக உபந்நியசித்தனர். நமது முன்னோர் உள்ளக் கிடக்கையின்படி சகளோபாஸனை செய்தல் இன்றியமையாத தென்றும், அகத்தூய்மை யில்லார்க்குச் சகளோபாஸனைக்குச் சாத்தியமாகாதென்றும் இவ்வுபாஸனைக்குப் பெருஞ்சாதனங்களாயுள்ள ஆலயமாதியவற்றைப் பரிசுத்தத்திற்கு உறைவிடமாக்க முயலவேண்டுவது யாவரையும் பொறுத்தகடனென்றும் வற்புறுத்திப்பேசினார்.

***

காஞ்சிபுராணம்:—இப்பெயர் கொண்டபுத்தகம் புராணங்களுள் இலக்கண இலக்கிய வமைதியுடன், கற்பனைக் கிருப்பிடமாய், சித்தாந்த நயங்கள் ஏராளமாக விளங்குவதாய், சிறந்தவித்வசிகாமணிகள் யாவரும் கொண்டாடுவதாயிருப்பது. இது ஞான இராஜதானியாய் விளங்கும் திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்தில் சித்தாந்தபாநுவாய் விளங்கியிருந்தமாதவச்சிவஞான முனிவரால் முதற்பாகமும், இவர் மாணாக்கருட் சிறந்த கவிச்சக்ரவர்த்தியாகிய கச்சியப்பமுனிவரால் இரண்டாவது பாகமுமாக இயற்றப்பட்டது. இதனை ஷையாதீனத்தில் கருணையே வோருருவாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ. அம்பலவாணதேசிக சுவாமிகள் கட்டளையின்படி, மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான் வண்ணக்களஞ்சியம் காஞ்சி நாகலிங்கமுதலியாரவர்களால் பிழையறப்பார்வையிடப்பட்டு, அத்தலமகிமையை நன்குவிளக்கும் முகவுரையுடன், நூலாசிரியர்கள் வரலாறும், அத்தலத்தேவாரம் பதினொன்கும், திருவாசகப்பதிகம் நான்கும், பட்டினத்துச் சுவாமிகள் திருவேகம்பர் திருவந்தாதியும், திருக்கச்சித் திருவகவலும், திருவேகம்பமாலையும், திருப்புகழ்நாற்பத்தைந்துஞ் சேர்த்துத்தர, சென்னைப் பெரியமெட்டு ஆதிமூலஞ்செட்டியாரவர்களால் உயர்ந்த கடிதத்தில் ராயல்சைஸில் வெகுநேர்த்தியாக அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலைரூபா இரண்டரை-வேண்டுவார் சென்னை அண்ணாப்பிள்ளைவீதி-73-வது எண்ணுள்ள வீட்டில் ஷை முதலியாரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்,



கொழும்பு விவேகானந்த சபையினது பத்தாவது வருடோற்சவம் இவ்வருடம் ஜூலைமீ 28ம்தேதி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வருடாந்தப் பத்திரிகை யொன்றெமது கைக்கெட்டியது. ஆங்கிலத்திலும் தமிழிலும் பல பிரசங்கங்கள் செய்யப்பட்டனவென்றும், திருவாதவூரர் புராணமும், திருத்தொண்டர் புராணமும் சபையாரால் ஆழ்ந்து ஓதப்பட்டனவென்றும் அறிந்து மிகமகிழ்கின்றோம். சபைக்குச் சொந்தமாக ஒரு மண்டபமில்லாக் குறையு விரைவில் நீங்கவும், அங்கத்தவர்கள் சபையினிடத்து உண்மையான பற்றுவைத்து உழைத்து உலகத்திற்கு நன்மை விளைவிக்கவும் இறைவன் திருவருள் உதவிபுரிவதாக. சுபம்.

***

சமாஜத்தின்சார்பாக 1912ம்௵ ஆகஸ்டு௴ 3௳ மாலை A. G. M. ஸ்கூலில் ஸ்ரீமாந்-திரு-வி-கலியாணசுந்தரமுதலியாரவர்களால் "நானும் கடவுளும்" என்னும் விடயத்தைப்பற்றி ஒரு உபந்நியாஸம் செய்யப்பட்டது. இரவதனசனங்கள் விஜயஞ்செய்திருந்தனர். உபந்நியாஸகர் தமது கருத்துக்கள் கேட்போர் யாவர்க்கும் இனிது விளங்கும் நோக்கத்தோடு ஒருகதைரூபமாக விஷயத்தைப் பேசிமுடித்தனர். உண்மையை அறிய விருப்பங்கொண்டவனும் கருவிநூல்களை முன்னமே போதியவளவு கற்றவனுமாகிய மாணவனொருவன், சித்தாந்த போதகாசிரியரிடத்து ஞானநூல் பயின்று வருங்கால், ஒரு "வேதாந்த" போதகாசிரியர் நட்புப்பெற்று, இருதிறத்தாரது போதனைகளையும் ஆட்சேபசமாதானங்களையும் பொறுமையோடு கேட்டுச் சிந்தித்துத் தெளிவடைந்து கடவுள், ஆன்மா, மாயை (matter) ஆகிய இம்மூன்றும் ஒருவகைக்கலப்புடையவாயினும் இயல்பில் ஒன்றற்கொன்று வேறுபாடுள்ள உண்மைப்பொருள்களாமெனவும், ஆணவத்தோடு அத்துவிதமாகக் கலந்துள்ள ஆன்மா திருவருளின் துணையாலும் தனது முயற்சியாலும் இறைவனோடு அத்துவிதமாயிருத்தலே மெய்யான வீட்டுப்பேறு எனவும் கடைப்பிடித்தனன் என்பது அக்கதையின் சாரம். மிகவும் இனிய எளிய செந்தமிழில் கருத்துக்கள் ஒழுங்குபட வெளிப்படுத்தப் பட்டமையால் கேட்போர் யாவரது உள்ளத்தையும் உபந்நியாஸகர் கவர்ந்துகொண்டனர். இதனிடையே கொடுஞ் சொற்களொன்றும் பிரயோகிக்கப்படவில்லை. வந்திருந்தவர்களில் சிலர் மிஞ்சிட்டமாகிய சில விஷயங்களைச் சொல்லினர்.

# திருக்குறள் மாட்சி.

பெறுதற்கரிய மானுடப் பிறவியெய்திய ஆன்மாக்களுடைய வேண்டியதும் அடையக் கூடியதுமான பயன் அறம், பொருள், இன்பம், வீடு என நான்காம். இதுபற்றியே இந்நான்கினையும் புருடார்த்தமெனக் கூறுப. ஆன்மாக்கள் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடையராதலின் இயற்கையால் பெறும் வண்ணம் வேதாகமங்களை இறைவன் அருளிச்செய்தனன். அவையும் பரந்து விரிந்து கிடப்பதால், அவற்றை யாராய்ந்தறிய இயலாதவர்களுமுய்ய வெண்ணி அவ்வேதாகமப் பொருள்களின் சாரங்களைத் திரட்டிச் சில பெரியோர் நூல்களாக்கித் தந்தனர். அந்நூல்களும் அறம் ஒன்றே கூறுவனவும், பொருளொன்றே கூறுவனவும், இன்பம் ஒன்றே கூறுவனவும், வீடு ஒன்றே கூறுவனவும் இவற்றுள் இரண்டு அல்லது மூன்றுபயன் கூறுகின்றனவுமாக இருந்தமையான் நான்கு பயனும் சுருங்கிய ஒரு நூல்வழியாக எல்லா ஆன்மாக்களும் பெறவெண்ணி அமிழ்தினுமினிய தமிழ்மொழியில் முதற்பாவென்னுங் குறட்பாவில், தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் ஒரு நூலருளிச் செய்தனர். இதனை

இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநூன்—மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

என்னும் நரிவெரூஉத்தலையார் சாற்றுக்கவியாலறிக. இங்ஙனம் நான்கு பயனையும் ஒருசேரத் தொகுத்துதவிய வள்ளற்றன்மையென்னுங் காரணத்தால் இந்நூலாசிரியர் வள்ளுவரெனப் பெயர் பெற்றனர்.

இப்பெயர்ச்சொல்லில் வள் பகுதி, அர் விகுதி, உ சாரியை, அப்பகுதிக்குப் பொருள் கொடை. இவ்வாறன்றி வள்ளுவர் என்பது ஓர் சாதிப்பெயராகக் கொள்ளக் கூடாதென்பதை.



அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

என்னும் மாமூலனார் சாற்றுக்கவியாலறிக.

இந்நூற்குப்பாவின் பெயரே பெயராய்த் திருக்குறளென வழங்கிவருகின்றது. இப்பெயரை நோக்குங்கால், இந்நூல் வெளிவருவதற்கு முன்னர், குறட்பாவில் நூலில்லையென்று ஊகிக்க இடந்தருகின்றது. இந்நூலாசிரியர் காலம் கடைச்சங்க காலமென்பது சாற்றுக்கவி சொன்ன புலவர்களால் அறியத்தக்கது. அச்சங்கப் புலவருள் சீத்தலைச் சாத்தனாரென்பா ரொருவர். இவர் சங்கத்தில் அரங்கேற்றுவதற்தாக வரும் நூல்களிலுண்டாங் குற்றத்தைப் பொறாதவராய் ஆயுதத்தால் சிரசில் குத்திக் குத்தி சீவைக்கப்பெற்ற காரணத்தால் இப்பெயர் பெற்றவர். திருக்குறளென்னு மிந்நூல் அரங்கேற்றுங்கால் ஒரு குற்றமுங் காணாதவராய் பெருமகிழ்வெய்தி இவர் தலைக்குத்து நீங்கினாரென்பதை.

சீந்திநீர்க் கண்டந் தெறிசுக்கு தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—சாந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாத்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

என அப்புலவரு ளொருவராகிய மருத்துவன்றாமோதரனார் கூறிய சாற்றுக்கவியா லறியத்தகும்.

இச்செய்யுளில் இந்நூல் முப்பாலென்று கூறியிருக்கவும் உரையாசிரியர் பரிமேலழகரும் "வீடென்பது சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாதலின் நூல்களாற் கூறப்படுவன வேனை மூன்றுமேயா" மெனக் கூறியிருக்கவும், நாற்பாலுங்கூறுவதிந் நூலென முன்னர்க் கூறியது முரணாதோ வெனின், முரணாது; என்னை? அறம் தொகையாலொன்றாயினும் இல்லறம், துறவறமென, வகையாலிரண்டாய், அத்துறவறமும், விரதம் ஞானமென விரண்டாய், ஞானம் வீடு பயத்தற்குச் சிறந்ததாய் நிற்றலினென்க. இதுபற்றியே பரிமேலழகர், வீடு துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற்

கூறப்படாமையின், என்று கூறினார். இம்மொழியால் துறவறங் கூறப்பட்டது கொண்டே வீடு கூறப்பட்டதென நன்குபுலனாம். இக்கருத்தை துறவறத்து ஞானவியல் அவாவறுத்தலென்னுமதிகாரத்தில்,

ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

என்ற பாட்டில், இதனால் வீடாவது இதுவென்பதூஉம். அஃது அவாவறுத்தார்க்கு அப்பொழுதே உளதாமென்பதூஉங் கூறப்பட்டன, எனக்கூறிய உரையும் வலியுறுத்தும். இங்ஙனம் வலியுறுத்தியதை யுற்றுநோக்காது முன்னர் வீடு கூறமுடியாதென்று கூறி, பின்னர் வீடு இதுவென முன்னொடு பின்முரண்படக் கூறினரெனக் கூறுதல் பொருந்தாது.

இங்ஙனம் நாற்பாலும் இந்நூலிலடங்கியுள்ளன வென்பதை முன்னர்க்கூறிய மாமூலனார் செய்யுளாலும்,

அறமுத னான்கு மகலிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பான்முறைநே ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.

என்னுங் கோவூர்கிழார் செய்யுளானும் அறிக:

முப்பாலில் நாற்பாலடங்கு மென்பதை
தப்பா முதற்பாவாற் றமாண்ட பாடலினான்
முப்பாலி னாற்பான் மொழிந்தவ—ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

என்னுங் கீரந்தையார் செய்யுளாலறிக.

நான்கு பயனுங் கூறிய இத்திருக்குறள் 133 அதிகாரங்களையுடையது அவற்றுள் முதனான்கதிகாரம் பாயிரம். அடுத்து முறையே யிருபததிகாரம் இல்லறம். துறவறம் பதின்மூன்றதிகாரம். ஊழ் ஒரு அதிகாரம். பொருள்எழுபததிகாரம். இன்பம் இருபத்தைந்ததிகாரம். இனி இவ்வாறு வகுத்தருளிய முறைமையைப்பற்றி ஆராய்வாம். நூலியற்றுவோர் எடுத்துக் கொண்ட நூல் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டு கடவுள் வாழ்த்துடன், யாவருக்கும் மனவெழுச்சி சேறற்பொரு



ட்டுப் பயன், சம்பந்தம், அதிகாரி, முதலிய பொருளாகிய நான்கும் பாயிரமாக முதற்கட் கூறுவதியல்பாதலின் அவ்வாறே ஆசிரியர் திருவள்ளுவரும் கடவுள் வாழ்த்து என்னும் முதலதிகாரத்தில், முதற்பாட்டால் கடவுள் வாழ்த்தும், ஏனைய ஒன்பது பாட்டால் பயனும், இரண்டாவது வான்சிறப்பு என்னும் அதிகாரத்தால் சம்பந்தமும், மூன்றாவது நீத்தார் என்னுமதிகாரத்தால் அதிகாரியும், நான்காவது அறன்வலியுறுத்தலென்னுமதிகாரத்தால் முதலிய பொருளும், பாயிரமாகக் கூறினர்.

பயன்முதலிய நான்கினையும் அநுபந்த சதுட்டயமென்று வடநூலார் கூறுவர். தமிழ் இலக்கணநூலில் இந்நான்கினையுஞ் சிறப்புப்பாயிரத்துளடக்கி நூலாசிரியர் சொல்லக் கூடாதென்று வரையறை செய்திருக்கவும், அதற்குமாறாக நூலாசிரியர்தாமே கூறினாரென்றல் பொருந்துமோவெனின், பொருந்தும். என்னை? சிவஞானசித்தியார் என்னுஞ் சித்தாந்தநூலில் பாயிரத்தில் "பண்டைநற்றவத்தாற்றோன்றி" என்னும் செய்யுளாலும் "என்னையிப்பவத்திற்சேரா" என்னும் செய்யுளாலும், கைவல்ய மென்னும் வேதாந்தநூலில் "படர்ந்த வேதாந்த" மென்னும் செய்யுளாலும் இந்நான்கினையுங் கூறியிருத்தலானறிக. அந்நூல்களிற் கூறியது தானும் இலக்கணத்திற்கு முரணாகாதோவெனின், ஆகாது. என்னை? இலக்கணநூலிற் கூடாதென்றது தன்னைப் புகழ்தல் கூடாதென்றதொன்றே கருதியல்லது வேறன்று. இந்நான்கும் தன்னைப் புகழ்தற்கியையின்றாதலானும், ஆக்கியோன் பெயரே அதற்கியைபுடைத் தாதலானுமென்க. இனி முதற்பாவாற் கூறிய கடவுள்வாழ்த்து, வாழ்த்து, வணக்கம், பொருளியல்புரைத்த லென்னும் மூவகை வாழ்த்துள் பொருளியல்புரைத்தலாம். கடவுள்வாழ்த்துக் கூறியபின்னர், இந்நூலானாம் பயன் கூறுவான்றொடங்கி, இறைவன் திருவடியடைதலும் பிறவித்துன்பம் நீங்கலும் ஆகிய இரண்டு பயனையும் ஒன்பது பாட்டால் கூறினார், இவ்வொன்பது பாட்டானும் பயன் கூறினாரென்பது "கற்றதனாலாயபயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்" என்ற இரண்டாவது பாட்டினை யினிது விளங்கும்.

இனி, இரண்டாவது வான்சிறப்பு என்னும் அதிகாரத்தா லிந்நூற்குச் சம்பந்தங்கூறினர். சம்பந்தமாவது நூற்கு மதி காரிக்குமுரிய சம்பந்தமெனவும், விடயத்திற்கும் நூற்குமுரிய சம்பந்தமெனவும் பலவகைப்படும். அவற்றுள் ஈண்டுக்கூறிய சம்பந்தம் விடயத்திற்கும் நூற்குமுரிய சம்பந்தமாம். விடய மாவது இல்லறந் துறவறம் என விரண்டாம், அவ்விரண்டும் மழையின்றி நடவாமையின் அவற்றிற்கு மழைசம்பந்தம் ஆத லினால் நூலுக்குமதுவே சம்பந்தமாயிற்று. இதனை "தானந்தவ மிரண்டுந் தங்கா வியனுலகம் வானம் வழங்கா தெனின்" என் னும் ஒன்பதாவது பாட்டால் தெளிக.

இனி இந்நூற்கு அதிகாரி கூறுவான் றொடங்கி "நீத்தார் பெருமை" யென்னும் மூன்றுவது அதிகாரம் கூறினர். நீத்தா ரென்பது துறவறத்திற் கதிகாரியாகிய முற்றத்துறந்த முனிவ ரையும், இல்லறத்திற் கதிகாரியாகிய தமக்குரிய பொருளின்பங்க ளையே யன்றி, பிறபொரு ளின்பங்களைப் பற்றுத கிருகஸ்தரை யுங் குறிக்கும். இவ்வதிகாரம் கிருகஸ்தரையுங் குறிக்குமென் பதை, "ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா னிந்திர னே சாலுங் கரி" என்னும் 5 வது பாட்டில் அகலிகையோடு கூடிய கௌதமரிஷியை "ஐந்தவித்தா" னாற்றலுக்கு எடுத்துக் காட்டினமையால் இனிது தெளிக, இனி நான்காவது அறன்வ லியுறுத்தல் என்னும் அதிகாரத்தால் இந்நூலிற் கூறப்படும் பொருள் கூறுவான்றொடங்கி அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் அறத்துளடக்கி அறமே விடயமெனக் கூறினர். பொருள், இன்பம், வீடு அறத்துள் அடங்குமென்ப தை, பொருட்பால் கூறுமிடத்து அறமே கூறுதலானும், இன்பத்துப்பால் கூறுமிடத்தும், தருமவழியால் தனக்குரிய மனைவி யின்பமே, இன்பமெனக் கூறுதலானும், வீடு "அன்று வின் கீழிருந்தங் கறஞ்சொன் னனை" என்ற முதுமொழியால் அறமேயாதலினாலும், அறத்துளடக்கிக் கூறினர். அன்றியும் வீடு துறவறமென்னுங் காரணவகையாற் பெறப்படுவதென்று முன்னர்க் கூறியவாற்றானும், அறத்துளடங்கு மென்பது தெளிக.



இவ்வாறு பாயிரஞ் சொல்லிமுடித்து ஆன்மாக்களுக்குரிய னவாகிய இந்திரியம், மனம், அறிவு என்னும் மூன்றுகருவி களின் தொழிற்பாட்டில், முன்னர் நிகழ்வது இந்திரியத்தொழி லாதலின் அதனை நீத்தவர்க்கே மனத்தொழிலால் யோகமுய ற்சி செய்யவும், அது முற்றுப் பெற்றவர்க்கே அறிவுத்தொழி லால் ஞானமுயற்சி செய்யவுங் கூடுமாதலின் முன்னர் இந்திரிய ங்களின் விருத்தி குறைவதற்குரிய இல்லறவியல் கூறினர். இவ் வியல் இருபது அதிகாரங்களையுடையது. இவ்வதிகாரங்களால் இரண்டும் செய்தலும், விலக்கியன செய்யா தொழிதலும் ஆகிய விதனதித் ஒருசேர நியமிக்கப்பட்டுள்ளன.

இனி இல்லறத்தை இனிது நடாத்தி இந்திரியப்பற்றாகிய எனதென்னும் புறப்பற்றுக்கள் நீங்கின ஆன்மா யானென்னும் அகப்பற்று நீங்கவேண்டுவது முறைமையாதலின், இதனடுத்து துறவறவியல் கூறினர். இவ்வியலில் யான் என்னும் சொல்லு க்குப் பொருளாக தேகத்தையே கொண்டிருந்த ஆன்மா, அத் தேகத்தினிடத்துப் பற்றொழிந்தபோது ஞானத்திற் பிரவிர் த்திக்கக் கூடுமாதலின் தேகப்பற்றொழிதற்குத் துணையாக விர தமென்றும், உண்மை உணர்வதற்கு துணையாக ஞானமென்று ம்பகுத்து முன்னர் விரதத்தைக் கூறினர். ஒன்பது அதி காரங்களால் விரதங்கூறி, இவ்வதிகார ஆராய்ச்சியால் தேகப் பற்று நீங்கிய ஆன்மா ஞானத்தை அடையும் முறைமையில் அந்நெறி மனோநாசம், தத்துவஞானம், வாசனக்ஷயம் என் னும் மூன்று பிரிவுடையதாயிருப்பதை நான்கு அதிகாரங்களால் விளக்கினர். அவற்றுள் நிலையாமை, துறவு என்னும் இரண்டு அதிகாரங்களும் மனோநாசமாம். மனோநாசமென்பது மன, நா சம் என்னும் இருமொழிகள் சேர்ந்த ஒருதொடர்மொழி. மன மாவது அது, இது என்னும் சங்கற்ப விகற்பங்களை யுடையது. அவற்றை நீத்தலே நாசம். நீத்தற்குபாயம். அது இது வென் றுகாணப்படும் நிலையாமையை உணர்தலும், உணர்ந்தவாறே அப்பொருள்களைப்பற்று தொழிதலுமே யாதலின் நிலையாமை துறவு, என்னும் இரண்டு அதிகாரங்களும் மனோநாசமாயின. இங்ஙனம் மனோநாசம் சித்திப்பது அறிவுத்தொழிலாகிய தத்

துவஞானத்தாலன்றி முடியாமையின் மூன்றாவது மெய்யுணர்தலென்னு மதிகாரத்தை வைத்தனர்.

தத்துவஞானமென்பது உண்மையறிதல் என்னும் பொருள்படும். அவ்வறிதல் நல்லாசிரியனையடுத்து ஞானநூல்களைக் கேட்டு, சிந்தித்து, தெளிந்து, நிட்டை கூடினார்க்கே உண்டாவதாம். இவ்வதிகாரத்தில் "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டு வாரா நெறி" என்னும் பாடல் ஆசிரியனிடத்து உபதேசங் கேட்டலையும் "ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப், பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" என்னும் பாட்டால் சிந்தித்தலையும், "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு" என்னும் பாட்டால் தெளிதலையும், தெளிதற்கும், நிட்டைக்கும் இடையீடின்மையின் நிட்டையும் இப்பாட்டிலேயே "காண்பது" என்னும் சொல்லால் அமைத்தும் கூறினர்.

(இன்னும் வரும்.)

---

பிழைதிருத்தம். வரி. பிழை.

சித்தாந்தம் 152-வது பக்கம் 12-13 "கடவுடசிவ என்றும்"

திருத்தம். "கடன்தன் [illegible]"

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௪.] 1912-ளு செப்டெம்பர், அக்டோபர்மீ [பகுதி ௯, ௧0.

## சதுர்த்தம்.

வேதத்தின் ஞானகாண்டங்களாகிய மாண்டூக்யோபநிஷத்தில் "ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே" எனவும், நிருஸிம்மபூர்வதாபிந்யுபநிஷத்தில் "ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே" எனவும், நாரத பரிவ்ராஜகோபநிஷத்தில்" ப்ரபஞ்சோபசமம் சிவம்சாந்தமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே" எனவும், ராமோத்தரதாபிநீயோபநிஷத்தில் "ப்ரத்யயஸாரம் ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே" எனவும், பஸ்மஜாபாலோபநிஷத்தில் "அத்வைதம் சதுர்த்தம் ப்ரம்ம விஷ்ணுருத்ராதி தமோ மாசாஸ்யம் பகவந்தக் சிவம்" எனவும், வரும் வசனங்களில் நான்காவது தெய்வத்தை விளக்கு நிமித்தம் "சதுர்த்தம்" எனும் வாக்கியத்தோடு வெளிப்பட்டு விளங்குகின்றது. அன்றியும்! திரிபுராதாபிந்யுபநிஷத்தில் "சதாசிவோக்ஷரம்" எனலால், அட்சரமாவார் சிவம்என வேறுபட்டு, பரப்ரம்மோபநிஷத்தில் "ஜாகரி தேப்ரம்மா ஸ்வப்நே விஷ்ணுஸ் ஸுஷுப்தௌருத்ரஸ் துரீயமட்சரம்" என்றதனால் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி யெனும் அவஸ்தா த்ரயங்களுக்குரிய பிரமன் விஷ்ணு ருத்ரன் என்னும் மூவர்க்கு மேலான் துரீயம் (சதுர்த்தம்) சிவமெனவும், நிருஸிம்மோத்தர தாபிந்யுபநிஷத்தில் "அகாரம் ப்ரஹ்மாணம்" "உகாரம்விஷ்ணும்" "மகாரம்ருத்ரம்" "ஓங்காரம் (சதுர்த்தம்) ஸர்வேச்வரம்" என்றதனாலும், அதர்வசிகோபநிஷத்தில் "ப்ரம்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தே ஸர்வாணி சேந்த்ரியாணி ஸஹபூதைர் நகாரணம் காரணாநாம்த்யாதா காரணத்துத்யேய ஸ்ஸர்வைச்வர்ய ஸம்பந்நஸ் ஸர்வேச்வரச் (சதுர்த்தம்) சம்புராகாசமத்யே" எனவும் வரும் வட

மொழி வேதங்களிலும்; திருக்கடைக்காப்பில் "ஒருருவாயினை ..........படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை" எனவும், தேவாரத்தில் "ஆதியும் மரனுயயன் மாலுமாய்ப், பாதி பெண்ணுருவாயபரமன்" எனவும், திருப்பாட்டில் "மூவராயுமிருவராயு முதல்வனாவனேயாம்" எனவும், திருவாசகத்தில் "மூவர்கோனாய் நின்ற முதல்வன்" "மூவரும் முப்பத்து மூவருமற்றொழிந்த தேவருங்காணாச் சிவபெருமான்" "மூவராலுமறியொணா முதலாயவானந்த மூர்த்தியான்" "மூவரறியாச் சிந்துரச்சேவடியானை" எனவும் வரும் தமிழ்வேதங்களிலும் திரிமூர்த்திகட்கும் மேலாய நான்காவது (சதுர்த்தம்) தெய்வம் சிவமெனமுடிவு காண்க.

மாண்டூக்யோபநிஷத்தில் ஸ்ரீ இராமாநுஜர் என்பவர் அதனிலுள்ள சிவமென்பதற்கு மங்களஸ்வரூபமென்றும், சதுர்த்தமென்பதற்குச் சங்கர்ஷண பிரத்யும்ந அநிருத்தரெனும் மூவர்க்கும் லயஸ்தானமான வாசுதேவனென்றும் பொருள் கொண்டமை பொருத்தமோ எனின், மேற்காட்டிய உபநிடதங்களிலுள்ள வசனங்கடோறு மிருக்குந் தெய்வப்பெயர் "சிவம்" என்றேயிருத்தலினாலும், மேலுதகரித்த அதர்வசிகோபநிஷத்வசனத்தில் பிரமன் விண்டு ருத்திரன் இந்திரனாகிய இவரெல்லாம் படைக்கப்படுகின்றனர். இந்திரியங்களெல்லாம் பூதங்களோடு பிறப்பிக்கப்படுகின்றன. ஆகலின் அவர்களும் அவைகளும் காரணமில்லை. தியாதாவாகிய அவர்களாலே தியானிக்கப்படும் தியேயனெனும் சருவைசுவரிய சம்பன்னனும், சருவேசுவரனும், சம்புசத்தவாச்சியனும், பரமாகாச மத்தியத்தி லிருப்பவனுமான சிவனே காரணன் எனப் பிரகாசித்தலினாலும் ஸ்ரீ இராமாநுஜர் என்பவர் கொள்கை மறுக்கப்பட்டதென்க. அன்றியும் நாலாயிர பிரபந்தத்தில், "மூவரிலெங்கண் மூர்த்தியிவனென முனிவரோடு தேவர் வந்திறைஞ்சுமாற் கூர்த்திருமணிக் கூடத்தானை" "மூவரிலொருவராய வொருவனையுலகங் கொண்ட கோவினை" எனத் திருமங்கை மன்னரும், "முதலாவார் மூவரேயம் மூவருள்ளு முதலாவான் மூரிநீர்வண்ணன்" எனப் பொய்கையாரும் கூறியிருத்தலின் ஆழ்வார்களும் அவ்வவ விண்டு சதுர்த்தமல்லனென ஒப்பியவாறாயிற்று. இவை முதலிய காரணங்களால் சிவமே சதுர்த்தமென்பது வச்சிரலேபமாம். சுபம்.

மணவழகு.

# சைவ சமயத்தைக் குறித்த ஒரு சம்பாஷணை.

---

சென்னை மாநகரில் திருமயிலையில் உள்ள ஒரு தெருவில் சிவஞானம், சுந்தரம் என்னும் இரண்டு சிறுவர்கள் சிலகாலத்திற்கு முன்பு வசித்து வந்தனர். அவர்களிருவரும் ஒரே வயதினர். சைவ சமயத்தைப் பின்பற்றிய தாய்தந்தையரையுடையோர். அறிவிலும் சற்றேறக்குறையச் சுந்தரத்தைச் சிவஞானத்திற்குச் சமமானவனென்றே சொல்லலாம். இவ்விருவரும் இராயப்பேட்டையிலுள்ள பாதிரிமார் பாடசாலையில் நாலாவதுபாரம்வரையில் ஒருங்கே கல்விபயின்றார்கள். பிறகு குடும்பத்தில் நேர்ந்த கஷ்டங்களினால் சுந்தரம் கலாசாலைக்குப் போகாது நின்று விட்டான். ஆனாலும் பெரிய வாணிகஸ்தலங்களில் உத்தியோகத்திலமரவேண்டியோர்க்குரிய 'புக்கீபிங்' 'டைப் ரைடிங்' முதலிய சில பரீட்சைகளில் இரண்டு வருடத்தில் தேறி இரங்கூன் நகரத்திற்குச் சென்று அங்கிருந்த தன் உறவினர் உதவியால் ஒரு பெரிய ஐரோப்பிய வாணிப சாலையில் நல்ல அலுவலில் அமர்ந்தான். சில ஆண்டுகளுள் அவனுக்குத் திரண்டசெல்வஞ் சேர்ந்தது. சிவஞானமோ, பல வகையான இடையூறுகள் நேர்ந்தும் அவைகளால் மனச்சோர்வடையாமல் கல்விகற்று [illegible] பி. ஏ. பரீட்சையில் நன்கு தேறினான். இக்காலத்தில் ஆங்கிலங் கல்விகற்கும் வாலிபர்களிற் பலர், தாம் உயர்தரப் பரீட்சையில் தேறுவதெல்லாம் பெரிய உத்தியோகங்களிலமர்ந்தோ, அன்றேல் சட்டத்திருமுறையாலோ பிறவுத்தியோ மற்றெவ்வாற்றாலாயினும் பெரும் பொருள் சேகரித்து உலக இன்பத்தைப் புலன்களால் நுகர்தற்கே, என்னுங்கொள்கை பூண்டொழுகுகின்றனர். ஆனால் சிவஞானம் இந்த அபிப்பிராயத்தால் மயக்குறவில்லை. தான் அறிவையிற் கற்ற கருவி நூல்களிலேயே மனிதப்பிறப்பின் லக்ஷியத்தை யடைய முடியாதென்றும், மனிதன் தன்னியல்பையும் தலைவனியல்பையும் அறிந்து அழிவில்லாப் பேரின்பம் அடையும் வழிகளை நன்கு தெரிந்துகொள்ள வேண்டுமெனின் சமயநூலாராய்ச்சி செய்யல் இன்றியமையாத தென்றும்; தான் [illegible] மாத்திரமன்றி [illegible]கும் பயன்படற்பொருட்டே என்றும் [illegible] யோடு சமயநூற்பயிற்சியையும் [illegible] வளர்த்துவந்தான். இவ்விரண்டு நண்பர்களும் [illegible] களில் தனித்தனி வசிக்கவேண்டியவர்களாயினும் [illegible].

ல்லை. குடும்ப க்ஷேமங்களைப் பற்றி அடிக்கடி ஒருவர்க் கொருவர் கடிதமெழுதி வந்தனர். இவ்வண்ணம் சுமார் பத்து வருடங்கள் கழிந்தபின்பு, சுந்தரம் தன் தாய் நாடாகிய தமிழகத்தையும் தன் னின்னுயிர் நண்பனாகிய சிவஞானத்தையும் காண வேண்டுமென்னும் ஆசையோடு சென்னைக்கு வந்து ஒரு ஞாயிற்றுக் கிழமை காலையில் சிவஞானத்தின் இருப்பிடம்போய்ச்சேர்ந்தான். இவன் வருகையைக்கண்ட சிவஞானம் நேசனைக் கைகுவித்து முறைப்படி வணங்கி அகமுகமகிழ்ச்சியோடு வரவேற்க நின்றான். " Dear friend, good morning!" என்கிற சொற்களோடும் சுந்தரம் சிவஞானத்தோடு கைகுலுக்கி வீட்டிலிருந்த நாற்காலியி லமர்ந்ததும், சிவஞானத்தின் புதல்வியாகிய புனிதவதி தன் தந்தையின் நண்பர் வீட்டிற்கு வந்ததைத் தாயுடன்சொன்னாள். உடனே பாதோதகம் வர, சுந்தரம் அச்செம்பினையும் தான் தரித்து வந்த ஆங்கிலச் செருப்பின் முடிகளையும் நோக்கி விழித்துக்கொண்டிருக்கையில், "தங்களுக்குத் தாகத்திற்கு வேண்டுமோ வென்றும் இன்னுரையும் பிறந்தது. சுந்தரம் சில விநாடிகள் கழித்து "Thanks, just now காபி drink பண்ணி வந்தே னென்றான். பின்பு ஒருவாறு இக்குழப்பத்தி னின்றும் தெளிந்த சுந்தரம் தனது நண்பனை உற்று நோக்கி,

" என்ன சிவஞானம்! எல்லாம் ஒல்டு வேஷமாயிருக்கிறதே நீ பூசியிருக்கும் சாம்பலையும் போட்டிருக்கும் கொட்டைமாலையையும் பார்த்தால் நீ தானே பி. ஏ. pass பண்ண சிவஞானம் பிள்ளையவர்களென்று doubt (சந்தேகிக்க) பண்ண வேண்டியிருக்கிறதே? இது என்ன wonder" (ஆச்சரியம்) என்றான்.

சி:—(புன்சிரிப்போடு) சுந்தரம்! என்னிடத்தில் என்ன புதியமாறுதல் கண்டாய்? நமது முன்னோர்கள் காட்டிய வழிப்படி தானே நடக்கமுயல்கின்றேன்.

சு:—நான் சொல்வதும் அதுதான், இவ்வளவு educated (படிப்பாளி) ஆய் இருந்தும் பழைய வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் ஏன் observe பண்ணுகிறாய் (கைக்கொள்ளுகிறாய்) என்பது எனக்கு விளங்கவில்லை.

சி:—பழையபழக்கங்களில் நல்லவற்றைக்கைக்கொள்ளுதல் அவசியமே, ஆனால் [illegible] பல [illegible] இருக்கின்றனவே அவைகளைக் கைக்கொள்ள ஒழுங்குதானே?

சு:—என்னமோ, சிவஞானம், நீ சொல்வது உண்மை எனக்குத்தெரியவில்லை. நமது முன்னோர்களுடைய superstition கள் (குருட்டுநம்பிக்கைகள்) எல்லாம் மெய்யாயிருக்குமோ? [illegible]



மாதம் ஒரு தமிழ்ப் புராணிகர் பிரசங்கம் பண்ணினார். நான் chance ஆக (எதிர்பாராமல்) அதைக் கேட்க நேர்ந்தது. அவர் சொன்னதில் இரண்டொன்று சொல்கிறேன் கேள்; சுடுகாட்டுச் சாம்பலில் புரண்டு கொண்டிருந்த ஒரு சொறிபிடித்தநாய் அங்கே கொளுத்துவதற்கு வைத்திருந்த ஒரு பிணத்தின் நெற்றியில் தன் கால்பட ஓடிவிட்டதாம். அந்தக் காலிலிருந்த சாம்பல் பிணத்தின் மேல்பட்ட பாக்கியத்தால் அந்த உடம்பைவிட்டு நீங்கிய soul (ஆன்மா) மோட்சம் அடைந்ததாம். இதற்குப் ஒரு புராணத்திலிருந்து பாட்டும் quote பண்ணினார் (எடுத்துக் காட்டினர்). இதை யார் நம்பக்கூடும்? என்ன கொலைபாதகனாயிருந்தாலும் சரி, "சிவ சிவ" என்று சொல்லிவிட்டானானால் பரிசுத்தமாய் விடுவானாம். ஒரு ஆலயத்தைச்சுற்றிவந்தால் ஒரு கோடி புண்ணியம் உண்டாம். ஒரு தீர்த்தத்தில் முழுகிவிட்டால் தேகத்திலிருக்கும் அழுக்கோடு பண்ணிய பாவங்களெல்லாம் தீர்ந்து விடுமாம். நீ கழுத்தில் மாட்டிக்கொண்டிருக்கும் கொட்டைகளில் ஒன்றைத் தரித்துக்கொண்டாலே எத்தனையோ புண்ணியம் கைகூடிவிடுமாம். அப்படியானால் நீ இது வரையில் பூசிய விபூதியையும் தரித்த ருத்திராட்சத்தையும் கணக்கிட்டால் பேல் பேலாகப் புண்ணியங்கள் சுவர்க்கத்தில் உன் credit இல் உனக்குச் சொந்தமாக இருக்கவேண்டும். புண்ணியந்தேட என்ன easy ஆன (இலகுவான) வழி! சிவஞானம், என்மேல்கோபித்துக்கொள்ளாதே, எனக்கிதெல்லாம் கேட்டமுதல் சமயம் என்றால் வேம்பாயிருக்கிறது. இவையெல்லாம் [illegible] பயித்தியக்காரத்தனமென்றெண்ணுகிறேன். மற்ற religions (சமயங்கள்) கூட இந்த கதியில் தான் இருக்கின்றன.

சி:—நீ குறித்த கொள்கைகளை யெல்லாம் உனக்குத்தெரிந்த அருத்தத்தில் நானும் நம்பவில்லை. சைவ சமயமும் எனக்குத் தெரிந்தவளவில் நம்பும்படி சொல்லவில்லை. தேவாராதி திருமுறைகளிலாவது [illegible] சாஸ்திரங்களிலாவது [illegible] [illegible] தெரிந்தெடுத்து விடுமென்று [illegible] [illegible] நன்றாய்க்கப்பெற்றவர்கள் [illegible] மெய்யென்று சொல்லுவர். [illegible] முன்னோர்களை இகழ்வது சரியன்று. [illegible]

சு:—இது என்ன? சமயம் [illegible] [illegible] கண்டான்? [illegible] தன் religion ஐ (சமயத்தை) [illegible] வழிகாட்டுவது என்கிறான். இதில் யார் [illegible] சொல்வதற் கென்ன proof (சாட்சி) [illegible] என்கிறார்கள். அதையார் பார்த்தது? God, God என்று [illegible] பே

லச் சொல்வதைத் தவிர வேறொன்றுங் காணேம். God, soul, (பதி, பசு) என்று எல்லாம் விசாரித்துத்திரிவது வீண் என்று நினைக்கிறேன். ஏதோ நம்மால் கூடிய மட்டும் பொய் சொல்லாமல், திருடாமல், பரோபகாரஞ் செய்து யோக்கியதையோடு வாழவேண்டும். இதற்குச் சமயம் என்னத்திற்கு? சாத்திரம் என்னத்திற்கு?

சி:—சுந்தரம்! நீ கேட்டகேள்விகளுக்கெல்லாம் சரியான பதில்களுண்டு. அவைகள் கிடக்கட்டும், 'யோக்கியமாய் வாழவேண்டும். பொய் சொல்லல் முதலிய குற்றங்கள் செய்யக்கூடாது' என்றாயே, அதைக்குறித்து யாராவது "அப்படி என் செய்யக் கூடாது"? என்று கேட்டால் நீ என்ன சொல்லுவாய்?

சு:—இதற்கு ஒரு காரணம்வேண்டுமா? நல்லவர்களாய் வாழ முயற்சி செய்வது natural தானே? (இயல்புதானே?)

சி:—மனிதப்பிறப்பையடைந்த நமக்கு அறிவென்பதொன்றுண்டு; அது திரிகரணங்களால் செய்யப்படும் ஒவ்வொருவேலைக்கும் காரணம் கேட்டுக்கொண்டேயிருக்கிறது. அதன் கேள்விகட்குப் பதில் சொல்லாது நடப்பது அறிவுடையோர் செய்கையல்ல. அநேகமாக 'இயற்கை' 'சுபாவம்' என்று சொல்லுவதெல்லாம் நம்முடைய அறிவின் குறைவையே காட்டுகிறது. கூடியவரையில் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும், நம்பும் ஒவ்வொரு கொள்கைக்கும், போதுமான நியாயங்களிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நமக்குப் பகுத்தறிவு இருந்தும் இல்லாதது போலாகும் அல்லவா?

சு:—இருக்கட்டும், நாம் நல்லவர்களாய் நடக்க வேண்டுமென்பது உனக்கும் சம்மதந்தானே? அதற்கு நீ என்ன reasons (காரணங்கள்) கொடுப்பாய்?

சி:—என்னுடைய காரணங்கள் யாவும் சமயசம்பந்தமானவைகளாகவே இருக்கும். ஆன்மாக்கள் தங்களது முயற்சியாலும் இறைவனது திருவருளாலும் தமது பாசம் நீங்கப்பெற்று ஞானமடைந்து மோட்சம் சேர்வதற்கு நல்ல நடக்கை இன்றியமையாதது. மனத்தின் கண்ணும் மாசில்லாது தருமநெறியே நின்று புண்ணியங்களைச் செய்யவேண்டும். அதிலும் பிறந்து இறந்து உழலும் நாம் இந்தப் 'பொல்லாப் பெருங்கடலை நீந்திக்' கடவுளது திருவடியை அடையவேண்டுமாயின் சுயநலங்குறித்த அகப்பற்று புறப்பற்று என்னும் இரண்டுவித ஆசைகளையும் அடியோடு அறுக்கவேண்டும்.

"எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி யிரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"



என்று ஒரு ஞானிவேண்டியபடி அன்பை வளர்க்க வேண்டும். இப்பெருநோக்கங்கள் நிறைவேறுதற்காகத்தான் நீ முன் குறித்தவைகளைப் போன்ற நற்குண நற்செய்கைகளை நாம் பெற வேண்டுமென்பது. இதுவரையில் நான் சொல்லிவந்ததில் ஒரு உண்மை உனக்குப்புலப்பட்டிருக்கலாம். அதாவது:—சமயத்தைத் தள்ளிவிட்டால்,

"நாம் ஏன் நல்லவர்களாய் வாழவேண்டும்" என்று கேட்டோர்க்கு, உளங்கொள மறுமொழி சொல்லமுடியாது; தருமவழியில் நிற்கவுமுடியாது என்பதாம்.

சு:—அப்பா நீசொல்வது எனக்கு clear ஆக (தெளிவாக) விளங்கவில்லை. ஆனாலும் கடைசியில் religion இல்லாவிட்டால் நல்லநடக்கையோடு வாழமுடியாதென்றாயே, அது எப்படி? சில Agnostics (ஒருவகை நாஸ்திகர்கள்) மிக யோக்கியர்களாயிருக்கக் காண்கிறோமே?

சி:—நண்பனே, உன் நினைவிற்குவரும் அந்த நாஸ்திகர்களது சரித்திரங்களை எல்லாம் ஆழ்ந்து ஆராய்ந்துபார். அவர்கள் வாயாலும் எழுத்தாலும் கடவுளில்லை என்று தாம் நம்புவதாகத் தெரிவித்தாலும், அவர்களுக்குத் தெரியாமலே அவர்கள் ஆஸ்திகர்களாகத்தானிருக்கின்றார்கள். கடவுள் இல்லை என்று மறுக்கு முகத்தாலேயே சமயவாதிகள் சொல்லும் கடவுளிலக்கணங்களை ஆராய்பவர்களாகிறார்கள். சமயசாஸ்திரங்களை ஓதுகிறார்கள். இவைகளின் முடிபு அவர்கள் மனதறிய ஒத்துக்கொள்ளாவிட்டாலும் இவைகளுடன் பழகுவதாலேயே இவர்கள் மனதும் செய்கையும் பூவொடுசேர்ந்த நார்போலப் பொலிவடைகின்றது. கடவுளைப்பற்றி மனிதர் பல ஆபாசமான எண்ணங்கொண்டுள்ளார்கள்; அவைகளை அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த நாஸ்திகர்கள் பரிகசிக்கிறார்கள். அதனால் அவர்கள் கடவுளை நிராகரித்தவராகார். இந்த சூக்ஷ்மமான அனுபவ விஷயத்தை நீ ஓய்ந்த காலத்தில் நன்றாய் ஆராய்ந்துபார். உண்மை தோன்றலாம். எனக்கும் இப்படிப்பட்ட ஐயப்பாடுகள் எல்லாம் முன்பு எழுந்ததுண்டு. பிறகு என் அறிவு சற்றே வளர வளர, சமயச்சார்பு இன்றி உண்மையான நல்லொழுக்கம் நிலைக்க கூடாது என்னும் நம்பிக்கை என் மனதில் நன்றாய் வேரூன்றி விட்டது. என் அனுபவத்தில் இவ்வுண்மையை நாளுக்கு நாள் கண்டு வருகிறேன். இன்னும் இதைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்வது அநாவசியம்.

சு:—இவ்விதமான கருத்துகளெல்லாம் என் மனதில் இதுவரையில் பட்டதில்லை. ஆனாலும் எல்லாச் சமயங்களும் ஒரு கடவுள் உண்டு என்று நம்புவன தானே? அப்படிக் கடவுளுண்டு என்பதற்குப் போதுமான evidence (நியாயம்) உண்டா?

சி:—ஆஸ்திக சமயங்களெல்லாம் கடவுள் ஒருவர் உண்டென்று தான் சொல்லுகின்றன. அறிவினலால் தனித்து ஆராய்ந்தாலும் கடவுள் உண்டென்று பல அநுமானங்களால் அறியலாம். நமது பெரியோர்களே இதற்கு வேண்டிய நியாயங்களை தடைவிடைகளோடு விரிவாகப் பல நூல்களில் எழுதியிருக்கின்றார்கள். நான் இவைகளைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை, சுருதியினாலும் யுக்தியினாலும் ஒரு பொருளின் இருப்பை நிச்சயிப்பதைவிட அநுபவத்தாலேயே அது உள்ளது என்று காட்டுதல் சிறப்பு. முன்பு நீ 'கடவுளையார் கண்டார்கள்' என்று கேட்டாய். உண்மையாகக் கடவுளைக் கண்டவர்களை உனக்குக் காட்டினால் இறைவன் ஒருவன் இருக்கின்றனென ஒத்துக்கொள்வாயா?

சு:—அதற்குத்தடையில்லை. கல்வியில்வல்ல சிலர் தங்கள் விபரீத விசாரணையால் ஆகாயக் கோட்டை கட்டி நமது புலன்களுக்கு விஷயமாகிற உலகத்தை அடியோடு இல்லவே இல்லை. அது illusion (மித்தை) என்று சாதிக்கிறார்கள். அதுபோன்ற புரட்டுகள் தான் எனக்கு விளங்குவதில்லை. எந்த விஷயமானாலும் அநுபவத்துக்கு முரணாமல் அதனால் நிச்சயிக்கக் கூடியதாயிருந்தால் அதை உள்ளதென்று கொள்ள ஏன் பின் வாங்கவேண்டும்?

சி:—உண்மைதான், ஆனால் இன்னுமொரு விஷயத்தை மறக்காமலிருக்க வேண்டும்: நாமெல்லாம் ஒரே அளவான அறிவின் கூர்மையை உடையவர்களல்ல. நம்மனுபவங்களும் பலதிறத்தனவாகி முதிர்ச்சியினளவால் வேறுபட்டு நிற்கின்றன. ஆகையால், சடப்பொருள்களைப்பற்றியும் சித்துப்பொருள்களைப்பற்றியும் நமக்கெட்டாத பலவிஷயங்களை, நம்மினு முதிர்ந்த அறிவும் அநுபவமும் உடையோர் சொல்லுவாரானால் அவைகளை நாம் மெய்யென்று கொள்ளவேண்டியிருக்கிறது. பெரியோர்சொல்லில் நம்பிக்கை வையாது ஒவ்வொரு விஷயத்தையும் நாமே சோதித்து அறிந்து பிறகே அதை உண்மை என்றுகொள்வோமென்பது முடியாத காரியம். தக்க மூதறிவாளர்களதுரையை நம்பி அவர் சொல்வழி நின்று பிறகு அவர்கள் சொல்லிய தன்மையோ அன்றோ என்று அநுபவத்தாலறிவதே முறைமை. Conservation of energy (பிரபஞ்சத்திலுள்ள சடசக்தியின் அளவு குறைதலும் வளர்தலும் இல்லை என்னும் கொள்கை), Law of Universal Gravitation (ஒவ்வொரு சடப்பொருளும் மற்றெல்லா சடப்பொருள்களையும் தன்னுடைய பருமனுக்கும் தனக்கும் உள்ள தூரத்திற்கும், ஏற்பத்தன் பால் இழுக்கின்றது என்னும் நியாயம்), The rotation of earth on its own exis round the sun (பூமி இரண்டுவித நடைகளோடு மிக்க வேகமாய்ச் சூரியனைச் சுற்றிவருதல்), என்பது முதலிய எண்ணிறந்த உலக நூற்கொள்கைகளின் உண்மையை நாமே சோ-



தியாமலே மெய்யென்று நம்புகிறோமல்லவா? அதுபோலவே நம்மியல்பையும் நமது இறைவனாகிய பரம்பொருளினது இயல்பையும், அறிய வேண்டில், அத்துறையில் அதிக தேர்ச்சியடைந்த ஞானிகள் சொல்லியவற்றை மெய்யென்று நம்பி அவர் காட்டிய நெறியைப் பின்பற்றுவது முறை என்று தெரிகிறது. எனக்கும் உனக்கும் கடவுளை நேரிற் காண முடியாமையினாலேயே கடவுள் இல்லை என்று முடிவு கட்டிவிடக்கூடாது. சுந்தரம், இது வரையில் கூறி வந்ததெல்லாம் உனக்கு உடம்பாடுதானா?

சு:—உடம்பாடுதான், ஆனால் ஒன்று சொல்ல வேண்டுகின்றேன்: பெரியோர்கள் போதனை என்று எதையாயினும் ஒன்றை நம்புவதற்கு முன்பு அதைச் சொன்ன பெரியோர் யாவர்? அவரவ்விஷயத்தைப் பற்றிப் பேசப்போதுமான ஞானமும் அநுபவமும் உடையவர்தானா? அது அவர் சொன்னது தான் என்று கொள்ள இடமுண்டா? அவர் என்ன எண்ணத்தோடு அதைச் சொன்னார்? என்றெல்லாம் யோசித்த பிறகே பெரியோர் வார்த்தை என்பதில் நம்பிக்கை வைக்கலாம். முக்கியமாய் நம்தேசத்தோர் இதை நன்றாய்க் கவனிக்கவேண்டும். "பாரப்பா", "கேளப்பா" என்று தாங்கி வழிகிற கோழை வைத்தியப் பாட்டுகளை எல்லாம் அகஸ்தியர் வாக்காக எத்தனை பேர் கொள்கிறார்கள். இவ்விதமாக நூலைப்புரட்டுதல் பல விடங்களில் உண்டு என்று கேள்விப்படுகின்றேன். இன்னும் சிலர் மூக்கரையன் சீஷர்கள்போலத் தாம் கெட்டது போலப் பிறரையும் கெடுக்க முயல்வதுண்டல்லவா? ஆகையால் இதையெல்லாஞ் சோதித்த பிறகே பெரியோர் வார்த்தை என்பதை அங்கீகரிக்க வேண்டுமென்று என்புத்திக்குப் புலப்படுகிறது,

சி:—நீ இப்போது சொல்லியது முற்றிலும் உண்மையே. இத்தகைய நுண்ணறிவு உனக்கு இயல்பாய் இருப்பது பற்றி மிகச் சந்தோஷம். நீ காட்டிய வழி எல்லாம் சோதித்த பிறகும் உண்மையில் சான்றோர்களே என்று சிலர் ஏற்பட்டால் அவர்கள் காட்டும் நெறியைப் பின்பற்றத் தடையில்லையே?

சு:—இல்லை.

சி:—நாவுக்கரசர், மாணிக்கவாசகர், திருமூலர், காரைக்காலம்மையார், பட்டினத்தடிகள், சேக்கிழார், மெய்கண்டார், அருணகிரிநாதர், தாயுமானார், நீலகண்டர், சைதன்யர், ஆழ்வார்கள். [illegible], பால், [illegible] முதலிய [illegible] இவர்கள் போதனையைப் பின் பற்றி நடந்த ஆயிரக் கணக்கான [illegible] களும் ஆன்மாக்களே நமக்குத் [illegible] பொருள் இருக்கின்றது என்றும் அந்த அகண்டத்தூரிய [illegible] பொருட்டே

நாம் மனிதராய்ப் பிறந்திருக்கிறோமென்றும் ஒருங்கே கட்டுரைப்பார்களானால் அவர்கள் சொல்லுகிறதைக் கொள்ளுவதா அல்லது தள்ளுவதா? யோசித்துச்சொல். இவர்களிற் சிலரது சரித்திரங்களாவது உனக்குத் தெரிந்திருக்கலாம். அவர்களைப் பொய்யர்களென்றாவது, வஞ்சகர்களென்றாவது, நம்போலியரை விடச்சமய அறிவு அநுபவங்களில் மிக முதிர்ந்தவர்களல்லர் என்றாவது, ஈசுவர ஞானம் சிறிதேனும் பெறாதவர்கள் என்றாவது ஒதுக்க நியாய முண்டா? இப்போது சில பெரியோர்களையே நான் குறித்தேன். இன்னும் எத்தனையோ பேர்கள் இருந்தார்கள் இன்னும் இருக்கிறார்கள்.

சு:—(சிறிதுநேரம் மௌனமாயிருந்தபிறகு) சிவஞானம், இது வரையில் மனதை இவ்வழிகளில் செலுத்தினதில்லை. நீ சொல்பவைகள் புதியவையாய்க் காணப்பட்டாலும் உண்மை என்றே தோன்றுகின்றன. இப்பெரியோர்களை வஞ்சகர் அறிவிலிகள் சாமானியார் என்றுசொல்ல என்னவெழாது. ஏதோ Comfortable ஆய் (சுகமாக உண்டு உடுத்து உறங்கி) உலகில் வாழவேண்டுமென்னும் ஒரே நோக்கத்தோடு பொருள்தேடி சமயத்தைப்பற்றிக் கவலையின்றிக் காலங் கழித்த எனக்கு இப்பெரிய விஷயங்களைப்பற்றிப்பேச உரிமையேது? கடவுள் கிருபை பெற்ற பெரியோர்கள் தன்மையை சற்றும் தெரிந்து கொள்ளாமலே சாமானியர் செய்யும் குற்றங்களை அப்பெரியோர்மேல் சுமத்திச் சமய நிந்தனை சாத்திர நிந்தனைசெய்தேன். மேற்றிசை நாகரிகம் சர்வோத் கிருஷ்டமான தென்று உலகவழியிலேயே என்புத்தியைச் செலுத்திப்போது போக்கினேன். இப்படிச் சாலநாள் போகினதை நினைக்க மனம் திடுக்கிடுகின்றது. இனியாயினும் நன்னெறி கடைப்பிடிக்க முயல்கிறேன். என்னுயிர்த் தோழனாகிய நீயே எனக்குக் குருவாகவு மிருந்து உன்னாலியன்ற மட்டும் எனக்குதவி செய்ய வேண்டும்.

சி:—என்மனதிற் கிசைந்த அன்பனே! நாயினுங் கடையேனாகிய என்னால் என்ன ஆகும். எல்லாம் திருவருட்செயல். உன்மன மிவ்வளவு விரைவாகச் செம்மைநல மறிந்து மேலைத்தளவினாலும் உனது அதிதீவிர பக்குவத்தினாலுமேயாம். "உடுக்கை இழந்தவன் கைபோலவாங்கே இடுக்கண் களைவதா நட்பு" என்றார் திருவள்ளுவர். சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய நாயேனை நீ நன்னெறி சார்வதற்குக் கருவி யாகத்திருவருள் எப்படி இயக்குவித்தாலும் எனக்கு உவப்பே. என்னால் உனக்கு ஆகக் கூடியது என்ன?

சு:—பெரியோர்களெல்லாம் ஒரு முகமாகப் போற்றுகின்ற கடவுள் எப்படிப் பட்டவர், அவரைப்பற்றி அவர்கள் என்ன சொல்லுகின்றார்கள்? விளக்கமாக அறிவிக்க வேண்டும்.



சி:—கடவுள் இப்படிப்பட்டவர் தான் என்று வரையறுத்துச் சொல்லமுடியாது, ஞானிகள் கடவுளை,

"சொல்லுக் கடங்காச் சுகப்பொருள்"

"உரை மனமிறந்து நின்ற ஒருவன்"

"மாற்ற மனங்கழிய நின்ற மறையோன்"

"இன்ன தன்மைய னென்றறியாச் சிவன்",

என்பன போன்ற எண்ணிறந்த சொற்றொடர்களால் துதித்திருக்கின்றார்கள். ஆனால் அவர்களே............................................................

(இன்னும் வரும்.)

S. சச்சிதானந்தம் பிள்ளை.

## திருக்குறள் மாட்சி.

(முன்தொடர்பு தொகுதி I, பகுதி 7, 8, பக்கம் 216.)

இவ்வாறு கூறிய மனோநாசம், தத்துவஞான மிரண்டும் அவா நீங்கினவிடத்தன்றி சித்தியாமையின் வாசனையையென்னும் அவாவறுத்த லதிகாரத்தை யதன்பின்வைத்தார். வாசனையென்பது பொருள்களைக் கண்டபொழுது அதனைப் பற்றிச் செல்வதாகிய ஆசை உள்ளத்தில் வசித்திருப்பது. வசித்திருக்குங்கால் அவாவென்றும், பொருள்களைப் பற்றிச் செல்லுங்கால் ஆசையென்றும் பெயர்பெறும். உள்ளத்தில் தங்கியிருக்கு மவா அறாதவழி, ஆசையறாது. இவ்வவா அறுதலுஞ் சித்தித்தபொழுதுதான் முத்தி சித்திக்கும். இதுபற்றியே இவ்வதிகாரத்தில் "ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே பேரா வியற்கை தரும்" எனப்பத்தாவது பாட்டருளிச் செய்தார். இப்பாட்டிற்கு உரையாசிரியர் பரிமேலழகர் "இதனுள் வீடாகிய இன்பம் கூறப்பட்டது உம் அஃது அவாவறுத்தார்க்கு அப்பொழுதே எய்துதலான் மெய்ப்பொருளுங் கூறப்பட்டன." என்று கூறினர். அன்றியும் உண்மை

ஞானத்தை யடைந்தார்க்கும் பிராரத்தம் உள்ளளவும் தேகமிருக்கும். அது பற்றுக்கோடாக, விருப்பு வெறுப்புக்கள் உளவாம். அவற்றைத் தோன்றுந்தோறுந் தோன்றுந்தோறுங் கெடுக்க வேண்டும். இதுபற்றியே மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தின் பின் அவாவறுத்தல் என்னும் அதிகாரம் வைக்கப்பட்டதென்றலும், ஒன்று. இவ்வாறு துறவறத்தில் ஞானபாதம் கூறிய பின்னர், ஞானத்தால் வீடெய்திய முத்தரும் பிராரத்தத்தை அநுபவித்தே தீரவேண்டுமென்பது தோன்றவும், இதுகாறுங் கூறப்பட்ட இல்லற ஒழுக்கம் துறவற ஒழுக்கங்களாகிய இரண்டும் இனிக்கூறப்படும் பொருளின்பங்கள் இரண்டும் பிராரத்தத்தினாலேயே சித்திக்குமென்பது தோன்றவும், பிராரத்தமும் வினையின் பயனைப் பிறழாமல் அநுபவிக்கச் செய்தலின் அறமேயென்பது தோன்றவும், ஞானத்தின் பின்னாகவும், அறம் பொருளின்பங்களின் நடுவாகவும், அறத்துப்பாலுடன் ஒன்றாக வைத்திறுதியாகவும், ஊழ் என்னும் அதிகாரங்கூறினர். அன்றியும் பொருள் அடைவதற்குரிய பந்த ஊழும், வீடடைவதற்குரிய விடுதி ஊழும் என ஊழ் இருதிறப்படுமாதலின், அக்கருத்துத் தோன்ற ஞானத்துக்கும் பொருளுக்கும் நடுவில் ஊழ் என்னும் அதிகாரத்தை வைத்தாரென்றலு மொன்று.

இவ்வாறு அறத்துப்பால் கூறியபின்னர், இல்லறத்தின் வழிப்படுவனவாயும், அறமும், அதனால் உண்டாம் இன்பமும் எய்துதற்குத் துணையாயுமுள்ள பொருட்பால் அறத்துக்குப் பின்னும், இன்பத்துக்கு முன்னுமாக எழுபது அதிகாரங்களால் அரசன்மேல் வைத்துக் கூறினர். தலைமைபற்றி அரசன்மேல் வைத்துக் கூறினரேனும், ஏனைய ஒவ்வொருவருக்கும் உரியதேயாம்.

இங்ஙனம் பொருட்பால் கூறியபின்னர், இல்லறந் துறவறமென்னு மிரண்டின் பயனாகிய இன்பத்துப்பால் இருபத்தைந்து அதிகாரங்களாற் கூறி நூலை முடித்தனர். இன்பத்துப்பாலில் இல்லறத்தின் பயனாகிய மகளிரொடு கூடி யனுபவிக்குஞ் சிற்றின்பம் ஒன்றனையே கூறினரென்பர் ஒரு சாரார். அது பொருந்தாது. என்னை? துறவறத்தின் பயன் வேறு கூறாமையின் என்க.



அற்றன்று. துறவறத்தின் பயன் சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்தாதலின் அதனைக் கூறாது இல்லறத்தின் பயனாகிய இன்பம் ஒன்றனையே இப்பாலிற் கூறினரென்றல் அமையாதோ வெனின், அமையாது. என்னை? துறவறத்தின் பயனாகிய பேரின்பம் சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாதலின், இல்லறத்தின் பயனாகிய இன்பத்தின் உள்ளுறை பொருளாய்க் கூறினராதலி னென்க.

இவ்வாறே திருக்கோவையாரில் சிற்றின்பத்துப் பாலில் வைத்தே பேரின்பத்தை ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமானும், அருளிச்செய்தனர். சிற்றின்பத்தில் தலைமகனும், தலைமகளும் போல பேரின்பத்திலுமுண்டு. அதுவும் ஆண்டானடிமைத் திறம்பற்றியும், அநுபவிப்பான் அநுபவிக்கப்படுந் திறம்பற்றியும் இருவகைப்படும். ஆண்டானடிமைத் திறத்தில் இறைவன் நாயகன், உயிர் நாயகி; அநுபவிப்பான் அநுபவிக்கப்படும் திறம்பற்றி ஆனந்தம் நாயகி, உயிர் நாயகன், அருள் தோழி. இவ்வின்பத்துப்பாலை களவியல் கற்பியல் என இரண்டு இயல்களாகப் பிரித்துக் கூறினர். களவியல் என்றது திருட்டுப் புணர்ச்சியையன்று. அது கற்பியலில் அறம்பொருளின்பங்களின் பொருட்டுத் தலைமகன் பிரிந்தபொழுது, தான் அநுபவித்த இன்பத்தை நோக்கி பிரிதொரு தலைமகனைக்கூடி அநுபவிக்க எண்ணாது சென்றவனையே நாடிவருந்தினளெனக் கூறியதனாலேயே இனிது விளங்கும். களவு என்னும் சொற்குப்பொருள் நாயகன்நாயகி கூடியனுபவிக்கும் இன்பம் பிறர் அறியாமைபற்றியும் அவ்வின்பம் இத்துணைத்தென பிறர்க்குச் சொல்ல முடியாமை பற்றியுமேயாம். இவ்வின்பத்துப் பாலில் இன்பம் அநுபவிப்பதாகிய களவியல் ஏழு அதிகாரத்தானும் அறம், பொருள், இன்பங்களின் பொருட்டு தலைமகன் பிரிந்தபொழுது, அப்பிரிவாற்றாமையாகிய கற்பியலை பதினெட்டு அதிகாரத்தானுங் கூறினர்.

இவ்விரு இயல்களைப் பேரின்பப் பொருள்களாகக் கொள்ளுமிடத்து களவியல் பரமுத்தி. கற்பியல் சீவன்முத்தி. களவியலில் அநுபவிப்பான் அநுபவிக்கப்படுந்திறம். கற்பியலில் ஆண்டானடிமைத்திறம். களவியல் பரமுத்தியென்பதை "நலம்பு

னைந்துரைத்தல்'' என்னும் அதிகாரத்தில் ''அறிதோ றறியாமை கண்டற்றால் காமஞ் செறிதோறுஞ் சேயிழை மாட்டு'' என்னும் 10வது பாட்டால் இன்பானுபவத்தில் அனுபவிக்குந்தோறும் எல்லையின்றி மேலும் மேலும் விருப்பம் உண்டாகுமென்றதனாலறிக. அன்றியும் இப்பாட்டுக்குக் கூறியமுடிவுரையில் ''இப் புணர்ச்சிமகிழ்தல் தலைமகட்கு முண்டேனும் அவன் மாட்டுக் குறிப்பானிகழ்வதல்லது கூற்றானிகழாமையறிக'' என்றதனால் உயிர் தலைமகளென்றும் இறைவன் தலைவ னென்றும் முன்னர்க் கூறியதை வலியுறுத்தும். உயிர்த்துவ சோதனை செய்த விடத்து, தலைவனையும் தன்னையும் தலைவனருளால் அறிந்து தலைவனில் அடங்கி இன்புறுதலாகிய பரமுத்தி முத்தற்கண்ணதாகலின், அதனைக் களவிய லென்னும் பேரால் முன்னர் வைத்தார்.

இங்ஙனம் முத்தியடைந்த உயிர் பிராரத்வ அனுபவத்தின் பொருட்டு அந்நிலையில் நின்று நீங்கியபொழுது தலைமகனைப் பிரிந்த தலைவி பிறிதொருவனைக்கூடி அனுபவிக்க நினையாது அவனையே நாடியிருப்பதுபோல வினைகாரணமாகப்பற்றிய விடயங்களில் அழுந்தாது அகமுகத்தில் அனுபவித்த பேரின்பத்தையே நாடி நிற்றலால் சீவன்முத்தியெனப்பேர்பெறும். இந்நிலையில் உயிர் தலைவி, இறைவன் தலைவன். இதனை ''அறிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும் பிரிவோரிடத்துண்மை யான்'' என்னும் பிரிவாற்றாமை அதிகாரத்து 3-வது பாட்டால் தெளிக. பரமுத்தியில் அருள் தோழியாயிருந்து தன் ஜாதியாகிய சிவானந்தமென்னும் தலைமகனை உயிராகிய நாயகனுக்குக் கூட்டுவிக்கும். சீவன் முத்தியில் உயிர் சிவமாந்தன்மை யெய்தப் பெற்றமையால் ஆண்டான் அடிமைத் திறம்பற்றி தலைவியாகி நிற்குமுயிரை அருளாகியதோழி தலைமகனாகிய இறைவனோடு கூட்டுவிக்கும். இவ்வாறு அருள் என்றும் தோழியாயிருந்து பரமுத்தியில் இறைவனை ஆன்மாவிலும், ஜீவன் முத்தியில் ஆன்மாவை இறைவனிலும் சேர்ப்பிக்குமென்க. நிற்க.

---



## முடிபுரை.

இதுகாறும் கூறியவாற்றால் ஆன்மாக்கள் அடையவேண்டியபயன் அறம், பொருள், இன்பம், வீடு என்று நான்காமென்பதூஉம், அவற்றைச் செயற்கை யறிவாகிய நூலறிவால் பெறவேண்டு மென்பதூஉம், இதுபற்றியே வேதாகமங்களை இறைவன் அருளிச் செய்தானென்பதூஉம், அவற்றையாராயும் வலிமையில்லாரும் உய்ய வெண்ணி அவற்றின் பொருள்களைத் திரட்டி நூல்களாக்கி பெரியோர் சிலர் தந்தனரென்பதூஉம், அவை நான்கு பயனும் ஒருசேரத்தொகுத்துக் கூறாமையின் அவற்றைத் தொகுத்து தமிழில் குறட்பாவில் திருவள்ளுவர் ஒரு நூலருளிச் செய்தாரென்பதூஉம், வள்ளுவர் என்பது நான்குபயனுந் தொகுத்துத் தந்தமையின் வள் என்னும் பகுதியடியாய்ப் பிறந்த காரணப் பெயரென்பதூஉம், பாவின் பெயரே நூற்குப் பெயராய் வழங்குதலின் முன்னர் இப்பாவால் நூலில்லையென ஊகிக்கப்படுமென்பதூஉம், இந்நூலியற்றிய காலம் கடைச் சங்ககாலமென்பதூஉம், அச்சங்கத்தில் அரங்கேற்றவரு நூற்குறைகண்டு மனம் பொறாதவராய் தலையிற் குத்தி சிவைத்துள்ள காரணத்தாற் பெயர்பெற்ற சீத்தலைச்சாத்தனார் இக்குறளைக் கேட்டுத் தலைக்குத்து நீங்கினாரென்பதூஉம், இந்நூலில் நாற்பாலுமடங்கியிருக்கின்றதென்பது பரிமேலழகருரையானும் சிறப்புப் பாயிரத்தானுந் துணியப்படு மென்பதூஉம், முப்பாலென்று கூறுவது நாற்பாலும் முப்பாலுளடங்கு மென்றல் பற்றியே யாமென்பதூஉம், இந்நூல் 133 அதிகாரங்களையுடையதென்பதூஉம், முதனான்கதிகாரமும் பாயிரமென்பதூஉம், அவற்றுள் முதலதிகாரத்து முதற் செய்யுள் கடவுள்வாழ்த்தென்பதூஉம், ஏனைய ஒன்பது செய்யுளும் பயனென்பதூஉம், இரண்டாவது வான் சிறப்பு சம்பந்த மென்பதூஉம், மூன்றாவது நீத்தார் பெருமை அதிகாரியென்பதூஉம், நான்காவது அறன் வலியுறுத்தல் நுதலிய பொருளென்பதூஉம், பாயிரத்தை வடநூலார் அனுபந்த சதுட்டய மென்பரென்பதூஉம், இப்பாயிரம் நூலாசிரியரே சொல்லவுந் தக்கதென்பதூஉம், வாழ்த்து, வணக்கம், பொரு

ளியைபுரைதல், என்னும் மூவகை வாழ்த்துள் முதற்பாட்டாற்கூறிய வாழ்த்து பொருளியை புரைத்தலாமென்பதூஉம், பாயிரஞ்சொல்லி முடித்து ஆன்மாக்களுக்கு இந்திரியம், மனம், அறிவு மூன்றும் முறையே அடங்கவேண்டுமாதலின் புறப்பற்றொழிதலாகிய இந்திரிய நிக்கிரகத்தின் பொருட்டு அடுத்த இருபததிகாரத்தில் கூறப்பட்டது இல்லறமென்பதூஉம், இதனை அடுத்து துறவறத்தை விரதம், ஞானம் என இரண்டியல்களாகக் கூறினரென்பதூஉம், விரதம் மனமடங்கச் செய்யுமென்பதூஉம், ஞானம் மனோநாசம், தத்துவஞானம், வாசனாக்ஷயமெனமுத்திறப்பட்டு உண்மை யுணரச் செய்யுமென்பதூஉம், ஞானிக்கும் ஊழ் உண்டென்பதற்கும் பொருளின்பங்கள் ஊழாலா மென்பதற்கும் அடுத்து ஊழ்கூறினரென்பதூஉம், இதனடுத்து பொருட்பாலும், இன்பத்துப்பாலும் முறையே கூறினரென்பதூஉம், இன்பத்துப்பால் பேரின்பத்தையுங் குறிக்குமென்பதூஉம், திருக்கோவையாரே இதற்குச் சான்றென்பதூஉம், பேரின்பத்தில் ஆண்டானடிமைத்திறம் பற்றி இறைவன் நாயகன் உயிர் நாயகியும், அனுபவிப்பான் அனுபவிக்கப்படுந்திறம்பற்றி உயிர் நாயகன், ஆனந்தம் நாயகியுமாமென்பதூஉம், இப்பாலுட் களவியல், பரமுத்தி, கற்பியல், சிவன்முத்தியென்பதூஉம், முன்னையது அனுபவிப்பான் அனுபவிக்கப்படுந்திறம், பின்னையது ஆண்டானடிமைத்திற மென்பதூஉம், இவ்வாறு கூறி நூலை முடித்தன ரென்பதூஉம் பிறவுமாம். அறிஞர் குணநாடிக் குற்றமுநாடி அவற்றுண் மிகைநாடி மிக்க கொள்வாராக.

பொ. மு. முத்தைநாயினார்.

# அத்வைதம்

## சைவ சித்தாந்தத்தின்படி.

சைவசித்தாந்தத்துக்கு ஒப்ப முடிந்தவாறு கடவுளுடைய சொரூபத்தைப் பற்றி "The New Reformer" "நவமான சீர்திருத்தம்" என்ற பெயரிய பத்திரிகைக்கு யாம் செய்த விஷயதானமொன்றினில் யாம் விரிவாக எழுதியிருந்தோம். இப்போதும் அத்வைத விஷயத்தை விளக்குவான் அயோகமாக இங்கே எழுதுவதாகச் சங்கல்பிக்கின்றோம். ஆனால் இங்கே "அத்வைத சித்தாந்தம்" என்று குறிப்பிடப்பட்டது சித்தாந்த நூலாசிரியர்கள் போக்கைப் பின்பற்றிய தொன்றென் றுணர்க. இந்தியநாட்டுத் தத்வஞான விசாரணையை மேற்கொண்ட படிப்பாளிகள் யாவரையும் அன்பும் சிரத்தையுடனும் யாம் கூறுமவற்றைக் கவனிக்கும்படி பிரார்த்திக்க லாயினோம். இந்தத் தத்வஞானம் நாளடைவில் அதிகமாகவும் தெளிவாகவும் விளங்கக் கூடிய தொன்றாதலினால் எல்லா மதஸ்தர்களுடைய மனத்தையும் கவர்ந்து எல்லோருக்கும் மனோற்சாகத்தையும் பெரு நம்பிக்கையையும் இது விளைவிக்கக் கூடியதொன்றேயாம் உறுதியாக நம்பியிருக்கின்றோம். யாம் முன்னம் எழுதிய வியாசத்தில் சுட்டிக்காண்பித்த பிரகாரமே இந்தச் சிறந்த ஞானம் உலகத்தார் முன்பாகச் சுவல்பகாலத்திற்குள்ளாக, பிரகாசிக்கப் பட்டதென்றறிக. இதை—இந்த அரும்பெரும் விளக்கை ஏற்றியவர்கள்—இதை ஒரு கூடையைக் கவிழ்த்து உலகமறியாமல் ஒரு சிறு மூலையில் வைத்தவர்களல்லர். இனிமேல் வருங் காலமெல்லாம் இந்தத் தீபத்தின் அற்புத பிரகாச காலமேயாகி, அதி உன்னதமான பர்வதத்தின் சிகரத்தினின்றும் பிரகாசிக்குமென்று நம்புகிறோம்.

முதற்கண் யாம் ஒரு விஷயத்தைக் குறிப்பித்துக் காண்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். "அத்வைதம்" என்ற தனி சப்தம் தங்களது அருளுடையான் தத்வஞானத்தை விளக்குவான் சித்-

தாந்த நூலாசிரியர்களெல்லோராலும் உபயோகிக்கப்பட்டு வந்துள்ளது. சித்தாந்த சாஸ்திரங்களுள் "விசிஷ்டாத்வைதம்" என்ற பிரயோகமானது எந்த இடத்திலும் காணப்படவில்லை. முதல் முதல் இந்தத் தத்வஞானத்தைத் தரிசிக்கும் பாக்கியத்தைப்பெற்ற சில புண்ணியர் உடனே இதை "விசிஷ்டாத்வைதம்" என்று முன்பின் யோசியாமல் கூறிக் களியாட்டயராகின்றனர். ஆனால் சைவ சித்தாந்திக ளெல்லோருமே தங்களைத் தாங்களே கண்டிப்பாக "அத்வைதிகள்" என்றே அழைத்திருக்கிறார்கள். இதை யாழ்ந்து கவனிக்க.

ஸ்ரீ "சிவஞானபோதம்" இரண்டாவது சூத்திரத்தின் வார்த்திகவுரையில் "ஸ்ரீ மெய்கண்டதேவர்" "அத்வைதம்" என்ற பதத்தை யுபயோகித்திருக்கின்றனர் கண்டீர்! அந்த அவதாரம் அடியில் வருமாறு காண்க.

"அத்துவிதமென்ற சொல்லே அந்நிய
நாத்தியை யுணர்த்துமா யிட்டு"

அதைத் தொடர்ந்தே அவர்தம் "அத்வைத" சித்தாந்தத்தை அருமை பெருமையாக விளக்குவான் புக்கார்.
மற்றோரவசரத்திலும், கீழே உதகரித்தபடி,

"அத்துவிதமாதல் அகண்டமுமதைவமே
அத்துவிதியன்பாற் றெழு"

அவர் தமது "அபியதத்தை" (System) "அத்வைதம்" என்றே கூறலாயினர். அதன்றியும், அவரே, தமது சீடர்களெங்களையும் "அத்வைதிகள்" என்றே அழைக்கலாயினர்.

ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் "சிவப்பிரகாசம்" என்ற புண்ணிய நூலின் மேலே யுதகரிக்கப் பெறும் முகவுரைப்பாட்டில் அதையே "அத்வைத" மென்ற சொற் பிரயோகத்தையே யெடுத்தாண்டிருக்கின்றனர்.

"புறச்சமயத்தவர்க்கிருளா யகச்சமயத்தொளியாய்
புகலளவைக்களவாகிப் பொற்பணிபோலபேதப்
பிறப்பிலதாயிருள்வெளிபோற் பேதமுஞ்சொற்பொருள்
போற் பேதாபேதமுமின்றிப் பெருநூல்சொன்ன [போற்



அறந்திறனால் விளைதரு முடலுயிர்க்கண்ணருக்கண்
அறிவொளிபோற் பிறிவரு மத்துவிதமாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ்சைவ
சித்தாந்தத்திறனிங்குத் தெரிக்கலுற்றாம்."

ஸ்ரீ தாயுமான ஸ்வாமி பிரபுவானால் "அத்வைத" மென்றவிந்த அரும் சப்தத்தைத் தாராளமாக ஆங்காங்கு முபயோகிக்கலாயினர் அவரது பரமகுரு ஸ்ரீ மெய்கண்ட நாதனைப் பாடியபோது அடியிற் கண்டபடி துதிப்பாராயினர்.

"மெய்கண்டார் காணப்புனிதமா மத்துவித
மெய்கண்ட நாதனடி மேவுநா ளென்னாளோ?"

பிறிதொரு பாவில் பிரபு தாயுமானர் இந்த புண்ணிய மொழியை மறுபடியும் இரண்டுமுறைப் பூரித் துபயோகித்ததைக் காண்மின்! இந்தச் சப்தத்தின் அர்த்த புஷ்டியை விளக்கியும், இதற்குத் திருஷ்டாந்தம் தேடியும், கூறிய அவசரம் அது. இந்த விஷயத்தை யாமும் மேலே விரிவாக விசாரித்து முடிவு செய்வோமென்பது நிச்சயம்.

"ஆணவத் தோடத்து விதமானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவி னோடத்து விதமாகு நாளென்னாளோ?"

அந்தப் பதத்தையே மீண்டும் விசாரிக்கப் புகுவான் அடியிற் கண்ட வேதாக மந்திரங்களிலும் உபநிடத மந்திரங்களிலும், இன்னும் சிலவிடங்களிலும் அந்தப் பதம் காணப்படுகின்றது.

"ஏக ஏவ ருத்ரோ நத்விதீயாயதஸ்தே"
(யஜுர் வேதம் 1-8-6)

"ஏகோஹி ருத்ரோ நத்விதீயாயதஸ்தே"
(ஸ்வேதாஸ் உபநிஷத். 3-2)

"ஏகமேவாத் விதீயம்" சாந்தோக்யோபநிஷத்
(6-2-1)

"சாந்தம் சிவம் அத்வைதம் சதுர்த்தம் ஆத்மா"
(மாண்டூக்ய வுபநிஷத் 7)

"அமாத்ராஸ் சதுர்த்தய வ்யவஹாரிய ப்ரபஞ்சோப
சமஸ் சிவோத்வைத ஏவ"

அகண்டாகாரமான நான்காவது பதார்த்தமானது ஒருவராலும் உணரக் கூடாத தன்மைத்தாயுள்ளது, அதைக் கடந்து அப்புறம் செல்வது யாவராலும் முடியாத காரியமாயுள்ளது சிவாத்வைதம். (மாண்டூக்ய வுபநிஷத் 12)

முதலிரண்டு வாக்கியங்களும் இந்த வார்த்தையை யிதன் பிராகிருத ரூபமாகவே வெளிப்படுத்தி யுள்ளன. அந்த ரூபமோ! "நத்விதீயம்" என்பதே இப்போது உபயோகத்தி லிருக்கும் வார்த்தையோ?" "ந" என்ற முதல் அட்சர நீக்கத்தினால் கிடைக்கப் பட்டுள்ளது. "ந" என்றது எதிர் மறைப்பொருளில் முதற் பகுதியாக முடிந்தது. அதனால் இந்த வார்த்தையின் பொருள் என்னவென்று விசாரித்தால் "இரண்டில்லை, இரண்டல்ல" எனவாகும் மேற் காட்டிய வாக்கியங்களில், சந்தர்ப்பங்களை நோக்கின் பல்வேறுபட்ட மத ஆசாரியர்கள் அவ்விதங் கூறும்படியான தத்வஞானார்த்தங்களுக்கு அவை இடந் தரவே மாட்டா வென்க. அது சொல்ல வந்ததெல்லாங் கூடிப் பிரஸ்தாப 'புருஷனை' விட வேறு அந்நியமான யாதொரு புருஷனும் கிடையவே கிடையாதென்பது தான் அதன் அபிப்பிராயம். முதற்கண் உதகரித்த வாக்கியத்தில், ஒரு கடவுள் தான் உண்டு. இரண்டாவது கடவுள் இல்லையென்று அது கூறியது. இது எப்படியிருந்த போதிலும், பலமதங்களினும் கூறிப் போந்த பிரயோக உபயோகத்தைக் குறித்து யாம் இப்பொழுது விசாரணை மேற்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

எதிர்மறை முதலசைக்கு—அதாவது "ந" என்ற அட்சரத்துக்கு பல அர்த்தங்கள் கூறுகின்றனர். (1) இன்மை அல்லது அபாவம், இது எதிர் மறையர்த்தம் கொண்ட அவசரம். (2) அன்மை அல்லது சாதிருசியம். (3) மறுதலை அல்லது விரோதம்—சம்ஸ்கிருத பாஷையிலும், இங்கிலீஷ் பாஷையிலும், ஒரேவார்த்தை முதற்கண் பேசிய இரண்டு அர்த்தங்களையும் காண்பிக்கும்படி உபயோகப்படுகின்றன. ஆனால் தமிழ்ப் பாஷையிலோ நமக்கு இரண்டு வேறு வேறு வார்த்தைகள் கிடைத்துள்ளன. அவை "இல்லை" "அல்லை" யென்ற இரண்டு வார்த்தைகளே "அத்வைதம்" என்ற வார்த்தையில் முதல் அர்த்தத்தை



நாம் சமர்ப்பித்துப் பார்ப்போமானால், இரண்டில் யாதாவதொன்றேனும், அல்லது இரண்டுமேனும் "இல்லவேயில்லை" யென்று சொல்லவேண்டி வரும். மேலும் இரண்டிலொன் றாவதுண்டு என்றேனும், அல்லது இரண்டுமில்லை யென்றேனும் முடிவுசொல்லவேண்டி வரும். ஸ்ரீசிவஞான சுவாமிகள் நமக்குக் குறிப்பிட்டுக் காண்பித்தபடி இதரமத ஸ்தாபனர்களாகிய ஆசார்யர்கள் இந்த "அத்வைதம்" என்ற சப்தத்தை, "ஒன்று" என்ற அதன் 'அபாவ' அர்த்தத்தில் எடுத்துக்கொண் டிருக்கின்றார்கள். சாதிருசிய அர்த்தத்தில் அதை யுபயோகிப்போமானால், அது "வேறு அல்லாத" அல்லது "இரண்டற்ற" என்ற அர்த்த புஷ்டியைத் தருமென்க. இந்த அர்த்தத்தை குறள் விளக்கியும் திருஷ்டாந்தித்தும் கூறுகின்றது.

திருக்குறள் 86-வது அத்யாயம் முதல் குறள் தரிசனைசெய்க

"பொருள் அல்லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானு மாணாப்பிறப்பு"

இங்கே பிரயோகிக்கப் பட்டுள்ள வார்த்தை "அல்ல" என்பதே. அதனர்த்தம் தான் என்ன? நம்முன்பாக விரண்டு பதார்த்தங்கள்,—திருக்குறள் பிரதி யொன்றும் சிவஞானபோதம் பிரதி யொன்றும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். யாதாவதொருவன் ஒரு புத்தகத்தை மற்றொன்றாகக்கண்டு மருளுவானாதல், அவையே மாயையென்று சொல்லலாம். மித்யாஞானம். தப்பறிவு அல்லது அவித்யா அல்லது ஆணவம் என்று சொல்லுதலுமொல்லும். இங்கே அந்த இரண்டு புத்தகங்களுமிருக்கின்றன வென்ற வுண்மையை யொருவரு மறுத்திலர்.

ஆயின், "பொருள் அல்லவற்றை என்றதற்குப் பதிலாக, பொருள் இல்லவற்றை" என்ற பதப்பிரயோகம் இருந்திருக்குமானால், அப்போது அர்த்தம் முழுமையும் வேறுபட்டிருந்து போகத்தடையில்லை. அப்போது எடுத்துக்கொண்ட [illegible] குறளுக்கு வேறு ஓர் அர்த்தம் உண்டாய் விடுமென்பதுண்மை. அதாவது, நம் முன்பாக யாதொரு குறளின் பிரதியொன்று இல்லையாகவும், யாதொன்று இருப்பதாக நாம் மனஸ்கரி

க்கலாயினும் என்ற விபரீத அர்த்தம் அது கொடுக்கக் கூடும்.) முன்னம் சொன்ன விஷயத்தில், நம்முன் விருந்த பதார்த்தங்களின் இருப்பு சந்தேகிக்கப் படுதற்கு இடன் காணோம். இரண்டாவது யாம் மேற்கொண்ட விசாரணை விஷயத்தில் நம்முன்பாக விருந்த பதார்த்தத்தின் உண்மையான இருப்பு ஒப்புக் கொள்ளப்படாமற் போய்விட்டது கண்டீர். சாதாரணமாக மெடுக்கப்பட்ட "கிளிஞ்சல் வெள்ளி" என்ற திருஷ்டாந்தத்தில் இரண்டு பதார்த்தங்களும் எண்ணக் குறிப்புகளும் வாஸ்தவமாக உள்ளனவேயாம். அவையிரண்டும் உள்ளபடியே தனித்தனியு மிருந்தும் வேறுபட்டுக் கிடந்தாலும் ஒன்றையொன்றாகத் மயக்கவறிவால் கொண்டோம். அப்படிக் கொண்டதும் இவையிரண்டனுக்கு முள்ள ஓரே மாதிரியான காட்சியைக் கொண்டும் நாம் மருள நேரிட்டது. கிளிஞ்சலைப் போன்ற யாதொரு காட்சி வெள்ளிக்கு முள்ளது. ஒன்றைப் போன்ற காட்சி மேற்கூறிய விரண்டு புத்தகங்கட்கு முள்ளது. நம் முன்பாகக் கிளிஞ்சல் இல்லாதபோது, வெள்ளி ஞானம் நம்முன்பாக தோன்றக் கூடுமானால் இது அபாவ அர்த்தத்துக்குத் திருஷ்டாந்தமாகும். ஆனால் சாதாரணமாக அப்படிப்பட்ட யாதொரு பதார்த்தம் அல்லது எண்ணக் குறிப்பு நம்முன்பாகத் தோன்றவே மாட்டாது. இதே வித்தியாசம் இந்த இரண்டு மதங்களிலும் நாம் அவைகளை உணர்ந்து நெடுகத் தோன்றுவ தொன்றும். ஒரு மதமானது உடம்பும் உயிரும் உட்பட்ட பிரபஞ்சத்தை மெய்யாகவே கூறுகிறது. ஆனால் சாதாரணமாக நாம் உடம்பையே அறியாமையால் உயிர் அல்லது ஆத்மா வென்று நினைக்கின்றோம். அதனாலே அதற்கு—உடம்புக்கு—வேண்டிய விஷயங்களையே கவனிக்கலாயினோம். நம்முடைய கடமையோ ஆத்மாவின் ரக்ஷிப்பைப் பொறுத்த தொன்றாயிருத்தல் வேண்டும். இதை நாம் மறந்தோம். அப்படியே, சிலவேளை ஆன்மாவையும் அறிவின்மையால் கடவுளென்று எண்ணிப் பிராந்தியிலாழ்கின்றோம். இவைகளைத் தனித்தனியே ஆராய்ந்து பார்த்து இவைகளினுண்மையான சொரூபத்தை யுள்ளபடியே யுணர்ந்தோமாயின்; மேலும் உடம்பைச் சார்ந்த சுகங்களின் அற்பத் தன்மை



யையும் உள்ளபடியே யுணரப் பெற்றோமாயின், அல்லமேலும் பரமேஸ்வரனோடு அத்வைத சம்பந்தம் பெற்று அநுபவிக்கும் அறியாச் சிவயோகத்தை யுத்தேசித்துத் தேகயோகங்களைப் பின் பலேதலை யதிலே வொழித்து விட்டோமாயின், நாம் செல்லவேண்டிய மார்க்கம் பரிசுத்தமாய்ப் போய்விடுமே.

ஸ்ரீ திருவள்ளுவ நாயனார் இதே அபிப்பிராயத்தைத் தழுவினவராய் ஒரு குறள் கட்டளையிட்டருளியுள்ளார்.

"இருள் நீங்கி இன்பம் பயக்கு மருள் நீங்கி
மாசறு காட்சியவர்க்கு"

இந்த விசாரணையில் உலகத்தின் இருப்பை மறுப்பான் யாதொரு முயற்சியும் ஏற்படக் காணோம். பாபத்தின் இருப்பும் மறுக்கப் படவில்லை. நம்முடைய இருப்பும் கடவுளிருப்பும் மறுக்கப் படவில்லை. ஆனால் இந்தப் பதார்த்தங்களுள் ஒன்றியின்றும் ஒன்றை வேறு பிரித்துப் பார்ப்பான் நாம் ஏவப்படுகின்றோம். மற்றைய மதத்திருஷ்டியில், உலகமென்பதொன்றில்லை பாவமில்லை, ஆன்மாவில்லை—மேலும் இவை போன்ற எல்லா விபரீதமயக்கத் தோற்றங்களும் எழாவென்றன. ஆனால், "ஏன்" அப்படி எழல் வேண்டும் என்ற கேள்விக்கு மட்டும் சமாதானமே கிடையாது.

ஆனாலும், முதற்கண் நாம் ஒன்று உறுதியாகச் சொல்லி முடிப்போமாக. சித்தாந்த சாஸ்திர விசாரணையை மேற்கொண்ட பலநூல் ஆசிரியர்கள் எதிர்மறை அசைவை—ந, என்ற முதலெழுத்தை—"அபாவ" அர்த்தத்தில் கொள்ளாமல்—அதுகாரியத்து "இன்மை" ப்ரயோகத்தில் அமைத்துக் கொள்ளாமல்—சாதிருமைய "அன்மை" ப்ரயோகத்தில் அமைத்து மகிழ்வாராயினார். மேலே அவர்களுடைய மதவிசாரணையை அவர்களே பன்னிப் பூர்த்தி செய்கின்றார்கள் என்பதை யோதுவோமாக.

[illegible] என்ற [illegible] ...
[illegible]

முடிவற்ற பிரபஞ்சத்துக்கும் ஏற்படுத்திய சம்பந்தம் என்றும், "தருமமாவது" (morality) இந்தச் சம்பந்தம் காரணமாகத்தனது வாழ் நாளைச் சீர்பெற நடத்துதல் என்றும் கூறுகின்றார். சித்தாந்த நூலாசிரியர்களும் இதே மாதிரியாகவே கடவுளுக்குப் பக்கட்கு முள்ள சம்பந்தத்தையும் கடவுளுக்கும் பிரபஞ்சத்துக்கும் உள்ள சம்பந்தத்தையும் புகுந்து ஆராய்வான் முயற்சிப்பாராயினர்.

அப்படிச் செய்வதினால் எல்லாத் துன்பத்தையும் பாபத்தையும் அறவே ஒழிப்பான் பிரயோசனப்படும் கருவிகளை அல்லது சாதனத்தை நமக்கு வழித்துணையாம் படி அன்றே கூறுகின்றனர்.

சிவஞான போதம் இரண்டாம் சூத்திரத்தின் முதல் இரண்டு வார்த்தைகளிலேயே முதல் பிரமாணவுண்மை யடங்கி யிருத்தல் ஆழ்ந்து சிந்திப்பார்க்குச் சாலப்பிரகாச மாகும்.

"அவையே தானே யாய்"

கடவுள் அவைகளோடு ஒன்று பட்டும்

வேறாகவும் இருக்கின்றார்.

இத்துடன் கூட ஸ்ரீ அருணந்தி சிவாச் சாரியசுவாமிகள். மற்றொரு சம்பந்தத்தையும் சேர்த்துச் சொல்கின்றார்கள். அதாவது "உடன் அல்லது பேதாபேதம்" என்பதேயாம். இதில் அபேதம்—பேதம்—பேதா பேதம் என்ற சம்பந்தங்கள் எல்லாம் தொக்கு நிற்கின்றன.

ஆனால், மற்றைய மதங்களோ வென்றால்—இந்த சம்பந்தங்களில் ஒன்றை மட்டும் ஆதாரமாக வொப்புக்கொண்டு அதன்மேல் தத்தம் மதக்கட்டிடங்களைக் கட்ட வாரம்பிக்கின்றன. "அபேத" சம்பந்தத்தை நிரூபித்தற்கு உபயோகப்படுத்தும் உபமானம், "பொன்னும் பணியு" மென்பதே. "பேத" சம்பந்தத்தைக் காண்பிக்கும்படி யெடுத்தாளப் பட்ட உவமைய லங்காரம் "இருளும் ஒளியும்" என்பதே. "பேதாபேத" சம்பந்தத்தை மெய்ப்படுத்துவான், துணைக் கொண்ட உபமானம் சொல்லும் பொருளும், என்பதே. இந்த பல்வேறுபட்ட திரு



ஷ்டிகளை (views) ஒன்றோ டொன்று ஒக்கச் செய்தலசாத்யமாகும். இவைகள் சந்திக்கத் தக்க இடம் ஒன்றும் காண்ப தரிதாயிற்றெனக. இந்த பல்வேறு பட்ட சம்பந்தங்களையுமே சித்தாந்த ஞானம்பிடிகையாக ஒப்புக்கொண்டு வியவகாரம் செய்யா நின்றது கண்டீர். ஆனால் சித்தாந்திகள் இவைகட்கு வேறு திருஷ்டாந்தங்களை வெடுத்துக் காண்பிக்கின்றனர். அதாவது, "உடம்புமுயிரும்" என்றதை "அபேத" வாதத்துக்கு உபயோகம் செய்கிறார்கள். "கண்ணும் கண்ணொளியும் அருக்கனொளியும்" என்றதை "பேத" வாதத்துக் குபயோகம் செய்திருக்கின்றார்கள். "ஆன்மாவும் கண்ணொளியும்" என்றதை "பேதாபேத" விலக்கணத்தைத் தரிசிப்பான் எடுத்து ஆளுகின்றார்கள். இவ்வுண்மை மேலே உதகரிக்கப் பெற்ற ஸ்ரீ உமாபதி சிவாசார்ய சுவாமிகளின் மெய்ம் மொழிகளைத் தரிசித்த வழியே நாம் காணலாகும். இம்மூவகையாக இருந்தும் ஒன்றையொன்று முரண்படுத்தாது இந்தவாதங்கள் சித்தாந்த மதத்தில் பிரகாசிப்பனவாயின. ஆதலினால், இந்த சித்தாந்த அற்புத திருஷ்டியில் ஏதோ நவீனமானதோ ருண்மை யிருத்தலை நாம் உணர்ந்தறியக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஏனென்றால் இந்தப் பல்வேறுபட்டசம்பந்தங்களை சமாலப் படுத்திக்கனிப்புறும் பெருமிதம் இதனிடம் தானே காணக்கிடைப்ப தன்றோ? அப்படிக்கிருந்தும் தன்னுடைய கூற்றுக்கும் இவைமுரண்படாமல் முடிந்தனவன்றோ? மேலும் ஒன்றை யொன்று கிரமப்பிரகாரம் தழுவி நின்று ஒரு பெரு முதலாகவும் இவை முடிந்தனவன்றோ? என்னே! இதனருமை பெருமை! மேலும் இந்த நவீன சம்பந்தத்தைத்தான்—சுலபத்தில் தொட்டுக் காட்டக் கூடாததும் இன்னதென்று வரை யறுத்துக் காட்டக் கூடாததுமாயுள்ள தாகியவிது—"அத்வைதம்" என்ற அரும்பத பிரயோகத்தால் சித்தாந்தச் செல்வராகும் நம்மனோர் கூறி மகிழ்ந்தனர் அன்றே!

ஸ்ரீ மெய்கண்ட தேவரும் இரண்டாம் சூத்திரமுதல் அதிகரணத்தில் இந்த பதத்தைத் தானே விசாரிக்கின்றார்கள்.

"இது ஈண்டு அத்துவிதம் என்ற சொல்லானே ஏகமென்னில், ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமா யிட்டு."

அதாவது பொருள் மாத்திரத்தானே வித்யாஸ மிருப்பதுண்மையேனும், ஒன்றி நின்றும் ஒன்றைப் பிரித்தல் முடியாததால், அவைகளின் வேறன்மையை வற்புறுத்திய தாகும்.

இதற்கு அப்பெரியார் "உயிர் உடல்" என்ற திருஷ்டாந்தத்தை யெடுத்து வோதலாயினார். இவையிரண்டும் வேறு வேறாயிருந்தாலும் கூட, யாதொரு உயிர் தனது சரீரத்தோடு தான் ஒன்றுபட்டுக் கிடக்கின்றது. அவையிரண்டனுக்குமுள்ள பிரிவுபடாச் சம்பந்த விசேஷத்தால் இதேமாதிரியாகவே, உயிரும் தன் இறைவனுடன் ஒன்றாகவே தன்னைக் காணாநின்றது! ஆயினும் கடவுள் ஆன்மாவல்லர். ஆன்மா கடவுளாகாது. அதனானே கடவுள் ஒருவரே, அவர் ஆன்மாவுடன் ஒன்றாயிருந்தும் வேறாகவு மிருக்கின்றார். அவரது இரண்டாவது வெண்பாவில் "ஏகமேவாத் விதீயம்" என்ற மந்திரத்தைக் கூறுபடுத்தி உதாரணமுகத்தால் விசாரிக்க லாயினார்.

"ஒன்றென்றது ஒன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்றென்ற நீபாசத் தோடுளைகாண்—ஒன்றின்றால்
அக்கரங்க ளின்றாம் அகரவுயிரின்றேல்
இக்கிர மத்தென்னு மிருக்கு."

இந்தத் திருஷ்டாந்தத்தை யூகித்துச் சரிவரவுணர்ந்தோமேயானால் அதன் (அத்வைத பதத்தின்) உண்மையார்த்தம் நமக்கு உள்ளபடியே மென்மேலும் பிரகாசமாகத் தடையில்லை. உதாரணம் உயிரெழுத்தையும் மெய்யெழுத்துக்களையும் பொறுத்த தொன்றாம். அதாவது. உயிரும் மெய் அல்லது உடலும் —ஆத்மாவும் அதன் உடலும் என்ற அர்த்தத்தையுந்தரும்.

"உடல் மேலுயிர் வந்து ஒன்றுவது இயல்பே."

உயிரெழுத்தானது மெய்யெழுத்துக்களோடு ஒன்றி நிற்பது இயற்கையைப் பொறுத்த சம்பந்தமேயாம். இது நன்



னூல் சூத்திரம். 'உடலும் ஆன்மாவும்' "என்ற திருஷ்டாந்தம் தான் முதல் பாட்டில் நமக்குச் சொல்லி வைக்கப்பட்டது. ஆகையினாலே கடவுளுக்கும் பிரபஞ்சத்துக்கும் நேரிட்டுள்ள சம்பந்தத்தை வெளிப்படுத்த நமக்கு இரண்டு விதமான உதாரணங்கள் கிடைத்திருக்கின்றன கண்டீர். ஒரே பெயரால் பேசப்பட்ட இந்த இரண்டு திருஷ்டாந்தங்களுமே, உயிருக்கும் உடம்புக்கும் உள்ள சம்பந்தம் தானே உயிரெழுத்துக்கும் மெய்யெழுத்துகளுக்கும் ஏற்பட்டுள்ளன வென்று நமக்கு ஸ்பஷ்டமாக எடுத்துக் காண்பியா நின்றன,

விசிஷ்டாத்வைத மதநூலாசிரியர்கள் இந்த "உடலுயிர்" என்ற திருஷ்டாந்தத்தையே உபயோகித்துள்ளார்கள் என்பது நிச்சயமே. ஆனால் எந்த சந்தர்ப்பத்திலும் அன்னார் இந்தசம்பந்தத்தைக் குறித்து யாதொரு விசாரணையு மேற் கொள்ளக்காணோம். இதன்றியும் "உயிரெழுத்து மெய்யெழுத்து சம்பந்தம்" என்ற உவமானத்தையும் அவர்கள் உணர்ந்தவர்களாகக் கொஞ்சங்கூட ஏற்படக்காணோம்.

டாக்டர் பெய்ன் என்ற துரை இந்த கேள்வியைத்தமது "மனசும் தேகமும்" என்று மகுடம் புனைந்த நூலின்கண் விசாரணை மேற் கொண்டுள்ளாரென்றறிக. நாம் அதைக் குறித்து "சித்தாந்த தீபிகை" இரண்டாம் வால்யம் பக்கம் 13ல் எழுதியிருக்கின்றோம். அதையே மீண்டும் இங்கு விவரிப்பாம்.

## உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துகளும்.

(மனசும் தேகமும்)

"எழுத்துகளிலே, நான் அகா
மாயிருக்கின்றேன்."—பகவத்கீதை.

"ஜடப்பொருளாகிய விஷயம், அல்லது பதார்த்தத்தோடும் பரந்துகிடக்கும் பிரபஞ்சத்தோடும் மனம் ஒன்று பட்டிருக்கின்றது. ஆனால், அந்த சம்பந்தம் அடைந்துள்ள மனதுக்கு நிகளமகல மில்லாததால், மற்றதனுடன் இட சம்பந்தத்தையது பெறுதலு மரிது. இந்த அபூர்வமான ஒற்றுமையை எந்தவிதமான பாஷையினாலாவது வழக்கத்திலுள்ள எந்த விதமான உதாரணத்தினாலாவது விளக்கலா மென்றால் கஷ்டமாயிருக்கின்றது. எல்லா சாமான்யமான சேர்க்கைகளையும் நோக்கி இது முரணாகவும், நொடியுள்ளதாகவும் காணப்படுகின்றது.

[பெயின் பண்டிதர்]

மேலே நாம் உதகரித்துள்ள வசனங்களானவை 'மனமும் உடலும்' என்ற மகுடங் கொடுத்து டாக்டர் பெயின் எழுதியுள்ள முக்கியமான புத்தகத்தினின்றும் எடுக்கப்பட்டது. அந்த புத்தகத்தி லடங்கியுள்ள பல அத்தியாயங்களும் நாம் சிரத்தையோடும் வாசிக்கக் கூடியவைகளேயே யாம். ஆனால் மகா பண்டிதராகிய அவர்களின் முடிவுகளை நாம் ஒப்புக்கொள்ள வேண்டிய அவசியம் காணோம். அவர் எண்ணுவது போல இவ்விதமான தத்வஞானம் தான் இனிமேல் வருங்காலத்து நிலைக்குமென்றும் நாம் எண்ண வேண்டியதில்லை. ஆனால் முக்கியமாக இப்போது அவர் காட்சிப் பிரமாணத்தினால் அறியக்கூடிய விஷயங்களைக்குறித்து மட்டும் ஆராய்வது தான் நமதுகடமை.

அதன்மேல் கிரமமான தர்க்கசாஸ்த்திர சம்பந்தத்தைக் கொண்டு நாம் அநுமானிக்கக் கூடிய விஷயங்களை யநுமானிக்கக்கூடும். இவ்விதமாக ஆராயப் புகுந்த விடத்து மனதுடல் இவ



ற்றின் தன்மையும், அவற்றின் சம்பந்தமுந் தானென்ன. மனம் என்பது அறிவு (Intellect) இச்சை (Will) உணர்வு (feelings) (உணர்வு என்றபதம் ஐம்புலனுகர்ச்சியின் உண்டாகிய இன்பதுன்ப உணர்ச்சியுடன் காமகுரோத முதலிய அநுபவங்களையும் உணர்த்தும்.)

"இவைகள் ஒன்றினில் மூன்றுயுள்ளது. இவைகள் மூன்றும் தம்மில் வேறுபட்டிருந்தும் ஒன்றைவிட்டு ஒன்று இயங்காத்தன்மையால் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்கின்றது. அறிவும் இச்சையும் உணர்வு நிகழ்ந்தாலன்றித் தனியே எதுவும் காணப்படமாட்டாது. உணர்வு பூரணமாக வெளிப் பாடடையுங்காலம் அவைகளோடும் கூட, மற்றவைகளின் மூலமும் தோன்றியே நின்றதென்க."

உணர்வும் முடிவில் இன்பதுன்பமேயாகும்! அவ்வுணர்வை இச்சையுடன் ஒன்றாக மயங்குதல் சாலாது. ஆனாலும் டாக்டர் பெயின் என்பவர்மேலே உதகரித்த வாக்கியங்களில் அபிப்பிராயப் படுவது என்னவெனில், உணர்வு நிகழ்ச்சியின் பின்பற்றியே அறிவும் இச்சையும் வளருமென்றும் எண்ணயாவதும் அவ்வுணர்வுள்ளும் ஐம்புலன்கள் வழியாக உண்டாகின்றதென்றும் தான் வெளியாகின்றன. மேலும் இன்பமும் உயிரை வளர்ககச் செய்யும் யாதொரு கர்மத்தினாலே உண்டாகக் கூடியதாயுள்ளது (உயிர்க்கிதம் செய்தல்) துன்பமும் யாதொரு உயிர்க்குகேடு தேடியுசெய்கையைப் பொறுத்ததாயுள்ளது (உயிர்கதம் செய்தல்) நீதி நூல்களினும் இதைக் கொண்டே நன்மை தீமை, புண்ணியம் பாவமெனவும் பாகுபாடு ஏற்படுகின்றது. மையைத் தான் காப்பு விதியென (Law of conservation) * மேலும் கூறுவர். ஆனாலும் எல்லா இன்பதுன்பங் கட்கும் ஒருவரையறை யுள்ளது. அதிக்கிரமித்தால் சந்தோஷமுங் கூட துக்கமாய் முடியும். இன்னொரு உண்மையுமுண்டு இம் மனோதத்வ சம்பந்தமாக அதை சம்பந்தவிதி யென்பார்கள்.

* காப்புவிதி யென்றது பதார்த்தங்களின் [illegible] யென்றும் குன்றுபடாது என்றும், அதிகப்படாதென்றும் சொல்வது.

'நாம் பிரஞ்ஞையோடு விளங்கவேண்டுமானால் நம்முடைய நினைப்பும் உணர்வும் மாறுபட்டு வரவேண்டு'' மென்பதே. எவ்வித வுணர்வும் அறிவும் நீண்டு அநுபவிப்போமானால், அது வர வரக்குறைந்து மெலிந்தும் முடிவில் உணர்வு அற்றே அந்தகாரமாய்ப் போய் விடும். மறுபடியும் ஒடி உணர்வை நினைப்புக்குக் கொண்டு வரவேண்டுமானால் அதனை மறந்து வேறொன்றை நினைத்து மறுபடியும் முன் நினைப்பை நினைக்கவேண்டும்—தமிழ் தத்வஞானிகள் இந்த உண்மையை 'நினைப்புண்டேல் மறப்புண்டாம்' என்று கூறுகின்றார்கள்.

இந்த விதியின் உண்மை எட்டவில்லை விளங்கவில்லை யென்றார், பய்ன்பண்டிதர். ஆனால் ஹிந்து தத்வஞானிகள் இதற்கு தக்க நியாயம் கூறவல்லவராயினர். மனிதனறிவு சிற்றறிவு. அது நாளடைவில் அதிகமாகப் பலப்படுத்திக்கொண்டே போகவும் நிறைந்த சாதனத்தினாலே, மனமுழுமையும் அறிவு மயமாகி விடக்கூடும். யோக அப்பியாசம் செய்யும் போது முதல் முதல் வரக்கூடியது இருளேயாம். பிரகாசமல்ல. இருட்டே அதிகரித்துக் கொண்டுபோகும் சில நேரம். ஆனால் யோகசாதனையிலேயே ஒருவன் முற்றுவானானால் முடிவில் உண்மை ஒளிபிறக்கும். அவனுக் குண்டாய் விடுகிறது இடையிலுள்ள காலத்திலே அந்த வொளியின் பலவித வேறுபாட்டால் பலவித தப்பபிப்பிராயத்துக்குட் படுத்தப் படுகிறது. முடிவில் நம்முடைய இச்சைதான் நம்முடைய உணர்வு வழியே சென்று நம்முடைய கர்மங்களை ஏவுகின்றது. அறிவும் பேதவறிவென்றும் அபேத அறிவென்றும், * ஞாபகஅறிவென்றும் பிரிகின்றது. ஞாபகசக்தி, புத்தி, தீர்மானம் செய்யும் சக்தி, முதலிய மற்றைய எல்லா மனோசக்திகளையும் இந்த மூன்று தலைப்பின் கீழாகக் கொண்டுவந்து விடலாம். அறிவுண்டாதற்கு மூலமாயுள்ளதது என்க. விஷ

* பேத அறிவு (Sense of difference) என்றது பதார்த்தங்களை வெவ்வேறாக வைத்து அறியும் அறிவு—அபேத அறிவு (Sense of similarity) அப்பதார்த்தங்களில், ஒற்றுமை யிருப்பதையறியும் அறிவு.



யங்களில் பேதமில்லா விடில் எல்லாம் ஒரே தன்மையினதாகவே யிருந்து விட்டால், யாதொரு அறிவும் அல்லது யாதொரு அறிவுநிகழ்ச்சியும் கூடாமை யாகும். ஒரே வர்ணமிருந்திருக்குமானால் சித்திர சாத்திரம் குதிரைக் கொம்பாக முடிந்துவிடும். ஒரே சப்தம், ஒரே சுரம், இருக்குமானால் நாம் சங்கீதம் கேட்பதற் கில்லாமற் போய்விடு மன்றே? இப்போதிருக்கிற விஷயங்களை யுய்த்து நோக்குவோமானால், சம்பந்த விதியானது* நம்முடைய எல்லா வியவகாரங்களுக்கும் அடிப்படை யாயிருக்கின்றது. பேதமிருந்தால் மட்டும், அபேத ஞானம் நமக்கு உபயோகமாகும். ஆகையாற்றான் அபேத ஞானத்தையும் ஒரு அறிவின் கூறாக எண்ணப்பட்டு, உலக வியாபாரங்களை நவீனம் நவீனமாகக் கண்டுபிடிப்பதில், முக்கியகரமாயுள்ளது. கடந்துபோன நமதநுபவங்களையும் எண்ணங்களையும் நாம் ஞாபகம் பண்ணிக்கொள்ளும் சக்தி நமக்கில்லாத பட்சத்தில் அதியற்புதமான மனோசக்தியை நாம் பெறுதல் அருமையாய் விடும் மேலும் மனசுக்கு ஒரு அபூர்வமான குணமுண்டு. அதைய தன் தோஷமாகக் கூடச்சொல்லலாம். அதுவும் முன்னே சொன்ன சம்பந்த விதியை ஒட்டியது. நம்முடைய அறிவு நம்முடைய எல்லாப் புலன்களை ஒன்றாக ஒரே காலத்தில் அறியமாட்டாது கிடக்கிறது. ஒரே தடவையில் யாதொரு கண்ணினால் காணும் ஒரு பதார்த்தத்தையும், ஸ்பரிசத்தால் அறியும் மற்றொன்றையும், செவியால் தொடும் பிறி தொன்றையும், நாசியால்உணரும் இன்னுமொன்றையும் அநுபவித்தல் கூடாமையே. எத்துணையற்பமாக அது…காணப்பட்ட போதினுங் கூட மனம் ஒன்றினின்றும் ஒன்றுக்குபாய்வதற்கு இடையில் கால அவகாசம் ஒன்றுண்டாய் விடுகிறது. அஷ்டாவதானசக்தியும் இதற்குமுரணல்ல வென்க. அவனுக்கு நல்ல ஞாபகசக்தி யிருத்தல் இன்றியமையாத தொன்றாம். அதைக் கொண்டும், எத்துணை யதிகமான அவதானங்களை ஒருவன் செய்து முடிக்கின்றானோ

* சம்பந்தவிதி—(Law of Relativity) என்றது நாமும் உலகமும் பேதப்பட்டு நின்று தான் அறிவுண்டாகும் என்பதும், ஏகபதார்த்தமுண்டெனில் அதனைத் தரிசிக்க இயலா தென்பதும்.

அத்துணை யதிகமாக அவன் காலத்தை நீட்டியே செய்தல் வேண்டும்.

இப்படி மனோதத்துவத்தைக் கூறுபாடு செய்து காண்கிற போது, யாதோருணர்வுக்கும் அதோடு சேர்ந்த பிரஞ்ஞைக்கும், இச்சைக்குப் அதோடு சம்பந்தப்பட்ட பிரஞ்ஞைக்கும் அநுமிதிக்கும் அதைத்தழுவி நிற்கும் பிரஞ்ஞைக்கு, பேதம் பாராட்டாமல் இரண்டும் ஒன்றாகவே எண்ணப்படுகின்றன. ஆயின் நம்முடைய தத்வஞான விசாரணையில் அவைகளின் வித்யாஸம் பேசப்படுகிறதுண்மை. உணர்வு இச்சை அறிவினையும், அவைகளைத்தழுவிய பிரஞ்ஞையினின்றும் வித்யாஸப்படுத்திக் காண்பிக்கப்படுகின்றன. சுத்தப்பிரஞ்ஞையைத்தான் ஆத்மா அல்லது சத்தென்று நாம் அழையாநின்றோம். மற்றவையெல்லாம் உடம்போடும் உலகத்தோடும் சேர்த்துப்படிக்கப்பட்டு அநாத்மா அல்லது அசத் என்று தள்ளப்படுகின்றன. இந்த வித்யாஸத்தைப்பற்றி மேலே போகப்போக நாம் விரிவாகப் பேசுவோம். ஆனாலும், அறிவு அறிவின் கூறுகளினின்றும் உடலும் உலகமும் அதனுடைய வியாபாரங்களும் வேறு பிரித்துக் காட்டப்படுகின்றன. இவை யெல்லாம் பொதுத்தமாக ஜடமென்றேனும், அல்லது அநாத்மா வென்றேனும், அல்லது ஞேய (விஷயம்) (object) பதார்த்தமென்றேனும், அழைக்கப்படல் காண்க. இவைகட்கென்றே சில குணங்களுள்ளன. அவைகள் மனசினிடத்தே காணப்படவேயில்லை. அவையாவை? அகலமும் நீளமும் (இடசம்பந்தமாகிய அமைப்பு) இடங்கொளல், கெட்டியாயிருக்குந்தன்மை, மிருதுவாயிருக்குந்தன்மை, (அசைவிலாமை) பளுவு, வர்ணம், சூடு, ஒலி, மின்சாரசக்தி, உறுப்புகளைச்சேர்ந்த தருமங்கள், ரசாயன சாஸ்திர சம்பந்தமான தருமங்கள் முதலிய. இவைகள் யாவற்றிலும் முக்கியமானது இடங்கொளற்றன்மை யென்பதே. மனம் அங்ஙனமன்று. டாக்டர் பெயின் கூறுவதாவது.

"நமக்கு இந்த கஷ்டம் நேரிடுகிறது. மனோநிலைகளும் தேகநிலைகளும் முழுவதும் வேறு வேறாக காணப்படுகிறது. அவை



யொன்றாகவைத்தெண்ணப் படுவதற்கு மிகவும் பொதுவாகச் சொல்லலாகும், காலவொற்றுமையைத்தவிர எவ்விதமான சமத்வமும் சொல்லுவதற் கிடமில்லை. ஒன்றினிடத்து நாம் புத்தியை வைத்துள்ளபோது மற்றொன்றின் குணங்களின் வேறுபாடுகள் முழுமையுமே நாம்மறந்து விடவேண்டியிருக்கிறது. நாம் ஒரு மூளையையும், நரம்புகளையும் பற்றி விசாரணைமேற் கொண்டபோது, நாம் ஞேய பதார்த்தம் அல்லது ஜடபதார்த்த சம்பந்தமான விஷயத்திலேயே மனமுழுதையும் செலுத்தலாகிறோம். அந்த நிமிஷத்திலே உள்ளபடி அறிவின் தொழிலைச் சிந்திப்பது கூடாமையாயுள்ளது அநிருதிதமாக, நாம் நினைப்பை மாற்றினொழிய. நம்முடைய மனோ அநுபவத்திற்கும், நம்முணர்ச்சிகளுக்கும் நமதெண்ணங்கட்கும் பரப்பில்லை, இடமில்லை, உருவமில்லை, உருவம்போன்ற குறியுமில்லை, பிரிவுமில்லை அவயவமுமில்லை.* இவையெல்லாவற்றையும் மறந்தாலொழிய மானசவியாபார மொன்றையும் நாம் கவனிக்க முடியாது. நாம் நாட்டுப்புறத்தில் இளவேனிற் காலத்தில் உலாவித்திரியும் போது, நம்முடைய மனசானது அங்குள்ள கொடிகள் புட்பங்கள், புல்மேடைகள் முதலிய வைகளின் கண்ணே பிரவர்த்திக்கிறது கண் கூடாமே! இவைகள் முழுமையும் ஞேயபதார்த்தங்களேயாம். திடீரென்றும் பலத்தோடும் பேபிளாசம் என்ற புட்பத்தின் வாசனை நம்முடைய மனதைக் கவர்கின்றது.

"ஒருநிமிஷம் அந்த சுகவாசனையில் நாம் விழுங்கப்பட்டு நிற்கின்றோம். அந்தக்கணம் வரைக்கும் பிரபஞ்ச வாசனை நமக்கில்லாமற் போய் விடுகிறது. பரப்புள்ள பதார்த்தம் எதனையும் நாம் நினையாமல் நிற்கின்றோம். நமக்கு இடம் என்ற பொருளே இல்லாமற் போய்விடுகிறது. அப்படிப்பட்ட நிலைகளானவை வெகு சொற்பநேரம் தான் ஜீவிக்கின்றன. க்ஷணமாத்திரமாக மின்னல்போல மின்னுவன. அவைகள் அடிக்கடி பிரபஞ்சவிஷய வாசனைக

* சிவஞான சித்தியார், 4 சூ-15 பாட்டில், உயிரை அணுவென்றால் அதற்கு அவயவம் செப்பவேண்டி சடப்பொருளோடு ஒன்றாய்க்கெடும் என்றார்.

ளோடும் கலந்து மாறி மாறி வருகின்றன. அவைகள் இருக்கும் வரையில், முழுசக்தி யோடும் பிரவர்த்திக்கும் வரையில், நாம் வேறு லோகத்திலிருக்கின்றோம். ஜடவுலகம் கெட்டழிந்துபோகின்றது. மறைக்கப்படுகின்றது, அந்த நிமிஷத்துக்கு நினைக்கக் கூடாதபடிபோல் விடுகின்றது கண்டீர்.

“இவ்வறிவு நிகழ்ச்சிகளை அதிசந்தோஷம் நமக்குதிடீரென்று உண்டாகுங் காலங்களினும், அல்லது சொல்ல முடியாத பெருந்துக்கம் நம்மை சடுதியில் மூடும்போதும், மற்றொன்றையு முணராது நாம் ஒருதனி விஷயத்தில் புத்தி முழுதையும் செலுத்தி மனோவியாபாரம் செய்து கிடக்குமமையத்தும், முக்கியமாக தியானநிலையிலழுந்தும் போதும், நாம் சரியாக உணரக்கூடும். ஆனால் அவைகள் கொஞ்சம் காலத்துக்கு அல்லாமல் நீண்டகாலம் பரிசுத்தமாக நம்மால் நினைக்கப்படுவதில்லை. அடிக்கடி விஷயவாசனைகள்--பரப்பு இடமுள்ள உலகவிஷயம்—நம்மையிழுத்துக்கொண்டு போய் விடுகின்றன.”

எத்துணைபேதமுள்ள வைகளாக இவைகள் காணப்பட்டாலுங் கூட, ஒரு ஆச்சர்யமான விஷயமுண்டு. உணர்ச்சியுள்ள ஒரு ஆத்மாவினிடம்—மனிதன், அல்லது மிருகத்தினிடம்—அவை ஒன்று சேர்ந்துள்ளதைக் காண்பாம். இவ்விரண்டின் சேர்க்கை, ஒற்றுமை, அடுத்தடுத்து வளருந்தன்மை,—இவைகளைத்தான் டாக்டர் பெயின் துரையவர்கள் பல அத்தியாயங்களில் வெகுசிரமத்தோடும் நமக்குக் காண்பிக்க முயலாநின்றனர். இதை நாம் மறுத்துக்கூற வேண்டிய அவசியமில்லை. இந்த சேர்க்கையாலும் ஒற்றுமையாலும், மனம் உடம்புக்குக் காரணமென்றுதல் உடம்பு மனசுக்குக் காரணமென்றுதல், நாம் யூகிப்பதற்கு யாதொருகாரணமுமில்லை யென்றே டாக்டர் பெயின் துரையும் ஒப்புக்கொள்ளுகின்றன ரன்றே? ஆனால், அவருடைய கட்சிதான் யாதோ வென்றால், சொல்லுதும். மனோதேகமே (உடல் உயிர்) மனோதேகத்துக்குக் காரணம் என்கிறார். எவ்வளவு தூரம் சென்றும் நாம் கூறுபாடு செய்துபார்க்கும்போது துவைதம் ஏற்படுகிறதே தவிரவேறில்லை. ஆனாலும் உடலை விட்டுத்தனியாக நிற்



கும் யாதொரு உயிரையும் சித்திக்கத்தக்கதாயில்லை. இதனை விளக்க அவர் பல்வேறு சொற்களை யுபயோகிக்கின்றார். அவையும்?

'பிரிக்கக் கூடாத இரட்டைப் பிள்ளைகள்'

'இரண்டுமுகமுள்ள ஒருபதார்த்தம்'

'இருகுணமுள்ள ஒரு குணி' முதலியன. இங்ஙனமாகவும் டாக்டர் பெயின் துரையவர்கள் ஏன்தாம் ஜடவாதிகளோடு சேர்ந்துக்கொள்ள வேண்டுமென்பது விளங்கவில்லை. அவரை இவையிரண்டையும் ஜடம் ஒன்றென்றே கூறிவிடவில்லையே. ஜடம்-மனசு அல்லது மனமும்—ஜடமும் (சத்து அசத்து) மட்டுமாகத்தானே அவர் அவைகளை யழையாநின்றனர். ஒருவேளை அவயவம் பெற்றயாதொரு தேகத்துக் கந்நியதா மனசை யவர் நிரூபணம் செய்ய முடியாமையால், அவர் அவ்வாறு கொண்டனர் போலும். இந்த முடிவும் சித்தாந்தியை யசைத்திலது கண்டீர், அவன் “முத்தியிலும் முதலுமுண்டு'' என்று கொண்டமையால் சித்தாந்தியும் டாக்டர் பெயினைப்போலவே உடம்புக்கந்நியாதா உயிர் ஒன்றிருப்பதைநம்புவதேயில்லை. இவ்வுடம்பு 25 கீழ்த்தத்வங்களாலானதெனக் கொண்டான். சித்தாந்த தீபிகையின் முதல்தொகுதி 10வது சஞ்சிகையில் கண்டிருக்கும் தத்வமரத்தைப்படித்துப் பார்த்தால், சர்வோத்கிருஷ்டமான பெருந்தேவதைகட்குக் கூட அசுத்தம் அல்லது சுத்தமாயையினாலான வொருதேகம் உண்டென்பது பிரகாசமாகும். மேலும் நாம் ஒன்று முன்னமேயே குறிப்பிட்டிருக்கின்றோமல்லவா? ஜடத்தை செயலற்றதோர் பதார்த்தமென்று சாதாரண சனங்கள் நினைக்கும் அபிப்பிராயம் தவறென்பதே. ஜடபதார்த்தத்தின் அதிசூக்கும நிலையில் அபார சக்திகள் இருப்பதால் அவைகளையே கடவுளென்று பலர் மயங்கியும்போய் விடுகிறார்கள். நிற்க, இப்போது நாம் கவனிக்கத்தக்கது உடல் உயிருக்கு உள்ள ஒற்றுமையே யாம். அச்சம்பந்தத்தை யிங்கே பேசும்போது முதற்கண் நமக்குண்டாகும் எண்ணம் எல்லாம் இடத்தைப் பொறுத்த சம்பந்தமாகவே முடியும்.

டாக்டர் பெய்ன்துரை, அப்படிப்பட்ட இடசம்பந்தம் நினைக்கக்கூடிய தல்லவென்றும் அசாத்ய மானதென்றும் [illegible]

வற்புறுத்திக் கூறுகின்றனர். பரப்புள்ள, நீளமகலமுள்ள அசித்துப்பதார்த்தத்துக்கும் அங்ஙனமில்லாத சித்பதார்த்தத்துக்கும் இடத்தைப் பொறுத்த சம்பந்தம் இருத்தலமையாது. ஆகையினாலே, 'அகம்' 'புறம்' 'வியாபகம்' 'வியாப்தி' என்ற பலவிதக் கூற்றுக்களெல்லாம் பிசகானவாயும் கெடுதியை விளைவிக்கக் கூடியனவாயுமுள்ளன. இந்த சம்பந்தம், காரணகாரிய சம்பந்தமல்ல. அப்படிப்பட்ட பொருத்தத்தை ஒன்றையொன்று இயக்கும் சம்பந்தமென்றும், அல்லது ஒன்று மற்றதை துணைக்காரணமாகக் கொண்டதாகவும் கூடாது. ஒரேவழியுண்டாகும் காரணசம்பந்தம் என்றதும், தெய்வாதீனமா யேற்படுத்தப்பட்ட பொருத்தமும், இப்போது பழங்கதைகளாகத் தள்ளுபடியாய் விட்டன. * இவ் இயற்கைப் பொருத்தம் அபூர்வமானதென்று நாம் கருதவேண்டியிருக்கிறது. இதைப்போன்ற வேறொரு தனிப்பொருத்தம் பிரகிருதி சம்பவங்களில் வேறெங்கும் கிடையவே கிடையாது. அப்படியிருந்தால் உதாரணத்தால் நாம் இவையோடு ஒத்திட்டுப் பார்க்கலாம். அல்லாமலும் அத்தகைய பொருத்தத்தை வெளியிடற்குத் தகுதியான சொல்லுங் கிடைப்பது அரிது. ஞேயபதார்த்த ஞானத்தினின்றும் ஞாதுரு அறிவினுக்கு மாறிச்செல்லும் மானசகர்மத்தைத் தெரிவிக்க, 'நிலைமையின் வேறுபாடு' என்ற சப்தபிரயோகந்தான் திருப்திகரமாயுள்ளது. இதனை விளக்க சரியான சொல்லுமில்லை, உதாரணமுமில்லை. அச்சம்பந்தம் இருந்தும், ஒருவகையில் அது ஒரு குஹ்ய விஷயமாயினும், முடிவாக ஏற்பட்ட விஷயத்திற்கு, மேலும் காரணம் தேடுவது எந்த வகையாலும் தர்க்கசாஸ்திரத்திற்கு ஒவ்வாது. மேலும், நாம் செய்யக்கூடியன வெல்லாம் என்னவென்று பார்ப்போம். பல்வே பட்ட இந்த சம்பந்தத்தின் தோற்றங்களை முடிந்தகாரணங்களைத் தேர்ந்தவுடன் நாம் செய்யக்கூடியனவெல்லாம் செய்தாய்விட்டன வென்க. இரண்டிற்கு மேற்பட்ட யாதொரு பெருமுடிவுக்கு நாம் போகக்கூடாது நின்ற பட்சத்தில் நாம் அங்கேயேயிருந்து திருப்தியடைவதே உத்தமம்.†

---

*இப்பொருத்தங்களெல்லாம், ஐரோப்பிய தத்வஞானிகளால்கூறப்பட்டது.
† இதுவரையும் பேய்ன் பண்டிதரின கூற்றாகும்.



இது நாம் தங்குவதற்கு உத்தமமான நிலையென்று நாம் நிச்சயமாக வறிகிறோம். இந்த வியாசத்தை நாம் எழுதப் புகுந்ததின் நோக்கம் இந்த அபிப்பிராயத்தி னின்றும் மாறுபடுதற் கல்ல. ஒன்றுமாத்திரம் கவனிக்க. தமிழில் இதற்கோருபமானம் இருக்கிறதென்று நாம் எண்ணலாமோ. அது இந்த விஷயத்துக்கு முழுவதும் பொருந்துமென்க. மேலும் இந்த சம்பந்தத்தையும் அது அதிகமாகப் பிரகாசப்படுத்திவிடு மென்க. இவ்வுதாரணம், பௌதிக ஞானிக்கும் மேம்பட்டு உண்மையை விளக்காநிற்கும். மேலும் நாம் தினந்தோறும் ஒருவித சொல்லை உபயோகப்படுத்தி வருகிறோம். அச்சொல்லில் இந்த முரண்பாடும் நொடியும் அமைந்துகிடக்கவும் காணலாம். இதைக் கூறுமுன் பெய்ன் பண்டிதர் தமது மானசசாஸ்திரத்தில் (Mental Science) காட்டிய சிலவுண்மைகளைக் காட்டுவோம். ஞேயவுணர்வெல்லாம் ஞாதுருவுண்டென்பதையே அநுமானிக்கிறது என்பதே! "எல்லா ஞேயபதார்த்த சம்பந்தமான அறிவு நிலைபங்களும், ஒருவகையில் மானசசம்பந்த நிலை களுமாகுமென்க." மனம் இருந்தாலொழிய,—பிரஞ்ஞையில்லாமல் இருக்கலாம்—ஒருபோதும் ஞேய பதார்த்தங்களின் அறிவு (நாம்) அடையவே மாட்டோம். உள்ளபடியே வெறும் ஞேய அறிவின் நிலைமை நமக்குக் கிட்டவே கிட்டாது. மனசு அதைத் தாங்கி நின்றாலொழிய விஷயஞானம் நமக்கெட்டாது. அந்த சமயத்துக்குமட்டும் மனசு இருக்கிறதென்ற அறிவை நாம் அடைவோமில்லை. அச்சமயம் அவ்வறிவு கெட்டழிந்து நிற்கிறது. அல்லது இப்படிச் சொல்லிப் பார்ப்போமா? ஒன்றையொன்று அவை ஒத்தில்லாமற் போய்விட்டாலும், மனசானது முழுமையும் ஜட் பதார்த்தத்தோடும் ஒன்றுபட்டுப் போய்விட்டது என்று சொல்லுவோம். ஆனால் மனசானது சுத்த மனோநிலையையும் எட்டியடைதல் அமையும், அப்போது ஞேயபதார்த்தங்கள் உள்ளனவென்று அந்த உயர்ந்தநிலையில் அது உணராது. ஆனால் விஷயஞானத்தோடு சம்பந்தப்பட்டதோடு ஞாதுரு ஒன்றுண்டென் அதுமானித்தற்கு இடமுண்டு. அப்படிப்பட்ட சுத்த மனோநிலையத்தில் ஞேயவிஷய பதார்த்தம் எங்கேயிருக்கிறது? அதுவுங்கூட இல்லாததுபோ லாய்விட்டது (சூந்யம்). ஜடம்தான் ஆதிமுதல்

தத்வம் என்று நினைத்தாலோ (அதற்கு பிரதிபந்தமாக) இந்த வுண்மை யொன்றிருக்கிறது காண்க. ஜடம் உயிர் உள்ளதாயும் உயிரற்றதாயும் காணப்படுகிறது, இந்த இரண்டு ஜடபதார்த்த அவஸ்தைகளுக்குள் எத்துணை வித்யாஸம் ஏற்பட்டுள்ளது. அதனுடைய உயிருள்ள வடிவத்தின் பெருமிதமிருக்கிறதே! அதென்ன? மனசினுடைய சாந்நித்யத்தின் விசேஷத்தினு லுண்டாயதா? அல்லது ஜடத்திலேயே இயற்கையாயுள்ள ஒருகுணமா? உயிரற்ற ஜடபதார்த்தமென்று சாமான்ய சனங்கள் கூறும் யாதொரு ஜடமும், அபாரசக்திகள் பொருந்தி யிருக்கின்றவென்று நாம் முன்னமேயே கூறினோம். அப்படியிருந்தும் ஜடத்தின் உயிரற்ற உருவங்களின் குணங்கட்கும் உருயிள்ள உருவங்களினுடைய குணங்கட்கும் யாதானும்ஒ ரு ஒற்றுமையிருக்கிற்தா? இது எப்படியிருந்தாலும்இருக்கட்டும் நம்முடைய உவமானத்தை நாம் சொல்ல ஆரம்பிப்போம். அதுதான் உயிரெழுத்து மெய்யெழுத்து உவமானமென்பது. கீதா சுலோகத்தை நாம் உதகரித்துக் காண்பித்தோமல்லவா? அதற்கு நாம் கொடுக்கப் பிரயத்தினப்பட்ட அர்த்தபுஷ்டி சங்கரபாஷ்யத்திலும் தேடிப்பார்த்தும் காணக் கிடைக்கவில்லை. ஒருவேளை சங்கரர் தமது முன்னமேயே தீர்மானம் செய்யப்பட்ட அபிப்பிராயத்துக்கு முரண்படு மபிப்பிராயத்தைச் சொல்ல வெளிவர மாட்டார்போலும்· ஆகையினாலே அதில் உண்மையிருந்தால் அது அதன்கண்ணேயே மறைந்திருந்தது கண்டீர். அதனுடைய திறவுகோலும் சித்தாந்த நூலாசிரியர்களிடமே யிருந்துவிட்டது. அதிபழமையான உவமானம் திருக்குறளில் ஒன்று உள்ளது அதன் முதற்பாவிலேயே அதுகாணலாகும்.

“அகரமுதல வெழுத் தெல்லாமாதி
பகவன்முதற் றேயுலகு.”

‘அ’ என்ற அக்ஷரம் எல்லா எழுத்துக்களுக்கும் முதலாயுள்ளதுபோலவே, பழம்பொருளாகிய பகவான் இந்த பிரபஞ்சத்தின்முதலாக விருக்கின்றார்.

‘அ’ என்ற எழுத்து முதலெழுத்தாகாது சில பாஷைகளில் இருந்தாலு மிருக்கலாம். இந்த உதாரணத்தால், கடவுளினுடைய



இடத்தைப் பொறுத்த முதன்மையை விளக்கவேண்டியதாயின் இன்னும் எத்தனையோ உவமானங்களை யதற்காக் நாம் காணலாம் அதனாலே பரிமேலழகர் அந்த வரிசைக்கிரமம் இடத்தைப் பொறுத்த தொன்றன்று, ஆனால் நாதமாத்திரையாகி இயல்பாற் பிறந்ததென்றார். இவ்வொலி முதல்முதல் நம்.வாய் அங்காத்ததினால் உண்டாகக்கூடியது. அவ்வொலியும், மற்ற உயிர்களுக்கும் மெய்களுக்கும் ஆதியாயுள்ளது கண்டீர். மற்றைய உயிரெழுத்துகளெல்லாம் அகரத்தின் சிதைவினால் உண்டாகிறதேயொழிய மற்றில்லையென்க. மேல் உயிர் மெய்யின் இலக்கணந்தான் என்னை? தானே ஒலிக்கக்கூடிய வெழுத்து உயிரெழுததென்று பேசப்படுகிறது. அதற்கு வேறு ஒலியினுடைய வுதவிவேண்டியதேயில்லை. மெய்யெழுத்தோ உயிரெழுத்தின் உதவியிருந்தா லன்றித்தானே ஒலிக்கக் கூடாதென்று கூறுப. இந்த ஒலிகளின் சுபாவத்தை இன்னும் கொஞ்சம் கூர்ந்து நாம் பரியாலோசனை செய்யப் புகுவாம். நாமொவ்வொருநாளும் இந்த ஒலிகளை சப்திக்கலாகின்றோம். அப்படியிருந்தும் அவைகள் சம்பந்தமாகவுள்ள அற்புதத்தைத் தெரிந்துக் கொள்ளாமல் போய்விடுகின்றோம்.

அது என் அப்படி? அடிக்கடி அவைகளை நாம் தரிசிக்கும் பழக்கத்தினாலே. “அ” என்ற அக்ஷரத்தை யுச்சரிக்க நாம் பிரயாசைப்படுகின்றோம். அது சர்வசாதாரணமாக வந்துவிடுகின்றது. வாயைத்திறப்பதினாலேயே அது வெளியாகிறது. யாதொருவிகாரமும் உதவியும் வேண்டியதில்லையே. ஆனால், நாம் (க்) என்ற சப்தத்தை யுச்சரிக்க முயற்சிப்போம். அதை இங்கிலீஷில் கே என்றும் தமிழில் க என்றும் க் என்றும் உச்சரிக்கிறோம் அதிலே ஒரு உயிரெழுத்தின் சப்தம் அடங்கியிருக்கிறது பாருங்கள். ஏ, அல்லது, அ, அல்லது, இ. இந்த உயிர்ச்சப்தத்தை நாம் பிரித்துவிடுவோம். அப்புறம் மெய்யெழுத்தை யுச்சரிக்க முயல்வோம். முயற்சி வீண் முயற்சியாகும். மெய் ஒலியே பிறக்காமற் போய்விடும். ஆகையினாலே மெய்யெழுத்தில் எப்போதும் ஒரு உயிரெழுத்தின் ஒலி இருந்தேதீரும். ஆனால் நாம் பிரக்ஞையோடும் அது அங்ஙனமிருப்பதாக அறிவது மட்டுமில்லை. ஆனால் தமிழ்ப்

பாஷை மேம்பாடுடைய தத்வஞானார்த்தமுடையதா யுள்ளபடியினாலே, நாம் எப்போதும் அதனுடைய உயிர்ப்பைக் கவனிப்பதற்காக சுத்த மெய்யெழுத்தை யெழுதும்போது அதன் தலைப்பில் நாம் ஒரு புள்ளியைப் போடுகின்றோம். மற்றைய வளைவானவும், நேரானவும், செங்குத்தானவுமான கோடுகளைப்பற்றி பிறிதொரு சமயம் நாம் விவரித்துக் கூறுவோம். ஆகையினாலே, (க்) என்ற மெய்யெழுத்தை நாம் எழுத ஆரம்பிக்கும்போது, நெடுங்கணக்கையுண்டு பண்ணினவர்கள் எவ்வண்ணம் மெய்யெழுத்தின் கண் உயிர் அடங்கியும் அதற்கு ஆதாரமாகியும் உயிர்ப்பைக்கொடுத்தும் உள்ளது என்று வுண்மையைக் காட்டுவான் அந்த புள்ளியை யுபயோகித்தார்களெனத் தெரியவருகிறோம். 'க' என் எழுதும்போது, அப்புள்ளி, அநாவசியம், ஏனெனில், அவ்வுயிரொலி வெளிப்படையாயிருப்பதால். ஆகவே சுத்த மெய்யொலியில், உயிரொலி வெளியாகாது, மெய்யோடு அதுவது வாய்க்கிடத்தலையுங் காண்க.

இப்புள்ளியும், உயிரை உணர்த்தி நின்றது. எல்லா உயிரும், இப்புள்ளி அல்லது வட்டத்தை முதலாகக் கொண்டே ஆரம்பிக்கின்றது. நாம் மிகவும் பாண்டித்யத்துடன் மனசுக்கும் தேகத்துக்குமுள்ள சம்பந்தத்தைக் குறித்து விசாரணை செய்கின்றோம். ஆனால் எப்போதாவது உயிரெழுத்துக்கும் மெய்யெழுத்துக்குமுள்ள அந்யோந்ய சம்பந்தத்தைக் குறித்து விசாரணை செய்யப் புகுந்தோமா? ஒன்று மற்றொன்றின் உதவியின்றி உயிர்வாழாத இந்தவிதமான அபூர்வ சம்பந்தமானது பிரகிருதி சம்பவங்களில் வேறெங்காவது காணக்கிடைக்குமா? மேலே காட்டிய அந்ய சம்பந்தத்தைத் தவிர, வெறும் மெய்யெழுத்தாவது, ஒருபோதும் உயிரெழுத்தினின்றும் பிறந்ததில்லையென்றும், உயிரெழுத்தும் மெய்யினிடம் பிறந்ததில்லையென்றும், நாம் அறியலாமேயல்லவா?

இவைகட்கு பிரபஞ்சத்தில் வேறெந்த இரண்டு வஸ்துக்களுக்குமுள்ள வித்யாஸத்தைவிட, அதிகமான வித்யாஸம் காணக்கிடக்கிறது. உற்பத்தி ஸ்தானம் வேறு. 'அ' என்ற அக்ஷரம் வாயைத் திறப்பதனாலேயே ஒலிக்கப்படும். [illegible]



தொண்டையோடு சேரக்கொண்டு வரப்பட்டாலொழிய 'க' என்ற ஒலி பிறக்கமாட்டாது. அதையே செய்துபார்த்தால் உயிர் பிறவாது. ஆனபடியினாலே உயிர்தான் மெய்க்கு பிறப்பிடமென்றும், அல்லது மெய்தான் உயிர்க்கு பிறப்பிடமென்றும் சொல்ல முடியாது. அல்லது மெய்யெழுத்தையேனும், மெய்க்கும் உயிருக்கும் உண்டான சம்பந்தத்தையேனும் பொய்யென்று சொல்லவு முடியாது. மாயையென்றும் மயக்கமென்றும் அவைதமைப் பேசவும்போகாது.

ஆகையினாலே பரிணமவாதமாவது விவர்த்தமாவது இந்த சந்தர்ப்பத்திலே பிரயோசனப்படாதென்க. ஆகவே, நாம் சொல்வதெல்லாங்கூடி யிதுவேயாம். அவைகள் பிரிக்கக்கூடாத விதமாக ஒன்றோடொன்று சம்பந்தமடைந்துள்ளன. மேலும் உயிரெழுத்துகள் மாத்திரம் கொண்டேனும் அல்லது மெய்யெழுத்துக்கள்மாத்திரத்தினால்மட்டும் யாதொருபாஷையும்ஏற்படமாட்டாது. ஒவ்வொரு மெய்யெழுத்தும் அதேசமயத்தில் உயிர் மெய்யெழுத்தாகுமென்றும், நாம் அறியவேண்டும். மெய்யெழுத்தில் உயிர் பிரகாசமாயேனும் அப்பிரகாசமாயேனும் வாழாநின்றதென்க. உயிரெழுத்துக்கள் தனித்துநிற்பது சாத்தியமாகும். மெய்யெழுத்துக்கள்மட்டும் தனித்து நிற்றல் முடியாது. மெய்யெழுத்துக்கள் தாமே ஜீவிப்பது கானற்சலத்தின் இருப்பையே மானுமென்க. நல்லது, இதையெல்லாம் உயிருடம்பென்ற வியவஸ்தைக்குப் பொருத்திப் பார்ப்போம். உயிர்தான் உயிரெழுத்தாயிருக்கிறது, உடம்பு (ஜடம்) தான் மெய்யெழுத்தாக விருக்கிறது. உயிரெழுத்துக்களுக்கும் மெய்யெழுத்துக்களுக்கும் எத்துணை வித்யாஸம் காணக்கிடக்கிறதோ அத்துணைவித்யாஸம் உயிருக்குமுடம்புக்கும் உண்டென்க. ஒன்றினின்றும் ஒன்று பரிணமத்தினாலாவது அல்லது விவர்த்தத்தினாலாவது பெறப்படுதல் குதிரைக் கொம்பேயென்க. அப்படியிருந்தும் இரண்டும் பிரிக்கக்கூடாத விதமாக சேர்ந்துள்ளன. மேலும், உயிர்தனக்கே ஒரு நிலைமையை சுவதந்தரமாக உடைத்தாயிருந்தும், சிற்சிலவேளை தனது சொந்தமான வடிவமாகவே நின்றுவிடும் ஸ்வதந்திரத்தையது அடைந்துள்ளது.

உடம்போ தனித்து உயிரின் சம்பந்தத்தைப் பெறாமலே ஜீவிக்கும் யோக்யதை யுடையதன்றென்க. உடம்பு என்றபொழுதே மனமும் தொக்கிநின்று, அதற்கு ஆதாரமாயும் உள்ளாயும் ஜீவிதமாயுமிருக்கின்றது. நாம் சுத்த அறிவுமயமாயிருக்கும்போது தேகம் இல்லையென்னும்படி அசத்தாயும் சூன்யமாயுமிருக்கிறது. உடம்பு சுத்த உடம்பாயிருக்கிறபோது, அறிவுகூட அங்கேயிருக்கிறது. ஆனால் தோற்றமாகிறது மட்டுமில்லை. அது உடம்புடன் ஒன்றிநிற்கிறது. மனசு அங்கேயிருக்கிற தன்மை. ஆனால் அது தன்னைத்தானே மறைத்துக்கொண்டு விடுகிறது. அதனுடைய சொரூபத்தை யது காண்பிக்கிறதில்லை. அது இல்லாதது போலவும் காணப்படுகிறது. எப்போதோ சில அபூர்வமான காலங்களில் மட்டும் ஒழிய, நம்முடைய அறிவுகேவலம் விஷய உலகவாழ்க்கையாக மட்டுமே ஒழிந்து போய்விடுகிறது. நம்முடைய உண்மை தத்வமாகிய அறிவு நிலைமையை சாதாரணமாக நாம் அறிவதே கிடையாது. இந்த உவமான உவமேயமாக அமைந்த இரண்டு திருஷ்டாந்தரங்களும் தமிழ்ப்பாஷையிலே வெகு அழகாக பரிமளிக்கப்பட்டுள்ளன கண்டீர். இவைகளிரண்டுமட்டுந் தான் உவமான உவமேயங்களாகக் கொள்ளக் கிடக்கின்றன. ஒரேவிதமான வார்த்தைகள் அல்லது சப்தங்களே உயிரெழுத்துக்கும் மெய்யெழுத்துக்கும் உடலுக்கும் உயிருக்கும் அதிவிநோதமாக உபயோகிக்கப் பட்டுள்ளன. 'உயிர்' 'மெய்' என்ற வார்த்தைகளை நாம் கேட்கும்போது என்ன அற்புத வெளிச்சம் உண்டாகிறது பாருங்கள். 'உயிர்' என்ற வார்த்தை உயிரெழுத்துக்கும் உபயோகமாகிறது. மனஸ், அறிவு, ஆன்மாவுக்கும் உபயோகமாகிறது. 'மெய்' யென்ற மொழியானது உடலுக்கும் மெய்யெழுத்துக்கும் கூட உபயோகமாகின்றது. டாக்டர் பேய்ன் என்பவர் இந்த ஒற்றுமையறிவானது ஒன்றைப் புதுதாகக் கண்டுபிடிக்கும் நவீன அறிவைக் கொடுக்கும் என்பார். பௌதிக கலாசோதனையில் அருமையாகக் கண்டுபிடிப்பதும், இவ்விதமாக சிற்சிலகாலத்திலே விளங்கிய ஒற்றுமை ஞானத்தாலே உண்டாகியதென்க. ஆதியில், நம் தமிழர்கள் உயிரெழுத்துகளையும் மெய்யெழுத்துகளையும் 'உயிர்' 'மெய்' யென்றழைத்தாரானால் அவர்கள் அப்பொ



ழுதே பிறவிஞானிகள் என்று சொல்லத் தடையென்னை? மேலும் அவர்கள் உள்ளபடியே உயிரெழுத்துக்கும் மெய்யெழுத்துக்கும், உயிருக்கும் உடம்புக்கும் உள்ள சம்பந்தத்தைக் கண்டுபிடித்தவர்களல்லவா? இந்த உதாரணத்தை முதல்முதல் ஸ்ரீமெய்கண்டதேவரும்பின் அவர்சந்தான பரம்பரையிலும் வெகு அருமையாக விளக்கியிருக்கின்றார்கள். (சிவஞ்ஞானபோதம் II & 6-ம் குறிப்புகள் பக்கம், 12, 19, 20-ம் பார்க்க.) (திருவருட்பயன் பக்கம் 7-ம் 8-ம் பார்க்க) ஸ்ரீமெய்கண்டதேவர் இந்த சம்பந்தத்தை விளக்குவான் அதேபாசுரத்தில் ஒரு பெயரொன்று கொடுத்திருக்கின்றார். இப்பெயரும் அத்வைதமென்பது. இப்பெயர் அனேகருக்கு ஒரு அவிழ்க்கமுடியாத சிக்காய்முடிந்தது கண்டீர். அதற்கு அனேக அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் நமது தமிழ் தத்வஞானியார் இந்தவிதமாக அதை விளக்கியிருக்கின்றார்.

"ஒன்றாகாமல், இரண்டாகாமல்,
ஒன்றுமிரண்டு மின்றாகாமல்."

என்று அவர் அதை விரிப்பாராயினார். அது ஒன்றென்றும் சொல்லப்படாது. அதை யிரண்டென்றும் கூறப்படாது. ஒன்றுமிரண்டுமாகாமல் ஒழிந்ததோர் சம்பந்தமு மல்ல. டாக்டர் பேய்ன்துரை அதை முரண் என்றும் கூறியுள்ளாரே. அந்த விஷயத்தை சுவாமிகளது வாக்கியம் வெகு அருமையாக வெளிப்படுத்தாநின்றது கண்டீர். சித்தாந்திகளல்லாதவர் இவ்வுண்மையை அறிவது சுலபமல்ல. மேலும் தங்களபி மதத்திலேயே அவர்கள் ஊன்றிநிற்பதாலும், இவ்விதம் அறியாமற் போவதற்குங் காரணமாகின்றது. ஆனால், நாம் இன்னும் சிறப்பான நியாயங்களைவிட உயிர் மெய்யெழுத்தும் என்ற உவமானத்தையே அடிக்கடி எடுத்துக்காட்டி விஷயத்தை மிகவும் சுலபமாக விளக்கியிருக்கின்றோம்.

---

ஆகையினால் நாம் எந்த வார்த்தையை யுபயோகித்தாலுங் கூட, இந்த சம்பந்தத்தின் சுபாவம் பிரகாசமாயுள்ளது. வேத மந்திரங்கள் (முன்னெடுத்து ஆண்டவை) 'ஒன்றாந்தன்மையை' சொல்லினும் இப்போது வழக்கத்தில் வந்திருக்கும் மதங்கள் கூறப்படுவதற்கும் அதிகமாக வுயர்ந்த அர்த்தத்தில் அவைகள்

அங்ஙனம் கூறு நின்றனவென்றே நாம் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். இந்த அமைப்பில் அதிக வுயர்ந்ததும் அதிக வுண்மையானதுமான ஏகிபாவம் ஒன்று நம்மால் அடையப் பட்டது கண்டீர். "அ" காரத்தைத் தவிர்த்து இதரமான யாதொரு அக்கரங்களும் கிடையவே கிடையாவென்று ஸ்ரீ மெய்கண்டநாதன் கூறிய கூற்றை யெவ்வளவு சத்தியமான தொன்றென்று நாம் அறியக்கடமைப் பட்டிருக்கின்றோம். ஆகையினாலே, நாம், கடவுளையன்றி வேறு யாதொரு பதார்த்தமும் கிடையாதென்று கூறத்தடை யென்னை? ஒன்றுதான் உள்ளது. தனக்கு இரண்டாவதாகும் வேறொன்றில்லாதது" இதுவும் அதியுயர்ந்த ஞானம், சுவானுபூதி, சிவானுபூதி, என்ற அநுபவத்தின் பயனாகவே வெளிப்போந்தது கண்டீர். மேலும் இதுவே திருவாசகத்தின் ஹிருதய சுலோகத்தில் அருமையாகப் பெறப் பட்டுள்ளது!

"இன்றெனக் கருளி இருள்கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தே
நீயலாற் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம்
திருப்பெருந்துறை யுறை சிவனே
ஒன்று நீயல்லை யன்றி யொன்றில்லை
யாருன்னை யறியகிற் பாரே."

J. M. N.

(இன்னும் வரும்.)

---

## சமாச்சாரங்கள்.

1912ம் வருஷம் நவம்பர்மீ 26உ திங்கட்கிழமை பம்பாய் ராஜதானியிலுள்ள கோலபுரியினின்றும் சென்னைக்கு விஜயஞ்செய்திருந்த ஸ்ரீமந்-S. V. சிரேஷ்டி B. A. அவர்களைக்கொண்டு நமது ஸமாஜ சம்பந்தமாக சென்னை, சூளை, A. G. M. பிரைமரி பாடசாலையில் ஒரு உபந்நியாஸம் ஆங்கிலமொழியில் செய்விக்கப் பட்டது. அவர்கள் எடுத்துக் கொண்ட விஷயம் "வீரசைவத்தின் முக்கிய கொள்கைகள்" என்பது. அது காலை ஸ்ரீமந். J. M. நல்லசுவாமி பிள்ளை B. A. B. L. அவர்கள் சபாநாயகராயிருந்தனர். உபந்நியாயகர் நாம் சமய நெறி நின்றாலன்றி உண்மை யின்பத்தை யடையவாவது நம்கடமைகளை முட்டின்றி முடித்தாவது நமக்கு எந்நாளும் இயலாது என்று பல்லாற்றானும் விளக்கக் காட்டினர். பிறகு வீரசைவமானது ஆன்மாவை அரனோடு ஒன்றுபடுத்தும் விழுமிய நோக்கமுடையதென விளம்பி, இக்கருத்தை அச்சமய அனுஷ்டானங்கள் எவ்வாறு முற்றுவிக்கின்றன என்பதை விளக்கினர். இத்துறையில் அவர்கள் வெளியிட்ட கருத்துகள் அச்சபையில் கூடியிருந்த பலர்க்கும் அதுவரையில் தெரியாதனவாயும், யுக்திக்கு மிகப்பொருத்தமுடையனவாயும் கேட்போர்க் கினிக்குந்தகையன வாயுமிருந்தன. சிவலிங்கத்தின் உருவ அமைப்பி னுண்மைகளை விளக்கிப் பின்னர், வீரசைவம் சொல்லும் இஷ்டலிங்க பிராணலிங்க பாவலிங்கங்களின் பூஜை எவ்வாற்றால் பயன் விளைக்கின்றன என்பதையும் மேற்றிசை யுலகநூல்வல்லார் கொள்கைகள் வழியாகவே விளக்கிக் காட்டினர். கடைசியாக அவரது சமயத்தில் சொல்லப்படும் ஷட் ஸ்தலங்களினுண்மைகளையும் கேட்போர் வியக்கக் கிளந்தனர். சிலகிறிஸ்தவப் பாதிரிமார்களும் அவ்வுபந்நியாஸத்தைக்கேட்க விஜயஞ் செய்திருந்தனர்.

* * *

நவம்பர்மீ 26ம்உ மங்களவாரம் காலை சமாஜத்தின் போஷகராகிய இராமநாதபுர அரசரவர்கள் சென்னைக்கு விஜயஞ்செ

ய்வதாக அறிந்து சமாஜத்தின் சேர்க்கோரிற் ஸ்ரீமந் J. M. நல்லசுவாமிபிள்ளை யவர்கள், ஸ்ரீமந் விநாயக முதலியாரவர்கள், ஸ்ரீமந் T. துரைசாமிபிள்ளையவர்கள், சித்தாந்தசரபம். அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தரமுதலியாரவர்கள், ஸ்ரீமந் வண்ணக்களஞ்சியம் நாகலிங்கமுதலியாரவர்கள், ஸ்ரீமந் கோவிந்தராஜ முதலியாரவர்கள், ஸ்ரீமந் நாகிசெட்டியாரவர்கள், ஸ்ரீமந் சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் முதலியோரும், மகாமகோ பாத்தியாயர் பிரமஸ்ரீ உ. வே-சுவாமி நாதஐயர் அவர்கள், ஸ்ரீமந் V. S. சிரேஷ்டி அவர்கள் முதலிய பல அன்பர்களும் எழும்பூரிற் புகைரதம் நிற்குமிடத்திற் கூடி அரசரை மாலை முதலியவற்றால் மரியாதை செய்து வரவேற்றனர்.

***

திருவாடுதுறை ஆதீனத்துச் சைவப் பிரசாரகர் ஸ்ரீமான் பொ. முத்தையபிள்ளையவர்களின் உபந்நியாசங்கள்:—மே ௴ 23உ மதுரைகாலேஜில் "குருபக்தி" 27உ மதுரை பிரம்மஞானமந்திரத்தில் "சைவசமயம்," செப்டம்பர் ௴ 22உ தூத்துக்குடி பிரம்மஞானசபையில் "வேதாந்த சித்தாந்த சமரசம்," அக்டோபர் ௴ 31உ திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் கோயில் வசந்தமண்டபத்தில் "கடவுள்," நவம்பர் ௴ 1உ ஷை இடத்தில் "ஆன்மா" 2உ அம்பாசமுத்திரம் ரீடிங்ரூமில் "ஆலயதத்வார்த்தம்," 3உ வீரவநல்லூர் சைவசித்தாந்த சபையில் "விக்கிராராதனம்," 4உ திருநெல்வேலி வசந்தமண்டபத்தில் "அன்பு," 8உ தூத்துக்குடி சிவநேச செல்வர்சபையில் "ஸ்ரீமெய்கண்டதேவர்சரித்திரம்," 9உ ஷை யூர் சைவசித்தாந்த ரீடிங்ரூமில் "பக்தி" 14உ மயூரம் பெரிய கோயில் மண்டபத்தில் "மூர்த்தி தலம் தீர்த்தம்," 15உ ஷையூரில் "சற்குருமகிமை," 16உ ஷையூர் நாகை சோ. மா. சத்திரத்தில் "ஈஸ்வர உபாசனை," 17உ மயூரம் கூறைநாடு புநுகீஸ்வரர் கோயிலில் "தமிழ்கல்வி," 18உ ஷையூர் முருகர் மடத்தில் "தருமம்."

***

1912ஆ அக்டோபர் ௴ 9உ பரங்கிமலை ஆலந்தூர் சிவனடியார்த்திருக் கூட்டத்தில், விபூதி ருத்திராட்ச பஞ்சாட்சரத்தைப்பற்றி, சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள் ஒரு நீண்டமகோபந்நியாசஞ் செய்தனர். இம்மூன்றும் சைவர்கட்கு இன்றியமையாத சாதனமென்றும், வாதபித்தசிலேட்டும் சம்பந்தத்தையுற்ற தேகத்திற்கு மணி மந்திரம் ஔடதம் மூன்றும் அத்தியாவசியமாக வேண்டியிருத்தலைப்போல, ஆணவம் கன்மம்மாயை சம்பந்தத்தையுற்ற ஆன்மாவினுக்கு உருத்திராட்சமாகிய மணியும், பஞ்சாட்சரமாகிய மந்திரமும், ஔடதமாகிய விபூதியும் அத்தியாவசியமாக வேண்டற்பால தென்றும் எடுத்துக்கூறி, விபூதியின் மகிமையினை வேதம் ஆகமம் புராணம் பாரதம் இராமாயணம் தேவாரம் திருவாசகம் நாலாயிரப் பிரபந்தம் பகவத்கீதை முதலியவற்றில் காட்டி, இவற்றால் விளையும் இம்மைப்பயனையும், மறுமையில் விளையும் மறுமைப்பயனையும் விரிவாக விளக்கினர். இச்சந்தற்பத்தில் பகவத்கீதையில் பிரதி பாதித்துள்ள உபநிடதவாக்கியங்களை யாங்காங்குக்காட்டிச் சிவோத் கர்ஷம் யாவருக்கும் நன்கு விளங்கும்படி பிரசங்கித்தனர்.



***

சிவஞான முனிவர் புத்தகசாலை:—இப்புத்தக சாலை சென்னைச் சிவனடியார் திருக்கூட்டச் சபாமண்டபத்திலிருக்கிறது. இதிலுள்ள பல அரிய நூல்கள் பல கனவான்களால் பற்பல சமயங்களில் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டன. சமீபத்தில் ஸ்ரீமான் திருமயிலை C. S. அரங்கசாமி நாயகரவர்கள் தமது வயோதிக நிலைமையைச் சிந்தித்து தம்மிடத்திருந்த சுமார் 150 புத்தகங்களையும், சுமார் 60 ரூபா மதிப்புள்ள ஒருபெரிய நிலைப்பெட்டியையும் நன்கொடையாகக் கொடுத்தார்கள். எவரேனும் இப்புத்தகங்களை வாசிக்கலாம். பகற்காலங்களில் வீண்பொழுது போக்குவோர் இப்புத்தகசாலைக்குப்போய் நூலாராய்ச்சி செய்வரேல் பெரும் பயனுண்டாகும்.

***

பலர் தங்கள்சொந்த உபயோகத்தின் பொருட்டு பல அரிய நூல்களைச் சேகரித்து வைத்திருக்கின்றார்கள். இவர்களுக்குப் பிறகு இந்நூல்கள் பெரும்பாலும் வீணையழிகின்றன. இவர்கள்

ஷை காயகாவர்களைப்போல் தங்கள் வயோதிகத்தில் அவற்றை இது போன்ற புத்தக சாலைக்குக் கொடுப்பரேல் பேருபகாரமாயிருக்கும்.

***

ஸ்ரீசிதம்பர மஹோத்சவ விளம்பரம்:—ஸ்ரீமந்நடராஜ பக்த சிகாமணிகள் அவர்களுக்கு அன்புடன் அறிவிப்பது, 1912௵ டிசம்பர்மீ 15உ. ஞாயிற்றுக்கிழமை உத்சவாரம்பம்; 19உ வியாழக்கிழமை விருஷபவாகனக் காட்சி; 20உ வெள்ளிக்கிழமை கஜ வாகனக் காட்சி; 21உ சனிக்கிழமை கைலாசவாகனக் காட்சி? 22உ ஞாயிற்றுக்கிழமை தங்கரத பிக்ஷாடனகாக்ஷி; 23உ திங்கட்கிழமை பஞ்சமஹாரத மஹோத்சவம்; 24உ மங்களவாரம் ஸ்ரீமந் நடராஜ மூர்த்திக்கும் ஸ்ரீசிவகாம சுந்தரியம்மாளுக்கும், இராஜ சபையென்னும் ஆயிரக்கால் மண்டபத்தில் மஹாபிஷேகம் ஆருத்ரா மஹாதரிசன திவ்விய மஹோத்சவம்.

***

**நிகழும் 1912-௵ டிசம்பர்மீ 27, 28, 29-ந் தேதிகளில் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஏழாவது வருடாந்தரக் கூட்டம் காஞ்சிபுரத்தில் நடைபெறும். மற்றைய விவரங்கள் அடுத்த சஞ்சிகையுடன் அனுப்பப்படும்.**

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி க.] 1912-௵ நவம்பர், டிசம்பர்மூ [பகுதி கக, கஉ.

## சரபோபநிஷத்.

ஓம். பின்னும் பைப்பலாதர் * பிரமனை நோக்கி ஓ பகவானே பிரமன் விஷ்ணு உருத்திரர் என்பவர்களுள் யாவரே அதிகமாகத் தியானிக்கப் படுபவர். உண்மையினையே அன்புடன் விளங்கச் செய்வீர் என்று கேட்டனர்.

2. அதற்குப் பிதாமகன், பைப்பலாதரே! இந்த வசனத்தைக் கேட்பீராக வென்றனர்.

3. பரமேஸ்வரர் மிக்க புண்ணியஞ் செய்தவர்களா லடையத் தக்கவர். நானும் விஷ்ணுவும் இந்திரனும் மற்றையரும் அவருடலினின்று முற்பத்தியானவர்கள்.

4. அப்பிரபுவைத் தேவர்களும் மற்றையரும் தங்கள் அஞ்ஞானத்தால் தனக்கு மேலொருவரில்லாத பரமேஸ்வரனெனவும் தந்தை யெனவு மறியார்கள்.

5. அவர் முதலில் பிரமனைப்படைத்து அவனுக்கெல்லா வேதங்களையும் அருளிச்செய்தனர். அவரைத் துதிப்போமாக. அவரே

* பைப்பலாதர் என்பவர் வேதங்களிலே பிரதிபாதிக்கப்பெற்ற வொரு முனிவர். அதர்வண வேதங்கண்டுபிடித்த அதர்வணவிருடியின் குமாரர். தத்தியங் என்னு மிருடி, அது, "தமுவா தத்தியங்ஙுஷி: புத்ர ஈதே அதர்வண: தத்தியங்ஙாதர்வண:" என்ற வேதவசனத்தாற்காண்க. அந்தத்தத்தியங்ஙிருஷி புத்திரர் ததீசிமுனி. இவர் புத்திரர் பைப்பலாதர் எனப்பிரம புராணத்திலே கூறப்பட்டுள்ளது.

தெய்வீக பிரபு. தேவர்கட்குப் பிதா. என்னையும் விஷ்ணுவையும் படைத்தவர்.

6. அவர் பிரதானமானவர். சர்வசங்கார காலத்தில் எல்லாவுலகங்களையு மழிப்பவர். அவரே யெல்லாவற்றையுமாளு மதிபதியாவர்.

7. அவர் பரமபதி. சரபபட்சியின் பயங்கரமான திருவுருக்கொண்டு, உலகநாசத்திற் கேதுவாகிய நரசிம்மத்தைத் தமது பராக்கிரமத்தா லடிக்க விருந்தனர். தேவதேவர்கள் நரசிம்மமூர்த்தியினுயிரைத் தமதுபாதங்களால் வாங்கவந்த இறைவனைத் தொடர்ந்து தொழுது மகத்தானவரே! புருஷனாகிய விஷ்ணுவினுயிரை இந்த நடுராத்திரியில் அடித்துப் போக்காதீரென வேண்டிக்கொண்டனர்.

8. கிருபையினால் சர்மாம்பரதராகிய விறைவன் தன்னுடையகூரிய நகங்களால் நரசிம்மத்தைக் கிழித்து வீரபத்திர மூர்த்தியாக விளங்கினர்.

9. எல்லாஞ் செய்வல்லமை யடைதற்கு உருத்திர மூர்த்தியைத் தியானிக்க வேண்டும்.

10. பிரமனது ஐந்தாவது முகத்தைச் சேதித்த அவ்வுருத்திரமூர்த்திக்கு நமஸ்காரம்.

11. தமது நெற்றிவிழி யக்கினிப் பொறியால் சர்வலோகங்களையும் சாம்பலாக்கி மறுபடியும் படைத்துக் காப்பவராகலின் அவர் சுதந்தரம் வெளியாகும். அந்த உருத்திரமூர்த்திக்கு நமஸ்காரம்.

12. இடப்பாதத்தாற் காலனை யுதைத்தவரும், கொடியவிஷத்தைப் பானம் பண்ணினவருமான அவ்வுருத்திரருக்கு நமஸ்காரம்.

13. அவரது இடதுபாதத்தில் கண்ணா லர்ச்சிக்கப் பெற்ற விஷ்ணுவிற்குச் சக்ரமளித்த அவ்வுருத்திரர்க்கு நமஸ்காரம்.

14. தக்ஷபிரஜாபதியின் யாகத்தில் அனேகமான தேவர்களை வென்றபிறகு விஷ்ணுமூர்த்தியைப் பெரிய கயிற்றினால் கட்டிய பரமபதியாகிய அந்த உருத்திரர்க்கு நமஸ்காரம்.

15. திருவிளையாட்டாகவே காமனையும் காலனையும் திரிபுரத்தையு மழித்தவர். சந்திரசூரியாக்கினி யென்னுந் திரிநேத்திரமுடையவர். தேவர்கள் எல்லாரு மவருக்கு அடிமைகள். இக்காரணத்தால் நயமாக அவர் பசுபதிநாமம் பூண்டனர். அந்தஉருத்திரர்க்கு நமஸ்காரம்.



16. இந்தப்பிரகாரம் அனேகவிதமாகத் தோத்திரஞ்செய்து நீலகண்டராகிய மகேஸ்வரனைத் தணித்தார்கள்.

17. விஷ்ணுமூர்த்தியின் அவதாரங்களாய்ப் பயங்கரத்தையும், இடுக்கண்களையும் விளைவித்த மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், திரிவிக்ரம வாமனம் இவற்றை யழித்தவரும், மன்மதனைப் பஸ்மமாக்கியவருமான அந்த உருத்திரர்க்கு நமஸ்காரம். இந்தவிதமாக அனேக தோத்திரங்களால் மகேஸ்வரரான நீலகண்டரைத் தேவர்கள் நமஸ்காரஞ் செய்தார்கள்.

18. மலத்திரயங்களால் விளையும் ஜனன மிருத்தியு ஜரைமுதலிய நாநாவித துக்கங்கள் யாவையும் பரமேஸ்வரன் துடைத்தருள்வர். இவ்விதமாகப் புகழப்பட்டவர் பூதான்மாக்க ளெல்லாவற்றிற்கும் ஆன்மாவாய் விளங்குபவர். சங்கரர் பகவானாகிய முதல்வர். யாவற்றையுங் காக்கின்றவர். மனோவாக்கினுக் கெட்டாதவர். இன்னும் விஷ்ணுமூர்த்தியால் தமது திருவடிகளைக் காணத் தேடப்பட்டவருமான பரமனை வாழ்த்துவோமாக. மிகுந்த பத்தி பாராட்டிய விஷ்ணுவினுக்கு அருள்புரிந்தவர்.

19. எந்த பிரமத்தினிடத்து மனவாக்குச்சென்று அவனையறியாது திரும்பிவிடுமோ அந்தப் பிரமத்தின் திருவருளைப் பெற்றவர்கள் எந்தக்காலத்தும் எதற்கும் பயப்படவேண்டியதில்லை.

20. அந்தப் பரமேஸ்வரன் அணுவிற் கணுவாயும், மகத்திற்கு மகத்தாயுமுள்ளவர். அவரான்மாவின் குகையிலிருப்பவர். ஞானிகள் அந்தப் பிரமத்தை நோக்குகிறார்கள். அவர் வேண்டுதலிலாதவர், துக்கமிலாதவர்.

21. வசிஷ்டர், வியாசபுத்திரர், வாமதேவர், விரிஞ்சன் முதலியோரால் தங்கள் இருதயங்களிலே தியானிக்கப் படுபவர். சனத்சுஜாதியர், சனாதனர் முதலானவரால் சிந்திக்கப்படும் மகேஸ்வரனாகிய பகவான். ஆதிதேவர், சத்தியர், நித்தியர், சர்வசாட்சியாயுள்ளவர், மகேசர், நித்தியானந்தர், நாமரூபமில்லாதவர், வரம்பிலாற்றலுடையவர், பகவான், கிரீசன், தமது அவித்தையால் பிரபஞ்சோற்பத்தி செய்பவர்.

22. அவிர்ப்பாகங்களை யர்ப்பணமாகக் கொள்ளும் தேவர்களே! எனதுமாயையும் விஷ்ணுவின்மாயையும் கலங்கச்செய்கிறது. ஈஸ்வரனது திருவடியை நினைத்தால் கடத்தற்கரிய மாயையை யெளிதிற் கடக்கலாம்.

23. சமஸ்த லோகங்களுக்கும் * உற்பத்திஸ்தானமாய் விளங்கும் விஷ்ணுவின் மூர்த்தங்களாலும், எனது மூர்த்தங்களாலும் எல்லா வுலகங்களையும் காக்கின்றார். காலாந்தரத்தில் அவைகள் மறைந்துவிடும். மற்றவைபொய். ஆகையினால் ஈஸ்வரன் தவிர வேறுயாவும் நிலையில்லாதன.

24. உலகங்களை விழுங்குபவர் † மகாதேவர், சூலி, மகேஸ்வரர் மிருடர். அந்த உருத்திரர்க்கு நமஸ்காரம்.

25. விஷ்ணு ஒரு பெரியபூதம், மற்றையபூதங்கள் வெகுவிதமாக விருக்கின்றன. மூவுலகங்களையும் வியாபித்துக் கொண்டு அப்பூதங்களையெல்லாம் உண்டு விடுகிறார்.

26. சர்வவியாபகராகிய இறைவன் எனக்கருள் புரிவாராக. அவர் நான்காலும், மறுபடியும் நான்காலும், இரண்டாலும் ஐந்தாலும், மறுபடியும் இரண்டாலும் எந்த விஷ்ணுவால் ஓமம் செயப்படுகின்றாரோ அவ்வியாபகர் என்பொருட்டுத் தயைசெய்வாராக. ‡

27. யாகபாத்திரமும் பிரமமே, ஓமத்திரவியமும் பிரமமே, அக்கினியும் பிரமமே, ஓமகர்த்தாவும் பிரமமே, பிரமகர்ம சமாதியாலடையத்தகுந்த பலனும் பிரமமே. §

* சமஸ்தலோகங்களாவன விஷ்ணுவின் வியாபகத்துள் பிரதிஷ்டாகலையில் பிரகிருதிக்குக் கீழ்ப்பட்ட உலகங்கள். அது, "வாசுதேவா: பரா: ப்ரகிருதி," "ப்ரகிருதி: பரமோ விஷ்ணு:" "வாமதேவ சக்ராத்மா வாரிதத்தைக நாயகா:" என்னுஞ் சுருதி வசனங்களா லறிக.

† விழுங்குதலாவது ஒடுக்குதலாம்.

‡ நான்கென்பது ஓம் சிவய, இரண்டென்பது சிவ, ஐந்தென்பது சிவயநம.

§ செய்வோனையின்றிச் செய்வினையும் செயப்படுபொருளும் நிகழாதாகலினும்; உடலுமுயிரும்போலவும், பாலுநீரும்போலவும், பரிதியுமதியும்போலவும் இறைவன் உலகில் வேற்றுமையின்றி நிற்றலாலும்; அயக்காந்த சந்நிதியில் அயத்துக்குச் சேட்டையுண்டாவதுபோல முதல்வன்



28. மகாமுனிவரே! சரப-ஈஸ்வரன் திருமேனியில் விஷ்ணுவாதி சீவர்கள் எப்பொழுதும் பாதி-விளங்குகிறார்கள். ஆகையினாற்றான் எல்லாவற்றையு முண்டருளும் இறைவனுக்கு முத்தியை நேரே யளிப்பவனென்பதாகிய சரபம் என்னும் பெயர் வழங்குகிறது.

29. அவருடைய மாயையினால் தேவதேவர்கள் மோகத்தால் கலக்குண்டு கிடக்கின்றார்கள்.

30. அவரது மகிமையை அணுவில்லுணவேனுங்கூற வொருவராலுமுடியாது.

31. அதீதப்பட்டவர் பிரமன், அவருக் கதீதப்பட்டவர் விஷ்ணு, அவருக்கதீதப்பட்டவர் ஈசர். அவ்வீசனுக்கு மேற்பட்டவராவது சமத்துவமானவராவது ஒருவருமில்லை.

32. ஒரே சிவந்தானுண்டு. அது நித்தியமானது. சிவந்தவிர வனையர் யாரும் தியானிப்பவர். ஆகையினால் விஷ்ணு முதலிய யாரையும் நீக்கிச் சிவபிரானொருவரையே தியானித்தல்வேண்டும். சம்சாரபந்தத்தை யவரே யொழிப்பவர்.

33. உலகமுண்டவராகிய மகேஸ்வரரைப் போற்றுவோமாக.

34. பைப்பலாதரே! இப்பெரிய சாஸ்திரத்தை இஷ்டப்படி நாஸ்திகர், நன்றியிலார், தீயவெண்ணமுடையார், டம்பர், பொய் கற்பிப்பவர் ஆகிய இன்னோர்க்குக் கொடுத்தலாகாது. சுகிர்தன், பத்திமான், நல்விரதத்தன், நற்சுபாவமுடையவன், குருபத்தி வாய்ந்தோன், சாந்தியுடையோன், புத்திமான் இத்தகையோர் மூலமாக இவ்வுபநிடதத்தைப் பரம்பரையாக வுபயோகப்படுத்தலாம். சத்தியந்தவறாத மாணவர்கட்குப் போதிக்கலாம். ஏனையோர்க் காகாது. பிராம்மணங்களுள் மிகச்சிறந்ததாகிய இவ்வுபநிடதம் இரகசியமாகப் போற்றத்தகுந்தது.

சந்நிதி மாத்திரத்தால் பிரபஞ்ச நிகழுமாகலினும் எல்லாம் பிரமமே யென்றனர். வேதத்துள் உருத்திரன், விச்வாதிகன், விச்வகாரணன், விச்வத்திற் கந்தரியாமி, விச்வரூபனென்றுகூறும் சுருதிகளே சான்றாம்.

இவ்வுபநிடத சுலோகம் பகவத்கீதையில், 4-வது அத்தியாயத்தில் 24-வது சுலோகமாக ஆளப்பட்டிருக்கிறது.

35. பைப்பலாத சாஸ்திரத்தைப் படிப்போரும், கேட்போருமாகிய இருபிறப்பாளர் ஜனன மரணத்தினின்றும் விடுபடுவர். அச்சாஸ்திரத்தைச் சொல்லுவோர் இறவாநிலை பெறுவர். மதுபானஞ் பண்ணும் பாபத்தினின்றும் புனிதமாவர். பொற்களவு, பிரமகத்தி, குருபத்தினியைபிச்சித்தல் ஆகிய பாவங்களினின்றும்விடுபடுபவர், சர்வவேத பாராயண பலனையும், எல்லா தேவர்களையும் தியானித்தலாகிய பயனையுமடைவர், மகா பாதகங்களின்றும் புனிதமாவர், மோட்சத்தின் பயனடைவர். சிவப்பிரியராவர், சிவசாயுச்சியம் பெறுவர், மறுபிறப்படையார் மறுபிறப்படையார், பிரமமேயாவர். இங்ஙனம் பிரமன் கூறினார். உபநிடதமிவ்வாறு முற்றியது.

மணவழகு.

## அத்வைதம்.

(முன்தொடர்பு தொகுதி 1, பகுதி 9, 10, பக்கம் 260:)

கடவுளை மகனொருவன் ஆராமையால் அணுகிச் செல்லச்செல்ல அவன் அணுவணுவாகக் கரைந்துபோதல் சம்பவமே! ஆகையினாலே, ஒன்றுபடும் அவசரத்தில், அம்மகன் றன்னதென்று கொள்ளத்தக்க பதார்த்தம் யாதொன்றுமில்லாமற் போய்விடுகின்றதன்றோ? மிகுந்ததுதான் என்னை? ஒரு பரம்பொருள் ஒரு தனிமுதல் ஒரு முழு உண்மையாகிய ஸ்ரீபரமேஸ்வரனது திவ்ய சாந்நித்யமே மிகுந்ததொன்றும். அம்மகனுக்குத் தன்னுணர்ச்சியும், தனது வர்க்கத்தைச் சேர்ந்தாரின் இருப்பைப்பற்றிய வுணர்ச்சியும் அந்தசமயம் உண்டுகொல்? கிடையவே கிடையாது. ஈஸ்வர சாந்நித்யம் சிவாநந்த பிராப்த மாத்திரத்தானே யாதொரு பத்தனி



டம் உண்டான மெய்ப்பாடு. அப்பொழுது நான் ஒன்றானேன்; நான் அநுபவியாநின்றேன் என்ற நினைவும் உண்டாகாது. அவ்வித நினைவு முனைத்திடின் முன்சொன்ன ஒன்றுதலும் ஆநந்தமும் உடனே மறைந்துபோகும். அதனால் அணுவணுவாக அவன் கைவிடும் பொருள் தான் யாதோவென்று விசாரித்தால் என்ன ஏற்படும்? அவனுடைய பல்வேறுபட்ட கரணங்களே.

"வான்கெட்டு மாருதமாய்ந்து அழல் நீர்மண்கெடினும்
தான் கெட்டலின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு உள்ளமும்போய்
நான் கெட்டவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ."

அவனது உடல் பிரஜ்ஞையும், அவனது உயிர் பிரஜ்ஞையும் அவனது மனோபிரஜ்ஞையும் இவைகள் தாமே அவனுடைய யானெனதென்ற புருஷத்தன்மையை (Individuality) விளங்கச்செய்கின்றன. இந்த நான் என்ற அஹங்காரத்தைத்தான் நாம் ஒழிக்கவேண்டியவர்களாயிருக்கின்றோம். அதனால் இந்த நானாயிருந்த தன்மை யல்லது தனிசொரூபத் தன்மை யழிந்தபோதே—"நான் கெட்டவா" அவன் உடனே சிவம் அல்லது கடவுள் ஆய்விடுகின்றான். "நான்கெட்டு சிவமானவா". ஒழிந்து போவதெல்லாங் கூடி ஆத்மாவின் தனிச்சொரூப லக்ஷணம் மாத்திரமே. அந்த அஹங்காரந்தானே துவைத ஞானத்துக்கு இடன் தந்தது கண்டீர்! ஆனால் மோக்ஷத்திலும் மிகுந்திருப்பது தான் யாதென்று விசாரித்தாலோ? ஒன்று பெறப்படும் ஆத்மாவின் தற்சொரூபம் (Personality) மட்டும் மிகுந்துள்ளது, அதற்கோ அந்த மோக்ஷ நிலையில் சுவாநுபவம் அல்லது சிவானுபவம் உண்டாய் விடுகிறது. அதனால் கடவுளோடு அது இரண்டற்று ஒன்றுபட்டு நிற்கிறது கண்டீர்!

ஆத்மா கடவுளோடு சேர்ந்துழி, கடவுளோடு ஒன்றாய்ப் பதார்த்தம் போல (விஷயம்) (object) மாறிப்போய் விடுகிறது. கலாஞானத்தின், ஏற்படும் அருமையான ஏகத்வம் இதுவேயாகும். அதனாற்றானே ஸ்ரீமெய்கண்ட நாதன் பின்வருமாறு நொடிபடக் கூறலுற்றனர்.

‘‘நசித்தொன்றி னுள்ள நசித்தலா லொன்று
நசித்திலதேல் ஒன்றாவ தில்லை - நசித்துமல
மப்பணைந்த வுப்பி னளமணைந்து சேடமாங்
கப்பின்றா மீசன் கழல்.

கடவுளோடு ஒன்றாகச் சேரும்போது ஆன்மா அழிந்து போகிறதா யிருந்தால் கடவுளோடு சேருவதற்கு யாதொரு தனிப் பதார்த்தமும் இல்லாமலே போய்விடுமல்லவா? வியவகாரம் செய்து பார்த்தோமே! அப்படி அது அழியாமலே இருக்குமானால் அது கடவுளோடு ஒன்றாய்ப் போய்விட முடியவே முடியாது. ஜலத்தில் கரைந்த உப்பானது கரைந்து நின்றதுபோல ஆன்மா தனது மலத்தை யொழித்து விட்டவுடனே அவனுடைய திருவடியோடு சேர்ந்துபோய்விடுகிறது. அவனுக்கு அடிமையாக ஆய்விடுகிறது.

உப்புகட்டியாய்ச் சிறுகல்வடிவாக விருந்ததுதான் அதனுடைய தனிவடிவ (Individuality) மென்று சொல்லலாம். அப்போது அதுவேறு ஜலம்வேறு என்று சொல்வதற்கு அது அவகாசம் கொடாநின்றது. ஆனால் அதை ஜலத்தில் கரைத்துவிட்டவுடனே அதனுடைய தனிவடிவாந் தன்மை யொன்றுமட்டும் அற்றுவிட்டதென்க. அதன் முதலற்றுப்போகக் காணோம்.

தத்வசாஸ்திர புத்தக மொன்றிலிருந்தும் அடியில் யாம் இங்கே உதகரித்து மகிழும் யாதொரு வாக்கியந்தானே எமது வாக்கியம் எவ்வளவு பொருத்தமா யிருக்கிறதென்ற வுண்மையை யினிது பிரகாசப்படுத்தும். ‘‘யாதொரு யாறு கடலை யடைந்தவுடனே தனது யாறு என்ற தனிவடிவத்தை (Individuality) யொழித்துவிடுகிற துண்மையே. சாகரத்தின் அமிழ்ந்திப் (Merged) போகிறது. அந்த சமுத்திர சம்பந்த முண்டானவுடனே அந்த யாறு தனது நீரோட்டத்தையும் அங்கே யிழந்துவிடவும் உயர்ந்த பூமி மட்டங்களினின்றும் அது கொண்டுவந்து சேர்த்த மண், பாசு, தூசு, சுண்ணமுதலிய பதார்த்த வகைகளை யங்கே அந்த சமுத்திரம் சேர்க்கை கிடைத்த அவசரத்திலே தானே வைத்திருக்கும் சக்தியை யிழந்துவிட்டதல்லவா? மேலேபேசும் பிரகாரம், அதை மறுபடியும் திரும்ப வாசித்துப்பார்த்தோமாயின் அதனுடைய உப



யோகம் ஸ்பஷ்டமாக நமக்கு விளங்கும். ஆன்மாவானது தனது அகங்காரத்தை, தனியே கிடந்த வுருவத்தை, நான் என்ற அறிவை, ஆணவத்தை யிழந்து விட்டபோது, அது பகவானுடைய திருமேனியிலே (சமுத்திராகாசம்). அமிழ்ந்து போகவும், அதனுடைய கர்மமும் (நீரோட்டம்) ஒழிந்து உடனே அந்த உயிரை அநாதியாக பற்றிவந்து துன்புறுத்திய மலம் (மண்முதலியன) தன்னிடம் கலந்து நில்லாது கழலுகின்றது. இதே உதாரணம் தான் ஸ்ரீ மெய்கண்டநாதனும் உபயோகப் படுத்துவது,

‘‘சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளஞ்
சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து - சிறைவிட்
டலைகடலிற் சென்றடங்கு மாறுபோன் மீளா
தலைவிலரன்பாதத்தை யுற்று. (சிவஞானபோதம். VIII.4.1.)

அன்பு காரணமாக செய்யப்பட்ட பெரிய யஜ்ஞமும் இதே அகங்காரம் ஒழிதல்! இந்த யஜ்ஞம் தானே—பலி—நாம் கோயி லுட்புகுந்ததும் செய்யச் சொன்னது, அதைச் செய்து முடித்த அந்த நிமிஷமே நம்முடைய பசுத்வம் நம்மைவிட்டொழிந்து நாம் நந்தி—ஆநந்தசிவம் ஆய் விடுகின்றோம். ‘‘ஏகவஸ்து வாதம்’’ (monism) சொன்ன அதியுத்கிருஷ்டமான பரவுண்மையைத் தான் சித்தாந்தம் வற்புறுத்திக் கூறுநின்றது. இதற்கு நிதர்சனமாக ஸ்ரீ திருமூலர் அருளிச் செய்த திவ்யமந்திரத்தினது ஹ்ருதயமாயுள்ள தோர் வாக்கியத்தை நாமும் உதகரித்து மகிழ்வோமாக.

‘‘தானேவேதாந்தம், தானென்னுஞ் சித்தாந்தம்’’ வேதாந்தம ‘‘அஹம்பிரமாஸ்மி’’ ‘‘நான் பிரமம் ஆகின்றேன்’’ என்ற மந்திரத்தை மகாவாக்யமாகப் போதியாநின்றது. சித்தாந்தம் ‘‘தத்’’ அது என்ற ஒன்றைமட்டும் இருப்பதாகக்கூறி மகிழாநின்றது. அதாவது, சித்தாந்தம் முடிவாகவும் முழுமையுமே ஓரேயொரு அநுபவத்தைத் தழுவிநின்றது. சிவாநந்தம், பிரமாநந்தம், அதன்கண் ஒன்றேயுண்டு. ஓரே தனி அநுபவந்தானே பெறப்படும். ஆனால், வேதாந்தமோ, இவ்வாநந்தத்தை யடையும் சாதனமாக ‘‘சோஹம்’’ மார்க்கங்களை கூறுநின்றது. சோஹம் பாவனையானது பிரஜ்ஞா சம்பந்தமுள்ளதென்றும், துவிதமான தொன்றென்

றும், துவைத சித்தாந்தத் தொன்றென்றும் யாவரேனும் சுலபமாக அறிந்துகோடல் அமையும். இந்த அர்த்தபுஷ்டியால், சித்தாந்தந்தான் அத்வைதமென்றும், வேதாந்தம் துவைதமென்றும் யாவரேனும் அறிந்துகொள்ளலாம். ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகளது சீடகோடிகளில் வேதாந்தத்தின் அழியாக் கோட்டைக் கொத்தளங்கள் என்று கொள்ளப்பட்ட சில உதாரணங்கள் தாமும் சித்தாந்திகளால் சுலபமாக தங்கள் மதபரமாக அர்த்தம் செய்யக் கூடியனவையேயாம். ஸ்ரீசிவஞான யோகிகள் எடுத்துச் சொன்னது போலவே பதார்த்தம் ஒன்று அல்லது பதார்த்தங்கள் இரண்டாவென்ற பிரஸ்னையெங்கும் எழுந்திருக்கக்காணோம். ஆனால் அந்த பிரஸ்னை பேர்போனவாயுள்ள "அஹம்பிரஹ்மாஸ்மி" "தத்வமசி" முதலிய மஹாவாக்ய மந்திரசம்பந்தமாக எழுந்ததென்க. அவர் சொல்வதாவது:—"மற்றென்னையோ அத்துவிதமென்னும் சொற்குப் பொருளெனிற் சித்தாந்தசைவருரைக்குமாறு காட்டுதும், 'அது நீயாகின்றாய்; எ-ம் அது நானாகின்றேன், எ-ம். அது விதுவாகின்றது எ-ம் மூவிடம்பற்றி நிகழும் தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களைக் கேட்டவழி அதுவென்பது ஒரு பொருள், நீயென்பது ஒரு பொருளாகலின், ஒருபொருள் மற்றொரு பொருளாமாறு, யாங்ஙனம் என்னும் ஐயநீக்குதற்கு எழுந்ததாகலின் அது விதுவாதற் கேதுவாய், அவ்விரண்டிற்கு முளதாகிய சம்பந்த விசேட முணர்த்துதலே யத்துவிதமென்னும் சொற்குப் பொருளென் றுணர்ந்துகொள்க."

அந்த பதமானது—ஒன்றென்று அர்த்தமாகவுமில்லை. அல்லது ஈரண்டு அல்லது இரண்டுக்குமேற் பட்ட எண்ணிலடங்கக் கூடியபதார்த்தங்களின் "இருப்பை" மறுதலிப்பான் உபயோகிக்கப்பட்டிருக்க வில்லை. மற்று இவ்விரண்டிற்கு முள்ள சம்பந்தத்தையே விளக்கி நின்றது.

நம்முடைய முதல் நூலின் கண்ணேயே, நீண்டகால முன்பாகவே இந்த அர்த்த புஷ்டியின் மாட்டு நுங்கள் எண்ணங்களை நீயிர் செலுத்துமாறு ஏவியிருக்கின்றோ மன்றே? அப்போது ஸ்ரீ சிவஞானயோகிகள் கூறப் புகுந்த இந்த அதிப்பிரகாச மமைந்த விளக்



கத்தையும் கூட நாம் வாசித்ததில்லை! அந்த அவசரம் நாம் அடியில் வருமாறு இது சம்பந்தமாகக் கூறியிருக்கின்றோம். சிவஞானபோதம் பக்கம் 17ல் இதைக் காண்க:—

"இந்த திருஷ்டாந்த முகங்கள் துவாரா ஒன்றையொன்று ஒத்திருப்பதாக நாம் கண்டாலும் கூட, "சத்து" (பொருள்) மாத்திரத்தில் ஒரு வித்பாஸம் இருப்பதாக நாம் உணரவருகிறோமே இந்த சம்பந்தந்தான் சொல்லினால் சுலபமாகத் தெரிக்கப் படாமற் போனாலுங் கூட, மனோபாவ மாத்திரத்தானே உணரக்கூடிய தொன்றாயுள்ளது காண்மின்! அது தான் இரண்டாகக் காணப்படுவது (துவைதம்) அப்படிக் கிருந்தும் அதே சமயத்தில் அவையிரண்டல்ல என்று சொல்வதற்கும் போதிய அவகாசம் ஏற்பட்டது கண்டீர்! இந்த சம்பந்தத்தைத் தான் "அத்வைதம்" என்று பேசப்படுகிறது. 'துவிதத்தில் ஏகம்' என அந்தசம்பந்தத்தையுணர்ந்து ஓதும் தத்வஞானமதமே அத்வைத தத்வஞான மதமென்க."

சென்ற இருபதல்லது முப்பது வருஷகாலமாக வெளிப்பட்ட அபாரமான வேதாந்த நூற்களுள்ளும் பிரஹ்மஞான சம்பந்தமான கிரந்தங்களுள்ளும் கூர்மையான அறிவோடு ஆராய்ச்சி செய்வதிலும், ஹிந்துமத தத்வஞானத்தை யாழ்ந்து அறிந்துபேசும் விஷயத்திலும் "புரோபசர் குண்டே" என்பவருடைய வியாசங்களைப் போன்றன ஒன்றுங்காணோம். அவர் பிரஹ்மசூத்திரத்தின்முதல் அத்தியாயத்தின் முதல்பாதத்தின் மொழிபெயர்ப்பு இறுதியில் சொல்லியுள்ள சங்கிரஹநியாசம் அதிவழகுள்ளதாயும் நவீனமாயேற்பட்ட தொன்றாயும் காணப்படுகிறது. வெகு ஆச்சரியகரமாக ஸ்ரீசிவஞான யோகிகளும் மிஸ்டர் குண்டேயென்ற கனவானும் ஒரே கேள்விகளைக் கேட்டு ஒரேவிடையையும் பிரசாதிக்கலாயினரே! அவர், துவைதபரமான விசாரணைக்கும் ஏகவாதபரமாகவும் பொதுவாக உபயோகமாகத்தக்க மந்திரங்கள் உபநிடதங்களில் பெறப்பட்டுள்ளன வென்று கூறுகின்றனர். ஏகாத்மவாதிகளுக்கு ஒருபெரும் ஆதாரமாயுள்ளவைகள் மகாவாக்கியங்களென்று சொல்லப்பெறும் மந்திரங்களேயாமென்க. இந்த மந்திரங்கள் தாமே துவைதிகட்கு பிரதிபந்தமாக நேர்ந்துள்ளன. அவர் பின்னும் அவைகளை "ஏகாத்மவாதிகள்" செய்

யும் அர்த்தங்களானவை தர்க்கநியாய விசாரணைமுன் நிற்கமாட்டாமல் ஒதுங்கியொழியும் என்றே கூறலுற்றார். ஏனென்றால், உள்ளபடியே அஃ வாக்கியங்கட்கு அன்னார் கூறவெழுந்த அர்த்தங்கள் பொருந்தவே பொருந்தா, அவர்கள் சொல்வதெல்லாங் கூடி குறி பார்த்து எய்யாத அம்புகள்போல அப்பிரயோசனப்பட்டொழிந்தன கண்டீர்!

“என்னசெய்யலாம்? கடவுளைப் பிரபஞ்சத்தோடொன்றுபடுத்திக்கூறும் சில வாக்கியங்கள் சந்தேகமில்லாமலே வேதத்திலுள்ளனவென்பது நிராக்ஷேபம். ஆனாலும் அனேகம் சேஸ்வர சாங்கியத்து அநுகுணமாய் அவற்றுள் இருக்கின்றன, ஆனால், பிரபஞ்சத்தைக் கடவுளாக வொன்றுபடுத்திக் கூறும் பல வாக்கியங்கள் சரியாக அர்த்தம் செய்யப்படாதவரையில், வேதங்கள் ஏகாத்மவாதத்தை கூறவில்லையென்ற விவாதமானது செலாவணியாக மாட்டாதே! மேலும் ஆஸ்திகர்கள் இவ்வாக்கியங்களை ஸமரஸப்படுத்துவது தூரமாயும் வலிந்து பொருள்கொண்டதாயுமிருக்கிறது. ஆனாலும், இச்சிற்சில ஏகான்மவாதச் சுருதிகள், ஆஸ்திகத்தை எவ்விதம் மறுக்கிறதென்பது எமக்குப் புலப்படவில்லை. ஏனெனில், அம்மந்திரம், அவ்விதமே பொருள்கொள்ளினும், ஆஸ்திகத்தையே யுறுதிசெய்திற்று.”

அவர் மேலும் இது யோகமாத்திரத்தானே அறியக் கூடியதொன்றென்று காண்பிப்பான் புக்கனர். அவர் முதற்கண் “சரியை, கிரியை” யென்ற “பக்தியின்” பல்வேறுபட்ட கிளைகளைக் குறித்து விளக்கமாக எழுதலாயினர். அவர் அது சம்பந்தமாக மீண்டும் கூறலுற்றதாவது:—“அப்படிப்பட்ட பிரேமை ரூபமான பக்தியிலே ஒரு முக்கியமான அழகொன்றுள்ளது. இவைகள்—அது ஆத்மாவின் அற்புத ஆனந்த நிலையமாகும். அந்த அரும்பெரும் நிலையமானது யாதொரு திருஷ்டாந்த முகத்தாலறிந்தாலொழிய வேறு எவ்விதத்தாலும் அறியப்பாலதொன்றன்று ஒரு தாயானவள் தன் குழந்தையிடம் வைத்துள்ள யாதொரு பிரேமையை இதைவாசிக்கும் புண்ணியர் உணர்ந்தறிவாராக. யாதொருதாயல்லது யாதொரு குழவி சிற்சில வேளைகளில் இன்னதென்று வரையறுத்துக் கூறமுடியாத ஒரு அற்புத மனோநிலைமையை



யடைதல் சம்பவமேயாகும். அவர்கள் அந்த அற்புத நிலைமையிலுள்ளபோது அவர்களிடம் நேரிடும் மெய்ப்பாடுகளை அவர்கள் ஆநந்தநிலைமையிலுள்ளபோது கூறும் வார்த்தைகள் தாமே ஒருவாறுநமக்கு விளக்கக் கூடியனவாம். தாயானவள் நேரில் உள்ள குழந்தையை நேரில் கண்டு இன்னணம் பேசுவாள்.

“ஓ! என் தங்கக்கட்டியே! ஓ! என்னுயிரே! ஓ என்னறிவே உன்னையான் இன்று விடமுடியுமேயோ?” ‘இன்பன் கடிப்பன் திருத்துவன்தானே.’ அந்த சந்தர்ப்பங்களிலே தாயானவள் தனது உடம்பானது தன்குழந்தையின் உடம்பினின்றும் வேறானதொரு பதார்த்தமென்பதை மறந்து நிற்கின்றாள் கொல்லோ? அந்த குழந்தையும் அப்போது அதே வுணர்ச்சியுடைய தாயுள்ளது கண்டீர்! அப்படி ஒன்றி நிற்கும் பொழுதொரு அவசரமானது மனசின் அபூர்வ ஆனந்த சமயம் என்று கொள்ளத்தடையென்னை! இது ஒரு முக்கியமான பக்தியவசரம் என்பதே உண்மை. இந்தமாதிரியான கடவுளோடு ஒன்று பட்டதிவ்ய அவசரம் யாதொரு யோகியானவன் உணரலாயினன். அதனானே வேதங்களிலும் உபநிடதங்களிலும் இவ்வளவினன்றி வேறுவிதமாக ஏகான்மவாதம் செய்யப்படவில்லை. மேலும் ஸ்ரீ பாதராயணரால் செய்யப்பட்ட பிருஹ்மசூத்திரத்தில் இந்த ஏகான்மவாதம் போதிக்கப்படவில்லை. மேலும் அவரே அடியிற் கண்டவாறு மீண்டும் இது விஷயமாக விசாரணை மேற் கொள்ளலாயினர்.

“இந்திய வேதாந்தத்தின் சொரூப லக்ஷணமானது இதுவேதான். ஆத்மசக்தியை யதுவுணர்ந்து கூறியதேயாம். இதையேயுக சூத்திரம் விபரமாகக் கூறி நின்றது. அவைமுறையே கிரமமாக கீழேகண்ட விவாதங்களை வெளியாக்கின. பரமாத்வாவிற்கும் ஜீவாத்மாவிற்கும் சம்பந்தமுண்டு. மனிதனுடைய ஆத்மாவிறகு வெளிப்படா தடங்கியிருக்கும் அனேக அபார சக்திகளுண்டு. சிற்சில சாதனங்களை மேற்கொண்டானானால் அவை ஆத்மாவின் அடங்கிக்கிடக்கும் சக்திகளை வெளிப்படுத்தக்கூடும். அப்படிப்பட்ட சமயங்களில் மகனொருவன்—யோக அப்பியாசம் செய்யப்புகுந்தவன் பூர்வம் நடந்த சமாச்சாரங்களையும், மேலே வரக்கிடப்பனவாயுள்ள பலகர்ம விசேஷங்களையும் அறிந்து கூறுதலொ

லினும். உடம்பைவிட்டும் வெளிக்கிளம்பிய ஆத்மாவானது ஒரு அர்த்தத்தில்மட்டும் கடவுளில் கரைந்து மறைந்ததென்று சொல்லவும் இடமுண்டு. யோகமார்க்கம் வேதாந்தத்துக்கு முக்கிய அஸ்திபாரமாயிருந்தது?''

மற்றோரிடத்தில் நாம் ஒன்று காண்பித்திருக்கிறோம். யோகபாதமானது வேதாந்தத்தின் அஸ்திபாரமட்டுமல்ல யோகபாதமே வேதாந்தமென்றும் ஆண்டுகூறிப் போந்தோம் ''உபநிடதம்'' என்ற வார்த்தையானது ''யோகம்'' என்னும் அர்த்தத்தையே தராநின்றதென்பது பிரகாசமாகப் பலராலும் அறியப்படவில்லை. ''யோகம்'' என்றால் கடவுளோடு ஆத்மாவைச் சம்பந்தப்படுத்துவான் கருதி யாதொரு மகன் அப்பியசிக்கும் ''சாதனம்'' என்று அர்த்தமாகும். ''உபநிடதம்'' என்பதும் யாதொரு மகன் நாளடைவில் கடவுள் சந்நிதானத்தை நெருங்கி நெருங்கிச் செல்லவும், தன்பந்தங்கள் ஒழிந்து இறைவனுடன் ஒன்றுபடுவதற்குள்ள சாதனமாகும். தாது அர்த்தம் (உப-சமீபம், அல்லது சமீபத்தில் நி - முழுமையும் சத் - மாய்ந்துபோதல்) முன்னம் திருவாசகத்தினின்றும் யாம் உதகரித்து மகிழ்ந்த மந்திரத்தின் அர்த்தத்தோடும் இந்த ''உபநிடதம்'' என்ற தாது அர்த்தம் அதிப்பொருத்தமாயுள்ளது. கோயிற்பதிகம் 7-வது பாசுரம்.

''சென்றுசென்று அணுவாய்த்
தேய்ந்துதேய்ந்து ஒன்றும்''

மேலும், சாந்தோக்கியம் (1-1-10) முதலிய பல வேதாந்த நூல்களில், இந்த ''உபநிடதம்'' என்ற பதமானது ''யோகம்'' என்னும் பதத்தின் பிரதிமொழியாகவே உபயோகிக்கப் பட்டிருக்கிறது. இந்த தாதுவிசாரணையே, உபநிடதங்களின் பொருளைப் பூரணமாக விளக்காநின்றது. அதைத் தப்பிதமாக வழிந்ததன் காரணமாக எத்தனையோ குழப்பங்கள் நேரிட்டுவிட்டன. யோகபாத நூலாகவே சித்தாந்திகள் உபநிடதத்தை மதிக்கின்றார்கள்.— இதற்கும் மேலானதாயுள்ளது ஞானபாதமாக முடிந்தபடியால், ''உபநிடதம்'' ''வேதாந்தம்'' ''யோகம்'' ''ஸஹமார்க்கம்'' ''அல்லது'' ''ஸோஹமார்க்கம்'' அல்லது ''ஹம்ஸமார்க்கம்'' என்ற பதப்பிரயோகங்கள் எல்லாம் ஒருபொருட் கிளவியாக முடிந்தன.



''வேதாந்தம்'' என்ற வார்த்தை உள்ளபடியே ''யோகம்'' என்ற அர்த்தத்தைத் தருகிறபடியால் வேதாந்தம், சித்தாந்தம் என்ற பதங்கள் வேறுபட்டனவாக எண்ணப்பட்டு, சித்தாந்தம் ஞானமார்க்கம அல்லது ஞானபாதம் என்ற தாத்பரியம் கொடுக்கிறது. ஆயினும் அது, சரியை, கிரியை, யோகம்என்ற ஏனைய பாதங்களையும் தழுவிநிற்றலைக் கவனிக்கக்கடவீர். மஹாவாக்ய மந்திரங்களில் கூடமாக அமைந்திருக்கும் சாதனசம்பத் தென்னையோவெனின்—ஸோகம் பாவனை அல்லது சிவோகப்பாவனை என்றதொன்றே பெறப்படும். இந்த சாதனை முந்தியபிறகு ஆத்மா சிவத்தோடு ஒன்றியல்லது ஐக்கியப்பட்டு நிற்றல் சுலபமாம். அப்போது அஹங்காரப் பிரவிர்த்திகளும் ஆத்மாவிற் கில்லை. அப்போது அந்த ஆத்மா இன்னணம் சொல்லக்கூடும். ''யானே உலகமெல்லாமாயினேன்.'' ''யானே யுலகென்பனின்று.'' சிவஞ்ஞானபோதம் 2-1-4). ''என்னிலேதானே எல்லாம் உண்டாயிற்று. என்னிற்றானே அவையாவும் நிலைபேறடைந்தன. என்னிடமே எல்லாம் கலப்படைகின்றன. அந்த இரண்டற்ற பிரமம் யானே. (கைவல்ய உபநிடதம்-22.

புரோபசர் குண்டே என்ன சொல்கின்றார்? மனிதனிடத்தில் ஒரு சக்தியடங்கி யிருக்கிறது. அதை வெளிப்படுத்துவதினாலே, அவன் கடவுளோடு ஒன்றுபடக் கூடும். அதேமாதிரியாகவே ஸ்ரீ சிவஞ்ஞான யோகிகளும் அடிக்கடி இதையே எடுத்துக்காட்டி யுள்ளார். இந்த சக்திதான் ஆத்மாவின் அறுவதுவாதற்றன்மை, சார்ந்ததின் வண்ணமாதற்றன்மை யென, மெய்கண்ட தேவரும், யாதொன்று பற்றின் அதன் இயல்பாய் நிற்றல் என்ற ஸ்ரீதாயுமானவரும் கூறினார்கள். மேலும் இந்த சக்தி பளிங்கு அல்லது கண்ணாடிக்கு உவமித்து மிருக்கின்றது.

புரோபெசர் ஹென்ரி டிரம்மண்டு என்ற மேதாவி இன்னவிதம் ஓதுகின்றார். ''எல்லா மனிதர்களும் கண்ணாடிகளாவார்கள். ஆத்மா வீடடைவதற்கோ, அல்லது பந்தப்படுவதற்கோ அடிப்படையான வாய்ப்பாட்டிற்கு முதல் விதியாகும். சீவனைக்குறித்து விவரிக்கப் போந்த உபமானத்தில் இது அதியுத்கிருஷ்டமானது, மக்களை நிழலாடிகள் எனக்கொண்டது!''. முதல்

முதல் இந்த திருஷ்டாந்தம் உபநிடதங்களும் கீதையிலும் காணப்படுகிறது.

“யாதொரு உலகத்தினால் செய்த வட்டவடிவான பதார்த்தம் (நிழலாடி போன்றது) தூசிகளால் பிரகாசம் மழுங்கிப்போயிருந்து, பிற்பட்டு அதைச்சுத்திசெய்த அநந்தரம் சம்பிரமாகப்பிரகாசிப்பதுபோலவே, உடல் எடுத்த ஒருசீவன் தனது உண்மையான சொரூபத்தைத் தரிசித்தபிறகுதானே திருப்தியும் துக்க நீக்கமும் அடைகிறான். பின்னும், அவனுடைய உண்மைச்சொரூபத்தைத் தரிசித்தவழியே, அதையே ஒரு திருவிளக்காகக் கொண்டு பிரமத்தின் உண்மை சொரூபத்தை யறிந்து தத்வங்களைக் கடந்து நின்று பிறப்பற்ற அநாதி இறைவனைவிடுகிறான். அப்பொழுது எல்லாபாசத் தொடர்பினின்றும் நீக்கப்படுகின்றான்.” (சுவேதேஸ்வதார உபநிஷத II. 14. 15.) அவனையே (பரமனையே) சிந்திக்கும் காரணப்பற்றி (அபிதியானாத்) அவனைச் சார்தல் காரணம்பற்றி (யோஜனாத்) அவனோடு அதுவதுவாய் போய்விடும் காரணம்பற்றி (தத்வபாவாத்) இறுதியில் மாயையின் மிகுந்த அதிகாரமும் அவன் மாட்டுச் செல்லாமல் ஒழிந்து போய்விடுகிறது. (சுவேதேஸ்வதார உபநிஷத் I. 10) ‘ஒரு நெருப்பானது புகையால் மூடப்பட்டிருப்பது போலவும் பளிங்குமாசினால் மூடப்பட்டது போலவும் ஒரு பிண்டமானது கர்ப்பத்தால் மூடப்பட்டிருத்தலைப் போலவும், இந்த ஆன்மா ஆசையால் மூடப்பட்டிருக்கிறது. (கீதை III. 3)

ஸ்ரீ மெய்கண்ட நாதனும் பின்வரும் வெண்பாவைக் கட்டளையிட்டிருக்கிறார் (VIII. 3. A)

பன்னிற மேகாட்டும் பளிங்கேபோல் இந்திரியத்
தன்னிறமே காட்டும் தகைநினைந்து—பன்னிறத்தும்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு.

இதனுடைய தருமமானது சாங்கிய மதத்தில் இனிது விளக்கப்பட்டுள்ளது. யோக சூத்திரங்களிலும் அங்ஙனமே. அங்கே காட்டியுள்ள திருஷ்டாந்தங்கள் பளிங்கும் வர்ணமுமே.



“உள்ளபடியே ஆன்மாவானது ஒன்றோடொன்றும் சம்பந்தமடைந்தில்லாவிடினும், (மனோசங்கல்பம் அல்லது வியவகாரம் காரணமாத்திரந்தானோ) விவேக்குறைவால், ஒருவிதமான கலப்பையது அடைந்து விடுகிறது. [ஒன்றிலும் உள்ளபடியே சம்பந்தப்படாததாகிய ஒன்றில் உள்ளபடியே யாதொரு கலப்புமில்லை யென்றே சொல்லலாம் (ஆன்மாவுக்கு ரஸம் போலவேனும் அல்லது வேறு எந்தமாதிரியான வேறுகலப்பும் இல்லவேயில்லையென்று கொள்ளக் கிடப்பதால்) அப்படிக் கிருந்தும், ஒருகலப்பொன்று அதற்கு அந்த ஆன்மாவிற்கு இருந்தாற்போலவும் காணப்படுகிறது. அதனாலே அந்த கலப்பானது ஒருவித பிரதிபிம்பமாகவே கொள்ளப்பட்டுள்ளது. ஆன்மாவினின்றும் அஃதடைந்துள்ள கலப்பையல்லது கல்மிஷத்தை வேறு பிரித்தறியக் கூடிய சான்றோர் அங்ஙனம் கூறிநின்றனர். மோஹம் காரணமாக அந்த கல்மிஷம் அதற்கு உள்ளது போலவே காணப்படுகிறது.] “செம்பருத்திப்பூவும் பளிங்கும் போன்று யாதொரு கல்மிஷக்கலப்பு அதற்கு (ஆன்மாவிற்கு) இல்லை, ஆனால் அங்ஙனம் ஒன்றிருப்பதாக பிராந்தி மட்டுமே தோற்றமாகிறது.”

பந்தமறும்பளிங்கனைய சித்த சுவாதீனமடைந்த ஒருவனுக்கு, ஞாதுரு ஞானஞேயம் சம்பந்தமாக, இதுவெல்லாம், இதற்கெல்லாமாதாரமா யுள்ளதுடன் ஒற்றித்துநிற்கும். (யோகசூத்திரம்,) (I. 41.)

உபநிடதத்தின் அடியிற் குறிக்கப்பட்ட வாக்கியங்களிலும் மனசு தனக்கு விஷயமாகும் பதார்த்தங்களோடு ஒன்றி நிற்கும் உண்மையானது பிரகாசமாகப் பேசப்படுகிறது.

“இப்போது, யாதொரு மனிதன் இதுவாகவும் அதுவாகவும் ஆகின்றது. அவனுடைய நடவடிக்கையையும் நடிப்பையும் பொறுத்துள்ளது, அவனடிப்பையொட்டி, அவன் அங்ஙனமாவதும். யாதொரு நன்னடக்கையுள்ள மனிதன் நல்லவனாகவே ஆகிறான். துர்நடக்கையுள்ளவன் துஷ்டனாகவே முடிகிறான். பரிசுத்தமான கிரியா சம்பந்தத்தால் அவனே பரிசுத்தமாய் விடு

கிறான். கெட்ட நடவடிக்கைகளால் கெட்டவனாகவே ஆய்விடுகிறான்.

"அவனுடைய ஆசையெப்படியிருக்கிறதோ! அப்படியே அவனுடைய இச்சை இருக்கிறது. அவனுடைய இச்சை எப்படி இருக்கிறதோ அப்படியே அவனுடைய செய்கைகளும் இருக்கின்றன. எந்தகர்மத்தையவன் விளைவிக்கின்றானோ, அவைகளின் பலனை புசித்தேதீர வேண்டும்.

"எந்தபதார்த்தினிடமாக யாதொரு மகனுடைய மனமானது நாடிக்கிடக்கின்றதோ, அதைத்தான் அவன் கர்மவசத்தால் அடைகிறான். பிருஹ்மமாயுள்ள ஆன்மாவை யெவனொருவன் ஆசிரியத்திருக்கின்றானோ, அவன் பிருஹ்மத்தினிடம் சேறல் சம்பவம். அந்த ஆத்மா உள்ளபடியே பிருஹ்மம்தான். (பிருஹதாரண்ய கோபநிஷத் iv. 5. 6)

இதே மாதிரியான பலவாக்கியங்கள் மஹாபாரதத்திலும் அகப்படுகின்றன. சமஸ்கிருதத்தில் இதைக் குறித்து பழக்கத்தில் வந்துள்ளதோர் பழமொழியுமுண்டு.

"யத்பாவம் தத்பவதி"

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்பவர் இந்த சேர்க்கையை "முற்றும் ஒன்றுபடல்" (absolute identity) எனக் கூறுகின்றார். இதுவே ஸ்ரீ மெய்கண்டநான் வாக்கியமாயுள்ள 'அது அது ஆதல்' என்றதும். உபநிடத நூலாசிரியர்கள்—சாங்கியர், யோக்கியர், சித்தாந்திகள் இந்த உண்மையைக் கூறி, இதையே மோக்ஷத்துக்கு அஸ்திபாரமாகக் கருதுவது போலவே, புரோபெசர் ஹென்றிடிரம் மண்டு என்ற கனவானும்கூட "மறுவாழ்வு" என்ற தலைப்பின் கீழ் அவர் யாத்த வியாசத்தின் கண் இதையே மோக்ஷத்துக்கு சாதனமானதாக வற்புறுத்திக் கூறுகின்றார். இவர் பீடிகையாக எடுத்துக் கொண்ட பிரமாணம் "பால்" என்னும் சித்தர் கூறிய கூற்றினுள் ஒன்றே.

"நாமெல்லோரும் நம்முடைய முகத்திரையை நீக்கி ஒரு கண்ணாடிபோல் நிற்கின்றோமாதலான் அந்த கண்ணாடியில் எதிர் நின்ற பொருள் பிரதிபலிப்பது சகஜம். பகவத்சாந்நித்தியம் பெற்றபோது பகவத்விலாசமும் நம்முடைய உள்ளங்களில் பிரதிபலித்தலிற் றடையென்னை? அவர் உருவமாகவே நாமும் மாறிப் போகின்றோம். பெருமிதத்தினின்றும் அதியுத்கிருஷ்டமான பெருமித நலங்களையே யடையாகின்றோம். இப்படித் தானேயே கடவுளிடமிருந்து ஆன்மாவும் அபாரகௌரவங்களை யடைந்து சுகித்தது போலும்."



அவர் அந்த வாக்கியத்துக்கு விருத்தியுரை யொன்று அடியிற் போந்தவாறு எழுதலாயினர்:—

"நாம் எல்லோரும் பரிசுத்தமடைந்த பிற்பாடு, கிறிஸ்துவையே நம்முடைய மனத்தில் பிரதிபலிக்கலாயினோம். அது ஏனென்றால் நாம் அவர் சந்நிதியில் யாதொரு நிழலாடியைப் போல நிற்கும் பாக்கியம் பெற்றபடியால் என்க. அவ்விதம் நின்றுழி, கீழ்க் குணமிழந்து நற்குணமும், அதற்கு மேலும் குணமும், அப்படியே படிப்படியாய், முற்றும் நற்குணம் வாய்த்தல் அமையும். இதன் பொருள் கிறிஸ்துவினுடைய குணவிசேஷங்களை நீ பிரதிபலிக்கச் செய், நீ கிறிஸ்து ஆய்விடுவாய். அல்லது, நாம் கூறுவதுபோலவே கடவுளை நம்முடைய ஹ்ருதயத்தில் பிரதிபலிக்கும்படிச் செய்வோமானால் நாமும் கடவுளைப்போல, அல்லது கடவுளாகவே ஆய்விடத் தடையில்லை.

ஆனால் அந்த ஏழமை பொருந்திய நமது குணமானது நாளுக்கு நாள் எப்படி அதன் ஏழமையை யொழித்துச் சேறல் சாத்யமாகும்? அல்லது பிரதிபலனத்தைத் தன்னிடமே யேற்றுக்கொள்ளும் நிழலாடியானது என்னணம் நாளடைவில் பரிசுத்தப் பட்டுக்கொண்டே போகக்கூடும்? கண்ணாடி (ஆத்மாவைச்) சுத்திசெய்வதினாலும் அதிப்ரகாசமான ஈஸ்வரஜோதியோடு அதை நாளடைவில் ஒன்றுபடுத்துவதினாலும் இதைச் செய்து முடிக்கமுடியும்.

சை கண்ணாடியானது எப்போது பரிசுத்த நிலையையடைந்துவிடுகிறதோ, எப்போது அருட்பெருஞ் சோதியுடன் அதிசமீபத்தை யடையப்பெற்றதோ, அப்போதே அந்தசோதி அமோகமாகப் பிரகாசியாநின்று கண்ணாடியை உள்ளடக்கி, அதனைக் காட்டாது, தன் சுயஞ்சோதியே மேலாயிற்றென்க. சை கல்வியிற் சிறந்த புரோபெசர் உண்மையாகக் கூறுவதாவது "நீங்கள்

உணர்வதெல்லாங்கூடி கடவுளுடைய பெருமிதமேயாம். உலகம் உணர்வதும்கூட, அதனுடைய பிரதிபலம் சரியாயிருக்கும் பட்சத்தில், கடவுளுடைய அபார கௌரவங்களேயாம். ஒரு நிழலாடியை நாம் பார்க்க நேரிட்டபோது, அதை நாம் கவனிப்பதில்லை. ஆனால் அதில் பிரதிபலிக்கும்யாதொரு பதார்த்தமுண்டோ அதைத்தான் நாம் சிந்திக்கவும் பார்க்கவுமாவேனும். ஏனென்றால் யாதொரு நிழலாடியானது தன்னிடமே நமதுஞாபகத்தை யீர்ப்பதில்லை. அதனிடத்தில் யாதேனும் குற்றங்குறைகள் இருந்தால்மட்டும் நாம் அதனைக் கவனித்துப்பார்க்க நேரிடும்.'' இந்தக் குற்றங்களைத்தான் சித்தாந்திகள் வர்ணவேறுபாடுகள் என்று பேசாநின்றனர். சித்தாந்திகள் அவைகளைத் தாம் மாயையல்லது தேகத்துக்கு உவமானித்துக் கூறுகின்றனர். உடலோடொன்றிய பொழுது, உடல் காணப்பட்டதே யொழிய பளிங்கைப்போன்ற ஆந்மாவை யவன் அறிவதில்லை. கடவுளோடு ஒன்றியபோது கடவுள் பிரகாசமும் பெருமிதமும் மட்டுமே வெளியாகாநின்றன. நிழலாடிபோன்ற ஆந்மாவையுங்கூட அங்கே கண்டதில்லை. இந்த திருஷ்டாந்தத்தையவர் எத்துணையழகாக விளக்கலாயினார் என்றறிவான் நாம் நம்முடைய நண்பர்களை அவரது விபாசமுழுமையும் ஒருமுறை யோதுவான் ஏவுவேமாயினேம். முதல்விதி பிரதிபலித்தல் ஆகவும், இரண்டாவது விதியாகிய அது அதுவாதலை பின்வருமாறு கூறுகின்றார். ''இவ்வதுவாதற் றன்மை இரண்டாம்விதியாகும். இது மோக்ஷசாதனங்களில் முக்கியமாகியது. மக்கள், ஒருகணத்தில் காட்சிக்கு விஷயமாகி மறுகணம் மறைந்துபடும் பல பதார்த்தங்களைப் பிரதிபலிக்கும் நிழலாடிகள் மட்டுமாக முடிந்தொழியாமல், அவைகளிடம் பிரதிபலிக்கும் பதார்த்தங்களின் வாசனாஸ்புருணத்தைத் தத்தம் ஆழ்ந்த சத்துக்களிலேயே பிரதிபலித்து நிற்கச்செய்து அப்படி பிரதிபலித்த பதார்த்தவகைகளை வாசனாரூபமாகத் தத்தம் உள்ளத்திடம் பூட்டிவைக்கின்றன போலும். ஆந்மா இந்த விஷயங்களையெல்லாம் என்னணம் தனக்குள்ளாகப் பிடித்து அல்லது கட்டிவைத்திருக்கிறதென்று ஒருவராலும் சொல்லவே முடியாது. இந்த அற்புதம் என்னணம் சித்தியாகிறதென்று ஒருவரும் அறியார்கள். இயற்கையில் நாமுணர்ந்த எந்தவிதமான காட்சியும்,



ரசாயன சாஸ்திரத்தின் எந்தவிதமான முறைகளும், மந்திரசாஸ்திரத்தில் கூறியுள்ள எந்த அத்யாயமும் நாம் இந்த ஆச்சர்ய சம்பவத்தையுணர்ந்து கோடற்கு அநுகுணமாக நேரிடக் காணோம். ஏனென்றால், யோசித்துப் பாருங்கள்! சென்றகாலத்தில் நடந்தன யாவும் ஆந்மாவில் ஒருகாலத்தில் அழுந்தினமாத்திரமன்றி அங்கேயிருக்கின்றது. அது அங்கில்லாத பட்சத்தில், அது அங்கிருந்து எப்படி பிரதிபலிக்கும்? யாதொரு மகன் பிரபஞ்சத்தில் தான் கண்ட, அறிந்த, உணர்ந்த, நம்பிய எல்லா வஸ்துக்களும் அவனுடைய உள்ளத்திற்றானே கிடக்கின்றன. அவனுடைய ஒரு கூறாகவே அவைகள் ஆய்விட்டன; அவையே அவனாய்விட்டன. அவன் அவைகளின் பிரதிமையாகவே மாறிவிட்டனன்.''

இவ்விரண்டு உண்மைகள் தாமே நமது மந்திரங்கட்கும், உபாசனைகட்கும், சாதனங்கட்கும், பாவனைக்கும், யோகத்துக்கும் அஸ்திபாரமாகப் போந்தன. ஷெபுரோபசர் அவர்கள்டார்வின் துரையின் அபிப்பிராயத்தை இந்த சந்தர்ப்பத்தில் திருஷ்டாந்தமாக எடுத்துக் காண்பிக்கின்றார். மனிதபரிணமிப்பிலும், மிருகபரிணமிப்பிலுமே, இந்நியாயம் புலப்படுகின்றது. பன்றிகளோடு என்றும் பழகும் மக்கள் பன்றி முகங்களையே யடைகின்றார்கள். குதிரைகளோடு சர்வதாபழகும் மக்கள் குதிரைமுகங்களையே பெறுகின்றார்கள் என்று கூறுவாராயினர். யாதொரு புருஷனும் அவன் பெண்சாதியும் பரஸ்பரம் ஒருவரை யொருவர் உள்ளன்போடும் நேசித்துறவாடி ஒன்றுபடும் பட்சத்தில் அவர்களுடைய தூலதேகங்கள்கூட ஒன்றையொன்று ஆச்சர்யமாக ஒத்துப்போதலை நாம் கண்டிருக்கின்றோம். அப்படிப்பட்ட சக்தி மனுஷனுடைய மனதுக்குஉண்டு. அதனால் நன்மையும் உண்டு. தீமையும் யுண்டு. கேவலம் இழிந்த மிருக அந்தஸ்துக்கும் அதுதன்னைத் தானே தாழ்த்திவிடக் கூடும். அல்லது அதியுன்னத நிலையாகிய கடவுள் நிலைக்கும் அது தன்னைத்தானே உயர்த்தி விடவும் கூடும். இந்த விதியைத்தான் நம்முடைய புத்தகங்களில் கருடதியானம் என்று பேசப்பட்டிருக்கிறது.

''இயற்கை யுலகத்தில் காணப்பட்ட ஆத்மதர்மம்.'' என்றமகுடம் புனைந்த நூலை யெழுதிய ஆசிரியர் (அமெரிக்காவில்

ஷிகாகோ நகரத்தில் பார்டி. அன்ட்கம்பெனியாரால் இது பிரசுரிக்கப்பட்டது) அடியிற் கண்டவிதமாக சித்தாந்தம் செய்கிறார்.

“எல்லாவஸ்துக்களினுடைய காரணங்களை விசாரித்தலையே பொருளாக மேற் கொண்ட எல்லோரும் ஆதோதி காரண சக்தி பொருந்தி ஒன்றுபட்டுப்போயினர். ஏனெனில் எதை நாம் ஆழ்ந்து உய்த்துணருகிறோமோ அல்லது யாதொன்றுடன் நாம் அதிகமாகப் பழகுகின்றோமோ, அப்போதும் அதைப்போலவும், நாம் ஆய்விடுகிறோமென்பது என்றும் மாறுதலியாகக் காணலாம். நாம் அடிக்கடி யாரோடிருந்து பழகிவருகின்றோமோ அவர்களுடைய நடையும், முகவடிவும், பேச்சு முதலானதுகளும் நமக்குப்படியும். இற்கில வேளை ஒரு குழந்தையானது தனது தாயைப்போ லில்லாமல் தனக்கு பால் கொடுத்து சோறூட்டி வளர்த்த செவிலித்தாயைப்போல் ஆய்விடுதலும் சகஜம்.”

அந்த புஸ்தகமுழுதும் இந்த இரகசிய உண்மையையே போதிக்க வெளிவந்துள்ளது. மேலும் கடவுளை யுள்ளபடியே யடைதற்குப் பெருஞ்சாதனமாக அந்தபுத்தகம் ஒரு சாதனத்தைக்கற்பியாநின்றது. அது வருமாறு:—ஒருவன் உறுதியாய்ச் சாதனை சிந்திக்கவேண்டியது. உலகம்பொய். பொய்யும்பாவமும் இல்லவே யில்லை. வியாதி யென்பதில்லை மரணம் இல்லை. நான் கடவுளின் புத்திரன், சத்தியம், ஞானம், ஆநந்தம், இறைவனுடைய அநந்த சக்தி, முதலியனவே என்றும் பிரகாசமாயிருக்கின்றது. இந்த பிரபஞ்சத்தில் இவைகளைத் தவிர்த்து வேறு யாதொன்றும் இல்லவேயில்லை. நான் கடவுளின் பிரதிபிம்பம் நான் அவன் விக்ரகம், என்றும் அவனைப்போல இவ்விதம் அவன் பாவனை செய்ய அவன் உள்ளபடியே வியாதியையும் மரணத்தையும் ஜயிக்கவனாகி உள்ளபடியே கடவுளின் குமாரனாகின்றான். இந்தபாவனை “சோஹம்பாவனை” அல்லது “சிவோஹம் பாவனையை முழுவதும் ஒத்துப்போகிறதுங் காண்க.

அடியிற் குறிப்பிட்ட ஸ்ரீஅருணந்தி சிவாசார்ய சுவாமிகளின் பாட்டான்று இந்த விசாரணையை முழுதும் சங்கிரகப்படுத்திக் கூறுவதை யறிதிர் அன்பர்காள்!



“கண்டவிவைபல் லேனென்ற கன்றுகாணுக்
கழிபரமு நானல்லே னெனக்கருதிக்கசிந்த
தொண்டினொடு முளத்தவன் தன்னின்ற கலப்பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன் வேறின்றி
விண்டகலு மலங்களெல்லாங் கருடதியானத்தின்
விடமொழியு மதுபோல விமலதையு மடையும்
பண்டைமறைகளு மதுநானானே னென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே.” (IX. 7)

நமக்கும் கடவுளுக்கும் பிரபஞ்சத்துக்கும் உள்ள சம்பந்தங்களை யெல்லாம் நாம் உள்ளபடியே யுணர்ந்தறிந்துய்ய வேண்டியது, நமது இன்றியமையாக் கடப்பாடானபடியால் ஸ்ரீ கண்ட சிவாசார்ய சுவாமிகள் தமது சூத்திர பாஷ்யத்தில் (II. 1-21-3) இந்த விஷயமாக விசாரணைமேற் கொண்டு எழுதியிருக்கிறார்கள். அந்த பாகங்கள் முழுமையுமே நாம் அடியில் உதகரிக்கின்றோம். அவர் பலவேத சுருதிகளையும் மகாவாக்ய மந்திரங்களோடு மிகவும் அழகாக சமரஸப்படுத்தியிருக்கின்றார். “கீழே பிரஸ்தாபித்தாவியவஸ்தா சம்பந்தமாக சூத்திரகாரர் ஒரு ஆட்சேபனையைக் கிளப்பி யதற்குச் சமாதானமும் தாமே கூறலுற்றார்:—

மற்றொன்றோடு இருப்பதாகக் கூறப்படலான், இதந்தைச் செய்யாமை முதலிய தோஷம் எய்துகின்றது.

(ஆக்ஷேபம்)

தத்துவமஸி (சாந். ௬. ௮. ௭)

“அது நீயாகின்றனை”.

அயமாத்மா பிரம்மா (பிரு. ௪. ௫. ௧௧)

“இந்த ஆன்மா பிரமம்” என்றதுமுதலாக்கத்தவற்றிற் காரியமாகிய ஆன்மா காரணமாகிய பிரமமென்று கூறப்படலான், அவ்விரண்டும் வேறில்லை எனக் கூறப்பட்டது. இங்ஙனமாகுங்கால், சர்வஞ்ஞரும் வியாபகருமாகிய சிவபெருமான் உலகத்தைப் படையாமை அவர்க்கு நன்மையாகவும், அதனைப் படைத்தல் அவர்க்குத் தீங்காகவுமன்றோ நேர்கின்றது. ஆகலின், சர்வஞ்ஞரும் சத்தியசங்கற்பருமாகிய சிவபெருமான் தம்மினின்று வேறுபடாத ஆன்மாவினது தாபத்தைத் தம்முடையதென்று அறிந்தும் சம்சார நிமித்த

மாயுந் தீதாயுமுள்ள சிருட்டியை எங்ஙனம் முயன்று இதமாகிய சிருட்டியாமையை விடுத்தனர்? அதுகொண்டு ஆன்மா அநன்னியமாயிருக்கும்போது, தமக்கு இதமாயுள்ளதைச் செய்யாமையானும் அகிதமாயதைச் செய்வதானும், அறிவு சூன்னியராதன் முதலிய தோஷஞ் சிவபெருமானுக்கு எய்துகின்றன; அதுபற்றி, காரியகாரணராம் ஆன்மாவும் சிவபெருமானும் அநன்னியமாதல் அயுக்தமே எனின்,

(உத்தரம்) யுக்தம் எனக் கூறப்படுகின்றது.

அதிகந்து பேதனிர்தேஸாத் (உ. க. உஉ)

ஆயின் (காரணம்) சிரேட்டம்; பேதங் கூறப்படலான்.

காரியமும் காரணமும் அநன்னியமாயினும்,

விஸ்வாதிகோருத்ரோமஹர்ஷிபி: தைத். ஆரணி. கம். கஉ. உஅ)

"உலகங்களுக்கெல்லாஞ் சிரேட்டர் மகர்ஷியாகிய உருத்திரர்" என்று சுருதி கூறுதலான், ஈண்டுக் காரியமாகிய சிதசித்பிரபஞ்சத்தினின்று காரணஞ் சிரேட்டமென்று அறியப்படுகின்றது. அங்ஙனம் பின்னர்ப் போதருஞ் சுருதிகளினாலே, பேதநிர்த்தேசம் என்று சூத்திரம் கூறினமையின், ஆன்மாவும் சிவபெருமானும் வேறென்று காட்டப்படுகின்றனர்.

வித்யாவித்யே ஈஸதேயஸ்து ஸோன்ய: (சுவே. ரு. க)

"வித்தையையும் (ஆன்மாவையும்) அவித்தையையும் (அசேதனத்தையும்) ஆளும் ஈசுரர் வேறு"

க்ஷராத்மாநௌ வீஸதே தேவஏக: (சுவே. க. ய)

"(பிரதானமாகிய) க்ஷரத்தையும் ஆன்மாவையும் தேவர் ஒருவர் ஆளுகின்றனர்"

ப்ருதகாத்மானம் ப்ரேரிதாரஞ்சமத்வா (சுவே. க. சு)

"ஆன்மாவையுஞ் செலுத்துபவரையும் வேறு என நினைந்து"

த்வாஸுபர்ணா ஸயுஜாஸகாயா (சுவே. ச. சு)

"பிரியா நண்பினோடு இரு அழகிய பக்ஷிகள் (ஆன்மா பரமான்மாக்கள்)"

த்வேப்ரஹ்மணீ வேதிதவ்யே பரஞ்சாபரஞ்ச (மைத். சு. உஉ)

"பரமும் (பரமான்மாவும்) அபரமும் (ஆன்மாவுமாகிய) இரு பிரமங்களும் அறியற்பாலன"



ஜ்ஞாஜ்ஞௌத்வாவஜாவீஸயாநீஸௌ (சுவே. க. க)

"பிறவாதவராகிய அறிஞனும் அஞ்ஞனுமாம் இருவரும் (முறையே) ஈசரும் (சிவபிரானும்) அநீசனுமாம் (ஆன்மாவுமாம்)"

நித்யோ நித்யாநாம் சேதநஸ்சேதநாநாம் (கட. ரு. கந)

"அவர் நித்தியப்பொருள்களுள்ளே நித்தியரும், சேதனப் பொருள்களுள்ளே சேதனரும்"

அந்த: ப்ரவிஷ்டஸ்ஸாஸ்தா ஜநாநாம்

(தைத். ஆரணி. ந. கக. கஉ)

"அவர் (பரமான்மா) ஜனங்களுள்ளே (ஆன்மாக்களுள்ளே) பிரவேசித்து, அவைகளை ஆளுபவராயினர்"

மாயாந்துப்ரக்ருதிம் வித்யான்மாயினந்து மஹேஸ்வரம்

(சுவே. ச. ய)

அஸ்மான்மாயீஸ்ருஜதேவிஸ்வமேதத்தஸ் மிம்ஸ்சான்யோ மாயயா ஸந்நிருத்த: (சுவே. ச. க)

"மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேசர் என்றும் அறிக;" "இதினின்று மாயியானவர் இந்த விசுவத்தைச் சிருட்டிக்கின்றனர்; அதிலே மற்றது (ஆன்மா) மாயையாற் கட்டுண்டது"

ஜுஷ்டம்யதா பஸ்யத்யன்யமீஸம் (சுவே. ச. எ)

"அன்னியமாகிய இன்பமுடைய ஈசரை ஆன்மா காணுங்கால்"

ப்ரதான க்ஷேத்ரஜ்ஞபதிர்குணேஸ: (சுவே. சு. கசு)

"பிரதானம் ஆன்மா என்னும் இரண்டுக்கும் பதியாகிய குணங்களையுடைய ஈசர்"

யேஷாமீஸே பசுபதி: பசூநாம் (தைத். சங். ந. க. ச. ந)

"இந்தப் பசுக்களைப் பசுக்களுக்கு (ஆன்மாக்களுக்கு) பதியாயினர் ஆளுகின்றார்" என்றற்றொடக்கத்த அனந்த சுருதிகளாற் சிவபெருமான் என்று மற்றோர் நாமம் பூண்ட பிரமமே விசுவத்திற்கு (பசுபாசங்களுக்கு) அதிகம் (சிரேட்டம்).

(ஆக்ஷேபம்) "ததநன்னியத்துவம்" என்னும் (உ. க. கரு-ஆம்) சூத்திரங் கொண்டு அபேதம் பிரதிபாதிக்கப்படலானும், "அதிகந்து" என்னும் (உ. க. உஉ-ஆம்) சூத்திரத்தினாலே பே

தம் பிரதிபாதிக்கப்படலானும், (சேதன அசேதனப்) பிரபஞ்சம் பிரமம் என்பவற்றுக்குப் பேதாபேதம் சாதிக்கப்படுகின்றதாலோ எனின்,

(உத்தரம்) அங்ஙனஞ் சாதிக்காது விசிட்டாத்துவிதத்தைச் சாதிப்பேம்.

கடமும் படமும் போலப் பிரமமும் பிரபஞ்சமும் அத்தியந்த பேதம் என்றும் கூறேம்; அது அநன்னியம் என்னும் பாசுருதிக்கு விரோதமுறுதலின்.

நாம் இப்பி வெள்ளி என்பவற்றிற் போல, ஒன்றை மித்தை என்று கூறும் அத்தியந்த அபேதவாதிகள் அன்று; பிரபஞ்சத்துக்கும் பிரமத்தின் சுவாபாவிககுணத்துக்கும் பேதங் கூறுஞ் சுருதிகளுக்கு விரோதமுறுதலான்.

பேதாபேதவாதிகளும் அன்று; வஸ்துவிரோதவுண்மையான்.

ஆயின் நாம் சரீரசரீரிபோன்றும் குணகுணிபோன்றுங் கூறும்விசிட்டாத்துவிதிகளே. பிரபஞ்சத்துக்கும் பிரமத்துக்கும் அநன்னியத்துவமாவது மண்ணும் கடமும் போலவும், குணமும் குணியும் போலவும் (முறையே) காரண காரியத்தினாலும், விசேஷண விசேடியத்தினாலும் வேறுபடா திருத்தலேயாம். பிண்ணைவிட்டுக் கடம் காணப்படாதவாறு போன்றும், நீலநிறத்தை விட்டு நீலோற்பலமில்லாதவாறு போன்றும் பிரமத்தை விட்டுப் பிரபஞ்ச சத்தி இல்லை; சத்திக்கு வேறாகப் பிரமம் ஓர்போதும் இல்லை; உஷ்ணத்தைவிட்டு அக்கினி இல்லாமை போல. எதை விட்டு எதைக் கண்டதில்லையோ, அது அதனோடு விசிட்டந்தான். அது (குணம்) அதாவதும் (குணியாவதும்) இயற்கையே; (கூடு தியாவதும் இயற்கை தான்). ஆகலின், எப்பிரகாரத்தானும் பிரமம் பிரபஞ்சத்திலின்று வேறாகாது. அதுபற்றி அநன்னியம் என்று கூறப்படுகின்றது. அவ்விரண்டுக்கும் வேற்றுமை இயற்கை. ஆகலின், பிரபஞ்சத்தினும் பரப்பிரமம் (அதிகம்) சிரேட்டமே. காரணமாயும் காரியமாயுமிருத்தல் (உ. க. கூ) ல் நிரூபிக்கப்பட்டது. ஆகலின், பேதாபேத சுருதிகளுக்கு இந்நெறி விரோதமற்றதே.

அஸ்மாதிவச்சததனுபபத்தி: (உ. க. உக)

கல் முதலியவற்றிற்போல், அது பொருந்தாது



(ஆக்ஷேபம்) எப்பிரகாரத்தானும் அபேதசுருதிகளால் ஆன்மாவும் சிவபெருமானும் அபேதம் எனின்,

(உத்தரம்) அங்ஙனம் இன்று; பொருந்தாமையின். அசேதனமாகிய கல், கட்டை, மண், புல் முதலிய போல ஆன்மாவுக்கும் அறியாமையுண்மையின் முற்றறிவு முதலிய குணங்களையுடைய சிவபெருமானினின்று அவன் அத்தியந்த விஜாதீயமாம் எனக் கேட்கப்படலான், அவ்விருவரும் ஒருவராமெனல் பொருந்தாது. ஆகலின், ஆன்மாவிலிருந்து சிவபெருமான் மற்றோர் பொருளே. இங்ஙனம் ஆன்மா சேதனனாயினும், சிவபெருமான சிரேட்டகுணமுடையராம் பேதத்தினால், ஆன்மா சிவபெருமானோடு ஒப்பாகான். முற்றும் வேறாகிய அசேதனப்பொருள் சிவபெருமானுக்கு ஒப்பாகாதென்று கூறவும் வேண்டுமா!! எவ்வாற்றானுஞ் சுருதி ஸ்மிருதி நியாயங்களினாற் காரியமாதல்பற்றித் தம்மினின்று வேறாகாத சேதன சேதனப்பிரபஞ்சம் அனைத்துக்கும் சர்வஞ்ஞரும் சர்வசத்தினருமாகிய சிவபெருமான்சிரேட்டரே (விசுவாதிகரே)''

I. II. I. பாஷ்யத்தின்கீழ், உயிர் உடல் என்ற உபமானத்தினால் அபேதத்தை விளக்குகிறார். "இவை அனைத்தும் பிரமம்; தோற்றம், நிலை, இறுதியாம் இவை பிரமத்தினாலாகலின், ஒருவன் அதனை உபாசிப்பானாக'' என்னும் உபக்கிரமசுருதியிலே சிவபெருமானே அனைத்துக்குங் காரணராய் உபாசிக்கற்பாலரென உபதேசிக்கப்படுகின்றமையின். இச்சுருதியின் தாற்பரியம் வருமாறு:—படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றும் பிரமத்தின்பாலன; சித்தும் அசித்துமாயுள்ள இவையனைத்தும் பிரமமேயாகலின், ஒருவன் சாந்தமுடையனாய்ப் பிரமத்தை உபாசிக்க என்பதாம். சமுத்திரத்திற்றோன்றி நின்றொடுங்கும் குமிழிக்கூட்டங்கள் ஜலமாயிருத்தல் போன்று, (பரா) சத்தியாரோடியைந்த பிரமத்தினாலெய்தும் படைப்பு முதலியன அப்பிரமமய மாகவேயன்றி, மற்றோர் பிரகாரமாகக் காணப்படுகின்றில. அங்ஙனமே,

அஹமேக: ப்ரதமமாஸம் வர்த்தாமிச பவிஷ்யாமிச நான்ய: கஸ்சின்மத்தோவ்யதிரிக்த: (அதர்வசிரசு. க)

"நான் ஒருவனே முதற்கண் இருந்தேன், இருக்கின்றேன், இருப்பேன், எனக்கு வேறாகப் பிறர் யாருமில்லை'' என அதர்

வசிரசிலே சிவபெருமானால் நிரூபிக்கப்பட்டது. பின்னருட்,

ப்ரஹ்மாஹம் (அதர்வசிரசு. க)

"பிரமம் நான்" என்றற்றொடக்கத்தவற்றாற் பிரபஞ்சம் அனைத்தும் அவர் வடிவமென விரித்துரைக்கப்பட்டது.

லோகாந்தராந்தரம் ப்ராவிஸத் (அதர்வசிரசு. க)

"அவர் மறைவினும் மறைவாய உள்ளவற்றுள்ளே பிரவேசித்தனர்" என்னும் சுருதியிலே "பிரபஞ்சத்துட் பிரவேசித்தமை" என்றது பிரபஞ்சம் அனைத்தும் அவர் சொரூபம் என உணர்த்துதற்குப் போந்த காரணமாதலே உணர்த்திற்று. பிரமத்துக்கு வேறாகப் பிரபஞ்சத்துக்குப் படைப்புநிலை, இறுதி இல்லையாமாகலின், அப்பிரபஞ்சம் பிரமத்தினின்றுவேறுபடாது. இதுபற்றியே,

ஸக்தியோஸ்ய ஜகத்க்ருத்ஸ்நம் ஸக்திமாம்ஸ்து மஹேஸ்வர:
ஸக்திஸ்து ஸக்திமத்ரூபாத்வ்யதிரேகந்ந வாம்சதி
தாதாத்ம்ய மநயோர்நித்யம் வஹ்நிதாஹகயோரிவ
ஸக்திஸக்தி மதோர்யஸ்மாதபேதஸ்ஸர்வதாஸ்தித:
அதஸ்,,த்தர் மதர்மித்வாத் பராஸக்தி: பராத்மந:
நவஹ்நேர்தாஹிகா ஸக்திர்வ்யதிரிக்தர் விபாவ்வதே

"இவ்வுலகெலாம் அவர் சத்திகளே; மகேசுவரர் சத்திமான்; சத்திமானைவிட்டுச் சத்திவேறுபடாள்; (சத்தியும் சிவமுமாம்) இருவரின் தாதான்மியம் அக்கினியும் சூடும் போல நித்தியம், சத்திக்கும் சத்திமானுக்கும் எக்காலத்தும் பிரிவில்லையாமாகலின். அவ்விருவரும் குணமும் குணியுமாதல்பற்றிப் பராசத்தியார் பரமான்மாவுக்கு உரியர். அக்கினியின் சுடுஞ் சத்தி தீயினின்று வேறாகக் கொள்ளப்படுவதில்லை" என்றற்றொடக்கத்தனவாக அபியுக்தர் உரைக்கின்றனர்.

ஸக்த்யாதிச ப்ருதிவ்யந்தம் ஸிவதத்வசமுத்பவம்
தநைகேனது தத்வ்யாப்தம் ம்ருதாகும்பாதிகம்யதா
(வாயு. பூ. உரு: கஅ, கக)

ப்ராஸ்யவிவிதாஸக்தி: ப்ரபோதாநந்தவிருணீ
ஏகாநேகஸ்வரூபேணு பாதிபாஞெரிவப்ரபா
(வாயு. உத். அ: க)

"சத்திதத்துவமுதற் பிருதிவி ஈறாயுள்ள தத்துவம் சிவதத்துவத்தினின்று பிறந்தது; கும்பமுதலியன மண்ணினால் வியாபிக்கப்பட்டாற் போல, அச்சிவதத்துவத்தினால் அது வியாபிக்கப்பட்டது; ஞானானந்தரூபமாய் விளக்குகின்றனர்" என வாயுசங்கிதையிற் கூறப்பட்டது.



பராஸ்யஸக்திர்விவிதை ஸ்ரூயதேஸ்வாபாவிகீ
ஞானபலக்ரியாச (சுவே. சா. அ)

ஏகோருத்ரோந்த விதீயாய தஸ்துர்ய இமாந்லோசாநீஸத
ஈஸநீபி: பரமஸக்தியி: (சுவே. ந. உ)

"இவர்க்குச் (சிவபெருமானுக்குப்) பராசத்தியார் சுவாபாவிகமாம் ஞானசத்தி, பலசத்தி (இச்சாசத்தி), கிரியாசத்தி எனப் பலதிறப்படுவாராய்க் கேட்கப்படுகின்றனர்; எவர் ஆளுகின்றனவும் பிறப்பிப்பனவுமாகிய பரமசத்திகொண்டு உலகம் அனைத்தையும் ஆளுகின்றனரோ, அவர் ஏகராகிய உருத்திரர்; இரண்டாவதற்காக அவர்கள் இருந்திலர்." என்றற்றொடக்கத்தசுருதிகள் பரப்பிரமமானது உலகத்தைப் படைத்து ஆஞ்ஞாபித்துக் காக்கும் முடிவிலாச் சத்தியை இயல்பாகவுடையதெனக்கூறுகின்றன. அநேகஞ் சொல்லி என்! சுருதி ஸ்மிருதி இதிகாசபுராணங்களினாலும், அபியுக்தசூக்திப் பிரமாணத்தினாலும் சகல சேதனாசேதனப் பிரபஞ்ச மாகவிபூதிரூபையாய், மகாசச்சிதானந்த சத்தையாய், சுவதந்திரமுடையதாய், தேசகாலங்களினால் வரையறுக்கப்படாததாயுள்ள பராசத்தியார் அப்பரப்பிரம சிவனார்க்குஇயல்பாய் வாய்ந்து, அவர்க்கு உருவமும் குணமுமாய் முற்றுகின்றனர். அப்பராசத்தியாரை விடுத்துப் பரப்பிரமத்துக்குச் சர்வஞ்ஞத்துவம், சர்வசக்தித்துவம், சர்வநியந்திருத்துவம், சர்வோபாசியத்துவம், சர்வானுக்கிராகத்துவம், சர்வபுருஷார்த்தஹேதுத்துவம், சர்வவியாபகத்துவமுதலியவும் இன்று. மேலும் மகேசுவரர், சிவன், மகாதேவர், உருத்திரர் முதலிய பரமநாமங்களும் அவர்க்கு எய்தா. அங்ஙனம் சர்வசேதனாசேதனப் பிரபஞ்சசரீரவிசிஷ்டமுடைய பிரமம் சர்வசப்தத்தினாற் கூறப்படுகின்றது. நீலம் என்னும் பதமானது நீலநிறத்தை மாத்திரமன்றி, தன்னையுடைய நீலோற்பலத்தையும் உணர்த்தினாற் போல, பிரபஞ்சம் என்னும் பதமும் பிரமத்தை உணர்த்துகின்றது. ஆகலின்,

ஸர்வோவைருத்ர: (தைத். ஆரணி. ம. உச. சஉ)

"(சர்வமும்) அனைத்தும் நிச்சயமாய் உருத்திரர்" என்றற்
றொடக்கத்த சுருதிகள் சர்வ என்னும் சப்தத்தினால் உணர்த்தப்ப
டுவது பிரபஞ்சமெனக் கூறுகின்றன. அங்ஙனமே,

ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம (சாந். ந. கச. க)

"(சர்வம்) இதெல்லாம் நிச்சயமாய்ப் பிரமம்" என்ற சுருதி
சர்வசேதனாசேதனப் பிரபஞ்சத்தைச் சரீரமாகவுடைய பிரமத்தை
உணர்த்துகின்றது. இந்தப் பிரபஞ்சம் பிரமத்தின் சொரூபமாய்த்
துவேஷமுதலியவற்றுக்கு விஷயமாகாமையின், யாவரும் சாந்தமு
டையராய்ப் பிரமத்தை உபாசிப்பாராக. இந்தப் பொருள் பௌ
ராணிகர் வாக்கினாலும் வெளிப்படுகின்றது.

விக்ரஹம் தேவதேவஸ்ய விஸ்வமேதச்சராசரம்
ததமர்த்தம் நஜாநந்திபஸவ: பாஸகௌரவாத்

(வாயு. உத். கஅ: எ)

வித்யேதி சேதநாம் ப்ராஹுரஸ்ததா வியாமசேதத
வித்யாவித்யாத்மகம் ஸர்வம் விஸ்வம் விஸ்வகுரோர்விபோ:
ரூபமஸ்ய நஸந்தேஹோ விஸ்வம்யஸ்மிந்வஸேயத:

(வாயு. உத். கஅ: ஏ)

ஸத்யேஸ தௌசஸச் சப்தஸ்ஸத்பிரேவ ப்ரயுஜ்யதே
விபரீதத்வஸச்சப்த: கத்யதே வேதவாதிபி:
ஸச்சா ஸச்சஜகத்விஸ்வம் ஸரீரம் பரமேஷ்டிந:

(வாயு. உத். கஅ: கக, கஉ)

வருக்ஷஸ்ய மூலஸேகேந ஸாகா: புஷ்யந்திவையதா
ஸிவஸ்யபூஜயா தத்வத்புஷ்யத்யஸ்யவபுர்ஜகத்

(வாயு. உத். ச: உக)

ஆத்மாதஸ்யாஷ்டமீமூர்த்தி: ஸிவஸ்யபரமாத்மந:
வ்யாபிகேதரமூர்த்திநாம் விஸ்வம் தஸ்மாச்சிவாத்மகம்.

(வாயு. உத். ச: உஅ)

தேஹிநோயஸ்ய கஸ்யாபி நிக்ரஹ: க்ரியதேயதி
அநிஷ்டமஷ்டமூர்த்தேஸ்தன்னாத்ரகார்யாவிசாரணா

(வாயு. உத். ச. கூ)



ஸர்வோபகார கரணம் ஸர்வாநுக்ரஹணம்
ஸர்வாபயப்ராதநம் சஸிவஸ்யாராதநம்விது:

(வாயு. உத். ச: கூம)

"தேவாதிதேவருடைய வடிவம் இந்தச் சராசரம்; இவ்வுண்
மையைப் பாசமிகுதியினாற் பசுக்கள் அறிகின்றில; சேதனத்தை
(பசுவை) வித்தை எனவும், அசேதனத்தை (பாசத்தை) அவித்
தை எனவும் கூறுவர்; வித்தை அவித்தை என்னும் பிரபஞ்சம்
அனைத்தும் சந்தேகமின்றி வியாபகராகிய விசுவகுருவின் சரீரம்;
விசுவம் அவர் வசத்ததாகலின். சத் என்னும்மொழி சத்துக்கும்
சாதுவுக்கும் செல்லும் என்று சத்துக்களாற் பிரயோகிக்கப்படுகி
ன்றது. அசத்து என்றது அவற்றுக்கு மாறானவற்றை உணர்த்
தும் என்று வேதவாதிகள் கூறுவர். சத்தும் அசத்துமாயுள்ள
விசுவம் அனைத்தும் சிவபிரானுடைய சரீரம்; விருக்ஷமூலத்தி
லே இறைத்த நீரால் அம்மரச் சாகைகள் புஷ்பிக்குமாறுபோல,
சிவபெருமானுடைய பூசையினால் அவர் சரீரமாகிய உலகம் செழி
க்கின்றது; பரமான்மாவாகிய சிவபெருமானுக்கு எட்டாவது மூர்
த்தங்களுள்ளே, வியாபகமாகிய ஆன்மா ஆகலின், உலகமனைத்தும்
சிவசொரூபம்; எந்தத் தேகமுடைய ஆன்மாவேனும் நிக்கிரகத்து
க்கு ஆளாயின், அது முழுமையும் அட்டமூர்த்தமுடையார்க்கு
வெறுப்பாய் முடியும்; இதனையுற்று ஆராயவேண்டியதின்று; எல்
லோர்க்கும் உபகாரமாயிருத்தலும், யாவர்மீதும் அருளுடைமை
யாதலும், எல்லோர்க்கும் அபயப்பிரதானஞ் செய்தலுமாம் இவை
யனைத்தும் சிவாராதனம் என்று கொள்ப; பிரமம் சர்வாகாரமாயி
ருத்தலிற் சர்வம் பிரமம்" என்றும்,

ஸாந்தஉபாஸீத (சாந். ந. கச. க)

"ஒவ்வொருவரும் சாந்தமாய்ப் பிரமத்தை உபாசிக்க" என்
றும் கூறல் பொருத்தம். ஆகலின்; உபக்கிரமத்திலே உபாசிக்கற்
பாலதாகக் கூறப்பட்ட பிரமமே மனோமய (ஞானமய) த்துவமுத
லிய தர்மத்தையுடையதாகும். (இதற்குரிய) மனோ (ஞான) மய
த்துவாதி குணம் சம்சாரிக்குரிய இலக்ஷணமன்று; பிரமமானது
உபாசிக்கற்பாலதாம் ஓர் வடிவம் வாயிலாகப் பரிச்சேத முறுவான்.

(இம்மொழிபெயர்ப்பு, ஸ்ரீமத். ஸ்ரீகாசிவாசி செந்திநாதய்யரவர்களின் சைவ பாஷ்யத்தினின்றும் எடுக்கப்பட்டது).

ஸ்ரீகண்டர் இந்தவிஷயத்தைச் சொல்லும் முறைமையிலும் ஸ்ரீமெய்கண்டநாதர் இதைப் பிரஸ்தாபித்தலிலும் கொஞ்சம் வித்யாஸம் காணக்கிடக்கிறது. ஸ்ரீகண்டர் பாதராயணரைப் பின்பற்றினவராக இந்த சம்பந்தத்தை காரணகாரிய சம்பந்தமாககூறி அதையே ஓரற்புதமான அபூர்வபரிணாமம் என்றும் அழைக்கின்றார். சாதாரண காரணகாரிய சம்பந்தம்போலல்லாமல், முதற்காரணம் இந்த வியவஸ்தையினாலே யாதொரு மாறுபாடும் அடைகிறதில்லையென்பது அவரது மதம். அவர் எடுத்துக்கூறும் உயிர் உடல் திருஷ்டாந்தமும் காரணகாரிய சம்பந்தம் குறிக்கவில்லை. சிவஞானயோகிகள் இரண்டுவிதமான தாதாத்மியங்களுக்குள்ள வித்யாஸத்தை யெடுத்தோதலுற்றார். ஒருபொருள் இரண்டாகக் காணப்படுகிறது, குணம் குணியைப்போல. இது ஒருவிதம். மேலும் இரண்டு பதார்த்தங்கள் ஒன்றாகி ஒன்றோடொன்று சம்பந்தப்படவுங் கூடும், இதுவும் தாதாத்மியமாகும். இந்தக் கடைசி சம்பந்தந்தான் அத்வைதமென்று கூறப்படுவதொன்று. முந்தினது தாதாத்மியமென்று மாத்திரமே அறியப்படுகிறது. ஸ்ரீகண்டர் முற்கூறிய தாதாத்மியத்தையே யநுசரித்ததாகக் காணப்படுகிறது.

மோக்ஷமூல பட்டாசாரியர் என்ற வித்வசிரோமணியார் கபிலருடைய சாங்கியத்துக்கும், சேஸ்வரசாங்கியம் என்றழைக்கப்பெறும் பதஞ்சலியாரது யோகத்துக்கும் உள்ள வித்யாஸத்தைச் சரிவரக் கண்டவராகக் காணப்படவில்லை. அவர் எழுதிய ஆறுசாஸ்திர சம்பந்தமான தத்வஞான நூலின்கண்ணே, "கடவுள் மாட்டு பக்தி" யென்றெழுந்த சூத்திரம் அவ்வளவு அதிக முக்கியமானதொன்றன்று எனக் கூறுகின்றார். கைவல்யத்தை யடைதற் கேற்பட்டுள்ள பல சாதனைகளுள் அஃதொன்றெனவும் கூறுகின்றார். கௌதமபுத்தர் கூறிப்போந்த "நிர்வாண" நிலைக்கும், சித்தாந்திகள் அதுசம்பந்தமாகக் கூறியிருக்குமவற்றிற்கும் உள்ள வித்யாஸத்தைக் குறித்து யாம் "புத்தமதம்" என்ற தலைப்பின்கீழாக சிவஞான சித்தியாரின் பரபக்ஷத்துக்கு யாமெழுதிய மொழிபெயர்ப்புரையிலும், 'உண்மைநிலைபுணரும் அறிவு விருக்ஷம்' சம்பந்தமான



யாம் எழுதிய வியாசத்திலும் யாம் விரிவாக எழுதியிருக்கின்றோம். புத்தமதம், பாசக்ஷயம், அல்லது ஆசை துன்பங்களினின்றும் விடுதலைமட்டும் கூறலாயிற்று. ஆனால் அதற்கு அதிகமாக சித்தாந்தம் பிருஹ்மநிர்வாணம் அல்லது சிவாநுபவமாகிய பதிஞானத்தையும் வற்புறுத்திக் கூறுகிறது. மேலும் பதிஞானமின்றி பாசக்ஷயம் சாத்தியப்படாதென்று நாம் அங்கே நிரூபித்திருக்கின்றோம்.

சாங்கியமதஸ்தர்களும் யோகமதஸ்தர்களும் கூறுமாறு இது ஸ்படிகம் அல்லது நிழலாடியும் வர்ணபேதங்களும் என்ற உதாரணத்தால் அறியக்கூடிய தொன்றாயுள்ளது. நிழலாடியின் அருகாமையில் யாதொரு சிகப்புநிறமுள்ள புட்பத்தைக் கொண்டுவந்து வைப்பதினாலே, அந்த சிகப்பு புட்பத்தினாலே நிழலாடி ஒருவித நிறத்தையடைந்து போகிறது. அப்படியே, ஆன்மாவானது பிரபஞ்ச சம்பந்தம் பெற்றுள்ளபோது, பிரபஞ்சத்தால் ஒருவித கல்மிஷத்தை யடைந்துபோகிறது. அதனால் சாவும், பிறப்பும், துன்பமும் அதற்கு நேரிட்டுவிடுகிறது. சாங்கியமதப்பிரகாரம் ஆத்மாவானது அதனிடத்தில் பிரதிபலியாநின்ற வர்ணங்களினின்றும் தான் வேறான பதார்த்தம் என்ற உண்மையை உணர்ந்தவுடனே அது பாசநீக்கம் அடைந்துபோகிறது என்று அறிகிறோம். அவ் வர்ணங்களாலும் பிரதிபலனத்தினாலும் அது யாதொரு சலனமு மடைகிறதில்லையாம். அந்தஞானம் பிரதானத்தினுடைய கர்மத்தால்தானே அதற்குக் கிடைக்கிறதென்ப. ஆனால் ஆன்மாவிற்குத்தனது சொந்தமுயற்சிமாத்திரத்தானே இந்தஞானம் கைவரக் கூடியதாயுள்ளதா? அல்லது பிரதானத்தினுடைய முயற்சியினாலேனும் இது கிடைக்கக்கூடியதா யுள்ளதா? அப்படியானால், அந்த திருஷ்டாந்தத்தையே நாம் பரிக்ஷித்துப் பார்ப்போமாக. கண்ணாடியும் செம்பருத்திப்பூவும் ஒன்றையொன்று அடுத்துவந்துசேர்ந்து நின்றது. உடனே கண்ணாடியில் பிரதிபலனம் உண்டாயிற்று.

ஆனால் அவைகள் இரண்டும் ஒன்றையொன்று சம்பந்தித்தது கண்ணாடியின் முயற்சியினாலா? அல்லது அந்த [illegible] சிகப்பு புட்பத்தின் முயற்சியினாலா? எப்படியோ! அவைகள் அப்படி ஒன்

றையொன்று சமீபித்துநிற்க நேர்ந்ததென்று நாம் கொள்வோமாக. அப்படி வராமலிருப்பதும் அவைகட்குக் கூடாதகாரியம் போலும். அப்படி யொன்றையொன்று நெருங்கி நின்றபின்னர், கண்ணாடியில் உண்டாயிருக்கும் பிரதிபலனம் எப்படி கெட்டழிந்து ஒழிந்துபோகச் செய்வது? இந்த காரியமானது கண்ணாடியின் எந்தவிதமான முயற்சியினாலாவது அல்லது செம்பூவின் எவ்வித முயற்சியாலாவது ஆகக்கூடியதொன்றோ? சாங்கியமதப்படி ஆன்மாபிரதானத்தைத் தவிர்த்தும், (நிழலாடி—சிவந்த புட்பத்தைத் தவிர்த்தும்) வேறு யாதொரு பதார்த்தமும் பேசப்படாமையால் இந்த நீக்கம் அல்லது ஒழிவு எவ்விதம் சாத்தியமாதல் கூடும்? சாங்கிய மதஸ்தர்கள் கூறுமாறு விசாரித்துப் பார்த்தால் இந்த கஷ்டத்தினின்றும் விடுபடுதற்கு யாதொரு வழியுமில்லை; இக்கூட்டுறவும் என்றும் நீங்காது; வீடும்பேறும் என்றும் உண்டாகா. பெயரால் மட்டுமொழிய பிறப்பிறப்பென்னும சம்சார சக்கரமும் என்றும் சுழலவேண்டியதுதான்; இது நிச்சயம். ஆயின் யோகமதஸ்தர்களும்கூட இந்த உபமானத்தை யுதகரித்துக் காண்பிக்கின்றார்கள் ஆனபடியால், அந்த கண்ணாடியில் உண்டான பிரதிபிம்பம் கெடுவதற்கு ஏதாவது மார்க்கமுண்டோ? உண்டெனக் கூறுவாம்.

ஆனால் அந்த பிரதிபிம்பம் தான் எவ்விதம் உண்டாயிற்றென்ற விஷயத்தை நாம் கவனிக்கவேணும். யாதொரு கண்ணாடியும் யாதொரு புட்பமும் நெருங்கிநின்றநிலையில் எப்பவும் மாறாதிருக்க இரவுகாலத்தில் பிரதிபலனத்தை நாம் காணக்கூடுமாவென்று யோசித்துப் பார்ப்போம். கூடாது. ஏன் கூடாதோ? ஏனென்றால் புட்பத்தின் பிரதிபலனமானது அந்நிழலாடியில் தோன்றுவதற்கே அத்யாவசியமான ஆதாரமானது சூர்யனது பிரகாசமேனும் அல்லது வெளிச்சமேனும் அவசியமாயுள்ளதல்லவா? இப்போது இந்த உவமானத்தை நாம் உபயோகித்துவந்த காலமுழுதும் நாமொன்றை மறந்தோம். அது யாது? சூர்யனுடைய ஒளி யிதைச்செய்வதற்கு முக்கியமான கருவியென்பதே!

நல்லது இரவுகாலத்தில், யாதொரு பிரதிபலன மில்லாதபொழுது, யாதொரு கல்மிஷத்தின் சூர்ணம் இல்லாதபோழ்து, இது



தான் ஆன்மாவின் கேவல அவஸ்தையென்று நாம் சொல்வது. ஆன்மாவின் கேவலாவஸ்தையில் அதற்கு எந்தவிதமான இச்சையும் கிரியையும் இல்லாமற்போகின்றது. அதுதான் யாதொரு துன்பத்தையும் அடைந்திருப்பதாக அதற்கு அப்போது பிரக்ஞையே கிடையாது. அந்த துன்ப அவஸ்தையினின்றும் தான் விடுபட்டுப் போதற்கு அதற்கு ஒருமார்க்கமும் தேடக்கூடிய அறிவுமில்லையே! சூர்யன் உதயமானவுடனே கண்ணாடியின்மீது அந்த பிரதிபலனம் விழலாச்சுது. இந்த சேர்க்கையினாலேயே, ஆத்மாவின் இச்சாஞானக் கிரியைகள் இரண்டும் தூண்டப்பட்டு ஆன்மாவிற்கு சுகதுக்க அறிவும் உண்டாய்விடுகிறது. பாபமும் அது செய்பவாகிறது. அதனால் துன்பமும் அநுபவிக்கிறது. அதனாலே அநுபவஞானம் ஆன்மா அடையலாச்சுது. அதனாலே பாசநீக்கமும் இறுதியில் அஃதடைகிறதன்றோ?

சூர்யனானவன் கொஞ்சம் கொஞ்சமாக மேலே போகப்போக, அந்த ஸ்படிகத்தைப் பின்னும் பின்னும் நெருங்கி நெருங்கி வரவும், அந்த சிவந்த புட்பத்தின் நிழலானது அந்த ஸ்படிகத்துள்ளே கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து குறைந்து போதலனுபவம். இறுதியில் அதிசயமொன்று காண்மின்! நடுப்பகற்காலத்தில் சூர்யபகவான் ஸ்படிகக்கல்லை எவ்வளவு சமீபமாக நெருங்கிச்சேறல் சாத்யமோ அவ்வளவு சமீபமாக நெருங்கிநிற்றலும் அப்பளிங்கும் நாம்பார்க்கமுடியாத சோதியொளியால் மூடப்பட்டுப்போம். அதேசமயம், பிரதிபிம்பமும் அழிந்துபோம். முற்கூறிய அவஸ்தையில், கண்ணாடி சிவந்தபுட்பத்தோடொன்றுபட்டிருந்தது. (பந்தம் அல்லது ஆணவத்தோடத்துவிதமான சமயம்) பிற்கூறிய அவஸ்தையிலோ, கண்ணாடி சூர்யனோடும் ஒன்றாகப் போய்விட்டது! (மோக்ஷமல்லது கடவுளோடத்வைதம்) இதுவே ஆஸ்திக சாங்கிய மதஸ்தர் அல்லது யோகமதஸ்தர் தம் கூற்றென்க. அதனாலே, "கடவுளிடம் பிரேமையுடன் சரியையாதிகள் செய்தல்" என்ற விஷயத்தின் முக்யத்வம் இங்கே இனிது பெறப்படும். ஆனால் முதற்கண் "சித்தநிரோதம்" என்ற கருமம் உள்ளபடியே பக்தனொருவனுக்கு அமைதல்வேண்டியது இன்றியமையாததொன்றென்க.

"அகனமர்ந்து அன்பினராய் அறுபகைச்செற்று
ஐம்புலனு மடக்கிஞானப் புகழுடையோர் தம்முள்ளப்
புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்." (தேவாரம்).

ஜீவ ஆன்மாவானது தனது முயற்சியாலேனும், அல்லது பிரதானம் என்றதொன்றின் முயற்சியினாலுங்கூட தனது மலத்தை யொழித்துவிட முடியாது. அவைகள் இரண்டும் தத்தம் சொந்த சங்கல்பத்தாலேனும் தத்தம் சொந்த சக்தியினாலேனும் உண்மைவல்லபத்தை யடையப்பெறமாட்டா. பரமேஸ்வரனது உத்கிருஷ்டமான சங்கற்பமும் சக்தியும், "யான் அநேகவுருவங்களை யடைவேனாக!" வென்று நினைந்தாலன்றி ஸ்ருஷ்டிக்கும் இடம் கிடையாது. பரிணாம கிரமத்துக்கும் அவகாசமேயிருந்திராது. பிரபஞ்சத்தினின்றும், ஆசையினின்றும், பிறப்பிறப்பில் வைத்த தாகத்தினின்றும் பந்தநீக்கம், கடவுளிடத்தில் ஆன்மாதனது பற்றையெல்லாம் வைத்தாலன்றி அல்லது அவன் திருவடித்தொண்டையே பொருளாக மேற்கொண்டொழுகினாலன்றி அசாத்யமாகும். சிவஞானபோதம் 10-11-வது சூத்திரங்களில் பாசட்சயமும் பதிஞானமும் கூறப்போந்து இதுதான் மலத்தையடியோடொழித்தற்கு ஏதுவென்று பிரகாசமாகக் காண்பிக்கப்பட்டிருக்கின்றதறிக. இந்த சாதனைகள் தாம் யாவையென்றாலோ கூறுதும். கேண்மின்.

கடவுளோடும் அத்வைதமாதல், நம்முடைய கர்மங்களையெல்லாம் இறைபணியாக்கல், கடவுளிடத்தில் இடையறாது அயரா அன்புசெலுத்தல். இவ்வித சிவார்ப்பணத்தினாலும் சிவபக்தியினாலும் ஆத்மா சிவனது ஆணைக்கு அமைந்து நடந்து யான் எனது என்னும் செருக்கறுகின்றது. கர்மபந்தமும் ஆணவ இருளும் அதைவிட்டு நீங்கிப்போகின்றன. அந்நிலையில் ஆன்மா இறைவனுடைய அருட்பெருங்கடலில் ஆழ்கின்றது.

கேவலம் "அன்பே" யுருவ்வான இறைவனிடம் செலுத்தப்புகுந்த இந்த அன்பும் அடிமைத்திறமும், ஒருகுடி வெறியனுடைய தணிக்கமுடியாத தாகத்தைபோன்று நம்மை மறுபடியும் மறுபடியும் ஈர்க்கும் உலகவின்பம்போலல்லாமல், நம்முடையமுழு இச்சையினையும் பூர்த்திசெய்கிறது; உள்ளபடியே அஹங்கார ஒழிவினா



161396

லும் அன்புபூரித்து நிற்றலினாலும் நம்முடைய உடம்புமுயிரும் அவன் பணியில்நின்ற வெல்லையில், இருகரைகளையு முடைத்துக்கொண்டு புரண்டுபோகும் வெள்ளம்போலவே நம்முடைய ஹ்ருதயங்கள் இந்த அற்புத ஆனந்தத்தாலும் சுகத்தாலும் சந்தோஷத்தாலும் மூடப்பட்டுப் போகிறது. இந்த ஆநந்தம் நிறைகிறபோதுதான், அவன் கடவுளாகிய ஆனந்தசாகரத்தில் தேக்கித் திளைக்கின்றான். கடவுளிடத்திலேயே சந்தோஷிக்கின்றான். கடவுளிடத்திலே ஓய்வையுமடைகிறான், மாண்டூக்ய உபநிடதம் கூறியபடி. (III. 1. 4.) அப்போதே அவன் இறைவனை நேசிக்கின்றான். சிவனிடம் பிரீதியெல்லாம் செலுத்தலானான். பராபரனிடம் தேக்கித் திளைக்கின்றான். கடவுளிலேயே சந்தோஷிக்கின்றான். ஸ்வராஜ்யமு மடைகிறான். எல்லா உலகங்களிலும் பிரபுவாகவும் ஈசுமானாகவும் விளங்குகின்றான்—சாந்தோக்ய உபநிடதம் கூறியபடி. (VII. 25. 2.)

இந்த மாதிரியான ஸ்வராஜ்ய சாம்பிராஜ்ய அவஸ்தையிலே, அவன் கடவுளால் பூர்ணமாக நிறைவிக்கப்பட்டுப் போனவுடனே, அவன் அங்கே உலாவித்திரிந்து அவன் சிரித்தாலும், சாப்பிட்டாலும், விளையாடினாலும், சந்தோஷித்தாலும், பெண்கள் வாகனாதிகள் பந்துசனங்களோடு சந்தோஷித்தாலுமே (சாந்தோக்ய உபநிடதம் VIII. 12. 3) இந்த கர்மங்களெல்லாம் அவனையசைக்கவே அசைக்கமாட்டா. எப்படியென்றால், யாதொரு அக்நிஸ்தம்பம் பழகிய வொருவனை நெருப்பு தீண்டமாட்டாததுபோல. (சிவஞானசித்தியாரின்கண் சொல்லி யிருக்கும் உண்மையைத் தரிசிக்க X. 5. 6.) இந்நிலை, பௌத்தர்கள் சாங்கியர்கள் முடிவு நிலையினின்றும், வேறுபடுவதை நாம் கவனிக்கவேண்டும். பாதஞ்சலரும் சித்தாந்த சிலர்களும் சொல்லும் பட்சம், இறைபணியும் அயரா அன்புமின்றி மோட்சம் என்றும் கிடைக்கவே கிடைக்காது. இதனை மிகவும் கவனிக்கற்பாலது.

திருவள்ளுவ நாயனாரானும் பரமேஸ்வரனிடத்து யாம் வைத்த அன்பு மாறாமையுமாத்திரத்தினாலேயே நம்முடைய பவத்தை நாம் போக்கக்கூடுமென்ற உண்மை வெகு அருமையாகப் பிரகாசப்படுத்தப்பட்டுள்ளது.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றினைப்
பற்றுக பற்று விடற்கு"

"சார்புணர்ந்து சார்புகெடவொழுகின் மற்றழித்து
சார்தரா சார்தரு நோய்"

"இருள்சேர் இருவினையுஞ்சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

"இந்த அநுபவத்துடனும், கிறிஸ்தவர்கள் இன்பத்துடன் ஈடேறுவதற்காகச் செய்யும் கர்மங்களை யொத்திட்டுப் பார்க்க. "இவ்வுலகின் துன்பங்கள் நின்றுபோகக் கூடுமானால், பூமியிலுள்ள பிரதிமைகள் ஒழிந்து போகக்கூடுமானால், ஜலத்திலும் காற்றிலும் சஞ்சரிக்கும் பதார்த்தங்களின் விக்ரஹத் தோற்றங்கள் ஒழிந்து போகக் கூடுமானால், வானத்தின் துருவநக்ஷத்திரங்கள் ஒழிந்து போமானால்—உள்ளபடியே ஆன்மாவும் தன்னைத்தானே ஒழித்து நிற்குமானால்—தன்னைநினையாமலிருந்த நியாயத்தாலே தன்னைத் தானே ஆத்மா ஜயிக்குமானால், எல்லா மதஞானங்களும் மறைந்து போகக் கூடுமானால், எல்லாச் சப்தங்களும் எல்லாக்குறிகளும் இன்றிருந்து நாளை மறையக்கூடிய யாவத்பதார்த்த ஞானமும் மறைந்து போகக் கூடுமேயானால், யாராவது ஆண்டு கேட்கக் கூடியவர்கள் ஏற்பட்டிருப்பார்களாயானால், இவையெல்லாம் சொல்லுவதிதுவே!

"நாம் நம்மையே உண்டாக்கிக் கொள்ளக்காணோம். எப்போதும் அழியாதுள்ள அவனே நம்மை உண்டுபண்ணினான்." அப்படிச் சொல்லியான பிறகு, சப்தமுமடங்கிவிடக் கூடுமேயாயின்,—அவைகள் செய்ததெல்லாம் கூடி நம்முடைய சுரோத்திரேந்திரியத்தை அவைகளை யுண்டுபண்ணிய அவன் சந்நிதியிற் கொண்டுசேர்த்ததென்றேயென்க,—அவன் தானே பேசுவானாயின்,—அவைகள் துவாரமல்ல; அவன் துவாரமாகவே அவன் நம்மிடம் பேசுவானாயின்—நாம் அவனுடையவார்த்தையைக் கேட்டறிவோம். ஊன் சம்பந்தம்பெற்ற யாதொரு நாவினாலன்று! அல்லது தேவதூதன் வாக்கினாலுமன்று! அல்லது இடியின் கர்ச்சனையினாலன்று. அல்லது யாதொரு விளங்கா உவமானத்தினாலன்று



ஆனால் மற்று! நாம் அன்பு வைத்து நேசிக்கும் பதார்த்தங்களிலே அவன்சொல்வதை நாம் சிரவணம் செய்தல் சாலவமையும். இவைகளில்லாமலேயே அவன் கூறுவதை நாம் நேரிலேயே பிரத்யக்ஷபூர்வகமாக கேட்டறிவதும் முடியும். (ஏனென்றால் நாமும் இப்போது நம்முடைய கவனமுழுமையும் சுரோத்திரேந்திரியத்தின் கண்ணேயே செலுத்தி எல்லோரும் துரிதமான எண்ணம் துவாராவழியாது இடையறாதுகலந்திருக்கும் ஞானத்தைஸ்பரிசிக்கநேர்ந்தபடியால்,) இதே அவஸ்தையைச் சற்று நீடித்துநிற்கப்பழகினோமாயின், இதையநேகமாக விரோதித்து நிற்கும் இதர அவஸ்தைகளையங்கேதலைகாட்ட வொட்டாமல் அடக்கிக்கொண்டோமானால், இந்த அநுபவம் ஒன்றே நம்மை சுவீகரிக்கக் கூடுமேயானால், அது நம்மைவிழுங்கிப் போடுமேயானால், காண்பானை இந்த அகவின்பத்தினிடையே சுருட்டிவைத்து விடுமாயின், இவ்வொருக்கண அநுபவம் வாழ்நாள் முழுதும் நீடிக்குமானால், அது உன்னுடைய எஜமானின் சுகநிலையில் நீ நுழைந்து சுகிக்கக்கடவாய் என்பதின் உண்மையை விளக்கவில்லையா? (அகஸ்டின் என்றசித்தர்).

முன்னர் நாம் ஸ்படிகமும்—வர்ணங்களும் என்ற திருஷ்டாந்தத்தையே உபயோகப்படுத்தி யிருக்கின்றோம். அது சிவந்த நிறப்பட்ட திருஷ்டாந்தமாயினும் சரியே. அல்லது பலநிறமான மேகஜால திருஷ்டாந்தமாயினும் சரியே. சுத்த ஜலமானது தனது சொந்த சுவாபத்தினாலேயே ஸ்படிகம்போன்ற வஸ்துவாயுள்ளது. ஒரு, பல பட்டைகளையுடைய கண்ணாடியானது வெளிச்சத்தைப் பிரித்தும் பிரதிபலித்து நிற்பதும் போலவே, * சுத்த ஜலமும் சூர்ய வெளிச்சத்தைத் தன்னிடம் பிரித்தும் பிரதிபலிக்கச் செய்தும் விளங்காநின்றது கண்மின். இந்த ஜலமானது அதனிடம் சேர்ந்த அழுக்குகாரணமாக வர்ணமேறியும் சலனமடைந்தும் கிடக்கிறதறிதிர், நம்முடைய அழுக்கும் அஹங்காரமும் ஒழிந்தவுடனே, ஜலமானது அதனுடைய

* இந்த அற்புதத்தை, அதாவது சலம் ஒளியின் ரேகைகளைப்பிரித்து வானவில்லில் காட்டுவதுபோல் காட்டல், நந்தியாலுக்கடுத்த மகா நந்தி க்ஷேத்திரத்திலுள்ள திவ்யபுஷ்கரணியிற் காணலாம்.

சொந்தமான பரிசுத்த சுபாவத்தையடைந்து விடுகிறதைக் காண்மின். அப்போது பரவஸ்துவின் பிரதிபலனம் அதனிடம் அற்புதமாக அது விழப்பெறுகிறது. இது தான் முன்சொன்ன புகழ்பெற்ற பாடலின்கண் போந்த அற்புதவுண்மையென்றறிக.

உரையற்ற தொன்றையுரை செய்யுமூடர்காள்
கரையற்ற தொன்றைகரை காணலாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்கு
புரையற் றிருந்தான் புரிசடையோனே.—திருமந்திரம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திவ்வியாகம கிரந்த சங்கிகை.

---

எல்லாஞ் செயற்கு மிட்டாகு மென்னெஞ்சே
கல்லார வெற்பன் கழல்.

ஆகமம்:—காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என இருபத்தெட்டாம்.

இவ்விருபத்தெட்டு ஆகமங்களும் ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் எனத்தனித்தனி நான்கு பாதங்களையுடையனவா யிருக்கும். ஞானபாதம் பதி பசு பாசம் என்னும் திரிபதார்த்த லட்சணத்தையும்; யோகபாதம் பிராணயாம முதலிய அங்கங்களோடு கூடிய சிவயோகத்தையும்; கிரியாபாதம் மந்திரங்களோடு கூடிய ஓமத்தையும்; சரியாபாதம் சமயாசாரத்தையும் விரிவாக எடுத்து விளக்கிப் போதிக்கும்.

ஆகமம் என்பது:—ஆ என்பது பாசம் எனவும், க என்பது பசுஎனவும், ம என்பது பதி எனவும் பொருள்படும். எனவே வேதாந்தத்திலே ஜெகஜீவபரமென்று கூறப்படும் திரிபதார்த்தங்களைவிளங்க எடுத்து உணர்த்துமென்ற வாறாயிற்று. இஃதன்றி, ஆ என்பது சிவஞானம் என்றும், க என்பது மோக்ஷமென்றும், ம என்பது மல நாசமென்றும் பொருள் கொண்டு ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம் பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து மோக்ஷத்தைக்கொடுக்குமென்று கேட்டலு மொன்றாம்.

மேற் கூறிப்போந்த சிவாகமங்கள் இருபத்தெட்டுடன் உபாகமங்கள் இருநூற்றேழையும் கூட்டி அநாதியிலே சதாசிவதேவ நாயனார் அநந்தேசுரர்க்குத் திருவாய்மலர்ந்தருளினார். அநந்தேசுர நாயனார் அவ்வாகமங்களைப் பயின்று காமிகாகமத்தை நூறுகோடி கிரந்தங்களாகவும் மற்றைய இருபத்தேழு ஆகமத்தை நூறுகோடி கிரந்தங்களாகவும், இருநூற்றேழு உபாகமத்தை நூறுகோடி கிரந்தங்களாகவும் வரையறைசெய்து ஸ்ரீ கண்டருக்கு உபதேசித்தருளினார். ஸ்ரீ கண்டதேவ நாயனார் அந்த முந்நூறுகோடி கிரந்தங்களையும் மனனஞ்செய்து மூன்றுலக்ஷங் கிரந்தங்களாக்கித் தூர்வாசராதி மகரிஷிகளுக்கு அநுக்கிரகஞ் செய்தருளினார். அம்முனிவரர் முதலிய பத்ததித்தலைவர் பதினெண்மருக்குப் பிரசாதித் தருளினார். இப்பத்ததித்தலைவர் மேல் மூன்று லக்ஷகிரந்தங்களையும் அநுசந்தானம் பண்ணி அகோரசிவாசாரியர் ஆறாயிரம் கிரந்தங்களும் மற்றைய பதினேழுசிவாசாரியர் தனித்தனி அறுநூறு கிரந்தங்களும் ஆக உலகிற்கு வழங்கி அருளினார்கள்.

இந்த கணக்கின்படி இப்போது வழங்கிவரும் திவ்யாகமகிரந்தசங்கிகை பதினறாயிரத்திருநூறு என்று வெள்ளிடைமலைபோல் விளங்கக்கிடக்கின்றது.

இந்தக்குறிப்பு திருக்கைலாய பரம்பரை மெய்கண்ட சந்தான ஞானபீட ஸ்ரீ காஞ்சி மடாதிபதியாய், வடமொழிகளில் வல்லுநராய் கருணை நோக்கம் பெரிதுடையராய் வீற்றிருந்தருளும் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக சுவாமிகளவர்கள் பரிபாலித்து மிகப்போற்றிவரும் சரஸ்வதி ஞானவிலாச புத்தக நிலயத்தில் கிடைக்கப்பெற்றது.

காஞ்சி. நாகலிங்க முதலியார். F.M.T.S.

---

# சைவ சமயத்தைக் குறித்த ஒரு சம்பாஷணை.

(முன்தொடர்பு தொகுதி 1, பகுதி 9, 10, பக்கம் 227:)

சு. என்ன கஷ்டமிது! கடவுளையடைய வேண்டுமென்று மனிதன் விரும்புவது எளிதல்ல. அப்படிப்புறப்பட்ட ஒருவனை "கடவுள் மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாதவன்" என்று சொல்லிப் பயமுறுத்தினால் அவன்போம் வழியென்ன? நமது மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாமல் ஒருபொருளிருக்கிறதென்றால், அது இருப்பதும் இல்லாததும் நமக்கொன்றுதானே. அக்கடவுளைப்பற்றி ஒன்றுந் தெரியாது சொல்லவுமுடியாது என்றால் அவனையடைய (Try) அ அ:—முயற்சிசெய்வது, கம்பர் வர்ணித்த மராமரங்களின்கீழ் இளைப்பாறிப் போகும் சூரியனது குதிரைகளின் கொம்புகளை முழம்போடப்போன கதையாய் முடியுமே.

சி. உண்மையறிய வேண்டுமென்னும் ஆவலானது உன்னை அவசரத்தின்பாற் படுத்திவிட்டது. இறைவனைப் பற்றி முன் குறித்ததுபோலப் பேசிய பெரியோர்களே அவனை யடையக்கூடும். அது அரிதில் முடிவதொன்றே யல்லது முற்றிலும் கைகூடாத காரியமல்ல என்று கட்டுரைக்கின்றார்கள். அவன் 'செலவரி' தானவன் ஆனால் அவனேதான் 'செல்கதியா' யுள்ளவன். அவனுடைய திருவடிகள் சிந்திப்பரியன எனினும், 'சிறந்து செந்தேன் முந்திப்பொழிவன முத்திகொடுப்பன மொய்த்திண்டு பந்தித்துநின்ற பழவினை தீர்ப்பன' 'எழுவாயிரு வாயிலாதன எங்கள்பிணி தவிர்த்து, வழுவா மருத்துவமாவன மாநரகக் குழிவாய், விழுவாரவர் தம்மை வீழ்ப்பன மீட்பன மிக்க அன்போடு அழுவார்க் கமுதங்கள் காண்க." (சிவஞானம் சிறிதுநேரம் அசைவற்றுநின்றான். பிறகு சொல்கிறான்) அன்பனே! பரமனைக் கேவலம் நம்முடைய அறிவினாலேயே காணலாம் எனத் தருக்குவோர் அவனை யடையப்பெறார் என்பது திண்ணமே. ஆனால் உடல்பொருள் ஆவிமூன்றனையும் சிவனதுடைமைகள்

என எண்ணி, மாதேவன் பற்றலால் மற்றுப்பற்றின்றி நிற்கும் அன்பர்களது "பக்திவலையிற் படுவோன்தான்." "அடியார்க்கெளியன் சிற்றம்பலவன்" அல்லார்க்கோ அரியன். "கனியினுங் கட்டி பட்டகரும்பினும், பணிமலர்க்குழற் பாவைநல்லாரினும், தனிமுடிகவித்தாளு மரசினும் இனியன்றன் னடைந்தார்க்கிடைமருதனே" என்றார் வாகீசர். "அடைந்தவர்க் கமுதாயிடுவான்" என்றார் சுந்தரர். இவரே "இன்னதன்மைய னென்றறிவொண்ணா வெம்மானை எளிவந்தபிரானை" என்றும் அருளிச்செய்தார். அன்பர்கட்காக இறைவன் பிச்சையெடுப்பன், தண்ணீர்ப்பந்தல் வைப்பன், வில்லடி பிரம்படி செருப்படிபடுவன், மாமிசமுண்பன், வாய்நீரைக் கங்கையெனக்கருதுவன், குடுமியிற்செருகிய பூவையும் உவந்து அங்கீகரிப்பன். இறைவனது அருளின் திறம் இருந்தவா றென்னே! அதைமதிக்க என்னாலாமோ? "தேடிக்கண்டுகொண்டேன் திருமாலொடுநான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்" என்னும் அன்புருவாய பெரியாரது திருவாக்கை உன்னிப்பார்.

சு. இந்த அடியார்களும் மனிதர்கள் தானே, அவர்க்குமாற்திரம் கடவுள் அகப்பட்டுவிடுகிறானே, இது முன்சொன்னதோடு மாறுபடாதோ?

சி. அவர்கள் சீவ அறிவைக்கொண்டு இறைவனைக் காணவில்லை; அகப்பற்று புறப்பற்றுகளைத்துறந்து சீவபோதத்தைத் தொலைத்து அவனருளே கண்ணாகக்காண்கின்றனர். "அவனருளாலே யவன்றாள் வணங்கு"கின்றனர். இவ்வுண்மையை நோக்கில் நீகுறித்த மாறுபாடு யாறுபடும்.

சு. இப்படித் தன்னன்பர்கட்கு ஓர்விதமாகவும்மற்றவர்க்கு வேறொரு விதமாகவும் தோன்றுவது மிக்க ஆச்சரியமே. இருக்கட்டும், ஞானிகள் கடவுளைப் பற்றிச் சொல்வதில் (Essential) ஓய்........சாரமாய் உள்ள விஷயங்களைத் திரட்டி இரண்டொரு லக்ஷணங்களாகச் சொல்ல இயலாதோ? என்போன்றவர்களுக்குத் தெளிவை உண்டாக்குவதற்கு அதுதான் வழியென்று காண்கிறது.



சி. ஆன்றோர் அப்படியும் செய்திருக்கின்றார்கள். இறைவனைப்பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டிய உண்மைகளியாவும் சச்சிதாநந்தன் என்னும் சொற்றொடரிற் பொதிந்திருக்கின்றன. கடவுள் தோற்றக் கேடுகளில்லாது என்றும் உள்ளவன். சூனியமன்று "அங்கிங்கெனாதபடி எங்கும்பிரகாசமாய் இருப்பவன்" அவன் நம்மைப்போலச் சிற்றறிவுடையவனாகாது "பிரக்ஞாநம் பிரஹ்மம்" என்றபடி பெரிய ஞானமென்னும் முற்றறிவை இயற்கையாகவே உடையவன். அன்றியும் அவன் "வேண்டுதல் வேண்டாமையிலான்" ஆதலினாலே அவன் நம்போன்று இன்பதுன்பங்களை நுகர்ந்து உழல்பவனல்லன். அவன் குறைவிலா நிறைவினதாகிய பேரானந்த முடையோன். ஆகவே கடவுள் என்றும் எங்கும் உள்ளவனென்பதும் அவன் ஞானரூபி, ஆனந்தவடிவன் என்பதும் பெற்றோம். மெய்யடியார்கள் சொல்லியவற்றை இன்னும் நன்கு ஆராயுமிடத்து இறைவனது ஆனந்தமானது தன்னைத்தானே நேசித்துக்கொள்வதால் உண்டாவதன்று. இவன் இன்பவடிவனாய் இருப்பதுடன் "அன்பேசிவம்" என்னவும் விளங்குகின்றான். மெய்வருதெளிவிலவனை, வெளிப்படவுணர்ந்துளோ ராகிய அன்பர்களது அத்துவித நிலையில் அவர்க்கு இன்பமேயாக இலங்குகின்றான். இதனால் தான் அவனை ஆனந்தன் என்று சொல்லுகிறோம். இதன்றி முத்தான்மாக்கள் அவனிடத்து 'இன்பமே என்னுடையன்பே' எனக்கூடிய நிலையில் நின்று அன்பு செலுத்துவதுபோல், அவன் சீவகோடிகளிடத்துத் தனது வரம்பிலாப் பெருங்கருணையைச் செலுத்துகின்றான். அரன் நம்பிறப்பிலாப் பெம்மான், "பேராளன்" அவன் நம்முடைய அன்பிற்கு உரியவனாதல்போல், நாம் அவனுடைய அருளிற்கு உரியவர்கள். ஆகவே பேராற்றலும், பேரறிவும் உடையவன் பரமன் என்பதும் அவன்சிற்றறிவும் அற்ப ஆற்றலுமுடைய நம்மை நேசிக்கின்றான் என்பதும் வெளிப்படும். அம்மட்டோ! நமது குறைவும் போக்கித் தனது நிறைவால் நம்மைப் புனிதராக்கித் தன்னோடு ஒன்றுபடுத்திக் கொள்ளுகின்றான். "ஆணவத்தோ டத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத், தாணுவினோ டத்துவிதஞ் சாருநா ளென்னாளோ"

என்று தாயுமானார் குறித்தது மிந்நிலையினையே. இவ்வுண்மையை நோக்கில் இறைவனுக்கும் நமக்கும் அதிக நெருக்கமான உறவு உள்ளதென்பது புலனாகும்.

சு:—நல்லது. இதில் ஒரு doubt...சந்தேகம் கடவுள், 'நம்மைப்போல் இன்பதுன்பங்களை நுகர்ந்துழல்பவனல்லன்' என்று முன்பு சொன்னீர். பிறகு நாம் நல்வழியொழுகித் தன்னோடு சேரவேண்டுமென்னும் திருவுள்ளமுடையோன் என்றீர். இப்படி நம்பொருட்டுக் கவலை எடுத்துக் கொள்வனானால் இறைவன் எப்படி முடிவிலா ஆனந்தமயனாய் நிற்கமுடியும்?

சி. நமக்கு இன்பதுன்பங்கள் விளைவதெல்லாம் நம்மறிவின் குறுக்கங் காரணமாக உலகப் பொருள்களிடத்து எழுகின்ற விருப்பு வெறுப்புகளினாலேயே. இறைவனோ, வேண்டுதல்வேண்டாமையிலாதமுற்றறிவினன், அவன் ஈவதறிவனேயல்லது ஏற்பதறியான். கைம்மாறு வேண்டாது உதவும் பேராற்றலுடைய வள்ளல். எண்ணமாத்திரையானே எல்லாஞ் செய்யவல்லான். ஆன்மகோடிகளைத் தன் திருவடியை யடையச்செய்யு முறையை நன்குணர்வான் ஆதலின் அவனுக்கு கவலையேற்பட இடமில்லை.

சு;—இறைவன் நமக்கு எப்படி உதவிசெய்கின்றான் என்பதைச் சாஸ்திர வழியால் அறிய விரும்புதும்.

சி:—மிக நல்லதே! ஒவ்வொரு ஆன்மாவும் எண்ணிலாத நெடுங்காலத்திற்கு முன்பு அறிவும் தொழிலும் விளங்காமல் அஞ்ஞானமாகிய இருட்டுள் கட்டுண்டிருந்தது. இந்த நிலையைக் கேவலாவஸ்தை என்று சாஸ்திரங்கள் சொல்லும். இப்படிக் கிடந்த ஆன்மாவை நல்வழியிற்புகுத்தித் தன்னோடு சேர்த்துக் கொள்ளவிரும்பும் இறைவன், மிகநுண்ணியதாயுள்ள சடப்பொருளால் (மாயை matter) (1) உடம்பு, (2) மனம் முதலிய அகக்கருவிகள், (3) அவைகளோடு வசிப்பதற்கு ஓரிடம் (4) நுகர்வதற்குரியபோகம் என்னுமிவற்றைத்தோற்றுவித்து ஆன்மாவிற்குக்கொடுக்கின்றான். இதைத்தான் ஈசன்மாயையை முதற்காரணமாகக் கொண்டு தனுகரண புவனபோகங்களை உண்டாக்கிக் கேவலாவஸ்தையிலிருந்து ஆன்மாக்களைச் சகலாவஸ்தையிற் புகுத்துகிறான், என்று சாத்திரங்கள்சொல்வது. இப்படி ஆன்மா உடம்பு முதலியவற்றோடு சேருங்



காலத்து அதற்கு அறிவும் செயலும் சிறிது சிறிதாய் உள்ளது சிறத்தல் என்னும் விதியையொட்டிக் கூடுகின்றன, விளக்கமுறுகின்றன. எப்படியெனில் சகலாவஸ்தையில் உழன்று, நல்வினை தீவினைகளைச் செய்து, அநேக பிறவிகளெடுத்து பலவேறு வகைப்பட்ட இன்பதுன்பங்களையும் நுகர்ந்து வரவர ஆன்மாவிற்கு நல்லறிவு துலக்கமுறுகின்றது, பகுத்தறிவும் முறுகிவளர்கின்றது. அதாவது ஆன்மா 'நல்லது இது கெட்டது' என்றும் 'நிலையுள்ளது இது நிலை இல்லாதது' என்றும் 'உண்மையின்பத்தைத் தருவது இது தாரதது இது' என்றும் அறிகின்றது. அதோடு நல்லொழுக்கமும் நற்குணமும் வளரும். இதனால் ஆன்மாவானது மாயையின்காரியங்களாகிய உடம்பு முதலியவற்றால் பல உலகங்களிற் சென்று நுகரும் இன்பங்கள் தாழ்ந்தன என்று உணர்ந்து ஒதுக்கித் தன்னுடைய தலைவனாகிய ஈசனது கூட்டுறவைப் பெற்று அவனோடு கலந்து நிற்கப் பாடுபடும். இறைவனோடும் அவன் தொண்டர்களொடும் கூடவேண்டும் என்று ஆன்மாவானவன் உண்மையாய்க் கதறுகின்றபோது ஈசன், "பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" அவ்வான்மாவினது பரிபாகத்திற்கு ஏற்பக் குருவடிவம் தாங்கிவந்து தன் கூட்டுறவால் பெறும் பேரின்பத்தையடைவதற்கு வேண்டிய சூக்ஷ்மமான வழியை உபதேசிப்பான். அவ்வழி நின்று ஆன்மா தேகத்தோடு கூடி உலகத்திலிருந்தாலும் தாமரையிலையில் தண்ணீர்போல் உலகப்பொருள்களிடத்துப் பற்றொன்றும்வையாது "தன்னைமிகையாம் கருத்தோடு" இறைவனது திருவடிப் பற்று ஒன்றையே பற்றிக்கொண்டிருந்து சீவன் முத்தனென்றும் பேர் பெற்று உலகத்தால் மாசடையாமல் தன்னையடைந்த பிறவுயிர்களைப்புனிதப் படுத்திக்கொண்டு சிவானந்தம் அநுபவித்துத்தேகம் பிறகு அச்சிவமேயாய்விடும். இவ்வண்ணம் பாசத்தோடு கலப்புற்றிந்த ஆன்மா பதியோடு ஒன்றி முத்தியடைகின்றது. நான் இப்பெரிய விடயத்தை மிகத்தொகுத்துச் சொன்னேன். இன்னும் இதில் அநேக கருத்துகள் நுணித்தறியக் கிடக்கின்றன. அவைகளை நீ நூலாராய்ச்சியினால் அறியவேண்டும்.

சு. தாங்கள் பேசிவருகையில் யான் இதுவரையிலநுபவித்திராத ஒருவிதமான (Feel) உள்ளநெகிழ்ச்சி என்பால் நிகழ்ந்தது. இப்போது என் மனத்தில் பயமும் கழிவிரக்கமும் தைய

ச்செய்கின்றன ஏதேதோ எண்ணங்களெல்லாம் தோன்றிமறைகின்றன. என்செய்வேன், இத்தனை வருடங்களாக யான் நம்பியதும் செய்துவந்ததும் சிறுபிள்ளை விளையாட்டாக முடிந்துவிட்டது. உலகமே சதமென்றிருந்த எனக்கு அது பெருந்தவறு என்றுபடுகின்றது. யான் பிறந்ததுமுதல் இதுவரையில் உண்டு உடுத்தி உறங்கிச் சிற்றின்பவழியிற் கிடந்தேனே தவிற ஆத்மலாபத்தைக் குறித்து ஒன்றுஞ்செய்ததாக எனக்குத் தோன்றவில்லை. என்னைப்போலத் தங்களையும் ஒருவினையென மதித்துப்போதுபோக்கிப் போகவந்த எனக்கு, மனவிருளை ஓட்டும் ஞானத்தீ கிடைத்தது நல்வினை. இது இறைவனது திருவருட் செய்கைபோலும். நான் கடைத்தேறுவதற்குச் செய்யவேண்டியதென்ன? முதலாவது நான் நான் என்றசொல்லிற்கே பொருள் தெரியவில்லை. விடுமுறை நாள் முழுவதும் தாங்கள் அநுமதிதந்தால் தங்களிடத்தேயே நின்று அவ்வப்போது நிகழ்கின்ற சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்து இனியாவது நல்லவனாக முயல்வேன். சம்மத மெப்படியோ?

சி:—சுந்தரம்! யான் உனது நண்பனே யல்லது அந்நியனல்லனே. ஏன்வித்தியாஸமாய் எண்ணுகிறாய்? உன்னால் எத்தனை நாள் சென்னையிலிருக்கக் கூடுமோ, அதுவரையிலும் நீ இங்கேயே சுகமாக இருக்கலாம். நமது கடவுள் அன்புவடிவினன். அவனை அடைய ஒருவனுக்கு விருப்பம் இருந்தால் அவனும் அன்பை வளர்க்கவேண்டும். உண்மை இப்படி இருக்க உனக்கு நான் இவ்வற்ப உதவி செய்யாவிட்டால் அடியேன் இறைவன் திருவருளுக்கு அயலாய் விடுவேனல்லவோ? இவ்வில்லம் உன்னுடையதே என்று நினைத்துத் தங்கியிருக்கலாம். (மணிபதினொன்றடித்தது). பதினொன்றாய் விட்டதா! இன்று பொழுது நன்றாய்க் கழிந்தது. புனிதவதி: அப்பா! ஸ்நானத்திற்கும் பூஜைக்கும் எல்லாந் தயாராயிருக்கிறது.

சி:—இதோ வருகிறோம். அம்மா! சுந்தரம் தயைசெய்து ஸ்நானம் செய்ய எழுந்திருக்கவேண்டும். போசனமுடிந்த பிறகு நாம் இன்னொரு முறை நல்ல விஷயங்களைப்பற்றி சம்பாஷிக்கலாம். (இருவரும் போகின்றனர்)

(இன்னும் வரும்.)

S. சச்சிதானந்தம் பிள்ளை.

## சமாச்சாரங்கள்.

சைவசித்தாந்த மகாசமாஜம்:—இவ்வருடம் டிசம்பர்மீ 27, 28, 29, தேதிகளில் சோழராஜதானியாய் விளங்கியதும் "நகரேஷுகாஞ்சி" எனயாவராலும் வியந்துகொண்டாடப் பெற்றதும் ஆகிய காஞ்சி மாநகரத்தில் காரனேஷன் தர்பார் ஹாலில் சைவசித்தாந்த மகாசமாஜம் நடைபெறும். அந்நகரத்திலுள்ள ஸ்ரீஏகாம்பரநாதர் ஆலய தருமகருத்தரும் ஜமீன்தாருமாகிய ஸ்ரீமான் கா. மு. சுப்பராயமுதலியார் அவர்கள் உபசரணை கமிட்டி அக்கிராசனராகவும், ஸ்ரீமந்-கே. பொன்னுசாமிமுதலியார் அவர்கள் ஸ்ரீமந். பி. செ. முருகேசமுதலியார் அவர்கள் காரியதரிசிகளாகவும் மற்றைய சிலர் அங்கத்தினர்களாகவும் இருந்து பெருமுயற்சி செய்து தேகவுழைப்பையும் பொருட்செலவையும் சிறிதும் நோக்காது இச்சாமாஜத்தினை நடத்தமுன் வந்துள்ளார். இவர்கள்பால் வைதிக சைவர்கள் யாவரும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் போன்று தமிழ்நாட்டினுள் உள்ள ஒவ்வொரு வைதிக சைவர்கள் சமாஜத்தை நடத்தி வருவாராயின் சமய உத்தாரணத்தை நடத்தும் பெரும் பதிபுண்ணியத்தை அடைவார்கள் என்பதில் தடையில்லை.

இச்சமாஜ சம்பந்தமாக வெளியிட்டுவரும் "சித்தாந்தம்" என்னும் பத்திரிகைக்கு இவ்வருடமே ஆயிரம் கையொப்பங்கள் சேர்ந்திருக்கின்றன. இனி இப்பத்திரிகை சந்தாதாரர்கள் தாங்கள் தாங்களே முயற்சிசெய்து தங்களாற் கூடிய கையொப்பம் சேகரித்து அனுப்பவரேல் பத்திரிகை விருத்தியாவதுடன் மீதி திரவியத்தைக் கொண்டு பாடசாலைகள் புத்தகசாலைகள் ஏற்படுத்தல், துண்டுப்பத்திரிகைகள் வெளிப்படுத்தல், பண்டைய வைதிக சைவநூல்களை வெளியிடல் முதலிய அரிய காரியங்களைச் செய்ய மிகுந்தபேருதவியாக இருக்கும். திருவருள் கூட்டி முடிக்க.

சைவசம்பந்தமாக:—ஸ்ரீமாந் புரொபெசர் விச்சூர் முத்துகுமாரசுவாமிமுதலியார். பீ. ஏ. அவர்கள் சென்ற மீ இரண்டு சைவப்பிரசங்கள் செய்தார்கள்: அவை வருமாறு:—சென்னை சூளை பிரைமெரிஸ்கூல் ஹாலில் எள்ளிடவிடமின்றி நிறைந்திருந்த சிவனடியார் முன்பாக நமது முதலியாரவர்கள் திரிபதார்த்த விஷயமாக அருமையாகப் பேசினார்கள். பிரபஞ்சத்தில் கடவுள் அந்தர்யாமியாக விருப்பதுண்மையேனும் பிரபஞ்சமே கடவுள் என்றெழுந்தவாதம் (Pantheism) ஆபாசமானதென்று நிரூபித்தார்கள். ஆத்மாவில் கடவுள் யாண்டுமிருந்து அறிவித்தல் சத்தியமேனும், சிவன்தானே சிவனென்னு மனப்பாலருந்துதல் அசப்பிய ஞானமென்று முதலியாரவர்கள் வற்புறுத்திக் கூறினார்கள். "எல்லாமாயல்லவுமாய்" நின்ற சிவம் அஹங்கார மொழிந்தவர்கட்கு மாத்திரமே அநுபூதிமாத்திரத்தானே அறியக்கூடியதென்றும் அஹம் பிரஹ்மாஸ்மி வாதம் அவரந்தரவர்தமா யொழியுமென்றும் இறுதியாக உறுதி மொழிகூறி உபந்யாஸத்தை முடித்தார்கள். இவ்வுபந்யாசம் சூளை கல்விச்சங்கத்தின் சார்பாக நடந்தது. ஸ்ரீமந் சோமசுந்தரம் பிள்ளையவர்கள் சபாநாயகராய் வீற்றிருந்தவர். உபந்யாஸத்தை வியந்தை கூறிய பின்னர் சபை கலைந்தது.

***

டிசம்பர் மீ 12உ: சூளை கல்விச்சங்கத்தாரால் மாட்சிமை தங்கிய மஹா ராஜா சக்ரவர்த்திப் பெருமான் மகுடமுடிநாளானதால் அற்றை மாலை ஷை ஸ்கூலில் ஒரு பெருஞ்சபை கூடியது. ஆண்டும் நமது முதலியாரவர்கள் "இராஜபக்தி" யென்ற விஷயமாக ஒரு மணிநேரம் அற்புத உபந்யாஸம் ஒன்று செய்து முடித்தார்கள்.

***

சென்னைச்சிவனடியார் திருக்கூட்டம் காஞ்சித்தலயாத்திரை [illegible] நிகழும் டிசம்பர் மீ 26உ சென்னையினின்றும் புறப்பட்டு காஞ்சிபுரத்தை யடைந்து 27, 28, 29 ஆந்தேதிகளில் சைவசித்தாந்த மகா சமாஜக்கூட்டத்தின் காரியங்களை உடனிருந்து நடத்தி திருவேகம்பமுதலான விடங்களில் திருக்கோயில் வழிபாடு முதலியன செய்வார்கள்.

161396
600 008